மரீயா பிரிலெழாயெவா

லெனினின் வாழ்க்கைக் கதை



மரீயா பிரிலெழாயெவா

லெனினின் வாழ்க்கைக் கதை

நவீனம்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்
தயாரிப்புக் கலைஞர்: யூ. குளோத்

Мария Прилежаева
ЖИЗНЬ ЛЕНИНА
(в сокращении автора)
На тамильском языке

Maria Prilezhayeva
V. I. LENIN. THE STORY OF HIS LIFE
in Tamil

© தமிழ் மொழிபெயர்ப்பு
ராதுகா பதிப்பகம், 1983

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

П $\frac{4803010102-402}{031\,(01)-83}$ 329-83



வி. இ. லெனின் சொற்பொழிவு ஆற்றுகிறார்.
ஓவியர் அ. கெராஸிமவ்

பொருளடக்கம்

முன்னுரை 7
மகிழ்ச்சி 11
பனிக்கால மாலைகள் 12
கோடைகாலப் பகல் 15
கப்பலில் 18
உயர்நிலைப் பள்ளி மாணவன் 20
மனக் கலக்கம் 23
தந்தை 28
மார்ச் முதல் தேதி 31
விடை கொடு, ஸிம்பீர்ஸ்க்! 35
கஸான் மாணவர் கூட்டம் 37
நிலையான வழி தெரிந்தது 39
தொழிலாளர் வட்டாரத்துக்கு 44
முதல் புத்தகம் 47
நான்கு துண்டுப் பிரசுரங்கள் 48
''மீனி'' 51
''எங்கள் செயலைச் சிதைக்க முடியாது'' . . . 53
வார்டு நம்பர் 193 56
பச்சை விளக்கு 59
என் குறையைத் தீரும், விளாதிமிர் இல்யீச் . . . 63
மே மாதம் என்ன நடந்தது 66
வனேயெவின் நோய்ப் படுக்கை அருகே . . . 69

விடுதலை! 72
சிறு பொறி பெருந் தீ! 75
லெனின் 79
போல்ஷிவிக்குகள் 86
கொடுஞ்செயல் 91
கடலில் செங்கொடி 96
இரகசியச் சந்திப்புகள் 103
மீண்டும் தாய்நாட்டுக்கு வெளியே 111
ஸ்டாக்ஹோமில் சந்திப்பு 116
லோன்ழுமோ கிராமம் 120
போர் எதிர்ப்புப் போர் 124
முடிவாகத் தாய்நாட்டுக்கு 128
அன்னையின் சமாதி முன் 133
ஆட்சி அதிகாரம் சோவியத்துக்களுக்கு 137
காட்டு அலுவல் அறை 142
எஞ்சின் நம்பர் 293ல் கரி தள்ளுவோன் 147
விந்தைப் புகலிடம் 152
இன்னொரு தலைமறைவு வாழ்க்கை 158
புரட்சிக்கு முன் 162
ஸ்மோல்னீயில் 165
தொடங்கிவிட்டது 169
பனிக்கால அரண்மனை வசமாயிற்று 173
முதல் அரசாணை 178
சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் . . 181
இவ்வாறு அவர்கள் வாழ்ந்தார்கள் 185
முடியாவிட்டால் கற்றுக் கொள்வோம் 189
துயர் தரும் படிப்பினை 193
மாஸ்கோ, மாஸ்கோ 198
புரட்சியின் அடிவைப்புக்கள் 202
கிராமங்களிலும் சிற்றூர்களிலும் 204
படையெடுப்பு 208
கயமை நிறைந்த மூன்று குண்டுகள் 214
கடினமான அந்த ஆண்டுகளில் 219
ஸக்கோல்னிக்கீயில் நிகழ்ந்தது 222
துன்பகரமான இழப்புக்கள் 227
''நான், உழைப்பாளி மக்களின் மைந்தன்....'' . . 231

அரசாங்கச் சொத்து 235
''வந்தது களி நிறைந்த மே தினம்....''. . . . 238
இளங் கம்யூனிஸ்டுகள் சங்கம் 243
கனவுகளும் செயல்களும் 248
கொடூரமான ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்
தொன்றும் ஆண்டு 253
புதுப் பொருளாதாரக் கொள்கை என்பது என்ன . 258
பனிக்கட்டி பாடும் காலம் 261
கலங்கரை விளக்கு 266
புத்தாண்டு முன்னிரவு 270
எப்போதும் போராட்டத்தில் 274
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து மூன்றும்
ஆண்டுச் சரத்காலம் 278
வாழ்வு பற்று 282
எழுந்து நில்லுங்கள், தோழர்களே! 286
செர்ரி மரங்கள் பூத்தன 291

முன்னுரை

இது நடந்தது ஆயிரத்துத் தொள்ளயிரத்து இருபதுக் களில். பிரியஸ்லாவ்ல் வட்டத்தைச் சேர்ந்த சிறு கிராமம் ஒன்றில் நான் பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றி வந் தேன். அருகே ஷாஹா என்னும் அமைதியான சிற்ருற்றின் உயர்ந்த கரைமேல் அமைந்திருந்தது கோர்க்கி கிராமம். கான்ஷின் என்னும் தொழிலதிபருடைய சிறு பங்களா இங்கே இருந்தது. ''மக்களின் நண்பர்கள்'' என்பவர்கள் யார், சமூக ஜனநாயகவாதிகளுக்கு எதிராக அவர்கள் எவ்வாறு போரிடுகிறார்கள் என்னும் லெனினுடைய நூல் 1894ம் ஆண்டு இங்கேதான் சட்ட விரோதமாக அச்சிடப் பட்டது....

இந்த விவரத்தை எனக்குத் தெரிவித்தவர் நெடுங் காலமாக இவ்வூரில் வசித்து வந்த ஒரு பள்ளி ஆசிரியர். 1894ம் ஆண்டு, தமது இருபத்து நான்காவது வயதில் கோர்க்கிக்கு வந்த லெனினை அவர் பார்த்தாராம்: ''இப் போது உன்னைப் பார்க்கிறேனே, இதே போல.''

''இதோ இங்கே பிர்ச் மரப் பாதையில் நாங்கள் உலா வினோம். இதோ இந்த பெஞ்சியில் லெனின் தம் தோழர், மாணவர் கான்ஷினுடன் உட்கார்ந்தார். கான்ஷின்தாம் புத்தகத்தை அச்சிடும் வேலையை மேற்பார்த்தார்'' என்று ஒவ்வோர் இடமாகக் காட்டினர் ஆசிரியர்.

இந்தப் புத்தகத்தில் அப்படி என்ன இருந்தது? எல்லாம். முக்கியமாகக் கடைசி முடிவு தூரதிருஷ்டி வாய்ந்தது: ''...ருஷ்யத் தொழிலாளன் எல்லா ஜனநாயகச் சக்திகளுக்கும் தலைமையை ஏற்று, வரம்பிலா முடியரசாட்சியைத் தீர்த்துக் கட்டிவிட்டு, ருஷ்யப் பாட்டாளியை (எல்லா நாடுகளின் பாட்டாளிகளோடும் சேர்ந்து) பகிரங்க அரசியல் போராட்டத்தின் நேரான சாலையில் வெற்றிகரமான கம்யூனிஸப் புரட்சிக்கு இட்டுச் செல்வான்''.

இதுதான் இளமையில் எனக்கு ஏற்பட்ட அசாதாரணமான உளப்பதிவு....

இளைஞர் விளாதீமிர் இல்யீச்சின் வாழ்க்கையையும் செயல்களையும் பற்றிய மெய்விவரங்களையும் விஷயாதாரங்களையும் சூழ்நிலைகளையும் நான் நீண்ட காலம் ஆராய்ந்தேன். இளைஞர் லெனின் ''தொழிலாளி வர்க்க விடுதலைக்காகப் போராடும் சங்கம்'' என்னும் பீட்டர்ஸ்பர்க் நிறுவனத்தை அமைக்க முயன்றது பற்றி விவரிக்கிறது **தொடக்கம்** என்னும் என் முதல் புத்தகம். இந்த நிறுவனத்திலிருந்தே பின்பு தோன்றின ருஷ்ய சமூக ஜனநாயகவாதிகள் கட்சியும் அப்புறம் ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியும். லெனினும் அவருடைய போராட்டத் தோழர்களும் ஜாருக்கும் முதலாளித்துவ அமைப்புக்கும் எதிராகத் தன் முன்னிலையிலேயே போராட்டம் நடத்தியதை ஜார் அரசாங்கத்தால் சகிக்க முடியவில்லை. லெனினும் அவருடைய பல நண்பர்களும் கைது செய்யப்பட்டார்கள், சிறையில் அடைக்கப்பட்டார்கள். தொலைதூரச் சைபீரியாவுக்கு அவர்கள் அனுப்பப்பட்டார்கள்.

லெனின் சுமார் மூன்று ஆண்டுகள் வசித்த சிறைக் குடியிருப்புக்கு நான் சென்றேன். ஷூஷென்ஸ்கொயே கிராமம் ஷூஷா ஆற்றின் கரையில் இருக்கிறது. அருகிலேயே ஓடுகிறது சைபீரிய மாநதி யெனிஸேய். ஸயான் மலைத் தொடரின் வெண்பனி மகுடங்கள் புனைந்த மாண்புமிக்க கிளைத் தொடர்கள் தொடுவானுக்கு மேலே காட்சி அளிக்கின்றன. சிறைக் குடியிருப்பு வாசத்தின் போது லெனின் எந்த ரஸ்தாக்களிலும் ஒற்றையடிப் பாதைகளிலும் நடந்தாரோ அவற்றில் எல்லாம் நான் நடந்தேன். ஷூஷென்ஸ்கொயே கிராமத்தில் அவர் எழுதிய எல்லாக்

கட்டுரைகளையும் புத்தகங்களையும் படித்தேன். வியப்பில் ஆழ்ந்தேன்! சைபீரிய வாசத்தின் போது எப்போர்ப்பட்ட மலை போன்ற வேலையை மேற்கொண்டு செய்து முடித் திருந்தார் லெனின்! கட்சி அமைப்பது பற்றிய திட்டத்தை அவர் விவரமாகச் சிந்தித்து வகுத்திருந்தார். இதற்கு முதற்படியாக சட்ட விரோதமான, கட்சிக்கு உரிய தொழிலாளர் செய்தித்தாள் வெளியிட ஏற்பாடு செய்வது அவசியமாய் இருந்தது.

லெனினது ஷூஷென்ஸ்கொயே சிறைக் குடியிருப்பு வாசம் பற்றி நான் ஒரு புத்தகம் எழுதினேன். சைபீரிய வாசக் காலம் முழுவதையும்பற்றி அல்ல. **வியப்பூட்டும் ஆண்டு** என்று என் புத்தகத்துக்கு நான் பெயரிட்டேன். லெனினது சைபீரிய வாசத்தின் ஓர் ஆண்டு நிகழ்ச்சிகளை மட்டுமே அதில் வருணித்தேன். ஓர் ஆண்டு, ஆனால் எப் போர்ப்பட்டது! உழைப்பிலும் படைப்பிலும் ஆக்கச் சிந்தனை யிலும் திட்டங்களிலும் வியப்பூட்டும் ஆண்டு! அதோடு மிக இன்பமானதுங்கூட. ஏனென்றால் அந்த ஆண்டில்தான் லெனினுடைய மணமகள் ஷூஷென்ஸ்கொயே கிராமத் திற்கு வந்து அவருடன் வாழத் தொடங்கினாள். அவளும் புரட்சிக்காரி, சைபீரிய வாசத் தண்டனை விதிக்கப் பெற்றவள். இனிய, நாகரிக நங்கை. அறிவுக் கூர்மை உள்ளவள். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா குரூப்ஸ்கயா.

அதைப் பற்றி எழுதினேன்.

புரட்சிச் செயல்களும் எண்ணங்களும் உணர்ச்சிகளும் நிறைந்த உயர்ந்த உலகம் என்னை ஆட்கொண்டது. அதிலிருந்து விலக என்னால் முடியவில்லை.

எனவே நான் இன்னும் ஒரு நூல் எழுதினேன். சைபீரிய வாசம் முடிந்தபின் லெனின் தமது பிரபலச் செய்தித்தாள் **இஸ்க்ராவை** வெளியிட எவ்வாறு ஏற்பாடு கள் செய்தார் என்பதை அதில் விவரித்தேன். **மூன்று வார அமைதி** என்பது புத்தகத்தின் தலைப்பு. வெளிநாடு செல்லுமுன் லெனின் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவிடம் விடை பெறுவதற்காக உஃபா போகிறார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா தமது சிறைவாசக் காலத்தை உஃபா வில் கழித்துக் கொண்டிருந்தார்.

லெனின் ஓய்வையா நாடுகிறார்? அமைதியையா? இல்லை. ''அமைதி எங்களுக்குக் கனவில்தான் கிடைக்கிறது.'' ...உழைப்பு, கட்சிக்காக, மக்களுக்காக, புரட்சிக்காக உழைப்பு. எப்போதும். எங்கும். ஒரு நாள்கூடச் செயலின்றிக் கழியவில்லை. ஒரு மணிகூட....

இவ்வாறு இளைஞர் லெனினைப் பற்றி மூன்று நவீனங்கள் இயற்றிய பின்னரே **லெனினின் வாழ்க்கைக் கதை** என்னும் எனது பிரதான நூலை எழுத முற்பட்டேன்.

எவ்வளவோ தயக்கங்களும் பதற்றங்களும் ஏற்பட்டன. இந்த மாபெரும் வாழ்க்கை பற்றி விவரிக்க எனக்கு வலிமை போதுமா?

என் நண்பர்கள்—பதிப்பு ஆசிரியர்கள், புலவர்கள், கட்சி ஊழியர்கள் ஆகியோர்—யோசனைகள் கூறி எனக்கு நிறைய உதவினர்கள். தோழர்களின் நல்லியல்பு வாய்ந்த ஆதரவை நான் உணர்ந்தேன். முக்கியமாக, லெனினின் வாழ்க்கை பற்றி எளிமையாக, உள்ளன்புடன் எழுதப்பட்ட நூல் வாசகர்களுக்கு மிகவும் தேவை என்று தெரிந்து கொண்டேன். இவ்வாறு இந்த நூலை எழுதி முடித்தேன்.

மரீயா பிரிலெழாயெவா

1971, பிப்ரவரி

மகிழ்ச்சி

அமைதி நிறைந்த ஸிம்பீர்ஸ்க் நகருக்கு மேமே மகிழ்வுடன் இசைத்தன வானம்பாடிகள். வோல்கா ஆற்றுக்கு உயரே அவை பண் பொழிந்தன. நகரின் அருகாமையில் ஆறு சட்டெனத் திரும்பியது. பனிக்கட்டிப் பாளங்கள் அண்மையில்தான் உருகிப் போயிருந்தன. தடையின்றிப் பெருகிய ஆற்றில் சென்றது நீராவிக் கப்பல்.

''வெள்ளைக் கப்பலே, எங்கே போகிறாய்?''

ஸிம்பீர்ஸ்க் நகரில் வசந்தம்.

வீதிகளும் தோட்டங்களும் பட்சிகளின் கீச்சொலிகளால் நிறைந்திருந்தன. காற்று பிர்ச் மரக் கிளைகளை ஆட்டி உலுக்கியது. தெருக்களில் இளவேனிலின் களிப்பு ஆட்சி புரிந்தது.

உல்யானவ் குடும்பத்தாரின் இல்லத்திலும் மகிழ்ச்சி நிலவியது. அவர்கள் வீடு வோல்கா ஆற்றுக்குப் பக்கத்திலேயே இருந்தது. ஜன்னல் வழியே சுள்ளென்று வெயில் அடித்தது. நீராவிக் கப்பல்களின் சங்கொலிகள் கேட்டன.

அம்மா தொட்டில் மீது குனிந்தாள். தொட்டிலில் கிடந்தான் மகன். தாயார் அவனை உற்று நோக்கினாள்: ''நீ எப்படிப்பட்டவனாக வளர்வாய்? எந்த மாதிரி வாழ்க்கை உனக்குக் கிட்டும்?'' என்று சிந்தித்தாள்.

தகப்பனார் இல்யா நிக்கலாயெவிச் அறைக்குள் வந்தார்.

''மரீயா, கண்ணே!'' என்று அழைத்து, ''நற்பகல், மரீயா!'' என்றார்.

தகப்பனருடன் கூடவே மூத்த குழந்தைகள் ஆன்னவும் அலெக்ஸாந்தரும் தாயாரிடம் வந்தார்கள். கரு விழிகளும் சுருண்ட கேசமும் கொண்ட ஆன்னவுக்கு ஆறு வயது. அலெக்ஸாந்தருக்கு நான்கு வயது. ஆவல் பொங்க அவர்கள் தொட்டிலை நெருங்கினர்கள்.

''குழந்தைகளே! உங்களுக்குத் தம்பி பிறந்திருக்கிறான்'' என்றார் இல்யா நிக்கலாயெவிச்.

''எவ்வளவு சின்னூண்டுப் பயல்!'' என்று வியந்தாள் ஆன்னா.

''வளர்ந்ததும் பெரியவன் ஆகிவிடுவான்'' என்று பதில் அளித்தார் தந்தை.

''இவன் பெயர் என்ன?'' என்று தம்பியை நன்றுகப் பார்ப்பதற்காக நுனிக் காலகளில் எம்பி நின்றபடியே கேட்டான் அலெக்ஸாந்தர்.

''விளாதீமிர் என்று கூப்பிடுவோமே'' என்றாள் தாயார்.

இவ்வாறு, வோல்கா நதிக் கரையில் உள்ள ஸிம்பீர்ஸ்க் நகரில், 1870ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ந் தேதி பிறந்தார் விளாதீமிர் உல்யானவ் என்னும் புதிய மனிதர். பிற்காலத்தில் இவரே மாபெரும் லெனின் ஆகப் புகழ் பெற்றார்.

பனிக்கால மாலைகள்

விளாதீமிர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து எட்டு வயதுப் பையன் ஆனான். அவனுக்கு இப்போது இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் இருந்தார்கள். ஓல்கா முதல் தங்கை. அப்புறம் தம்பி திமீத்ரீ. கடைக்குட்டி மரீயா அப்போதுதான் கைக் குழந்தை. வரிசையாக ஆன்னா, அலெக்ஸாந்தர், விளாதீமிர், ஓல்கா, திமீத்ரீ, மரீயா என்று அக்காள் தம்பிகள் தங்கைகள் ஆறு பெயர். அப்புறம் அப்பாவும் அம்மாவும். பெரிய குடும்பம்தான், அல்லவா?

ஆன்ஞவும் அலெக்ஸாந்தரும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள். விளாதிமிர் வீட்டிலேயே தொடக்கக் கணிதமும் ஆரம்பப் பாடங்களும் ஆசிரியரிடம் கற்றுக் கொண்டு, உயர்நிலைப் பள்ளியில் சேரத் தயாராகிக் கொண்டிருந்தான். தாயாரும் அவன் படிக்க உதவுவாள். அவளுக்கு எத்தனையோ விதமான, ரசமான கதைகள் தெரியும். வெப்ப நாடுகளையும் குளிர் நாடுகளையும் பற்றிச் சொல்லுவாள். ஸெயின்ட் பெர்ணர்டு ஜாதி நாயைப்பற்றிக் கூறுவாள். ஆல்ப்ஸ் மலைத் தொடரில் வெண்பனியில் வழி தவறிவிட்ட வழிப்போக்கனை அந்த நாய் காப்பாற்றிய தாம். நெப்போலியன் ருஷ்யாமேல் படையெடுத்ததையும், பரதினே என்னும் கிராமத்துக்கு அருகே அவனுடைய படைகளுக்கும் ருஷ்யப் படைகளுக்கும் நடந்த சண்டையையும் விவரிப்பாள்.

குளிர்கால மாலைகளில் சாப்பாட்டு மேஜை அருகே உட்கார்ந்து அம்மா சொன்ன கதைகளை எல்லாம் கணக்கிடவே முடியாது. அந்த மாலைகளும், கடுங்குளிரால் ஜன்னல் கண்ணாடிகள் மேல் வெண்பனி படிந்து இறுகி விதம் விதமாகக் கோலங்கள் இட்டிருப்பதும், தாயாரின் குரலும், புத்தகப் பக்கங்கள் திருப்பப்படும் சரசரப்பும் எல்லாமே விளாதிமிருக்கு நிரம்ப இனிக்கும்.

புத்தாண்டு விழாவுக்கு முன்னால், பனிக்காலம் உச்சத்தில் இருக்கும் போது, மாலை வேளைகளில் குழந்தைகள் அதிக ஒற்றுமையுடன் குதூகலமாக இருப்பார்கள். மேஜை மேல் பல நிறக் காகிதங்கள் குவிந்திருக்கும். புத்தாண்டு மரத்தை அலங்கரிப்பதற்காகக் குழந்தைகள் காகிதங்களைக் கத்தரித்து ஒட்டி விதம் விதமான பெட்டிகளும் சங்கிலி வளையங்களும் செய்வார்கள்.

இல்யா நிக்கலாயெவிச் தம் வேலையில் முனைந்திருப்பார். குழந்தைகளின் குரல்கள் தகப்பனாரின் அறையில் கேட்கக் கூடாது என்பதற்காகத் தாயார் சாப்பாட்டு அறைக்கதவை அழுத்திச் சாத்தியிருப்பாள்.

ரோஜா, நீலம், தங்கம், மஞ்சள் ஆகிய பல நிறக் காகித வளையங்கள் குழந்தைகளின் கைகளில் சரசரத்து வளைந்து வளைந்து நீண்டு செல்லும். புத்தாண்டு ஃபிர் மரம் இருண்ட ஹாலில் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்தது. எப்

போது தன்னை அலங்கரிக்கப் போகிறார்கள் என்று அது காத்திருந்தது. விரைவிலேயே அதில் பலவண்ண மெழுகு வத்திகள் எரியத் தொடங்கும்.

''வா, புத்தாண்டு மரத்தைப் போய்ப் பார்ப்போம்'' என்றான் விளாதீமிர்.

ஓல்கா உடனே இசைந்தாள்:

''போவோம்!''

தம்பி திமீத்ரீ நாற்காலியிலிருந்து துள்ளிக் குதித்தான்:

''நானும்!''

''எல்லோரும் கைகளைக் கோத்துக் கொள்வோம்'' என்றாள் ஆன்னை.

இருண்ட ஹாலில் மர்மம் நிலவிற்று. ஜன்னலின் வெண்பனிக் கோலத்தின் ஊடாக நிலவு வீசியது. நில வின் வெண் புள்ளிகள் தரைமேல் படிந்திருந்தன. ஃபிர் மரம் தனியே நின்றது. அதன் துடுப்பு வடிவான அகன்ற கிளைகளிலிருந்து குங்கிலிய மணம் வீசியது.

''வீடு பூராவிலும் சுற்றி வருவோம்'' என்று அழைத்தான் விளாதீமிர்.

எல்லோரும் எதனாலோ மௌனம் ஆகிவிட்டார்கள். அன்று மாலை வீடு புதிதாக, அசாதாரணமாக இருந்தது. வீடு உண்மையில் புதியதுதான். அவர்கள் அண்மையில் தான் அதில் குடி புகுந்திருந்தார்கள். அதோ அம்மாவின் அறை. நடையிலிருந்து அது சுவற்றால் அல்ல, வெறுமே திரையால் பிரிக்கப்பட்டிருந்தது. செருகு அலமாரிமேல் விடிவிளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. மரியா தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள். குழந்தைகளின் சங்கிலித் தொடர் சத்தம் செய்யாமல் தொட்டிலைச் சுற்றிக்கொண்டு அப்பால் போயிற்று.

மேலே நடந்து, குறுகிய படி வரிசையில் ஏறி இடை மாடியை அடைந்தார்கள் குழந்தைகள். அங்குதான் அவர் களுடைய அறைகள் இருந்தன. இடை மாடியில் நிலவு இன்னும் பிரகாசமாக, குதூகலமாக ஒளி வீசியது. ஜன்னல் கண்ணாடிகள்மேல் தீட்டியிருந்த உறைபனிக் கோலங்கள் பெரணிச் செடிகள் போல இருந்தன.

குழந்தைகள் கைகளைப் பிரிக்காமலே சங்கிலித் தொடராக இடை மாடியைச் சுற்றி வந்து, குறுகிய படி வரிசையில் கீழே இறங்கினர்கள்.

தகப்பனரின் அலுவல் அறைக் கதவு விரியத் திறந்தது. வாயிலில் நின்றார் அவர். எல்லோரையும் ஒருசேர அணைத்துக் கொண்டு, ''இதோ வந்துவிட்டது, என் படை!'' என்றார் தகப்பனர்.

ஆனால் குழந்தைகள் ஏதோ எண்ணத்தில் ஆழ்ந்திருப்பதை அவர் கவனித்தார். அவர்கள் ஒருவர் கையை ஒருவர் இறுகப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். கைகளைக் கோத்துக் கொண்டு வீட்டைச் சுற்றி வரலாம் என்று விளாதீமிர் சொல்லியிருந்தது அவருக்குத் தெரியாதே.

ஆனாலும் தகப்பனர் எதையோ ஊகித்துக் கொண்டு உணர்ச்சி பொங்கக் கூறினர்:

''என் அன்புக் குழந்தைகளே, எப்போதும் இப் படியே ஒற்றுமையாக இருங்கள்.''

கோடைகாலப் பகல்

கோடைகாலம்—பொன்வெயில் வேளை! லிம்பீர்ஸ்க் நகரில் கோடை நாட்களில் ஈரம் இல்லாமல் வெப்பமாக இருக்கும். தோட்டங்களில் ஆப்பிள் முதிரும். லிம்பீர்ஸ்கில் எங்கு பார்த்தாலும் தோட்டங்கள்.

உல்யானவ் குடும்பத்தாரின் வீட்டுக்குப் பின்புறமும் தோட்டம் இருந்தது. சின்னதுதான், ஆனால் அதில் இல்லாத மரஞ் செடிகளே கிடையாது. பாப்ளார் மரங்களின் வரிசை நடுவே சென்றது வெள்ளிக் கொடி வழி. எல்ம் மர முடிகள் குடை கவிழ்த்திருந்தன. கடும் வெயிலில் கூட அவற்றின் அடியில் குளுகுளு என்று இருந்தது. ஓங்கி வளர்ந்திருந்த வேல மரங்கள் பூத்துக் குலுங்கின. ''மஞ்சள் சோலை'' என்று அவற்றுக்குப் பெயர்.

காலை ஏழு மணி. வெயில் ஜன்னல் வழியே உள்ளே வந்தது. வெது வெதுப்பான கிரணங்கள் தலையணைமேல் பட்டன. விளாதீமிர் தூக்கம் கலைந்து கண் விழித்தான். மறு நொடியில் எழுந்து நின்றான். சட்டுப் புட்டென்று

உடற் பயிற்சி. பின்பு குளியல். அப்புறம் காற்றுப்பறந்து தோட்டத்துக்கு, ஆப்பிள் பொறுக்க, சகோதர சகோதரிகளுக்கு முன்னே தோட்டத்துக்கு ஓடி, இரவில் உதிர்ந்த ஆப்பிள்களைப் பொறுக்கிச் சேகரிப்பதும் பிறகு அவர்களுக்குத் தின்னக் கொடுப்பதும் விளாதீமிருக்குப் பெரு மகிழ்ச்சி தரும்.

உல்யானவ் குடும்பத்தார் எல்லோருமே அதிகாலையில் எழுந்துவிடுவது வழக்கம். பூச் செடிகளுக்குப் பாய்ச்சுவதற்காகக் கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொண்டு வந்து தொட்டியில் நிரப்புவது அலெக்ஸாந்தர், விளாதீமிர் இருவரதும் பொறுப்பு. மாலையில் தொட்டியை நிரப்ப வில்லையா, காலையில் நிரப்ப வேண்டும்.

அப்புறம் சாப்பாட்டு அறை மேஜைமேல் தேநீர் போடுவதற்கான சமவாரில் நீர் கொதிக்கும். காலை ஆகாரத்தின்போது அன்று பிரெஞ்சு மொழி பேசும் நாள் என்று அம்மா நினைவுபடுத்துவாள். சாப்பாட்டு வேளையில் பிரெஞ்சு மொழிதான் பேச வேண்டும் என்று அதற்கு அர்த்தம். மறு நாள் ஜெர்மன் மொழியில்.

தினந்தோறும் ருஷ்ய மொழியிலேயே பேசுவது எளிதாய் இருக்குந்தான். ஆனல் அயல் மொழிகள் தெரிய வேண்டும் என்பது தாயாரின் கருத்து.

''காலை ஆகாரத்துக்குப் பிறகு என்ன செய்யப் போகிறாய்?'' என்று ஒல்கா விளாதீமிரிடம் கேட்டாள்.

''அலெக்ஸாந்தர், செய்வதுபோலவே.''

எப்போதும் போன்றே அலெக்ஸாந்தர் படிப்பான். சிந்தனையைத் தூண்டும் புத்தகங்கள் அவன் படிப்பவை. இரசாயனத்திலும் இயற்கை இயல்களிலும் அவனுக்கு ஈடுபாடு. வீட்டு முகப்பு வெளியில் அவன் இரசாயன ஆய்வுக் கூடம் அமைத்திருந்தான்.

விலங்குக் காட்சிசாலையும் அவன் ஏற்படுத்தியிருந்தான். அங்கே முள்ளெலி இலைகளைக் கிளறும். அணில் கூண்டுக் கழிகள் மீது தாவும்.

கோடைகாலம் விட்டாற்றியான பருவம்! காலையிலேயே வேண்டிய புத்தகத்தை எடுத்துக் கொண்டு, தோட்டத்தில் நிழல் அடர்ந்த இடமாகத் தேடி உட்கார்ந்து கொண்டால், மற்றது எல்லாமே மறந்துவிடும். மதியச்

சாப்பாட்டு வேளை வரை தோட்டத்தில் பட்சிகளின் ஒலிகள் மட்டுமே கேட்கும். ஆம், அம்மாவின் தையல் இயந்திரக் கடகடப்பும் வீட்டுக்குள் இருந்து காதில் படும். ஆறு குழந்தைகளில் யாராவது ஒருவருக்கு ஏதேனும் ஓயாமல் தைத்துக் கொண்டிருப்பாள் அம்மா. பெண்களுக்கும் தையல் கற்றுக் கொடுத்திருந்தாள்.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு, மனமாரப் படித்துத் தீர்த்த பின்பு, ''விளையாடுவோம் வா'' என்று விளாதீமிரை அழைப்பாள் ஓல்கா.

''கண்ணுமூச்சி, காட்டு மூச்சி! எனக்கொரு பழம், உனக்கொரு பழம் கொண்டோடி வா!''

வெயில் தாழ்ந்ததும் க்ரோக்கெட் திடலில் விளையாட்டு தொடங்கும். கண்டிப்பாக விதிகளின்படி. அப்பாவும் விளாதீமிரும் மிக உற்சாகமாக விளையாடுவார்கள், விவாதிப்பார்கள். கடகடவென்று சிரிப்பார்கள். விளையாட்டின் போது ஒரே சிரிப்பும் கும்மாளமுமாக இருக்கும்.

சிறிது நேரத்தில் சூரியன் மேற்கே சாயும், மாலை நெருங்கும்.

''பையன்களா, ஆற்றுக்குப் போகலாம்!'' என்று அப்பா குரல் கொடுப்பார்.

உல்யானவ் குடும்பத்தார் எல்லாரும் ஸ்வியாகா ஆற்றில் குளிக்கப் போவார்கள்.

ஸ்வியாகா சிற்றாறு. பசுமை தளதளக்கும் கரைகளுக்கு நடுவே அமைதியாகப் பெருகுகிறது அது.

ஓட்டமாக ஓடி நடை பாலத்திலிருந்து சரேலென்று நீரில் பாய்வார்கள் தகப்பனும் மகன்களும். திவலைகள் ஊற்றுப்போல் கிளம்பிச் சிதறும்.

வானம் இன்னமும் அந்திச் செவ்வொளி படர்ந்து பிரகாசமாய் இருக்கும். ஆனால் தொடுவானுக்கு மேலே முதல் நீல விண்மீன் உதயமாகிவிடும்.

விளாதீமிரும் அலெக்ஸாந்தரும் குளித்த பிறகு ஒன்றுக முன்னே நடப்பார்கள்.

''என்ன யோசனையில் ஆழ்ந்துவிட்டாய்?'' என்று கேட்பான் விளாதீமிர்.

''எல்லா விஷயங்களையும் பற்றித்தான். அந்த விண்மீனைப் பார்த்தாயா? அது எப்படித் தோன்றியது?

உலகத்தில் உயிர் வாழ்க்கை எப்படித் தொடங்கியது? நாம் எதற்காக வாழ்கிறோம்? நம் குறிக்கோள் என்ன?''

விளாதீமிர் காது கொடுத்துக் கேட்பான். அவன் எண்ணமிடுவான்: ''நாம் எதற்காக வாழ்கிறோம்? நமது குறிக்கோள் என்ன? வாழ்வதும் சிந்தனை செய்வதும் கேட்பதும் அறிவதும் ஏதேனும் செய்வதும் சுவையானவை. அலெக்ஸாந்தர் புத்திசாலி. நானும் அவன் போலவே இருக்க ஆசைப்படுகிறேன்.''

கப்பலில்

இரண்டு அடுக்குக் கப்பல் துறையில் நின்றது. கப்பல் அறைகளின் ஜன்னல்கள் வெயிலில் பிரகாசித்தன. மெருகிட்ட தாமிரம் பொன்போல் ஒளிர்ந்தது. காப்டன் மேடையிலிருந்து ஒலிக் குழாய் வழியே உத்தரவு இட்டார்.

டிக்கட்டுக்கள் எல்லாம் இருக்கின்றனவா என்று தகப்பனுர் சரி பார்த்தார். சாமான்களை மறுபடி எண்ணினர். குழந்தைகளும் பெற்றோரும் அவரவர் சக்திக்கு ஏற்றபடி கூடையோ மூட்டையோ கைகளில் எடுத்துக் கொண்டு கப்பலில் ஏறினர்கள். கப்பல் இரண்டு தடவை நீட்டியும் மூன்றுவது தடவை சுருக்கமாகவும் சங்கொலி செய்தது. சக்கரங்கள் சுழலத் தொடங்கின. கப்பலின் அடியில் தண்ணீர் அலையடித்து இரைந்தது. கப்பல் லிம்பீர்ஸ்கிலிருந்து புறப்பட்டது. உல்யானவ் குடும்பத்தினர் கஸான் நகரத்துக்குச் சென்றார்கள்.

அங்கிருந்து குதிரை வண்டியில் நாற்பது கிலோ மீட்டர் சவாரி செய்து கக்கூஷ்கினே கிராமம் போக வேண்டும்.

லிம்பீர்ஸ்க் நகரம் பின்னே தங்கிவிட்டது. அதன் சிவப்பு முகடுகள் வெகு நேரம் வரை தெரிந்து கொண்டிருந்தன. வோல்கா ஆறு திரும்பியதும் லிம்பீர்ஸ்க் பார்வையிலிருந்து மறைந்துவிட்டது.

நீர்ப் பறவைகளின் கூட்டம் ஒன்று காதைத் துளைக்கும் கத்தல்களுடன் கப்பலை வழியனுப்பியது.

விளாதீமிர் நீர்ப் பறவைகளுக்கு ரொட்டித் துண்டு கள் போட்டான், பிறகு எஞ்சின் அறைப்பக்கம் ஓடினான். நீராவி இயந்திரம், தாமிரமும் எண்ணெயும் பளபளக்க, இறுக்கத்தால் நடுங்கியவாறு இரைச்சலுடன் வேலை செய்து கொண்டிருந்தது. இரும்புத் தடிகள் நிற்காமல் முன்னும் பின்னும் போய்க் கொண்டிருந்தன. கொதிக்கும் நீராவித் தாரைகள் வால்வுகளிலிருந்து சீறலுடன் பீச்சிய டித்துக் கொண்டிருந்தன. சட்டை போடாமல் வெற்று உடம்பாய் இருந்த கரிதள்ளுபவன், அனல் வீசும் அடுப்பின் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தான். அவன் உடம் பெல்லாம் கரித்துகள் படிந்து, அழுக்கேறிக் கறுத்திருந் தது. அவன் முதுகில் வியர்வை ஓடைகளாகப் பெருகிற்று.

சுழல் துடுப்புக்களை அடித்தவாறு கப்பல் வோல்கா நீரோட்டத்துக்கு எதிராகப் பிரயாசையுடன் முன்னே சென்றது. மேல்தட்டில் பிரயாணிகள் உலாவினர்கள், அழகிய காட்சிகளைக் கண்டு களித்தார்கள். அப்பா சதுரங் கப் பலகையை எடுத்துக்கொண்டு அறைக்கு வெளியே போனார். சதுரங்கக் காய்கள் வியப்பூட்டும்படி அவ்வளவு அழகாக இருந்தன. அப்பா தாமே கட்டையைச் செதுக்கி அவற்றைச் செய்திருந்தார்—ஒவ்வொன்றும் தனித்தனி விதமாக.

''ஓர் ஆட்டம் போடுவோமா?'' என்று விளாதீமி ரிடம் கேட்டார்.

விளாதீமிருக்கு வயது பத்துதான் என்றாலும் தகப் பனார் அவனைச் சமமாகப் பாவித்து அவனுடன் விளையாடி னார். பார்க்கப் போனால் அவன் அப்படி ஒன்றும் சின்ன வன் அல்ல. ஆகஸ்டு மாதம் உயர்நிலைப் பள்ளியில் சேரப் பரீட்சை எழுதப் போகிறானே. அப்புறம் விடுதலைக்கு ஒரு முழுக்குப் போட வேண்டியதுதான்!

''அன்பார்ந்த கனவானே, உங்கள் ராஜா கட்டுண் டார்'' என்றார் அப்பா.

விளாதீமிர் குதிரையை நகர்த்தி ராஜாவுக்குக் காப்பு அளித்தான்.

''தந்திரசாலி! அப்படியானால் இந்தக் காலாளை நகர்த்துகிறேன்.''

''நான் உங்களுடைய காலாளிடமிருந்து இப்படித் தப்பி, உங்களிடையே....''

காற்று விளாதீமிரின் செம்பழுப்பு முடியை அசைத்தது. வெயிலைப் பிரதிபலித்த வோல்கா ஆறு கண்களைக் கூசச் செய்தது.

''எஞ்சின் அறையில் ஒரே வெப்பம்! பெட்ரோல் வாடை அடிக்கிறது. கரிதள்ளுபவன் உடம்பெல்லாம் வியர்வை பெருகுகிறது. அவன் வேலையை எப்படியாவது எளிதாக்க முடியாதா என்ன?'' என்று முகத்தைச் சுளித்தவாறு சொன்னான் விளாதீமிர்.

தகப்பனார் பேசாதிருந்தார். அலெக்ஸாந்தர் அருகே வந்தான். ''கரிதள்ளுபவனுக்குக் கஷ்டமாய் இருக்கிறதா இல்லையா என்பது பற்றிக் கப்பல் சொந்தக்காரனுக்குக் கவலை இல்லை'' என்று தோள்களைக் குலுக்கினான்.

''ஆனால் இது அநியாயம் ஆயிற்றே!'' என்றான் விளாதீமிர்.

''உலகத்தில் நியாயம் அப்படி நிறைய ஒன்றும் இல்லை.''

இரண்டு பையன்களும் தகப்பனாரை ஏறிட்டு நோக்கினார்கள்.

''அப்பா, நீங்கள் நியாயத்தையே ஆதரிக்கிறீர்கள் என்பதை அறிவோம்!'' என்றான் அலெக்ஸாந்தர்.

கப்பல் வோல்கா ஆறு நெடுகிலும் கேட்கும்படிப் பெருங்குரலெடுத்து முழங்கிற்று. எதிரே வந்த கப்பலுக்கு இவ்வாறு வணக்கம் தெரிவித்தது அது. வோல்கா கடுமையாகக் கொந்தளித்தது. நீண்ட அலைகள் கரைகளை நோக்கி விரைந்தன.

உயர்நிலைப் பள்ளி மாணவன்

1879 ஆண்டு ஆகஸ்டு மாதம், உயர்நிலைப் பள்ளியின் முதல் வகுப்பில் சேர்வதற்காக விளாதீமிர் பரீட்சை கொடுக்கும் நாள் வந்தது. உயர்நிலைப் பள்ளியின் இரண்டு அடுக்குச் செங்கல் கட்டிடம் நகரின் மையத்தில், வோல்காக் கரையின் அருகாமையில் இருந்தது. அதில் விளாதீமிர் எட்டு ஆண்டுகள் படிக்க வேண்டியிருந்தது.

ஆனால் முதலில் தேர்வுகளில் தேற வேண்டும். தேர்வு மேஜையின் மறுபுறம் பள்ளி ஆசிரியர்கள் கண்டிப்பான தோற்றத்துடன் உட்கார்ந்திருந்தார்கள். மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக அழைக்கப்பட்டார்கள். விளாதீமிர் எழுது பலகை துணிவுடன் சென்றான். ஆசிரியர்கள் கேள்விகள் கேட்டார்கள். விளாதீமிர் தட்டுத் தடங்கல் இல்லாமல் விடை அளித்தான். கணக்குக் கேள்வி கேட்டார்கள். விளாதீமிர் மளமளவென்று கணக்கைப் போட்டான்.

எல்லா விஷயங்களிலும் விளாதீமிருக்கு நூற்றுக்கு நூறு மார்க்குகள் கொடுத்தார்கள் ஆசிரியர்கள்.

''நம் விளாதீமிர் உயர்நிலைப் பள்ளி மாணவன்!'' என்று வீட்டார் வரவேற்றார்கள்.

சகோதரர்களும் சகோதரிகளும் அவனைச் சூழ்ந்து கொண்டு கும்மாளம் போட்டவாறு பாராட்டினார்கள். பளிச்சிடும் பொத்தான்கள் கொண்ட உயர்நிலைப் பள்ளிச் சீருடை விளாதீமிருக்குச் சரியாய் இருக்கிறதா என்று போட்டுப் பார்த்தாள் அம்மா. மறுநாள் அவன் முதல் வகுப்புக்குப் போவான். அம்மா ஜன்னல் வழியே பார்ப்பாள். இப்போது அவளுடைய இரண்டு மகன்கள்—அலெக்ஸாந்தரும் விளாதீமிரும்—உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், ஒரு மகள் ஆன்னா உயர்நிலைப் பள்ளி மாணவி. நாட்கள் ஓடுகின்றன. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகிறார்கள்.

மாலையில் உல்யானவ் குடும்பத்தாரின் வீட்டுச் சாப்பாட்டு அறையில், வெள்ளை மேல்மூடி உள்ள தொங்கு விளக்கு ஏற்றப்பட்டது. மறுநாளைக்கான பாடங்களைச் செய்யக் குழந்தைகள் அதன் அடியில் குழுமினார்கள். ஐந்து வயதான திமீத்ரீக்குப் பாடம் படிக்க வேண்டியதில்லை. அவன் நாக்கைத் துருத்தியவாறு பிரயாசையுடன் படம் வரைந்து கொண்டிருந்தான். புகைபோக்கிக் குழாய் கொண்ட கப்பலும் வோல்காவின் உயரமான அலைகளும் வரைந்தான் அவன். முதல் வகுப்பு மாணவனான விளாதீமிருக்கு முதல் நாள் அவ்வளவு நிறைய வீட்டுப் பாடம் தரப்படவில்லை. ஆகவே அவன் சீக்கிரமாகச் செய்து

முடித்துவிட்டான். அப்புறம் என்ன செய்வது? காகிதத்தால் ஒரு தத்துக்கிளி செய்தான், ஓடிப்போய்த் தாதியிட மிருந்து நூல் வாங்கி அதைக் கட்டினான். துள்ளு! தத்துக் கிளி ஆன்னுவின் பக்கத்தில் தாவிக் குதித்தது.

''விளாதீமிர், மறுபடி குறும்பு செய்யத் தொடங்கி விட்டாயா? இடைஞ்சல் பண்ணுதே.''

நூல் சுண்டி இழுக்கப்பட்டது. தத்துக்கிளி அகன்று விட்டது. மறு விநாடியே அது தொப்பென்று அலெக் ஸாந்தரின் நோட்டின் மேல் குதித்தது.

மேஜையைச் சுற்றிலும் ஒரே சிரிப்பு. கடைசியில் யாரோ தத்துக்கிளியைப் பிடித்துவிட்டார்கள்.

''அட சும்மா இரேன்!'' என்றாள் ஆன்னு.

சும்மா இருக்க விளாதீமிரால் முடியவில்லை. இன்னும் என்ன வேடிக்கை செய்யலாம் என்று பார்த்தான்.

''திமீத்ரீ! கொம்புள்ள ஆடு வருகுதே, முட்டும் ஆடு வருகுதே, யாரை அது முட்டும்?''

''என்னை இல்லை, என்னை இல்லை!''

கொம்புகளோ வந்தன, திமீத்ரீயை நெருங்கின. மெள்ள மெள்ள நேரே அவன் மேல் பாயப் போயின. திமீத்ரீ கண் தலை தெரியாமல் துள்ளிக் கூச்சலும் சிரிப்பு மாக நாற்காலியிலிருந்து குதித்து மேஜைக்கு அடியில் பதுங்கினான். அறை வாயிலில் நின்றார் தகப்பனார்.

''விளாதீமிர், என் அறைக்குப் போகலாம், வா.''

குறும்புத்தனம் இன்னும் அடங்காத நிலையில் விளா தீமிர் தகப்பனாரின் அலுவல் அறைக்குள் போனான். ஒரு புறம் புத்தக அலமாரியும் பெரிய எழுது மேஜையும் மறு புறம் காண வருபவர்களுக்காக முட்டை வடிவச் சிறு மேஜையும் நீள் சோபாவும் அங்கே இருந்தன.

''உட்கார். கொஞ்ச நேரம் உட்கார்ந்திரு'' என்றார் தகப்பனார்.

சொல்விட்டு வேலையில் ஆழ்ந்துவிட்டார். சிறு வயது முதலே தகப்பனாரின் அலுவல் அறை மேல் விளாதீ மிருக்கு மரியாதை. அப்பா நிறைய வேலை செய்தார், மிக நிறைய. மாவட்டம் பூராவிலும், பல நூறு கிலோ மீட்டர் தொலைவில் இருந்த கிராமப் பள்ளிகளுக்குப் பனிக் காலக் கடுங் குளிரிலும் கூதிர்காலச் சேற்றிலும் போய்

வருவார். விளாதீமிரின் தகப்பனார் மக்கள் கல்வி நிலையங்களின் இயக்குநர் என்ற வகையில் ஆசிரியர்களுக்கு உதவப் போகாத ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்று கூட ஸிம்பீர்ஸ்க் மாவட்டத்தில் இல்லை. வீட்டிலோ அறிக்கைகளும் திட்டங்களும் கல்விமுறை பற்றிய கட்டுரைகளும் குறிப்புக்களும் எழுத வேண்டும்.

தமது காகிதங்களை அடுக்கில் ஒழுங்காக வைத்து விட்டு, ''இன்றைய வேலையை முடித்துவிட்டேன். வேலையை முடித்த பின் விட்டாற்றியாய் இருக்கலாம். ஆனால் மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யக் கூடாது'' என்று விளாதீமிரிடம் கோபம் இல்லாமல், லேசாக அச்சுறுத்தும் பாவனையில் சொன்னார் தகப்பனார். பின்பு, ''பள்ளிக்கூடம் எப்படி இருக்கிறது, மாணவரே?'' என்று கேட்டார்.

வீளாதீமிர் பள்ளியில் நடந்ததை விவரித்தான். ஒன்றும் மோசமில்லை என்றான்.

ஹாலிலிருந்து மெல்லிய இசை ஒலி கேட்டது.

தந்தையும் தனயனும் ஓசைப்படாமல் ஹாலுக்குள் புகுந்தார்கள். அரை இருட்டாக இருந்தது. பியானோவின் மெழுகுவத்தி ஸ்டாண்டுகளில் வத்திகள் எரிந்து கொண்டிருந்தன. தாயார் பியானோ வாசித்துக் கொண்டிருந்தாள். வெயில் ஒளி வீசும் கோடை நாள்போலப் பிரகாசமும் தெளிவும் நிறைந்த ஒரு மெட்டை இசைத்துக் கொண்டிருந்தாள் அம்மா. விளாதீமிரும் தகப்பனாரும் ஒரு மூலையில் உட்கார்ந்து நெடு நேரம் இசையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மனக் கலக்கம்

விளாதீமிர் கீழ் வகுப்புக்களில் படித்துக் கொண்டிருந்த போது அவன் உழைக்கப் பழகுவானா மாட்டானா என்று தகப்பனார் கவலைப்படுவார். அவன் அளவுக்கு மேல் திறமைசாலியாக இருந்தான், புது விஷயங்களைச் சட்டென எளிதில் கிரகித்துக் கொண்டான். விளாதீமிர் விடாப்பிடியாக உழைக்கவும் வல்லவன் என்பதை அப்புறம் தகப்பனார் தெரிந்து கொண்டார். இதில் வியப்பு அடைவதற்கு

ஒன்றும் இல்லை. உழைப்புக்கு ஆழ்ந்த மரியாதை குடும் பத்தில் நிலவியது. எனவே விளாதீமிர் உழைப்புக்குப் பழகியது சகஜந்தானே.

அலெக்ஸாந்தர் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு, பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந் தான். அலெக்ஸாந்தர் பீட்டர்ஸ்பர்க் புறப்படுவதற்கு முன்னால் இரு சகோதரர்களும் வெனியேத்ஸ் என்னும் செங்குத்தான வோல்காக் கரைப் பகுதிக்குச் சென்றார் கள். சகோதரர்களுக்குக் குழந்தைப் பருவம் முதலே அது நிரம்பப் பிடித்த இடம். அதற்கு மேலே வானம் விசால மாகத் திகழும். நாற்புறம் நெடுந் தொலைவரை விரிந்து பரந்த பிரதேசம் காட்சி தரும்.

''மனிதனிடம் உனக்கு எல்லாவற்றையும் விடப் பிடித்தது எது?'' என்று கேட்டான் விளாதீமிர்.

''உழைப்பு, விஷயஞானம், நேர்மை'' என்று பதில் அளித்த அலெக்ஸாந்தர் சற்று யோசனை செய்துவிட்டு, ''நம் தகப்பனார் அப்படிப்பட்டவர் என்று நினைக்கிறேன்'' என்றான்.

தகப்பனாரைப் பற்றி அலெக்ஸாந்தர் கூறிய சொற் கள் இப்போது விளாதீமிருக்கு மறுபடி மறுபடி நினைவு வந்தன. தந்தை கிராமப் பள்ளிகளைப் பார்வையிடுவதற் காகப் போயிருந்தார். அவர் எப்போதோ திரும்பி வந்திருக்க வேண்டும். அவரோ வரக் காணோம்.

விளாதீமிரின் சின்னஞ் சிறு படிப்பறை இடை மாடி யில் இருந்தது. அதன் பக்கத்தில் அதே போன்ற சிறு அறை அலெக்ஸாந்தருடையது. இப்போது அது வெறுமை யாய் இருந்தது. அண்ணன் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழ கத்தில் மூன்றாவது ஆண்டு படித்துக் கொண்டிருந்தான். ஆன்னாவும் பீட்டர்ஸ்பர்கிலேயே மகளிர் உயர்கல்விக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தாள். விளாதீமிர் அக்காளுக்காகவும் அண்ணனுக்காகவும், சிறப்பாக அலெக் ஸாந்தருக்காக, ஏங்கினான்.

''ஆனால், நடந்ததை எண்ணியது போதும். வேலை யைக் கவனிப்போம்'' என்று தன் சிந்தனையை இடை முறித்தான் விளாதீமிர்.

பாடங்கள் படித்து முடிந்தன. குழந்தைப் பருவத்தில் போலவே பள்ளிப் பையில் புத்தகங்களும் நோட்டுக்களும் ஒழுங்காக வைக்கப்பட்டுவிட்டன. மாலை முழுவதும் விளாதீமிர் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

தப்ரலியூபவ், பீஸரியேவ், பெலீன்ஸ்கீ, ஹெர்த்ஸன் ஆகியோரின் நூல்களை விளாதீமிர் படித்து வந்தது ஆசிரியர்களுக்குத் தெரியாது. விளாதீமிர் வகுப்புக்களில் கேட்காத விஷயங்கள் பற்றி இந்தப் புத்தகங்கள் உரைத்தன. சமூகத்தில் நிலவிய அநீதியை அவன் காணும் படி கண்களைத் திறந்துவிட்டன இவை.

...விளாதீமிர் படிப்பதை நிறுத்திவிட்டுக் கடிகாரத்தைப் பார்த்தான். அடே அப்பா, படிப்பில் எப்படி மூழ்கி இருந்துவிட்டான்! அம்மாவைப் போய்ப் பார்க்க வேண்டும். அவன் கீழே இறங்கிச் சாப்பாட்டு அறைக்கு ஓடினான்.

அம்மா தனியாக இல்லை. தகப்பனாரின் நண்பரும் சக ஊழியருமான இவான் யாக்கவ்லெவிச் யாக்கவ்லேவ் அண்டை வீட்டார் என்ற முறையில் பார்த்துப்போக வந்திருந்தார். அவர் சுவாஷ் இனத்தவர். சுவாஷ் கல்வி நிலையங்களின் மேற்பார்வை அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். ஜார் மன்னன் ஆட்சியால் புறக்கணிக்கப்பட்ட தமது சிறு இனத்தவரின் நலன்களைக் காக்க ஆவேசத்துடன் போராடி வந்தார் அவர்.

''நமது இல்யா நிக்கலாயெவிச், மேல் அதிகாரிகளைத் திருப்திப்படுத்துவது பற்றிக் கவலைப்படாமல் மக்களின் நன்மைக்காகவே பாடுபடுகிறார். இது அவருடைய சால்பைக் காட்டுகிறது. எங்களைப் போன்ற சுவாஷ்களுக்கும் மார்த்வீனர்களுக்கும் அவர் நிறைய நன்மைகள் செய்திருக்கிறார். எங்களுக்காக எத்தனை பள்ளிகள் திறந்துவைத்திருக்கிறார் தெரியுமா!'' என்று அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார் யாக்கவ்லேவ்.

அம்மா சொன்னாள்:

''வெகு நேரமாக இவர் ஏனோ வரக் காணோமே. எனக்கு ஒரே கவலையாய் இருக்கிறதே!''

ஹாலிலிருந்து தணிந்த இசையொலி கேட்டது. ஒல்கா சைக்கோவ்ஸ்கியின் கிருதி ஒன்றைப் பியானோவில்

வாசித்துக் கொண்டிருந்தான். எல்லோரும் பேச்சை நிறுத்திவிட்டு அதைக் கேட்கலானார்கள்.

ஆனால் இது என்ன? சலங்கை ஒலி. வரவர நெருங்கிற்று. முன்னிலும் கணீரென்று ஒலித்தது. இங்கே, நம் வீட்டை நோக்கி! விளாதீமிர் துள்ளி எழுந்தான். அம்மாவும் சட்டென்று எழுந்திருந்தாள். அவள் முகம் மலர்ந்தது.

''விளாதீமிர், குழந்தைகளே, அப்பா வந்துவிட்டார்!''

ஆம், இப்போது எல்லோரும் கேட்டார்கள்—சலங்கைகள் ஜன்னலுக்கு வெளியே கிணிங்கென ஒலித்து வாயில் அருகே நின்றுவிட்டன. உத்தியோக மேல்கோட்டுக்கு மேல் ஆட்டுத்தோல் கோட்டு அணிந்து, தாடியில் உறைந்த பனிக்கம்பிகள் தொங்க, உள்ளே வந்தார் இல்யா நிக்கலாயெவிச்.

அப்பா மேல்கோட்டுக்களைக் கழற்ற எல்லாரும் உதவினர்கள். வீட்டில் அணியும் மேல் சட்டையையும் ஸ்லிப்பர்களையும் எடுத்து வந்தார்கள். சாப்பாட்டு மேஜைமேல் உணவுப் பண்டங்கள் கொண்டுவந்து வைத்தார்கள். தகப்பனாரை உட்கார்த்தி, உணவு கொள்ளும்படி உபசரித்தார்கள். தகப்பனார் உளம் நெகிழ்ந்தார். அவர் உள்ளத்திலும் உடலிலும் இதமான கதகதப்பு உண்டாயிற்று. கூச்சத்துடன் தாடியை உருவிவிட்டார்.

''ஆகாகா, ஆகாகா, பனிப் புயலும் குளிரும் நடுக்கும் வழிப் பயணத்துக்குப் பிறகு வீடு எவ்வளவு இன்பமாய் இருக்கிறது!'' என்று மகிழ்ந்தார்.

ஆரம்பப் பாராட்டுப் பேச்சுக்கள் முடிந்து, இல்யா நிக்கலாயெவிச்சின் கன்னங்களில் குளிரால் படிந்திருந்த செம்மை மறைந்ததும், தகப்பனார் வெகுவாகக் களைத்துப் போயிருப்பதாக விளாதீமிருக்குத் தோன்றியது. அவர் முகத்தில் வருத்தமும் தென்பட்டது. இதை இவான் யாக்கவ்லெவிச்சும் கவனித்தார்.

''ஏதாவது பிடிக்காதது நடந்ததோ, இல்யா நிக்கலாயெவிச்?'' என்று கேட்டார்.

இல்யா நிக்கலாயெவிச்சின் முன் துருத்திய அகன்ற நெற்றியில் மனக் கசப்பைக் காட்டும் மடிப்பு விழுந்தது.

''ஸ்தெப்பி வெளியில் எங்கோ எட்டாக்கையில் உள்ள கிராமத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். பள்ளிக்கூடம் நட்டநடுவில் இருக்கிறது. நாலு பக்கத்திலிருந்தும் காற்று வீசுகிறது. ஆசிரியையின் அறை பள்ளிக் கட்டிடத்திலேயே இருக்கிறது. செய்தித்தாள்களோ, புத்தகங்களோ கிடையா. எரிக்க விறகு கிடையாது. பள்ளிக் கட்டிடத்தில் குளிர் காலத்தில் கதகதப்பு ஊட்ட விறகு சேமிக்காமல் இருந்து விட்டார்கள், எப்படி இருக்கிறது சேதி? எல்லாவற்றுக்கும் காரணம், பணக்காரக் கிராமத் தலைவனை ஆசிரியை திருப்திப்படுத்தவில்லை என்பதுதான். ஆகவே அவன் அவளுக்குத் தொல்லை கொடுக்கிறான், உயிரை வாங்குகிறான். அவளுக்குப் பரிந்து பேசவோ, யாரும் இல்லை....''

''அப்பா, நீ பரிந்து பேசியிருப்பாயே, இல்லையா?'' என்றான் விளாதீமிர்.

''பரிந்து பேசத்தான் செய்தேன். அனால் வந்து விட்டேனே! அவள் மறுபடி தனியாய் இருக்கிறாள். பணக் காரனை, கிராமத்தார் எல்லாரையும் கைக்குள் அடக்கி வைத்திருக்கிறான். குடியானவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. நிலம் கொஞ்சம். எல்லா நிலமும் பணக்காரர் களிடமும் நிலப் பிரபுக்களிடமும் இருக்கிறது. ஏழைகளோ, குளிர்காலம் பாதி முடிவதற்குள் சாப்பாட்டுக்கு வகை இல்லாமல் திண்டாடுகிறார்கள்.''

இல்யா நிக்கலாயெவிச் அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தார், காலர் பொத்தானைக் கழற்றிவிட்டுக் கொண்டார். அவருக்கு இறுக்கமாய் இருந்தது. அவர் விழிகளில் துயரம் தேங்கி நின்றது.

''இதோ பார், நீ கவனத்துப் போய்விட்டாய். நீ இளைப்பாற வேண்டும்'' என்று கவலையுடன் சொன்னாள் மரீயா அலெக்ஸாந்திரவ்னா.

''இல்லை, மரீயா, நான் இன்னும் திடமாகத்தான் இருக்கிறேன், மரம் போல. சுற்றிலும் இளம் கன்றுகள் வேறு வளர்கின்றன'' என்று விளையாட்டாகக் கூறினார் இல்யா நிக்கலாயெவிச்.

அவர் விளாதீமிரைத் தழுவிக்கொண்டார். மகன் விரைப்பாக நிமிர்ந்து நின்றான். தகப்பனார் போலவே அவ

னுக்கும் சற்று அகன்ற தாடை, பரந்து நிமிர்ந்த நெற்றி. தகப்பனுரின் அன்பு அவனைப் பரவசப்படுத்தியது. ஆனு லும் அவன் கூச்சம் உள்ளவன் ஆகையால், பதிலுக்குப் புன்னகை மட்டுமே செய்தான்.

தந்தை

குளிர்கால விடுமுறை முடியும் தறுவாயில் இருந்தது. விரைவில் ஆன்னு மகளிர் உயர்கல்விக்கழகப் படிப்புக் காகப் பீட்டார்ஸ்பர்க் திரும்ப வேண்டும். விடுமுறைக்கு ஆன்னு மட்டுமே ஊருக்கு வந்தாள், அலெக்ஸாந்தர் வர வில்லை. பயணச் செலவு மிக அதிகம்.

வீட்டுக்காக ஏங்கிப்போன ஆன்னுவுக்கு ஒவ்வொரு சிறு விஷயமும் களிப்பு ஊட்டியது. சாப்பாட்டு அறையி லும் ஹாலிலும் அலங்காரத்துக்காகத் தொட்டிகளில் வைத்திருந்த அத்திச் செடியும் அலரிச் செடியும்கூட அவளுக்கு மகிழ்ச்சி அளித்தன. அருமைப் பியானேவும் அவளுக்குக் களிப்பு ஊட்டியது. அதை இப்போது அம்மா மட்டும் அல்ல, ஒல்காவும் திறமையுடன் வாசித்தாள்.

விளாதீமிர் விடுமுறை பூராவும் தமக்கையை விட்டு விலகாதிருந்தான்.

ஹாலின் ஒரு மூலையில் நீள சோபாவில் இருவரும் வசதியாக அமர்ந்து கொள்வார்கள். விளக்கு ஏற்ற மாட் டார்கள். ஆன்னு பீட்டர்ஸ்பர்க் செய்திகளை விவரிப்பாள். சில வேளைகளில் ஒல்காவும் வந்து இந்த விவரங்களைக் கவனித்துக் கேட்பாள்.

''நாமும் எப்போதுதான் மேல்படிப்புக்குப் பீட்டர்ஸ் பர்க் போகப்போகிறோமோ?'' என்று ஆவலுடன் எண்ணி னர்கள் விளாதிமிரும் ஒல்காவும்.

அன்றைய தினமும், அதாவது 1886ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் தேதி, விளக்கு ஏற்றுமலே ஹாலில் உட்கார்ந்திருந்தார்கள் அவர்கள்.

''குழந்தைகளா, தேநீர் சாப்பிட வாருங்கள்!'' என்று அழைத்தாள் தாயார்.

சிறுவர்கள் சாப்பாட்டு அறைக்குப் போக எழுந் திருந்தார்கள். அப்பாவின் அறையைக் கடந்து செல்கையில்

குழந்தைப் பருவப் பழக்கப்படி நுனிக்கால்களால் ஓசைப்படாமல் நடந்தார்கள்.

தகப்பனுருக்கு ஓய்வு ஒழிவு இல்லாத வேலை. பள்ளிக் கூடங்களின் வேலை பற்றிய ஆண்டு அறிக்கை தயாரித்துக் கொண்டிருந்தார் அவர். காலை முதல் நள்ளிரவுவரை எழுதிய வண்ணமாய் இருந்தார். பாடத்திட்டம் எந்த அளவு நிறைவேற்றப்பட்டது, மாணவர்கள் எந்த அளவு முன்னேறி இருக்கிறார்கள் என்று விவாதிப்பதற்காகப் பள்ளி மேற்பார்வை அதிகாரிகளும் ஆசிரியர்களும் நாள் முழுவதும் அவரிடம் வந்தபடியே இருந்தார்கள்.

திறந்த கதவு வழியாகத் தகப்பனுரின் கூனிய முதுகை விளாதீமிர் கண்டான். அவர் கன்னப் பொருத்தைக் கை முட்டி மேல் சாய்த்தவாறு மேஜை அருகே உட்கார்ந்திருந்தார். ''அப்பா தம்மைக் கவனித்துக் கொள்வதே கிடையாது'' என்று நினைத்துக் கொண்டான் விளாதீமிர்.

ஆனால் சாப்பாட்டு அறையின் கதகதப்பும் வசதியும், அடித்தட்டின்மேல் வைத்திருந்த ஸமவாரில் கொதித்த நீரின் சீழ்க்கை ஒலியும் கலக்கம் நிறைந்த எண்ணங்களை அகற்றி விட்டன. உள்ளத்தில் மீண்டும் ஒளி பரவிற்று. விளாதீமிரின் வருங்காலக் கல்லூரி வாழ்க்கைபற்றி ஆன்னுவும் அவனும் மறுபடி பேசத் தொடங்கினர்கள். அலெக்ஸாந்தருக்கு விஞ்ஞானி ஆவதற்கு வேண்டிய எல்லாத் திறமைகளும் தகுதிகளும் இருப்பதால் அவன் கட்டாயம் விஞ்ஞானி ஆவான் என்று பேசிக் கொண்டார்கள். ஓல்காவோ, பியானோ வாசிப்பதில் அபரிமிதமாக முன்னேறி வருகிறாள், ஆகவே அவள் இசைக் கலையில் வல்லவள் ஆகலாம்! அதிலும் அவள்தான் எவ்வளவு பிடிவாதமாக உழைக்கிறாள்! கட்டாயம் அருமையான இசை நிபுணி ஆகிவிடுவாள் அவள். தகப்பனுரின் அலுவல் அறைக்குக் கெட்டியான தேநீர் ஒரு தம்ளரில் எடுத்துப் போய்க் கொடுத்து விட்டு வந்த தாயார் குழந்தைகளின் உரையாடலைக் கேட்டவாறு ஸமவாரின் அருகே அமர்ந்து உடை பின்னிக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் தந்தையே அறையிலிருந்து வெளி வந்து வாயில் அருகே நின்றார். எல்லாரையும் நீண்ட நேரம் உற்றுப் பார்த்தார். ஒன்றும் பேசாமல் அறைக்குள் போய்விட்டார்.

''அப்பா எப்போதும் போல இல்லே'' என்ற எண்ணம் விளாதீமிரின் மனத்தில் சுருக்கென்று தைத்தது.

''போய் அப்பாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று திடீரென எழுந்தாள் மரீயா அலெக்ஸாந்திரவ்னா.

பின்னல் நூலே அப்படியே வைத்துவிட்டு மடமடவென்று அலுவல் அறைக்குள் போனாள்.

''குழந்தைகளா! ஆன்னா! விளாதீமிர்!'' என்று அவள் வீரிட்டது கேட்டது.

தகப்பனார் மங்கிய பார்வையுடன் நீள் சோபாவில் முடங்கிக் கிடந்தார். அவரைக் கடும் குளிர் நடுக்கியது. உடம்பு உதறல் எடுத்தது.

மருத்துவரை அழைத்துவர ஓடினார்கள் குழந்தைகள். கதவுகள் மடாரென்று ஒலித்தன. யாரோ அழுததும் கலவரத்துடன் கிசுகிசுத்ததும் கேட்டன.

ஒரு மணி நேரத்தில் தந்தையின் ஆவி பிரிந்து விட்டது.

சவப்பெட்டி ஹாலில் வைக்கப்பட்டது. தாயார் மூன்று நாட்கள் அதைவிட்டு நகரவே இல்லே. ஒரு வார்த்தை பேசாமல் நின்று கொண்டிருந்தாள். பெண்கள் வாய்விட்டு அழுதார்கள். விளாதீமிருக்குக் கண்ணீர் பொங்கி வந்தது, மூச்சு திணறிற்று. ஆனால் அவன் நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டான். ''அப்பா, நல்ல அன்புத் தந்தையே! நீ இறந்து விட்டாயா? மெய்யாகவா? நீ இல்லாமல் நாங்கள் எப்படி இருப்போம்?'' என்று அவன் உள்ளம் மட்டும் கதறியது.

இல்யா நிக்கலாயெவிச்சுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஏராளமான மனிதர்கள் வந்தார்கள். ஆசிரியர்களும் மாணவர்களும் நண்பர்களும் வந்தார்கள். தகப்பனார் மக்களுக்கு அவசியமான, பயனுள்ள செயலேச் செய்கிறார் என்று விளாதீமிர் அறிந்திருந்தான். ஆனால் மக்களுக்கு அவர் எவ்வளவு நிறைய நன்மைகள் செய்திருக்கிறார் என்பதை இப்போது தான் புரிந்து கொண்டான்.

கடுங் குளிரும் வெயிலொளியும் நிறைந்த பகலில் இல்யா நிக்கலாயெவிச்சின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அசைவின்றி விரைத்து நின்ற மரங்கள் உறைபனி படிந்து மயிரடர்ந்தவை போலத் தோற்றம் அளித்தன.

செஞ்சிட்டுக்கள் கவலையற்ற கூட்டங்களாகக் கிளைக்குக் கிளை தத்திப் பறந்தன. கிளைகள் அசைந்து வெள்ளிப் பனிச் சிதல்களை உதிர்த்தன. ஆட்கள் சவப்பெட்டியைச் சுமந்து சென்றார்கள். இல்யா நிக்கலாயெவிச்சின் மாணவர்கள் பூ வளையங்களை ஏந்தியவாறு முன்னே நடந்தார்கள்.

''அப்பா, போய் வா! நீ செய்த எல்லாவற்றுக்கும் நன்றி!'' என்று துயர் பொங்க மனத்துக்குள் சொல்லிக் கொண்டான் விளாதீமிர்.

மார்ச் முதல் தேதி

தகப்பனர் உயிரோடு இருந்தபோதே இவான் யாக்கவ்லெவிச் யாக்கவ்லேவ், அஹோத்னிக்கவ் என்னும் சுவாஷ் இளைஞனை ஒரு முறை விளாதீமிரிடம் அழைத்து வந்திருந்தார்.

இவனுக்குப் பாடங்கள் சொல்லித் தர வேண்டும். சுவாஷ் இன மக்களுக்கு உயர் கல்வி பெற்றவர்கள் மிக மிகத் தேவை!'' என்றார் யாக்கவ்லேவ்.

அஹோத்னிக்கவுக்கு ட்யூஷன் சொல்லித்தர விளாதீமிர் இசைந்தான். சம்பளம் வாங்காமல். இல்யா நிக்கலாயெவிச் காலமான பிறகோ, விளாதீமிர் விசேஷப் பிரயாசையுடன் அஹோத்னிக்கவுக்குக் கற்பிக்கத் தொடங்கினான். தகப்பனுக்கு நினைவு அஞ்சலி செலுத்துவது போல. தகப்பனர் சுவாஷ் இனத்தாருக்காகப் பள்ளிகள் திறக்க அவ்வளவு ஆர்வத்துடன் பாடுபட்டார், அவர்களுக்கு அவ்வளவு நிறைய உதவினர் அல்லவா?

''அவர் பெரிய மனிதர். மக்களின் நன்மைக்காகவே வாழ்ந்தார்'' என்று இல்யா நிக்கலாயெவிச்சை நினைவு கூர்ந்தான் அஹோத்னிக்கவ்.

விளாதீமிர் மேலும் மேலும் அடிக்கடி பின்வருமாறு எண்ணமிடுவான்: மக்களின் நன்மைக்காக வாழ்வது எப்படி? குடியானவனின் மகன் அஹோத்னிக்கவுக்கு அவன் கற்றுக் கொடுக்கிறான். இன்னும்? இன்னும், மக்களின் உண்மைக் காவலர்கள் புரட்சிக்காரர்களே என்பதை விளாதீமிர் புரிந்து கொள்ளத் தொடங்கினான். ஆனால் புரட்சிப்

போராட்டத்தில் எப்படி ஈடுபடுவது என்பது விளாதீமிருக்குத் திட்டவட்டமாகத் தெரியவில்லை. உயர்நிலைப் பள்ளியில் நிலவிய கொடுமையான, கெட்ட ஒழுங்கு முறைகள் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. கழுத்தில் மாட்டியிருந்த சிலுவையை அவன் அறுத்து எறிந்துவிட்டான். சமூகம் எவ்வளவு நியாயம் அற்ற முறையில் அமைந்திருக்கிறது என்பது பற்றி அவன் நிறையச் சிந்தனை செய்தான். பணக்காரர்கள் வீண் பொழுது போக்குகிறார்கள், ஏழைகளோ, ஓய்வு ஒழிவு இல்லாமல் உழைக்கிறார்கள். அப்படியும் அவர்கள் ஏழ்மையிலேயே காலம் தள்ளுகிறார்கள். இது நியாயமா? விளாதீமிருக்கு ஜாரையும் பிடிக்கவில்லை. ஜார் கொடுங்கோலன். ஆனால் அவனை எதிர்த்துப் போராடுவது எப்படி?

அங்கே, பீட்டர்ஸ்பர்கில், அலெக்ஸாந்தர் இவற்றை எல்லாம் பற்றிச் சிந்திக்கிறானா? அல்லது ஒருவேளை அண்ணன் அரசியலை நெருங்காமல் விலகி, விஞ்ஞானத்திலேயே ஈடுபட்டிருக்கிறானே? விளாதீமிருக்குத் தெரியவில்லை. 1887ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதி பீட்டர்ஸ்பர்கில் நடந்த நிகழ்ச்சி, விளாதீமிருக்கும் அம்மாவுக்கும், ஆன்னுவுக்குங்கூட—அலெக்ஸாந்தரோடு நெருங்கி அளவளாவியவள், பீட்டர்ஸ்பர்கில் ஓயாமல் அவனைக் கண்டு பேசிக் கொண்டிருந்தவள் ஆன ஆன்னுவுக்கும் கூட—எதிர்பாரா இடியாக இருந்தது. எல்லோரையுமே இந்த நிகழ்ச்சி தூக்கிவாரிப் போட்டது.

வகுப்பில் கடைசிப் பாடம் நடந்து கொண்டிருந்தது. எல்லாம் வழக்கம்போலவே நடந்தது. பள்ளிக் கூடத்தின் அருகே ஒருவன் விளாதீமிரிடம் ஒரு செய்தி சொன்னான்.

''வேரா வஸீலியெவ்னா உங்களைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்கள்!''

பள்ளி ஆசிரியை வேரா வஸீலியெவ்னா கஷ்கதாமவா தகப்பனாரின் நெடுங்காலச் சினேகிதி. விளாதீமிரைக் கண்டதும் அவள் முகம் வெளிற ஒரு கடிதத்தை நீட்டினாள்.

அது பீட்டர்ஸ்பர்கிலிருந்து வந்திருந்தது. மார்ச் மாதம் முதல் தேதி சில மாணவர்கள் ஜார் மூன்றாம் அலெக்ஸாந்தரைக் கொல்ல முயன்றார்கள். முயற்சி பலிக்க

வில்லை. எல்லா மாணவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அலெக்ஸாந்தர் உல்யானவும் அவர்களில் ஒருவன்.

கடிதத்தைப் படித்தபின் விளாதீமிரால் வெகு நேரம் வரை ஒன்றுமே பேச முடியவில்லை. அலெக்ஸாந்தர்! அண்ணன். ஒடிசலும் உயரமுமானவன். அவனுடைய பெரிய விழிகளில் எப்போதும் சிந்தனை நிறைந்திருக்கும். திறமை சாலி, கூரிய அறிவுள்ள அலெக்ஸாந்தர்! ஆன்னவும் கைது செய்யப்பட்டுவிட்டாள்.

தகப்பனுர் காலமாகி ஓர் ஆண்டும் சில மாதங்களும் கழிந்திருந்தன. அம்மா இன்னமும் அப்பாவுக்குத் துக்கம் கொண்டாடி வந்தாள். அவள் அழுது புலம்பவில்லை, துயர ஒப்பாரி வைக்கவில்லை. சட்டென வாடிப்போனுள், அவ்வளவு தான். கறுப்பு உடை அணிந்து, ஆழ்ந்த முகத் தோற்றத்துடன் இருக்கும் தாயாரைக் காணும் போதெல்லாம் விளாதீமிரின் நெஞ்சு சுரீரென வலிக்கும். வீட்டில் என்ன செய்ய வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்று திட்டப்படுத்தி விட்டு அன்றே பீட்டர்ஸ்பர்க் புறப்பட்டாள் அம்மா.

வீட்டில் இருந்தவர்களில் பெரியவன் விளாதீமிர் தான். கடைக்குட்டி மரீயாவுக்கு எட்டே வயது.

''என்னோடு விளையாடேன், விளாதீமிர். நீ ஏன் சிரிக்கவே மாட்டேன் என்கிறாய், விளாதீமிர்?'' என்றுள் மரீயா.

விளாதீமிர் துயரத்தை அடக்கிக் கொண்டு தங்கையுடன் விளையாடினன், ஆனல் புன்னகை செய்ய அவனல் முடியவில்லை. ''அலெக்ஸாந்தர்! என் அன்பு அண்ணு, உனக்கு என்ன நேரும்?''

மே மாதம் வந்தது. உயர்நிலைப் பள்ளிகளில் பரீட்சைகள் தொடங்கின. விளாதீமிரும் ஒல்காவும் பரீட்சை கொடுக்கப் போனர்கள். வாய் திறவாமல், பதுமைகளாய், தேர்வு ஹாலுக்கு வந்தார்கள். அழைப்புக்காகக் காத்திருந்தார்கள். தேர்வின்போது அவர்கள் அளித்த விடைகள் ஆசிரியர்களுக்குப் பரவசமூட்டின. அவ்வளவு சிறப்பாக விடை அளித்தார்கள் அண்ணனும் தங்கையும்.... ஆனல் அதற்குள்ளாகவே பத்திரிகையில் செய்தி வெளி

யாகிவிட்டது: மக்கள் கல்வி நிலையங்களின் காலஞ்சென்ற இயக்குநரின் புதல்வன் அலெக்ஸாந்தர் உல்யானவ்....

விளாதீமிர் பரீட்சை கொடுக்கப் போனான். ஸிம்பீர்ஸ்க் நகர வீதிகள் வசந்தகாலப் பட்சிகளின் பல்வகை ஒலிகளால் நிறைந்திருந்தன. எல்லாம் உயிரோட்டமும் இயக்கமும் ஆரவாரமும் நிறைந்து திகழ்ந்தன.

விளக்குக் கம்பத்தின் பக்கத்தில் சில ஆட்களை விளாதீமிர் கண்டான். கம்பத்தில் ஏதோ காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. ஆட்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். அதோ, அப்பாவுக்குத் தெரிந்த உத்தியோகஸ்தர். விளாதீமிரைக் கண்டதும் அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டு கம்பத்திலிருந்து விரைவாக அப்பால் நடந்தார். ஜனங்கள் கலைந்தார்கள். விளாதீமிர் மெதுவாக அருகே போனான். அறிவிப்பைப் படித்தான். அவன் கண்கள் இருண்டன. ஜார் மூன்றும் அலெக்ஸாந்தரைக் கொலை செய்ய முயன்ற ஐந்து மாணவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுவிட்டது. அண்ணன் தூக்கில் இடப்பட்டான்.

மரண தண்டனை பற்றிய அறிவிப்புக் காகிதங்கள் நகரின் எல்லாப் பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்தன.

உயர்நிலைப் பள்ளியின் பிரதான ஹாலில் பயங்கர மௌனம் விளாதீமிரை எதிர்கொண்டது. வடிவகணித, திரிகோணமிதிக் கேள்வித் தாள்களுக்கு எல்லோருக்கும் முன்னால் விடைகள் எழுதி ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு விளாதீமிர் வெளியே சென்றான். வோல்காக் கரையில் அலெக்ஸாந்தருடன் அடிக்கடி செல்லும் இடத்துக்குப் போனான் அவன். வசந்த கால வெள்ளம் நிறைந்த வோல்கா ஆறு கட்டின்றிப் பெருகிய நீரைக் காஸ்பியன் கடலுக்கு இட்டுச் சென்றது. ஒரு சிறு நீராவிப்படகு சரக்குத் தோணியை இழுத்துக் கொண்டு சென்றது. எங்கும் நிசப்தமும் அமைதியும் கொலு வீற்றிருந்தன. அலெக்ஸாந்தரைப் பாவிகள் என்ன செய்துவிட்டார்கள்!

ஒரு வாரத்திற்கெல்லாம் அம்மா பீட்டர்ஸ்பர்கிலிருந்து திரும்பி வந்தாள். தாயார் ஒரேயடியாக முதுமை அடைந்து நரைத்துப் போய்விட்டதை விளாதீமிர் கண்டான்.

விடை கொடு, ஸிம்பீர்ஸ்க்!

ஸிம்பீர்ஸ்கில் உல்யானவ் குடும்பத்தினருக்குத் தெரிந்தவர்கள் எல்லோரும் அவர்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக்கொள்ளத் தொடங்கினர்கள். விலகி ஒதுங்கினர்கள். மரீயா அலெக்ஸாந்திரவ்ன வீதியில் செல்லும் போது எதிரே வருபவர்கள் அவசரமாக எதிர்ச் சரகுக்குப் போய்விடுவார்கள்—மரண தண்டனை அடைந்த மகனின் தாயாருக்கு முகமன் தெரிவிக்காமல் இருப்பதற்காக.

தாயாரோ, உயரமாக, தலையை நிமிர்த்தியவாறு நகரில் உலவினாள். அவள் அழவில்லை, அலெக்ஸாந்தரைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை. ''உள வலிமை உள்ளவள், தன்மானம் மிகுந்தவள் அம்மா!'' என்று மரியா தையுடன் எண்ணினாள் விளாதீமிர்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பை விளாதீமிர் முடித்து விட்டான். மரண தண்டனை பெற்றவனின் தம்பிக்குச் சிறந்த மாணவனுக்கு வழங்கப்படும் தங்கப் பதக்கம் கொடுக்கலாமா கூடாதா என்ற சந்தேகம் ஆசிரியர்களுக்கு உண்டாயிற்று. ஆனால் இறுதித் தேர்வுகளில் விளாதீமிர் மிகச் சிறப்பாக, மிகப் பாராட்டத்தக்க வகையில் தேறியிருந்தான். எனவே தங்கப் பதக்கம் கொடுப்பது என்று முடிவு செய்தார்கள்.

''விளாதீமிர் பல்கலைக் கழகத்தில் சேர வேண்டும். ஆனால் பீட்டர்ஸ்பர்கில் சேர்த்துக் கொள்ள மாட்டார்களே?'' என்று யாக்கவ்லேவிடம் சொன்னாள் தாயார்.

''சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். முயற்சி செய்வது வீண்.''

தகப்பனார் காலமான பின்பு உல்யானவ் குடும்பத்தாரின் நிலைமை கடினமாய் இருந்தது. குழந்தைகள் படித்துக் கொண்டிருந்தார்கள், ஒருவரும் சம்பாதிக்கவில்லை. தாயாருக்குப் பென்ஷன் தகப்பனாரின் பொருட்டு கிடைத்துவந்தது. ஆனால் குடும்பச் செலவுக்கு அது போதவில்லை. மாதக் கடைசிவரை கொண்டுசெல்வது அரும்பாடாய் இருந்தது.

ஸிம்பீர்ஸ்கிலிருந்து கஸான் நகருக்குப் போய்விடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ''நம் அருமை வீட்டின் ஒவ்வொரு மூலையும் முந்திய இன்பத்தை நினைவுபடுத்துகிறது.

நமது தோட்டத்தின் ஒவ்வொரு மரமும் நம் அன்புக்கு உரியது, நமக்கு அருமையானது. இவற்றை நாம் பிரிந்து போக வேண்டும். வேற்றூர் ஆகிவிட்ட முன்னாள் நண்பர்கள் எல்லோரையும் பிரிந்து போக வேண்டும்.''

இல்லை, எல்லாருமே வேற்றூர் ஆகிவிடவில்லை. இல்யா நிக்கலாயெவிச்சின் விசுவாசம் உள்ள நண்பர்யாக்கவ்லேவ் வேற்றூர் ஆகவில்லை. விளாதீமிரின் மாணவன் அஹோத்னிக்கவ் முன்போலவே நட்பு பாராட்டி வந்தான். ஆகிரியை கஷ்கதாமவா அதே நேசத்துடன் பழகி வந்தாள். சொல்லப்போனால், நாளுக்கு நாள் முன்னைவிட அதிக நெருக்கமாக அம்மாவுடன் ஒட்டிவிட்டாள் அவள்.

ஸிம்பீர்ஸ்க் செய்தித்தாளில் பின்வரும் விளம்பரம் வெளியாயிற்று: ''தோட்ட வீடும், பியானோவும் நாற்காலி மேஜை முதலியனவும் உடைமையாளர்கள் அயலூர் செல்வது காரணமாக விற்கப்படுகின்றன. மஸ்கோவ்ஸ்கயா வீதி, உல்யானவ் குடும்பத்தாரிடம் விசாரிக்கவும்.''

வீடு வழிப்போக்கர் சாவடி போல் தோற்றம் அளிக்கலாயிற்று. வாயில் மணி அடித்த வண்ணமாய் இருந்தது. வாங்க விரும்புவோர் வந்தார்கள், ஒவ்வோர் அறையாகச் சுற்றி வந்தார்கள். சாமான்களை நோட்டமிட்டார்கள், தொட்டுத் தடவிப் பார்த்தார்கள். அம்மாவைத் தலை முதல் கால்வரை ஏற இறங்க நோக்கினார்கள், கிசுகிசுத்தார்கள். வெளிறிய நிறமும் கண்டிப்பான தோற்றமும், நரைத்த கேசங்கள்மீது 'லேஸ்வைத்த கறுப்புத் தலையணியுமாக அம்மா வாயில் அருகே நின்றாள். அன்னையின் பக்கத்தில் ஓடி, நல்லியல்பு அற்ற, நோட்டமிடும் பார்வைகளிலிருந்து அவளை மறைத்துக் காக்க விளாதீமிருக்கு விருப்பம் உண்டாயிற்று.

விளாதீமிர் தாயார் போலவே கண்டிப்பும் அடக்கமும் கொண்டிருக்க முயன்றான். அவன் அண்ணனைப் பற்றி மறுபடி மறுபடி எண்ணினான். ''அலெக்ஸாந்தர், நீ ஜாரை வெறுத்தாய். ஜாரைக் கொல்ல விரும்பினாய். அவனைக் கொன்று விட்டால் சமூக அமைப்பு மாறிவிடும், மக்களின் வாழ்க்கை மேம்படும் என்று நீ நினைத்தாய். ஆனால் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, இதே மார்ச் மாதம் முதல் தேதியன்று மக்கள் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த

புரட்சிக்காரர்கள் ஜார் இரண்டாம் அலெக்ஸாந்தரைக் கொன்றுர்கள். அதனல் மக்களின் வாழ்க்கை மேம்பட்டு விட்டதா என்ன? கொஞ்சங்கூட இல்லே. இரண்டாம் அலெக்ஸாந்தரின் இடத்தில் அமர்ந்தான் புதிய ஜார்— மூன்றும் அலெக்ஸாந்தர். நிலேமை சீர்பட்டதா? இல்லவே இல்லே. எனவே வேறு விதமாகப் போராட வேண்டும் என்று ஆகிறது.''

இவ்வாறு சிந்தித்தான் விளாதீமிர்.

வீட்டு வாயில் மணியோ, மறுபடி மறுபடி அடித்த வண்ணமாய் இருந்தது. புதிய ஆட்கள் வந்தார்கள். உல்யானவ் குடும்பத்தாரின் சாமான்களேத் தொட்டுத் தடவிப் பார்த்தார்கள், வீட்டிலிருந்து வெளியே எடுத்துச் சென்றுர்கள்.

பியானேவை மட்டுமே ஒருவரும் வாங்கவில்லே.

பியானேவின் குளிர்ந்த மூடியைத் தடவினன் விளாதீமிர்: ''எங்கள் குழந்தைப் பருவமும் இன்பமும் எல்லாம் உன்னேடு இணேந்திருந்தன.''

உல்யானவ் குடும்பத்தாருடன் பியானேவும் கஸான் நகரத்துக்குப் பயணம் செய்தது.

கஸான் மாணவர் கூட்டம்

லிம்பீர்ஸ்க் ஆண்கள் உயர் நிலேப் பள்ளியைவிடக் கஸான் பல்கலேக் கழகத்தில் ஒழுங்கு முறைகள் அதிகக் கட்டற்றவையாக இருக்கும் என்று கல்லூரி மாணவன் ஆனதும் விளாதீமிர் நம்பினன். உண்மையிலோ, அப்படி ஒன்றுமே இல்லே. கண்காணிப்பாளர்கள் மாணவர்களின் ஒவ்வோர் அடிவைப்பையும் ஒவ்வொரு சொல்லேயும் உன்னிப்பாகக் கவனித்த வண்ணமாய் இருந்தார்கள். ஜாருக்கும் அரசாங்கத்துக்கும் எதிராகவோ, தலேமை அதிகாரிகளுக்கு எதிராகவோ, இன்ஸ்பெக்டர் பத்தாப்பவுக்கு எதிராகவோ யாராவது பேசுகிறுனு என்று உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் அவர்கள். இந்த இன்ஸ்பெக்டர் பத்தாப்பவ் தடித்துப் பருத்த முரட்டு மனிதன். அவனுடைய ஈய நிறக் கண்கள் ஆன்ம ஒளியின்றி வரண்டு

கிடந்தன. கணகாணிப்பாளர்கள் மாணவர்களைப் பற்றி அவனிடம் அறிக்கை செய்து கொள்வார்கள். பத்தாப்பவ் குற்றம் செய்தவர்களின் பெயர்ப் பட்டியல் வைத் திருந்தான். அவர்களை இரக்கம் இன்றிப் பல்கலைக்கழகத்தி லிருந்து நீக்கி வந்தான். அதிலும் முக்கியமாக ஏழை மாணவர்களை. கல்லூரிப் படிப்புக் கட்டணம் பல மடங்கு அதிகமாக்கப்பட்டதால் ஏழைகள் படிப்பது வரவர அதிகக் கடினம் ஆயிற்று.

கஸான் பல்கலைக் கழகத்தில் கடுகடுப்பும் ஏக்கமும் நிறைந்த சூழ்நிலை நிலவியது. சிறைச்சாலையில் போல. ருஷ்யா முழுவதுமே சிறைக்கூடம் போல் இருந்தது.

1887ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ந் தேதி. மாஸ்கோவில் மாணவர்களின் கலக நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் பத்திரிகையில் வெளியாயின. ''உங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ளுங்கள்! போராடுங்கள்!'' என்ற இரகசிய வேண்டுகோள் கஸான் மாணவர் களிடையே தோன்றியது.

பன்னிரண்டு மணிக்கு ஒரு குரல் முழங்கிற்று:

''மாணவர்களே, கூட்டத்தில் கலந்து கொள்ள பிரதான ஹாலுக்கு வாருங்கள்!''

மாணவர்களின் கூட்டம் தடதடவென்று இடை வழியில் ஓடி இரண்டாவது மாடியில் இருந்த ஹாலுக்குச் சென்றது. முன்னே ஓடிய மாணவர்களில் விளாதீமிர் உல்யானவும் இருந்தான்.

ஆடம்பரமான ஹாலுக்குள் கூட்டமாகப் புகுந்தார் கள் மாணவர்கள்.

கூட்டத் தலைவன் பேசினான்:

''தோழர்களே! வாருங்கள் சபதம் செய்வோம், ஒரு வருக்கு ஒருவர் ஆதரவாய் இருப்பதாக. நம் கோரிக்கை களுக்காகப் போராடுவதாக. நாம் கோருகிறோம் சுதந்திரம், சட்ட உரிமைகள், உண்மை....''

அகன்ற தோட்களும் அடர்ந்த தாடியுமாக ஹாலுக் குள் வந்தான் இன்ஸ்பெக்டர் பத்தாப்பவ்.

''கனவான்களே! சட்டத்தின் பெயரால் கோருகி றேன், இந்தக் கணமே கலைந்து போய்விடுங்கள்!''

''வெளியேறு! ஒழி!'' என்று கத்தியது மாணவர் கூட்டம்.

இன்ஸ்பெக்டர் அரண்டுபோய் ஓடிவிட்டான்.

அப்புறம் வந்தார் பல்கலைக் கழகத் தலைவர். மாணவர்கள் அமைதி அடைந்தார்கள். தலைவரிடம் தங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்கள்.

''ருஷ்ய வாழ்க்கை சகிக்க முடியாதது ஆகிவிட்டது! மாணவர் வாழ்க்கை பொறுக்க முடியாதது ஆகிவிட்டது!'' என்று விண்ணப்பத்தில் எழுதப்பட்டிருந்தது.

ஆத்திரம் அடைந்த மாணவ இளைஞர்களை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் அவர்களை இதமாகப் பேசி வழிக்குக் கொண்டுவர முயன்றார் பல்கலைக் கழகத் தலைவர். ''அமைதி அடையுங்கள், கனவான்களே!'' என்று ஆரம்பித்தார்.

''அப்படியானால் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற நீங்கள் இசையவில்லையா?'' என்று மறுபடி சீறி எழுந்தார்கள் மாணவர்கள். ''தோழர்களே, எதிர்ப்பிற்கு அடையாளமாகப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறுவோம். போய் விடுவோம். மாணவர் சீட்டுக்களைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்!''

பல்கலைக் கழகத் தலைவரின் சாய்வு மேஜைமேல் முதல் மாணவர் சீட்டு வைக்கப்பட்டது. நுழைவுச் சீட்டுக்களை மாணவர்கள் கடாசினார்கள்.... பத்து. . இருபது... முப்பது... தொண்ணூற்று ஒன்பது....

விளாதீமிர் உல்யானவும் தன் சீட்டை வைத்துவிட்டான். அன்று மாலையே அவன் பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டான். இரவில் அவன் கைது செய்யப்பட்டான். சில நாட்களுக்குப்பின், நீக்கப்பட்ட மாணவன் விளாதீமிர் உல்யானவ் போலீஸ் கண்காணிப்பில் கக்கூஷ்கினெ கிராமத்துக்கு அனுப்பப்பட்டான்.

நிலையான வழி தெரிந்தது

பனிக் காலம் கடுங்குளிரும் புயலுமாக இருந்தது. விளாதீமிர் இருந்த சிறு வீடு அற்றலைந்தது. அதற்குள் எல்லாப் பக்கங்களிலுமிருந்து காற்று வீசியது. இரவு வேளை

களில் புகை போக்கிக் குழாயில் சூரூவளி சீழ்க்கை அடிக்கும், ஊளையிடும். வெண்பனிக் குவியல் ஜன்னல் வரை மேடிட்டுவிடும். பனிக் காலக் கக்கூஷ்கினே கிராமம் ஏக்கமும் தனிமையும் நிறைந்திருந்தது.

பனிக்காலம் முழுவதும் விளாதீமிர் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பிடித்த எழுத்தாளர் சொர்னிஷேவ்ஸ்கீ. அவருடைய புரட்சித் தன்மை விளாதீமிரை ஆட்கொண்டுவிட்டது. ருஷ்யச் சமூகம் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதைச் சொர்னிஷேஸ்ஸ்கீ முற்ற முழுக்க விளக்கினார். ஜாரும், அதிகார வர்க்கத்தினரும் தொழிலதிபர்களும் நிலப்பிரபுக்களுமே ஆட்சி நடத்துகிறார்கள். குடியானவர்கள், தொழிலாளர்கள் பாடோ, துன்பம் மிகுந்ததாக, சகிக்க முடியாததாக இருக்கிறது. ருஷ்ய வாழ்க்கையின் ஒழுங்கீனம் முழுவதையும் சொர்னிஷேவ்ஸ்கீ காட்டினார். போராட அறை கூவி அழைத்தார். புரட்சி செய்ய அழைத்தார். புத்தகத்தின் விலை மதிப்பற்ற, அருமையான பக்கங்கள்! விளாதீமிர் அவற்றைப் பல முறை திரும்பப் படித்தான். ஒவ்வொரு தடவையும் புதுப் புது விஷயங்கள் அவனுக்குப் புலனாயின.

எத்தனையோ கருத்துக்கள். கனவுகள், திட்டங்கள், வாழ்க்கைக் குறிக்கோள்கள்! விளாதீமிரின் வாழ்க்கைக் குறிக்கோள் என்ன? புரட்சிப் போராட்டம். ஜாருக்கும் பணக்கார வர்க்கங்களுக்கும் எதிராகப் போராடுவதற்கே தன் வாழ்நாள் முழுவதையும், ஆற்றல் அனைத்தையும் வழங்க அவன் விரும்பினான், ஆர்வத்துடன் விழைந்தான். மக்களின் இன்பத்திற்காகவும் விடுதலையின் பொருட்டும்.

புரட்சிப் போராட்டமே அவனுடைய முக்கியமான, ஒரே ஒரு குறிக்கோள். ஆனால் வாழ்க்கை நடத்துவதற்கு உழைத்துப் பொருள் ஈட்ட வேண்டும். பல்கலைக் கழகப் படிப்பை முடிப்பது, பட்டம் பெறுவது, ஏதேனும் துறையில் தனித் தேர்ச்சி அடைவது இன்றியமையாதது.

வசந்தம் வந்ததும் விளாதீமிர் கஸான் பல்கலைக் கழகத்தில் சேர மனுப் போட்டான். ஆனால் மனு நிராகரிக்கப் பட்டு விட்டது.

கோடைகால இறுதியில் மரீயா அலெக்ஸாந்திரவ்னா கல்வி அமைச்சரிடம் விண்ணப்பித்துக் கொண்டாள்.

அமைச்சரும் மறுத்துவிட்டார்.

விளாதீமிர் பின்னும் ஒரு முறை அமைச்சருக்கு மனுச் செய்து கொண்டான். இம்முறையும் அதிகாரிகள் அவனுடைய வேண்டுகோளை மறுத்துவிட்டார்கள்.

அதனால் என்ன! பல்கலைக் கழகப் பாடங்களைத் தானே கற்றுத் தேற வேண்டியதுதான். விளாதீமிர் உல்யானவ் நான்கு வருஷச் சட்டக் கல்வியை ஒன்றரை ஆண்டுக் காலத்திலேயே பழுதறக் கற்று, பரீட்சை கொடுக்கப் பீட்டர்ஸ்பர்குக்குப் பயணமானர்.

கடினமான கேள்விகள் தரப்பட்டன. நரைத்தலை களும் பெருமிதத் தோற்றமும் கொண்ட பேராசிரியர்கள் விடைகளைக் கவனமாகக் கேட்டார்கள். சற்றே அகன்ற தாடையும், சிறிது குறுகிய ஒளிவீசும் கண்களும் கொண்ட இளைஞர் உல்யானவ் விஷயத்தை ஆழ்ந்து அறிந்திருந்தார், சரளமாக விடையிறுத்தார். பேராசிரியர்கள் கருத்துக் களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

எல்லோருடைய கருத்துக்களும் ஒன்றாய் இருந்தன. உல்யானவ் சிறந்த மதிப்பெண்கள், பல்கலைக் கழக இறுதித் தேர்வுக்குரிய ஆக உயர்ந்த மதிப்பெண்கள் பெறத் தகுந்தவர் என்பதே பேராசிரியர்கள் செய்த முடிவு!

விளாதீமிர் இல்யீச்சின்* உள்ளம் களி துள்ளியது. பீட்டர்ஸ்பர்க் நகரம் அப்போதும் அவருக்கு முற்றிலும் புதியது தான். எனவே ஒழிவு நேரத்தில் தங்கை ஒல்காவுடன் நேவ்ஸ்கீ வீதியில் உலாவுவதையும், நகரைச் சுற்றிப் பார்ப்பதையும் அவர் விரும்பினர். அந்த ஆண்டு ஒல்கா பீட்டர்ஸ்பர்க் மகளிர் உயர்கல்விக் கழகத்தில் பயின்று கொண்டிருந்தாள்.

பரீட்சை கொடுத்ததும் விளாதீமிர் இல்யீச் ஒல்கா விடம் போனர். தமது மகிழ்ச்சியை அவளுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினர். தாம் உழைத்தது வீண் போக வில்லையே! விரைவில் பீட்டர்ஸ்பர்கில் நிலையாகக் குடி

---

* விளாதீமிர் என்பது இயற் பெயர். இல்யீச் என்பது இல்யாவின் மகன் என்று பொருள்படும். உல்யானவ் என்பது குலப் பெயர். இயற் பெயரையும் தந்தை பெயரையும் சேர்த்து (விளாதீமிர் இல்யீச் என்று) சொல்வது ருஷ்ய மரபு.—மொ-ர்.

புகுந்து தமது மிக முக்கியச் செயலே, புரட்சி நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும் என்று திட்டமிட்டார் விளாதீமிர் இல்யீச்.

எனவே, தங்கையைக் கண்டு பேச உவகை பொங்க நடந்தார்.

சகோதரியின் அறைக்குள் போனார். ஓல்கா கடுங் காய்ச்சலில் முகம் சிவந்து, நினைவு இன்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். அவளது கேசம் கலைந்து பறட்டையாய் இருந்தது. கொதிக்கும் உதடுகள் வெடித்திருந்தன. எதையோ கைகளால் பிடிக்க முயன்று கொண்டிருந்தாள், எதையோ குறித்துப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

''அம்மா! என்னைக் காப்பாற்று அம்மா!''

விளாதீமிர் இல்யீச் அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டார். அவள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை, திமிறினாள். அவர் தங்கையை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, தாயாரைத் தந்தி கொடுத்து அழைத்தார்.

தாயார் மரீயா அலெக்ஸாந்திரவ்னா பீட்டர்ஸ்பர்க் வந்து சேர்வதற்குள் ஓல்காவின் நிலைமை படுமோசம் ஆகிவிட்டது. 1891ம் ஆண்டு மே மாதம் 8ந் தேதி ஓல்கா காலமானாள். நான்கு ஆண்டுகளுக்கு முன் அதே நாளில்தான் அலெக்ஸாந்தர் மரண தண்டனைக்கு உள்ளானான்.

சவப் பெட்டியின் பின்னே, அன்னையைக் கைத்தாங்கலாக நடத்திச் சென்றார் விளாதீமிர் இல்யீச். தாயார் சோகை பிடித்து வெளிறிய முகத்துடன், உதடுகளைக் கெட்டியாக மூடிக்கொண்டு கண்ணீர் இன்றி நடந்தாள்.

இடுகாட்டில் புதிய புதை மேடு எழுந்தது. தோழிகள் அதன் மேல் மலர்கள் வைத்தனர்.

ஓல்காவின் உடலை அடக்கம் செய்துவிட்டு விளாதீமிர் இல்யீச் தாயாருடன் ஸமாரா நகர் திரும்பினார். இப்போது உல்யானவ் குடும்பத்தார் ஸமாராவில் வசித்தார்கள்.

ஸமாராவில் கழித்த ஆண்டுகள் விளாதீமிர் இல்யீச்சின் வாழ்க்கையில் மிக முக்கியமான பருவமாக விளங்கின. அங்கேதான் அவர் பல்கலைக் கழகத் தேர்வுக்குப்

பயின்றார். அங்கேதான் மார்க்ஸின் போதனைகளை நன்கு, ஆழ்ந்து தெரிந்து கொண்டார்.

மாபெரும் ஜெர்மன் தத்துவஞானி கார்ல் மார்க்ஸ் **மூலதனம்** என்னும் புகழ்பெற்ற நூலை எழுதினார். அவரும் அவருடைய நண்பர் ஃபிரெடெரிக் எங்கெல்ஸும் சேர்ந்து **கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை** தயாரித்து வெளியிட்டிருந்தார்கள். தொழிலாளி வர்க்கம் முதலாளிகளை வெற்றி கொள்ளும், ஆட்சி அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு உலகில் புதிய, கம்யூனிஸச் சமூகத்தை அமைக்கும் என்று கார்ல் மார்க்ஸ் சான்றுகளுடன் காட்டியிருந்தார். விளாதீமிர் இல்யீச் வியந்து பரவசம் அடைந்தார். மார்க்ஸின் போதனைகள் அவரை உளமாரக் கவர்ந்தன, ஆட்கொண்டன. வருங்கால வழியை அவர் நம்பிக்கையுடன் தெட்டத் தெளிவாகக் கண்டார். நிலையான வழி தெரிந்துவிட்டது.

மார்க்ஸின் போதனைகளைப் பின்பற்றியவர்கள் மார்க்ஸீயவாதிகள் எனப்பட்டனர். விளாதீமிர் இல்யீச் மார்க்ஸீயவாதி ஆனார். ஸமாராவில் இருந்த மார்க்ஸீயவாதிகள் வட்டத்தில் கலந்து கொண்டு மார்க்ஸின் கருத்துக்களை விளக்கவும் பரப்பவும் தொடங்கினார். அரசியல் போலீஸாரின் பிடியில் மாட்டிக் கொள்ளாமல் இருக்கும் பொருட்டு மார்க்ஸின் கருத்துக்களை இரகசியமாகவே பரப்ப வேண்டியிருந்தது.

தேர்வுகள் முடிந்த பின்னர் விளாதீமிர் இல்யீச் ஸமாரா நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பணி ஆற்றினார். குடியானவர்கள், ஏழைகள் தரப்பில் அவர் எத்தனையோ முறை வழக்காடினார்.

வேலை செய்து கொண்டே அவர் புது விஷயங்களைக் கற்றார். ஸமாராவிலிருந்து வெளியேறி ஏதேனும் பெரிய தொழிற்சாலை நகருக்கு, சிறப்பாகப் பீட்டர்ஸ்பர்குக்குப் போக அவர் மிகுந்த ஆவல் கொண்டு துடித்தார்.

அவர் வெகு நாட்களுக்கு முன்பே பீட்டர்ஸ்பர்க் போயிருப்பார். ஒல்காவின் இழப்பால் ஏங்கிய அன்னை மீது பரிவு காரணமாகவே அவர் ஸமாராவில் தங்கியிருந்தார். தமது பரிவாலும் கனிவாலும் அன்னையின் துயர் துடைக்க முயன்றார் விளாதீமிர் இல்யீச்.

முடிவில் 1893ம் ஆண்டுக் கூதிர்காலத்தில் உல்யானவ் குடும்பத்தினர் ஸமாராவிலிருந்து வெளியேறினர்கள். திமீத்ரீ பல்கலைக் கழகத்தில் சேர வேண்டியிருந்தது. எனவே, திமீத்ரீயையும் மகள் மரீயாவையும் அழைத்துக் கொண்டு மரீயா அலெக்ஸாந்திரவ்னா மாஸ்கோ போய்ச் சேர்ந்தாள்.

ஆன்னா இல்யீனிச்னாவுக்கு மணம் ஆகிவிட்டது. அவளுடைய கணவர் மார்க் திமோஃபேயெவிச் யெலிஸாரவ் பீட்டர்ஸ்பர்கில் மாணவராய் இருந்தபோது அலெக்ஸாந்தரின் தோழராக இருந்தவர். அப்போதே அவரும் அன்னா இல்யீனிச்னாவும் ஆழ்ந்த நட்பு கொண்டிருந்தார்கள். துயரம் அவர்களை நெருக்கமாகப் பிணைத்தது, விபத்து அவர்களை உறவினர் ஆக்கியது. ஆன்னாவும் மார்க்கும் உல்யானவ் குடும்பத்தாருடன் சேர்ந்தே வாழ்ந்தார்கள். இப்போதும் அவர்களுடன் சேர்ந்து மாஸ்கோ சென்றார்கள்.

வலிவும் புரட்சி உற்சாகமும் பொங்க, தனியே பீட்டர்ஸ்பர்க் சென்றார் விளாதீமிர் இல்யீச்.

தொழிலாளர் வட்டாரத்துக்கு

மாலைப் பொழுது. பீட்டர்ஸ்பர்க் வீதிகளில் விளக்குகள் மங்கலாக எரிந்தன. அரிதாகவே காணப்பட்ட வழிப் போக்கர்கள் வீடுகளுக்கு விரைந்து கொண்டிருந்தார்கள்.

விளாதீமிர் இல்யீச் குதிரைகள் பூட்டிய டிராம்வண்டியில் பயணம் செய்துகொண்டிருந்தார். டிராம்வண்டி இருப்புப் பாதையில் இப்புறமும் அப்புறமும் ஆடியவாறு கடகடத்துச் சென்றது. ஜன்னல் கண்ணாடிகள் மீது பனி உறைந்திருந்தது.எங்கு போகிறோம் என்பதே கண்ணுக்குத் தெரியவில்லை. விளாதீமிர் இல்யீச் நெடுந்தூரம் போக வேண்டியிருந்தது. நேவ்ஸ்கயா ஜஸ்தாவா என்ற தொழிலாளர் வட்டாரத்தில், தொழிலாளர் குழுக் கூட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தார் அவர்.

குதிரை டிராம் வண்டியில் விளாதீமிர் இல்யீச் ஏறிய போது கறுப்புக் கண்ணாடி மாட்டியிருந்த சிறு கூடான ஆள் ஒருவன் ஏறுபடியில் தொற்றிக் கொண்டான். நிறுத்

தத்தில் அவனைக் கண்டு கொண்டார் விளாதீமிர் இல்யீச். செய்தித் தாளைப் படிப்பவன் போல அதனுல் முகத்தை மறைத்துக் கொண்டு விளாதீமிர் இல்யீச்சை நோட்ட மிட்டான் அந்த ஆள். அவன் போலீஸ் உளவாளி என்று விளாதீமிர் இல்யீச் புரிந்து கொண்டார்.

வெளிவாயில் அருகே உட்கார்ந்து, மேல்கோட்டுக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு, உளவாளியிடமிருந்து எப்படித் தப்புவது என்று யோசித்தார். தூங்குவது போன்று பாசாங்கு செய்தவாறு ஜன்னல் கண்ணுடிமேல் வெப்பக் காற்றை ஊதி, அதில் படிந்திருந்த உறைபனியில் தெளிவான சிறு வட்டம் ஏற்படச் செய்தார்—வெளியே பார்க்கவும் நிறுத்தத்தைத் தவற விடாதிருக்கவும் வசதி யாக. உளவாளியிடமிருந்து நழுவித் தப்ப வாக்கான ஒரு நிறுத்தத்தை அவர் அறிந்திருந்தார். பனி இளகிய வட் டத்தின் வழியே ஓரக் கண்ணுல் பார்த்துக் கொண்டிருந் தார்—வாய்ப்பை விட்டுவிடாதிருப்பதற்காக. இனி அதிகத் தூரம் இல்லை. இப்போது சிறிது தூரம்தான் போக வேண்டும். அடுத்த நிறுத்தம். வண்டி நின்றது.

''யாருக்கு இறங்க வேண்டும்?'' என்று கேட்டார் கண்டக்டர்.

ஒருவரும் பேசவில்லை. விளாதீமிர் இல்யீச்சும் மௌனமாய் இருந்தார்.

குதிரைகள் புறப்பட்டன. அப்போது விளாதீமிர் இல் யீச் இடத்தை விட்டுத் துள்ளி எழுந்து வண்டியிலிருந்து வெளியே குதித்தார். ஒரே ஓட்டமாக அடுத்த வீதிக்குச் செல்லும் இடைவழியில் பாய்ந்தார். கண்டக்டர் டிராமை நிறுத்துவதற்காக வெறிகொண்டவன் போல் அடித்த மணி ஓசை பின்னே கேட்டது. டிராம் நிறுத்தப்பட்டது. ஆனல் அதற்குள் விளாதீமிர் இல்யீச் இடைவழி போய்ச் சேர்ந்து விட்டார். விருட்டென்று வாயிலுக்குள் பாய்ந் தார். உளவாளியும் டிராமிலிருந்து குதித்தான், ஆனல் அதற்குள் நேரம் கடந்துவிட்டது. இடமும் வலமும் கண் ணுேட்டினன். ஒரு வரையும் காணவில்லை.

விளாதீமிர் இல்யீச்சோ இடை வழியைக் கடந்து அடுத்த தெருவுக்குப் போய், அங்கிருந்து தொழிலாளர் குழுக் கூட்டத்தைத் தடங்கல் இன்றிச் சென்று அடைந்தார்

குழுக் கூட்டம் இவான் பாபுஷ்கின் என்னும் தொழிலாளர் வீட்டில் நடந்தது. நேவ்ஸ்கயா ஜஸ்தாவாவுக்கு அப்பாலிருந்த இயந்திரத் தொழிற்சாலையில் உலோகக் கம்மியராக அவர் வேலை பார்த்து வந்தார். நகரின் அந்தப் பகுதியில் எத்தனையோ ஆலைகளும் தொழிற்சாலைகளும் இருந்தன. காலையில் இன்னும் இருட்டாய் இருக்கும் போதே தொழிற்சாலைச் சங்குகள் பல குரல்களில் ஊதத் தொடங்கிவிடும். தொழிலாளர்கள் இருட்டோடு இருட்டாக வேலைக்குப் புறப்பட்டு விடுவார்கள். அவர்கள் வேலை நேரம் முடியும்போது இரவு வந்துவிடும். ஆகவே அவர்கள் சூரியனைக் காண்பதே இல்லை. ஒளியற்ற வாழ்க்கை! என்றென்றும் இப்படியே வாழ்வது முடியவே முடியாது!

உலோகக் கம்மியர் பாபுஷ்கினின் இல்லத்தில் போலீசாருக்குத் தெரியாமல் கூடி, தங்கள் நிலைமைபற்றி விவாதித்தார்கள் தொழிலாளர்கள்.

அன்று மாலை நிக்கலாய் பெத்ரோவிச் என்னும் பேச்சாளர் வருவதாக இருந்தார். உண்மையில் அவர் விளாதீமிர் இல்யீச்சேதாம்.

விளாதீமிர் இல்யீச் தொழிலாளர் குழுக் கூட்டங்களுக்குப் போனது எதற்காக?

எல்லாத் தொழிலாளர்களுக்கும் மார்க்ஸின் போதனையை எடுத்துச் சொல்வதற்காகவே, மார்க்ஸ் பின்வருமாறு போதித்தார்: தொழிலாளர்கள் சமூகத்தை மாற்றி அமைக்கவல்ல சக்தி ஆவர். தொழில் அதிபர்களுக்கும் ஜார் மன்னனுக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொழிலாளர்கள் விரும்பினால், அதற்கு அவர்களால் முடிந்தால், அவர்களை முறியடிக்க ஒருவராலும் ஆகாது. எனவே, தொழிலாளர்கள் ஒன்று சேர வேண்டும். குறிக்கோளைத் திட்டம் செய்து கொண்டு அதை நோக்கி முன்னேற வேண்டும். தொழிலாளர்களின் குறிக்கோள் எதுவாக இருக்க முடியும்? ஒன்றுதான். ஆட்சி அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்வதே அது. உழைப்பாளிகளின் அரசை ஸ்தாபிப்பதே அது.

நேர்த்தியான அரசு, நியாயம் உள்ள சமூகம்! மார்க்ஸ் இந்தச் சமூகத்தைக் கம்யூனிஸச் சமூகம் என்று அழைத்தார்.

முதல் புத்தகம்

நேவ்ஸ்கயா ஜஸ்தாவாவில் உலோகக் கம்மியர் இவான் வஸீலியெவிச் பாபுஷ்கினுடைய குழுவில் விளாதீமிர் இல்யீச் பங்காற்றி வந்த சமயத்தில் பீட்டர்ஸ்பர்க் நகரின் பல்வேறு பகுதிகளில் அனேக மார்க்ஸீயத் தொழிலாளர் குழுக்கள் இயங்கி வந்தன. விளாதீமிர் இல்யீச் பீட்டர்ஸ்பர்க் வந்ததும் புரட்சிகர மார்க்ஸீயவாதிகளுடன் தொடர்பு கொள்வதிலேயே முதற்படியாக முனைந்தார்.

''தோழர்களே! நாம் எல்லோரும் தொழிலாளி மக்களிடையே மார்க்ஸின் போதனையைப் பரப்ப வேண்டும். தொழிலாளர்களுடன் ஒன்று சேர்ந்து புரட்சிக்கு முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும்'' என்று கூறினார் விளாதீமிர் இல்யீச்.

இவ்வாறே உருவாயிற்று புரட்சிச் சங்கம். பிற்பாடு ''தொழிலாளி வர்க்க விடுதலைக்காகப் போராடும் சங்கம்'' என்று இது அழைக்கப்பட்டது. தொடக்கத்தில் ''போராட்டச் சங்கம்'' பீட்டர்ஸ்பர்கில் மட்டுமே இருந்தது. அப்புறம் அது மற்ற நகரங்களிலும் நிறுவப்பட்டது.

விளாதீமிர் இல்யீச் இந்தக் குழுக்களைத் தலைமை தாங்கி நடத்துவதோடு நின்றுவிடவில்லை. பகலிலும் முன்னிரவிலும், சில வேளைகளில் நள்ளிரவில்கூட அவர் எழுதிக் கொண்டிருப்பார். அவர் எழுதிய புத்தகம் முதலாளி வர்க்கத்தினர்களுக்குப் பயங்கரமானது. மூலதன ஆட்சியை எதிர்த்துப் போராடுவதற்குரிய சரியான வழி எது, இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைந்த முறையில் நடத்துவது எப்படி என்று இந்த நூல் தொழிலாளர்களுக்கு எடுத்து உரைத்தது.

விரைவில் விளாதீமிர் இல்யீச் புத்தகத்தை எழுதி முடித்துவிடுவார். மார்க்ஸீயவாதித் தோழர்கள் அதை இரகசியமாக அச்சடித்துத் தொழிலாளர் குழுக்களில் வினியோகிப்பார்கள்.

நேரம் ஆகிவிட்டது. விளாதீமிர் இல்யீச்சின் அறை ஜன்னலின் வலைத் துணித் திரைக்கு வெளியே காரிருள்

சூழ்ந்தது. எதிர் வீட்டில் விளக்குகள் அணைந்துவிட்டன.

விளாதீமிர் இல்யீச் பேனாவை வைத்துவிட்டு மேஜை அருகிலிருந்து எழுந்தார். மூன்று அடி நடந்தார். அறை சிறியது ஆனாலும் அதில் நடைபோடுவதில் அவருக்கு விருப்பம்.

''வழி ஒன்றுதான். வெளிப்படையான அரசியல் போராட்டம் என்னும் இந்த நேர் வழியில் வெற்றிகரமான கம்யூனிஸப் புரட்சியை நோக்கி ருஷ்யத் தொழிலாளர்கள் முன்னேறுவார்கள்''—இவ்வாறு சிந்தித்தார், எழுதினார் விளாதீமிர் இல்யீச். வெற்றி வாகை சூடும் கம்யூனிஸப் புரட்சிக்குத் தொழிலாளர்களை அறைகூவி அழைத்தது அவருடைய நூல். அதற்குமுன் யாருமே ஒருபோதுமே ருஷ்யத் தொழிலாளர்களுக்கு இவ்வளவு துணிவுள்ள அறைகூவல்கள் விடுத்ததில்லை.

இவ்வளவிற்கும் அப்போது விளாதீமிர் இல்யீச்சுக்கு வயது இருபத்து நான்குதான். அவர் புத்திசாலிதான். ஆனால் நிறைய அறிந்திருந்தார். ருஷ்யத் தொழிலாளர்கள் புரட்சியை நிறைவேற்றுவார்கள் என்று அவர் திடமாக நம்பினார்.

நான்கு துண்டுப் பிரசுரங்கள்

அரசியல் போலீசார் ஒவ்வொரு வீடாக நுழைந்து கலகக்காரர்களைப் பிடித்தார்கள். கைகளை முதுகுப் புறம் முறுக்கிப் போலீஸ் நிலையத்துக்கு இட்டுச் சென்றார்கள்.

''முதலாளியின் கடையை உடைத்துத் தகர்த்தாயா? தகர்த்தாய். ஜெயிலுக்குப் போ, கம்பி எண்ணு.''

''நிர்வாகியின் வீட்டு வாசலைக் கொளுத்தினாயா? ஜெயிலுக்குப் போ, கம்பி எண்ணு.''

''என்னையும் கைது செய்ய வருவார்கள்'' என்று எதிர் பார்த்தார் பாபுஷ்கின்.

இரவு ஆனதும் யாரோ கதவைத் தட்டினார்கள். விரைவான, சுருக்கமான தட்டல்கள்.


தட்டியவர் விளாதீமிர் இல்யீச். உறைபனி படிந்து அவர் வெளேறென்று தோற்றம் அளித்தார். புருவங்கள் மீது வெண்பனி கட்டியாகத் திரண்டிருந்தது. மேல்



உல்யானவ் குடும்பம்—மரீயா அலெக்ஸாந்திரவ்னவும் இல்யா நிக்கலாயெவிச்சும் அவர்களுடைய குழந்தைகள் ஓல்கா, மரீயா, அலெக்ஸாந்தர், திமீத்ரீ, ஆன்னு, விளாதிமிர் ஆகியோரும். ஸிம்பீர்ஸ்க், 1879




ஸிம்பீர்ஸ்க் நகரில் உல்யானவ் குடும்பத்தினர் வாழ்ந்த இல்லம்



வி. இ. லெனினது அறை




வி. இ. லெனின் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த ஆண்டில், ஸிம்பீர்ஸ்க், 1887



வி. இ. லெனின் வாலிபத்தில். ஓவியர் வி. ப்ராகெர்

வி. இ. லெனினின் தமையனர்
அலெக்ஸாந்தர் இல்யீச்
உல்யானவ். 1887






1887 டிசெம்பர் 4ந் தேதி கஸான் பல்கலைக்கழகத்தில் நடந்த புரட்சிக் கூட்டத்தில் வி. இ. லெனின். ஓவியர் ஓ. விஷ்னியக்கோவ்



வி. இ. லெனின். ஸமாரா, 1891



வி. இ. லெனின். பீட்டர்ஸ்பர்க், 1897 பிப்ரவரி

கோட்டைக் கழற்றிவிட்டு, மரத்துப்போன கைகளைத் தேய்த்துச் சூடுபடுத்தியவாறு அறையில் குறு நடை நடந்தார் அவர்.

''நல்லது, சொல்லுங்கள்! கலகம் எப்படித் தொடங் கிற்று? தொழிலாளர்களுக்கு என்ன நேர்ந்தது?''

மனத்தில் உள்ளதை எல்லாம் விளாதீமிர் இல்யீச் சிடம் சொல்லித் தீர்த்துவிட பாபுஷ்கினுக்கு விருப்பம் உண்டாயிற்று. தலைக்கு நாள் தொழிற்சாலையில் நடந்த கலகம், முதலாளியின் கடை உடைத்துத் தகர்க்கப்பட்டது, நிர்வாகியின் வீட்டு வாசலில் தீ வைக்கப்பட்டது, எல்லாம் நினைவில் நின்றன. உடைத்துத் தகர்த்ததற்காகவும் தீ வைத்ததற்காகவுமே போலீஸ்காரர்கள் இன்று தொழி லாளர்களைக் கைது செய்தார்கள்.

''இல்லை, அரசியல் உணர்வு உள்ள தொழிலாளன் அடிதடிப் போராட்டம் நடத்தக் கூடாது. இதைப் பற்றித் துண்டுப் பிரசுரம் எழுதுவோம்.''

மேஜை முன் அக்கம் பக்கத்தில் இருவரும் உட்கார்ந் தார்கள். துண்டுப் பிரசுரத்தில் என்ன எழுதுவது என்று இரகசியமாக விவாதம் செய்தார்கள். போராட்டத்துக்கு வேளை வந்துவிட்டது. தொழிலாளர்களை அடிமைத் தளை யிலிருந்து வேறு யாரும் விடுவிக்கப் போவதில்லை. நிச்சய மாக. அவர்களேதாம் தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். அடிதடிப் போராட்டம் அல்ல, ஒன்று திரண்டு போராட்டம் நடத்த வேண்டும்.

நள்ளிரவு ஆகிவிட்டது. விளாதீமிர் இல்யீச்சின் பேனா விரைவாக ஓடுவதை பாபுஷ்கின் பார்த்துக் கொண்டிருந் தார். திடீரென்று மூக்கால் துணைவர் மேல் இடித்தார்.

''நான் ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. சும்மாதான்.''

விளாதீமிர் இல்யீச் கடகடவென்று நகைத்தார். ''உட்கார்ந்தபடியே தூங்கி விழுகிறீர், சும்மா தானும்! படுத்துத் தூங்கும் ஐயா, நாளை விடியுமுன் வேலைக்குப் போக வேண்டுமே.''

பாபுஷ்கின் கீழ்ப்படிந்து படுத்துக் கொண்டார். விளா தீமிர் இல்யீச்சோ, துண்டுப் பிரசுரத்தைப் பெயர்த்து எழுதுவதில் முனைந்தார். அச்சு எழுத்துக்களில் கொட்டை கொட்டையாக எழுத வேண்டும். அப்போதுதான்

தொழிலாளர்கள் எளிதாகப் படிக்க முடியும். ஒரு பிரதி... இரண்டு, மூன்று, நான்கு....

திடீரென்று தொழிற்சாலைச் சங்கு முழங்கியது. சங்கொலி வானம் முழுவதையும் வீதி முழுவதையும் நிறைத்து, பாபுஷ்கின் வீட்டு உறைபனி படிந்த ஜன்னலி லும் வந்து மோதிற்று.

நேவ்ஸ்கீ வட்டாரம் விழித்துக் கொண்டது.

''பாபுஷ்கின், விழித்துக் கொள்ளும்'' என்று எழுப் பினர் விளாதீமிர் இல்யீச்.

பாபுஷ்கின் துள்ளி எழுந்தார். கண்களைத் தேய்த்துக் கொண்டார். விளாதீமிர் இல்யீச் அவருக்குக் கனவில் தோன்றுகிறாரா என்ன? இல்லை. விளாதீமிர் இல்யீச் மெய் யாகவே அதிகாலையில் அவருடைய அறையில் இருக்கிறார். அச்சு எழுத்துக்களில் பெயர்த்து எழுதப்பட்ட நான்கு பிரதிகளை மேஜைமேல் கண்டதும் பாபுஷ்கினுக்கு எல்லாம் நினைவு வந்துவிட்டன.

''இவற்றைத் தொழிலாளர்களிடையே வினி யோகிக்க வேண்டும். இன்னும் நிறையப் பிரதிகள் எழுத முடியாததில் தான் எனக்கு வருத்தம்'' என்றார் விளாதீ மிர் இல்யீச்.

அவர்கள் வீட்டிலிருந்து வெளியே போனார்கள். இரவு விண்மீன்கள் இன்னும் மறையவில்லை. அவை மெல்ல நீல ஒளி வீசிக் கண் சிமிட்டின. புகை போக்கிகளிலிருந்து வெண் புகைப் பிழம்புகள் தூண்கள் போல் கிளம் பின. தொழிலாளி மக்களின் கரிய கூட்டங்கள் வீதியில் ஆறுப்பெருகலாயின. விளாதீமிர் இல்யீச்சும் பாபுஷ்கி னும் மக்கள் கூட்டத்தில் கலந்தார்கள்.

பாபுஷ்கின் பையைத் தொட்டுத் துண்டுப் பிரசுரங் கள் பத்திரமாய் இருக்கின்றனவா என்று பார்த்தார். தெரிந்த தொழிலாளர்களிடம் அவற்றை இரகசியமாகக் கொடுப்பார். அவர்கள் படித்துவிட்டு மற்றவர்களிடம் கொடுப்பார்கள். இப்படி அவை பரவும்.

''இதுதான் நமது முதலாவது கிளர்ச்சித் துண்டுப் பிரசுரம். நலமே ஆகுக, பாபுஷ்கின்!'' என்றார் விளாதீமிர் இல்யீச்.

"மீனி"

"மினோகா" என்பது குறுகிய, நீளமான மீன். கண்ணுக்குக் கவர்ச்சியான மங்கை நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ குரூப்ஸ்கயாவுக்கு "மீனி" என்று பொருள்படும் அந்தப் புனை பெயர் ஏன்தான் தரப்பட்டதோ புரியவில்லை. ஆனால் "போராட்டச் சங்க" உறுப்பினர்களுக்கு விந்தை விந்தையான புனைபெயர்கள் மனத்துக்குத் தோன்றியபடி சூட்டப்பட்டன. உதாரணமாக, கிளேப் க்ரிழிழனோவ்ஸ்கீக்கு "வயலெலி" என்ற புனைபெயர் கொடுக்கப்பட்டிருந்தது. வயலெலியை அவர் எவ்வகையில் ஒத்திருந்தார்? ஒரு வகையிலும் இல்லை. விளாதீமிர் இல்யீச்சுக்குக் "கிழவனார்" என்ற புனைபெயர், அவருடைய நுண்ணறிவு, கல்வி இவற்றின் காரணமாகப் பொருத்தமாய் அமைந்தது.

நவம்பர் மாதம், அலெக்ஸாந்திரோவ்ஸ்கீ பூங்காவின் மரங்கள் பனி படிந்து வெண்மைத் தோற்றம் அளித்துக் கொண்டிருந்த ஒரு நாள் "மீனி", அதாவது, நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ குரூப்ஸ்கயா, பொது நூலகத்துக்கு எதிரே சதுக்கத்தில் மெது நடையாக உலாவிக் கொண்டிருந்தாள். குட்டையான மென்மயிர்த்தோல் கோட்டு அவள் மீது இலகியது. தலையில் அணிந்திருந்த மென்மயிர்த்தோல் தொப்பி, பின்னலை மூடவில்லை. சிறு குழல் கையுறைக்குள் விரல்கள் ஒரு நோட் புத்தகத்தை இறுகப் பிடித்திருந்தன. தொழிலாளர்களின் கோரமான வாழ்க்கை பற்றிய விவரங்கள் அந்த நோட்டில் குறிக்கப்பட்டிருந்தன. இந்த விவரங்கள் துண்டுப் பிரசுரம் தயாரிக்கத் தேவையாய் இருந்தன.

விளாதீமிர் இல்யீச் லெனின் பாபுஷ்கினுடன் சேர்ந்து முதலாவது துண்டுப் பிரசுரம் தயாரித்து நள்ளிரவுக்குப் பின் அதற்கு நான்கு பிரதிகள் எடுத்து ஓர் ஆண்டு கழிந்து விட்டது. இப்போதோ, பீட்டர்ஸ்பர்க் "போராட்டச் சங்கம்" நூற்றுக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டது, நகலெடுக்கும் பொறியில் அவற்றை இரகசியமாக அச்சடித்து நகர் முழுவதிலும் பரப்பியது.

...கடைசியில் வந்துவிட்டார் அவர், விளாதீமிர் இல்யீச்! பொது நூலக வாயிலில் அவர் தென்பட்டார்.

அவரைக் கண்டதும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ நேவ்ஸ்கீ வீதியில் விடுவிடென்று நடந்தாள். நேவ்ஸ்கீ வீதியில் இருவரும் சந்தித்து நெவா ஆற்றை நோக்கி இறங்கினர்கள். விளாதீமிர் இல்யீச் அவளைக் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்றார்.

''நூலகத்தில் வேலை நன்றாக நடந்ததா?'' என்று கேட்டவாறே குழல் கையுறைக்குள் இருந்த நோட் புத்தகத்தை அவருடைய மேல்கோட்டுக் கைக்குள் செருகினாள் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ.

''அருமையாக!'' என்று விடையளித்து, நோட் புத்தகத்தைக் கோட்டுக் கையில் இன்னும் ஆழமாக நுழைத்தார் விளாதீமிர் இல்யீச். ''துல்லியமான விவரங்களா?'' என்று பின்பு கேட்டார்.

''ஆமாம்.''

''நன்றி!'' என்றார் விளாதீமிர் இல்யீச்.

குளிரால் இளஞ்சிவப்பேறிய முகத்தை அவள் அவர் பக்கம் திருப்பினாள். அவளுடைய கண்கள் ஒளி வீசின. எளிமையும் ஆழ்ந்த போக்கும் உள்ள இந்த மங்கையுடன் பழகுவது விளாதீமிர் இல்யீச்சுக்கு மிக இன்பமாய் இருந்தது. விளாதீமிர் இல்யீச் பீட்டர்ஸ்பர்க் வந்து சேர்ந்த சிறிது காலத்திற்கெல்லாம் அவர்களிடையே பரிச்சயம் ஏற்பட்டது. அப்பொழுதுதானே? வாழ்நாள் முழுவதும் அவளே அறிந்திருந்ததுபோல விளாதீமிர் இல்யீச்சுக்குத் தோன்றியது. அவளிடம் தம் எண்ணங்களைச் சொல்லுவது அவருக்கு உவப்பாய் இருந்தது. அவள் விருப்பத்துடனும் மகிழ்ச்சியுடனும் அவருக்கு உதவினாள். அவர்களுடைய கருத்துக்களும் குறிக்கோளும் செயலும் ஒன்றாய் இருந்தன.

விளாதீமிர் இல்யீச் எச்சரிக்கும் பாவனையில் தன் கையை அழுத்தியதை நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ திடீரென உணர்ந்தாள். பின்னால் அவர்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான் ஒருவன். மிக விரும்பத்தகாத அந்தப் பேர்வழி, மேல்கோட்டுக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டிருந்தான்.

விளாதீமிர் இல்யீச் நொடிப்போதில் பேச்சை மாற்றினார். மிக மிக அன்றாட விவகாரங்கள் பற்றி உரக்க விவாதிக்கலானார். லீகவ்ஸ்கீ வீதியில் ஒரு கடை இருப்பதாகவும்

அதில் தொப்பிகள் மலிவாகக் கிடைப்பதாகக் கேள்விப் பட்டதாகவும் சொன்னார். போலீஸ் உளவாளி பின்தங் காமல் அவர்களை அடிபற்றித் தொடர்ந்தான்.

''நாம் பிரிந்து போய்விடுவோம்'' என்று தணிந்த குரலில் சொன்னார் விளாதீமிர் இல்யீச்.

அவர்கள் பிரிவு சொல்லிக் கொண்டார்கள். விளாதீமிர் இல்யீச் எதிர்ப்பட்ட தெரு ஒன்றில் விரைவாக மேலே நடந்தார். உளவாளி அவரை விடாது பின்பற்றினான். சில நிமிடங்கள் விளாதீமிர் இல்யீச் வேகமாக முன்னே சென்றார். திடீரென்று ஒரு சந்தில் சட்டெனத் திரும்பி னார். உளவாளி இதை எதிர்பார்க்காமல் தெருவில் மேலே நடந்தான். விளாதீமிர் இல்யீச்சோ, சந்தில் பணக்காரர் வீடு ஒன்றின் ஆடம்பரமான முன்வாயிலைக் கண்டார். வாயில் காப்போனின் நாற்காலி வெறுமையாய் இருந்தது. நொடிப்போதில் வாயிலில் புகுந்து, நாற்காலியில் அமர்ந்து, மேஜை மேலிருந்த செய்தித்தாளை எடுத்து அதனுல் முகத்தை மறைத்துக் கொண்டார்.

உளவாளி ஓடிவந்து சந்துக்குள் நுழைந்தான். ''நான் ஒற்றுடிய ஆள் எங்கே? தரையின் ஊடே புகுந்து மறைந்து விட்டானு என்ன?'' என்று வியப்பினுல் வாயை ஆவென்று திறந்தான் உளவாளி. வெறுங்கையோடு அவன் வந்த வழியே திரும்ப வேண்டியதாயிற்று.

அவனுடைய பரிதாபமான தோற்றத்தைக் கண்டு விளாதீமிர் இல்யீச் அடக்கமாட்டாமல் சிரித்துவிட்டார். ஆனுல் நேரம் தாழ்ப்பது சரியல்ல—வாயில் காப்போன் வந்து விடலாமே! விரைவாக வீட்டுக்குப் போக வேண் டும். கோட்டுக் கையைத் தொட்டுப் பார்த்து நோட் புத்தகம் பத்திரமாய் இருப்பதைக் கண்டு கொண்டார் விளாதீமிர் இல்யீச். ஆபத்து கடந்துவிட்டது. விரைவாக வீட்டுக்கு, வேலை செய்யப் புறப்பட்டார்.

''எங்கள் செயலைச் சிதைக்க முடியாது''

1895ம் ஆண்டு டிசெம்பர் மாதம் எட்டாந் தேதி நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு குரூப்ஸ்கயாவின் வீட்டில் ''போராட்டச் சங்க'' உறுப்பினர்களின் கூட்டம் நடந்

தது. ''போராட்டச் சங்கம்'' சட்ட விரோதமாக **ரபோச்சியே தேலோ** (தொழிலாளர் விவகாரம்) என்ற செய்தித்தாளை வெளியிடத் தீர்மானித்திருந்தது. போராட்ட உணர்வும் துணிவும் நிறைந்த தலையங்கங்களை விளாதீமிர் இல்யீர் எழுதியிருந்தார்.

ரபோச்சியே தேலோ செய்தித்தாளை இரகசிய அச்சகத்தில் பதிப்பிப்பது என முடிவு செய்யப்பட்டது. பீட்டர்ஸ்பர்க் நகர்ப் புறத்தில், ஃபின்லாந்து வளைகுடாக் கரையில் இத்தகைய அச்சகம் இருந்தது.

கட்டுரைகள் அனத்தோலி வனேயெவிடம் கொடுக் கப்பட்டன. இவர் இருபத்து மூன்று வயதான இளம் மாணவர். புரட்சி வேலையில் மன, மொழி, மெய்யார்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார் இவர். விளாதீமிர் இல்யீச் மிகப் பொறுப்புள்ள காரியங்களை அவரிடம் ஒப்படைத்து வந்தார். மறு நாள் அனத்தோலி வனேயெவ் கட்டுரை களை அச்சகத்துக்கு எடுத்துப் போவார். விரைவிலேயே தொழிலாளர்கள் தங்கள் சொந்தச் செய்தித்தாளைப் படிப்பார்கள்.

கூட்டம் முடிந்து ''போராட்டச் சங்க'' உறுப்பினர் கள் கலைந்து செல்கையில் வெகு நேரம் ஆகிவிட்டது.

விளாதீமிர் இல்யீச் இன்னும் சற்று நேரம் தங்கினர். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் அவரும் உரையாடினர் கள், பேசப் பேச அவர்களுக்கு அலுக்கவில்லை. தோழர் களைப் பற்றி. விளாதீமிர் இல்யீச் ஒரு மனிதனின் சுபாவத் தில் உள்ள அக்கறைக்கு உரிய அம்சத்தை எப்படியோ தேடிக் கண்டு அதைப் பாராட்டத் தொடங்குவார், சலிக் காமல் பாராட்டிய வண்ணமாய் இருப்பார். மனிதர்களை அவர் நேசித்தார்! தொழிலாளர்களைப் பற்றிப் பேசி னர். தொழிலாளர்கள் விஷய ஞானம் பெற எவ்வளவு ஆர்வமாய் இருக்கிறார்கள்! ஏன், பாபுஷ்கினையே எடுத்துக் கொள்வோமே. சுடரும் அறிவு படைத்தவர், திறமை சாலி....

''விடை கொடு, நதேழ்தா. நாளை உன்னிடம் ஓடோடி வருவேன்'' என்றார் விளாதீமிர் இல்யீச்.

வீதிகள் வெறுமையாய் இருந்தன. தெரு விளக்குகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக எரிந்தன. அவற்றின்

மங்கிய வெளிச்சம் விண்மீன்களின் ஒளியை மறைக்க வில்லை. விளாதீமிர் இல்யீச் குதிரை டிராம் வண்டியில் பொது நூலகம்வரை சென்றார். அங்கும் வெறிச்சோடிக் கிடந்தது. அவர் தன்னந்தனியாக இருந்தார். அலெக் ஸாந்திரவ்ஸ்கீ பூங்கா லிண்டன் மரங்கள் வெண்பனிச் சுமையின் பாரத்தால் சிறு கிளைகளைத் தாழ்த்தி நின்றன. மிளாறு சடசடத்தது. கிளையிலிருந்து வெண்பனி மழை பொழிந்தது. விளாதீமிர் இல்யீச்சின் உள்ளத்தில் உவகை ஊற்றெடுத்துப் பொங்கியது.

கரோஹவயா வீதியில் இருந்த தம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார் அவர். இந்த வீட்டில் அண்மையில் தான் அவர் குடி புகுந்திருந்தார். போலீஸ் உளவாளிகள் அவரைப் பிடிக்கக் கண்ணி வைத்துக் காத்துக் கொண் டிருந்தார்கள். எச்சரிக்கையாய் இருப்பதற்காக அடிக்கடி இருப்பிட மாற்றம் செய்ய வேண்டியிருந்தது.

வீட்டுச் சொந்தக்காரியை எழுப்பிவிடக் கூடாதே என்பதற்காக நுனிக்கால்களால் நடந்து அறைக்குள் சென்றார் அவர். தூக்கம் வரவில்லை. படிக்கத் தீர்மானித் தார். தாம் எழுதத் திட்டமிட்டிருந்த புதிய நூலுக்காக அவர் விஷயங்கள் திரட்டிக் கொண்டிருந்தார். இப்போதும் உட்கார்ந்தவர், படிக்கத் தொடங்கியதுமே புத்தகத்தில் ஒரேயடியாக ஆழ்ந்து விட்டார். பின்பு கடிகாரத்தைப் பார்த்தார். மணி இரண்டு ஆகவிருந்தது.

''படுத்துக் கொள்ள வேண்டும்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு மேலும் படித்தார்.

இரண்டு மணிக்கு வாயில் மணி அடித்தது.

விளாதீமிர் இல்யீச் ஒன்றும் புரியாமல் வியப்புடன் உற்றுக் கேட்டார்.

முதலில் உள்ளே வந்தான் வெளிவாயில் காவல் காரன், குட்டையான பழுப்பு மென் மயிர்த் தோல் கோட்டும் முன்தாங்கியும் அணிந்து. அவன் பின்னே ஓசைப் படாமல் உள்ளே நுழைந்தார்கள் சிவில் உடை அணிந்த இரண்டு உளவாளிகள். அரசியல் போலீஸ் அதிகாரி எல் லாருக்கும் பின்னே வந்தான்.

''கைது வாரண்டு.''

உளவாளிகள் இருவரும் துடியாகச் சோதனை போடத் தொடங்கினர்கள். புத்தகங்களில் துருவித்தேடினர்கள், படுக்கையைத் தொட்டுத் தடவிப் பார்த்தார்கள், கணப்பைக் கூர்ந்து பார்வையிட்டார்கள், அடுப்பின் காற்றுத் துவாரத்தில் கண்ணோட்டினர்கள்.

விளாதீமிர் இல்யீச் ஒரு வார்த்தை பேசாமல் சுவரருகே நின்றிருந்தார்.

அவர் தோழர்களைப் பற்றி நினைத்தார். அவர்களுக்கு என்ன நேர்ந்தது? அவர் மட்டுந்தாம் கைது செய்யப் பட்டிருக்கிறாரா, தோழர்களுமா? நதேழ்தாவோ? நதேழ்தாவுக்கு என்ன நேர்ந்தது? நம் செயல் உருக்குலைந்து போயிற்று என்ன? ''இல்லை. எங்கள் செயலைச் சிதைக்க முடியாது. எங்கள் செயலை அழிக்க முடியாது. மேலும் லட்சோபலட்சம் தொழிலாளர்கள் போராட்டத்துக்கு எழுவார்கள். ருஷ்யாவில் எல்லாத் தொழிலாளி மக்களும் கிளர்ந்து எழுவார்கள்'' என்று எண்ணினார் விளாதீமிர் இல்யீச்.

வார்டு நம்பர் 193

விட்டத்துக்கு அடியில் கம்பி போட்ட குறுகிய சாளரம். சுவர் அருகே இரும்பு மடக்கு மேஜை. இரும்பு நாற்காலி. மூலையில் தரைமேல் குவியலாய்க் கிடந்தன புத்தகங்கள். படிக்க அனுமதித்தார்கள். சகோதரிகளும் நதேழ்தாவும் விளாதீமிர் இல்யீச்சுக்குத் தேவைப்பட்ட புத்தகங்களை ஏராளமாகக் கொண்டு தந்தார்கள். நதேழ்தா அன்று இரவு கைது செய்யப்படவில்லை. விளாதீமிர் இல்யீச் சிறையில் இடப்பட்டதுமே தாயாரும் சகோதரிகளும் மாஸ்கோவிலிருந்து வந்துவிட்டார்கள்.

அன்று வியாழக் கிழமை—சந்திப்பு நாள். விளாதீமிர் இல்யீச் புத்தகங்களை ஒரு புறம் வைத்துவிட்டு, கதவுப் பக்கம் முதுகு காட்டியபடி மேஜை அருகே நின்று கொண்டார். கதவில் வட்டப் பார்வைத் துளை இடப்பட்டிருந்தது. கண்காணிப்பாளன் நிமிடத்துக்கு ஒரு தரம் அதன் வழியாக உள்ளே பார்த்துக் கொண்டிருந்தான். கதவுப் பக்கம் முதுகைத் திருப்பிக் கொண்டு நின்றவாறு விளாதீமிர் இல்யீச் ரொட்டியின் மெதுவான பகுதியைப்

பிய்த்து உருண்டை பிடித்து விரலால் அழுத்திக் குழிவு ஏற்படுத்தினர். இதுதான் அவர் ரொட்டியால் செய்த மைக்கூடு. மைக்குப் பதில் பால். ஒரு புத்தகத்தை எடுத்து அதன் வரிகளின் நடுவே பாலினுல் எழுதத் தொடங்கினர். ஒரு சொல் எழுதுவார். பால் உலர்ந்ததும் சொல் மறைந்துவிடும். புத்தகத்தை இன்று வீட்டுக்குக் கொடுத்து அனுப்புவார். நதேழ்தாவோ சகோதரிகளோ, பக்கத்தை விளக்கருகே காட்டிச் சூடுபடுத்துவார்கள். சொற்கள் மெதுவாக, ஒவ்வொன்றுகப் புலப்படத் தொடங்கும்— புகைப்பட ஃபில்மின் நெகட்டிவ் போல. அப்போது கடிதத்தைத் தாராளமாகப் படிக்கலாம். விளாதீமிர் இல்யீச் எழுதியது துண்டுப் பிரசுரம்.

டிசெம்பர் 8, 9ம் தேதி இரவில் ''போராட்டச் சங்கத்தைச்'' சேர்ந்த நூற்று அறுபது பெயர் விளாதீமிர் இல்யீச்சுடன் கைது செய்யப்பட்டார்கள். ஆயினும் ''சங்கம்'' சிதறிவிடவில்லை. வெளியே ''சங்கத்தினுல்'' தொடங்கப்பட்ட வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. விளாதீமிர் இல்யீச் வேலை நிறுத்தக் காரர்களுக்காகத் துண்டுப் பிரசுரங்கள் அனுப்பினர்.

கதவின் மறு புறம் சாவி கிலுங்கிற்று, பூட்டு கிளிக் கிட்டது. கண்காணிப்பாளன் உள்ளே வந்தான். விளாதீமிர் இல்யீச் ரொட்டி மைக்கூட்டைப் பாலுடன் லபக்கென்று வாயில் போட்டு விழுங்கிவிட்டார்.

கண்காணிப்பாளன் அருகே நெருங்கினன். சுற்று முற்றும் கண்ணோட்டினன். சந்தேகத்துக்கு இடமான எதையும் காணுமல் அறையிலிருந்து வெளியேறினன்.

விளாதீமிர் இல்யீச் இன்னெரு மைக்கூடு செய்து எழுத்து வேலையைத் தொடர்ந்தார்.

ஒரு மணி நேரம் சென்றதும் சாவி மறுபடி கிலுங்கியது. விளாதீமிர் இல்யீச் மணப்பெண்ணைக் கண்டு பேச அழைத்துச் செல்லப்பட்டார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு இரட்டை அழிக் கம்பிகளின் மறுபுறம் காத்திருந்தாள். கை குலுக்குவது கூடாது. தலையை அசைக்க மட்டுமே செய்யலாம். புன்னகைக்கலாம். விளாதீமிர் இல்யீச் சைக் கம்பிக் கிராதிகளின் மறுபுறம் காண்பது வேதனை

யாய் இருந்த போதிலும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு புன்னகை செய்தாள். அவர் பலே பேர்வழி! சிறிதும் மனம் சோராமல் இருக்கிறாரே.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு தாயார் சார்பிலும் சகோதரிகள் சார்பிலும் முகமன் தெரிவித்தாள். அவர்கள் சௌக்கியம். உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், நேசிக்கிறார்கள் என்று கூறினாள்.

அப்புறம் விஷயத்துக்கு வந்தார்கள். ஆனால் இரட்டைக் கிராதி வரிசைகளுக்கு நடுவே அரசியல் போலீஸ் காரன் நடமாடிக் கொண்டு, ஒவ்வொரு சொல்லையும் உற்றுக் கேட்டுக் கொண்டிருக்கையில் விஷயத்தை எப்படி வாய் விட்டுச் சொல்லுவது?

''நூலகப் புத்தகங்களை இன்று சகோதரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அதோடு மரீயாவின் புத்தகத்தையும் தான்'' என்று கூறி நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னுவைக் கூர்ந்து, மிகக் கூர்ந்து நோக்கினார் விளாதீமிர் இல்யீச்.

''இவர் மரீயாவின் புத்தகம் என்று அழுத்திச் சொன்னாரே. என்ன கூற விரும்பினார்? ஓ! அப்படியா, புரிகிறது! கடிதத்தையோ துண்டுப் பிரசுரத்தையோ மரீயாவின் புத்தகத்தில் தேடிப் பார்க்க வேண்டுமாக்கும்!'' என்று மனத்துக்குள் குறித்துக் கொண்டாள் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு.

விளாதீமிர் இல்யீச் மேலும் சங்கேதப் புதிர்கள் போட்டார்.

''என் வார்டு நம்பர் தெரியுமா?''

''தெரியாமல் என்ன? நிச்சயமாய்த் தெரியும். நூற்றுத் தொண்ணூற்று மூன்று!''

''எதற்காகக் கேட்டார்? வீணைக் கேட்டிருக்க மாட்டாரே! அட, அப்படியா விஷயம்! துண்டுப் பிரசுரத்தை 193வது பக்கத்தில் தேட வேண்டும் என்கிறார்'' எனப் புரிந்து கொண்டாள் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு.

அரசியல் போலீஸ்காரனை இருவரும் வெகு சாமர்த்தியமாக ஏய்த்தார்கள்.

போலீஸ்காரன் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தான்.

''சந்திப்பு நேரம் முடிந்துவிட்டது.''

ஒரு மணி நேரம் எப்படிப் பறந்துவிட்டது! பிரிய மனம் இல்லை. துயரம் கவ்வுகிறது.

மறு சந்திப்புவரை, விளாதீமிர்! நலமே இரு. ஏங் காதே.''

விளாதீமிர் இல்யீச் அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நடந்தவாறே திரும்பிப் பார்த்தார். அவர் கண் ணுக்கு மறையும் வரை அவள் அப்படியே நின்றுகொண் டிருந்தாள்.

பூட்டுத் துளையில் சாவி திருப்பப்பட்டது. அவர் மறு படி வார்டுக்குள் புகுந்தார். சந்திப்பின் நினைவு அவர் உள்ளத்தில் நிறைந்திருந்தது. அவர் மனக்கண்ணால் காண லானார்: இதோ நதேழ்தா சிறையிலிருந்து வெளியே வரு கிறாள். இதோ அவள் கோடைப் பூங்காவுக்குப் போவாள் ஒருவேளை.

விளாதீமிர் இல்யீச் அரையிருட்டில் நெடுநேரம் குறு நடை உலாவியவாறு அவளைப் பற்றிக் கனிவுடன் எண்ண மிட்டார்.

பச்சை விளக்கு

ஷூஷென்ஸ்கொயே என்னும் தொலைதூர சைபீரியக் கிராமத்தில் விளாதீமிர் இல்யீச் முழுதாக ஓர் ஆண்டு கழித்து விட்டார். அதற்கு முன் சிறைச்சாலையில் பதினொரு மாதங்கள் இருந்தார். இன்னும் இரண்டு ஆண்டு சைபீரிய வாசம் பாக்கி இருந்தது.

1898ம் ஆண்டு மே மாதம் 7ந் தேதி விளாதீமிர் இல் யீச் தமது வழக்கப்படி புத்தகம் எழுத உட்காரவில்லை. அப்போது அவர் எழுதிக் கொண்டிருந்தது ருஷ்யாவில் **முதலாளித்துவத்தின் வளர்ச்சி** என்னும் நூல். ருஷ்யக் கிரா மங்களிலும் நகரங்களிலும் முதலாளிகளும் குலாக்குகள் எனப்படும் பணக்கார விவசாயிகளும் மேலும் மேலும் அதிகச் சக்தி பெற்று வருவதையும் பொது மக்களின் வாழ்க்கை மூலதனத்தின் ஆட்சியில் மேலும் மேலும் அதிக வறுமையும் துயரமும் நிறைந்தது ஆகி வருவதையும் இந்த நூல் விவரித்தது.

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு குடியானவன் ஜன்னல் கதவைத் தட்டினான். ஒடிசலான மேனியும் துடி

யான சுபாவமும் கொண்ட இந்தக் குடியானவன் பெயர் ஸஸிப்பாத்திச். மும்மடிப்பு மென்மயிர்த்தோல் தொப்பியும் வீட்டில் தைத்த மெல்லிய கோட்டும் அணிந்து, தோளில் துப்பாக்கி சார்த்தியிருந்தான் அவன்.

''கேளும், விளாதீமிர் இல்யீச். வாத்து சுடப் போவோம் வாரும்.''

விளாதீமிர் இல்யீச் அன்று நிம்மதி அற்று இருந்தார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு பீட்டர்ஸ்பர்கிலிருந்து இதற்குள் வந்திருக்க வேண்டும், ஆனால் அவள் வரக் காணோம். மற்ற தோழர்களுக்குப்பிறகு நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னுவும் சிறையில் இடப்பட்டாள். சிறைவாசத்துக்குப் பிறகு சைபீரியச் சிறைக் குடியிருப்பில் வசிக்க வேண்டும் என்று அவளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. தன்னையும் ஷூஷென்ஸ்கொயே கிராமத்தில் விளாதீமிர் இல்யீச்சுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கும்படி கோரி அனுமதி பெற்றுவிட்டாள். வந்து சேர வேண்டியதுதான் பாக்கி, ஏனோ வர மிகவும் தாமதம் ஆயிற்று.

நிம்மதியைக் குலைக்கும் எண்ணங்களிலிருந்து விடுபடுவதற்காக விளாதீமிர் இல்யீச் வேட்டைத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

''நீள்ஜோடுகள் சரியாகத்தான் மாட்டிக் கொண்டிருக்கிறீர்'' என்றான் ஸஸிப்பாத்திச்.

விளாதீமிர் இல்யீச் அணிந்திருந்த நீள்ஜோடுகள் உண்மையிலேயே சதுப்பு நிலத்தில் வாத்து வேட்டை ஆடுவதற்கு ஏற்றவை. முழங்கால்களுக்கு மேலே வரை மூடும் சேற்றுக் காப்பு பூட்சுகள் அவை. இருவரும் ஒரு பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருந்த பெரோவோ ஏரிக்குப் புறப்பட்டார்கள். அங்கே வாத்துக்கள் ஏராளம் ஆகையால் கரைகளில் இறகுகள் சிதறிக் கிடக்கும். அதனால்தான் இறகு ஏரி என்று பொருள் படும் பெரோவோ ஏரி என்று அதற்குப் பெயர் வந்தது.

அன்று பகல் வேளை அற்புதமாய் இருந்தது. வெயில் இதமாக அடித்தது. குதூகல வெயிலில் ஊடும் புறமும் ஒளிர்ந்தன ஓவ்வோர் இலையும் புல்லும். புல்வெளிகள் கழுவி விடப்பட்டவைபோலப் பச்சென்று தளதளத்தன. தொலைவில், தொடுவானம் நெடுகிலும் நீல விண்ணில்

உயர்ந்து நின்றது பிரமாண்டமான, கண்கூசும் ஒளி நிறைந்த ஸயான் மலைத் தொடர். அதன் சிகரங்கள் வெண்பனி மகுடம் அணிந்து திகழ்ந்தன.

''நில்லும். இதோ ஏரி. பார்த்துச் சுடும். குறி தவறி விடாதேயும், விளாதீமிர் இல்யீச். முதல் தடவை குறி பிசகக் கூடாது. அது அபசகுனம் என்பார்கள். முதல் சூட்டிலேயே பிசகிவிடாதேயும், விளாதீமிர் இல்யீச்'' என்று வேட்டை இடம் நெருங்கியதும் கவலையுடன் சொன்னான் ஸலிப்பாத்திச்.

விளாதீமிர் இல்யீச் துப்பாக்கியும் கையுமாக நின்றார். துப்பாக்கியுடன் நின்றுகொண்டு காட்டு வாழ் உயிர்களின் அரவங்களை உற்றுக் கேட்பது பெரு மகிழ்ச்சி தருவது. பட்சிகளின் சீழ்க்கையும் பிர்க்காக்களும் தேனாய் இனித்தன. மரங்கொத்தியின் பரபரப்பு களிப்பு ஊட்டியது.

பெரோவோ ஏரியின் அடர்ந்த நாணற்புதர்களில் ஏதோ அசைந்தது, இரைச்சல் செய்தது. பெரிய கருநீலக் காட்டு வாத்து மேலே கிளம்பி, விளாதீமிர் இல்யீச்சுக்கு ஒரு பத்து தாவடி தூரத்தில் சிரமத்துடன் சிறகடித்துப் பறந்தது. அவர் டுமீல் என்று சுட்டார். குறி பிசகி விட்டது.

பார்த்துக் கொண்டே இருந்தவர், குதிரையை இழுத்து விடுவதில் காலம் தாழ்த்துவிட்டார்.

''அட என்ன ஐயா, விளாதீமிர் இல்யீச், தொடங்கும் போதே சுழி போட்டுவிட்டீரே!'' என்று கோபித்துக் கொண்டான் ஸலிப்பாத்திச்.

இப்படி அபசகுனம் நேர்ந்ததே தவிர, அப்புறம் வேட்டை அமோகமாக நடந்தது. வேண்டிய அளவு வாத்துக்களைச் சுட்டு வீழ்த்தினார்கள் இருவரும். அப்புறம் நெகிடி மூட்டினார்கள். கரி ஏறிய கெட்டிலில் நீர் கொதிக்க வைத்துத் தேநீர் தயாரித்தார்கள்.

ஸலிப்பாத்திச் இன்பமான மனநிலையில் இருந்தான். இரவையும் ஏரிக்கரையிலேயே கழிக்கலாம் என்று அவன் விளாதீமிர் இல்யீச்சை ஆர்வத்துடன் வற்புறுத்தினான். அவன் எவ்வளவோ தீவிரமாக வற்புறுத்தியும் விளாதீமிர்

இல்யீச் இணங்கவில்லை. ஏதோ முன்னுணர்வு அவரை வீட்டுக்கு அழைத்தது.

இருட்டாயிற்று. மந்தை ஊர் திரும்பிற்று. வீடுகளில் பால் கறக்கத் தொடங்கியிருந்தார்கள். பாத்திரங்களில் பால் சுர்-சுர்-ரென்று தாரைகளாகப் பீச்சும் ஒலி கேட்டது.

''விளாதீமிர் இல்யீச், உம் வீட்டில் விளக்கு எரிகிறது'' என்ரூன் ஸஸிப்பாத்திச்.

விளாதீமிர் இல்யீச்சும் இதைக் கண்டார். தெருக் கோடியிலிருந்த அவர் வீட்டின் இரண்டு ஜன்னல்களில் வெளிச்சம் தெரிந்தது. பச்சையாக. விளாதீமிர் இல்யீச் சின் உள்ளத்தில் உற்சாகமும் உவகையும் அலை மோதின.

தலைவாயிலில், அழியைப் பற்றியவாறு மெல்லிய, லேசான மேனியில் கரும் பழுப்பு உடை இலக நின்று கொண்டிருந்தாள் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ. விளாதீமிர் இல்யீச் வாயிலுக்கு ஓடினார்.

''வணக்கம், நதேழ்தா!''

''விளாதீமிர்!'' என்று ஆர்வத்துடன் கூவினாள் அவள்.

''வாருங்கள், உள்ளே வாருங்கள் பார்ப்போம், இங்கே நீங்கள் எப்படி ஆகி இருக்கிறீர்கள் என்று! மணப் பெண் வந்திருக்கிறாள், ஊர்சுற்றி மாப்பிள்ளையோ, வெட்டைக்குக் கிளம்பிவிட்டார்'' என்று களிப்புடன் அறையிலிருந்து குரல் கொடுத்தார் நதேழ்தாவின் தாய் யெலிஸவேத்தா வஸீலியெவ்ஞ.

அறையில் பச்சை மூடி போட்ட விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

''நீ வேலை செய்வதற்காக. பச்சை ஒளி கண்ணுக்குக் குளுமை'' என்ரூள் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ.

அவள் மாஸ்கோவிலிருந்து இந்த விளக்கைப் பத்து நாட்கள் ரயிலிலும் அப்புறம் நீராவிக் கப்பலிலும் பின்பு உலுக்கிப்போடும் குதிரை வண்டியிலுமாகக் கொண்டு வந்திருந்தாள். வழி நெடுக அதைக் கையில் இறுகப் பிடித்திருந்தாள். ஷாஷென்ஸ்கொயே கொண்டு சேர்க்க மாட்டோமோ என்று பயந்தாள். எப்படியோ, கொண்டு சேர்த்தே விட்டாள்.

என் குறையைத் தீரும், விளாதீமிர் இல்யீச்

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு ஷூஷென்ஸ்கொயே வந்து சேர்ந்தார். அவர்கள் குடும்பமாக வாழ்ந்தார்கள். ஷூஷா ஆற்றின் கரையோரமாக இருந்த புது வீட்டுக்குக் குடி பெயர்ந்தார்கள்.

புது வீட்டில் விளாதீமிர் இல்யீச் வேலை செய்வதற்கு ஒரு மூலையில் வசதிகள் செய்யப்பட்டன. புத்தக அலமாரி வைக்கப்பட்டது. அருகில் மேஜைப்பெட்டி. மேஜைப் பெட்டி உயரமானது, சாய்வான மூடி கொண்டது. மூடியின் ஓரத்தில் அழி பாய்ச்சப்பட்டிருந்தது. பச்சை மூடி விளக்கு மேஜைப் பெட்டிமேல் வைக்கப்பட்டது. பனிக்கால இரவுகளில் ஷூஷென்ஸ்கொயேயில் எல்லாரும் சீக்கிர மாக விளக்குகளை அணைத்துவிடுவார்கள். விளாதீமிர் இல் யீச்சின் பச்சை விளக்கோ எரிந்து கொண்டே இருக்கும்.

நின்றவண்ணம் எழுதுவது அவருக்குப் பிடிக்கும். **ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி** என்னும் நூல் அனேகமாக முழுவதையும் அவர் மேஜைப்பெட்டி அருகே நின்ற நிலையிலேயே எழுதினர். விளாதீமிர் இல்யீச் நிறைய வேலை செய்தார். புத்தகமும் கட்டுரைகளும் எழு தினர், ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு விளாதீமிர் இல்யீச்சுக்கு உற்ற துணைவியாகத் திகழ்ந்தார். அவருக்கே சொந்தமான வேலை யும் இருந்தது. தொழிலாளி மாதரைப் பற்றிய பிரசுரம் ஒன்றை அவர் எழுதிக் கொண்டிருந்தார். தொழிலாளரின் வாழ்க்கையை அவர் நன்றாக அறிந்திருந்தாரே.

சேர்ந்து வேலை செய்வது அவர்களுக்குப் பிடித்திருந் தது, கணவர் மேஜைப்பெட்டி அருகிலும் மனைவி மேஜை அருகிலுமாக. இருவரும் சேர்ந்தே ஓய்வும் கொள்வார் கள். காட்டுக்கோ ஷூஷா ஆற்றுக் கரைக்கோ உலாவப் போவார்கள், அல்லது தொலைவில் ஓடிய யெனிஸேய் ஆற் றுக்குச் செல்வார்கள். இளைஞர்களும் காதலர்களுமான அவர்கள் வாழ்க்கை இன்பமாகக் கழிந்தது.

நடுப் பகல். யெலிஸவேத்தா வஸீலியெவ்னு அறைக் கதவைத் தட்டினர். யாரோ பார்க்க வந்திருப்பதாகச் சொன்னர். விளாதீமிர் இல்யீச்சுக்கோ, தலைக்குமேல்

வேலை. எழுதுவதை இடை நிறுத்த அவருக்கு மனமே வராது, அறவே வராது! ஆயினும் ஏழைக் குடியானவன் யோசனை கேட்க வந்தால் எல்லா வேலையையும் ஒரு பக்கம் வைத்துவிடுவார். யெலிஸவேத்தா வஸீலியெவ்ன ஒரு குடியானவனை அறைக்குள் செல்ல விட்டார். அவன் அப்படி ஒன்றும் கிழவன் அல்ல, என்றாலும் ஒரேயடியாக நிறம் வெளிறி, முகமெல்லாம் சுருக்கங்களாகக் காணப் பட்டான். மூலையில் பூஜைப் படம் இருக்கிறதா என்று தேடிப் பார்த்தான். இல்லை என்று கண்டதும் ஜன்னல் பக்கம் பார்த்துச் சிலுவைக் குறி இட்டுக் கொண்டான்.


''தயவு செய்து உட்காருங்கள்'' என்று உபசரித்தார் விளாதீமிர் இல்யீச்.

குடியானவன் உட்கார்ந்து, சிவப்புக் காலிக்கோத் துணியால் சுற்றிய மண் கலயத்தைக் காலருகே வைத் தான்.


''நான் சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். என் குறையைத் தீரும், விளாதீமிர் இல்யீச். யோசனை சொல்லும்.''

அவன் வெகு தூரத்திலிருந்து வந்தவன். தன் பேர், ஊர், வேலை எல்லாவற்றையும் பற்றி நீண்ட நேரம் விவரித்த பிறகே விஷயத்துக்கு வந்தான். அவனுக்கு நேர்ந் திருந்த சங்கடம் இதுதான்: வறுமை காரணமாக மூத்த மகளைப் பணக்காரக் குலாக் ஒருவன் வீட்டில் வருஷத் துக்கு இருபது ரூபிள் சம்பளத்துக்கு வேலை செய்ய அனுப்பியிருந்தான். பெண் பதினெரு மாதங்கள் வேலை செய்தாள். அதற்குள் அவளுடைய தாய் நோய்ப்பட்டு விட்டாள், கடுமையாக. படுத்த படுக்கையாகக் கிடந்தாள். வீட்டிலோ குஞ்சும் குளுவானுமாக நிறையக் குழந்தை கள். ஆகவே மூத்த மகளை வீட்டுக்குத் திரும்பக் கூட்டி வர வேண்டியதாயிற்று. எஜமானன் அவள் செய்த வேலைக்குச் சம்பளம் தர மாட்டேன் என்றுவிட்டான். ஒப்பந்தம் மீறப்பட்டுவிட்டது, வருஷம் முடிவதற்கு ஒரு மாதம் முன்பே வேலையை விட்டுவிட்டாள் என்கிறான்.

''என் பெண் கிட்டத்தட்ட ஒரு ஆண்டு வேலை செய் தாளே, இலவசமாகத்தானே? இதை இப்படியே விட்டுவிடு வதா?'' என்று ஆத்திரப்பட்டான் குடியானவன்.



முதல் துண்டுப் பிரசுரம். ஓவியர் ஃப. கலுப்கோவ்



நதேழ்தா
கன்ஸ்தன்தினவ்ன
குருப்ஸ்கயா.
1895





ஷூஷென்ஸ்கொயே
கிராமம்.
ஓவியர்
யூ. அவ்தியேயெவ்

ஷூஷென்ஸ்கொயே
யில் வி. இ. லெனின்
வசித்த அறை.
ஓவியர்
யூ. அவ்தியேயெவ்


திருமணத்திற்குப்
பிறகு ஷூஷென்ஸ்
கொயேயில்
வி. இ. லெனின்
குடும்பத்துடன்
குடிபுகுந்த வீடு








வி. இ. லெனின். பாரிஸ், 1910



வி. இ. லெனின் பெர்லின் நூலகதில்.
ஓவியர் வி. பெரெல்மான்



1905ம் ஆண்டு வீதித் தடையரண்கள்.
ஓவியர் இ. விளாதீமிரொவ்



РОССИЙСКАЯ СОЦИАЛ-ДЕМОКРАТИЧЕСКАЯ РАБОЧАЯ ПАРТИЯ

ИСКРА


"Из искры возгорится пламя"
(Ответъ декабристовъ Пушкину)

№ 1. ДЕКАБРЬ 1900 ГОДА № 1.

ЗЕМСКИЙ ЛИТЕРАТУРНЫЙ ЛИСТОКЪ

வி. இ. லெனின் எழுதிய ''நமது இயக்கத்தின் உடனடிப் பணிகள்'' என்னும் தலையங்கமுள்ள ''இஸ்க்ரா'' செய்தித் தாளின் முதல் இதழ். 1900

லீப்ஸிக் நகரில் உள்ள சிறு வீடு. ''இஸ்க்ரா'' செய்தித்தாளின் முதல் இதழ் வி. இ. லெனினது மேற்பார்வையில் இங்குதான் அச்சிடப்பட்டது



''இல்லை, இப்படியே விடக் கூடாது!'' என்று தீர் மானமாகச் சொன்னார் விளாதீமிர் இல்யீச். விரைவாக, கோபத்துடன் அறையில் நடை போட்டார்.

''கேளுங்கள், வட்டார நிர்வாகக் காரியாலயத்துக்கு எழுதுவோம். சட்டத்தை அமுல் நடத்தும்படி கோரு வோம். வழக்குப் போடுவோம் என்று குலாக்கைப் பயமுறுத்துவோம்'' என்றார்.

மேஜைப் பெட்டியின் அருகே நின்று ஒரு நிமிடம் சிந்தித்தார். அரை மணி நேரத்தில் மனு எழுதி முடிந்து விட்டது. மனு நன்றாக அமைந்துவிட்டது. அதை எங்கே கொண்டு கொடுக்க வேண்டும், என்ன சொல்ல வேண்டும், யாரிடம் சொல்ல வேண்டும் என்று குடியானவனுக்கு விவரமாக விளக்கினார் விளாதீமிர் இல்யீச்.

''நியாயம் உங்கள் பக்கம் இருக்கிறது. விட்டு விடா தீர்கள். முதல் விண்ணப்பம் ஏற்கப்படவில்லை என்றால், இன்னொரு தரம் வாருங்கள். மேலே எழுதுவோம். சட்டத்தைச் செயல்படுத்தச் செய்வோம். நியாயம் உங் கள் தரப்பில் இருக்கிறது'' என்று விளக்கமாக எடுத்துச் சொன்னார் விளாதீமிர் இல்யீச்.

குடியானவன் தொப்பியைக் கைகளில் வைத்துக் கசக்கினான், நன்றி தெரிவித்தான். தரையிலிருந்து சிவப்புத் துணி சுற்றிய கலயத்தை எடுத்து நதேழ்தா கன்ஸ்தன்தீ னவ்னாவிடம் நீட்டினான்.

''அம்மா, என்னால் ஆனது ஏதோ கொஞ்சம் போல வெண்ணெய். எடுத்துக் கொள்'' என்றான்.

''என்ன நீங்கள்! என்ன நீங்கள்! இப்படிச் செய்ய லாமா? இது என்ன நினைப்பு உங்களுக்கு?'' என்றார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

''வேண்டாம் ஐயா, வெண்ணெய் வேண்டாம்'' என்றார் விளாதீமிர் இல்யீச்.

நன்றி பாராட்டிக் கொடுத்த பொருளை இந்த விசித் திரப் பிரகிருதிகள் ஏன்தான் வேண்டாம் என்கிறார்கள் என்பது குடியானவனுக்குப் பிடிபடவே இல்லை. விளாதீ மிர் இல்யீச் மனு எழுதத்தானே செய்தார்! கைம்மாறு கிடைக்கும் என்று தானே, இல்லையா?

அவன் போய்விட்டான். விளாதீமிர் இல்யீச்சின் சைபீ

ரிய வாசம் பற்றிய நல்ல நினைவு அவன் மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது. ஷூஷென்ஸ்கொயே வாசத்தின் போது எத்தனையோ குடியானவர்கள் உள்ளங்களில் தம்மைப் பற்றிய நல்ல நினைவு பதியும்படி செய்தார் விளாதீமிர் இல்யீச்.

மே மாதம் என்ன நடந்தது

முந்திய ஆண்டு மே தினத்தை விளாதீமிர் இல்யீச் தனிமையில் கொண்டாடினார். மறு மே தினம் வந்துவிட்டது. இப்போது நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா அவருடன் இருந்தார். மே தினத்தைப் புரட்சியாளருக்கு உரிய முறையில் கொண்டாடுவது என்று ஷூஷென்ஸ்கொயே சிறைக் குடியிருப்பில் இருந்தவர்கள் தீர்மானித்தார்கள்.

காலை ஆகாரத்தை முடித்துக் கொண்டு நல்லுடை அணிந்து கொண்டார்கள். அதற்குள் வந்துவிட்டார் சைபீரியச் சிறை வாசியான போலந்துக்காரர் புரொமீன்ஸ்கீ. அவரும் கச்சிதமாக உடுத்து, டை கட்டிக் கொண்டிருந்தார்.

''மே தின வாழ்த்துக்கள்!''

எல்லோரும் சிறைக் குடியிருப்பில் இருந்த ஃபின்லாந்துக்காரர் அஸ்கார் எங்க்பெர்கின் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

அந்த ஆண்டு வசந்த காலம் தாழ்த்து வந்தது. ஷூஷா ஆற்றில் இன்னமும் பனிப் பாளங்கள் மிதந்து கொண்டிருந்தன. அவை ஒன்றோடொன்று மோதியவாறு யெனிஸேய் ஆற்றில் விழ விரைந்தன. பனிப் பாளங்கள் உராயும் ஓசை ஆற்றுக்கு மேலே கேட்டது. பகல் குளிராய் இருந்தாலும் பளிச்சென்று விழாக் கோலம் பூண்டிருந்தது. எல்லோர் மன நிலையும் விழாக் களிப்பு நிறைந்திருந்தது.

எங்க்பெர்க் வீட்டுக்கு வந்து, பெஞ்சியில் உட்கார்ந்து பாடத் தொடங்கினர்கள்:

''வந்தது களி மிகுந்த மே தினம்,
அந்தப் புறம் போ, சிந்தை நிழலே!
சிந்து முழங்கட்டும் துணிவு பொங்க!
இந்த நாள் வேலை நிறுத்தம் செய்வோமே!''

ஒரு பாட்டு பாடி முடித்ததும் இன்னொரு பாட்டு தொடங்கினர்கள், அன்று முழுவதுமே பாட்டுக்கள் மயமாய் இருந்தது.

எங்கள் வீட்டில் சற்று நேரம் விழா கொண்டாடி விட்டு புல் திடலுக்குப் போனார்கள். அங்கே, கிராமத்திலிருந்து தூரத்தில், நீல வான விதானத்தின் கீழ், ''வர்ஷவ்யான்கா'' என்னும் புரட்சிப் பாட்டு ஆர்த்தது:

''கடும் பகைப் புயல்கள் அடித்திடும் நம்மேல்,
காரிருட் சக்திகள் கொடுமையாய் நசுக்கும்.
முடிவு செய் போர் பகைவருடன் புரிவோம்,
முன்னே வரும் விதி என்னவோ அறியோம்.''

உணர்ச்சித் தீ மூட்டும் புரட்சிச் சொற்கள் அந்த மே முதல் தேதியில் ஷுஷென்ஸ்கொயே புல் வெளிக்கு மேலே முழங்கின. அது இன்ப நாள்; விளாதீமிர் இல்யீச் சுக்கும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுக்கும் இரவு வெகு நேரம் வரை உறக்கமே வரவில்லை. பேசிக் கொண்டே இருந்தார்கள், கனவுகள் கண்டார்கள். தொழிலாளர்களும் எல்லா மக்களும் சுதந்திர ருஷ்யாவில் மே தினத்தைச் செங்கொடிகளுடன் விருப்பம் போலக் கொண்டாடும் காலமும் வருமா?

ஆனால் மறு நாள்... வழியில் புழுதி படலங்களாக எழுந்தது. குதிரைக் குளம்புகள் ஒலித்தன. அரசியல் போலீஸ்காரர்கள் ஷுஷென்ஸ்கொயே கிராமத்துக்குக் குதிரை வண்டியில் வந்தார்கள். வண்டி விளாதீமிர் இல்யீச் வீட்டோரம் சென்று நின்றது. உடை வாட்கள் அணிந்த இரு போலீஸ்காரர்கள் வண்டியிலிருந்து குதித்தார்கள். பின் இருக்கையிலிருந்து இறங்கினன் கட்டுக் குட்டான போலீஸ் அதிகாரி.

''சோதனை!'' என்று வெடுக்கெனக் கூறினன் அதிகாரி. நேரே விளாதீமிர் இல்யீச்சின் அறைக்குள் புகுந்து புத்தக அலமாரி அருகே சென்றார்கள் போலீஸ்காரர்கள்.

அந்தப் புத்தக அலமாரியில், கீழ்த் தட்டில் இருந்தன தடை செய்யப்பட்ட நூல்கள், சட்ட விரோதமான

கடிதங்கள், குறியீட்டுக் கடிதங்கள் வரைவதற்கான இரசாயனச் சாதனங்கள் முதலியன. அவை போலீஸ்காரர்கள் கைகளில் அகப்பட்டுவிட்டால் சைபீரியச் சிறை வாசம் நீளும். ஒருவேளை பற்பல ஆண்டுகள்.

''தாராளமாகச் சோதனை போடுங்கள்!''என்று நாற்காலியைப் புத்தக அலமாரியின் பக்கத்தில் வைத்தார் விளாதீமிர் இல்யீச். ''எங்கிருந்து தொடங்கப் போகிறீர்கள்?''

இவ்வாறு கேட்கையில் அவர் அலமாரியின்மேல் தட்டை நிமிர்ந்து பார்த்தார்.குட்டை அதிகாரி,போலீஸ்காரர்கள் முழங்கைகளுக்கு அடியே பிடித்துத் தாங்க, மூச்சு திணற நாற்காலி மேல் ஏறினான். மேல் தட்டிலிருந்து சோதனையைத் தொடங்கினான். புத்தகங்களோ, ஏராளமாய் இருந்தன.

அதிகாரி புத்தகங்களைப் பக்கம் பக்கமாகப் புரட்டிப் பார்த்தான்.அரை மணி,ஒரு மணி. களைத்துப் போனான்.சோதனையைத் தொடரும்படி போலீஸ்காரர்களுக்குக் கட்டளை இட்டான். தான் உட்கார்ந்து கொண்டான். கண்களில் ஒரே அலுப்பு. நூற்றுக் கணக்கான பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் தெரியும் அதில் உள்ள சள்ளை. போலீஸ் அதிகாரிக்கோ, இத்தனை நிறையப் புத்தகங்களைப் பார்ப்பதே கரிப்பாய் இருந்தது. நேரம் மெதுவாக ஊர்ந்தது.

ஆயிற்று, போலீஸ்காரர்கள் அடித் தட்டு வரை வந்து விட்டார்கள். சிறைக் குடியிருப்பில் இருந்த உல்யானவ் தம்பதியரின் விதி மயிரிழையில் ஊசலாடியது.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா முன்வந்து புன்னகையுடன் கூறினார்:

''இந்தத் தட்டில் என்னுடைய பள்ளிப் புத்தகங்கள் இருக்கின்றன. நான் பள்ளி ஆசிரியை ஆயிற்றே.''

''அவற்றை விடுங்கள்!'' என்று கையை ஆட்டினான் அதிகாரி.

அவனுக்குப் பசி எடுத்துவிட்டது. ஒரு கிளாஸ் வோத்கா பருக ஆசையாய் இருந்தது. களைத்துப் போனான் அவன்.

ஆகவே சோதனை முடிந்துவிட்டது. கீழ்த் தட்டுக்கு அருகிலேயே முடிந்துவிட்டது. அதிலோ, இருந்தன சட்ட

விரோதமான புத்தகங்களும் இரசாயனச் சாதனங்களும்....

போலீஸ்காரர்கள் போய்விட்டார்கள்.

யெலிஸவேத்தா வஸீலியெவ்னா உள்ளே வந்தார். சோதனை நடந்து கொண்டிருந்தபோது அவர் ஒன்றன்பின் ஒன்றுகச் சிகரெட்டுகளைப் புகைத்தவாறு பக்கத்து அறையில் உட்கார்ந்திருந்தார்.

''புயல் ஓய்ந்ததா?'' என்று தணிந்த குரலில் கேட்டார் யெலிஸவேத்தா வஸீலியெவ்னா.

''ஓய்ந்துவிட்டது!'' என்று வாய் விட்டுச் சிரித்தார் விளாதீமிர் இல்யீச்.

வனேயெவின் நோய்ப் படுக்கை அருகே

வாரம் இரு முறை தபால்காரன் தபால் எடுத்து வருவான்.

உறவினர்களும் தோழர்களும் கடிதங்கள் எழுதுவார்கள். ஜில்லாவில் ஐம்பது, நூறு கிலோமீட்டர் தொலைவில் இருந்தார்கள் சைபீரியச் சிறைவாச தண்டனை பெற்ற ''போராட்டச் சங்க'' உறுப்பினர். இன்னும் தூரத்தில், எட்டாத் தொலைவில், மிகவும் அழிகேடான உறை பனிப் பகுதிகளிலுங்கூட இருந்தார்கள் அவர்கள்.

ஒரு தடவை விளாதீமிர் இல்யீச்சுக்கு வீட்டிலிருந்து ஒரு பாக்கெட் வந்தது—தமக்கை ஆன்னா இல்யீனிச்னா விடமிருந்து. அதன்மேல் இருந்த சிறு சங்கேதக் குறி அது இரகசிய விவரங்கள் அடங்கியது என்பதைக் காட்டியது. பாக்கெட்டில் முக்கியமான விஷயம் அடங்கியிருக்க வேண்டும். உண்மையும் அதுவே. இரகசிய எழுத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டதும் அது ஒரு கட்டுரை என்பது தெரிய வந்தது.

விளாதீமிர் இல்யீச் அதைப் படிக்கத் தொடங்கினார். அவர் புருவங்கள் நெரிந்தன, முகம் சுளித்தது. ஆன்னா இல்யீனிச்னா அனுப்பியிருந்த கட்டுரை அவருக்குப் பிடிக்கவில்லை. ''கிரேடோ'' என்ற அதன் தலைப்பும் ருஷ்ய மொழியில் இல்லை. இந்தச் சொல்லின் பொருள் ''என் நம்பிக்கை'', ''என் கருத்து'' என்பது ஆகும்.

சில மனிதர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து மார்க்ஸீய வாதத்தை எதிர்க்கத் தொடங்கி இருக்கிறார்கள் என்று தமக்கை எழுதியிருந்தார். இந்தக் குழு பெரியது அல்ல, ஆனால் துடியானது. இது பரப்பிய கொள்கைதான் என்ன? இதுதான்: தொழிலாளர்களுக்கு அரசியலில் அக்கறை இல்லை. தொழிலாளர்களுக்குப் புரட்சி வேண்டியதில்லை. தொழிலாளர்கள் விரும்புவது எல்லாம் சம்பளம் உயர வேண்டும் என்பதே. இதற்கு முதலாளிகளுடனும் தொழில் அதிபர்களுடனும் சமாதானமாக வாழ்வது இன்றியமையாதது.

இம்மாதிரிக் கருத்துக்கள் ''பொருளாதாரவாதம்'' எனப்பட்டன.

''என்ன செய்வது?'' என்று வாய்விட்டுச் சிந்திக்கத் தொடங்கினர் விளாதீமிர் இல்யீச். ''இவர்கள் தொழிலாளர்களைப் புரட்சிக் கடமைகளிலிருந்து பின்னே திருப்புகிறார்களே!''

சில வேளைகளில் தாம் எண்ணுவதை வாய்விட்டுச் சொல்லுவது விளாதீமிர் இல்யீச்சின் வழக்கம். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா இதை அறிந்திருந்தார். அப்போது குறுக்கிடக் கூடாது. இதோ அவர் சிக்கலுக்குத் தீர்வு கண்டு விடுவார்.

உண்மையே. விளாதீமிர் இல்யீச் அறையில் குறுக்கும் நெடுக்கும் உலாவினார், சிந்தனை செய்தார், வழி கண்டு கொண்டார்.

''தோழர்களைக் கூட்டுவோம். 'கிரெடோவைப்' பற்றி விவாதிப்போம். அதற்கு மறுப்பு எழுதித் தொழிற் சாலைகளுக்கும் ஆலைகளுக்கும் இரகசியமாக அனுப்புவோம்.''

விளாதீமிர் இல்யீச்சும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவும் சைபீரியச் சிறைக் குடியிருப்பு நண்பர்கள் எல்லோருக்கும் உடனே கடிதங்கள் எழுதினார்கள். ஏதேனும் காரணம் சொல்லி அதிகாரிகளிடம் அனுமதி பெற்று கூட்டத்துக்கு வரும் படி அவர்களை அழைத்தார்கள். எங்கே கூட்டம் நடத்துவது? எல்லாவற்றிலும் பொருத்தமான இடம் ஷூஷென்ஸ்கொயே தான். ஆனால் விளாதீமிர் இல்யீச் ஷூஷென்ஸ்கொயேயிலிருந்து அறுபது கிலோமீட்டர் தொலைவில் உள்ள யெர்மக்கோவ்ஸ்கயே என்ற கிராமத்

தைத் தெரிந்தெடுத்தார். ''போராட்டச் சங்கத்தில்'' விளாதீமிர் இல்யீச்சின் நண்பரான அனத்தோலீ வனேயெவ் அங்கே வசித்து வந்தார். சிறைச்சாலையில் அவர் கடுமையாக நோய்ப்பட்டார். க்ஷயரோகம் அவரைத் தொற்றிக்கொண்டு வதைத்தது. நோயோ மேலும் மேலும் கடுமை ஆயிற்று. அவர் படுத்த படுக்கை ஆகி விட்டார்.

அதனால்தான் யெர்மக்கோவ்ஸ்கயே கிராமத்தில் கூட்டம் கூட்டுவது என்று விளாதீமிர் இல்யீச் தீர்மானித்தார்.

வனேயெவ் வெள்ளைத் தலையணைமேல் தலை வைத்துப் படுத்திருந்தார். அவருடைய முகமோ தலையணையை விட வெளிறி, சப்பிப்போயிருந்தது. பெரிய விழிகள் ஜ்வர வேகத்தில் சுடர்ந்தன. ஆயினும் அவர் இன்பத்தில் திளைத்தார். பொதுக் காரியத்தில் நாமும் பங்கு கொள்கிறோம் என்று அவருக்கு ஒரே ஆனந்தம்! வாழவும், செயல் புரியவும் மக்களுக்குப் பயன்படவும் அவர் விழைந்தார்.

''கிரெடோ'' மீது விவாதம் நடந்தது. ''மறுப்பு'' தயாராகிக் கையெழுத்து இடப்பட்டது. தொலை தூர சைபீரியாவிலிருந்து எல்லா நகரங்களிலும் உள்ள தொழிலாளர் குழுக்களுக்குப் புரட்சி அறைகூவல் செல்லும்:

''தோழர்களே, 'பொருளாதாரவாதிகளின்' பேச்சைக் கேட்காதீர்கள். நமக்கு உள்ளது ஒரேவழி—புரட்சி!''

விவாதம் நடந்து முடிந்ததும் விளாதீமிர் இல்யீச் போய்விடவில்லை. வனேயெவின் கட்டில் அருகே உட்கார்ந்தார். வனேயெவ் களைத்துப்போனார். அவர் நெற்றியில் குளிர் வியர்வை பெருந் துளிகளாக முத்திட்டிருந்தது. கண்கள் குழிகளுக்குள் ஆழ்ந்திருந்தன.

பாவம் வனேயெவ்! ஜாரின் சிறைச்சாலையும் தளர்பூட்டிய வாழ்வும் அவரை வதைத்து எடுத்துவிட்டன. விளாதீமிர் இல்யீச் அவருடைய மெலிந்த கையை வருடினார். பேசினார், திட்டங்களை விவரித்தார். சைபீரிய வாசம் முடியும் தறுவாயில் இருந்தது. இங்கிருந்து வெளியேறியதும் தாம் செய்யப் போவதென்ன என்று விளாதீமிர் இல்யீச் கூறினார். தொழிலாளரின் மார்க்ஸீயவாதிக் கட்சியை அமைப்போம். செய்தித்தாள் வெளியிடுவோம். நமது செய்தித்தாள், பாட்டாளிச் செய்தித்தாள். ஜாராட்சிக்கு எதிராகப் போராடுவோம்.

வனேயெவ் ஆர்வத்துடன், களி பொங்க, காதுகொடுத்துக் கேட்டார். வெளியே ஆகஸ்டு மாத மாலை இருட்டலாயிற்று. உள்ளத்தில் இனிய வேதனை உண்டாக்கும் அக்கார்டியன் இசை தொலைவிலிருந்து கேட்டது. காய்ச்சலால் வறண்ட உதடுகளுடன் வனேயெவ் கிசுகிசுத்தார்:

''நன்றி, விளாதீமிர். நீ எனக்குப் புத்துயிர் அளித்தாய். நான் நம்புகிறேன்....''

அதுதான் வனேயெவின் கடைசி இன்ப மாலைப் பொழுது.

இதற்கு மூன்று வாரங்கள் கழிவதற்கு முன்பே விளாதீமிர் இல்யீச்சும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவும் வனேயெவை அடக்கம் செய்வதற்காக யெர்மக்கோவ்ஸ்கயே வந்தார்கள்.

''விடை கொடு, அனத்தோலீ. புரட்சிச் செயலுக்கு நாங்கள் விசுவாசம் உள்ளவர்களாக இருப்போம் என்று ஆணையிட்டுக் கூறுகிறோம்'' என்று நண்பனின் இறுதிச் சடங்கின்போது கூறினார் விளாதீமிர் இல்யீச்.

முதல் வெண்பனிச் சிதல்கள் பறந்து, வனேயெவின் முகத்தின் மேல் விழுந்து உருகாமல் நின்றன.

கல்லறையின் மேல் ஒரு இரும்புப் பட்டயம் பதிக்கச் செய்தார் விளாதீமிர் இல்யீச். அதில் பின்வரும் வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது: ''அனத்தோலீ அலெக்ஸாந்திரவிச் வனேயெவ். அரசியல் காரணங்களுக்காகச் சைபீரியாவில் சிறை இருந்தவர். 1899ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8ந் தேதி, 27ம் வயதில் இறந்தார். உன் அஸ்தி சாந்தி பெறுக, தோழனே.''

விடுதலை!

வீட்டில் புரியாத விஷயங்கள் நடந்து கொண்டிருந்தன. பெட்டிகளும் மூட்டை முடிச்சுக்களும் புத்தகக் கட்டுக்களும் எல்லா அறைகளிலும் இறைந்து கிடந்தன. வழக்கமான ஒழுங்கு கலைந்துவிட்டது.

யெலிஸவேத்தா வஸீலியெவ்னாவுக்கு வீட்டுக் காரியங்களில் ஒத்தாசை செய்து வந்த நீல விழி நங்கை பாஷா துயரக் கண்ணீர் பெருக்கினாள். உல்யானவ் தம்பதி

கள் சைபீரியாவிலிருந்து புறப்பட்டார்கள். சிறைக் குடியிருப்பு வாசம் தீர்ந்துவிட்டது, தண்டனைக் காலம் முடிந்துவிட்டது.

ஜனவரி மாதம் இருபத்து ஒன்பதாம் தேதி. ஷுஷென்ஸ்கொயே கிராம வீடுகளில் இன்னும் இருள் சூழ்ந்திருந்தது. அடுப்புப் புகைபோக்கிகளில் இன்னும் புகை கிளம்பவில்லை. கிராம எல்லையில், பொழுது புலர்வதற்கு முந்திய இருள் அடர்ந்த வானம் தரைமீது கவிந்திருந்தது. அந்த வேளையில் இரண்டு ஸ்லெட்ஜ் வண்டிகள் வாயிலுக்கு முன் வந்து நின்றன. முன் தாங்கியால் கண்ணீரைத் துடைத்த வாறு இங்கும் அங்கும் ஓடினாள் பாஷா. விளாதீமிர் இல்யீச் புத்தகங்களையும் சாமான்களையும் வண்டியில் ஏற்றினர். எல்லோரும் ஓடிச் சாடி உதவி புரிந்தார்கள்.

''உட்காருங்கள், உட்காருங்களேன். பயணத்துக்கு முன் சற்று நேரம் உட்கார வேண்டும்'' என்று வற்புறுத்தினர் யெலிஸவேத்தா வஸீலியெவ்னா.

எல்லோரும் மௌனமாகச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்கள்.

''போவோம்! பயணம் புறப்படுவோம்!'' என்று துள்ளி எழுந்தார் விளாதீமிர் இல்யீச்.

கடுங் கூதல் அடித்தது. மாதர்கள் கனத்த மென்மயிர்த்தோல் கோட்டு அணிவதற்கு விளாதீமிர் இல்யீச் உதவினர். வண்டியின் இரு பக்கங்களிலும் உலர்புல்லைத் திணித்து, காற்று வீசாதபடி ஏற்பாடு செய்தார்.

''விளாதீமிர் இல்யீச், நீங்கள் மென்மயிர்த்தோல் கோட்டு போட்டுக் கொள்ள வில்லையே, குளிரில் விரைத்துப் போவீர்களே!'' என்று கவலைப்பட்டார் யெலிஸவேத்தா வஸீலியெவ்னா.

''விடுதலை ஆகிவிட்ட மகிழ்ச்சியே எனக்குக் கதகதப்பு ஊட்டுகிறது. எந்தக் குளிரும் எனக்கு உறைக்காது'' என்றார் விளாதீமிர் இல்யீச்.

''என் குழல் கையுறையையாவது எடுத்துக் கொள்ளுங்கள். கைகளுக்காவது காப்பாய் இருக்கும்!''

விளாதீமிர் இல்யீச் களுக்கென்று நகைத்து, குழல் கையுறையை வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறினர். குதிரைகள் பிய்த்துக் கொண்டு கிளம்பின.

ஷூஷென்ஸ்கொயே கிராமம் பின்னே தங்கிவிட்டது. அதனிடம் நிலையாகப் பிரிவு பெற்றுயிற்று. வானம் தெளிவடையலுற்றது. மேகம் திடீரென ஒளி சுடர்ந்தது. கிழக்கே தரை எல்லையின் அப்பாலிருந்து ரோஜா ஒளிர்வு பெருகியது. பின்பு வெற்றிப் பெருமிதத்துடன் எழுந்தான் பகலவன்.

விளாதீமிர் இல்யீச்சின் உள்ளத்திலும் வெற்றிப் பெருமிதம் நிறைந்திருந்தது. விடுதலையின் முதற் காலை! சிறைக் குடியிருப்பு வாசத்தின் முடிவை எதிர்பார்த்துக் கடைசிச் சில மாதங்களில் விளாதீமிர் இல்யீச் மெலிந்து போயிருந்தார். அதிகாரிகள் எவையேனும் குற்றங்கள் கண்டுபிடித்து, சைபீரியவாசத் தண்டனைக் காலத்தை அதிகப்படுத்திவிடுவார்களோ என்று ஓயாமல் பயந்து கொண்டிருந்தார்.

விளாதீமிர் இல்யீச் இடைவிடாது சிந்தித்தவண்ணமாய் இருந்தார். அவரது சிந்தனை ஒரே விஷயத்தை மையமாகக் கொண்டிருந்தது. கட்சியை, அதைப் புதுப்பிப்பதை. விளாதீமிர் இல்யீச் சைபீரியாவில் இருந்தபோது, 1898ம் ஆண்டில் கட்சியின் முதல் காங்கிரஸ் மீன்ஸ்க் நகரில் நடந்தது. ஆனால் போலீஸார் கட்சி அமைப்பாளர்கள் எல்லோரையும் உடனே கைது செய்துவிட்டார்கள். கட்சியை மீண்டும் அமைக்கவேண்டும். இதற்கு முதற்படியாகத் தேவைப்படுவது செய்தித்தாள். சட்ட விரோதமான, மார்க்ஸீயவாதிச் செய்தித்தாள். ருஷ்யாவின் எல்லா முன்னணிச் சக்திகளையும் ஒன்று திரட்டி இணைக்கும் இந்தச் செய்தித்தாள். இந்த விஷயம் பற்றியே சிந்தனை செய்தார் விளாதீமிர் இல்யீச்.

சாலையோ, ஓடியது. குதிரைகளை மாற்றவும் உணவு கொள்ளவும் நடு நடுவே அஞ்சல் நிலையங்களில் தங்கியவாறு பயணம் செய்தார்கள் அவர்கள். அட, இறைச்சிக் கொழுக்கட்டையை வைத்து மறந்துவிட்டார்கள்! குளிரில் உறைந்து, கொட்டைகள் போலச் சாக்கில் குலுங்கும் இறைச்சிக் கொழுக்கட்டைகள், வெங்காயமும் மிளகும் போட்டவை, மிக ருசியானவை. அதிலும் நீண்ட பயணத்தின்போது, தூய காற்றை நெஞ்சார உட்கொண்டு, கடுங்குளிர் கன்னங்களில் முள்ளாய்த் தைக்கையில் சாப்பிடு

வதற்கு அருமையாய் இருக்குமே! மறந்துவிட்டார்கள், பரிதாபம்!

மினுஸீன்ஸ்க் நகரம் சேர்வதற்கு நீண்ட பயணம் செய்தாக வேண்டும். மினுஸீன்ஸ்கிலிருந்து ஆச்சின்ஸ்க் ரயில் நிலையம் முன்னூறு கிலோமீட்டருக்கும் அதிகம். இரவும் பகலும் தொடர்ந்து பயணம் செய்தார்கள். பகல்கள் ஒளியும் வெயிலும் நீல வானும் முத்துக்கள் போன்ற உறைபனி அணிந்து ஓவிய வனப்புடன் திகழ்ந்த மரக் கிளைகளும் வெண்பனியின் ஒளிர்வுமாகப் பிரகாசித்தன. இரவுகள் நிலவொளியில் முழுக்காடின. விசாலமான வானத்தில் இங்கும் அங்கும் காணப்பட்ட ஒரு சில விண்மீன்களுக்கு இடையே கப்பல் போல மிதந்தது பிரமாண்டமான சந்திரன். இரவில் குதிரைச் சலங்கைகள் இன்னும் கணீரென ஒலித்தன.

ஐந்தாம் நாள் அதிகாலையில் ஆச்சின்ஸ்க் ரயில் நிலையம் போய்ச் சேர்ந்தார்கள்.

நிலைய மணி அடித்து ரயில் நெருங்குவதை அறிவித்தது.

புகைக் கரியும் எண்ணெயும் படிந்த நீராவி எஞ்சின் உரக்க மூச்சுவிட்டவாறு பயணி வண்டியை இழுத்து வந்தது. ஒரு நிமிட நிறுத்தம். புறப்படும் மணி அடித்தது. நீண்ட கால எதிர்பார்ப்பு நிறைவேறியது. முன்னே இருந்தது புது வாழ்வு.

சிறு பொறி பெருந் தீ!

> ''மாண்புசேர் பொறுமை கடைப்பிடிப்பீர் தோலே
> வைகும் சைபீரியக் கனிய மண்ணில்,
> வீண்போகா உங்கள் துயர்நிறை உழைப்பும்
> விண்முட்டும் உயர் பெரும் எண்ணமுமே.''

நேர்ச்சின்ஸ்க் கனியச் சுரங்கங்களுக்கு அனுப்பப்பட்ட டிசெம்பர் கிளர்ச்சி வீரர்களுக்கு இவ்வாறு ஆறுதல் கவிதை எழுதினார் ருஷ்ய மகாகவி பூஷ்கின். டிசெம்பர் கிளர்ச்சிக்* கவிஞர் அதோயெவ்ஸ்கீ பூஷ்கினுக்குப் பின் வரும் சொற்களில் விடை அளித்தார்:

---

* 1825 டிஸெம்பர் மாதம் ருஷ்யாவில் ஜார் மன்னருக்கு எதிராகப் பிரபுவம்சத்தினர் நடத்திய முதலாவது ஆயுத மேந்திய எழுச்சி.—மொ-ர்.

''எங்கள் துயர்நிறை உழைப்பு வீண்போகாது:
எழும் சிறு பொறி மிகப் பெருந்தீயாய்!''

செய்தித் தாளுக்கு இஸ்க்ரா—தீப்பொறி—என்று பெயரிட விளாதீமிர் இல்யீச் முடிவு செய்தார்.

செய்தித்தாளின் முதல் வரியிலிருந்து கடைசி வரி வரை ஷூஷென்ஸ்கொயே கிராமத்திலேயே எண்ணித் திட்டமிட்டிருந்தார் அவர். இப்போது செய்தித்தாளை உருவாக்குவதே தேவையாய் இருந்தது. சைபீரியாவிலிருந்து திரும்பியதும் விளாதீமிர் இல்யீச் ப்ஸ்கோவ் என்னும் சிறு நகரில் தனியாக குடியேறினார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவின் சைபீரியச் சிறைவாசக் காலம் இன்னும் முடியவில்லை. அவர் சிறைப்பட்டதும் சைபீரியா போனதும் பிற்பாடு தானே. எனவே அவர் தம் தண்டனைக் காலத்தை உஃபா என்னும் இடத்தில் கழிக்க வேண்டும் என்று தீர்மானமாயிற்று. விளாதீமிர் இல்யீச்சுக்கு ப்ஸ்கோவில் வசிக்க அனுமதி கிடைத்தது. அங்கே அவர் இஸ்க்ரா வெளியிடுவதற்கான முன்னேற்பாடுகளில் முழு மூச்சாக ஈடுபட்டார். பல்வேறு நகரங்களுக்குச் சென்றார். இஸ்க்ராவில் வேலை செய்வதற்குத் தோழர்களை எங்கும் தேடினார். செய்தித்தாளுக்குக் கட்டுரைகள் எழுதித் தரும் ஆசிரியர்களைத் தயார் செய்ய வேண்டியிருந்தது. செய்தித்தாளை விநியோகம் செய்யும் ஏஜெண்டுகளைத் தேடிப் பிடிக்க வேண்டியிருந்தது. இஸ்க்ரா செய்தித்தாளைச் சாதாரணப் பத்திரிகைக் கடைகளில் விற்பனை செய்வது முடியாதே. அப்படிச் செய்தால் உடனே சிறைத் தண்டனை கிடைக்குமே. எனவே அதை இரகசியமாகப் பரப்ப வேண்டியிருந்தது. செய்தித்தாள் வெளியிடப் பணம் திரட்டுவது அவசியமாய் இருந்தது. விளாதீமிர் இல்யீச் பணமும் திரட்டி விட்டார்.

எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிந்துவிட்டன. நான்கு மாதங்களில் விளாதீமிர் இல்யீச் மலையையே புரட்டி விட்டார் என்று சொல்ல வேண்டும்.

ஆனால் இஸ்க்ராவை எங்கிருந்து வெளியிடுவது? அந்த மாதிரிச் செய்தித்தாளை ருஷ்யாவில் அச்சிட முடியுமா என்ன? ஜாருக்கு எதிராக? நிலப் பிரபுக்களுக்கும்

தொழிலதிபர்களுக்கும் எதிராக? போலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக? முடியாது, ருஷ்யாவில் இம்மாதிரிச் செய்தித் தாளை வெளியிடுவது முடியவே முடியாது! அப்படியானால் எங்கே?

இதைப் பற்றியும் விளாதீமிர் இல்யீச் மண்டையை உடைத்துக் கொள்ள நேர்ந்தது.

அவர் தோழர்களுடன் கலந்து ஆலோசித்தார். எல்லாக் கோணங்களிலிருந்தும் நிலைமையைப் பரிசீலனை செய்து ருஷ்யாவுக்கு வெளியே செய்தித்தாளை அச்சிடுவது என்று முடிவு செய்தார்கள். அங்கேயும் இந்த மாதிரிச் செய்தித்தாளை மிக மிக இரகசியமாகவே வெளியிட முடியும். இருந்தாலும் அங்கே ருஷ்யப் போலீஸ் ஒற்றர்கள் இத்தனை நிறைய இல்லை.

முடிவு ஆகிவிட்டது. விளாதீமிர் இல்யீச் உடல்நலத்துக்கு அயல் நாட்டுப் பயணம் தேவை என்ற சீட்டை மருத்துவரிடமிருந்து முயன்று பெற்று ருஷ்யாவிலிருந்து வெளியேறினர். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னுவின் சைபீரிய வாசம் ஒன்பது மாதங்களில் முடியவிருந்தது. வெளிநாடு செல்லுமுன் விளாதீமிர் இல்யீச் அவரிடம் போய்ப் பிரிவு பெற்றுக் கொண்டார். அப்புறம் ரயில்வண்டி அவரை ருஷ்யாவுக்கு வெளியே தொலைதூர நாடுகளுக்கு இட்டுச் சென்றது. நீண்ட காலத்துக்கா? அப்படித்தான் தோன்றியது.

...குறுகிய வீதிகளும் கூர்முனை முகடுகள் கொண்ட வீடுகளும் சர்ச்சுகளும் உள்ள ஜெர்மன் நகரம் லேப்ஸிக். அதில் பல தொழிற்சாலைகளும் அவற்றைவிட நிறைய அச்சகங்களும் பல்வகைப் புத்தகக் கடைகளும் இருந்தன. லேப்ஸிக் நகரில் ஹெர்மன் ரௌ என்னும் முப்பத்தைந்து வயது மனிதர் வசித்து வந்தார். லேப்ஸிக் நகரின் அருகே ஒரு கிராமத்தில் சிறு அச்சகம் வைத்து நடத்திக் கொண்டிருந்தார் அவர். அவருடைய அச்சகத்தில் ஒரே ஒரு அச்சு இயந்திரந்தான் இருந்தது. ஆனால் பெரியது. இந்தக் கற்கால இயந்திரத்தில் தொழிலாளர் விளையாட்டு சம்பந்தமான செய்தித்தாளும் பல வித விளம்பரங்களும் பிரசுரங்களும் அச்சாகி வந்தன.

ஹெர்மன் ரௌ சமூக-ஜனநாயகவாதி. ருஷ்யாவி

லிருந்து ஒரு மார்க்ஸீயவாதி வந்திருப்பதாக லேப்ஸிக் நகர சமூக-ஜனநாயகவாதிகள் ஹெர்மன் ரௌவிடம் சொன்னார்கள். புரட்சிச் செய்தித்தாள் வெளியிடுவது ருஷ்ய மார்க்ஸீயவாதிகளின் பொறுப்பு. இஸ்க்ராவின் முதல் இதழை ஜெர்மன் நகர் லேப்ஸிகில் வெளியிட அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இவ்வாறு நண்பர்கள் தகவல் கொடுத்தார்கள்.

''ருஷ்யத் தோழர்களுக்கு உதவ வேண்டும்'' என்று ஹெர்மன் ரௌ லேப்ஸிக் சமூக-ஜனநாயகவாதிகளிடம் சொன்னார்.

லேப்ஸிக் நகருக்கு வந்திருந்த ருஷ்ய மார்க்ஸீயவாதி விளாதீமிர் இல்யீச்தாம். அவர் லேப்ஸிக் நகர்ப்புறத்தில் ஓர் அறை வாடகைக்குப் பிடித்துக் கொண்டார். நாள் தோறும் விடியுமுன்பே எழுந்து விடுவார். வெளியே இருட்டு. நிசப்தம். தொழிற்சாலைச் சங்குகள்கூட இன்னும் ஊதத் தொடங்கியிரா. அறையில் குளிர் நடுக்கும். வெளியே டிசெம்பர் மாத ஈரக் கூதல்.

ஸ்பிரிட் அடுப்பில் தேநீர் கொதிக்க வைப்பார் விளாதீமிர் இல்யீச். கை சுடும்படி தகரக் குவளையில் தேநீரை விட்டுக் குடித்து விட்டு வழக்கமாக வீட்டை விட்டுக் கிளம்பி விடுவார். வெகு தூரம் நடக்க வேண்டி இருக்கும், ஹெர்மன் ரௌவின் அச்சகத்துக்கு. அங்கே குதிரை டிராம் போகாது. ஐந்தாறு கிலோமீட்டர்கள் கால்நடையாகவே போக வேண்டும். எதிரே பாதசாரிகளும் சைக்கிள்களில் வேலைக்குச் செல்பவர்களும் வருவார்கள். சுமை வண்டிகள் கடகடக்கும்: குடியானவர்கள் அவற்றில் சரக்கு ஏற்றிக் கொண்டு சந்தைக்குப் போவார்கள். இதோ நகரம் முடிந்து வெண்பனி மூடிய வயல் தொடங்கிவிட்டது. தொலைவில் காடு தெரிந்தது. நகரின் அருகாமையிலுள்ள கிராமங்களில் விளக்குகள் எரிந்தன. ஹெர்மன் ரௌவின் அச்சகத்திலும் வெளிச்சம் தெரிந்தது. மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அச்சகம் ஒரே ஒரு பெரிய அறை மட்டுமே. பாதி அறையை அடைத்துக் கொண்டிருந்தது பூதாகாரமான பழைய அச்சு இயந்திரம். அது தவிர இரண்டு அச்சுக் கோப்பு மேஜைகள் இருந்தன. இரும்புக் கணப்பில் விறகு

எரிந்து சடசடத்தது, தழல் அசைந்தாடியது, சுவற்றின் மேல் நிழல்களும் அசைந்தாடின.

''இன்று முக்கியமான நாள்'' என்று ஹெர்மன் ரௌ ஜெர்மன் மொழியில் விளாதீமிர் இல்யீச்சிடம் சொன்னார்.

விளாதீமிர் இல்யீச் ஆம் என்று தலை அசைத்தார். ஆம், அன்று முக்கியமான நாள்தான். அன்று வரை முன் னேற்பாடுகளே நடந்து வந்தன, அன்றோ....

அச்சுக் கோப்பவர் கோத்த கனமான அச்சுச் சட்டத் தை இயந்திரத்துக்குத் தூக்கி வந்தார். பொருத்தினர். ஹெர்மன் ரௌ இயந்திரத்தை இயக்கக் கைப்பிடியைச் கழற்றினர். இயந்திரம் இரைந்தது. உருளை உருண்டது. பின்பு செய்தித்தாள் பக்கம் இயந்திரத்திலிருந்து வெளி யே ஊர்ந்து வந்தது. ஈரம் உலராத பக்கம்! இஸ்க்ராவின் முதல் இதழ் அச்சாகிவிட்டது.

விளாதீமிர் இல்யீச் பத்திரிகையைக் கையில் எடுத் தார். இந்த நிமிடத்திற்காக அவர் எவ்வளவு நீண்ட காலம், எவ்வளவு ஆர்வத்துடன் தவம் கிடந்தார்!

''நமக்கே உரிய, தொழிலாளர்களுடைய, புரட்சிச் செய்தித்தாள் நம்மிடம் இருக்கிறது! எங்கள் செய்தித் தாளே, பற தாய்நாட்டுக்கு. சிந்தனைகளையும் உணர்வை யும் தட்டி எழுப்பு. புரட்சிக்கு அறைகூவி அழை!''

விளாதீமிர் இல்யீச் பத்திரிகைத் தலைப்பை உரக்கப் படித்தார்: இஸ்க்ரா.

மேற்புறம் வலது மூலையில் கொட்டை எழுத்துக் களில் அச்சிடப்பட்டிருந்தது:

''எழும் சிறு பொறி மிகப் பெருந்தீயாய்!''

லெனின்

பயணி ரயில் வண்டி ஜெர்மனி வழியே கேனிக்ஸ் பெர்க் நகருக்குச் சென்றது. மூன்றும் வகுப்புப் பெட்டியின் ஒரு மூலையில் ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான். அவன் ம்யூனிக் நகரத்தில் ரயில் ஏறியவன், வழிநெடுக உறங்கி வழிந்தான். அவன் கால் அருகே இருந்தது கணிசமாகப் பெரிய பெட்டி.

வண்டி கேனிக்ஸ்பெர்கை அடைந்தது. அது கற்கோட்டையும் சர்ச்சுகளும் சிவப்பு ஓட்டுக் கூரை வீடுகளும் கொண்ட பழங்கால நகரம். அங்கே இரைச்சல் நிறைந்த பால்டிக் கடலும் துறைமுகமும் இருந்தன. துறைமுகத்தில் கப்பல்கள் நின்றன. அவற்றில் ஒன்று ''ஸெயின்ட் மார்கரீத்தா'' என்னும் கப்பல். ம்யூனிக்கிலிருந்து வந்த ஜெர்மானியன் மன நிறைவுடன் சீழ்க்கை அடித்தான். அவன் துறைமுகக் கூட்டத்தில் இடிபட விரும்பாமல் அருகில் இருந்த பீர் கடைக்குப் போனான். கடையில் கூட்டம் நெரிந்தது. சிகரெட்டுப் புகையால் காற்று நீலம் பாரித்துக் கைப்பான நெடி அடித்தது. ம்யூனிக் ஜெர்மானியன் காலி இடத்தில் உட்கார்ந்து பெட்டியை மேஜைக்கு அடியில் நுழைத்து வைத்தான். முட்டைக்கோசும் கறிவடையும் தரும்படி கேட்டு, பீர் பருகியவாறு மெதுவாக உண்ணத் தொடங்கினான். மிக மிக நிதானமாக உண்டான் அவன். அவனுக்கு ஏராளமான ஒழிவு நேரம் இருப்பது போலத் தோன்றியது. அல்லது அவன் யாரையேனும் எதிர்பார்த்தானோ? ஆம், உண்மை அதுதான். ''ஸெயின்ட் மார்கரீத்தா'' என்ற கப்பலின் ஒரு மாலுமிக்காக அவன் காத்திருந்தான். அவனைச் சந்திக்கவே ஜெர்மானியன் ம்யூனிக்கிலிருந்து வந்திருந்தான். ஆயினும் அவனை ஜெர்மானியன் இதற்கு முன் பார்த்ததே இல்லை. ஒரு புதியவன் கடைக்குள் வந்ததும் ஜெர்மானியன் அவனை உறுத்துப் பார்ப்பான், வலது கையால் தலைமயிரை வலது காதுப் பக்கம் கோதி விடுவான். இதை ஒருவருமே கவனிக்கவில்லை. ஒரு மனிதன் தலைமயிரைக் கோதிக் கொள்வதில் அப்படி என்ன விசேஷம் இருக்கிறது? உண்மையிலோ, இதுதான் முன் கூட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அடையாளம்.

கடற்காற்றில் அடிபட்டுப் பழுப்பேறிய மாலுமி கடைசியில் கடைக்குள் வந்தான். வாயிலில் நின்று ஆட்களை நோட்டமிட்டான். தலையைக் கோதிக் கொண்டிருந்த மனிதனைக் கண்டு கொண்டு நேரே அவனிடம் போனான். மேஜையருகே உட்கார்ந்து காலால் பெட்டியைத் தொட்டு உணர்ந்தான்.

''பேய்க் காற்று.''

''சாதகமாக அடித்தால் மோசமில்லை.''

''சரியாய்ச் சொன்னாய் தம்பீ, சாதகமானது.''

இவை அடையாளச் சொற்கள். இவற்றைச் சொல்லி முடித்ததும் இருவரும் ஒருவரை ஒருவர் தோழனாக மதித்தார்கள். இருவருக்கும் பொதுவான காரியம் இருந்தது. அதற்காகவே அவர்கள் பீர் கடையில் சந்தித்தார்கள்.

விரைவில் அவர்கள் பேசி முடித்துவிட்டு எழுந்து கடையிலிருந்து வெளியே போனார்கள். இம்முறை ஜெர்மானியன் அல்ல, மாலுமி பெட்டியை எடுத்துக் கொண்டான். இந்த மாற்றத்தை ஒருவரும் கவனிக்கவில்லை. யாருக்கு என்ன அக்கறை? இரண்டு நண்பர்கள் ஏதோ பேசிக் கொண்டு நடந்தார்கள். பாதைச் சந்திப்பில் அவர்கள் பிரிந்தார்கள். ம்யூனிக் ஜெர்மானியன் ரயில் ஏறி ஊர் திரும்பினான். பெட்டியோ ''ஸெயின்ட் மார்கரீத்தா'' என்ற கப்பலில் பால்டிக் கடல் வழியே ஸ்வீடனின் தலைநகரம் ஸ்டாக்ஹோம் போய்ச் சேர்ந்தது.

இரவுத் தறுவாயில் காற்று சீறிற்று, அலைகள் கொந்தளித்தன, பயங்கரப் புயல் வீசிற்று. சூறைக்காற்று ''ஸெயின்ட் மார்கரீத்தா'' கப்பலைப் பந்தாடியது, அலைகள் மேல் தட்டில் அடித்து மோதின, கடலில் பார்வை புக முடியாத காரிருள் அடர்ந்தது.

கப்பல் ஆறு மணி நேரம் தாமதமாக ஸ்டாக்ஹோம் வந்து சேர்ந்தது. ஃபின்லாந்துக் கப்பல் ''ஸுஓமி'' வெகு நேரத்துக்கு முன்பே ஹெல்ஸிங்ஃபோர்ஸுக்குப் புறப்பட்டுப் போயிருக்கும்.

''நேரத்துக்கு வந்து சேர வாய்க்கவில்லையே!'' என்று வருத்தத்துடன் எண்ணினான் மாலுமி.

திடீரென்று அவன் பார்வையில் பட்டது ''ஸுஓமி'' கப்பல். அது ஸ்டாக்ஹோம் துறைமுகத்தில் நின்று நீராவி உமிழ்ந்துகொண்டிருந்தது. புயல் அதைத் தாமதப்படுத்தியிருக்கும். இப்போதுதான் அது புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தது.

''மெதுவாக முன்னே!'' என்று உத்தரவிட்டான் கப்பல் காப்டன்.

சுழல் துடுப்புக்களுக்கு அடியில் நீர் கொந்தளித்துப் பொங்கியது. கப்பல் நகர்ந்தது.

''உதவிக் காப்டன் ஐயா! கேனிக்ஸ்பெர்கிலிருந்து உங்கள் அத்தை சாமான் கொடுத்து அனுப்பியிருக்கிறாள்'' என்று பெட்டியைச் சுமந்தவாறு கத்தினான் மாலுமி.

ஓடியதால் அவனுக்கு மூச்சு திணறிற்று. பெட்டி கனத்தது. ''ஸுஓமியோ'' போகத் தொடங்கிவிட்டது. பிரயாசை வீண்.

இல்லை, வீண் இல்லை. அற்புதம் நிகழ்ந்தது. மாலுமியின் குரல் காப்டன் காதில் பட்டுவிட்டது.

''மெதுவாகப் பின்னே!'' என்ற கட்டளை ''ஸுஓமியில்'' முழங்கிற்று. ''நிறுத்துக!''

''உதவிக் காப்டன் ஐயா! அத்தை உங்களுக்குக் கம்பளி ஸ்வெட்டர்கள் அனுப்பியிருக்கிறாள்'' என்று பெருங் குரலெடுத்துக் கத்தினான் மாலுமி.

கப்பல் துறை அருகே கும்பலாக நின்ற ஆட்கள் களுக்கென்று நகைத்தார்கள். உதவிக் காப்டனுக்கு வந்த சாமானுக்காக ''ஸுஓமி'' திரும்பியதில் எல்லோருக்கும் ஏனோ மகிழ்ச்சி உண்டாயிற்று. உதவிக் காப்டன் பெட்டியை வாங்கிக் கொண்டு, கை வீசி மாலுமிக்கு நன்றி தெரிவித்து விட்டு, பெட்டியைத் தன் அறைக்கு எடுத்துச் சென்றான். அங்கே பெட்டியை வைத்துவிட்டு அறையைச் சாத்திப் பூட்டினான்.

பெட்டி நீண்ட பயணத்தைத் தொடர்ந்தது.

ஃபின்லாந்து நகரம் ஹெல்ஸிங்ஃபோர்ஸில் மழை பெய்துகொண்டிருந்தது. அடைமழை. கூரைத் தூம்புகளிலிருந்து மழைநீர் அருவிகளாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. நடைபாதைகளை ஒட்டி வேகமாக நீரோட்டங்கள் பெருகிக் கொண்டிருந்தன.

''ஸுஓமி'' கப்பலின் உதவிக் காப்டன் மழைக் கோட்டு அணிந்து பெட்டியும் கையுமாகக் குதிரை டிராம் நிறுத்தத்தை நோக்கி விடுவிடென்று நடந்தான். என்ன அடைமழை! இந்தச் சோனாமாரியில் பெட்டிக்குள் தண்ணீர் போய் விடாமல் இருக்கவேண்டுமே. சரியான பிரளயம். மழைக்குப் பெயர்போன ஃபின்லாந்திற்குக்கூட இது மட்டு மீறிப் பலத்த பொழிவு. உதவிக் காப்டன் நிறுத்தத்தில் தன்னைச் சந்திக்க வேண்டிய தொழிலாளன் தென்படுகிறானா என்று இரண்டு பக்கமும் பார்வையால் தேடினான்.

ஆனல் ''ஸுஷமி'' பல மணி நேரம் தாமதித்து வந்தது. போதாக்குறைக்கு இந்த ஊழி மழை வேறு! வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. பீட்டர்ஸ்பர்க் தொழிலாளன் காத்திராமல் போய்விட்டானு என்ன? அட, எவ்வளவு வருந் தத்தக்க விஷயம்! அதோ டிராம்.... தொழிலாளனையோ காணுேம். அப்போது எதிர் வீட்டு வாயில் வளவிலிருந்து வெளிப்பட்டான் ஒருவன். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அருகே வந்தான். அவன்தான் பீட்டர்ஸ்பர்க் ஆசாமி.

''படு மோசமான துரதிர்ஷ்டம். குளிர்ந்து விரைத்துப் போனேன்'' என்று சிடுசிடுத்தான் அவன்.

''புயல் தாமதப்படுத்திவிட்டது. எப்போது போகி றீர்கள்?''

''இன்றைக்கு.''

''நிரம்ப நல்லது. உடனே தந்தி மூலம் தகவல் கொடுக்கிறேன்.''

தொழிலாளன் தலையசைத்தான், பின்பு பெட்டியை எடுத்துக் கொண்டு டிராமில் ஏறினுன்.

சில மணி நேரத்தில் பெட்டி ஃபின்லாந்து இருப்புப் பாதை வழியே ரயிலில் பீட்டர்ஸ்பர்க் பயணம் செய்தது.

ரயில் வண்டி வெறுமையான வசந்தகால வயல்கள், ஈரமான கிராமங்கள், பலகைகள் மூடிய ஜன்னல்கள் கொண்ட கோடை வாச பங்களாக்கள் ஆகியவற்றைக் கடந்து சென்றது. பீட்டர்ஸ்பர்க் ஆசாமி இந்த இடங்களை நன்ருக அறிந்திருந்தான். அவன் ஜன்னலுக்கு வெளியே பார்க்கவே இல்லை. செய்தித்தாள் படித்தவாறு பெலஒஸ் திரவ் ஸ்டேஷன் வருவதற்காகக் காத்திருந்தான்.

பெலஒஸ்திரவ் ஸ்டேஷனிலிருந்து ருஷ்யா தொடங் கிற்று. அங்கே சுங்கச் சோதனை நடப்பது வழக்கம்.

சுங்க அதிகாரி பெட்டியில் தென்பட்டான்.

''பெட்டிகளைத் திறக்கும்படி கேட்டுக் கொள் கிறேன்.''

பீட்டர்ஸ்பர்க் ஆசாமி நிதானமாகப் பெட்டியைத் திறந்தான்.

இரண்டு சட்டைகள், ஒரு கம்பள விரிப்பு, மிட்டாய் ஒரு டப்பா. அதிகாரி பெட்டியின் ஓரங்களைத் தட்டிக் கொட்டிப் பார்த்தான். சந்தேகத்துக்கு இடமானது ஒன்றும் அவனுக்குத் தென்படவில்லை.

அன்றைக்கே தொழிலாளன் பீட்டர்ஸ்பர்க் நகரம் சேர்ந்து, வஸீலியெவ்ஸ்கீ தீவில் இருந்த கற்கட்டிடத்தின் இரண்டாவது மாடிக்குப் போனன். அங்கே ''பல் மருத்துவர்'' என்ற அடையாளச் செப்புப் பட்டயம் கதவுமேல் பதித்திருந்தது.

வந்தவன் கதவு மணியை அடித்தான். இரண்டு நீண்ட மணியொலிகள், மூன்றுவது குறுகிய ஒலி. பயப்படாதீர்கள், வந்திருப்பவன் நம் ஆள்தான் என்பது இதன் அர்த்தம்.

பல் மருத்துவன் கதவைத் திறந்தான். ''உள்ளே வாருங்கள். உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்'' என்றான்.

இதுதான் புரட்சிக்காரர்களின் மறைமுகச் சந்திப்பு இடம்.

பல் மருத்துவ அறையில் ஒரு மங்கை தொழிலாளனுக்காகக் காத்திருந்தாள்.

''கொடுங்கள்'' என்றாள்.

பின்பு பெட்டியைத் திறந்தாள். பாவம், அது வழியில் படாத பாடு உண்டா? புயலுக்கும் பெரு மழைக்கும் சோதனைக்கும் உள்ளாயிருந்ததே அது!

கட்டம்போட்ட கம்பளி விரிப்பையும் மற்றச் சில்லறைச் சாமான்களையும் அந்த மங்கை மளமளவென்று வெளியே போட்டாள். இது என்ன? வந்தவன் தந்திரமான கையசைப்புடன் பெட்டியின் அடியை அழுத்தினன். அடிப்பகுதி மூடிபோலத் திறந்து கொண்டது. பெட்டி இரட்டை அடித்தளம் உள்ளது. அங்கே செம்மச் செம்மத் திணித்து வைக்கப்பட்டிருந்தன செய்தித்தாள்கள். மங்கை ஒன்றை எடுத்துப் பார்த்தாள். இஸ்க்ரா!

ம்யூனிக்கிலிருந்து பல்வேறு ஆட்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு, இவ்வளவு இரகசியமாக எடுத்துவந்தது இது தான்! கேனிக்ஸ்பெர்க், ஸ்டாக்ஹோம், ஹெல்ஸிங்ஃபோர்ஸ் வழியே பீட்டார்ஸ்பர்குக்கு....

அந்தப் பெண் பெட்டியிலிருந்து இஸ்க்ரா இதழ்களை எடுத்து, மாதர் தொப்பி வைப்பதற்கான மரப் பேழையில் அடுக்கினாள். அதைச் செம்மச் செம்மப் பத்திரிகைகளால் நிறைத்து, வாரினால் இறுக்கிக் கட்டினாள்.

இதழ்களைப் பீட்டர்ஸ்பர்க் நகர்ப் புறத்தில் தொழிலாளர் குழுக்களிடம் கொண்டு சேர்த்தாள். அவள் இஸ்க்ராவின் ஏஜெண்டு. ருஷ்யாவின் பெரிய நகரங்கள் எல்லாவற்றிலும் இஸ்க்ரா ஏஜெண்டுகள் இரகசியமாக வேலை செய்து வந்தார்கள்.

இஸ்க்ரா கடல்கள் வழியே கொண்டுபோகப்பட்டது. ரயில் மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டது. இரகசிய மாக எல்லையைத் தாண்டி ருஷ்யாவுக்கு அனுப்பப்பட்டது.

தொழிலாளர்களும் குடியானவர்களும் தங்கள் வாழ்க் கையைக் காணும்படி இஸ்க்ரா கண் திறந்துவிட்டது.

''ஜாராட்சிக்கு எதிராகப் போராடுங்கள்! முதலாளி களுக்கு எதிராகப் போராடுங்கள்!'' என்று தொழிலாளர் களுக்குக் கற்பித்தது இஸ்க்ரா.

இஸ்க்ரா கட்சி அமைக்கும்படி அழைத்தது. புரட்சிக்கு அறைகூவி அழைத்தது.

இஸ்க்ராவால் தூண்டிவிடப்பட்ட விறல் மிக்க தொழிலாளர் இயக்கம் ருஷ்யாவில் மூண்டெழுந்தது.

இந்தப் பேரியக்கம் அனைத்தின் இயக்குநராக, அதன் தலைவராக, இஸ்க்ராவின் தலைமை ஆசிரியராக விளங் கினர் விளாதீமிர் இல்யீச்.

இஸ்ராவின் தொழிலாளர் ஏஜெண்டுகளிடமிருந்து எத்தனையோ கடிதங்கள் விளாதீமிர் இல்யீச்சுக்கு வரும். ருஷ்யாவிலிருந்து குறியீட்டு மொழியில் எழுதப்பட்ட நூற்றுக் கணக்கான கடிதங்கள் வரும். ருஷ்யாவின் தொழிற் சாலைகளிலும் ஆலைகளிலுமிருந்து கட்டுரைகளும் குறிப்புக் களும் அனுப்பப்படும். இவற்றை விளாதீமிர் இல்யீச் இஸ்க்ராவில் வெளியிடுவார். ருஷ்யாவில் இருந்த தொழிலா ளர்களுக்குப் பதில்கள் அனுப்புவார். இஸ்க்ராவுக்குக் கட் டுரைகள் எழுதுவார். அரசியலையும் புரட்சிப் போராட்டத் தையும் பற்றிப் புத்தகங்கள் எழுதுவார்.

1901ம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் விளாதீமிர் இல்யீச் தமது புத்தகங்களையும் கட்டுரைகளையும் லெனின் என்னும் பெயரால் வெளியிடத் தொடங்கினர்.

இது மாபெரும் பெயர். உலகம் முழுவதும் அதைப் பற்றி அறியும்.

போல்ஷிவிக்குகள்

மலைப்பாங்கான சுவிட்ஸர்லாந்து நாட்டில், ஆழ்நீல ஜெனீவா ஏரிக் கரையில் அமைந்திருக்கிறது எழில் நகரம் ஜெனீவா. நகரின் ஒரு புறத்தில் ஏரியின் அருகாமையில் ஸெஷெரோன் என்னும் தொழிலாளர் குடியிருப்பில் இருந்தது ஒரு வீடு. அது மாடி வீடு, ஆனால் மிகவும் சிறியது. எல்லா வீடுகளையும் போலவே ஓட்டுக் கூரை வேய்ந்தது. ஜன்னல் சட்டங்கள் இள நீல நிறம். வீட்டைச் சுற்றித் தோட்டம். மிகச் சின்னதுதான், என்றாலும் பசுமைதானே.

இந்த வீட்டில் வசித்தார்கள் ''இல்யீச்'' தம்பதியர். விளாதீமிர் இல்யீச்சையும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவையும் நண்பர்கள் இவ்வாறு அன்புடன் அழைத்து வந்தார்கள்.

இல்யீச் தம்பதியர் முதலில் ம்யூனிக் நகரில் வசித்தார்கள். ம்யூனிக் போலீஸார் இஸ்க்ரா பற்றி மோப்பம் கண்டு விடவே, அங்கிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. பிரிட்டனின் தலைநகரம் லண்டனில் அவர்கள் குடியேறினார்கள். லண்டனில் இஸ்க்ரா முழுதாக ஓர் ஆண்டு வெளிவந்தது. அங்கேயும் ஆபத்து சூழ்ந்தது. இஸ்க்ரா வெளியிடுவதற்குப் புது இடம் தேட வேண்டியதாயிற்று. இவ்வாறே இல்யீச் தம்பதியர் ஜெனீவாவில் தொழிலாளர் குடியிருப்பு ஸெஷெரோனில் குடி புகுந்தார்கள்.

மாடி வீடு முழுவதையும் ஒரு தடவை சுற்றி வந்தார் விளாதீமிர் இல்யீச். கீழே போதிய அளவு விசாலமான சமையல் அறை. குறுகிய படி வரிசை மாடிக்கு இட்டுச் சென்றது. அங்கே மிகச் சிறு அறைகள். ஆனால் பிரகாசமானவை. ''அருமை! நிசப்தமாக இருக்கிறது. அமைதியாக் வேலை செய்ய முடியும்'' என்றார் விளாதீமிர் இல்யீச்.

விளாதீமிர் இல்யீச்சுக்கு நிறைய வேலை இருந்தது. ஆனால் நிசப்தம் விரைவிலேயே முடிந்துவிட்டது. குடியிருப்பு வாசிகள் கவனித்தார்கள்: பொதுவாகவே இந்த ருஷ்யர்களிடம் ஏராளமான தோழர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள். 1903ம் ஆண்டு ஜூலை மாதம் முதலோ, காண வருபவர்களுக்கு ஒரு முடிவே இல்லை. ஆட்கள் ஒருவராகவும் இருவராகவும் மூவராகவும் வருவதும் போவதுமாய்

இருந்தார்கள். அவர்கள் இந்தப் பக்கத்துக்காரர்கள் அல்ல என்பதை எளிதில் காண முடிந்தது. அவர்களுடைய உடைகளும் பேச்சும் இந்தப் பக்கத்து வழக்கத்திற்கு மாறுபட்டு இருந்தன. அவர்கள் ருஷ்ய மொழி பேசினார்கள். வந்தவர்கள் ருஷ்யர்கள். அவர்கள் ஜெனீவாவுக்கு முதல் தடவை வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது. எல்லாமே அவர்களுக்குப் புதியவையாய் இருந்தன. வெயில் ஒளி நிறைந்த வானமும் குதூகல வண்ணங்கள் கொண்ட ஜன்னல் சட்டங்களும் முன்தோட்ட மலர்ச்செடிகளும் அவர்களுக்குப் பிடித்திருந்தன.

1903ம் ஆண்டுக் கோடையில் இத்தனை நிறைய ருஷ்யர்கள் ஜெனீவா வந்தது ஏன் என்று ஸெஷெரோன் குடியிருப்பில் வசித்தவர்கள் வியப்பு அடைந்திருக்கலாம். இவர்கள் ருஷ்யாவின் பல பகுதிகளிலிருந்து கட்சியின் இரண்டாவது காங்கிரஸில் கலந்துகொள்ள வந்திருந்த பிரதிநிதிகள் என்பது ஒருவருக்கும் தெரியாது.

காங்கிரஸ் முன் இருந்த பிரச்சினைகள் பற்றிப் பேசவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் பிரதிநிதிகள் லெனினிடம் வந்தார்கள். காங்கிரஸைக் கூட்ட மற்ற எல்லாரையும் விட அதிகமாக முன்னேற்பாடுகள் செய்தவர் லெனினே என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். இஸ்க்ராவில் இத்தனை நிறையக் கட்டுரைகள் எழுதியவர் அவரே. கட்சியை எவ்வாறு நிறுவ வேண்டும் என்பது பற்றி **என்ன செய்வது?** என்ற அருமையான நூலை அவரே எழுதினார். கட்சி விதிகளையும் போராட்டச் செயல் திட்டத்தையும் அவரே தயாரித்தார்.

''புதிய, மேம்பட்ட சமூக அமைப்பை முயன்று நிறுவ நாம் விரும்புகிறோம். இந்தப் புதிய, மேம்பட்ட சமூகத்தில் பணக்காரர்களோ ஏழைகளோ இருக்கக் கூடாது. எல்லோரும் வேலையில் பங்கு பற்ற வேண்டும்'' என்று விளக்கினார் லெனின்.

இந்த விஷயத்தைக் குறித்து நிறைய உழைத்து ஆராய்ந்திருந்தார் லெனின். சைபீரியச் சிறைக் குடியிருப்பில் வசிக்கும்போதே செயல்திட்டத்தைச் சிந்தித்து உருவாக்கியிருந்தார். புதிய சமூகத்தை நிறுவ எவ்வாறு சரியாகப் போராட வேண்டும், அதை விரைவில் நிறுவுவது

எப்படி என்பது பற்றிக் கட்சிக் காங்கிரஸில் உடன்பாட்டுக்கு வர அவர் விரும்பினர்.

ஜெனீவாவிலிருந்து பிரதிநிதிகள் பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரஸ்ஸல்ஸ் சென்றார்கள். அங்குதான் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் ஆரம்பித்தது. மிகப் பெரிய மாவுக் கிடங்கில் நடந்தது காங்கிரஸ். இந்தக் கிடங்கு வசதி அற்றது, இருண்டது.

மாவுக் கிடங்கைக் காற்றூடத் திறந்து வைத்து, துப்புரவாக்கினர்கள். மரப் பலகைகளால் பிரசங்க மேடை நிறுவினர்கள். பெரிய ஜன்னலைச் சிவப்புத் திரையால் மூடினர்கள். பெஞ்சுகள் போட்டார்கள். அப்பறம் பிரதிநிதிகள் இடங்களில் அமர்ந்தார்கள். பேச எழுந்தார் பிளெஹானவ். முதலாவது ருஷ்ய மார்க்ஸீயவாதி பிளெஹானவே. அவர் அறிஞர். மார்க்ஸின் புரட்சிப் போதனையை விளக்கும் பல நூல்களை லெனினுக்கு முன்பே அவர் எழுதினர். பிளெஹானவ் கட்சியின் இரண்டாவது காங்கிரஸை முறைப்படி திறந்துவைத்து அரிய உரை ஆற்றினர்.

எல்லோரும் நெஞ்சு விம்ம உரையைச் செவிமடுத்தார்கள். விளாதீமிர் இல்யீச் லெனின் ஒரேயடியாகக் கிளர்ச்சி அடைந்தார். அவர் முகம் வெளிறிக்கூடப் போய்விட்டது. கண்கள் மட்டுமே சுடர் வீசின. கட்சிக் காங்கிரஸ் பற்றி, கட்சியை மீட்டு அமைப்பது பற்றி அவர் வெகு காலமாகக் கனவு கண்டு கொண்டிருந்தார். கடைசியில் கனவு நனவாகிவிட்டது!

காங்கிரஸின் நிகழ்ச்சிகள் தொடங்கின. அனேகமாக முதல் நாளிலிருந்தே காங்கிரஸில் போராட்டமும் தொடங்கி விட்டது. லெனினுடைய போராட்டச் செயல்திட்டத்திற்கு இணங்காத பிரதிநிதிகளும் இருந்தார்கள்.

லெனினுடைய செயல்திட்டம் இவர்களுக்கு எல்லை மீறிப் புதியதாகவும் துணிவு மிக்கதாகவும் தோன்றியது. புதுமை அவர்களை அச்சுறுத்தியது. இந்தப் பிரதிநிதிகள் லெனினுடன் விவாதிக்கத் தொடங்கினர்கள். ஆனால் லெனினுடைய திட்டம் சரியாய் இருந்தது, தமது திட்டம் சரியானது என்பதை அவர் ஆர்வமும் ஆவேசமும் பொங்க ஆதாரங்களுடன் வாதிட்டு நிலைநாட்டினர். எனவே பெரும்பாலான பிரதிநிதிகள் அவர் தரப்பிற்கு வந்து விட்

டார்கள். காங்கிரஸில் கட்சியின் விதிகளும் செயல்திட்ட மும் ஆலோசிக்கப்பட்டன. மத்தியக் கமிட்டிக்கும் இஸ்க்ரா ஆசிரியக் குழுவுக்கும் தேர்தல்கள் நடந்தன. எல்லாப் பிரச்சினைகள் மீதும் காட்டமான விவாதங்கள் கிளம்பின. காங்கிரஸில் லெனின் மிகத் தெளிவான, உளத் தில் பதியக் கூடிய உரை ஆற்றினார். எல்லோரும் அசாதா ரணக் கவனத்துடன் அதைக் கேட்டார்கள். காங்கிரஸின் முப்பத்தேழு கூட்டங்கள் நடந்தன. லெனின் நூற்று இரு பது தடவைகள் சொற்பொழிவுகளும் பதிலுரைகளும் ஆற் றினார். கேட்போரைப் பிணிக்கும் வகையில் அவர் பேசி னார். பெரும்பாலான பிரதிநிதிகள் லெனினுக்கு ஆதர வாய் இருந்தார்கள். எனவே, பெரும்பான்மையினர் என்று பொருள்படும் போல்ஷிவிக் என்ற ருஷ்யப் பெயரால் அவர்கள் குறிக்கப்பட்டார்கள். தொழிலாளர் புரட்சிக்கு, லெனினுடைய செயல்திட்டத்துக்கு, லெனினுக்கு ஆதர வாக இருந்தவர் போல்ஷிவிக். இரண்டாம் கட்சிக் காங் கிரஸில் லெனின் தரப்பிலிருந்து பிரிந்து விலகியவர்கள், சிறுபான்மையினர் என்று அர்த்தப்படும் மென்ஷிவிக் என் னும் பெயரைப் பெற்றார்கள். மென்ஷிவிக்குகள் புரட்சிப் போராட்டத்திலிருந்து விலகிவிட்டார்கள். மாறுக போல் ஷிவிக்குகளோ, லெனினை மையமாகக் கொண்டு மேலும் நெருக்கமாக அணி திரண்டார்கள்.

காங்கிரஸ் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. அமர்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தன. அதே சமயம் மாவுக் கிடங்கின் அருகில் சந்தேகத்துக்கு இடமான புள்ளிகள் தென்படலாயினர். தூண்டித் துளைத்தார்கள், கூர்ந்து நோட்டமிட்டார்கள். ருஷ்யப் புரட்சியாளர்கள் வந் திருப்பதை பெல்ஜியப் போலீஸார் எப்படியோ தெரிந்து கொண்டார்கள், எனவே உளவாளிகளின் பெரும் படையைத் தகவல் அறிந்துவர அனுப்பினார்கள். அபாயம் சூழ்ந்தது. காங்கிரஸைப் புது இடத்துக்கு மாற்றுவது அவசியம் ஆயிற்று. பிரதிநிதிகள் லண்டன் சென்றார்கள். அங்கே வேலை தொடர்ந்து நடந்தது. லெனின் வென்றார். அவருடன் இருந்தார்கள் போல்ஷிவிக்குகள்—லெனினின் அஞ்சாநெஞ்சர்களான, ஆர்வம் பொங்கும் போராட்டத் துணைவர்கள்!

...லண்டன் நகரில் மழை அடிக்கடி பெய்யும். அப்போதோ, நெடு நேரமாகப் பிசு பிசுவென்று தூறிக் கொண்டிருந்தது. லண்டன்வாசிகள் பெரிய குடைகளைப் பிடித்தவாறு நடமாடிக் கொண்டிருந்தார்கள். வீதிகள் குடைகளால் அடைபட்டவை போலக் காட்சி அளித்தன. திடீரென்று லா மான்ஷிலிருந்து காற்று வீசி அடர் மேகங்களைக் கலைக்கும், வானத்தில் நீல ஒளிர்வு தென்படும். வெயில் அடிக்கும். ஒரு மணி இவ்வாறு இடைவிட்ட பிறகு மறுபடி மழை தூறத் தொடங்கிவிடும்.

காங்கிரஸ் முடிந்த பிறகு இத்தகைய ஈரிப்புள்ள ஒரு நாள் சூரியன் சற்று நேரம் ஒளி வீசிவிட்டு மேகங்களின் பின்னே மறைந்ததும் லெனின் சொன்னார்:

''தோழர்களே! இருபது ஆண்டுகளுக்கு முன் இங்கே லண்டனில் காலமானார் கார்ல் மார்க்ஸ். வாருங்கள், மாபெரும் மார்க்ஸின் கல்லறை முன் வணக்கம் செலுத்துவோம்.''

எல்லோரும் ஒன்று சேர்ந்து இடுகாடு சென்றார்கள். லண்டன் நகரின் வட பகுதியில் உயர்ந்த குன்றின்மேல் இருக்கிறது இந்த இடுகாடு. குன்றின்மேலிருந்து தொலைவில் லண்டன் தெரிந்தது. புகைக்கரி படிந்து கறுத்த கட்டிடங்கள், கறுத்த முகடுகள், தொழிற் சாலைகளின் புகைக்கும் குழாய்கள்.

மார்க்ஸின் கல்லறைமேல் பளிச்சிடும் பசிய புல் விளிம்பு கட்டியது போன்று தோற்றம் அளித்த வெள்ளைச் சலவைக்கல் பாளம் பதித்திருந்தது.

தலை மாட்டில் ரோஜாச் செடி வளர்ந்திருந்தது. பூ இதழ்கள் ஏக்கத்துடன் தொங்கின. மழை தூறியது. கரிய குடைகள் வீதிகளில் மெதுவாக நகர்ந்தன.

லெனின் தொப்பியைக் கழற்றிக் கையில் பிடித்தவாறு தணிந்த குரலில் சொன்னார்:

''தோழர்களே, மாபெரும் மார்க்ஸ் நம் ஆசான். அவருடைய போதனையை விசுவாசத்துடன் கடைப்பிடிப்போம் என்று அவரது கல்லறை முன் சபதம் செய்வோம். ஒரு போதும் போராட்டத்தை நிறுத்த மாட்டோம். முன் செல்வோம், தோழர்களே. முன்னேயே செல்வோம்.''

கொடுஞ்செயல்

பீட்டர்ஸ்பர்கில் இருந்த புத்தீலவ் தொழிற்சாலையில் மூன்று தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். ஒரு காரணமும் இன்றி. மேஸ்திரிக்குப் பிடிக்கவில்லை, அவ்வளவுதான், மூவரும் வேலையிலிருந்து நீக்கப் பட்டுவிட்டார்கள். தொழிற்சாலையில் புயல் கிளம்பியது.

''எங்களுக்கு உரிமைகள் இல்லை. எங்களுக்கு உரிமைகள் தாருங்கள். உயிரை வாங்கும் மேஸ்திரிகள் ஒழிக!'' என்று முழங்கினார்கள் புத்தீலவ் தொழிலாளர்கள்.

வேலை நிறுத்தம் திடீரென்று தொடங்கியது. புத்தீலவ் தொழிலாளர்கள் எல்லோரும், ஒருவர் பாக்கி இல்லாமல், வேலை செய்ய மறுத்துவிட்டார்கள். தொழிற்சாலை நின்று விட்டது. இன்னும் இரண்டு தொழிற்சாலைகளும் நின்றுவிட்டன. ஒரு நாளுக்குப் பின் 360 தொழிற்சாலைகளும் ஆலைகளும் வேலையை நிறுத்திவிட்டன. இயந்திரங்கள் செயலற்று நின்றன. பீட்டர்ஸ்பர்க் நகரம் ஸ்தம்பித்து உறைந்து போயிற்று. மேலே என்ன நடக்கும் என்று எல்லாரும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

1905ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ந் தேதி ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஊர்வலமாகக் கிளம்பினர்கள்.

''ஜாரிடம் போகிறோம், கருணை காட்டும்படி வேண்டிக் கொள்ள. எங்கள் ஜார் அப்பனே, உண்மைக்கு ஆதரவு அளி. நாங்கள் பட்டினி கிடந்து மடியவிடாதே என்று கேட்போம்'' என்றார்கள் தொழிலாளர்கள்.

''போகாதீர்கள். ஜார் உங்கள் வேண்டுகோளைச் செவியேற்க மாட்டான்'' என்று தடுத்துரைத்தார்கள் போல்ஷிவிக்குகள்.

தொழிலாளர்களோ, ஊர்வலத்தைத் தொடர்ந்தார்கள். ''மக்கள் எப்படித் துன்பத்தில் உழல்கிறார்கள் என்பது ஜாருக்குத் தெரியாது. தெரிந்ததும் அவர் நமக்குப் பரிந்து கொண்டு வருவார். செருக்குள்ள மேஸ்திரிகளையும் முதலாளிகளையும் அதட்டி மிரட்டுவார். இல்லாவிட்டால் தொழிலாளர்கள் வாழ்வதே முடியாமல் போய் விடும்'' என்றார்கள்.

ஜாரிடம் சமர்ப்பிப்பதற்காகத் தங்கள் விண்ணப் பங்களைத் தொழிலாளர்கள் எடுத்துச் சென்றார்கள். ஞாயிற்றுக்கிழமை காலையில் பனிக்கால அரண்மனைக்குப் பீட்டர்ஸ்பர்க் நகரின் எல்லா மூலைகளிலிருந்தும் அணி அணியாகத் திரண்டு வந்தன தொழிலாளர்களின் ஆர்ப் பாட்ட ஊர்வலங்கள். வீதிகள் வழியே பெருகிச் சதுக்கங் களில் நிறைந்தன அவை. தலைகளுக்கு மேலே சரிகைத் தையல் வேலை செய்த சர்ச் பதாகைகள் படபடத்தன. பூத்தையல் துணிகளில் தீட்டிய தெய்வப் படங்கள் வீசிப் பறந்தன. குழந்தைகளும் மாதர்களும் ஊர்வலத்தில் இருந்தார்கள். தெய்வ பக்தியும் பிரார்த்தனையும் அந்த மக்கள் திரளில் நிறைந்திருந்தன.

ஆனால் இது என்ன? நாற்சந்திகளில் படைவீரர்கள் அணி வகுத்து நின்றார்கள், துப்பாக்கிகளைக் கால்களின் அருகே நிறுத்திப் பிடித்தவாறு. படை வரிசைக்கு முன்னே நின்றார்கள் வெண் கையுறைகள் அணிந்த இராணுவ அதிகாரிகள்.

அந்தச் சமயத்தில் ஜப்பானுடன் போர் நடந்து கொண்டிருந்தது. தரையிலும் கடலிலும் உக்கிரமான சண்டைகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. சுமார் ஓர் ஆண் டுக்கு முன்னால் ஜப்பானியர்கள் ருஷ்யாவைத் தாக்கினார் கள். ருஷ்ய ஜெனரல்கள் இதற்கு ஆயத்தமாக இல்லவே இல்லை. ருஷ்யப் படை வீரர்கள் நாள்தோறும் தோல்வி மேல் தோல்வி அடைந்து வந்தார்கள். ஆயிரக்கணக்கான துருப்பினர் எங்கோ தொலைவில் மடிந்தார்கள்....

ஆனால் இங்கே, பீட்டர்ஸ்பர்கில், ஜாரின் இராணுவ அதிகாரிகள் நிராயுதபாணிகளான தங்கள் தொழிலாளர் களுக்கு எதிராகப் படைவீரர்களைக் கொண்டுவந்து தலை நகரின் பல்வேறு இடங்களில் நிறுத்தியிருந்தார்கள். எதற்காக?

''ஒழுங்குக்காக. நெரிசல்கள் ஏற்படுமோ என்று பயப்படுகிறார்கள் போலிருக்கிறது'' என்று புனித தேவமா தாவின் படத்தை ஏந்தியவாறு விளக்கினான் ஒரு தொழி லாளன்.

பிரமாண்டமான பனிக்கால அரண்மனை சதுக்கத்தில் மலைபோல உயர்ந்து நின்றது. அதன் நூறு ஜன்னல்கள்

மௌனமாக நோக்கின. அரண்மனைக்கு முன் வெண்பனி மனிதர்கள் கால் படாமல் வெளேறெனக் காட்சி தந்தது. படை வீரர்களின் நெருக்கமான வரிசை முகங்களில் கடு கடுப்புடன் அரண்மனையைக் காவல் செய்தது. ஊர்வலத் தினரின் கூட்டத்தைக் கண்டதும் இராணுவ அதிகாரி வெள்ளைக் கையுறை அணிந்த கரத்தை உயர்த்தினன். துப்பாக்கிகள் அக்கணமே தோள்கள் மீது சார்த்திக் கொள்ளப்பட்டன.

''தம்பிகளே, படைவீரர்களே, பயம் காட்டாதீர் கள்! நாங்கள் உங்களவர்கள் தாமே! ஜாரிடம் நல்ல வார்த்தை சொல்லவே வருகிறோம்'' என்று கத்தினர்கள் தொழிலாளர்கள்.

''நில்லுங்கள்! மேலே வராதே! கூடாது'' என்று இரைந்து கத்தினன் அதிகாரி.

தொழிலாளர்கள் கலக்கம் அடைந்தார்கள். நிமிட நேரம் ஊர்வலம் நின்றது. ஆனால் பின்னால் இருந்தவர்கள், படைவீரர்களைக் காணமல் நெருக்கித் தள்ளினர்கள்.

''ஆண்டவனே, ஜாரைக் காப்பாற்று!'' என்ற முழக்கம் சதுக்கம் முழுவதிலும் ஆர்த்தது.

முன் வரிசைகளில் இருந்த தொழிலாளர்கள் வெள்ளைக் கைக்குட்டைகளை உயர்த்தினர்கள்.

''நாங்கள் அமைதியானவர்கள்! ஜாருக்கு விண்ணப் பம் கொண்டு வருகிறோம்'' என்று கத்தி, சர்ச் பதாகை களையும் தெய்வப் படங்களையும் வெள்ளைக் கைகுட்டை களையும் ஏந்தியவாறு நடந்தார்கள் தொழிலாளர்கள்.

''சுடு!'' என்று உத்தரவிட்டான் அதிகாரி.

வரண்ட சடசடப்பு ஒலித்தது. புரியாத, முழக்கம் அற்ற ஒலி. குபீர் நெருப்பு. தொழிலாளர் கூட்டத்தில் ஓர் இருபது ஆட்கள் தரையில் சரிந்தார்கள்.

''சுடு!'' என்ற உத்தரவு மீண்டும் பிறந்தது.

குபீர் நெருப்பு. வரண்ட சடசடப்பு.

''சுடு! சுடு! சுடு!''

ஆட்கள் சதுக்கத்திலிருந்து ஓடினர்கள். வீட்டுப் புகு வாயில்களில் ஒளிந்தார்கள். இறந்து விழுந்தார்கள். பனிக் கால மாளிகையின் முன் இருந்த வெண்பனிச் சதுக்கம் கொல்லப் பட்டவர்களின் உடல்களால் மூடப்பட்டு

விட்டது. உருவிய வாட்களுடன் பாய்ந்து வந்தது குதிரைப் பட்டாளம்.

''சகோதரர்களே, நாம் தொலைந்தோம்!'' என்ற பயங்கரமான தீனக்குரல் கூட்டத்தில் ஒலித்தது.

''நாசமாய்ப் போகிறவர்கள்! பாவிகள்!''

''பார்த்தீர்களா, உங்கள் ஜாரின் சொரூபத்தை! இவனைப் போய் நம்பினீர்களே! குரூரமான காட்டு விலங்கை நம்பினீர்களே'' என்று வன்மத்துடன் கிளர்ச்சிப் பிரசாரம் செய்தான் போல்ஷிவிக் இளைஞன் ஒருவன்.

தொழிலாளர்கள் புரிந்து கொண்டார்கள். ஜார் தான் அவர்களைத் துப்பாக்கிகளால் சுட்டான். ஜார் மேல் மக்களுக்கு இருந்த நம்பிக்கை சுட்டுக் கொல்லப்பட்டு விட்டது.

1905ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று பீட்டர்ஸ்பர்கில் ஆயிரம் தொழிலாளர் களுக்கு மேல் கொல்லப்பட்டார்கள். ஐயாயிரம் பெயர் காயம் அடைந்தார்கள்.

மாலை ஆவதற்குள் பீட்டர்ஸ்பர்க் வீதிகளில் விளக்குக் கம்பங்கள் வீழ்த்தப்பட்டன, தடையரண்கள் அமைக்கப்பட்டன. ஜார் ஆட்சிக்கு எதிராகப் போராட எழுந்தார்கள் தொழிலாளர்கள்.

ஜெனீவா நகர்ப்புறத்தில், ஆர்வா ஆற்றின் அருகே இருந்தது காரூழ் வீதி. இந்த வீதியில் அவர்கள்தாம் பெரும்பாலும் குடி இருந்தார்கள். லெப்பிஷீன்ஸ்கீ தம்பதி யரின் உணவு விடுதி இங்கேதான் இருந்தது. இவர்கள் சைபீரியச் சிறைக் குடியிருப்பில் விளாதீமிர் இல்யீச்சின் தோழர்களாய் இருந்தவர்கள். லெப்பிஷீன்ஸ்கீயின் உணவு விடுதியை நாடு கடந்த ருஷ்யர்கள் அனைவரும் அறிந்திருந் தார்கள். கீழே விசாலமான அறை. ஜன்னல்களுக்குப் பதில் இரண்டு காட்சி அலமாரிகள். நீண்ட பலகை மேஜைகள் மிகத் துப்புரவானவை. அதோடு ஒரு பியானோ. இது உணவு விடுதி மட்டுமே அல்ல, ஒரு வகையில் போல்ஷிவிக்கு களின் பண்பாட்டுக் கழகமாகவும் விளங்கி வந்தது. இங்கே விரிவுரைகள் ஆற்றப்பட்டன, சதுரங்க ஆட்டங்கள் நடந்தன, அரசியல் விவாதிக்கப்பட்டது....

படுகொலை ஞாயிறு பற்றிய செய்தி தந்தி மூலம் ஜெனீவாவுக்குக் கிடைத்ததும் அங்கிருந்த எல்லா ருஷ்யர்களும் அழைப்பு இன்றியே லெப்பிஷீன்ஸ்கி உணவு விடுதியில் கூடினர்கள். குறைவாவே பேசினர்கள். நிசப்தம் நிலவியது. முகங்களில் ஆழ்ந்த, கண்டிப்பான தோற்றம் காணப்பட்டது. ருஷ்யாவில் முன்னறியாத, பெரிய நிகழ்ச்சி தொடங்கிவிட்டது என்பதை போல்ஷிவிக்குகள் புரிந்து கொண்டார்கள்.

''திரும்ப வேண்டும், திரும்ப வேண்டும், தாய்நாடு!'' என்று நினைத்துக் கொண்டார் விளாதீமிர் இல்யீச்.

ஒருவருடைய சோகக் குரல் பாடிற்று:

''விதி தீர்க்கும் சமரில் பலியானீர் நீர்....''

எல்லோரும் எழுந்து நின்று பாட்டைத் தொடர்ந்தார்கள்:

''வேட்பின்றி மக்கள்பால் கொண்ட அன்பால்.
முடிந்தவை யாவும் ஈந்தீர் அவர்க்காய்,
அவர் வாழ்வு, மானம், விடுதலைக்காய்.''

பலர் விழிகளில் கண்ணீர் ததும்பியது.

''ருஷ்யாவில் புரட்சி'' என்று கிளர்ச்சியுடன் சொன்னர் லெனின்.

இந்தப் பெரும் சொல் ஆவேசத்துடன் ஒலித்தது. அவ்வளவு உவப்பான சொல். புரட்சி. அன்று மாலையே லெனின் வ்பெரியோத்—முன் செல்க—என்னும் செய்தித் தாளுக்காக அறைகூவும் கட்டுரை ஒன்றை எழுதினர். இது போல்ஷிவிக்குகளின் புதிய செய்தித்தாள். இஸ்க்ரா வை மென்ஷிவிக்குகள் கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள். எனவே போல்ஷிவிக்குகள் வ்பெரியோத் என்னும் செய்தித்தாளை வெளியிட்டார்கள்.

லெனின் எழுதினர்: ''எழுச்சி தொடங்கிவிட்டது. பலத்துக்கு எதிராக பலம். வீதிச் சண்டை உக்கிரமாக நடக்கின்றது, தடையரண்கள் நிறுவப்படுகின்றன, வெடியதிர்ச்சிகள் தடதடக்கின்றன, பீரங்கிகள் முழங்குகின்றன. இரத்த வெள்ளங்கள் பெருகுகின்றன, விடுதலைக்காக உள்நாட்டுப் போர் மூண்டுவிட்டது....

''புரட்சி நீடூழி வாழ்க!

''போராட எழுந்துள்ள பாட்டாளி வர்க்கம் நீடூழி வாழ்க!''

கடலில் செங்கொடி

கோடைகால முடிவில் ஒரு நாள் உல்யானவ் தம்பதியரின் ஜெனீவா வீட்டு வாயில் மணி அடித்தது.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன முகம் அறியாத ஓர் இளைஞனை உள்ளே வர விட்டு, ''விளாதீமிர், உன்னைப் பார்க்க வந்திருக்கிறார் இவர்'' என்றார்.

அந்த இளைஞனது முகம் சிறுவனது போல மிகவும் வட்டமாக இருந்தது. கரிய புருவங்களின் அடியிலிருந்து பளிச்சிடும் தெளிவான விழிகள் ஆவலும் ஓரளவு வியப்பும் தும்ப நோக்கின.

''உள்ளே வாருங்கள். நீங்கள் வந்ததில் எங்களுக்கு நிரம்ப மகிழ்ச்சி'' என்றார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன. ''ரொம்ப நல்ல இளைஞன். ஒளிவு மறைவு அற்றவன், நல்லவன் என்று முகத்திலே எழுதி ஒட்டியிருக்கிறது. ருஷ்யாவிலிருந்து வந்திருப்பான்'' என்று நினைத்துக் கொண்டார்.

அந்தக் காலத்தில் ருஷ்யாவில் வேலை நிறுத்தங்கள் இடைவிடாமல் நடந்த வண்ணமாய் இருந்தன. லெனினிடம் யோசனை கேட்பதற்காகத் தாய்நாட்டிலிருந்து போல்ஷிவிக்குகள் அடிக்கடி வருவது உண்டு.

வாலிபன் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவைத் தொடர்ந்து லெனினிடம் சென்றான். நிலையில் உடம்பை விரைப்பாக நிமிர்த்து மார்பைச் சற்றே முன் துருத்திக் கொண்டான். இராணுவ தோரணை அதில் தெரிந்தது.

''எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று புன்னகையுடன் கேட்டார் விளாதீமிர் இல்யீச்.

''போர்க் கப்பல் 'பத்யோம்கினைச்' சேர்ந்த மாலுமி அஃபனஸீ மத்யுஷேன்கோ நான்' என்று இராணுவப் பாங்கில் அறிவித்தான் இளைஞன்.

விளாதீமிர் இல்யீச் விரைவாக அடிவைத்து அவனை நெருங்கினார். கையைப் பற்றிக் குலுக்கினார்.

''புரட்சிகரப் போர்க் கப்பல் 'பத்யோம்கினின்' மாலுமிக் குழுத் தலைவர் அல்லவா நீங்கள்! நதேழ்தா, பார் எவ்வளவு இளவட்டம்....''

அரை மணி நேரத்திற்கெல்லாம் ஸ்பிரிட் அடுப்பின் மேல் எனமல் தேக்கெட்டிலில் நீர் கொதித்தது. பூப் போன்ற ரொட்டித் துண்டுகள் மேஜைமேல் தட்டில் குவித்து வைக்கப்பட்டன. வெண்ணெய்க் கிண்ணத்தில் லேசாக மஞ்சள் பாரித்த புது வெண்ணெய் நாவில் நீர் ஊறும்படி காட்சி அளித்தது.

மாலுமி சில ரொட்டித் துண்டுகள் தின்று தேநீர் பருகியதும், ''அருமை மத்யுஷேன்கோ, எல்லா விவரத் தையும் சொல்லுங்கள், தயவு செய்து'' என்று ஆவ லுடன் கேட்டார் லெனின்.

மாலுமி அஃபனஸீ மத்யுஷேன்கோ போர்க் கப்பல் ''பத்யோம்கினின்'' கதையை விவரித்தான்.

''பத்யோம்கின்'' அண்மையில் கட்டப்பட்ட, ஆற்றல் மிக்க போர்க் கப்பல். அது ஸெவஸ்தோப்பல் துறை முகத்தில் இருந்தது. அதில் பிரமாண்டமான பீரங்கிகள் இருந்தன. கப்பல் குழுவில் எழுநூற்று நாற்பது மாலுமி கள் இருந்தார்கள்.

ருஷ்யாவில் கிளர்ச்சிகள் கொந்தளித்துக் கொண் டிருந்தன. கிராமங்களில் குடியானவர்கள் நிலப்பிரபுக் களுக்கு எதிராகக் கலகம் செய்து கொண்டிருந்தார்கள். ருஷ்ய-ஜப்பானியப் போர் உக்கிரமாக நடந்து கொண் டிருந்தது. ஜப்பானியர்கள் வெற்றி அடைந்து கொண் டிருந்தார்கள், ருஷ்யப் படைகளுக்கோ, பயங்கரத் தோல்வி கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. கொரியா ஜலசந்தியில் ருஷ்யக் கப்பற் படை அணி ஒன்று முழுமையாக நாசமா யிற்று. ஜார் ஆட்சி அதிகாரிகளின் விவகாரங்கள் எல்லாமே உளுத்துக் கலகலத்துப் போயிருந்தன. ஜார் இரண்டாம் நிக்கலாயை மக்கள் இகழ்ந்து வெறுத்தனர்.

போர்க் கப்பல் ''பத்யோம்கினின்'' கமாண்டர் இரக்கம் அற்ற கல் நெஞ்சன். புரட்சியின் உணர்வு வேகம் தன் போர்க் கப்பலுக்குள்ளும் புகுந்துவிடுமோ என்று பயந்து சண்டைப் பயிற்சிக்காக அதை ஸெவஸ்தோப்பலி

லிருந்து கடலுக்கு ஓட்டிச் சென்றான் அவன்—தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களிலிருந்து தூர விலகியிருக்கும் நோக்கத்துடன்.

அதிகாலையில் அடையாள மணியோசை கேட்டு எழுந்தார்கள் மாலுமிகள். அவரவருக்கு உரிய வேலைகள் திட்டமிடப்பட்டன. மாலுமிகளின் பெரிய குழுவுக்குக் கப்பல் தட்டுக்களைக் கழுவும் வேலை தரப்பட்டது.

மேல்தட்டிலிருந்து ஏதோ துர்நாற்றம் காற்றில் வந்தது. கழுவும் வேலையில் இருந்த மாலுமிகள் மேலே ஏறினார்கள். என்ன இது? கொக்கிகளில் மாட்டப்பட்டுத் தொங்கின வெட்டு இறைச்சிகள். அவற்றில் கொழுத்த வெண்புழுக்கள் அடை அடையாக மொய்த்து நெளிந்தன. அவை ஏராளமாக இருந்தபடியால் இறைச்சிகளே அசைவதுபோல் இருந்தது. இந்தக் காட்சியைக் கண்டு மாலுமிகளுக்கு அசிங்கம் பிடுங்கித் தின்றது.

''நமக்குத் தருவதற்காக இதைத்தான் சேமித்து வைத்திருக்கிறார்கள்!''

''புழுப் பிடித்த இறைச்சியைத் தின்ன மாட்டோம். அதிகாரிகள் வேண்டுமானால் வயிறு வெடிக்கத் தின்னட்டும்!''

''அதிகாரிகளுக்கு என்ன வந்தது? அவர்களுக்குத்தான் தனிப்பட்ட உணவுப் பண்டங்கள் இருக்கின்றனவே!''

மதியச் சாப்பாட்டு வேளை வந்தது. அறிவிப்பு மணி அடித்தது. மாலுமிகள் கப்பல் சாப்பாட்டுக் கூடத்தை அடைந்தார்கள். சமையல்காரன் காரட் சூப் தட்டுக்களில் ஊற்றத் தொடங்கினான். அதில் கிருமிகள் தென்பட்டன.

''சாப்பிட மாட்டோம்'' என்று மறுத்தார்கள் மாலுமிகள்.

மௌனம் குடிகொண்டது. அதில் ஏதோ பயங்கரம் புலப்பட்டது. சமையல்காரன் திகில் அடைந்தான். அதிகாரியை அழைத்து வந்தான். அதிகாரி ஓடி வந்து வசவும் திட்டுமாக உத்தரவு இட்டவன், மாலுமிகளின் கடுகடுத்து வெளிறிய முகங்களைக் கண்டதும் பாதியிலேயே விலவிலத்து நிறுத்திவிட்டான். கமாண்டரிடம் போய் அறிக்கை செய்துகொண்டான் அவன். விரைவில் முரசெலி கேட்டது.

மாலுமிகளை மேல்தட்டில் கூடுவதற்காக அழைத்தது. முரசொலி. மாலுமிகள் மேல்தட்டுக்கு ஓடி, கப்பல் ஓரங்களில் அணிவகுத்து அசையாமல் நின்றார்கள். நாற்புற மும் நீலக் கடல். மேலே ஒளி திகழும் வானம். சிற்றலைகள் கடல்மீது தவழ்ந்து கொண்டிருந்தன. கடற்பன்றிகள் அலை களில் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தன.

''கலகக்காரர்களா! போர்க் கப்பலில் கலகம் செய் வது எப்படி என்று உங்களுக்குக் காட்டுகிறேன்! தூண்டி விட்டவர்கள் யார்?'' என்று இரைந்தான் கமாண்டர்.

மாலுமிகள் பேசாமல் அடித்த சிலைகள் போல் நின் றார்கள். அதிகாரிகள் துப்பாக்கி வீரர்களின் காவற் படை யணியை மேல்தட்டுக்கு அழைத்து வந்தார்கள். காவற் படையணியினர் மாலுமிகளுக்கு எதிரே வரிசையாக நின்று கொண்டார்கள்.

''தார்ச்சீலை எடுத்து வாருங்கள்!'' என்று கட்டளை இட்டான் கமாண்டர்.

இதன் அர்த்தம் என்ன? கமாண்டர் சிலருக்கு மரண தண்டனை விதிக்க முடிவு செய்தான் என்று அர்த்தம். ''நீங்கள் தான் கலகத்தை மூட்டி விட்டீர்கள்'' என்று யாரையாவது காட்டுவான். அவர்கள் பாடு தீர்ந்தது.

தார்ச்சீலை கொண்டுவந்து மேல்தட்டில் விரிக்கப்பட் டது. அது யார்மேல் போர்த்தப்படுமோ அவன் விசாரணை யின்றிச் சுட்டுக் கொல்லப்படுவான்.

எல்லாரும் கல்லாய்ச் சமைந்து போனார்கள். சாவு இதோ வந்துவிடும்... மீள வகை இல்லை. நாற்புறமுமோ நீலக் கடல், வானம், வெப்பமான வெயிலொளி, விட்டாற் றியாக வீசும் காற்று.

திடீரென்று ஒரு மாலுமி அணி வரிசையிலிருந்து வெளியே பாய்ந்தான்.

''சகோதரர்களே! எத்தனை நாள் தான் பொறுத் திருக்கப் போகிறோம்? ஆயுதங்களைக் கைப்பற்றுங்கள், சகோதரர்களே!''

இவ்வாறு கூறித் துப்பாக்கியைக் கைப்பற்றுவதற் காக ஓடினான். அவன்தான் மத்யுஷென்கோ. சோர்வற்ற நெஞ்சன் என்று தோழர்கள் அவனை அழைத்தார்கள்.

''கொடுமை செய்யும் கமாண்டர் ஒழிக! ஜார் ஒழிக! விடுதலை நீடூழி வாழ்க, தோழர்களே!'' என்று முழங்கினான் மத்யுஷென்கோ.

அணி வரிசை கலைந்தது. மாலுமிகள் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டார்கள்.

சீனியர் அதிகாரி மேடைக்குப் பின்வாங்கிச் சென்று குறி பார்த்து ரிவால்வர் குதிரையை இழுத்துவிட்டான். மரணக் காயம் பட்டு விழுந்தான் மாலுமி வக்குலின்சுக். இவன் போல்ஷிவிக், நிலையுறுதியும் துணிவும் உள்ள மாலுமிகளின் தலைவன்.

''அப்படியா சேதி? பதிலுக்கு இந்தாருங்கள்!'' என்று வெறியுடன் கத்தி அதிகாரியை ஒரே குண்டால் கொன்று வீழ்த்தினான் மத்யுஷென்கோ.

மாலுமிகளுக்குச் சீற்றம் பொங்கியது. இன்னும் சிலரை, மிகவும் வெறுப்புக்கு உள்ளான அதிகாரிகளை அவர்கள் சுட்டு வீழ்த்திக் கடலில் எறிந்துவிட்டார்கள். கமாண்டர் ஒளிந்து கொண்டான். மாலுமிகள் அவனைத் தேடிப்பிடித்து அக்கணமே கடலில் வீசிவிட்டார்கள்.

போர்க் கப்பல் ''பத்யோம்கின்'' விடுதலை அடைந்தது. ஆனால் மேற்கொண்டு என்ன செய்வது? கப்பலை நிர்வகிப்பது யார்? அதை எங்கே ஓட்டிச் செல்வது?

கப்பல் நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. அஃபனஸீ மத்யுஷென்கோ குழுவின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். ஒதேஸ்ஸா துறைமுகம் செல்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அன்றுவரை ஜாரின் கொடி பறந்த இடத்தில் புரட்சிக் கொடி பறக்கலாயிற்று. இது நடந்தது 1905ம் ஆண்டு ஜூன் 14ந் தேதி.

''பத்யோம்கின்'' செங்கொடியைப் பறக்க விட்டவாறு முழு வேகத்துடன் ஒதேஸ்ஸா சென்றது. கொடி காற்றில் படபடத்தது, செந்தழல் எரிவது போலக் காட்சி அளித்தது, வழிகாட்டி விளக்கு போல ஒளி வீசிற்று. விடுதலைக்காகப் போராடுவதற்கு மாலுமிகளை அறைகூவி அழைத்துச் சென்றது அது.

ஒதேஸ்ஸா நகரை அடைந்து கப்பல் துறையில் நங்கூரம் பாய்ச்சியது ''பத்யோம்கின்''. இரவு வந்தது. போர்க் கப்பலின் ஒளிவீச்சு விளக்குகள் இருளைத் துழாவின.

கண்களைக் குருடாக்கும் ஒளிக் கதிர்கள் கருங்கடலையும் ஆள் நடமாட்டம் நின்றுவிட்ட நகர வீதிகளையும் துருவி ஆராய்ந்து பார்த்தன. பீரங்கி வாய்கள் நகரை இலக்காகக் கொண்டு திரும்பின. நகரிலோ வேலைநிறுத்தங்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. எல்லாத் தொழிலாளர்களும் முதலாளிகளை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்திருந்தார்கள். போர்க் கப்பல் ''பத்யோம்கின்'' உடனேயே, தாமதமின்றித் தொழிலாளர்களின் உதவிக்கு விரைந்திருக்க வேண்டும்! குண்டுகள் சுடத் தொடங்கி பிரபுக்கள், அதிகாரிகளின் மாளிகைகளைத் தகர்த்திருக்க வேண்டும். ஆனால், அதிகாரியால் சுடப்பட்டுக் காயம் அடைந்த மாலுமித் தலைவன், போல்ஷிவிக், மரணம் அடைந்தான். மற்றவர்களோ அனுபவம் அற்ற புத்திளைஞர்கள்.

இதற்குள் ஜார் பீட்டர்ஸ்பர்கிலிருந்து ஸைவஸ்தோப்பலுக்குக் கட்டளை அனுப்பினான்:

''கலகக் கிளர்ச்சியை உடனே நசுக்கி ஒடுக்குக!''

கலகக்காரப் போர்க் கப்பல் ''பத்யோம்கினுக்கு'' எதிராக ஸைவஸ்தோப்பல் கடற்படைப் பிரிவு முழுவதும் ஒதேஸ்ஸா கிளம்பிச் சென்றது.

நான்காம் நாள் காலை ''பத்யோம்கினின்'' பாராக்காரர்கள் பாய்மரங்களையும் புகைக் குழாய்களையும் தொடுவானில் கண்டார்கள். ஒரு கப்பல், இரண்டாவது, மூன்றுவது. அவற்றின் பின்னே இன்னும் பல கப்பல்கள் ''பத்யோம்கினைச்'' சூழ்ந்து கொள்ள விரைந்தன.

ஒன்றுக்கு எதிராகப் பதின்மூன்று.

''பத்யோம்கினில்'' சண்டைக்கு ஆயத்தமாகும்படி அறிவிக்கும் எக்காளம் முழங்கியது. மாலுமிகள் தம் தமக்கு உரிய இடங்களில் தயாராக நின்று கொண்டார்கள். என்ன நடக்கும்?

போர்க் கப்பல் கடற்படைப் பிரிவை எதிர்கொண்டு சத்தமின்றி முன்னே சென்றது. அடையாள விளக்குக் காட்டுபவன் மத்யுஷேன்கோவின் உத்தரவுப்படி பின்வருமாறு அறிவித்தான்:

'' 'பத்யோம்கினின்' மாலுமிகள் கடற்படைப் பிரிவின் பீரங்கி வீரர்களைச் சுடாதிருக்கும்படி கேட்டுக் கொள்கிறார்கள்.''

போர்க் கப்பல் ''பத்யோம்கினே'' அடக்குவதற் காகக் கொண்டுவரப்பட்டிருந்த பதின்மூன்று கப்பல்களி லிருந்தும் பல்லாயிரம் குரல்கள் எழுப்பிய ''ஹுர்ரா!'' என்ற முழக்கம் கடல்மீது ஆர்த்தது. ஒரு கப்பல் ''உங் களுடன் சேர்ந்து கொள்கிறோம்'' என்று குறியீடுகளால் அறிவித்தது.

அந்தக் கப்பல் பறவை போலப் ''பத்யோம்கினே'' நெருங்க விரைந்தது.

''ஹுர்ரா!'' என்ற வேற்றி முழக்கம் கடல் மீது ஆர்ப்பரித்தது.

கடற்படைப் பிரிவுக் கமாண்டர் பயந்து போனான்: எல்லா வீரர்களும் கிளர்ச்சி செய்துவிட்டாலோ? அவன் உத்தரவிட்டான்: ''கடற்படைப் பிரிவை ஸெவஸ்தோப் பலுக்குச் செலுத்தக!''

இப்போது செங்கொடிகளைப் பறக்கவிட்டவாறு கல வரம் நிறைந்த ஒதேஸ்ஸாக் கரை அருகே நின்றன இரண்டு கலகக்காரக் கப்பல்கள். நின்றனவே தவிர, ஒதேஸ் ஸாவைக் கைப்பற்றவில்லை. எதையோ எதிர்பார்த்தன. தயங்கின. என்ன செய்வது என்று அவை அறியவில்லை.

''பத்யோம்கினிலோ'' எரிபொருள் தீர்ந்துபோகும் தறுவாயில் இருந்தது. குடிநீரும் அனேகமாகத் தீர்ந்து விட்டது. விரைவில் இயந்திரங்கள் நின்றுவிடும். மாலுமி கள் கவலை அடைந்தார்கள். செயல் புரிய வேண்டும். எப்படி?

துணைக்கப்பல் விரைவிலேயே துணிவு இழந்தது. புரட்சிச் செங்கொடியைத் துயரத்துடன் தாழ்த்திவிட்டது அது.

''பத்யோம்கினின்'' மாலுமிகள் நங்கூரத்தை எடுத்து விட்டுத் திறந்த கடலுக்குச் சென்றார்கள்.

அந்தச் சமயத்தில் லெனினால் அனுப்பப்பட்ட ஆள் கிளர்ச்சி செய்த ''பத்யோம்கின்'' காரர்களுக்கு உதவும் பொருட்டு ஜெனீவாவிலிருந்து அவசரமாகப் புறப்பட் டார். ''உறுதியுடனும் விரைவாகவும் செயல் புரிவதன் அவசியத்தை மாலுமிகள் உணரும்படி எடுத்துச் சொல் லுங்கள். நகரை நாம் கைப்பற்றிவிட வேண்டும்'' என்று லெனின் அவரிடம் கூறியிருந்தார்.

லெனின் அனுப்பிய ஆள் ஒதேஸ்ஸாவை அடைந்த போது கப்பல் துறையில் செங்கொடி புலப்படவில்லை. செங்கொடி எங்கோ தொலைவில் இருந்தது.

போர்க் கப்பலில் குடி தண்ணீர் மிகமிகக் கொஞ்சந் தான் எஞ்சியிருந்தது. விரைவில், வெகு விரைவில் மீள்வழி கண்டுபிடித்தாக வேண்டும். கப்பல் ஃபெஒதோஸியாவை அடைந்து தண்ணீர் தரும்படி கேட்டது.

அதிகாரிகளோ, ''கலகக்காரர்களுக்குத் தண்ணீர் வழங்க எங்களுக்கு விருப்பம் இல்லை'' என்றுவிட்டார்கள்.

மீண்டும் செங்கொடி கடலில். அது தோல்வியுற வில்லை, ஆனால் அதற்குப் புகலிடமும் இல்லை. கப்பலில் நிம்மதியின்மையும் சுயநம்பிக்கையின்மையும் தலைதூக்கின. மீள்வகை என்ன?

பதினேராம் நாள் மாலையில் கப்பல் ருமேனியக் கப்பல் துறையில் நின்றது. வேற்றுக் கரை, வேற்று வீடுகள், வேற்று விளக்குகள்.

போர்க் கப்பல் ''பத்யோம்கின்'' வலிவு இழந்தது. அதனிடம் குடிநீர் இல்லை, நிலக்கரி இல்லை, உணவு இல்லை.

''கப்பலை எங்களுக்கு ஒப்புக் கொடுங்கள். நாங்கள் உங்களுக்கு அடைக்கலம் தருகிறோம். உங்களை ஜாரிடம் காட்டிக்கொடுக்க மாட்டோம்'' என்றார்கள் ருமேனிய அரசாங்கத்தினர்.

போர்க் கப்பல் ''பத்யோம்கினில்'' மாலுமிகள் கடைசி இரவைக் கழித்தார்கள். சுதந்திரப் போர்க் கப்பலே, விடை கொடு! ஜெனரல்களையும் இராணுவ அதிகாரிகளையும், ஜாரையும் எல்லாப் பணக்காரர்களையும் நீ பதினெரு நாட்கள் கதிகலங்க அடித்தாய். புரட்சிக் கொடிக்கு உண்மையுடன் நடந்து கொண்டாய் நீ. உன் புகழ் ஓங்குக!

இரகசியச் சந்திப்புகள்

விரைவு ரயில் மாஸ்கோவிலிருந்து பீட்டர்ஸ்பர்க் செல்ல ஆயத்தமாக நின்றது. வண்டி புறப்பட நான்கு நிமிடங்களே பாக்கி இருந்தன. வழியனுப்ப வந்திருந்த சிலர் பெட்டிகளின் ஏறு படிகள் அருகே கும்பல்களாகக்

குழுமியிருந்தார்கள். கடைசிப் பெட்டியின் பக்கத்தில் நின்றார்கள் இரண்டு போலீஸ் உளவாளிகள்.

''ஆளைக் காணுமே'' என்று பெருமூச்செறிந்தான் ஒருவன்.

''கடைசி நிமிடத்தில் ஓடி வருவான், உன்னிப்பாகக் கவனிப்போம்'' என்றான் மற்றவன்.

நெற்றியை மூடும்படி இழுத்துவிடப்பட்ட தொப்பி களும் தாமுமாக அவர்கள் கூர்ந்து கவனிக்கலாயினர். பிளாட்பாரத்தில் இன்னும் சில பயணிகள் தென்பட்டார் கள். அவர்களில் ஒருவர் கட்டுக்குட்டான ஆள். வட்டமான நீல மூக்குக் கண்ணாடி அணிந்து, பெட்டியும் மஞ்சள் நிறப்பயண டப்பாவும் கையுமாக வந்தார். அம்மாதிரி டப்பாக்கள் ஃபின்லாந்தில் செய்யப்பட்டன, அங்கே புழக்கத்தில் இருந்தன. மற்றவர் கட்டங்கள் இட்ட மேல்கோட்டு அணிந்த பகட்டர்.

நீலக் கண்ணாடிக்காரர் ஏதோ சொன்னார். போலீஸ் உளவாளிகளின் காதில் அது தெளிவாகப் படவில்லை. உள வாளிகள் பதற்றம் கொண்டிருந்தார்கள்: அவர்கள் எவ னுக்காகக் காத்திருந்தார்களோ, அவனைக் காணவில்லை. இந்த நீலக் கண்ணாடிக்காரர் யார்? அவர்கள் எதிர்பார்த்த ஆள் இல்லைதான், ஆனாலும் சந்தேகப் புள்ளி. விட்டு விடக் கூடாது. உளவாளிகள் நீலக் கண்ணாடிக்காரரைப் பின் தொடர்ந்தார்கள்.

அதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டது. நீலக் கண்ணாடிக் காரர் பெட்டியையும் மஞ்சள் டப்பாவையும் பிடித்துக் கொண்டு படியில் தாவி ஏறினார். பகட்டர் பிளாட்பாரத் திலேயே தங்கிவிட்டார். அவர் வழியனுப்ப வந்திருந்தார் என்று தெரிந்தது.

''வரவில்லை பாரேன். இன்றைக்குப் பீட்டர்ஸ்பர்க் பயணமாவார் என்று தலைமை அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்திருந்ததே. வெறும் சரடு. இதோ அந்த ஆளின் படம். ரயில் நிலையத்தில் இந்த மாதிரி ஆளே தட்டுப்பட வில்லையே'' என்று வருத்தத்துடன் சொன்னான் ஒரு உள வாளி.

கோட்டுப் பையிலிருந்து ஒரு புகைப்படத்தை எடுத் தான் அவன். ஒரு சிறிது அகன்ற தாடையும் பிரமாண்ட

மான நெற்றியும் நன்கு வளைந்த புருவங்களும் கொண்ட முகம் புன்னகையுடன் கண்களைச் சுருித்தவாறு படத்திலிருந்து நோக்கியது.

''லெனின்-உல்யானவ். தொழிலாளர் எழுச்சியை நடத்துவதற்கு ஜெனீவாவிலிருந்து ருஷ்யா வந்திருக்கிறார். அவரைக் கட்டாயமாகப் பிடிக்கும்படி கட்டளை. நாளை மறுபடி வருவோம், வேவு பார்க்க'' என்று புகைப் படத்தைப் பைக்குள் வைத்துவிட்டுக் கூறினன் உளவாளி.

விரைவு ரயிலோ, காட்டமான புகைச் சுருள்களை மர முடிகள்மேல் சிதறியவாறு நட்சத்திரங்கள் சுடர்ந்த இரவின் ஊடே தடதடத்துச் சென்றது. அரவமற்ற அடர்ந்த காடு வெண்பனி நிறைந்து இருப்புப் பாதையின் இரு மருங்கிலும் நீண்டு பரந்திருந்தது.

ரயில் மிக வேகமாக விரைந்தது. எஞ்சினின் விழிகள் ஒளி வீசின. சக்கரங்கள் கடகடத்தன.

அதிகாலையில் பீட்டர்ஸ்பர்க் சேர்ந்த நீலக் கண்ணாடிக்காரர் வண்டி வைத்துக் கொண்டு வெகு சீக்கிரம் வீட்டை அடைந்தார். வீடு தலைநகரின் மையத்தில் இருந்தது. அது அவருடைய வீடுதானா? ஒரு சிறு அறை. இரும்புக் கட்டில். அதன்மேல் மெல்லிய கம்பளி விரிப்பு. ஜன்னல் அருகே பெயருக்கு ஒரு சிறு மேஜையும் நாற்காலியும். குடியில்லாத காலி வீடு.

அந்த மனிதர் கண்ணாடியைக் கழற்றிப் பெட்டியில் வைத்தார். மஞ்சள் டப்பாவிலிருந்து காகிதங்களை எடுத்துக் கொண்டு மேஜை அருகே அமர்ந்து எழுதத் தொடங்கினார்.

ஒரு மணி நேரத்திற்கெல்லாம் கதவின் மறுபுறம் ஏதோ கரகரத்தது. பூட்டு வெளியிலிருந்து திறக்கப்பட்டது. கதவு திறந்தது. குழல் கையுறையும் மென்மயிர்த் தோல் விளிம்பு கட்டிய தொப்பியும் அணிந்து அறைக்குள் வந்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

விளாதீமிர் இல்யீச் துள்ளி எழுந்தார்: ''நதேழ்தா, என் அன்பே!''

''ஒற்றர்கள் மாஸ்கோவில் உன்னைப் பிடிக்க வேட்டையாடினார்களா?'' என்று கலவரத்துடன் கேட்டாள் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

''கேட்கவும் வேண்டுமா?'' என்று புன்னகை செய்தார் விளாதீமிர் இல்யீச்.

தமது பதற்றத்தை மறைத்தவாறு பெட்டிச் சாமான்களைச் சரி பார்த்தார். நீல மூக்குக் கண்ணுடியா! எதற்கு?

''உருமறைப்பு! இந்த மூக்குக் கண்ணுடி இருந்ததால்தான் உளவாளி கனவான்கள் ஏமாந்தார்கள், நதேழ்தா!'' என்றூர் விளாதீமிர் இல்யீச்.

லெனினும் அவரது துணைவியாரும் ஜெனீவாவிலிருந்து சட்ட விரோதமாகத் தாய்நாடு திரும்பியிருந்தார்கள். பீட்டர்ஸ்பர்கில் அவர்கள் மாறு பெயர்களுடன் வெவ்வேறு இடங்களில் தனியாக வசித்தார்கள். இரகசியமாக ஒருவரை யொருவர் சந்தித்தார்கள். அவர்களது சந்திப்புக்கள் குறுகிய நேரமே நிகழ்ந்தன, அப்புறம் அவசரமாக அவர்கள் பிரிந்துவிடுவார்கள்.

இப்போது லெனின் மாஸ்கோ நிகழ்ச்சிகளை அவசர அவசரமாக விவரித்தார். அவற்றைப் பற்றித் தோழர்களுடன் விவாதிக்கவே அவர் மாஸ்கோ போயிருந்தார்.

இந்த நிகழ்ச்சிகள் அக்டோபர் மாதம் தொடங்கின. மாஸ்கோ ரெயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். மாஸ்கோத் தொழிற்சாலைகளும் அதில் சேர்ந்தன. மின்சார டிராம்களும் குதிரை டிராம் வண்டிகளும் நின்று விட்டன. மின்சார விளக்குகள் அவிந்துவிட்டன. தண்ணீர்க் குழாய்கள் மூடப்பட்டன. மாஸ்கோ தொழிலாளர்கள் அனைவரும் வேலையை நிறுத்திவிட்டார்கள். வேலை நிறுத்தம் மற்ற நகரங்களுக்குப் பரவியது. கிராமங்களையும் பாதித்தது.

புரட்சி நெருப்பை ஆரம்பத்திலேயே அணைத்து விடும் நோக்கத்துடன் ஜார் ஒரு பிரகடனம் விடுத்தான். தொழிலாளர்களுக்கு விடுதலை வழங்குவதாக அதில் உறுதி அளித்தான். ஆனல் இது முகந்துடைக்கும் சூழ்ச்சி. ஜாரை நம்பக்கூடாது என்று தொழிலாளர்கள் அறிந்திருந்தார்கள். பீட்டர்ஸ்பர்க் பனிக்கால மாளிகை அருகே ஜனவரி மாதம் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் தொழிலாளர்களுக்கு நினைவு இருந்தது.

1905ம் ஆண்டு டிசெம்பர் 7ந் தேதி பகல் 12 மணிக்கு மாஸ்கோவில் மீண்டும் வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்

டது. வேலைநிறுத்தக்காரர்களை அடக்குவதற்காக அரசாங்கம் துருப்புக்களை அனுப்பியது. அப்போது தொழிலாளர்களின் போராட்டக் குழுக்கள் செயலில் இறங்கின. வீதிகளிலும் சதுக்கங்களிலும் சாலைகளிலும் தடையரண்கள் எழும்பின.

வேலைநிறுத்தக்காரர்களின் பிரதானச் சக்திகள் பிரேஸ்னியா வட்டாரத்தைத் தலைமை இடமாகக் கொண்டிருந்தன. இது தொழிலாளர்கள் வட்டாரம். அங்கே ஆலைகளும் தொழிற்சாலைகளும் நிறைய. தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்து அமைக்கப்பட்டது. தொழிலாளர் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

ஜார் அரசாங்கமோ, காலாட் படைகளையும் குதிரைப் படைகளையும் பீரங்கிப் படைகளையும் கலாக் படைப்பிரிவுகளையும் மாஸ்கோவுக்கு அனுப்பி வைத்தது. ஜாரின் பீரங்கிகள் பிரேஸ்னியா வட்டாரத்தைக் குண்டுகளால் தாக்கின. தொழிலாளர்களின் மர வீடுகளும் பாரக்குகளும் நெருப்புப் பெட்டிகள்போல குப்பென்று மூண்டெரிந்தன.

சண்டை பத்து நாட்கள் நீடித்தது. தொழிலாளர்களும் போல்ஷிவிக்குகளும் வீரத்துடன் போர் புரிந்தார்கள். ஆயினும் ஜாரின் பீரங்கிகள் எழுச்சியைக் கொடூரமாக அடக்கி விட்டன.

தொழிலாளர்கள் ஆயுதப் போர் நடத்தியது அவசியந்தானு?

''இல்லை!'' என்றூர்கள் மென்ஷிவிக்குகள்.

''அவசியம் இல்லை'' என்று அழுத்திக் கூறினர் பிளெஹானவ்.

ருஷ்யாவில் புரட்சிப் போர்கள் புயல் வீசின. பிளெஹானவோ போல்ஷிவிக்குகளிடமிருந்து நாளுக்கு நாள் விலகிச் சென்றூர்.

''எழுச்சி பயனுள்ளதாய் இருந்தது. தொழிலாளர்கள் ஆயுதம் ஏந்திப் போராடியது தேவைப்பட்டது. தொழிலாளி வர்க்கம் அக்கினிப் பரீட்சையில் தேறி விட்டது'' என்று உறுதியாகச் சொன்னர் லெனின்.

இப்போது சின்னஞ்சிறு அறையில் உள்ளே தாழிட்டுக் கொண்டு அமர்ந்து இவற்றை எல்லாம் நதேழ்தா கன்

ஸ்தன்தீனவ்னுவுக்கு விவரித்தார் லெனின். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு கட்சியின் மத்தியக் கமிட்டிச் செயலாளர். இரகசியச் சந்திப்புக்கள், கட்சித் தொடர்புகள், போல்ஷிவிக் கூட்டங்கள் ஆகியவற்றுக்கு அவரே ஏற்பாடு செய்தார். லெனினின் மிக நெருங்கிய துணைவராக விளங்கினர்.

தங்கள் உற்ற தோழர் நிக்கலாய் பௌமனை லெனின் நினைவுகூர்ந்தார், ஆழ்ந்த துயரத்துடன் நினைவுகூர்ந்தார். பௌமன் லெனினுடன் சேர்ந்து இஸ்க்ரா பத்திரிகையை வெளியிட ஏற்பாடுகள் செய்தார். வெளிநாட்டிலிருந்து இஸ்க்ராவை ருஷ்யாவுக்கு அனுப்பி வைத்தார். அரசியல் போலீஸார் அவரைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள். அவர் தப்பி ஓடினர். அஞ்சாமல் கட்சிக்காக மறுபடியும் தொடர்ந்து வேலை செய்தார். மீண்டும் சிறையில் தள்ளப்பட்டார்.

1905ம் ஆண்டு அக்டோபர் மாதம் பௌமன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். சில நாட்களுக்குப் பின் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது, கூலிக்கு அமர்த்தப்பட்ட கொலையாளி ஒருவன் இரும்புக் குழாய்த் துண்டால் பௌமனைத் தாக்கிக் கொன்றுவிட்டான்.

போல்ஷிவிக், புரட்சிக்காரர், வீரர் பௌமனின் சவ ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கான மாஸ்கோத் தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். ஆண்மையாளர், அழகர், தூயவர் பௌமன்....

''இத்தகையவர்களாலேயே நமது கட்சி வலிமை பெற்றிருக்கிறது'' என்றார் லெனின்.

அவர் ஜன்னல் அருகே போனர். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு அவர் பக்கத்தில் நின்றார்.

''அதோ பார், விளாதீமிர்.''

ஜன்னலுக்கு எதிரே, வீதியின் மறுபுறம் நின்றான் ஒருவன். மென்மயிர்த்தோல் தொப்பியும் கறுப்பும் வெள்ளையுமான கழுத்துக் குட்டையும் அணிந்து, பார்வைக்குப் பண்பாளன் போலத் தோற்றம் அளித்தாலும் அவன் ஒரே இடத்தில் அசையாமல் நின்றது வியப்பு ஊட்டியது. இன்னொருவன் சிற்றடிகள் எடுத்துவைத்து நடைபாதையில் உலவிக் கொண்டிருந்தான்.

''இருப்பிடத்தை மாற்ற வேண்டும்'' என்ரூர் விளா தீமிர் இல்யீச்.

அப்போதுதான் எழுதி முடித்த கட்டுரையை மேஜை மேலிருந்து எடுத்து நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவிடம் கொடுத்தார். அவர் பேசாமல் அதை பிளவுஸுக்குள் செருகிக் கொண்டார். விளாதீமிர் இல்யீச் மஞ்சள் டப்பாவைக் கட்டிலுக்கு அடியில் தள்ளினர்.

''இங்கிருந்து பத்திரமாக வெளியேற முடிந்தால் தேவலே!'' என்று வருத்தம் பொங்கக் கூறினர் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

விளாதீமிர் இல்யீச்சை நினைத்து அவர் மனம் வேதனைப் பட்டது!

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு கணமும் ஆபத்து எதிர்ப்பட்ட வண்ணமாக இருந்தது. பிடித்துச் சிறையில் அடைத்துவிடுவார்கள். ஆயுள் கைதியாகச் சைபீரியாவுக்கு அனுப்பிவிடுவார்கள்.

ஆயினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா தம் மனப் பதைப்பைச் சொற்களில் வெளியிடவில்லை. தோழர்கள் ஓர் இடத்தில் விளாதீமிர் இல்யீச்சுக்காகக் காத்திருப்பதாக மட்டுமே கூறினர். அதற்காகவே தாம் விளாதீமிர் இல்யீச்சிடம் வந்ததாகவும், உடனே அங்கிருந்து போய் விட வேண்டுமென்றும் சொன்னர். ''இல்லாவிட்டால், எப்பேர்ப்பட்ட ஆசாமிகள் வேவு பார்க்க அனுப்பப்பட்டிருக்கிறார்கள் பார்'' என்ரூர்.

அவர்கள் கைகோத்தவாறு வீட்டிலிருந்து கிளம்பினர்கள். அவர்கள் இடது பக்கம் போக வேண்டியிருந்தது. அவர்களோ, நேர் எதிராக வலது பக்கம் நடந்தார்கள். விளாதீமிர் இல்யீச் கனிந்த பார்வையுடன் ஏதோ இசை நிகழ்ச்சி பற்றிப் பேசினர். இன்று இசை நிகழ்ச்சிக்குப் போனால் நன்ரூய் இருக்கும் என்ரூர். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா இசைவு தெரிவிக்கும் பாவனையில் தலை அசைத்தார். அதே சமயம் உளவாளிகள் என்ன செய்கிறார்கள் என்று ஓரக் கண்ணால் நோக்கினர். கறுப்பு வெள்ளைக் கழுத்துக் குட்டைக்காரன் முன் போலவே அசையாமல் நின்று கொண்டிருந்தான். மற்றவனோ பொறுமையற்ற சுபாவம் காரணமாக ஓடி வந்தான்.

விளாதீமிர் இல்யீச் ஒரு குதிரை வண்டியைக் கூவி நிறுத்தினர்.

வண்டி நின்றதும், உளவாளிகளுக்கு ஒரு சில அடிகள் தூரத்தில் விளாதீமிர் இல்யீச் தமது துணைவியை அதில் ஏற்றி விட்டுத் தாமும் ஏறி அமர்ந்தார்.

''ஸதோவயா!'' என்று வாயில் வந்த வீதிப் பெயரைச் சொன்னர். ''இந்த உலக்கைக் கொழுந்துகள் கடுங்குளிரில் விரைக்க வேண்டும், பனிப்புயலில் அகப்பட்டு உறைந்து போக வேண்டும் என்று விரும்புகிறேன்'' எனத் தணிந்த குரலில் ஜெர்மன் மொழியில் நதேழ்தா கன்ஸ் தன்தீனவ்னுவிடம் கூறினர்.

ஸதோவயா வீதி போய்ச் சேருமுன்பே அவர்கள் வண்டியை அனுப்பிவிட்டு, இடை வழியில் புகுந்துவிட்டார்கள். முன்பு பீட்டர்ஸ்பர்கில் வசித்த நாட்களில் விளாதீமிர் இல்யீச்சுக்கு நன்கு தெரிந்த இடம் அது. அவ்வழியே வஸீலியெவ்ஸ்கீ தீவுக்குப் போனர்கள். யாராவது பின்தொடர்ந்து வந்தால் தடங்களைக் குளறுபடி செய்ய வேண்டும், அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டுமே. கால் போன போக்கில் இருவரும் நடந்தார்கள். ஜனவரி மாதப் பகல் பீட்டர்ஸ்பர்கில் வழக்கமாக இருப்பதற்கு மாறுக, தெளிந்த வானமும் வெயிலொளியுமாகத் திகழ்ந்தது. எல்லாம் வெளேறென்று பளிச்சிட்டன. வெண்பனி மினுமினுத்தது. கடுங்குளிர் கன்னங்களை நிமிண்டியது.

''இந்தப் பனி வேண்மைக்கு நான் ஏங்கிப் போனேன்!'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினர் லெனின்.

''நம் பனிக்காலம். ருஷ்யாவின் பனிக்காலம்!'' என்று அவ்வாறே பரவசத்துடன் மொழிந்தார் நதேழ்தா கன்ஸ் தன்தீனவ்னு.

தற்செயலாகவாவது சிறிது நேரம் இருவரும் சேர்ந்து இருக்க முடிந்ததில் அவர்கள் ஆனந்தம் அடைந்தார்கள்.

மாலைத் தறுவாயில், உளவாளி எவனும் பதுங்கிப் பின் தொடரவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு குறிப்பிட்ட இடத்துக்கு நடந்தார் லெனின். பீட்டர்ஸ்பர்க் போல்ஷிவிக்குகளும்

முன்னணித் தொழிலாளர்களும் அங்கே கூடி, தோழர் லெனினது சொற்பொழிவைக் கேட்பதற்காகக் காத்திருந்தார்கள்.

மீண்டும் தாய்நாட்டுக்கு வெளியே

தொழிலாளர்கள், குடியானவர்களின் எழுச்சி நெருப்புக்கள் ருஷ்யா எங்கிலும் இரண்டு ஆண்டுகள் மூண்டு எரிந்தவண்ணமாய் இருந்தன. இரண்டு ஆண்டுக் காலம் ஜார் ஆட்சி அதிகாரிகள் ருஷ்யாவில் புரட்சியை அடக்கி ஒடுக்கினார்கள். தொடங்கியது பழி வாங்கும் படலம். கைதுகள். சைபீரியச் சிறைக் குடியிருப்புவாசத் தண்டனைகள். மரணதண்டனைகள், மரண தண்டனைகள்....

லெனின் பீட்டர்ஸ்பர்கிலிருந்து சிறிதே தொலைவில், ஃபின்லாந்தில் வசித்து வந்தார். புரோலித்தாரீ (பாட்டாளி) என்னும் சட்டவிரோதப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணி ஆற்றி வந்தார் அவர். இங்கிருந்தபடியே பீட்டர்ஸ்பர்க் போல்ஷிவிக் மையத்துடன் இடைவிடாத தொடர்பு கொண்டிருந்தார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன லெனின் ஒப்படைக்கும் கட்சிப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காகப் பீட்டர்ஸ்பர்க் சென்று வந்தார்.

ஒரு தடவை அவர் பீட்டர்ஸ்பர்கிலிருந்து மிகுந்த மனக்கலக்கத்துடன் திரும்பிவந்தார். ஜார் ஆட்சி அதிகாரிகள் லெனின் மீது கடும் சீற்றம் கொண்டுவிட்டார்கள். அரசியல் போலீஸ் நிலையங்கள் எல்லாவற்றுக்கும் பின்வரும் உத்தரவு அனுப்பப்பட்டது:

''போல்ஷிவிக்குகளின் தலைவர் லெனினைத் தேடிக் கண்டு பிடிக்கவும்!''

அந்தக் காலத்தில் ஃபின்லாந்து ருஷ்ய ஜாரின் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருந்தது.

லெனின் வெளிநாடு சென்றுவிட வேண்டும், புரோலித்தாரீ பத்திரிகையை வெளிநாட்டில் பதிப்பிக்க வேண்டும் என்று போல்ஷிவிக் மையம் முடிவு செய்தது.

''பிரிவு சொல்லிக் கொள்வோம், என் அன்பே, ஸ்வீடனில் சந்திப்போம்'' என்றார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா பிற்பாடு ஸ்வீடனின் தலைநகர் ஸ்டாக்ஹோம் செல்வதாக ஏற்பாடு. எனவே இப்போது லெனின் தனியாகவே புறப்பட்டார்.

1907ம் ஆண்டு டிசெம்பர் மாதம், ரயில் ஹெல்ஸிங்ஃபோர்ஸிலிருந்து ஃபின்லாந்தின் துறைமுக நகரம் அபோவுக்குச் சென்று கொண்டிருந்தது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த லெனின், நடைவழியில் ஓர் ஆள் நிற்பதைத் தம் அறையின் ஜன்னல் கண்ணாடி வழியே உடனே கவனிக்கவில்லை. தற்செயலாக அந்தப் பக்கம் பார்வை சென்றதுமே அவன் போலீஸ் உளவாளி என்பதைக் கண்டு கொண்டார். ஓ! இந்த உளவாளிகளைச் சட்டென்று அடையாளம் காண அவர் பழகியிருந்தார். அபோ ரயில் நிலையத்தில் அரசியல் போலீஸார் அவருக்காகக் காத்திருப்பார்கள், கட்டாயம். இரையைப் பிடிக்க ஆயத்தமாய் இருக்கும்படி உளவாளி அவர்களுக்குத் தந்திமூலம் தெரிவித்திருப்பான்.

நிலைமை மோசமாய் இருந்தது. அபோவுக்கு முந்திய கடைசி நிலையம் கடந்துவிட்டது. இனி அபோவில்தான் ரயில் நிற்கும். லெனினை அரசியல் போலீஸாரின் பிடியில் மாட்டி விட இட்டுச் சென்றது ரயில். லெனின் கண்ணாடிக் கதவைப் பார்த்தார். உளவாளி தென்படவில்லை. இரை கையில் பத்திரமாய் இருக்கிறது என்ற நம்பிக்கையில் அவன் தன் அறைக்கு ஓய்வுகொள்ளப் போய்விட்டான் போலும். மிக்க கேடான நிலைமை. இன்னும் ஒரு மணி நேரத்தில் லெனின் சிறைக்கு அனுப்பப்படுவார்.

அவர் எழுந்து நின்றார். அவரிடம் சிறு கைப்பெட்டியே இருந்தது. அதை எடுத்துக் கொண்டு இறங்கிடத்துக்கு நடந்தார் லெனின். வெளிக் கதவைத் திறந்தார். பனிக் காற்று முகத்தில் சுளீரென்று அடித்தது. ரயில்தான் எவ்வளவு வேகமாகப் போகிறது! பெட்டி ஆடியது நிலைத்து நிற்க முடியவில்லை. லெனின் சில நிமிடங்கள் காத்திருந்தார். குதிக்கத் தயங்கினார். சக்கரங்கள் கடக் கடக் கென விரைந்து இடிப்பதைக் கேட்டார். அவருக்குத்தான் பிரமை தட்டியதோ, அல்லது ரயில்தான் திருப்பத்தில் உண்மையாகவே வேகத்தைக் குறைத்ததோ தெரியாது. வேறு வழி மட்டும் இல்லை. லெனின் தாவிக் குதித்தார்.

கோட்டுக் காலருக்குப் பின்னும் பூட்சுகளுக்கு உள் ளேயும் வெண்பனி நிறைந்தது, முகத்தில் அப்பியது. ஆனல் எலும்புகள் சேதம் அடையவில்லே. அவர் பத்திர மாக, உயிரோடு இருந்தார்! ரயில் கடகடப்புடன் வெண் பனிக் குவியலேக் கடந்து ஓடியது. கடைசிப் பெட்டியின் பின் சிவப்பு விளக்கு மினுக்கிட்டு மறைந்தது. ஓசைகள் தொலேவில் சென்று அடங்கிப் போயின. நிசப்தம். வெண்பனி. இரவு. தாரகைகள் கணக்கின்றி நிறைந்த வானம்.

லெனின் வெண்பனிக் குவையிலிருந்து எழுந்து வெளி வந்தார். வெண்பனியைத் தட்டி உதறிப் போக்கிக் கொண்டார். அபோவின் திசையில் இருப்புப் பாதையை ஒட்டி நடக்கலானர். வெகு தூரம் போக வேண்டுமோ? பழக்கமற்ற பாதையில், பனிக்கால இரவில், பன்னிரண்டு கிலோமீட்டர்கள்—தூரந்தான்! ஆனலும் அரசியல் போலீ ஸாரிடமிருந்து தப்பியாகிவிட்டது. உளவாளியோ? அவரை வண்டி நெடுகிலும் பரபரப்புடன் தேடிவிட்டு மிரண்டு போன உளவாளி எப்படி வாய் அடைத்துப் போய்த் தத்தளிப்பான் என்று நினேத்துப்பார்த்துக் களுக்கென நகைத்தார் லெனின். ''இரையை நழுவவிட்டுவிட்டாயே, அப்பனே, இப்போது கிடைக்கும் உனக்குச் சரியான மண்டகப்படி!'' என்று எண்ணிக் கொண்டார்.

அவரைப் பொறுத்தவரை, இருப்புப் பாதையோர மாக நடந்து அபோவை அடைந்து ஸ்வீடன் நாட்டுக் கப்பலில் ஏறி விட்டால் போதும், ஆபத்து விலகி விடும்.

ஆனல் லெனின் அபோ சேருமுன்பே கப்பல் போய் விட்டது. ஆகவே ஆபத்து விலகவில்லே, அருகிலேயே இருந் தது. இடமும், வலமும், நாலா பக்கமும். துறைமுகத்தில் ருஷ்ய அரசியல் போலீஸாரும் உளவாளிகளும் மொய்த் திருந்தார்கள். அந்தப் பக்கம் தலே காட்டவே கூடாது. நகரத்தில் அரசியல் போலீஸார் நெரிந்தார்கள். ஒரு ஃபின்லாந்துத் தோழர் அப்படிச் சொன்னர். அபோவி லிருந்து ஸ்டாக்ஹோமுக்கு லெனின் அனுப்பி வைக்கும் பொறுப்பை போல்ஷிவிக் மையம் இந்தத் தோழரிடம் ஒப்படைத்திருந்தது.

அபோவிலிருந்து தாமதமின்றி வெளியேறிவிட வேண்டும்.

ஃபின்லாந்துத் தோழர் பாறைகள் செறிந்த கடற் கரையில் அமைந்திருந்த வலேஞர் குடியிருப்புக்கு லெனினை இட்டுச் சென்றார். அங்கே நூற்றுக்கணக்கான தீவுகளும் தீபகற்பங்களும் குறுங்குடாக்களும் விரிகுடாக்களும் இருந்தன. சிறியவையும் பெரியவையுமான தீவுகள் கடலுக்குள் நெடுந்தூரம் சென்றிருந்தன. அவை எல்லாமே பனிப்பாளத்தாலும் வெண்பனியாலும் போர்க்கப்பட்டிருந்தன.

லெனினை ஒரு தீவுக்கு வழிகாட்டி நடத்திச் செல்ல இரண்டு வலேஞர்கள் இசைந்தார்கள். ஸ்வீடன் நாட்டுக் கப்பல்கள் அந்தத் தீவின் அருகே சற்று நேரம் நிற்பது வழக்கம். பனிக்கட்டி உடைக்கும் கப்பல்கள் பனிப் பாளங்களைப் பிளந்து பயணக் கப்பல் செல்ல வழி ஏற்படுத்தும். இந்த நீர்வழி லெனின் போன தீவை ஒட்டியே சென்றது.

இருள் அடர்ந்த இரவு. லேசாக வெண்பனிப் புயல் அடித்துக் கொண்டிருந்தது. ஆட்கள் கண்களில் படக் கூடாது என்பதற்காக இருட்டியபின் புறப்பட்டார்கள். இல்லாவிட்டால் நிலையில்லாத பனிப்பாளத்தின் மேல் மூன்று பெயர் எதற்காக நடக்கிறார்கள் என்று ஜனங்கள் ஆச்சரியப்படக் கூடுமே. பனிப் பாளம் எங்கும் கெட்டியாக இல்லை. அதன் நடு நடுவே ஆபத்தான வெடிப்புக்கள் கண்டிருந்தன. சில இடங்களில் தண்ணீர் பொங்கி மேலே வந்தது. தாங்கள் கப்பலுக்கு அழைத்துச் செல்லும் ருஷ்யர் ஜாருக்கு எதிராகப் போராடுகிறார் என்பது வழிகாட்டி வலேஞர்களுக்குத் தெரியும். ஃபின்லாந்துக்காரர்கள் ஜாரை வெறுத்தார்கள். இந்த ருஷ்யர் ஜாருக்கு எதிரி என்றால் இவருக்காக அவசியமானதை எல்லாம் செய்ய அவர்கள் தயாராயிருந்தார்கள்.

நீண்ட கழிகளால் வழியைத் தட்டி நோட்டம் பார்த்தவாறு பேசாமல் நடந்தார்கள் பயணிகள். மெதுவாக, அடி மேல் அடி வைத்து நடந்தார்கள். வெண்பனி கூர் முள்ளாகக் கன்னங்களைத் துளைத்தது. வானம் மூட்டம் போட்டிருந்தது. காற்று வேகமாக வீசலாயிற்று. கடற்புற

மிருந்து சங்கொலிகள் கேட்டன. வெண்பனிப் புயலின் ஊடாக மங்கிய மூட்டத்தில் சென்று கொண்டிருந்தன கப்பல்கள்.

''பருவநிலை இவ்வளவு கெட்டிருக்கும் இரவில் எனக்கு வழிகாட்ட முன்வந்த வலேஞர்களுக்கு நன்றி பாராட்ட வேண்டும். நன்றி, தோழர்களே'' என்று மனதுக் குள் சொல்லிக் கொண்டார் லெனின்.

பருவநிலை மோசமாயிருந்த அந்த இரவில் நடப்பது எவ்வளவு ஆபத்தானது, அனேகமாக அசாத்தியமானது என்பது அவருக்குத் தெரியாது. கழியை ஊன்றி வழியை நோட்டம் கண்டவாறு, முன்னே சென்ற வலேஞர்களைப் பார்வையிலிருந்து தப்ப விட்டுவிடாதிருக்க முயன்றபடி நடந்தார் லெனின். திடீரென்று பனிப்பாளம் ஆடியது. துப்பாக்கி வெடி போன்று படீரென்ற சத்தம் உண்டா யிற்று. பனிப் பாளம் ஒரு புறம் சாய்ந்து காலடியிலிருந்து மெதுவாக வழுகத் தொடங்கிற்று. வெடிப்பிலிருந்து பொங்கி வந்தது தண்ணீர். லெனினது கழி ஆழம் பார்த் தது. அடித் தரை தட்டுப்படவே இல்லை.

இந்த விபத்திலிருந்து எப்படி விடுபட வாய்த்தது என்பது லெனினுக்குச் சரியாக நினைவில்லை. யாரோ கையை நீட்டினர். லெனின் அதைப் பற்றிக்கொண்டு தாவி னர்.

வழிகாட்டிகள் அவர் முதுகைத் தட்டிக் கொடுத்து ஃபின் மொழியிலும் பின்பு ஜெர்மானிய பாஷையிலும் சொன்னர்கள்:

''கெனெஸ்ஸை, கெனெஸ்ஸை... தோழரே.''

அவர்கள் ஆனந்தம் அடைந்தார்கள். மக்களின் விடுதலைக்காக ஜாரை எதிர்த்துக் போராடும் ருஷ்யத் தோழர் பனிப்பாளத்துக்கு அடியே மூழ்கிவிடவில்லை என்ப தால் அவர்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள்.

லெனின் தீவு போய்ச் சேர்ந்தார். ஸ்வீடன் நாட்டுக் கப்பல் அவரை ஏற்றிக் கொண்டு ஸ்டாக்ஹோம் நகர் சேர்த்தது. நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னுவுக்காக அங்கே காத்திருந்தார் லெனின்.

அவர் வந்ததும் இருவரும் மறுபடி ஜெனீவா சென் றார்கள். மீண்டும் தாய்நாட்டுக்கு வெளியே.

லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் புரட்சி கர ருஷ்யாவுக்குப் பின் ஜெனீவாவில் அடி வைத்த டிசெம்பர் நாளில் அந்த நகரம் அவர்களுக்குக் கவர்ச்சி அற்றதாகத் தோற்றம் அளித்தது.

குளிர்காலம், ஆனல் வெண்பனி இல்லே. கடுங் குளிர் காற்று மட்டுமே சுரீரென்று குத்தியது, நடைபாதையில் குளிர்ந்த புழுதியை வீசி அடித்தது.

ஜெனீவாவாசிகள் வீடுகளுக்குள் பதுங்கி இருந்தார் கள். வீதிகளில் ஆட்களேயே காணேம். ஜெனீவாவில் தனிமையும் தங்கிடம் இன்மையும் வாட்டின.

ஸ்டாக்ஹோமில் சந்திப்பு

1910ம் ஆண்டு நடந்து கொண்டிருந்தது. லெனின் மீண்டும் ஸ்வீடனின் தலேநகர் ஸ்டாக்ஹோமில் இருந்தார். ஆனல் இப்போது அவர் இங்கு வந்தது தனிப்பட்ட, முற்றிலும் பிரத்தியேகமான காரியத்துக்காக.

இலேயுதிர்கால வீதிகள் வழியே, உவகை பொங்க விரைவாக நடந்தார் லெனின்.

எங்கே போக இவ்வளவு துடிப்பு? ஸ்வீடனின் மக் கள் மாளிகையில் அவர் அன்று விரிவுரை ஆற்ற வேண்டி யிருந்தது. அதற்காகவே அவர் போய்க் கொண்டிருந்தார். பல்வேறு நகரங்களில், தொழிலாளர்கள், கட்சி உறுப்பி னர்கள் முன் லெனின் எத்தனேயோ முறை சொற்பொழிவு கள் ஆற்ற நேர்ந்தது. ஆயினும் இன்று அவர் இவ்வளவு குதூகலமாய் இருப்பதன் காரணம் என்ன? ஸ்வீடன்வாசி களின் வேற்று வாழ்க்கையைக் கவனித்தபடி சுற்று முற்றும் நட்பார்ந்த பார்வை செலுத்தியவாறு நடந்தார் அவர். சந்தடி அற்ற, துப்புரவும் ஒழுங்கும் நிறைந்த நகரம். வளேந்து வளேந்து சென்ற குறுகிய வீதிகள் கொண் டது. இவை எல்லாம் லெனினுக்கு வெகு காலமாகவே பழக்கமானவைதாம். இன்றே அவற்றைக் கண்டு அவர் புன்னகை புரிந்தார். பூ விற்பவளே வழியில் கண்டார். அந்த யுவதியின் காலருகே வைத்திருந்தன சிவப்பு, மஞ்சள், இளஞ்சிவப்பு ரோஜா மலர்க் கூடைகள்.

''தயை செய்து இந்தச் சிவப்பு ரோஜாக்களைக் கொடுங்கள். நன்றி'' என்று உரிய விலையைக் கொடுத்தார் லெனின்.

கட்சிக் கூட்டத்தில் விரிவுரை ஆற்றுவதற்கு மலர்க் கூடையும் கையுமாக நடந்தார்.

மக்கள் மாளிகை வந்துவிட்டது. சுய நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கு வந்திருந்த ருஷ்ய போல்ஷிவிக்குகள் அதன் ஓர் அறையில் அன்று குழுமியிருந்தார்கள்.

''லெனின்! லெனின்!'' என்று எல்லாரும் ஒரே குரலில் அவரை வரவேற்றார்கள்.

எல்லோரும் அவரைச் சூழ்ந்து நெருக்கினர்கள். அவருடன் கை குலுக்கினர்கள். அனைவருக்கும் லெனினைத் தெரிந்திருந்தது. புத்தகங்கள், கட்டுரைகள் வாயிலாக அவர்கள் அவரை அறிந்திருந்தார்கள். போல்ஷிவிக் செய்தித்தாள்கள்—தொடக்கத்தில் இஸ்க்ராவும் அப்புறம் **வ்பெரியோத், நோவயா ழீஸின்** *(புது வாழ்வு)* **புரோலித் தாரீ** *(பாட்டாளி)* ஆகிய பத்திரிகைகளும்—அவரைப் பிரபலப்படுத்தியிருந்தன. கட்சிக் காங்கிரஸ்கள் வாயிலாகவும் அவர் பிரசித்தி அடைந்திருந்தார்.

அந்தச் சிறு அறையின் உள்ளே தூரத்தில் அமர்ந்திருந்தார்கள் இரண்டு மாதர்கள். அவர்களில் ஒருத்தி தொண்டு கிழவி. கரிய உடையும், வெண்பனி போன்று கொல்லென்று நரைத்த கேசத்தின்மேல் லேஸ் வைத்த முக்காடும் அணிந்திருந்தாள். அவளுடைய முக வடிவமைப்பு திருத்தமாக இருந்தது. ''லெனின்!'' என்ற ஆரவாரம் எழுந்ததுமே அவள் முகத்தில் இளமைத் துடிதுடிப்பு காணப்பட்டது.

அவளுக்கு அருகில் இருந்தவள் கரு விழிகளும் சற்றே அகன்ற தாடையும் கண்டிப்பான தோற்றமும் கொண்ட யுவதி. லெனின் வந்ததுமே அவளும் மலர்ச்சி அடைந்தாள். லெனின் அவர்களை நெருங்கி, முதியவளின் மடி மீது ரோஜா மலர்களை வைத்தார்.

''அம்மாவும் தங்கையும் என்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்று சூழ நின்றவர்களுக்கு விளக்கினர் லெனின்.

''நீங்கள் வந்ததற்கு நன்றி. இம்மாதிரி மகனைப் பெற்றதற்கு நீங்கள் பெருமைப்படலாம்'' என்று ஒரு போல்ஷிவிக் தாயாரிடம் கூறினார்.

பிரசங்க மேடைக்குப் பதிலாகப் போடப்பட்டிருந்த சிறு மேஜை அருகே நின்றவாறு தமது விரிவுரையைத் தொடங்கினார் லெனின். அசாதாரணமான விரிவுரை. தாயார் புதல்வரின் உரையை அப்போதுதான் முதல் தடவை கேட்டார். லெனின் போல்ஷிவிக் தோழர்களுக்காகப் பேசினார். அதே சமயம் தாயாருக்காக, அருமை அம்மாவுக்காகவும் பேசினார். தாயார் தம் குழந்தைகளின் நண்பராக விளங்கினார். அவருடைய குழந்தைகளோ, எல்லோருமே புரட்சி வீரர்கள். அவர்களை அவர் சிறைகளில் சென்று காண்பார். பண்டங்கள் கொண்டு கொடுப்பார். 1895ல் விளாதீமிர் இல்யீச் சிறையில் அடைக்கப்பட்டதும் அன்னையார் பீட்டர்ஸ்பர்க் வந்தார். ''அம்மா, சிறைக் கம்பிகளின் ஊடாக நீ என்னைப் பார்த்தது எனக்கு நினைவு இருக்கிறது. உன் உதடுகள் நடுங்கின, நீயோ, புன்னகை செய்தாய்.''

கட்சியில் இருந்த நிலைமையை லெனின் தம் விரிவுரையில் விவரித்தார். தவறான போக்குகள் எல்லாவற்றையும் எதிர்த்துப் போராட வேண்டும் என்று கூறினார்.

1905ம் ஆண்டுப் புரட்சி தோல்வி அடைந்துவிட்டது. ஆனாலும் மனம் சோர்ந்துவிடக் கூடாது. துணிவுடன் முன்னே செல்ல வேண்டும். நமக்கு இருப்பது ஒரே வழி....

லெனின் குறிப்பிட்டது புரட்சிப் போராட்ட வழியை.

விரிவுரை முடிந்ததும் எல்லோரும் அவரை மறுபடி சூழ்ந்து கொண்டார்கள். லெனின் சிரமப்பட்டுத் திமிறிக் கொண்டு மக்கள் மாளிகையிலிருந்து வெளியே வந்தார்.

மாலைக் கருக்கல். ஆரஞ்சு, நீல மூடிகள் இட்ட விளக்குகளின் தண்ணொளி வீட்டு ஜன்னல்களிலிருந்து பெருகியது. துறைமுகத்திலிருந்து குளிர்ந்த கடற்காற்று வீசியது. எங்கோ இசை ஒலித்தது.

தாயாரும் மரீயாவும் வீதியில் விளாதீமிர் இல்யீச்சுக்காகக் காத்திருந்தார்கள்.

''அம்மா, நீ இங்கே வந்ததில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி, தெரியுமா?'' என்று பரவசத்துடன் கூறினர் விளாதீமிர் இல்யீச்.

அன்றையக் கூட்டம் பற்றித் தாயாரின் கருத்து என்ன என்று அறிய அவருக்கு ஆவல் உண்டாயிற்று. தமது குழந்தைப் பருவத்தையும் இன்பமான பிள்ளைப் பருவத்தில் தம்மை அரவணைத்த அன்னையையும் அவர் நினைவு கூர்ந்தார். தாயார் எப்போதுமே நிதானமாக இருப்பார். ஒருசீரான போக்கு அவருடையது. நியாயம் உள்ளவர் அவர். வாழ்நாள் முழுவதும் தாம் தாயாருடன் ஒத்த கருத்து கொள்ளாத ஒரு சந்தர்ப்பம்கூட விளாதீமிர் இல்யீச்சுக்கு நினைவு இல்லை.

''கேள், விளாதீமிர். நான் உன் புத்தகங்களையும் கட்டுரைகளையும் நிறையப் படித்தேன். உன் அறிவையும் குறிக்கோள்களையும் நான் வெகுவாக் மதிக்கிறேன். ஆனால் ஜனங்கள் உன்னை எவ்வளவு தீவிரமாக நேசிக்கிறார்கள் என்பதை இன்றுதான் கண்டேன்'' என்றார் அன்னையார்.

மரீயா அலெக்ஸாந்திரவ்னாவும் தங்கை மரீயாவும் ஸ்டாக்ஹோமில் பத்து நாட்கள் தங்கியிருந்தார்கள். அவர்களைச் சந்திப்பதற்காகவே விளாதீமிர் இல்யீச் பாரிஸிலிருந்து வந்திருந்தார். பத்து நாட்களும் எப்படி நொடியாய்க் கழிந்துவிட்டன!

ருஷ்யக் கப்பல் ஸ்டாக்ஹோமிலிருந்து காலையில் புறப்பட்டது. கூதிர்காலம் நகர்மீது மங்குல்போலக் கவிந்திருந்தது. வானில் அடர் மேகங்கள் சூழ்ந்திருந்தன. காற்று மரங்களின் இலைகளைப் பிய்த்து உதிர்த்தது. குடாவில் சீரற்ற சிற்றலைகளை எழுப்பியது அது. படகுகளின் அடிகள் நீரில் உரக்கச் சளப்பிட்டன. மனத்தில் சஞ்சலமும் ஏக்கமுமாக இருந்தது.

தாயார் மறுபடி மறுபடி மகனைத் தழுவி உச்சி மோந்து விட்டு நடைபாதை வழியே கப்பலை நோக்கி நடந்தார். லெனினின் இதயம் துயர்ப் பெருக்கால் வெடித்து விடும் போல இருந்தது. தாயார் மறுபடிமறுபடி திரும்பிப் பார்த்துக் கைக்குட்டையை ஆட்டினார். கப்பல் நெடு நேரம் நின்றது, ஆயினும் லெனின் அதில் ஏற முடியவில்லை. கப்பல் ருஷ்யப் பிரதேசமாகக் கருதப்பட்டது, அங்கு

ருஷ்யச் சட்டங்கள் நிலவின. லெனின் அதில் கால் வைக்க வேண்டியது தான் தாமதம், அவர் கைது செய்யப்பட்டு விடுவார்.

கப்பல் சங்கு கீழ் ஸ்தாயியில் ஒலித்தது. கடற் பறவை காதைத் துளைப்பது போலக் கீச்சிட்டது. கப்பல் நகர்ந்தது.

போய் வா, அம்மா!

அப்புறம் லெனின் தாயாரைப் பார்க்கவே இல்லை....

லோன்ழுமோ கிராமம்

பிரான்ஸில் ஆயிரமாயிரம் ருஷ்யப் புரட்சிக்காரர்கள் வசித்து வந்தார்கள். 1911ம் ஆண்டு வசந்தத்தில் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவும் லெனினும் லோன்ழுமோ என்னும் கிராமத்தில் கோடைகாலம் முழுவதையும் கழித்தார்கள்.

லோன்ழுமோ கிராமம் பாரிஸ் நகரிலிருந்து ஒரு பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. நீண்ட தெரு கிராமம் நெடுகிலும் சென்றிருந்தது. இரவு நேரத்தில் சுமை வண்டிச் சக்கரங்கள் வீதியில் கடகடக்கும். குடியானவர்கள் அவற்றில் உணவுப் பண்டங்களை ஏற்றிக் கொண்டு பாரிஸ் சந்தைக்குச் செல்வார்கள்.

கிராம வீடுகள் செங்கல் கட்டிடங்கள். உள்ளும் புறமும் புகை படிந்து கறுத்திருந்தன அவை. சிறு தோல் பதனிடும் தொழிற்சாலைப் புகைபோக்கியிலிருந்து வந்து படிந்தது புகைக்கரி. மரங்களின் இலைகளும் புற்களும்கூடப் புகைக்கரியேறி நிறம் மங்கியிருந்தன. சுற்றிலும் வயல்கள் பசேலென்று தளதளத்தது உண்மையே. ஆயினும் லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவும் இங்கே வந்தது ஓய்வு கொள்வதற்காக அல்ல, கடினமாக உழைக்கும் பொருட்டே.

அதிகாலை. விளாதீமிர் இல்யீச் விழித்துக் கொண்டார். ஒளி வீசும் அந்தக் கோடைகாலக் காலை நேரத்தில் கூட அறை இருட்டும் ஈரிப்புமாக இருந்தது. சூரியன் இன்னும் உதிக்கவில்லை என்று தோன்றும் அளவுக்கு அறை இருண்டு கிடந்தது.

அதற்குள் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ காலேயா காரம் எடுத்து வந்தார்.

''விழித்துக்கொண்டு விட்டீர்களா, கனம் தங்கிய சீமானே? நடத்தைக்குச் சுழிதான் உங்களுக்கு.''

தம்மையே இப்படிக் கடிந்து கொண்டு படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தார் லெனின். வீட்டு வேலேயில் ம்னேவிக்கு ஒத்தாசை செய்ய விரைந்தார்.

சர்க்கரைப் பாத்திரம் லெனின் கையிலிருந்து நழுவிற்று. லெனின் சாமர்த்தியமாக அதை விழாமல் பிடித்துக் கொண்டார்.

''சர்க்கஸ் வேலே எப்படி?'' என்ரூர்.

''சுமார்'' என்று பதில் அளித்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ.

அந்தக் கோடையில் பிரான்ஸில் வெக்கை சகிக்க வில்லே! காலே முதலே வெயில் இரக்கமின்றிக் கொளுத்தியது. சடை பிடித்த தெரு நாய் ஒன்று வீதியில் வேலி ஓரமாக நிழலில் படுத்திருந்தது. நாக்கைத் தொங்கவிட்டவாறு அடிக்கடி மூச்சுவிட்டது.

லெனின் நாயைத் தடவிக் கொடுத்தார். ''வெக்கையாய் இருக்கிறதோ நாயே?'' என்ரூர். ''வணக்கம்!'' என்று தோல் தொழிலாளனுக்கு முகமன் கூறினர்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. தொழிலாளன் இரத்த நாளங்கள் புடைத்த கைகளே முழங்கால்கள்மேல் வைத்தவாறு வேலி நிழலில் உட்கார்ந்திருந்தான். அவன் முகம் குறுகலாக, ஒட்டி உலர்ந்து இருந்தது. ஒரேயடியாகக் களேத்து நலிந்தவன் போலக் காணப்பட்டான்.

பளிச்சென வண்ணம் பூசிய வில் வண்டி வீதியில் சென்றது. அதன் லேஸ் வைத்த குடையின் நிழலில் குழந்தைகளுடன் வீற்றிருந்தாள் ஒரு சீமாட்டி. தொழிலாளன் சட்டென எழுந்து தாழக் குனிந்து வணங்கினன். சீமாட்டி தலே அசைத்தாள்.

''முதலாளியின் மனேவியார்'' என்று மரியாதையுடன் சொன்னன் தொழிலாளன்.

''கோடை விடுமுறையை இந்த மாதிரி ஆட்கள்தாம் நன்ரூக அனுபவிக்கிறூர்கள்'' என்று கிண்டலாகச் சொன்னர் லெனின்.

தொழிலாளன் சற்று நேரம் பேசாதிருந்தான். பின்பு பணிவுடன் சொன்னான்:

''பணக்காரர்களையும் ஏழைகளையும் ஆண்டவன் படைத்திருக்கிறான். ஆகவே இது முறையானதே.''

தெருவின் எதிர்ச் சரகில் கண்டாமணி அடிக்கத் தொடங்கியது. ஞாயிற்றுக் கிழமைப் பிரார்த்தனைக்காகக் கோயில் கதவுகள் திறந்தன. தொழிலாளன் சிலுவைக் குறி இட்டுக் கொண்டு கோயிலுக்குப் புறப்பட்டான்.

''உலகைப் படைத்தவன் ஆண்டவன். அதைக் குறை கூற நாம் யார்?'' என்று முணுமுணுத்தான்.

''ஐயா, நீங்கள் பள்ளிக்கூடம் போகிறீர்கள். விடுமுறை நாளில்கூட நீங்கள் பாடம் நடத்துகிறீர்கள். அப்படித்தானே?'' என்று லெனினிடம் கேட்டான் அண்டை வீட்டுப் பையன்.

லோன்மூமோ கிராம வீதியின் மறு கோடியில் இருந்தது லெனின் நடத்திய பள்ளி. அது அசாதாரணமானது. பார்ப்பதற்கும் அது பள்ளிக்கூடம் போல் இல்லை. முன் ஒரு காலத்தில் அது தபால் வண்டிப் பேட்டையாக இருந்தது. பேட்டையின் உட்புறம் விசாலமான சவுக்கை இருந்தது. பாரிஸ் போகும் வழியில் தபால் வண்டிகள் பேட்டையில் தங்கும். வண்டிக்காரர்கள் இளைப்பாறுவார்கள், புகை பிடிப்பார்கள். குதிரைகளுக்குத் தீவனம் வைப்பார்கள். ஆனால் இதெல்லாம் எந்தக் காலத்திலோ....

1911ம் ஆண்டு வசந்த காலத்தில் லெனின் இந்தச் சவுக்கையை வாடகைக்குப் பிடித்து அதில் பள்ளி தொடங்கினார். மாணவர்கள் குப்பை கூளங்களைச் சுரண்டி அகற்றினார்கள். பலகைகளை இணைத்து மேஜை தயாரித்தார்கள். அண்டை அயலாரிடமிருந்து நாற்காலிகள் கேட்டு வாங்கி வந்தார்கள். பள்ளி திறக்கப்பட்டது.

ருஷ்யத் தொழிலாளர்களே பள்ளி மாணவர்கள். ருஷ்யாவில் பல்வேறு நகரங்களிலிருந்து ஜாரின் அரசியல் போலீசாருக்குத் தெரியாமல் அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தினவ்னவும் இன்னும் சில தோழர்களும் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றினர்கள்.

லெனின் வகுப்புக்கு வந்தபோது மாணவர்கள் மேஜை அருகே உட்கார்ந்திருந்தார்கள். ஆசிரியர் வந்ததும் எல்லோரும் மரியாதையாக எழுந்து நின்றார்கள். வேடிக்கை என்னவென்றால் எல்லோரும் வெறுங்காலோடு இருந்தார்கள். லோன்ழுமோ கிராமத்தில் வெக்கை பொறுக்க முடியாமல் இருந்ததால் அவர்கள் செருப்புகள் போட்டுக் கொள்ளாமல் வந்திருந்தார்கள்.

அறிவு ஆர்வமும் திறமையும் உள்ள இளைஞர்கள் அவர்கள். லெனின் பாடம் நடத்தியதும் உரை ஆற்றியதும் அவர்களுக்குப் பிடித்திருந்தது.

''பணக்காரர்களையும் ஏழைகளையும் ஆண்டவன் படைத்திருக்கிறான். ஆகவே இது முறையானதே'' என்று எதிர்பாரா விதமாக அன்றையப் பாடத்தைத் தொடங்கினர் லெனின். தந்திரப் புன்னகை அவர் உதடுகளில் தவழ்ந்தது, கண்கள் நகைத்தன. எல்லோரும் வியப்புடன் மௌனமாக இருந்தார்கள்.

''இப்படி ஒரு பிரெஞ்சுத் தோல் தொழிலாளி என்னிடம் சொன்னான்'' என்று சிறு நிறுத்தத்துக்குப் பின் விளக்கினர் லெனின்.

மாணவர்கள் ஆர்ப்பரித்தார்கள்:

''ஓ! அப்படியா சேதி? யாரேனும் கோழைதான் இப்படிப் பிரசாரம் செய்திருப்பான்.''

''உங்கள் பிரெஞ்சுக்காரன் பின்தங்கிவிட்டவன், விளாதீமிர் இல்யீச்! அவனை நம் பள்ளிக்கு அழைத்து வாருங்கள், அவனுடைய மூளையைச் சரிப்படுத்துகிறோம்!''

ஒரு மாணவன் எழுந்திருந்தான்.

''நானும் தோல் தொழிலாளன்தான். ஆனால் கடவுளின் சட்டங்கள் நமக்கு ஒத்து வாரா என்று நினைக்கிறேன். பணக்காரர்களுக்குக் கல்தா கொடுத்துவிட்டுப் புதிய சமுதாயத்தை அமைக்க வேண்டும்'' என்றான்.

''சரியாகச் சொன்னாய்'' என்று எல்லோரும் ஆரவாரித்தார்கள்.

வகுப்பில் ஒரே இரைச்சல். ஆனால் லெனினுக்கு அது பிடித்திருந்தது.

''பணக்காரர்களும் ஏழைகளும் இருப்பது அவசியம் இல்லை என்கிறீர்கள், இல்லையா?'' என்று கேட்டார் அவர்.

இதிலிருந்து மெதுவாக அரசியல் பொருளியலைப் போதிக்கத் தொடங்கினர் லெனின். சமூக உற்பத்தியின் வளர்ச்சி பற்றிய விஞ்ஞானமே அரசியல் பொருளியல் என்பது.

லெனின் தொழிலாளர்களுக்கு மார்க்ஸீயத்தைப் போதித்தார். தொழிலாளி கல்வித் தேர்ச்சியும் அறிவும் முற்போக்கும் பெற்றிருக்க வேண்டும். அரசியலை அவன் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

''கடவுளே, கருணை காட்டு!'' என்று முணுமுணுக்கும், வேறு எதுவும் அறியாதிருக்கும் அந்தப் பிரெஞ்சுத் தோல் தொழிலாளன் போன்ற மனிதன் புரட்சியின் பொருட்டுப் போராடுவானு எங்காவது? இந்த மாதிரிப் பின்தங்கிய தொழிலாளர்கள் ருஷ்யாவிலும் நிறைய இருந்தார்கள். பின்தங்கி இருப்பது புரட்சிப் போராட்டத்துக்கு உதவாது.

''தொழிலாளர்கள் கற்க வேண்டும்'' என்றார் லெனின்.

அதற்காகவே அவர் லோன்ழுமோவில் பள்ளி தொடங்கியிருந்தார். மாணவர்கள் நான்கு மாதங்கள் அதில் பயின்று விட்டுத் தாய்நாடு திரும்பினர்கள். புரட்சி பற்றிய நம்பிக்கையையும் அறிவையும் ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்துக்கு அவர்கள் ஊட்டினர்கள்.

லோன்ழுமோ, மிகச் சாதாரணமான, பகட்டு அற்ற பிரெஞ்சுக் கிராமம். ஆயினும் லெனின் அங்கே முதலாவது கட்சிப் பள்ளியை நடத்திய காரணத்தால் இப்போது அது உலகப் புகழ் பெற்றுவிட்டது.

போர் எதிர்ப்புப் போர்

''அட என் அப்பனே! இம்மாதிரி விபத்திலிருந்து தப்பி வெளியேறிவிட்டோம் என்று நம்பவே முடியவில்லை!''

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு லெனினை நோக்கினர். அவர் சிறையில் இல்லை, தம்முடன், இங்கே இருக்கிறார்! உயிரோடு! ஆபத்து நீங்கிவிட்டது.

''கெட்ட கனவு. அதை மனத்திலிருந்து விரட்டிவிடு. சரத்கால பெர்ன் நகரத்தைக் கண்ணுரப் பார்!'' என்று கூறினர் லெனின்.

அவர்கள் சுவிட்ஸர்லாந்தின் தலைநகரம் பெர்னில் இருந்தார்கள். சுதந்திரமாக. சிறிது காலத்துக்கு முன்போ, லெனின் சிறைச்சாலையில் இருந்தார். பரோனின் என்னும் இடத்தில் இது நிகழ்ந்தது.

போலிஷ் சிற்றூரான பரோனின் அந்தக் காலத்தில் ஆஸ்திரியாவின் ஆட்சியில் இருந்தது. 1914ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதலாவது உலக யுத்தம் மூண்டது.

ஆயிரக்கணக்கான மாதர்கள்—ருஷ்ய, ஜெர்மானிய, பிரெஞ்சு, ஆங்கில, ஆஸ்திரிய, ஹங்கேரியப் பெண்டிர்—அழுது அரற்றியவாறு புதல்வர்களையும் கணவர்களையும் தழுவிக் கொண்டார்கள். ஒருக்கால் கடைசி முறையாக. ரியாஸான், தூலா, யாரஸ்லாவல் பிரதேசங்களிலிருந்து ஆட்களும் ஆயுதங்களும் ஏற்றிக் கொண்டு ருஷ்ய இருப்புப் பாதைகளில் ரயில் வண்டிகள் விரைந்தன.

போர் தொடங்கிய ஆரம்ப நாட்களிலேயே பரோனினில் இருந்த ஆஸ்திரிய அரசியல் போலீஸார் லெனினைக் கைது செய்து விட்டார்கள். அவரோ ருஷ்யர். ஓயாமல் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். ருஷ்யாவுக்கு ஏதோ அனுப்புகிறார். ஆகவே ஒற்றராக இருக்க வேண்டும். சான்றுகள்? சான்றுகளாவது ஒன்றாவது? அரசியல் போலீஸார் எப்போது முடிவு செய்துவிட்டார்களோ, அப்போது அவர் ஒற்றர்தான்.

இதற்கு மரண தண்டனை கிடைக்கும் அபாயம் இருந்தது. நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு அனுபவித்த கொடிய வேதனைக்கும் மனச் சோர்வுக்கும் எல்லை இல்லை. இரண்டு வாரங்கள் லெனினின் உயிர் மயிரிழையில் ஊசலாடியது. தோழர்கள் உதவிக்கு வந்தார்கள். லெனினுக்காகப் பாடுபட்டார்கள், போராடினார்கள். விரைவாக லெனின் சிறையிலிருந்து மீண்டார்.

தலைக்கு நாள்தான் அவர்கள் பரோனினிலிருந்து நடுநிலைமை நாடு சுவிட்ஸர்லாந்தின் தலைநகர் பெர்ன் வந்து சேர்ந்தார்கள். சுவிட்ஸர்லாந்து போரிடவில்லை. அங்கே

வழக்கமான வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. தாயார்கள் அழவில்லை, பயங்கரச் செய்தி கேட்டுக் கைகளை நெரிக்கவில்லை.

லெனினும் அவருடைய துணைவியாரும் அவசர அவசரமாகக் காலையாகாரம் சாப்பிட்டு, பாத்திரங்களைக் கழுவி வைத்துவிட்டு வெளியே புறப்பட்டார்கள். மணி ஒசை நகர் எங்கும் இனிமையாகப் பரவியது.

வழக்கம் போலவே பெர்ன் நகரிலும் லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் நகர்ப் புறத்தில் இருந்த குறுகிய சிறு தெருவில் குடிபுகுந்தார்கள். இந்தத் தெருவின் பெயர் டிஸ்டெல்வேக். முட்புதருக்குப் போகும் வழி என்பது இதன் பொருள். ஆடம்பரமான தெரு அல்ல என்பது புரிகிறது அல்லவா?

லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் ஒரு பத்து நிமிடம் தெரு வழியே நடந்தார்கள். அவ்வளவு தான், நகரம் முடிந்து காடு ஆரம்பித்துவிட்டது. செப்டெம்பர் மாதம் ஆகையால் இலைகள் பழுப்படைந்திருந்தன, ஆங்காங்கு பசிய இலைகளும் காணப்பட்டன. காடு நகரை ஒட்டி இருந்தது. காடு மலைகள் மேல் சென்றது. மலைகள் வர வர உயரமாகவும் கூர் முகடுகளுடனும் ஒன்றன் பின் ஒன்றுக வரிசையாகச் சென்றிருந்தன.

திடீரென்று லெனின் நின்றார்.

''இங்கேயா, நதேழ்தா?'' என்று அடையாளக் குறிகளைச் சுட்டிக் காட்டினார். அவற்றின்படி இந்த இடத்தில் ஒற்றையடிப் பாதையிலிருந்து அவர்கள் விலக வேண்டியிருந்தது. ஒரு கிடங்கைத் தாண்டி இருபது காலடிகள் மேலே போய், புதர்களைக் கைகளால் விலக்கியதும் திறப்பு வெளி தென்பட்டது. அங்கே சில மனிதர்கள் கோட்டுக்களையும் மழைக்கோட்டுக்களையும் தரையில் விரித்து அமர்ந்திருந்தார்கள்.

''வணக்கம், தோழர்களே!'' என்றார் லெனின்.

பின்னல் சுள்ளி சடசடத்தது. பைன் மரக் கிளைகள் அசைந்தன. ஒரு தலை அவற்றின் இடையே துருத்தியது. காட்டின் உள்ளிருந்து இன்னொரு மனிதர் வெளிவந்தார். விருந்துலாவுக்குப் போகும் பெர்ன்வாசிகள் சிற்றுண்டி எடுத்துச் செல்லும் கூடை அவர் கையில் இருந்தது.

தலைக்கு நாள் பெர்ன் நகர் சேர்ந்ததுமே லெனின் ருஷ்ய போல்ஷிவிக் ஒருவருக்கு செய்தி அறிவித்தார். அவர் இன்னொருவருக்குச் சொன்னார்—இப்படி ஒரே மாலையில் தகவல் பரவிவிட்டது:

''தோழர்களே, நாளைக் காலை பெர்ன் காட்டில் கூடுவோம்.''

போல்ஷிவிக்குகள் சரியாகக் குறித்த நேரத்தில் குழுமினர்கள். லெனின் சொல்லப் போவதைக் கேட்க எல்லோரும் ஆவலாக இருந்தார்கள்.

லெனின் சொன்னார்:

''ருஷ்ய மக்கள் மீதும் மற்ற நாடுகளின் மக்கள் மீதும் யுத்தம் என்ற திகீர் விபத்து சுமந்திருக்கிறது. யுத்தத்தால் யாருக்கு லாபம்? முதலாளிகளுக்கு மட்டுமே. போரில் கோடி கோடியாகப் பணம் குவிப்பார்கள் முதலாளிகள். மேலும் மேலும் லாபம் பெறும் நோக்கத்துடன் அவர்கள் புதிய புதிய நாடுகளைக் கைப்பற்றிக் கொள்ளப் போட்டியிடுகிறார்கள். படைவீரர்களையும் தொழிலாளர்களையுமோ, 'தாய்நாட்டைக் காக்கப் போரிடுங்கள்' என்று கூறி ஏமாற்றுகிறார்கள். உண்மையில் இது தாய்நாட்டைக் காப்பது அல்ல, முதலாளிகளின் லாபங்களைக் காப்பதே ஆகும். படைவீரர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் நாம் பின்வருமாறு எடுத்துக் கூற வேண்டும்: 'உங்கள் கைகளில் ஆயுதங்கள் கிடைத்திருக்கின்றன. 'எல்லா நாடுகளையும் சேர்ந்த படைவீரர்களே, பாட்டாளிகளே, ஆயுதங்களை உங்கள் அரசர்களுக்கும் முதலாளிகளுக்கும் எதிராகத் திருப்புங்கள். புரட்சி செய்யுங்கள். நியாயம் அற்ற போர் ஒழிக! போர் எதிர்ப்புப் போர் நடத்துவோம்!''

பெர்ன் காட்டில் லெனின் பேசியது இதுவே. இவ் விஷயம்பற்றி அவர் கட்டுரைகளும் குறிப்புக்களும் எழுதினர். அவற்றை ருஷ்யாவுக்கு, போல்ஷிவிக்குகளிடம் அனுப்பினர்.

போல்ஷிவிக்குகள் போர்முனையில் படைவீரர்களிடையிலும் தொழிலாளர்களிடையிலும் அவற்றை இரகசியமாகப் பரப்பினர்கள். போர் எதிர்ப்புப் போர்.

படைவீரர்கள் அவற்றைப் படித்துப் பின்வருமாறு சிந்தித்தார்கள்:

''இந்தத் துப்பாக்கிகளால் நமது தொழிற்சாலை முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் சுட்டுத் தீர்த்தால் என்ன? ஜாரை ஒழித்தால் என்ன? அப்போது புது விதமாக வாழலாமே.''

முடிவாகத் தாய்நாட்டுக்கு

பெர்ன் நகரில் லெனின் ஏகாதிபத்தியத்தைப் பற்றி ஒரு நூல் எழுதினார். வலிந்து நாடுகள் பிடிக்கும் போர்கள் இல்லாமல் முதலாளிகளால் வாழ முடியாது. அவர்கள் பிற நாடுகளைக் கைப்பற்றுகிறார்கள். அவற்றைக் காலனிகள் ஆக்குகிறார்கள். மற்றவர்களைச் சூறையாடி மேலும் மேலும் செல்வம் திரட்டுகிறார்கள். இப்போது அவர்களால் இந்தப் போக்கை நிறுத்த முடியாது. உலகம் முழுவதையும் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள அவர்கள் போட்டி போடுகிறார்கள். மற்றவர்களைவிடப் பெரிய பங்கைத் தனக்கு எடுத்துக்கொள்ள ஒவ்வொரு முதலாளியும் துடிக்கிறான். காலம் செல்லச் செல்ல இம்மாதிரி நாடு கைப்பற்றும் போர்களும் அதிகரிக்கும். அவ்வளவுக்கு அவ்வளவு ஏகாதிபத்திய ஆட்சியில் மக்களின் நிலைமை மோசமாகும். ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் வலிமையும் அறிவும் வளர்கின்றன. சோஷலிஸப் புரட்சிக்கு உரிய நேரம் நெருங்குகிறது—இவ்வாறு தம் நூலில் விவரித்தார் லெனின்.

இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு வாழ்க்கை முழுவதையும், வரலாறு முழுவதையும் அறிந்திருக்க வேண்டும். இதற்காக லெனின் ஏராளமாகப் படிக்க வேண்டியிருந்தது.


நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னுவுடன் அவர் ஜூரிக் நகர் சென்றார். அங்கே ஓரிரு வாரங்கள் தங்கலாம் என்று நினைத்தார்கள். ஆனால் முழுதாக ஓர் ஆண்டு ஜூரிக்கில் வசிக்கவேண்டியது ஆகிவிட்டது. வேலை காரணமாக லெனின் ஜூரிக்கில் தங்கினார். அவருடைய ஆராய்ச்சிக்குத்



மரீயா அலெக்ஸாந்திரவ்ன உல்யானவா. 1914



இத்தாலிய தீவு காப்ரீயில், 1908 ஏப்ரலில் மக்ஸீம் கோர்க்கீயின் விருந்தினராக வி. இ. லெனின்



வி. இ. லெனின் ஸக்கப்பான் நகர்ப் புறத்தில் உலாவுகிறார். போலந்து, 1914 கோடை காலம்



வி. இ. லெனின் சுவிட்ஸர்லாந்திலிருந்து ருஷ்யா செல்லும் வழியில் ஸ்டாக்ஹோம் நகரில். உடன் இருப்பவர்கள் அரசியல் காரணங்களுக்காக நாடுகடந்த ருஷ்யர்கள். ஸ்வீடன், 1917 மார்ச் 31




வி. இ. லெனின் தவ்ரீதா அரண்மனையில் உரையாற்றுகிறார். பெத்ரோகிராத், 1917 ஏப்ரல்



யாக்கவ் மிஹாய்லவிச் ஸ்வெர்திலோவ். 1918

மாறுவேடமும்
பொய் முடியும்
அணிந்த
வி. இ. லெனின்.
ரஸ்லீவ் ரயில்
நிலையம்.
1917 ஆகஸ்டு




ரஸ்லீவ் ரயில் நிலையம். 1917 ஜூலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு வி. இ. லெனின் ஒளிந்து கொண்ட குடிசை





பனிக்கால அரண்மனை மீது தாக்குதல். திரைப்படக் காட்சி

போர்க் கப்பல் ''அரோரா''



தேவையான நூல்கள் ஜூரிக் நூலகத்தில் ஏராளமாக இருந்தன. நகரமும் மோசமில்லை. பெரியது, கலகலப்பானது. அங்கே தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும் நிறைய.

லெனின் காலை முதல் இருட்டும்வரை நூலகத்திலேயே ஆராய்ச்சியில் ஆழ்ந்திருப்பார். இடையில் வீட்டுக்கு வந்து அவசர அவசரமாக மதியச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மறுபடி நூலகம் சென்றுவிடுவார்.

செஸ்ட்நட் மரங்கள் அடர்ந்த குறுகிய நடைபாதை நூலகத்துக்கு இட்டுச் சென்றது. வழியில் கூட கோபுரம் உள்ள நகர மன்றமும் தொன்மைக்காலச் சர்ச்சும் பழங்கால வீடுகளும் இருந்தன. இந்தப் பாதையில் ஓர் ஆண்டு முழுவதும் நாள்தோறும் நான்கு தடவைகள் நடந்தார் லெனின்.

வனப்பு வாய்ந்த ஜூரிக் ஏரி அருகாமையிலேயே இருந்தது. அது அடிக்கடி மாறும் தன்மை உள்ளது. சில வேளைகளில் அலைகள் சீற்றத்துடன் கொந்தளிக்கும், ஏரி இடிமுழக்கத்துடன் கரையோரச் சாலையில் வீசி அடிக்கும். அப்போது கிட்டே நெருங்க முடியாது. கொந்தளிப்பு அடங்கி, நீல எழிலுடன் வெயிலில் ஒளிரும்போது அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம், அதிலிருந்து பார்வையை அகற்ற மனம் வராது. சுவிட்ஸர்லாந்து இயற்கை வனப்பு லெனினுக்குப் பரவசம் அளிக்கும். ஆயினும் தாய்நாட்டுக்காக அவர் ஏங்கினர். ருஷ்யாவைப் பிரிந்த ஏக்கம் அவரை வரவர அதிகமாக வாட்டியது.

ஒரு நாள் மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு லெனின் வழக்கம் போல நூலகத்துக்குப் புறப்பட்டார். அதற்குள் வாயிற் கதவை யாரோ தடதடவென்று தட்டினர்கள். உள்ளே வந்தார் அறிமுகமான ருஷ்யர். வரவில்லை, பாய்ந்தார்.

''கேள்விப்பட்டீர்களா? இல்லையா? கேள்விப்படவில்லையா? ருஷ்யாவில் புரட்சி.''

லெனின் தொப்பியை எடுத்துக் கொண்டார். நதேழ்தா கன்ஸ்தன்தினவ்ன போகிற போக்கில் மேல்கோட்டைப் போட்டுக் கொண்டார். ஏரிக் கரைக்கு ஓடினர்கள். ஏரியோ வெயிலில் வெள்ளியாய்த் தகதகத்தது. வெள்ளை

அன்னங்கள் பெருமிதத்துடன் கழுத்துக்களை நிமிர்த்திய வாறு ஏரியில் ஒய்யாரமாக நீந்தின.

லெனின் அலங்காரப் பந்தலுக்கு ஓடிச் சென்றார். ஏரிக் கரைப் பந்தலில் அன்றையச் செய்தித்தாள்கள் தொங்க விடப்படுவது வழக்கம்.

லெனின் பத்திரிகைச் செய்திகளை ஆர்வத்துடன் படித்தார். 1917ம் ஆண்டு. பிப்ரவரி மாதம். ருஷ்யாவில் புரட்சி.

''அப்பா, கடைசியில் ஒரு விதமாக!'' என்று மகிழ்ந் தார் லெனின்.

ருஷ்யாவுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண் டிருந்தார். நாளுக்கு நாள் தீவிரமாகி வந்த புரட்சிப் போராட்டத்தை வழிகாட்டி நடத்தினர். புரட்சி நெருங்கி விட்டது என அறிந்திருந்தார். ஆயினும் தாய்நாட்டி லிருந்து வந்த செய்தி அவருக்கு மட்டுமீறிய கிளர்ச்சி ஊட்டியது.

தாய்நாட்டில் மாபெரும் நிகழ்ச்சி நடந்து கொண் டிருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. தாய்நாட்டுக்குத் திரும்ப வேண்டும், விரைவில்! இங்கே மேலும் தாம திப்பது கூடாது, கூடவே கூடாது. உடனே ருஷ்யாவுக்குப் போய்விட வேண்டும். அங்கே இப்போது நிறைவேறிக் கொண்டிருந்த காரியத்துக்காகத்தானே அவர் தம் வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்திருந்தார்! தமது உழைப் பை எல்லாம் நல்கியிருந்தார்! ஆனால் போவது எப்படி?

லெனின் நிம்மதி இழந்தார். உறக்கம் பிடிக்கவில்லை அவருக்கு. மெலிந்து போனார்.

சுவிட்ஸர்லாந்துத் தோழர்கள் வெகுவாகப் பாடு பட்டு முயன்று, ருஷ்யப் புரட்சிக்காரர்களுக்குத் தாய்நாடு திரும்ப அனுமதி பெற்றுவிட்டார்கள். எவ்வளவோ தொல்லைகளுக்கும் கலவரத்துக்கும் பின் கடைசியில் அனுமதிச் சீட்டு கைக்கு வந்து சேர்ந்துவிட்டது.

ரயில் புறப்பட இரண்டு மணி நேரமே பாக்கி இருந் தது. அதிகப்படியாக ஒரு நிமிடங்கூட வேற்று நாட்டில் வசிக்க லெனின் விரும்பவில்லை. இரண்டு மணி நேரத்தில் தயாராக முடியுமா? சாமான்களைக் கட்ட வேண்டும், நூல கத்துக்குப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்,

வீட்டு வாடகையைக் கொடுக்க வேண்டும். விரைவாக, விரைவாக. நேரத்தில் எல்லா வேலைகளும் முடிந்து விட்டன. இரண்டு மணி கழிந்ததும் ஜூரிக்கிலிருந்து பெர்ன் நகர் சென்றார்கள். அங்கிருந்து தாய்நாட்டுக்கு. நாடுகடந்த முப்பது ருஷ்யர்கள் லெனினுடன் ருஷ்யா திரும்பினர்கள்.

''உங்கள் அன்புக்கும் அடைக்கலத்துக்கும் நன்றி!'' என்று எழுதிய கடிதத்தை லெனின் சுவிட்ஸர்லாந்துத் தோழர்களுக்கு அனுப்பினர்.

ரயில் சென்றது. சக்கரங்கள் கடகடத்தன. சுவிட் ஸர்லாந்தின் கண்ணைப் பறிக்கும் ஏரிகளும் மாண்பு திகழும் மலைகளும் அருகாக விரைந்து சென்றன.

ஜெர்மனியைக் கடந்ததும் கொந்தளிக்கும் பால்டிக் கடல் கண் முன்னே காட்சி தந்தது. சுரங்க வெடிகள் பரப்பி யிருந்த பால்டிக் கடல் வழியே சரக்குக் கப்பலில் ஸ்வீடன் போய்ச் சேர்ந்தார்கள், அங்கிருந்து ஃபின்லாந்துக்கு. மிக மிக நீண்ட, ஆபத்தான பயணம். இதோ வந்துவிடும் பெத்ரோகிராத் நகரம்!*

மெல்லிய அடிமரங்கள் கொண்ட தேவதாருக்களும் ஃபிர் விருட்சங்களும் இருந்த வளர்த்தி குறைந்த சோலை ஜன்னல் வழியே தென்பட்டது. இன்னும் உருகாத வெண் பனி வெளேறெனப் பளிச்சிட்டது. முற்ரு நிலக்கரிச் சதுப்பு நிலங்கள் கருங்குட்டங்கள் போலப் பெருகி வழிந் தன. அவற்றின் இடையிடையே பாசி படர்ந்த திட்டுக்கள் எழும்பி நின்றன.

''நாம் பெத்ரோகிராத் போய்ச் சேரும்போது பாதி ராத்திரி ஆகியிருக்கும். எல்லோரும் உறங்கிக் கொண் டிருப்பார்கள்'' என்ரூர் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு.

கற்கட்டிடங்களின் உயர்ந்த வரிசைகள் தெரு விளக்குகளின் மங்கிய வெளிச்சத்தில் அரைகுறையாகப் புலப்பட்டன. கிட்டங்கிகள், டெப்போக்கள்.... ரயிலின் வேகம் மட்டுப்பட்டது, அது நிலையத்தை நெருங்கி

---

* பீட்டர்ஸ்பர்க் என்பது ஜெர்மானியப் பெயர். முதல் உலக யுத்தம் தொடங்கியதும் ஜெர்மானியர் மேல் ஏற்பட்ட பகைமை காரணமாக இந்தப் பெயர் பெத்ரோ கிராத் என்று மாற்றப்பட்டது.—மொ-ர்.

யது. எஞ்சினின் உரத்த ஊதல் இரவு நிசப்தத்தைக் குலைத்தது. ரயில் பிளாட்பாரத்தை அடைந்தது. எஞ்சின் உரக்கச் சீறியது.... ஆனல் இது என்ன? இசையொலி. பிளாட்பாரத்தில் ''மர்ஸேல்ஸ்'' என்னும் பிரெஞ்சுப் புரட்சிக் கீதத்தை பாண்டு வாத்தியக் குழு இசைத்தது.

''மரியாதை அணிவகுக்க!''

பிளாட்பாரத்தில் கூட்டம் நெரிந்தது. தொழிலாளர்கள். செங்காவற் படையினர். குரொன்ஷ்தாத் கடற்படை மாலுமிகள்.

''மரியாதை அணிவகுக்க!''

எல்லோரும் அசையாமல் நின்றூர்கள். சந்தடி அடங்கி விட்டது. செங்காவற் படையினரும் மாலுமிகளும் மரியாதை அணிவகுத்து நின்றூர்கள்.

லெனின் ரயில் பெட்டியின் வெளி மேடைக்கு வந்தார். மலேத்துப் போனூர்.

''தோழர்களே!...''

''லெனின் நீடுழி வாழ்க! போர் ஒழிக! புரட்சி நீடுழி வாழ்க!'' என்று கூட்டம் பதிலுக்கு ஆர்ப்பரித்தது.

ரயில் நிலேயத்துக்கு வெளியே ஆயிரமாயிரம் குரல்கள் இந்தக் கோஷங்களே முழங்கின. சதுக்கம் மக்கள் கடலாக அலே மோதியது. பெருக்கொளி விளக்குகளின் வெளிச்சத்தில் தீ நாக்குகள் போலத் தழல் வீசின செங்கொடிகள்.

ரயில் நிலேயத்தின் அருகே கவச மோட்டார் நின்றது. அதன் பீரங்கி மேடை அசையாதிருந்தது, மெஷீன் கன்கள் வாளாவிருந்தன. கவச மோட்டாரும் கட்சி, தொழிலாளி வர்க்கத் தலேவரை வரவேற்றது. தொழிலாளர்களும் படை வீரர்களும் லெனினேக் கவச மோட்டார் மேல் ஏற்றிவிட்டார்கள். கைகள் நட்புடன் அவர் பக்கம் நீட்டப்பட்டன. கண்கள் புன்னகைத்தன.

அவர்கள் எல்லோரையும்—போராலும் சீரழிவாலும் துன்புற்று நலிந்த அன்புக்குரிய தொழிலாளி மக்கள் அனேவரையும்—தழுவிக் கொள்ள லெனினுக்கு ஆசை உண்டாயிற்று. அவர் சொன்னர்:

''தோழர்களே! நீங்கள் புரட்சி செய்து ஜாரை அகற்றி விட்டீர்கள். ஆனல் ஆட்சி அதிகாரத்தை முதலாளி

கள் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்மை ஆள விரும்புகிறார்கள். நமக்கோ உழைப்பாளிகளின் ஆட்சி வேண்டும். எட்டு மணி நேர வேலை நாள் நமக்கு வேண்டும். நிலம் குடியானவர்களுக்கு. உணவு பசித்தவர்களுக்கு. சமாதானம் மக்களுக்கு. நமக்கு வேண்டியது சோஷலிஸப் புரட்சி!''

''ஹுர்ரா! லெனின் நீடூழி வாழ்க!'' என்று முழங்கியது சதுக்கம்.

இரவு அல்ல, களி நிறைந்த வசந்தகாலப் பகல் போல் இருந்தது கோலாகலம்.

கவச மோட்டார் புறப்பட்டது. வெற்றிப் பெருமிதத்துடன் நகர்ந்தது கவச மோட்டார். லெனின் முடிவாகத் தாய்நாடு திரும்பிவிட்டார்.

அன்னையின் சமாதி முன்

லெனின் தலையணையிலிருந்து தலையை நிமிர்த்தினார். வெளிர் நிறச் சுவர்க் காகிதங்கள் ஒட்டிய, ஆடம்பரம் அற்ற சிறு அறை. சிறிய எழுது மேஜை. அதன் மேல் செய்தித்தாள்கள். ஜன்னல் குறட்டின்மேல் பூத்தொட்டி. மூலையில் பூவேலை செய்த சிவப்புப் பட்டு உறை மூடிய நாற்காலி.

''நான் எங்கு இருக்கிறேன்? கனவு காண்கிறேனா?''

இல்லை, லெனின் கனவு காணவில்லை. அக்காள் ஆன்னா இல்யீனிச்னா, அவளுடைய கணவர் மார்க் திமஃபேயெவிச் யெலிஸாரவ் இருவரதும் வீட்டில் இருந்தார் அவர்.

முந்திய நாள் நிகழ்ச்சிகள் சட்டென்று நினைவுக்கு வந்தன. இன்பமும் வியப்பூட்டும் சந்திப்புக்களும் நிறைந்த நாள்! கவச மோட்டார் லெனினை ரயில் நிலையத்திலிருந்து நர்த்தகி கிஷெஸின்ஸ்கயாவின் முன்னாள் மாளிகைக்குக் கொண்டு வந்தது. இப்போது அந்த மாளிகையில் போல்ஷிவிக் கட்சியின் மையக் கமிட்டி, நகர்க் கமிட்டி ஆகியவற்றின் அலுவலகங்கள் இருந்தன.

கவச மோட்டார் மெதுவாக நகர்ந்தது.

நள்ளிரவு கடந்துவிட்டது. ஆனாலும் பல வீடுகளில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வீதிகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள்.

''லெனின்!'' என்று ஆரவாரித்தார்கள் மக்கள்.

வழியில் கவச மோட்டார் அடிக்கடி நின்றது. லெனின் எளிமையாக, தெளிவாகப் பேச முயன்றார். அவர் உள்ளம் ஒளி வீசும் சொற்களால் நிறைந்திருந்தது. சோஷலிஸப் புரட்சி பற்றி, மக்களுக்கே உரிய புரட்சி பற்றி அவர் பேசினார்.

கிஷெஸின்ஸ்கயாவின் மாளிகை நெவா ஆற்றிக்கும் பியோத்தர்-பாவெல் கோட்டைக்கும் அருகிலேயே இருந்தது. நூற்றுக் கணக்கான ஆட்கள் மாளிகையைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''லெனின் வெளியே வரட்டும்! லெனின் பேசட்டும்!''

லெனின் அனேக முறை முன் மாடத்துக்கு வந்தார். இரவு வேளையாக இல்லாவிட்டால் பியோத்தர்-பாவெல் கோட்டையின் கூர்ங்கோபுரமும் கடக்க முடியாத பருத்த மதிற்சுவர்களும் தென்பட்டிருக்கும். ஈரித்துப் பனிக்கட்டியாய்க் குளிர்ந்த கிணறு போன்ற அதன் அறைகளில் எத்தனையோ சிறந்த, அறிவு சுடர்ந்த மனிதர்கள் அடைபட்டு மடிந்திருந்தார்கள். பாழும் கோட்டையே, இனி உன்னிடம் எங்களுக்குப் பயம் இல்லை. அச்சுறுத்தாதே, மிரட்டாதே.

''போனது திரும்பி வராது. முன்னே செல்லுங்கள், தோழர்களே! சோஷலிஸப் புரட்சி நீடூழி வாழ்க!'' என்றார் லெனின்.

பெத்ரோகிராத் முழுவதிலுமிருந்து போல்ஷிவிக்குகள் திரண்டு வந்து மாளிகையில் குழுமியிருந்தார்கள். அவர்கள் போகவில்லை. லெனினையும் போக விடவில்லை.

காலை ஐந்து மணிக்குத்தான் லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் வீடு போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் களைத்திருந்தார்கள், ஆனாலும் அவர்களுடைய உள்ளம் களி துள்ளியது. கடைசியில் தாய்நாட்டுக்கு வந்தாயிற்றே. எத்தனை துன்பங்கள் பட நேர்ந்தது! ருஷ்யாவின் வாழ்வில் மகத்தான திருப்பம் ஏற்பட்டுவிட்டது....

கிளர்ச்சி மிகுதியால் லெனின் அனேகமாக உறங்க வில்லை. ஒரு மணி நேரம் போலச் சற்றே கண் அயர்ந்த வர், விழித்துக் கொண்டார். வீட்டில் நிசப்தம் நிலவியது, ஒரு சத்தம் இல்லை.

வீடு கடலில் மிதக்கும் கப்பலை ஒத்திருந்தது. நடை வழியே ஓசைப்படாமல் நடந்தவாறு இப்படி நினைத்தார் லெனின். நீளமான, குறுகிய நடை இது. இரு புறமும் அறைகள், கப்பல் அறைகள் போல. கோடியில் முக் கோணச் சாப்பாட்டு அறையும் முக்கோண முன் மாடமும், கப்பலின் முற்பகுதி போல. சாப்பாட்டு அறையில் பியானோ வைத்திருந்தது. உல்யானவ் குடும்பத்தார் வசித்த எல்லா வீடுகளிலும் பியானோ கட்டாயம் இருந்தது, இசை எப் போதும் ஒலித்தது.

லெனின் ஸ்வரக் குறிப்பு நோட்டை எடுத்துப் பார்த் தார். அது அன்னையின் நோட்டு. மகன் வருவதற்கு ஏழு மாதங்கள் முன்பு தாயார் காலமாகிவிட்டார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவின் அன்னையும் இறந்துவிட்டார்.

கப்பல் முற்பகுதி போன்று இருந்த அறையை வருத் தத்துடன் நோக்கினார் லெனின். இந்த ஆடும் நாற்காலி யில், சால்வையைப் போர்த்துக் கொண்டு புத்தகமும் கையுமாக உட்கார்ந்திருப்பார் அம்மா. முதுமை காரண மாகக் குளிர் அவருக்கு உறைத்தது. உள்ளமோ குழந்தை களுக்காக எப்போதும் ஏங்கி நலிந்து போயிருந்தது. ஒரு குழந்தை சைபீரியாவில். வேறொன்று சிறைச் சாலையில். அம்மா! எந்தச் சிறைச் சாலைக்குத்தான் நீ பண்டங்களை எடுத்து வரவில்லை! பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, கீவ், ஸராத்தவ்.... எந்தெந்த நகரங்களில் தான் விதி உன்னை அலைக்கழிக்கவில்லை!

இசைக் குறிப்பு நோட்டைப் பியானோமேல் வைத்து விட்டுச் சத்தம் செய்யாமல் நடந்து தம் அறைக்குத் திரும்பினார் லெனின். முன்பு அந்த அறையில்தான் தாயார் வசித்தார். அன்னையின் கடைசி உறைவிடம் அது. தாயா ருடைய ஆழ் சிவப்பு நாற்காலி. அதன் உறைமீது அவரே தம் கைப்படப் போட்ட சித்திரத் தையல்... அம்மா! ஒரு கணமேனும் உன்னைக் காண மாட்டேனா? மென்மை

யான, பொறுமை சான்ற உன் தாய்க் கரங்களே ஒரு தர மாவது முத்தமிட வாய்க்காதா எனக்கு?

விரைவில் வீட்டில் மற்றவர்களும் எழுந்துவிட்டார் கள். ஆனல் இன்றையக் காலே முந்திய நாள் போல இல்லே. நேற்று எல்லோரும் களி பொங்கக் கலகலப்பாய் இருந் தார்கள். இன்றோ, தணிந்த குரலில் பேசினர்கள்.

லிகோவ்க்காவிலிருந்து வோல்க்கவ் இடுகாட்டுக்கு ரஸ்தான்னயா வீதி வழியே செல்ல வேண்டும். துயர் நிறைந்த வீதி. இறுதிப் பயண வழி. ரஸ்தான்னயா என்ற சொல்லுக்கே ''பிரிவு பெறும்'' என்று பொருள். சரியான பெயர் தான்.

இடுகாட்டில் இன்னமும் வெண்பனி படிந்திருந்தது. கல்லறைகளின் இடையிடைய வெண்பனிக் குவைகள் காட்சி தந்தன. அன்னேயின் சமாதி மேட்டின்மேல் பைன் மரக் கிளே. பக்கத்தில் சற்று சிறிய மேடு, ஓல்காவினுடை யது. ஆஸ்பென் மரத்தின் இலேகளற்ற கிளேகள் வாட்டத் துடன் தொங்கின.

லெனின் மரியாதையாகத் தொப்பியைக் கழற்றினர். தலே தாழ்த்து வணங்கினர். குனிந்த தலே நிமிராமல் வெகு நேரம் நின்றார்.

குழந்தைப் பருவக் காட்சிகள் கண்முன் தோன்றின. ஸிம்பீர்ஸ்க் வீடு. சாப்பாட்டு அறையில் இதமான வெளிச் சம் தரும் விளக்கு பொருத்தப்பட்டிருக்கிறது. குழந்தைகள் மேஜையருகே உட்கார்ந்திருக்கிறார்கள். அம்மா புத் தகத்தை விரிக்கிறார். ஏதோ சுவையான, விறுவிறுப்பான கதையை ஆர்வத்துடன் எதிர்ப்பார்க்கிறார்கள் குழந்தை கள். அம்மாவுக்குத்தான் எவ்வளவு நல்ல குரல், கணீ ரென்று, ஆனல் மிருதுவாக ஒலிக்கும் குரல்!

இன்னெரு காட்சி. சிறை அறைக் கதவின் பூட்டு கண கணக்கிறது.

''கைதி உல்யானவ், தாயாரைச் சந்திக்கப் போக லாம்!'' என்கிறான் காவலன்.

லெனின், சந்திப்பு நேரத்தைத் தவற விட்டுவிடுவோ மோ என்ற பயத்துடன் ஓட்டமும் நடையுமாக இடை வழியில் விரைகிறார். தாழ்ந்த வானமுகடு கொண்ட இருண்ட கூடம். இரட்டை வரிசை அழிக் கம்பிகள்.

தாயாரின் அன்பு முகம் அழியுடன் ஒட்டிக் கொண்டிருக் கிறது. விழிகளில் பரிவும் கனிவும் ததும்புகின்றன. ''உடம்பு சௌக்கியமாய் இருக்கிறுயா, விளாதீமிர்? உனக்காகப் பாலும் தின்பண்டங்களும் கொண்டு வந்திருக் கிறேன். நீ கேட்டிருந்த புத்தகங்களும்....''

அம்மா, அன்பு அம்மா! எங்கள் புது வாழ்வு மலரும் வரை நீ வாழ்ந்திருக்கவில்லையே, அதைக் காணுமலே போய் விட்டாயே. அடாடா, எவ்வளவு துன்பம் தரும், வேதனை அளிக்கும் விஷயம்! அம்மா, அருமைத் தாயே, உன் அறிவையும் உன் அன்பையும் ஒருபோதும் மறக்க மாட்டேன்.

ஆட்சி அதிகாரம் சோவியத்துக்களுக்கு

அன்னையின் சமாதிக்கு அஞ்சலி செலுத்திவிட்டு லெனின் வோல்க்கவ் இடுகாட்டிலிருந்து போல்ஷிவிக்கு களின் கூட்டத்துக்கு விரிவுரை நிகழ்த்தச் சென்றார். அன்று 1917ம் ஆண்டு, ஏப்ரல் 4ந் தேதி. எனவே, லெனினது விரிவுரை ''ஏப்ரல் விரிவுரை'' என்று அழைக்கப்பட்டது. தாய்நாடு திரும்பும் வழியில் ரயிலில் அதை எழுதினார் லெனின். ஜாரை அகற்றிய பின் ருஷ்யாவில் போல்ஷி விக்குகளும் மக்களும் எப்படிச் செயல்பட வேண்டும் என்ற துல்லியமான திட்டத்தை அவர் வகுத்திருந்தார்.

தாற்காலிக அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தைக் ஏற் றிருந்தது. ஆனால் தாற்காலிக அரசாங்கத்தின் உறுப்பி னர்கள் யார்? நிலப்பிரபுக்களும் முதலாளிகளும், அதா வது, பணக்காரர்கள் பணக்காரர்களோடு இணைந்திருந்தார் கள். தொழிலாளர்களையும் குடியானவர்களையும் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளப் பணக்காரர்கள் விரும்பினர் களா? விரும்பவே இல்லை. அவர்கள் அக்கறை எல்லாம் தங்கள் செல்வத்தைப் பற்றியே. அப்படியானால் போல்ஷி விக்குகள் தாற்காலிக அரசாங்கத்தை எதற்காக ஆதரிக்க வேண்டும்? ஆதரிக்க மாட்டோம். சோவியத்துக்களையே ஆதரிப்போம். தொழிலாளர்கள், குடியானவர்கள் பிரதிநிதி களின் சோவியத்துக்கள் அதற்கு முன்பே அமைக்கப்பட்

டிருந்தன. ஆனால் அவற்றுக்கு மிகவும் குறைந்த சக்தியே இருந்தது. மென்ஷிவிக்குகளும் போல்ஷிவிக்குகளுடன் இணங்காத வேறு பலரும் அவற்றில் இருந்தார்கள்.

''சோவியத்துக்களை வலுப்படுத்த வேண்டும்!'' என்றார் லெனின்.

இதன் அர்த்தம் என்ன? அவற்றை போல்ஷிவிக் சோவியத்துக்கள் ஆக்கவேண்டும் என்பதே இதன் அர்த்தம். அதன் பின்பு சோவியத்துக்களின் உதவியுடன் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தையும் முதலாளிகளிடமிருந்து தொழிற்சாலைகளையும் பறித்துக் கொள்ள வேண்டும். நிலமும் தொழிற்சாலைகளும் எல்லா மக்களதும் உடைமை ஆகிவிடும். அதோடு, யுத்தத்துக்கும் முடிவு கட்டிவிடுவோம்.

போல்ஷிவிக்குகளுக்கும் தொழிலாளர்களுக்கும் லெனின் விடுத்த அறைகூவல் இதுவே.

அவர் உறுதியாக இருந்தார். அவர் முன்னே இருந்தது மாபெரும் குறிக்கோள். அந்தக் குறிக்கோளை அடைய அவர் உண்மையாகப் பாடுபட்டார்.

தங்கள் நலன் போல்ஷிவிக்குகளுடன் செல்வதே என்று தொழிலாளிகள் புரிந்து கொண்டார்கள். ஆனால் எல்லாரும் அல்ல. குடியானவர்களிலும் எல்லோரும் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை. மென்ஷிவிக்குகளும் பூர்ஷ்வாக்களும் தொழிலாளர்களையும் குடியானவர்களையும் தவறான வழியில் இட்டுச் செல்ல எல்லா வகையிலும் முயன்று வந்தார்கள். அவர்கள் தங்கள் செய்தித் தாள்களில் போல்ஷிவிக்குகளைப் பற்றி இல்லாததும் பொல்லாத்தும் எழுதினார்கள். யுத்தத்துக்கு ஆதரவாகக் கிளர்ச்சி நடத்தினார்கள். பூர்ஷ்வா ஆட்சியை ஆதரித்துப் பிரசாரம் செய்தார்கள். போல்ஷிவிக்குகளிடமும் சொந்தப் பத்திரிகை **பிராவ்தா**—உண்மை—இருந்தது. மோய்க்கா ஆற்றின் கரையில் இருந்த பெரிய வீட்டில், மூன்று அறைகளில் அதன் அலுவலகம் இருந்தது. மக்களுக்கு மெய்யாகவே உண்மையை எடுத்து உரைத்து வந்தது **பிராவ்தா**.

லெனின் பெத்ரோகிராத் சேர்ந்ததுமே **பிராவ்தா** அலுவலகம் சென்றார். ஒரு கட்டுரை எழுதினார். மறுநாள் இன்னும் எழுதினார். ஒவ்வொரு நாளும் லெனின்

பிராவ்தாவுக்கு ஒரு கட்டுரை அல்லது இரண்டு, மூன்று கட்டுரைகள்கூட எழுதி வந்தார். பெத்ரோகிராத் முழுவதிலுமிருந்த தொழிற்சாலைகளிலும் ஆலைகளிலும் சொற்பொழிவுகள் ஆற்றினார். உழைப்பாளிகளின் இன்பத்தின் பொருட்டு போல்ஷிவிக்குகள் நடத்தும் போராட்டத்தை மக்களுக்கு எளிதில் புரியும் விதத்தில் விளக்கினார். எனவே, மேலும் மேலும் அதிகத் தொழிலாளர்களும் குடியானவர்களும் லெனினின் தரப்பில் சேர்ந்தார்கள்.

லெனின் ருஷ்யாவுக்கு வந்த மூன்றே மாதங்களில் நிலைமை அடியோடு மாறிவிட்டது. லெனின் தனி மனிதராகப் பாடுபடவில்லை. அவருக்குத் தோழர்கள் இருந்தார்கள். எல்லோரும் சேர்ந்து முயன்று வாழ்க்கையை மாற்றப் போராடினார்கள். படைவீரர்கள் போரிட விரும்பவில்லை. தொழிலாளர்கள் முதலாளிகளுக்காக வேலை செய்ய மறுத்தார்கள். குடியானவர்கள் நிலம் வேண்டும் என்று கோரினார்கள்.

கோடை காலத்தில் ஒரு நாள் பெத்ரோகிராத் தொழிலாளர்களும் படைவீரர்களும் தாமாகவே வீதிகளில் ஊர்வலமாகக் கிளம்பினார்கள். அவர்கள் பாடு மிகக் கடினமாக இருந்தது. இப்படி ஊர்வலம் நடத்தும்படி போல்ஷிவிக்குகள் அவர்களைத் தூண்டவில்லை. எனினும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தினார்கள். அது அமைதியாக நடந்தேறும்படிச் செய்ய முயன்றார்கள். ''எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே!'' ''முதலாளித்துவ மந்திரிகள் வீழ்க!'' ''உணவு, சமாதானம், சுதந்திரம்!'' என்ற கோஷங்களுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலம் வந்தார்கள்.

அவர்கள் நம்பிக்கையுடன், உறுதியாக நடந்தார்கள். மக்களின் இந்த இயக்கத்தில் பெரு வலிமை புலப்பட்டது.

தாற்காலிக அரசாங்க அமைச்சர்கள் கிலி அடைந்தார்கள். தங்களைப் புரட்சி அரசாங்கம் என்று அவர்கள் அழைத்துக் கொண்ட போதிலும், 1905ம் ஆண்டு ஜார் நடந்து கொண்டது போலவே இழிதகைமையுடன் நடந்து கொண்டார்கள். ஆயுதமற்ற மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படிப் படைவீரர்களுக்குக் கட்டளை இட்டார்கள்.

இது 1917ம் ஆண்டு ஜூலை மாதம் 4ந் தேதி நடந்தது.

மறு நாள் காலை லெனின் **பிராவ்தா** அலுவலகம் சென்றார். செய்தித்தாள் வெளியிடும் வேலை எப்படி நடக்கிறது என்று பார்க்கவும் தோழர்களுக்கு ஆலோசனை கூறவும்.

...இராணுவ மோட்டார் ஒன்று **பிராவ்தா** அலுவலகத்துக்குமுன் கீச்சொலியுடன் பிரேக் போட்டு நின்றது. பூட்சுகளின் சடசடப்பு கேட்டது. கதவு திடீரென விரியத் திறந்தது. சில இராணுவக் கல்லூரி மாணவர்கள் துப்பாக்கிக் குத்தீட்டிகளைத் தாழ்த்திப் பிடித்தவாறு அலுவலகத்துக்குள் பாய்ந்து வந்தார்கள்.

''எங்கே லெனின்?''

நல்ல வேளையாக அப்போது லெனின் அங்கே இல்லை. லெனின் **பிராவ்தா** அலுவலகத்திலிருந்து ஆபத்தின்றி வீடு திரும்பிவிட்டார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் லெனினின் சகோதரியும் கதவுப் பக்கம் சத்தம் வருகிறதா என்று உற்றுக் கேட்டவாறு, முகம் வெளிற, பேச்சின்றி அவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

''விளாதீமிர்! தாற்காலிக அரசாங்கம் உன்னைச் சட்ட விரோதி என்று பிரகடனம் செய்துவிட்டது!''

அதற்குள் வாயில் மணி நீண்டு ஒலித்தது. எல்லோரும் திடுக்கிட்டார்கள்.

''உனக்காகவா?'' என்று தணிந்த குரலில் கேட்டார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

லெனின் ஓசை இல்லாமல் தமது அறைக்கு நடந்தார். முகவரிகளையும் தஸ்தாவேஜுகளையும் கிழித்துப் போடுவதற்காக. சீக்கிரம்! போலீஸ் ஒற்றர்கள் கையில் அவை அகப்படக் கூடாது.

''திறவுங்கள்!'' என்ற கம்மிய குரல் கதவுக்கு வெளியே கேட்டது.

ஸ்வெர்திலோவ்! இது ஸ்வெர்திலோவின் குரல் அல்லவா?'' என்று அடையாளம் தெரிந்து கொண்டார் ஆன்னா இல்யீனிச்னா.

எல்லோரும் மகிழ்வடைந்தார்கள். கைது செய்யவோ, சோதனை போடவோ, போலீஸ்காரர்கள் வரவில்லை என்பதால்.

''தோழர் ஸ்வெர்திலோவ், அன்பரே, வாருங்கள் உள்ளே!'' என்று லெனினின் சகோதரியும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் போட்டி போட்டுக்கொண்டு வரவேற்றார்கள். கரிய விழிகளும் வில் மூக்குக்கண்ணுடியுமாக ஒடிசலான ஒருவர் உள்ளே வந்தார்.

அவர் இன்னும் மிக இளைஞர். வாலிபப் பருவத்தில் அவரது வாழ்க்கை முழுவதும் கட்சியின் தொண்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. ஜார் அரசாங்கம் புரட்சி வீரர் ஸ்வெர்திலோவைத் தொலைவில் இருந்த நரீம் பிரதேசத்துக்குக் கடத்தியது. சிறைக் குடியிருப்பிலிருந்து தப்பி ஓட ஸ்வெர்திலோவ் நான்கு தடவைகள் முயன்றார். ஆனால் அவருடைய முயற்சிகள் பலிக்கவில்லை. அவரோ, ஐந்தாவது தடவையும் தப்பி ஓடினார்....

ஆயினும் அவர் வெகு காலம் சுதந்திரமாய் இருக்கவில்லை. அரசியல் போலீஸார் அவரை மறுபடி பிடித்து விட்டார்கள். இம்முறை துருஹான்ஸ்க் பிரதேசத்தின் பாழ் இடத்தில் அவர் சிறை வைக்கப்பட்டார்.

புரட்சிதான் ஸ்வெர்திலோவை விடுதலை செய்தது. அறிவாற்றலும் திறமையும் வாய்ந்த அவர் லெனினின் ஆர்வம் மிக்க துணைவராக விளங்கினார்.

''இராணுவக் கல்லூரி மாணவர்கள் **பிராவ்தா** அலுவலகத்தைத் தாக்கி நொறுக்கிவிட்டார்கள். துப்பாக்கிக் குத்தீட்டிகளால் எல்லாவற்றையும் துளைத்துவிட்டார்கள். நகர் முழுவதிலும் கைதுகளும் சோதனைகளும் ஒரே மும்முரம். எந்த நிமிடமும் அவர்கள் இங்கே வரக் கூடும். நீங்கள் போய் விட வேண்டும், விளாதீமிர் இல்யீச்!''

லெனின் சிந்தனையில் ஆழ்ந்தவராகப் பேசாதிருந்தார். மறுபடியும் புரட்சிக்காரர்கள் வேட்டையாடப்படுகிறார்கள். வேவு பார்த்தல், சிறைகள், அரசியல் போலீஸார். மறுபடி ஒளிந்து கொள்ள வேண்டும்.

லெனின் சிறிது தயங்கினார். ஆனால் அபாயம் மிகக் கடுமையாக இருந்தது. சட்ட விரோதமானவன் என்று அறிவிக்கப்பட்டவனை எவன் வேண்டுமானாலும் கொன்று விடலாம்—அவன்மேல் வழக்கு தொடரப்பட மாட்டாது. தாற்காலிக அரசாங்கம் லெனினை அழித்துவிட முடிவு செய்துவிட்டது.

''நங்கள் போய்விட வேண்டும்'' என்று கண்டிப்பாக மீண்டும் கூறினர் ஸ்வெர்திலோவ்.

தம் மேல்கோட்டைக் கழற்றி லெனின் தோட்கள் மேல் போர்த்தினர்.

''மற்றவன் கோட்டில் உங்களை உடனே அடையாளம் காணமுடியாது. காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளுங்கள்.''

லெனின் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டார். தமக்கையையும் மனைவியையும் தழுவி விடை பெற்றார் தமக்கு மூன்று மாதங்கள் தங்க இடமளித்த, மிதக்கும் கப்பல் வடிவான வீட்டை, சகோதரியின் வீட்டை பிரியுமுன் ஒரு பார்வை பார்த்தார்.

பின்பு எங்கோ போய்விட்டார். இப்படிப் பதுங்கி வாழ்வதைப் புரட்சிக்காரர்கள் தலைமறைவு வாழ்க்கை என்று சொல்வார்கள்.

காட்டு அலுவல் அறை

பெத்ரொகிராதிற்கு வெளியே, ஃபின்லாந்து எல்லையின் அருகாமையில் ஸைஸ்த்ரரேத்ஸ்க் என்னும் குடியிருப்பில் பெரிய ஆயுதத் தொழிற்சாலை இருந்தது. நிக்கலாய் அலெக்ஸாந்திரவிச் யெமெல்யானவ் என்னும் தொழிலாளி ஸைஸ்த்ரரேத்ஸ்க் தொழிற்சாலையில் முப்பது ஆண்டுகளாக வேலை செய்து வந்தார். ரஸ்லீவ் ரயில் நிலையத்தில் அவர் வீடு இருந்தது. அங்கிருந்து தொழிற்சாலைக்கு அரை மணி நேரத்தில் கால்நடையாகப் போய்விடலாம். ரஸ்லீவ் ஏரியின் பெயரால் அந்த இடம் அழைக்கப்பட்டது. ஏரி இங்கே தொடங்கி ஒரு ஏழு கிலோமீட்டர் தூரம் நீண்டு பரவியிருந்தது. வெயில் நாட்களில் அது வானம் போன்று நீலமாக ஒளிரும்.

ஒரு முறை போல்ஷிவிக் கட்சி மத்தியக் கமிட்டியிலிருந்து அனுப்பப்பட்ட ஒருவர் யெமெல்யானவிடம் வந்தார். கட்சித் தலைவர் லெனினைப் புரட்சி எதிர்ப்புத் தாற்காலிக அரசாங்கத்தின் உளவாளிகளுக்குத் தெரியாமல் விரைவில் மறைக்க வேண்டும் என்று மத்தியக் கமிட்டி முடிவு செய்திருந்தது.

''இந்தப் பொறுப்பு உம்மிடம் ஒப்படைக்கப்படு கிறது, தோழர் யெமெல்யானவ்.''

தம் வீட்டுத் தீனிப்புல் பரணில் லெனினை ஒளித்து வைக்கலாம் என்று முதலில் யெமெல்யானவ் நினைத்தார்.

ஆனால் அது கூடாது, அபாயம் என்று விரைவில் புரிந்துகொண்டார். நாலு பக்கமும் அண்டை அயலார்கள். மற்ற வீட்டுச் சிறுவர்கள் வீட்டு முகப்புக்குள் வருவார் கள். யெமெல்யானவுக்கு ஏழு குழந்தைகள். ஆளுக்கு ஒரு தோழன் அல்லது தோழி என்று வைத்துக் கொண்டாலும் குழந்தைப் பட்டாளம் சின்னது அல்லவே. இல்லை, வேறு மறைவிடம் தேட வேண்டும்.

யெமெல்யானவ் அதிகாலையில் லெனினை எழுப்பினார். சூரியன் இன்னும் உதிக்கவில்லை. குளத்தின்மீது மெல்லிய வெண் நீல மூடுபனிப் படலம் கவிந்திருந்தது. குளம் வீட்டை ஒட்டினாற் போலவே இருந்தது. யெமெல்யானவ் கரையில் கட்டியிருந்த படகை அவிழ்த்தார். தண்ணீர் துடுப் புக்களின் வலிப்பால் மெல்லச் சளப்பிட்டது. உறக்கத் தில் ஆழ்ந்தவை போன்ற வீடுகள் குளத்தின் கரையோர மாகச் சந்தடி இன்றி நின்றன. தூங்கி வழிந்த வீடுகளைக் கடந்து குளத்திலிருந்து ரஸ்லீவ் ஏரிக்குப் படகை வலித் துச் சென்றார் யெமெல்யானவ். பெரிய ஏரி பிரகாசமாக, ஆட்களின்றி வெறுமையாக இருந்தது. இரவு அப்போது தான் கழிந்திருந்தது. ஜனங்கள் உறங்கிக் கொண்டிருந் தார்கள். பட்சிகள் கூட உறங்கின. கிழக்கே வைகறை யின் செம்மை லேசாகப் படர்ந்தது.

ரஸ்லீவ் ஏரியின் மறு கரைக்கு லெனினைக் கொண்டு சேர்க்க யெமெல்யானவ் அவசரப்பட்டார். அது சுமார் ஏழு கிலோமீட்டர் தூரம். வேற்றுள் ஒருவரைப் பலபல வென்று விடிவதற்குள் இவன் எங்கேயோ எதற்காகவோ அழைத்துப் போகிறான் என்பதை அண்டை அயலார் யாரேனும் கண்டு கொள்ளக் கூடாதே என்று அவர் அஞ்சி னார். ஆட்சியாளர்கள் லெனினைத் தேடுகிறார்கள் என்ற செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது. பலவகையான மனிதர்கள் எதிர்ப்படுவார்களே.... அதனால்தான் யெமெல்யானவ் அவசரப்பட்டார்.

லெனின் சுக்கான் பிடித்தவாறு பேசாமல் அமர்ந் திருந்தார். காலைக் காற்று வீசியது. வெளிர் மூடுபனி ஏரிமீது அசைந்தது. கரைகள் முன்னிலும் துலக்கமாகத் தென்பட்டன. காலைச் செவ்வொளி படரலாயிற்று.

அந்த அமைதியான நேரத்தில் லெனின் சென்றுபோன ஆண்டுகளையும் அன்புக்குரிய நண்பர்களையும் நினைவுகூர்ந் தார். பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர் பாபுஷ்கின் அவர் நினை வில் தோன்றினர். பாபுஷ்கினுடன் சேர்ந்தே விளாதீமிர் இல்யீச் ''போராட்டச் சங்கத்தின்'' முதல் துண்டுப் பிர சுரத்தை எழுதினர். பீட்டர்ஸ்பர்க் பாட்டாளி பாபுஷ் கின் ஆவேசம் நிறைந்த புரட்சி வீரராக, உறுதி வாய்ந்த போல் ஷிவிக்காக விளங்கினர். 1906ம் ஆண்டு ஆட்சி யாளர்கள் அவருக்கு விசாரணை இன்றி மரண தண்டனை விதித்துவிட்டார்கள்.

''பத்யோம்கின்'' என்னும் போர்க் கப்பலின் மாலுமி அஃபனஸீ மத்யுஷேன்கோ! கலகக் கிளர்ச்சி பற்றி லெனி னிடம் சொல்வதற்கு ஜெனீவா வந்தாரே, அவர்! பிற்பாடு அவர் தாய்நாடு திரும்பினர். ஆட்சியாளர்கள் அவருக்கும் மரண தண்டனை விதித்துவிட்டார்கள்.

இன்னொரு தோழரும் லெனின் நினைவில் காட்சி தந் தார். உஃபா நகரைச் சேர்ந்த இளம் தொழிலாளர் இவான் யக்கூத்தவ் அவர். 1905ம் ஆண்டுப் புரட்சியின் போது இவான் யக்கூத்தவ் உஃபா நகரில் தொழிலாளர் ஆட்சியை நிறுவினர். புரட்சி ஒடுக்கப்பட்டுவிட்டது. இவான் யக்கூத்தவ் சிறைச்சாலை முகப்பிலேயே தூக்கி லிடப்பட்டார். புரட்சிக்காக உயிர் வழங்கிய ஆயிர மாயிரம் தோழர்களே! உங்கள் நினைவு என்றென்றும் நிலைத்திருக்கும்.

ஸைஸ்த்ரரேத்ஸ்க் தொழிலாளர் யெமெல்யானவும் தம்மை பூர்ஷ்வா ஆட்சியாளர்களிடமிருந்து மறைப் பதன் மூலம் பெருத்த ஆபத்தை மேற்கொள்ளுகிறார். அகப்பட்டால் இவர்மேல் இரக்கம் காட்ட மாட்டார்கள் ஆட்சியாளர்கள். பாவம், ஏழு குழந்தைகள் அனாதை ஆகிவிடுவார்கள்.—இவ்வாறு எண்ணமிட்டார் லெனின்.

''நன்றி, தோழர் யெமெல்யானவ்'' என்று கூறினர்.


யெமெல்யானவ் அவரை ஏறிட்டுப் பார்த்தார்.



நிறைவேறிவிட்டது. ஓவியர் ஸெ. லுக்கீன்



சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸில் வி. இ. லெனின் உரை ஆற்றுகிறார். ஓவியர் வி. ஸெரோவ்



கிராமச் செய்திகள். ஓவியர் வி. ஸெரோவ்




லெனின் ஸ்மோல்னியில் ஓவியர் இ. புரோத்ஸ்கி



வி. இ. லெனின் தமது கிரெம்ளின் அலுவல் அறையில் புத்தக அலமாரி அருகே. மாஸ்கோ, 1918 அக்டோபர் 16



வி. இ. லெனின் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் முதல் ஆண்டு விழாவன்று செஞ்சதுக்க மேடையிலிருந்து சொற் பொழிவு ஆற்றுகிறார். மாஸ்கோ, 1918 நவம்பர் 7



யா. மி. ஸ்வெர்திலோவ் கிரெம்ளின் சுவர் அருகே அடக்கம் செய்யப்படுகையில் வி. இ. லெனின் உரை நிகழ்த்துகிறார். மாஸ்கோ, 1919 மார்ச் 18

''என்ன பிரமாதம், விளாதீமிர் இல்யீச். இது எனக்குப் பெருமை அல்லவா?'' என்றார்.

பின்பு அவர் படகைக் கரையோரத்துக்குச் செலுத்தி நிறுத்தினார்.

கரையை ஒட்டினாற்போல இருந்தது காடு. அதைக் காடு என்று சொல்ல முடியாது. அடர்த்தியற்ற மரங்கள் கொண்ட சோலை அது.

இருவரும் படகிலிருந்த சாமான்களை இறக்கினார்கள். உணவுப் பண்டங்களையும் போர்வை, தலையணையையும் எடுத்துக் கொண்டு சோலைக்குள் சுமார் ஒரு கிலோமீட்டர் சென்றார்கள். லெனின் காகிதக் கட்டையும் நீல நோட் புத்தகத்தையும் வேறு கக்கத்தில் இடுக்கிக் கொண்டிருந்தார்.

ஜூரிக் நகர நூலகத்தில் சுமார் ஓர் ஆண்டு ஆராய்ச்சி நடத்திப் பல நூல்களிலிருந்து தேவையான குறிப்புக்கள் எடுத்துக் கொண்டிருந்தார் லெனின். இந்தக் குறிப்புக்கள் அடங்கிய நீல நோட் புத்தகம் அவருக்குக் கருத்துச் சுரங்கமாகப் பயன்பட்டது.

ஆமாம், யெமெல்யானவ் எங்கே அழைத்துப் போனார்? சோலைக்குள்ளே அவர்கள் நடந்தார்கள். சிறிது தூரத்தில் திறப்பு வெளி தென்பட்டது. பசுமையான, பெரிய திறப்பு வெளி. அதில் மரக் கிளைகளாலான ஒரு குடிசை இருந்தது. குடிசையின் அருகே தரையில் கம்பங்கள் நாட்டப் பட்டிருந்தன. அவற்றில் தொங்கியது கொதிகலம். அது தான் சமையல் அடுப்பு.

''ஆகா, ஆடம்பரமான இருப்பிடம், தோழர் யெமெல்யானவ்! இதைவிட மேலானதைக் கற்பனை செய்யவே முடியாது'' என்று பாராட்டினார் லெனின்.

''அப்புறம், இதைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டார் யெமெல்யானவ்.

குடிசைமேல் சார்த்தி வைத்திருந்த அறுப்பு அரிவாளைக் காட்டினார்.

''விளாதீமிர் இல்யீச், நான் உங்களைப் புல்லறுக்கும் வேலைக்காகக் கூலிக்கு அமர்த்தியிருக்கிறேன். இந்தத் திறப்பு வெளியைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறேன், ஆகவே புல்லறுக்க வேண்டும். காட்டுப் பழங்கள் அல்லது

காளான்கள் சேகரிப்பவர்கள் யாராவது குடிசைக்கு வந்தால், வாயே திறக்காதீர்கள். நான் ஃபின்லாந்துக் காரனைக் கூலிக்கு அமர்த்தியிருக்கிறேனுக்கும்! அவனுக்கு ருஷ்ய பாஷை சுட்டுப் போட்டால்கூட வராதாக்கும்! ஒரு வார்த்தைகூடத் தெரியாதாக்கும்!''

இவ்வாறு கூறி லெனினைத் தலையோடு காலாக இன்னொரு முறை நோட்டமிட்டார் யெமெல்யானவ். லெனின் தாடியை மழித்து மீசையைக் கத்தரித்துவிட்டிருந்தார். நாட்டுப்புறச் சட்டையும் நைந்த கோட்டுமாக அவர் சாதாரணத் தொழிலாளி போலவே காணப்பட்டார்.

''ஃபின்லாந்துத் தொழிலாளியே அச்சாக இருக்கிறீர்கள்'' என்று ஆமோதிப்புடன் கூறினர் யெமெல்யானவ். ''சாப்பாடு அதிகாலையிலோ இரவிலோ எடுத்து வருவோம்'' என்று தகவல் கொடுத்தார்.

''செய்தித்தாள்கள்! வெளியாகும் எல்லாச் செய்தித் தாள்களையும் கட்டாயம் அனுப்பி வையுங்கள். இன்னொன்று. உங்கள் புல்லறுப்பவனுக்கு நிறைய எழுத வேண்டியிருக்கும். எங்கேயாவது இடம் கிடைக்குமா அதற்கு?''

''பாருங்கள்'' என்று மனநிறைவுடன் கூறினர் யெமெல்யானவ்.

குடிசையின் பக்கத்திலிருந்த அடர்ந்த புதரை விலக்கி, கிளைகளை ஒரு புறம் அகற்றினர். புதர்களுக்கு நடுவே சௌகரியமான பசிய வெளியை லெனின் கண்டார். அதில் இரண்டு வெட்டுக்கட்டைகள் போடப்பட்டிருந்தன. ஒன்று குட்டை, மற்றது கொஞ்சம் உயரம். குட்டையாய் இருந்தது இருக்கை, மற்றது மேஜை.

''இதுதான் உங்கள் காட்டு அலுவலறை. வெளியேயும் தெரியாது. நிசப்தமாய் இருக்கும், சிந்தனையைக் குலைக்காது'' என்றார் யெமெல்யானவ்.

குடிசையில் சாமான்களை ஒழுங்குபடுத்திவிட்டுச் சற்று நேரத்தில் யெமெல்யானவ் புறப்பட்டுச் சென்றார். விளாதீமிர் இல்யீச் அவரை வழியனுப்ப ஏரிக்குச் சென்றார். ரஸ்லீவ் ஏரியின் நீலப் பரப்பில் படகு பார்வைக்கு மறையும் வரை கரையில் நின்றார். அது மறைந்த பின்பும் கையை ஆட்டி விடை கொடுத்துவிட்டு விரைவாக அடிவைத்துத்

தமது ''அலுவல் அறைக்குப்'' போனார். நீல நோட் புத்தகத்தைத் திறந்தார். பாட்டாளி வர்க்கச் சர்வாதி காரத்தின் பொருட்டுத் தொழிலாளர்கள் எவ்வாறு போராட வேண்டும், தங்கள் அரசை எவ்வாறு நிலை நாட்ட வேண்டும் என்று விளக்குவதற்காக ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருந்தார் அவர்.

எஞ்சின் நம்பர் 293ல் கரி தள்ளுவோன்

லெனினை மறைத்து வைப்பது என்று போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானித்தது நல்லதாயிற்று. லெனின் வீட்டை வீட்டுச் சென்ற மறு நாளே இராணுவக் கல்லூரி மாணவர்கள் வீட்டைச் சோதனை போட வந்து விட்டார்கள். அவர்கள் லெனினைத் தேடினார்கள்.

லெனினை, ரஸ்லீவ் ஏரிக்கரைக் குடிசையில் வசித்து வந்தார். அப்படி மோசம் இல்லை. ஆனால் கொசுக்கள்தான் பெருந் தொல்லை கொடுத்தன. படலம் படலமாகக் கொசுக்கள். இரவும் பகலும் கடித்துப் பிடுங்கின.

''தாற்காலிக அரசாங்கத்திடமிருந்து தப்பிவிட்டேன், கொசுக்களிடமிருந்து தப்ப வகை இல்லையே!'' என்றார் உடம்பெல்லாம் கடிபட்ட லெனின்.

இல்லாவிட்டால் மழை கொட்டும். அப்போது குடி சைக்குள் குந்தியிருக்க வேண்டும். கணப்பு நெருப்பை மாரி நீர் அடித்து அணைத்துவிடும். அப்புறம் அதை மறு படி மூட்ட முடியாது, தேநீர் கொதிக்க வைக்க முடியாது, சூடாக எதையேனும் சாப்பிட்டுக் கதகதப்பு ஊட்டிக் கொள்ள முடியாது. படு சங்கடம். ஆனாலும் லெனின் உளம் சோரவில்லை. அவருடைய வேலைக்கோ, எல்லையே இல்லை. அவர் கட்டுரைகள் எழுதினார், புத்தகம் எழுதத் திட்டமிட்டார். போல்ஷிவிக்குகளின் காங்கிரஸை வழி காட்டி நடத்தினார். போல்ஷிவிக் கட்சியின் ஆறாவது காங்கிரஸ் அப்போது பெத்ரோகிராதில் கூடியிருந்தது. இரகசியமாகத் தம்மைக் காண வந்த தோழர்கள் மூலம் லெனின் தமது யோசனைகளையும் உத்தரவுகளையும் காங்கிரஸுக்கு அனுப்பினார்.

அவர் கூறினார்: ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்; பாட்டாளிகளும் ஏழைக் குடியானவர்களும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். கட்சிக்கு முன் லெனின் வைத்த மாபெரும் குறிக்கோள் இதுவே. காங்கிரஸ் லெனினுடைய யோசனைக்கு இணங்கியது.

''இந்தப் போராட்டத்துக்கு நம் கட்சி வீசிப் பறக்கும் கொடி ஏந்திச் செல்கிறது.... பழைய உலகுக்குச் சாவு மணி அடிக்கப் போகிறது''—காங்கிரஸின் அறிக்கையில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கம் லெனினை அஞ்சியது, வெறுத்தது. கட்சியை இவ்வளவு துணிவுடனும் உறுதியாகவும் நடத்திச்செல்பவர் லெனினே என்று அது புரிந்துகொண்டிருந்தது. லெனினைத் தேடிப் பிடிப்பதற்காக பூர்ஷ்வா அரசாங்கம் நூற்றுக் கணக்கான உளவாளிகளை ஏவியது.

குடிசையில் வசிப்பது லெனினுக்கு ஆபத்தாகிவிட்டது. கோடை முடிந்து கூதிர்காலமும் தொடங்கியிருந்தது இரவு குளிர் நிறைந்ததாக நீண்டு கொண்டு போயிற்று அடுத்தடுத்து மழை பெய்தது. சொட்டச் சொட்ட நனைந்த சோலை உர்ரென்று முறைத்தது.

லெனினை ரஸ்லீவிலிருந்து தொலைவில் உள்ள வேறு இடத்துக்கு மாற்றுவது என்று கட்சியின் மத்தியக் கமிட்டி முடிவு செய்தது.

ஒரு நாள் பொழுது விடிந்ததுமே யெமெல்யானவ் ஆயுதத் தொழிற்சாலைக்குப் போனார். நேரே நிர்வாகத் தலைவர் அறைக்கு. அவ்வளவு வெள்ளென வேலைக்கு வரும் நிர்வாகத் தலைவர் யாராவது உண்டா? நிர்வாகத் தலைவரின் சுவடுகூட இல்லை அங்கே. யெமெல்யானவுக்கு வேண்டியதும் அதுதான். யெமெல்யானவுக்குத் தெரிந்த காவலன் அவரை உள்ளே போக விட்டான். அவனிடம் சொல்வதற்கு யெமெல்யானவ் ஒரு காரணம் கற்பித்துக் கொண்டார். உண்மையிலோ, ஃபின்லாந்து எல்லையைக் கடந்து போவதற்கான அனுமதிச் சீட்டு அவருக்கு வேண்டியிருந்தது. தொழிற்சாலையின் சில தொழிலாளர்கள் அப்போது ஃபின்லாந்துப் பகுதிகளில் வசித்து வந்தார்

கள். எனவே, எல்லை கடந்து போய் வருவதற்கு நிர்வாகத் தலைவர் அவர்களுக்கு இம்மாதிரி அனுமதிச் சீட்டுக் கள் வழங்குவது வழக்கம். அவர் மேஜைமேல் அனுமதிச் சீட்டுக்கள் தாறுமாறாக இறைந்து கிடந்தன. யெமெல்யா னவ் கைக்கு வந்த சீட்டு ஒன்றை லபக்கென்று எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டார். உடனே புறப் பட்டு நேரே லெனின் இருந்த குடிசைக்குப் போனர். லெனின், கன்ஸ்தன்தீன் பெத்ரோவிச் இவனோவ் ஆக மாறி விட்டார். தாடி மீசைகளை மழுங்கச் சிரைத்துக் கொண்டு, புருவங்களுக்குச் சாயம் பூசிக் கொண்டார். பொய் மயிர் டோப்பா அணிந்து கொண்டார். இழுத்து விடப்பட்ட தொப்பிக்கு அடியே அலைபடிந்த மயிர்க் கற்றைகள் நெற்றிமேல் விழுந்தன. லெனின் அடியோடு உருமாறிவிட் டார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாகூட அவரை அப்போது சட்டென அடையாளம் கண்டு கொண்டிருக்க மாட்டார்.

இருட்டிய பிறகு ரஸ்லீவ் ஏரிக்கரைக் குடிசையி லிருந்து புறப்பட்டு, சோலையைக் கடந்து ரயில் நிலையத்துக்கு நடந்தார்கள். யெமெல்யானவும் இரண்டு ஃபின்லாந்துத் தோழர்களும் லெனினை வழி நடத்திச் சென்றார்கள். தொடக்கத்தில் தடையின்றி நடந்தார்கள். கூதிர்காலம் ஆதலால் எங்கும் காரிருள் கவிந்திருந்ததுதான் கஷ்டமாய் இருந்தது. மரக் கிளைகள் முகத்தில் அடித்தன. திடீரென்று திட்டுக்கள் கால்களைத் தடுக்கலாயின. ஒற்றையடிப் பாதை மறைந்து விட்டது. மரங்கள் அரிதாகவே தென் பட்டன. புதர்கள் கடக்கமுடியாதபடி நெருக்கமாக மண்டி யிருந்தன. அப்புறம், இது என்ன? என்ன இது?... புகை கிளம்பிற்று. நெகிடியா அல்லது எங்கேனும் காட்டுத் தீயா? ஒவ்வோர் அடி முன்னே செல்லச் செல்லப் புகை விஷமயமாக முன்னிலும் அடர்ந்தது. மூச்சு விடுவது கடினம் ஆயிற்று. கண் தெரியவே இல்லை.

''சதுப்பு நிலத்தில் முற்ற நிலக்கரி எரிகிறது. திரும்புவோம்'' என்றார் யெமெல்யானவ்.

முற்ற நிலக்கரியில் நெருப்பு பிடித்துக் கொள்வதை விட பயங்கரமானதும் கபடமுள்ளதும் வேறு எதுவும் இல்லை! நெருப்பு தரைக்கு அடியில் மூண்டு கனன்று பர வும். திடீரென்று தீப்பிழம்பு குப்பென்று சீறி எழுந்து எல்

லாவற்றையும் பொசுக்கும், சுற்றிலும் உள்ளவற்றை அழித்துவிடும்.

''விளாதீமிர் இல்யீச், என் பின்னே வாருங்கள்! தோழர்களே....''

அவர்களுக்கு மூச்சு முட்டியது. வெண்புகைப் படலங்களின் ஊடே அலைந்தார்கள். குருடர்கள் போல. தட்டித் தடவி. இடறினார்கள். விழுந்தார்கள். எழுந்தார்கள். மறுபடி நடந்தார்கள்.

கடைசியில் புகையின் அடர்த்தியும் காட்டமும் குறையலாயின. புகை ஒருபுறம் விலகிப் பின்தங்கிவிட்டது. நிலையற்ற பெரிய சதுப்புநிலத் திட்டுக்கள் கால்களுக்கு அடியில் ஆடவில்லை. அவர்கள் எரிந்து கொண்டிருந்த முற்றிலக்கரிச் சதுப்பு நிலத்திலிருந்து தப்பி வெளியேறிவிட்டார்கள்.

களைத்துச் சோர்ந்துபோய், தரையில் பொத்தென்று உட்கார்ந்து களைப்பாறினார்கள் அவர்கள். பலவீனத்தால் அவர்களுடைய கால்கள் நடுங்கின.

மறு நாள் இரவு, ஒரு மணி அடித்துப் பதினைந்து நிமிஷத்தில், கோடை வாசஸ்தலங்கள் செல்லும் ரயில் வண்டி உதேல்னயா நிலையத்துக்கு வந்தது. இந்த ரயில் ஃபின்லாந்து சென்றது. எஞ்சின் டிரைவர் கூகோ யாலவா என்னும் ஃபின்லாந்துக்காரர். அவர் போல்ஷிவிக், பெத்ரோகிராதில் வசித்தார். அவருக்குப் பழக்கமான எஞ்சின் நம்பர் 293 புனல் வடிவான வாய் அகன்ற கரிய புகைப்போக்கியும் கொதிக்கும் உருண்டை விளக்களும்கொண்டது. அதன் மேல் அவருக்கு மிகுந்த பிரியம். உதேல்னயாவில் சாலைக் கடவை அருகே வண்டியை நிறுத்தினர் கூகோ யாலவா. வெளியே பார்வை செலுத்தினர். சரிதான். கடவை அருகே ஒருவன் நின்று புகை பிடித்துக் கொண்டிருந்தான். இன்னொருவன் தெருவிளக்கடியில் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தான். ஆகவே எல்லாம் சரியாகவே இருக்கிறது. அப்படித்தான் அடையாளம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. வழி அனுப்ப வருபவர்களில் ஒருவன் சிகரெட் புகைப்பான், மற்றவன் செய்தித்தாள் படிப்பான். ஆனால் எங்கே லெனின்? கூகோ யாலவா கவலை அடைந்தார்.

அதிக உயரமற்ற கட்டுக்குட்டான தொழிலாளி ஒருவன் அப்போது விரைவாக நடந்து எஞ்சினை நெருங்கினான். அவன் விளிம்பு வைத்த தொப்பி அணிந்திருந்தான். செம்பட்டை மயிர்க் கற்றை நெற்றிமேல் படிந்திருந்தது. பிடியைப் பற்றிக் கொண்டு ஏறி எஞ்சினுக்குள் வந்தான்.

''வணக்கம். நான் இவனேவ். உங்கள் எஞ்சினில் கரி தள்ளுவதற்கு வந்திருக்கிறேன்'' என்றான்.

''வணக்கம் கரிதள்ளும் தோழரே'' என்று வரவேற்றார் கூகோ யாலவா.

அந்தத் தொழிலாளி வேறு யாரும் இல்லை, லெனின்தான். அவர் மேல்கோட்டைக் கழற்றி வைத்துவிட்டு உண்மையான கரிதள்ளுபவன் போல அடுப்பருகே இருந்த கூண்டில் விறகுக் கட்டைகளை அடுக்கலானார். எஞ்சின் சுருக்கமாக ஊதல் ஒலித்துவிட்டு நகர்ந்தது. காடு அருகாக ஓடிற்று.

பெலஓஸ்திரவ் நிலையம் வரை கவலை இல்லாமல் பயணம் செய்தார்கள். பெலஓஸ்திரவ் என்பது எல்லை ரயில் நிலையம். போலீஸ்காரர்களும் இராணுவக் கல்லூரி மாணவர்களும் நிலையத்தில் கசகசவென்று நிறைந்திருந்தார்கள். வண்டி நின்றதும் நிற்காததுமாக அவர்கள் ஆளுக்கு ஒரு பெட்டியாக ஏறிப் பயணிகளின் சீட்டுக்களைச் சரிபார்க்கத் தொடங்கினார்கள். விசில்கள் ஊதின. இருட்டில் கை விளக்கை ஆட்டியவாறு வண்டி நெடுக ஓடினான் கார்டு.

''நம் எஞ்சினுக்கும் இவர்கள் வந்துவிடக் கூடாதே. என்னதான் அனுமதிச் சீட்டு இருந்தாலும் போலீஸ் ஒற்றர்களிடமிருந்து தூர விலகுவதே மேல்'' என்று கலக்கத்துடன் சொன்னார் கூகோ யாலவா.

தண்டவாளத்தில் குதித்து, எஞ்சினைப் பெட்டிகளிலிருந்து கழற்றித் தண்ணீர்க் குழாய்ப் பக்கம் வேகமாக ஓட்டிச் சென்றார். தண்ணீர் பிடிக்கும் பாவனையில்.

முதல் மணி அடித்தது. போலீஸ்காரர்கள் ரயில் பெட்டிகளில் விடாது குடைந்து துருவிக் கொண்டிருந்தார்கள். யாரையோ தேடினார்கள் அவர்கள். நிலையம் முழுவதிலும் ஒரே கிளர்ச்சி.

இரண்டாவது மணி அடித்தது. புறப்படும் நேரத்துக்கு ஒரு நிமிடம் முன்புதான் கூகோ யாலவா தம் எஞ்சினைப்

பெட்டிகள் அருகே ஓட்டிவந்து இணைத்தார். மூன்றுவது மணி அடித்தது. எஞ்சின் குறும்புத்தனமாகச் சீழ்க்கை அடித்தது. ''ஏமாந்தீர்களா, சோணங்கிகளா!'' என்று போலீஸ்காரர்களைக் கிண்டல் செய்தார் கூகோ யாலவா.

ரயில் மேலே சென்றது. இரவு அதை விரைந்து எதிர் கொண்டது. விண்மீன்கள் நிறைந்த ஆகஸ்டு வானம் அதை நோக்கி ஓடி வந்தது. லெனின் எஞ்சின் அறைக்கு வெளியே தலையை நீட்டினார். குளுமையான காற்று முகத்தில் அடித்தது.

விரைவில் அவர்கள் ஃபின்லாந்து சேர்ந்தார்கள்.

விந்தைப் புகலிடம்

ஃபின்லாந்தின் தலைநகரம் ஹெல்ஸிங்ஃபோர்ஸில் அந்தக் காலத்தில் போலீஸ் தலைமை அதிகாரியாக இருந்தவர் குஸ்தாவ் ஸெம்யோனவிச் ரோவியோ என்னும் இளைஞர். ஒரு நாள் ரோவியோ கவர்னர் ஜெனரலின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டார். ஃபின்லாந்து அப்போது ருஷ்ய அரசின் ஒரு பகுதியாக இருந்தது. எனவே கவர்னர் ஜெனரல் ருஷ்யர்.

பலகைபோல நேராயிருந்த கவர்னர் ஜெனரல், தோட்களை இன்னும் நேராக நிமிர்த்திக் கொண்டு பயமுறுத்தும் குரலில் மெதுவாகச் சொன்னார்:

''பெத்ரோகிராதிலிருந்து இரகசிய உத்தரவு வந்திருக்கிறது.''

''சொல்லுங்கள்'' என்றார் போலீஸ் தலைமை அதிகாரி.

''லெனின் யார் தெரியுமா?'' என்று கேட்டார் கவர்னர் ஜெனரல்.

ரோவியோ சற்று தயங்கினார், மழித்த மோவாயைத் தடவிக் கொண்டார், பின்பு நன்றாகத் தெரியும் என்று பதிலளித்தார். தாற்காலிக அரசாங்கம் லெனினைக் கைது செய்ய விரும்புகிறது, ஆனால் அவரைக் கண்டுபிடிக்க அதனால் முடியவில்லை என்று எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வெளியாகியிருக்கிறதே.

''லெனின் இங்கே, ஹெல்ஸிங்ஃபோர்ஸில் மறைந் திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது'' என்றூர் கவர் னர் ஜெனரல்.

ரோவியோ ஒன்றும் பேசாமல், மேலே என்ன வரப் போகிறது என்று எதிர்பார்த்தவாறு கவர்னர் ஜெனரலை உற்று நோக்கினர்.

''நீங்கள் உடனடி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

''கட்டாயமாக!''

''லெனின் உங்கள் கையில் அகப்பட்டால்....''

''லெனின் அகப்பட்டால் உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.''

''ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: லெனினைப் பிடிப்பதற்குப் பெருத்த பரிசு வழங்கப்படும்'' என்று கருணையுடன் உற்சாகம் ஊட்டினர் கவர்னர்.

குஸ்தாவ் ரோவியோ தலை வணங்கிவிட்டு கவர்னர் ஜெனரலின் அலுவல் அறையிலிருந்து வெளியேறினர். அவரது கன்னப் பொருத்துக்களில் வியர்வை துளித்து நின்றது. கட்டம் போட்ட பெரிய கைக் குட்டை யால் வியர்வையைத் துடைத்துக் கொண்டார் ரோவி யோ.

கவர்னர் ஜெனரலிடமிருந்து அவர் தம் அலுவலகம் செல்லாமல் ரயில் நிலையத்துக்குப் போனர். ஹெல்ஸிங்ஃ போர்ஸ்-பெத்ரோகிராத் மெயில் புறப்பட இன்னும் நேரம் இருந்தது, ஆனல் பெட்டிகள் இணைக்கப்பட்டுப் பிளாட் பாரத்தில் தயாராக நின்றன. ரயில் தபால்காரர் பிளாட் பாரத்தில் ரோவியோவுக்காகக் காத்திருந்தார். அவர் தோற்றத்தில் அசிரத்தையும் உறக்கமயக்கமும் காணப் பட்டன. உலகில் எதுவுமே அவருக்கு வியப்பூட்ட முடி யாதுபோல் இருந்தது. இருவரும் நிதானமாகப் பிளாட் பாரத்தில் நடந்தார்கள். தருணம் பார்த்து ரோவியோ பையிலிருந்து ஒரு உறையை எடுத்துத் தபால்காரரிடம் கொடுத்தார். தபால்காரர் எதிர்பாரா விரைவுடன் அதைச் சட்டை மார்புக்குள் செருகிக் கொண்டார்.

''அதே ஆளிடமிருந்து முந்திய முகவரிக்கு'' என்றூர் ரோவியோ.

''புரிகிறது'' என்று சொல்லிவிட்டுத் தபால்காரர் ரோவியோவிடம் இன்னொரு உறையைக் கொடுத்தார். ரோவியோ அதைச் சட்டெனப் பையில் வைத்துக்கொண்டார். அதன்பின் அவர்கள் பிரிந்தார்கள். ஆனால் போலீஸ் தலைமை அதிகாரி அப்போதும் தம் அலுவலகத்துக்குப் போகவில்லை. அவர் மளிகைக் கடைக்குச் சென்றார். பத்து முட்டைகளும் கால் ராத்தல் வெண்ணெயும் ரொட்டியும் வாங்கிக் கொண்டார்.

''இப்போது வீட்டுக்கு'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார் ரோவியோ. பிரதான வீதிகளை ஒரு புறம் விட்டு விட்டுச் சந்துகள் வழியே சுற்றி வளைத்துச் சென்றார் அவர். கவனமாகப் பார்த்தால் அவருடைய சில செய்கைகள் விளங்காதவையாக இருக்கும். ஆனால் போலீஸ் தலைமை அதிகாரியைக் கண்காணிப்பது யார்? நகரத்தில் எல்லாம் ஒழுங்காக இருக்கும்படி பார்த்துக் கொள்வது அவர் வேலை ஆயிற்றே.

ஹாக்னெஸ் சதுக்கத்தில் ஒரு பெரிய வீட்டின் ஐந்தாவது மாடியில் ஓர் அறையும் சமையற்கட்டும் கொண்டது அவருடைய இருப்பிடம். ''இரகசிய உத்தரவா? அப்படிச் சொல்லும் ஐயா!'' என்று, கவர்னர் ஜெனரலுடன் நடந்த உரையாடலை நினைவுபடுத்திக் கொண்டவாறு மாடிப்படி ஏறினார் ரோவியோ. அவர் வீட்டில் அப்போது என்ன நடந்து கொண்டிருந்தது என்பது கவர்னர் ஜெனரலுக்குத் தெரிந்தால்! அங்கே, ஒரு மேஜை அருகே உட்கார்ந்து, **அரசும் புரட்சியும்** என்னும் நூலை எழுதிக் கொண்டிருந்தார்—லெனின்! ஜூரிக்கில் எழுதப்பட்ட குறிப்புக்கள் அடங்கிய நீலநோட் புத்தகமும் ஏரிக்கரைக் குடிசையிலிருந்து இங்கே குடி பெயர்ந்திருந்தது.

ரோவியோ எச்சரிக்கும் முறையில் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். லெனின் துள்ளி எழுந்தார்.

''தபால் இருக்கிறதா?''

''தபால் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் முதலில் ஆகாரம் செய்து கொள்வோமே, விளாதீமிர் இல்யீச்.''

''இல்லை, முதலில் தபாலைப் பார்ப்போம். தாருங்கள், தாருங்கள்.''

கோட்டின் மார்புப் பைக்குள்ளிருந்து ரோவியோ உறையை எடுப்பதற்குள் லெனின் பொறுமை இன்றிக் கைகளைத் தேய்த்துக் கொண்டார்.

''உங்கள் உறைக்கு மாற்றுக இதைப் பெற்றுக் கொள்ளுங்கள், விளாதீமிர் இல்யீச்.''

உறையில் சில கடிதங்கள் இருந்தன. லெனின் ஒன்றைப் பிரித்து மளமளவென்று படித்தார். பின்பு மற்றொன்றைப் படித்தார். இது இரசாயன மையால் எழுதப் பட்டது. விளக்கு ஏற்றிக் காகிதத்தை அதன் சூட்டில் காட்டியதும் வரிகளுக்கு நடுவே எழுத்துக்கள் புலப்பட்டன.லெனின் அவற்றைப் படித்துவிட்டு, ''ஆ, அப்படியா! சுவையான சேதி!'' என்றார்.

செய்தி இதுதான்: பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும் சோவியத்துக்கள்மீது போல்ஷிவிக்குகளின் செல்வாக்கு மேலும் மேலும் வலுவடைந்து வருகிறது. சோவியத்துக்கள் போல்ஷிவிக்குகளுடையவை, நம் முடையவை ஆகி வருகின்றன.பூர்ஷ்வா ஆட்சிமீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். நம் மீது மக்களின் நம்பிக்கை மேலும் மேலும் அதிகரிக்கிறது—இவ்வாறு பெத்ரோகிராதிலிருந்து எழுதப்பட்டிருந்தது.

போலீஸ் தலைமை அதிகாரி கவர்னர் ஜெனரலிடம் போகும்போது வழக்கமாக அணியும் கோட்டைக் கழற்றி விட்டு, சட்டைக் கைகளை மடித்து விட்டுக்கொண்டு சமையற்கட்டுக்குப் போய் முட்டைப் பொரியல் செய்வதில் முனைந்தார்.

இருந்தாலும் விந்தைதான். இந்தப் போலீஸ் தலைமை அதிகாரி கவர்னர் ஜெனரல் தரப்பில் சேராமல் லெனினுக்கு ஆதரவாய் இருந்தது ஏன்?

ஏனென்றால் அவர் வழிவழியாகப் பாட்டாளிகளாக இருந்த குடும்பத்தில் பிறந்தவர், கடைச்சல் தொழிலாளராக வேலை செய்தவர், பதினெட்டு வயதுப் பருவத்திலிருந்தே புரட்சி இயக்கத்தில் பங்கு கொண்டவர். ஜார் அகற்றப்பட்ட பின்பே தொழிலாளர்கள் அவரை மிலீஷியாத் தலைமை அதிகாரியாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

பழைய பதவி முறைப்படி அவர் போலீஸ் தலைமை அதிகாரி என்று அழைக்கப்பட்டார். புது முறைக்குச் சரி

வரப் பழகாத கவர்னர் ஜெனரலும் வேறு பலரும் அவரை அவ்வாறே அழைத்தார்கள்.

முட்டைப் பொரியல் தயாரித்த பின் ரோவியோ லெனினை உணவு கொள்ள வரும்படி அழைத்தார்.

கிடைத்த செய்திகள் காரணமாக லெனின் மிகுந்த உள மகிழ்ச்சி கொண்டிருந்தார். விரைவில் அவர் ருஷ்யா திரும்புவார்! போல்ஷிவிக் கட்சி தொழிலாளி வர்க்கத்தைக் கிளர்ச்சிக்குத் தூண்டி எழுப்பும். தொழிலாளர்கள் தாற்காலிக அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடுவார்கள். தொழிலாளர் ஆட்சி நிலைபெறும். இதுபற்றிக் கட்டுரைகளில் எழுதி அவற்றை இரகசியமாகப் பெத்ரோகிராதுக்கு அனுப்பினர் லெனின். தமது நூலிலும் இதை எழுதினர் அவர்.

ரோவியோ முட்டைப் பொரியலை ஒரு கை பார்த்த வாறே கவர்னர் ஜெனரலைப் பற்றிச் சொன்னர். லெனின் முடிவுவரை கவனித்துக் கேட்டுவிட்டு, கண்களைத் தந்திரமாகச் சுருக்கித்தார்:

''வாழ்க்கையில் எத்தனையோ விபரீதங்கள் நேர்கின்றன. வீட்டுக்காரர் கவர்னர் ஜெனரலிடம் அறிக்கைகள் சமர்ப்பிக்கிறார், அதே சமயம் தன் வீட்டில் யாருக்கு இடம் கொடுக்கிறார்?''

''யாருக்காவது? மரியாதைக்குரிய ஃபின்லாந்துப் பாதிரியாருக்குத்தான்'' என்று கலங்காமல் பதிலளித்தார் ரோவியோ.

லெனின் குதூகலமாக வாய்விட்டுச் சிரித்தார். ஹெல்ஸிங்ஃபோர்ஸுக்கு அவர் பாதிரியார் வேஷத்தில் வந்தது உண்மையே. குடிசை வாழ்வுக்குப் பிறகு லெனின் சிறிது காலம் ஒரு கிராமத்தில் தங்கியிருந்தார். ஃபின்லாந்துத் தோழர்கள் பயில்முறை நடிகர் குழு ஒன்றை அங்கே அனுப்பி வைத்தார்கள். நடிகர்கள் தொழிலாளர்கள், சமூக-ஜனநாயகவாதிகள். அவர்கள் லெனினுக்கு மிகச் சாமர்த்தியமாக மாறுவேஷம் போட்டுவிட்டார்கள். பாதிரியார் அணியும் நீண்டகோட்டையும் உயர்ந்த தொப்பியையும் நகரத்திலிருந்து எடுத்து வந்தார்கள். அடர்ந்த புருவங்களை லெனினுக்கு ஒட்டினர்கள், பொய் மயிர் டோப்பா அணிவித்தார்கள், ஒப்பனை செய்தார்கள்....அப்

புறம் லெனின் சர்ச்சில் பிரார்த்தனை நடத்துவதற்குத் தாராளமாகப் போகலாம் போல உருமாறி விட்டார்! இப்போதோ, அவர் விரைவில் புது வேஷம் போட்டுக் கொள்வது அவசியம் ஆகிவிட்டது.

ஆம், விரைவில். ஒரு நாள் குஸ்தாவ் ரோவியோ லெனினை மயிர் வினைஞரிடம் இட்டுச் சென்றார். மயிர் வினைஞர் பீட்டர்ஸ்பர்கில் பிறந்து வளர்ந்தவர். பழைய நாடக மன்ற ஒப்பனைக் கலைஞர் அவர். தலைநகரில் எத்தனையோ பிரபுக்களையும் சீமான்களையும் அவர் அறிந்திருந்தார். அவர்களது தாடிகளுக்குச் சாயம் ஏற்றி, பொய்மயிர் டோப்பா அணி வித்து வாலிபத் தோற்றம் கொள்ளச் செய்து வந்தார் அவர்.

''டோப்பா இல்லாமலே நீங்கள் இளைஞராகவே தோன்றுகிறீர்கள்'' என்று லெனினுக்கு ஆறுதல் மொழி கூறினார் ஒப்பனைக் கலைஞர்.

''அதனால்தான் முதியவன் ஆக விரும்புகிறேன்'' என்றார் லெனின்.

''அட, எதற்காக? யாருக்காக?'' என்று ஆச்சரியப் பட்டார் மயிர் வினைஞர்.

''பார்க்கப் பெருமிதமாய் இருக்குமே, அதற்காகத் தான். ஒரு அறுபது வயது ஆனவன்போல நரைத்தலையன் ஆக்குங்கள் என்னை'' என்று புன்னகையோடு சொன்னார் லெனின்.

''அறுபது வயது ஆனவனாகவா? நரைத்தலையன் ஆகவா? ஒருபோதும் மாட்டேன்! இன்னும் இளமை மாறாத மனிதனைக் காலத்துக்கு முன்பே கிழவன் ஆக்க நான் ஒருப்படுவேனா? ஒரு நாளும் மாட்டேன்!'' என்று கொதித் தெழுந்தார் மயிர் வினைஞர். ''என் தொழில் மனிதர்களை மறுபடி இளைஞர்கள் ஆக்குவதுதான்.''

''சிறந்த தொழில். ஆனால் என் விஷயத்தில் விதி விலக் காக நடந்து கொள்ளுங்கள்'' என்று புன்முறுவலுடன் வற்புறுத்தினார் லெனின்.

மயிர் வினைஞர் ஊஹூம் மாட்டேன் என்று சொல்லிப் பார்த்தார். ஆனால் லெனின் சிரித்துக் கொண்டே அவரை வற்புறுத்தி இணங்க வைத்தார். குஸ்தாவ் ரோவியோ எண்ணமிட்டார்:

''முடியையும் உடைகளையும் இப்படி மாற்றியவாறு லெனின் இன்னும் வெகு காலம் வேஷம் போட வேண்டுமா? இன்னும் வெகு காலம் இப்படி அலைந்து கொண்டிருக்க வேண்டுமா?''

இன்னொரு தலைமறைவு வாழ்க்கை

வீபர்கின் பழங்கால வீதிகளில் குளிர் காற்று வீசிற்று. கூதிர்காலத்தில் இத்தகைய குளிர் நாள் ஒன்றில் எய்ஞே ராஹியா வீபர்க் வந்தார். நெடிய மேனி, குதூகல சுபாவம், சமயோசித புத்தி, இவை ராஹியாவின் சிறப்புக்கள்.

ராஹியா பெத்ரோகிராத் தொழிற்சாலை ஒன்றின் இளம் தொழிலாளர், போல்ஷிவிக். ஸைஸ்த்ரரேத்ஸ்க் ஆயுதத் தொழிற்சாலைத் தொழிலாளர் யெமெல்யானவும் இரண்டு ஃபின்லாந்துக்காரர்களும் கோடைகால இறுதியில் லெனினை ரஸ்லீவ் ஏரிக் கரையிலிருந்து காடு வழியாக வழி நடத்தி வந்தார்கள் அல்லவா? அந்த ஃபின்லாந்துக் காரர்களில் ஒருவர் எய்ஞே ராஹியா. போல்ஷிவிக் கட்சி மத்தியக் கமிட்டி ராஹியாவை லெனினுடன் தொடர்பு ஆளாக நியமித்திருந்தது.

இப்போது ராஹியா லெனினைப் பெத்ரோகிராதுக்கு அழைத்துப் போவதற்காக வீபர்க் வந்தார். ஹெல்ஸிங் ஃபோர்ஸிலிருந்து ருஷ்யாவுக்கு அருகே உள்ள இந்த இடத் துக்கு லெனின் குடி மாறியிருந்தார். ருஷ்யா போக ஆவல் கொண்டு துடித்தார் அவர். இப்போது அந்த நாள் வந்து விட்டது.

லெனின் நிம்மதி அற்று இருந்தார். ராஹியாவோ சிறிதும் சலனம் அற்றவர்போல் தோன்றினர்.

''ரயில் நிலையம் போவோமா, விளாதிமிர் இல்யீச்?''

இப்படிக் கேட்டுவிட்டு நீண்ட கால்களை எடுத்து வைத்து விடுவிடென்று நடை போடலானார் ராஹியா. உண்மையில் அவர் பதற்றம் கொண்டிருந்தார். அதை வெளியே காட்டவில்லை, அவ்வளவுதான். லெனினும் தம் நிம்மதியின்மையை வெளிக்காட்டாமல் மறைத்தார்.

அவர்கள் ரயிலில் ஏறி ஒரு ஃபின்லாந்து நிலையம் வரை பயணம் செய்தார்கள். பெட்டியில் இருந்தவர்கள் எல்லோரும் ஃபின்லாந்துக்காரர்கள், லெனினுக்கோ ஃபின்னிய மொழி தெரியாது. ஆகவே, மற்றவர்கள் கவனத்தை ஈர்க்காமலிருக்கும் பொருட்டு அவர் பேசாதிருக்க நேர்ந்தது.

தம் கோட்டுப் பையில் சாவி பத்திரமாய் இருக்கிறதா என்று அடிக்கடி சரி பார்த்துக் கொண்டார் லெனின். பெத்ரோகிராதின் தொழிலாளர் வட்டாரத்தில் லெனினுக்காக அமர்த்தப்பட்டிருந்த மறைமுக இருப்பிடத்தின் சாவி அது.

ரயில் வண்டி நிலையத்தை நெருங்கியது. ராஹியா சட்டென்று எழுந்து வண்டியிலிருந்து இறங்கினார். லெனின் அவர் பின்னே நடந்தார். பிளாட்பாரத்தில் இறங்கியதும் லெனினின் இதயம் துள்ளியது. தண்டவாளத்தில் நின்றது பெத்ரோகிராத் செல்லும் கோடை வாசஸ்தல ரயில். அதன் எஞ்சினின் நம்பர் 293. ''வணக்கம், பழைய நண்பா! ஒரு முறை என்னைத் தப்புவித்தாய். இன்னொரு தரமும் தப்புவி.''

எஞ்சின் அறை ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தார் டிரைவர் கூகோ யாலவா. அவர் முகம் கண்டிப்பும் கடுகடுப்புமாக இருந்தது, ஆனால் ராஹியாவையும் அறிமுகமான கரி தள்ளுபவரையும் கண்டதும் அவர் புன்னகை செய்தார். ''நம் கரிதள்ளுபவர் நரைத்துப் போனாரே, பாவம்!'' என்றார்.

ஆக, எந்த எஞ்சினில் போனாரோ அதே எஞ்சினில், அதே உதேல்னயா நிலையத்துக்கு ஃபின்லாந்திலிருந்து திரும்பி வந்தார் லெனின்.

உதேல்னயா நிலையத்திலிருந்து குறித்த இடத்துக்கு வெட்ட வெளியில் சுமார் பத்து கிலோமீட்டர் நடக்க வேண்டும். கூதல் அடித்த அந்த அக்டோபர் மாலையில் வீதிகள் ஏற்கனவே வெறிச்சோடிக் கிடந்தன. காற்றுதான் சீழ்க்கையுடன் பவனி வந்து கொண்டிருந்தது.

ஆனால் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா குறித்த இடத்தில் காத்திருந்தார். துணிக் கோட்டும் நமுதாத் தொப்பியும் அணிந்திருந்தார் அவர். லெனின் அவருடைய

கையைப் பற்றினர். கையுறை அணியாமையால் அது குளிரில் விரைத்திருந்தது. தம் சௌகரியங்களைக் கவனித்துக் கொள்ள நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவுக்கு ஒருபோதுமே வாய்த்தது இல்லை! உழைப்பு, உழைப்பு, உழைப்பு, புரட்சிக்காக. கட்சி எங்கே அமர்த்தினாலும் சரி, எங்கே அனுப்பினாலும் சரி.

ஸெர்தபோல்ஸ்கயா வீதியும் பல்ஷோய் ஸம்ப்ஸோனியெவ்ஸ்கீ சாலையும் சந்திக்கும் முனையில், கருங்கும்மென்ற தோற்றத்துடன் நின்றது ஒரு செங்கல் கட்டிடம். அற்றலைந்த மர வீடுகளுக்கு நடுவே அந்த நான்கு மாடிக் கட்டிடம் பிரமாண்டமானது போலக் காணப்பட்டது.

லெனின் வாழ்நாள் முழுவதும் அங்கே நடமாடிப் பழகியவர்போல உறுதியுடன் அடிவைத்து அந்த வீட்டின் புகு வாயிலை நோக்கிச் சென்றார். எய்னே ராஹியாவின் அன்றையக் கடமை முடிந்துவிட்டபடியால் அவர் ஸம்ப்ஸோனியெவ்ஸ்கீ சாலையில் திரும்பிவிட்டார். லெனினை, நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவுக்கு முன்னே நாலாவது மாடி ஏறினர். கதவைச் சாவியால் திறந்தார். கதவை அடுத்து இருந்தது இடைவழி. இந்த இடைவழியின் கோடியில் இருந்தது அவருடைய அறை. இடது பக்கம் நான்காவது. வீட்டில் சொந்தக்காரி மார்கீத்தா வஸீலியெவ்ன ஃபோஃபனவா மட்டுமே இருப்பதாக நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன சொல்லியிருந்தார். அவர் நதேழ்தாவின் தோழி.

அனால் இது என்ன? லெனின் கதவைத் திறந்தார். குரல்கள் கேட்டன. ஓர் அறையின் கதவு விரியத் திறந்திருந்தது. உள்ளிருந்து அகன்ற வெளிச்சம் நடைவழியில் விழுந்தது. சாப்பாட்டு மேஜைக்கு மேலே தொங்கு விளக்கு பிரகாசமாக எரிந்தது. மேஜையைச் சுற்றிச் சில மாதர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் பள்ளி ஆசிரியைகள் என்பது தெரிந்தது.

''அன்பார்ந்த நண்பர்களே, நமது போதனை முறையின் நோக்கம்....'' என்ற சொற்கள் லெனின் காதில் பட்டன.

நம்பவே முடியவில்லை. ஆனாலும் வீட்டில் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. தலைமறைவாக வசிக்க வந்த வீட்டில். அதிலும் லெனின் வந்த அதே சமயத்தில்!

லெனின் விடு விடென்று நடைவழியின் மறு கோடிக்கு நடந்தார். அவர் சிறிது கூனிக் கொண்டார். நரைமயிர் டோப்பா அணிந்திருந்தார். எனவே லேசான உடம்பும் துடியான போக்கும் உள்ள கிழவராகக் காட்சி அளித்தார்.

லெனின் தங்க வேண்டிய அறைக்குள் போய்க் கதவை மூடியபின், ''அடேயப்பா, நானும் மர்கரீத்தாவும் எப்படிப்பட்ட முட்டாள்தனம் செய்துவிட்டோம்!'' என்று அங்கலாய்த்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

''ஆமாம்'' என்றார் லெனின்.

அதற்கென்ன, பரவாயில்லை, எல்லாம் நேராகிவிடும் என்று நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுக்கு ஆறுதல் சொல்ல லெனின் முற்படவில்லை. எல்லாம் நேராகிவிடலாம். ஆயினும் இவ்வளவு அபாயம் நிறைந்த நேரத்தில் இப்படி ஆபத்தை மேற்கொள்வது கூடாது அல்லவா?

''இதுதான் கடைசித் தலைமறைவு வாழ்க்கை என்று நம்புகிறேன்'' என்றார் லெனின்.

ஜன்னலைத் திறந்தார். கீழே காற்று மரங்களில் இரைந்தது.

''இதுதான் கடைசித் தலைமறைவு வாழ்க்கை என்று நம்புகிறேன்'' என்று மறுபடி சொன்னார் லெனின்.

''மிகவும் அபாயமானது, மிகவும்!'' என்று அடக்க மாட்டாமல் கூறினார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

அவர் விழிகளில் ஒளிவின்றித் தென்பட்ட கலவரத்தை லெனின் கண்டார். ஆம், ஏரிக்கரைக் குடிசையையும் ஹெல்சிங்ஃபோர்ஸையும் விட இங்கே, ஸெர்தபோல்ஸ்கயா வீதியில் அபாயம் அதிகமாய் இருந்தது. தாற்காலிக அரசாங்கத்தின் உளவாளிகள் ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வோர் அடியிலும் மறைந்திருந்தார்கள்.

ஃபின்லாந்திலிருந்து திரும்பி வந்த லெனின் எங்கே வசிக்கிறார் என்று ஒருவருக்குமே, கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுக்குக்கூடத் தெரியாது—அந்த அளவுக்கு அபாயமாய் இருந்தது இங்கே.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுக்கும் தொடர்பு ஆள் எய்னே ராஹியாவுக்கும் மட்டுமே இந்தத் தகவல் தெரியும்.

புரட்சிக்கு முன்

சில நாட்களுக்குப் பிறகு எய்னே ராஹியா லெனினை ஒரு இரகசியக் கூட்டத்துக்கு அழைத்துப் போவதற்காக வந்தார். இருட்டி வெகு நேரம் ஆகிவிட்டது. கடைகள் மூடப்பட்டுவிட்டன. லெனின் இருந்த வீட்டுக்குச் சற்று தூரத்தில், தங்க முலாம் பூசிய வளைய பிஸ்கோத்துச் சின்னம் பொறித்த அடையாளப் பலகை ரொட்டிக் கடையைக் குறித்தது. அதன் கதவு பூட்டியிருந்தது. ஜன்னல்கள் பல கைகளால் அடைத்து மூடப்பட்டிருந்தன. ஆயினும் அடைத்த ஜன்னல்களுடைய ரொட்டிக் கடை வாயிலிலிருந்து நீண்ட வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். ஆட்கள், பெரும்பாலும் மாதர்கள். தலைகளைச் சால்வைகளால் போர்த்துக் கட்டிக்கொண்டு குளிரில் முனகியவாறு பொறுமையுடன் நின்று கொண்டிருந்தார்கள் பெண்டிர். அடுத்த ரொட்டிக் கடையிலும் அப்படியே. மூன்றுவதிலும் இதே காட்சி. இரவு நேரப் பெத்ரோகிராத் நகரம் சோர்ந்த, பேச்சற்ற ஆள் வரிசைகளால் நிறைந்திருந்தது. ரொட்டி சீட்டுக்களின்படி கொடுக்கும் முறை வெகு நாட்களாகவே நடப்பில் இருந்தது. தலைக்கு ஒரு நாளைக்கு அரை ராத்தல், சில வேளைகளில் கால் ராத்தல்கூடத் தரப்பட்டது. அதையும் முன்னரே காத்திருந்து வாங்கிக் கொள்ள வேண்டும். நேரம் தாழ்த்துவிட்டால் போயிற்று, என்ன விலை கொடுத்தாலும் ரொட்டி கிடைக்காது. பெண்கள் இரவு முழுவதும் ரொட்டிக் கடை வாயிலில் வரிசையாக நிற்பார்கள். அவர்கள் பாடு மிகக் கடினம்! ஆண்கள் போர் முனையில் இருந்தார்கள். ஜெர்மானியருடன் யுத்தம் மேலும் நீடித்தது. கணவர்களும் புதல்வர்களும் போர் முனைகளில் வீணே மடிந்து கொண்டிருந்தார்கள்.

''ஊருக்கு உள்ளேயும் ஒன்றும் நலமாயில்லை. முதலாளிகள் தொழிற்சாலைகளை மூடுகிறார்கள். தொழிற்சாலைகள் வேலையின்றி நிற்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம்'' என்றார் எய்னே ராஹியா.

நாட்டில் விபத்து நிலைமை நிலவியது. ரயில்கள் எப்படியோ போய் வந்து கொண்டிருந்தன. நேர அட்டவணை பயனற்றுவிட்டது. ரயில்கள் தொழிற்சாலைகளுக்கு

நிலக்கரியும் கச்சாப் பொருள்களும் கொண்டுபோகவில்லை. நகரங்களுக்கு அவை ரொட்டி எடுத்துச் செல்லவில்லை.

''எதற்காகக் காத்திருப்பது?'' என்றூர் எய்னே ராஹியா.

''போல்ஷிவிக் இதை அறிய வேண்டும். காத்திருக்க வேண்டாம், தொழிலாளர் புரட்சியை நடத்த வேண்டும்'' என்று கடுமையாகச் சொன்னர் லெனின்.

சோவியத்துக்கள் போல்ஷிவிக்குகளுடையவை ஆக வகை செய்ய வேண்டும் என்று பிப்ரவரிப் புரட்சியின் தொடக்கத்திலிருந்தே லெனின் வற்புறுத்தி வந்தார். அப்படிச் செய்தால் தொழிலாளி வர்க்கம் சமாதான முறையில் ஆட்சி அதிகாரத்தை ஏற்க முடியும். ஆனல் மென்ஷிவிக்குகள் இணங்கவில்லை, இடைஞ்சல் செய்தார்கள்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. ஆயுத எழுச்சி நடத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேளை வந்து விட்டது. தாமதம் செய்யாமல்!

அந்த அக்டோபர் மாத இரவில் நடந்த இரகசியக் கூட்டத்துக்குக் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். லெனின் வருவார் என்று எல்லோரும் அறிந்திருந்தார்கள். வெகு காலமாக அவர்கள் அவரைப் பார்க்கவில்லை, எனவே ஆவலுடன் காத்திருந்தார்கள். லெனினை, நரை மயிர் டோப்பாவில் அடையாளம் காண முடியாதபடி மாறியிருந்தார். ஆயினும் குரலும் கருத்துக்களும் அறைகூவல்களும் சித்த உறுதியுமோ லெனினுக்கே உரியவை.

ஆயுத எழுச்சிக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்! படை வீரர்களைத் தொழிலாளர் தரப்புக்கு வரும்படிச் செய்ய வேண்டும். பல்வேறு பிரதேசங்களுக்கும் பிற நகரங்களுக்கும் சக்தி மிக்க போல்ஷிவிக்குகளை அனுப்ப வேண்டும். ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் தொழிலாளர் செங்காவற் படைப்பிரிவுகளுக்கு ஆயுதங்கள் வழங்கி அவற்றை மேலும் வலுப்படுத்தவேண்டும். படைப் பிரிவுகளுக்கு அறிவுள்ள தலைவர்களை நியமிக்க வேண்டும்.

செங்காவற் படைப் பிரிவுகள் எங்கே செல்லும் என்பதைத் திட்டவட்டமாக வரையறை செய்ய வேண்டும்.

போராட்டம் தொடங்குவதற்கான நேரம் முன்கூட்டித் தீர்மானிக்கப்பட வேண்டும்.

எழுச்சியை இராணுவ-புரட்சிக் கமிட்டி தலைமை தாங்கி நடத்த வேண்டும்.

இதுதான் லெனின் முன்வைத்த திட்டம். மத்தியக் கமிட்டி இதை விவாதித்தது. நல்ல திட்டம். எல்லாம் சரியாக, தெளிவாக இருந்தன. எல்லோரும் அதற்கு இசைந்தார்கள்.

ஆனால் மத்தியக் கமிட்டியில் இரண்டு உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களை போல்ஷிவிக்குகள் என்று வீணாக அழைத்துக் கொண்டார்கள். பாட்டாளி மக்களின் எழுச்சியை அவர்கள் வன்மத்துடன் எதிர்த்தார்கள். லெனினுடைய, கட்சியினுடைய மாபெரும் திட்டத்துக்கு அவர்கள் இணங்கவில்லை. அவர்கள் யார்? ஸினேவியெவ், காமினெவ் என்பவர்கள் அவர்கள்.

ஸினேவியெவும் காமினெவும் வாதாடுவதில் வல்லவர்கள். சிறந்த பேச்சாளர்கள். ஆனால் எழுச்சி நடத்தும் கட்டம் வந்ததும் அவர்கள் கிலி அடைந்தார்கள்.

''தொழிலாளி வர்க்கம் அரசை நிர்வகிக்க வல்லதா?'' ஸினேவியெவும் காமினெவும் இதை நம்பவில்லை.

ஆக இப்போது, நிர்ணயகரமான தருணத்தில் அவர்கள் எழுச்சித் திட்டத்தை எதிர்த்தார்கள். அதோடு நிற்கவில்லை அவர்கள். போல்ஷிவிக்குகள் எழுச்சிக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு மென்ஷிவிக் செய்தித்தாளில் விவரித்தார்கள். எங்கே, எப்படி, எப்போது என்ற எல்லா விவரங்களையும் அம்பலமாக்கிவிட்டார்கள் ஸினேவியெவும் காமினெவும். எல்லாத் தகவல்களையும் தாற்காலிக அரசாங்கம் தெரிந்து கொள்ளும்படி வெளிப்படுத்தி விட்டார்கள். தங்களைப் பற்றி, நாங்கள் எழுச்சிக்கு எதிராயிருக்கிறோம் என்று எழுதினார்கள்.

தோழர்களை முதலாளிகளுக்குக் காட்டிக்கொடுத்தார்கள். இல்லை, அவர்கள் தோழர்கள் இல்லை!

''மறைக்காமல் சொல்லுகிறேன், இவர்கள் இருவரையும் தோழர்களாக நான் இனி மதிக்கவே மாட்டேன்... கடினமான வேலை. கடினமான பொறுப்பு. படுமோசமான துரோகம்'' என்று கோபத்துடன் எழுதினார் லெனின்.

ஆனால் லெனின் தயங்கவில்லை. எழுச்சி நடந்தே தீரும். மத்தியக் கமிட்டி எழுச்சிக்கு ஆயத்தங்கள் செய்வதில் ஒற்றுமையாக முனைந்தது.

ஸ்மோல்னீயில்

நெவா ஆற்றின் பெருக்கு திடீரெனத் திரும்பிலாதகா ஏரியை நோக்கிப் பாயும் இடத்தில், ஆற்றின் கரையில் நெடுங்காலத்துக்கு முன் கீல் காய்ச்சும் இடம் இருந்தது. பிரமாண்டமான கொப்பரைகளில் கீல் காய்ச்சுவது வழக்கம்.

கீல் காய்ச்சிய இடத்தில் பிற்காலத்தில் கிறிஸ்தவத் துறவியர் மடம் கட்டப்பட்டது. அப்புறம், பிரபு வம்ச மகளிருக்காக அங்கே கல்லூரி நிறுவப்பட்டது. ஸ்மலா, அதாவது கீல் காய்ச்சிய இடத்தில் கட்டப்பட்டதால் இந்தக் கட்டிடம் ஸ்மோல்னீ மாளிகை என்று பெயர் பெற்றது.

1917ம் ஆண்டு ஜார் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்ட பின் மாணவிகள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். ஸ்மோல்னீயில் தொழிலாளர், படைவீரர் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத் அலுவலகம் திறக்கப்பட்டது. இராணுவ-புரட்சிக் கமிட்டி அலுவலகமும் ஸ்மோல்னீயிலேயே இருந்தது.

இராணுவ-புரட்சிக் கமிட்டி எல்லாத் தொழிற்சாலைகளுடனும் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தது. தொழிற்சாலைகளில் செங்காவற்படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. இருபதினாயிரம் பெத்ரோகிராத் தொழிலாளர்கள் ஆயுத சன்னத்தராக்கப்பட்டார்கள். அவர்கள் எழுச்சி தொடங்குவதற்கு உத்தரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். பூர்ஷ்வா அரசாங்கத்துக்கும் அதற்கு விசுவாசம் உள்ள அதிகாரிகளுக்கும் எதிராக பால்டிக் கடற்படை வீரர்களைத் தூண்டுவதற்காக போல்ஷிவிக் கமிஸார்களை இராணுவ-புரட்சிக் கமிட்டி அனுப்பியிருந்தது. கடற்படையினர் போராடத் துடித்துக் கொண்டிருந்தார்கள். தரைப்படை வீரர்களின் முழு முழுப் பட்டாளங்கள்

போல்ஷிவிக்குகள், இராணுவ-புரட்சிக் கமிட்டியின் தரப்புக்கு வந்துவிட்டார்கள்.

தாற்காலிக அரசாங்கம் என்ன செய்தது? போல்ஷிவிக்குகளிடமும் தொழிலாளர்களிடமும் அச்சம் கொண்டது தாற்காலிக அரசாங்கம்.

''தொழிலாளர்கள் ஆயுதங்கள் ஏந்திச் செல்வது தடை செய்யப்படுகிறது. கமிட்டி உறுப்பினர்கள் எல்லோரும் கைது செய்யப்பட வேண்டும்! லெனினைக் கைது செய்து நிலவறையில் அடைக்க வேண்டும்!'' என்று கண்டிப்பாக உத்தரவிட்டது தாற்காலிக அரசாங்கம்.

அது கையைக் கட்டிக் கொண்டிருக்கவில்லை. போல்ஷிவிக்குகளுக்கும் தொழிலாளர்களுக்கும் எதிராக எல்லா வகையிலும் பலம் திரட்டியது. தன் படைவீரர்களைப் பெத்ரோகிராதில் திரட்டி, நகரைச் சுற்றிலும் நிறுவியது.

எழுச்சியை இனியும் தள்ளிப்போடக்கூடாது. நேரம் வந்துவிட்டது என்று லெனின் மத்தியக் கமிட்டித் தோழர்களுக்கு எழுதினார்.

அக்டோபர் 24ந் தேதி லெனின் மத்தியக் கமிட்டிக்கு மீண்டும் குறிப்பு எழுதி அனுப்பினார். மார்கரீத்தா வஸீலியெவ்னா மத்தியக் கமிட்டிக்குப் போய் பதிலை வாங்கி வந்தாள். லெனின் மறைவிடத்திலிருந்து வெளிவர இன்னும் அனுமதிக்கப்படவில்லை. அவரை வீதியில் கண்டால் எந்த அதிகாரியும் அங்கேயே சுட்டுவிடச் சுடுமே.

லெனினின் தலைமையில் மத்தியக் கமிட்டி நிர்ணயகரமான போராட்டத்துக்குக் கடைசி முன்னேற்பாடுகள் செய்து கொண்டிருந்தது. ஆயினும் எழுச்சிக்கான நாள் திட்டமாக இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

மறுநாள், அக்டோபர் 25ந் தேதி சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் ஸ்மோல்னீயில் தொடங்கவிருந்தது. பிரதிநிதிகள் எல்லா நகரங்களிலுமிருந்து பெத்ரோகிராத் வந்தார்கள்.

''காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்பு, இன்றே எழுச்சி தொடங்குவது அவசியம். இன்றே தாற்காலிக அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு நாளை ஆட்சி அதிகாரத்தை சோவியத்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.'' —இவ்வாறு நினைத்தார் லெனின்.

ஆனால் நேரம் கழிந்துகொண்டு போயிற்று. மத்தியக் கமிட்டிக்கு அவர் இன்னும் ஒரு கடிதம் எழுதி அனுப்பினர். லெனினது உள்ளம் நிம்மதி அற்று இருந்தது. ஸெர்தபோல்ஸ்கயா வீதியில் வெளேறென்று பளிச்சிட்ட இவ்வீட்டில் இப்போது அவருக்கு இருப்பே கொள்ள வில்லை. அறையில் நடை போடுவது கூட முடியாது. சுவரின் மறு புறம் உள்ளவர்கள் காதில் பட்டு விடும். ''பக்கத்து அறையில் யார் நடமாடுகிறார்கள்?'' என்பார்கள் அவர்கள்.

மாலைத் தறுவாயில் மர்கரீத்தா வஸீலியெவ்னா வேலையிலிருந்து திரும்பினர். லெனின் கிளர்ச்சியுடன் அவரை எதிர் கொண்டார்.

''தயவு செய்து இன்னொரு கடிதத்தை எடுத்துப் போங்கள். இப்போதே, உடனேயே. மேல்கோட்டைக் கழற்றுதீர்கள். தயை செய்து. நான் இதோ....''

இவ்வாறு சொல்லி விட்டுச் சட்டெனத் தம் அறைக்குப் போய் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களுக்குப் பின்வரும் கடிதத்தை எழுதினர்:

''தோழர்களே!

''இந்த வரிகளை 24ந் தேதி மாலை எழுதுகிறேன். நிலைமை இதற்குமேல் போக முடியாது என்னும் அளவுக்கு நெருக்கடியானது. இனிமேல், எழுச்சி தொடங்கத் தாமதிப்பது மெய்யாகவே சாவுக்குச் சமம் என்பது தெளிவிலும் தெளிவாய் இருக்கிறது.''

இன்றே செயல்பட வேண்டும், தாற்காலிக அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும், ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். இன்று நாம் உறுதியான நடவடிக்கை எடுக்காவிட்டால் வரலாறு நம்மை மன்னிக்காது. நாளை நேரம் கடந்து போய் விடும். இன்று கடைசியான, முடிவான தருணம்.—இவ்வாறு மேலே எழுதினர் லெனின்.

''சீக்கிரம் கடிதத்தைக் கொண்டு கொடுங்கள்!'' என்று மர்கரீத்தா வஸீலியெவ்னாவை அவசரப்படுத்தினர் லெனின்.

அவள் போனதும் லெனின் தனியாய் இருந்தார். எவ்வளவு நிம்மதியற்ற நிலைமை! அவர் உட்கார்ந்து எதையோ உற்றுக் கேட்டார். யாரையோ அவர் எதிர் பார்ப்பதுபோல் இருந்தது.

மெய்யாகவே வெளிக் கதவு மணி அடித்தது. தொடர்பு ஆள் எய்லே ராஹியா உள்ளே வந்தார்.

''நகரத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது தெரியுமா, விளாதீமிர் இல்யீச்?''

நகரத்தில் நடந்து கொண்டிருந்தது இதுதான். நிலையற்ற ஈர வாடை வீசிக்கொண்டிருந்தது. நெவா ஆற்றுப் புறமிருந்து குப்குப்பென்று அடித்துக் கொண்டிருந்தது காற்று. அடர்ந்த மூடுபனி வீதிகளைப் போர்த்திருந்தது. வெண்பனி ஈரச் சிதல்களாகப் பெய்து கொண்டிருந்தது. கூடவே சிறு தூறல் தூற்றத் தொடங்கியது. பிசுபிசுவென்று தூற்றிக் கொண்டே இருந்தது சாரல். ஆயினும் ஆட்கள் வீடுகளின் கமான் வளைவுகளுக்கு அடியில் கும்பல் கும்பலாகக் குழுமியிருந்தார்கள். படைவீரர்கள் அல்லது ஆயுதந்தாங்கிய தொழிலாளர்கள் நிறைந்த லாரிகள் வீதிகள் வழியே சென்றன. எங்கோ துப்பாக்கிக் குண்டுகள் வெடிக்கும் ஓசை கேட்கும். மெஷீன்கன் சடசடக்கும். மீண்டும் கலவரம் நிறைந்த நிசப்தம் நிலவும்.

பாலங்களின் அருகே நெகிடி நெருப்புக்கள் எரிந்து கொண்டிருந்தன. செங்காவற்படை வீரர்கள் அவற்றைக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். நெவா ஆற்றின் மேல் இருந்த இணை பாலத்தைப் பிரித்து உயர்த்திவிடும் படி பகலில் தாற்காலிக அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இராணுவக் கல்லூரி மாணவர்கள் குதிரைகள் மேல் ஏறி வந்து வழிப்போக்கர்களைப் பாலத்திலிருந்து அகற்றிவிட்டு, போக்குவரத்தைத் தடை செய்துவிட்டார்கள். ஆனல் நிக்கலாயெவ்ஸ்கீ பாலத்தை மட்டுமே அவர்கள் பிரித்து உயர்த்த முடிந்தது. அதற்குள் செங்காவற் படையினர் பாலங்களை நெருங்கி இராணுவக் கல்லூரி மாணவர்களை விரட்டிவிட்டார்கள்.

இராணுவக் கல்லூரியினர் பாலங்களைப் பிரித்து உயர்த்த முடிந்திருந்தால் ஆபத்தாகியிருக்கும். நகரின் எல்லா வட்டாரங்களும் ஒன்றிலிருந்து ஒன்று துண்டிக்கப்பட்டிருக்கும். இராணுவக் கல்லூரியினர் புரட்சித் தொழிலாளர்களைத் தனித்தனியே தாக்கி முறியடித்திருப்பார்கள்.

இந்த விவரங்களை எல்லாம் எய்லே ராஹியா லெனினிடம் கூறினர்.

லெனின் மௌனமாக எல்லாவற்றையும் கேட்டார். சற்று நேரம் பேசாதிருந்துவிட்டுச் சட்டென இருக்கை விட்டு எழுந்தார். ஒரு வார்த்தை பேசாமல் அலமாரியிலிருந்து தம் பழைய பொய்மயிர் டோப்பாவை எடுத்தார். ''இவர் என்ன செய்கிறார்?'' என்று கலவரத்துடன் பார்த்தார் ராஹியா. லெனினைக் காக்கும் பொறுப்பைக் கட்சி அவரிடம், எய்னே ராஹியாவிடம், ஒப்படைத்திருந்தது.

''நீங்கள் எங்கே கிளம்புகிறீர்கள், விளாதீமிர் இல்யீச்?''

''இந்தக் கணமே ஸ்மோல்னீக்கு!'' என்று உறுதியாகப் பதில் அளித்தார் லெனின்.

''அட பகைவர்கள் கொன்றுவிடுவார்களே உங்களை! இராணுவக் கல்லூரி மாணவர்களை எதிர்ப்பட்டால் அவர்கள் உங்களைச் சுட்டு வீழ்த்திவிடுவார்கள்!''

லெனின் விவாதிக்கவில்லை. அவர் பாட்டுக்கு நிலைக் கண்ணாடி முன் நின்று டோப்பாவை மாட்டிக் கொண்டார். பழைய கிழிசல் கோட்டையும் மேல்கோட்டையும் போட்டுக் கொண்டார். அவர் எண்ணத்தை மாற்ற முயல்வது வீண் என்று கண்டு கொண்ட ராஹியா, தாமும் புறப்படத் தயாரானார்.

பல்வலிக்காரர் போல லெனின் கன்னத்தைச் சுற்றிக்கட்டு போட்டுக் கொள்வது என அவர்கள் முடிவு செய்தார்கள். அப்போது அவரை அடையாளம் தெரிந்து கொள்வது இன்னும் கடினம் ஆகிவிடும்.

இந்தக் கோலத்தில் அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். லெனின் ஸ்மோல்னீ சென்றார்.

தொடங்கிவிட்டது

ஸெர்தபோல்ஸ்கயா வீதியிலிருந்து ஸ்மோல்னீ சுமார் பதினெட்டு கிலோமீட்டர் தூரம்! டிராம் வண்டிகள் தட்டுப்படவில்லை. ஆட்கள் மறைந்து கொண்டார்கள். கும்மிருட்டு. கால்களின் அடியில் சேறு நளுக்கிட்டது. கூதல் முகத்தில் சுரீரெனக் குத்தியது.

லெனின் சற்றே குனிந்த தலையும் துருத்திய மார்புமாக நடந்தார்.

நிறுத்தத்தை நெருங்கிய ஒரு டிராம் வண்டியைக் கண்ட எய்ஞே ராஹியா, ''நிறுத்து! நிறுத்து!'' என்று பெருங் குரலெடுத்துக் கத்தினர்.

டிராம் வண்டி நின்றது. அவர்கள் அதில் தொற்றிக் கொண்டார்கள். அனேகமாக வெறுமையான டிராம் வண்டி ஷெட்டுக்குப் போய்க் கொண்டிருந்தது. நல்ல வேளைதான். பாதி வழியாவது அதில் போகலாமே.

இருட்டில், கைக்குக் கை தெரியாத சரத்கால இரவில் கூர்ந்த பார்வையைச் செலுத்தினர் லெனின். ஆயுதந் தரித்த படைவீரர்கள் நிறைந்த லாரி டிராம் வண்டியின் பக்கமாக வந்து முன்னே விரைந்தது. இன்னொரு லாரி டிராம் வண்டியைக் கடந்து முன்னே சென்றது.

''இன்றைக்கு பூர்ஷ்வாக்கள் பாடு திண்டாட்டந் தான்'' என்று எவனே சொன்னான்.

''ஷெட் பக்கம் திரும்புகிறோம். இறங்குங்கள்'' என்ருள் கண்டக்டர் மாது.

லெனினும் எய்ஞே ராஹியாவும் மறுபடி வெறிச் சோடிய இரவு வீதிகள் வழியே நடந்தார்கள். இராணுவக் கல்லூரி மாணவர்கள் எதிர்ப்பட்டுவிடக் கூடாதே!

ஆனல் கல் பாவிய சாலையில் குதிரைக் குளம்பொலி கள் கேட்டன. இரண்டு இராணுவக் கல்லூரி மாணவர் கள் குதிரைகள்மீது வந்தார்கள். ஒருவன் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான். குதிரை கழுத்தை வளைத்தவாறு பின் கால்களில் எம்பி நின்றது.

எய்ஞே ராஹியாவைக் குதிரையால் நெருக்கியவாறு ''அனுமதிச் சீட்டு!'' என்று கேட்டான் ஒருவன்.

முதியவரை இராணுவக் கல்லூரியினர் சட்டை செய்யவே இல்லை. கிழவனிடம் என்ன இருக்கப் போகிறது? கட்டுப் போட்ட கன்னத்தைக் கையால் தாங்கியவாறு குதிரையின் அருகாக மேலே நடந்தார் கிழவனர்.

எய்ஞே ராஹியா அப்பாவி போன்று நடித்து, ''அனு மதிச் சீட்டாவது ஒன்ருவது? அதை எங்கே வாங்க வேண் டும் என்பதுகூட எனக்குத் தெரியாதே. எதற்காம் அது? தொழிலாளியை அனுமதிச் சீட்டு இல்லாமலே கண்டு கொள்ள முடியுமே''என்று பேசி மழுப்பினர்—லெனின் அப் பால் செல்லும்வரை நேரம் கடத்தும் நோக்கத்துடன்.

இராணுவக் கல்லூரியினன் வைது திட்டி ராஹியாவின் தலைக்கு மேல் சாட்டையை ஓங்கினான்.

''அட இவனே விடு என்கிறேன்'' எனக் கூறினான் மற்றவன்.

அவர்கள் அப்பால் சென்றதுமே எய்ஞே ராஹியா ஓடிப் போய் லெனினுடன் சேர்ந்து கொண்டார்.

''நன்றி'' என்று சுருக்கமாகச் சொன்னார் லெனின்.

ஸ்மோல்னீ மாளிகைக்கு முன்னே, பருமன் அற்ற மரங்களும் நெருக்கமற்ற குத்துச் செடிகளும் வளர்ந்து, சாலையால் ஊடறுக்கப்பட்டிருந்த விசாலமான திடல் ஆட்களால் நிறைந்து ஆரவாரித்தது. நெகிடி நெருப்புக்கள் எரிந்து கொண்டிருந்தன. நெருப்புப் பொறிகள் சடசடப்புடன் வானை நோக்கிச் சிதறின. படைவீரர்கள் நெகிடிகளின் அருகே கால்களைத் தொப்புத் தொப்பென்று அடித்துச் சூடு ஏற்றிக் கொண்டார்கள். லாரிகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. ஆயுதபாணிகளான மாலுமிகளும் தொழிலாளர்களும் லாரிகளிலிருந்து இறங்கினார்கள். ஸ்மோல்னீ மாளிகையில் வசவசவென்று நெரிந்தார்கள்.

திடலில் இராணுவக் கட்டளை ஒலித்தது:

''படைப் பிரிவு, அணி வகுக்க!''

கூட்டம் இரைந்தது. திடல் முழுவதும் அலை மோதியது. ஸ்மோல்னீ மாளிகையின் அருகே பீரங்கிகள் நின்றன. பாராக்காரர்கள் வாயில்களில் காவல் புரிந்தார்கள். நீண்ட ஸ்மோல்னீ மாளிகையின் மூன்று மாடிகளிலும் எல்லா அறைகளும் விளக்கொளியால் பிரகாசித்தன. ஒளி வீசும் ஸ்மோல்னீ மாளிகை, சுடர் வீசும் விழிகள் கொண்ட, கிளர்ச்சி பொங்கும் ஆட்கள்—இந்தக் காட்சி மாண்பு திகழ்ந்தது.

லெனினின் இதயம் விம்மியது. அவர் எந்த நாளுக்காக வாழ்ந்தாரோ, அது வந்துவிட்டது.

அவர்கள் இருவரும் மாளிகைக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். லெனின் மேல்கோட்டுப் பொத்தான்களைக் கழற்றிவிட்டு, கைகளைப் பைகளில் நுழைத்துக் கொண்டு, நரை மயிர் டோப்பாவை மறந்துவிட்டு நடை வழியில் விடு விடென்று நடந்தார். ஆட்களும் தோட்டாப் பெட்டிகளும் துப்பாக்கி அடுக்குகளுமாக நடைவழியில்

ஒரே நெரிசலாய் இருந்தது. லெனின் மூன்றும் மாடியில், இராணுவ-புரட்சிக் கமிட்டியின் அறைக்குள் பாய்ந்து புகுந்தார்.

கமிட்டி உறுப்பினர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள். அரை நாளாகக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. செயலாளர் நிகழ்ச்சி விவரங்களைக் குறித்துக் கொண்டிருந்தார். தாக்கு விவரங்களை விவாதித்துக் கொண்டிருந்தார்கள், உறுப்பினர்.

செங்காவற்படை, இராணுவப் பிரிவுகள், தொழிற் சாலைகள் ஆகியவற்றின் தொடர்பு ஆட்கள் இடையறாது வந்த வண்ணமாய் இருந்தார்கள்.

லெனின் அறையில் புகுந்தார். தொப்பியையும் அதோடு பொய் மயிர் டோப்பாவையும் கழற்றினர். இனி இந்த டோப்பா என்றுமே தேவையில்லை. அது தன் பணியை நிறைவேற்றிவிட்டது.

இராணுவ-புரட்சிக் கமிட்டித் தலைவர் நிக்கலாய் இல்யீச் பத்வோய்ஸ்கீ, ஒடிசல் மேனியும் உறங்காமையால் சிவந்துவீங்கிய கண்களுமாக லெனின் அருகே ஓடிவந்தார்:

''விளாதீமிர் இல்யீச்!''

லெனின் வந்ததில் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. லெனினுடன் கூடவே ஆற்றலும் துணிவும் வந்துவிட்டதுபோல் இருந்தது. லெனின் என்ன சொல்லப் போகிறார் என்று ஆவலுடன் எதிர்பார்த்தார் பத்வோய்ஸ்கீ.

''தாமதம் செய்வது சாவுக்குச் சமம்'' என்று விரைவாக, உறுதியுடன் சொன்னார் லெனின். ''தந்தி, டெலிபோன், ரயில் நிலையங்களையும் பாலங்களையும் கைப்பற்ற வேண்டும். இப்போதே. இன்று இரவே.''

புரட்சித் தலைமை அலுவலகமான இராணுவ-புரட்சிக் கமிட்டி இருந்த அறைக்கு, லெனின் வந்திருந்த அறைக்குத் தொடர்பு ஆட்கள் வந்த வண்ணமாக இருந்தார்கள்.

''லெனின் வந்துவிட்டார்! லெனின்!'' என்ற செய்தி ஸ்மோல்னீயில் பரவியது.

தொடர்பு ஆட்கள் இராணுவ-புரட்சிக் கமிட்டியின் உத்தரவுகளைப் பெற்றார்கள். கமிட்டி உத்தரவிட்டது.

தந்தி நிலையம், தபால் நிலையம், ரயில் நிலையங்கள், பாலங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுக. அரசாங்க அலுவலகங்கள் எல்லாவற்றையும் கைப்பற்றுக.

''செங்காவற்படை, அணிவகுக்க!'' என்ற ஆணை ஸ்மோல்னீக்கு முன் இருந்த திடலில் முழங்கியது.

நெகிடி நெருப்புக்கள் எரிந்தன. ஆயுதந் தரித்த தொழிலாளர்கள் நிறைந்த லாரிகள் அக்டோபர் இரவின் காரிருளில் புறப்பட்டுச் சென்றன. தரைப்படை, கடற்படை வீரர்களும் புறப்பட்டுச் சென்றார்கள்.

அக்டோபர் 24ந் தேதி முடிந்து 25ந் தேதி தொடங்கிய இரவில், ஆயுதந்தாங்கிய பாட்டாளிகளும் புரட்சிகரப் படை வீரர்களும் ருஷ்யாவின் தலைநகர் பெத்ரோகிராதைக் கைப்பற்றி விட்டார்கள்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி நிறைவேறிவிட்டது.

பனிக்கால அரண்மனை வசமாயிற்று

தாற்காலிக அரசாங்கம் தன் காவலர்களுடன் பனிக்கால அரண்மனையில் கூடியிருந்தது. பனிக்கால அரண்மனையின் ஒரு முகப்பு நெவா ஆற்றை நோக்கி இருந்தது. இன்னொரு முகப்பு பிரமாண்டமான அரண்மனைச் சதுக்கத்தைப் பார்த்திருந்தது. வெள்ளைத் தூண்களும் சிலைகளும் அரண்மனையை அணி செய்தன. கொர்னிசுகளில் மிகப் பெரிய சிலைகளும் ஜாடிகளும் இருந்தன. கோபுரத்தின் மேலே சிறகுகள் விரித்த கழுகின் உருவம் பொன்முலாம் பூசப்பட்டு ஒளிர்ந்தது. புரட்சிக்கு முன்பு இந்த அரண்மனையில் ஜார்கள் வசித்து வந்தார்கள்.

இராணுவ-புரட்சிக் கமிட்டித் தலைவர் பத்வோய்ஸ்கீயிடம் லெனின் சொன்னார்:

''பெத்ரோகிராத் நகரம் முழுவதும் நம் கையில் இருக்கிறது. ஆயினும் பனிக்கால அரண்மனை கைப்பற்றப் படவில்லை. தாமதமின்றிப் பனிக்கால அரண்மனையை வசப்படுத்தி, தாற்காலிக அரசாங்கத்தைக் கைது செய்ய வேண்டும்.''

அக்டோபர் 25ந் தேதி, அக்டோபர்ப் புரட்சிக்குப் பிந்திய முதல் காலையில், ''ருஷ்யாவின் குடி மக்களுக்கு'' என்னும் லெனினது அறிக்கையை மக்கள் படித்தார்கள்.

தாற்காலிக அரசாங்கம் அகற்றப்பட்டுவிட்டது, ஆட்சி சோவியத்துக்களின் கைகளுக்கு வந்து விட்டது, புரட்சி வெற்றி பெற்றுவிட்டது என்று எழுதினர் லெனின்.

மெய்தான். உண்மையில் நிகழ்ந்ததும் இதுவே. தாற்காலிக அரசாங்கத்திடம் அதிகாரம் எதுவும் இல்லை. ஆயினும் அதன் அமைச்சர்கள் பனிக்கால அரண்மனைக்குள் பதுங்கிக் கொண்டிருந்தார்கள்.

''இப்போது ஜனங்கள் என்ன நினைப்பார்கள்?'' என்று கண்டிப்புடன் பத்வோய்ஸ்கியிடம் கேட்டார் லெனின்.

''பனிக்கால அரண்மனை இன்று நம் வசமாகிவிடும்'' என்று பதில் அளித்தார் இராணுவ-புரட்சிக் கமிட்டித் தலைவர்.

செங்காவற்படைப் பிரிவுகளுக்கும் புரட்சிப் பட்டாளங்களுக்கும் உத்தரவிடப்பட்டது: பனிக்கால அரண்மனையைச் சூழ்ந்துகொள்க!

அரண்மனை அருகில் இருந்த எல்லாச் சாலைகளையும் வீதிகளையும் தொழிலாளர்களும் படைவீரர்களும் கைப்பற்றிக் கொண்டார்கள். அரண்மனை சூழ்ந்து கொள்ளப் பட்டது. பீரங்கிகள் வாக்கான இடங்களில் நிறுத்தப்படுகையில் அவற்றின் சக்கரங்கள் கடகடத்தன. நாசகாரிப் போர்க் கப்பல்கள் நெவா ஆற்றில் மெதுவாகப் புகுந்தன. பனிக்கால அரண்மனையை நோக்கிச் சென்றன. அரண்மனைப் பக்கம் திரும்பி நங்கூரம் பாய்ச்சி நின்றன.

மூன்று புகைபோக்கிகளும் தாமிர விளிம்பு கட்டிய வெள்ளை விளிம்புகளும் கொண்ட போர்க்கப்பல் ''அரோரா'' பீரங்கி வாயைப் பனிக்கால அரண்மனையைக் குறிவைத்துத் திருப்பியது. பனிக்கால அரண்மனை முற்றுகைக்கு உள்ளாயிற்று. இது நடந்தது 1917ம் ஆண்டு அக்டோபர் 26ந் தேதி இரவில்.

1905ம் ஆண்டு படுகொலை நடந்த ஞாயிற்றுக் கிழமையை மக்கள் நினைவுகூர்ந்தார்கள். இதே அரண்மனையின் முன்னால், விசாலமான, விழாக் கோலம் பூண்ட அரண்மனைச் சதுக்கத்தில் கூட்டங் கூட்டமாகத் திரண்டு

வந்தார்கள் தொழிலாளர்கள். பெத்ரோகிராத் ஆலைகள், தொழிற்சாலைகள் எல்லாவற்றிலுமிருந்தும் அவர்கள் அமைதியாக, தெய்வப் படங்களை ஏந்தியவாறு, ஜாரிடம் சென்றார்கள். ''எங்கள் அப்பனே, ஜார் அரசே, எங்களுக்கு உதவு. இனிப் பொறுக்கத் திராணி இல்லை. பட்டினியால் மாய்கிறோம்'' என்று முறையிடுவதற்காக.

பனிக்கால அரண்மனைக்கு எதிரே இருந்த சதுக்கத்தில் ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் கொன்றும் காயப்படுத்தியும் குவிக்கப்பட்டார்கள்.

1917ம் ஆண்டு அக்டோபர் வந்தது. இப்போது தொழிலாளர்கள் இங்கு தெய்வப் படங்களை அல்ல, ஆயுதங்களை ஏந்தி வந்தார்கள்.

கதி கலங்கு, பனிக்கால அரண்மனையே!

''நெடு நேரம் இழுத்தடிக்கப் போகிறோமா?'' என்று பதற்றத்துடன் திட்டினார்கள் படைவீரர்கள். ''நமக்குத் தலைமை வகிப்பது யார்?''

கமிஸார்களும் இராணுவ-புரட்சிக் கமிட்டி உறுப்பினர்களும் மோட்டார்களிலும் குதிரைகளிலும் ஏறிப் படைவீரர் அணிகளைச் சுற்றி வந்தார்கள்.

''தோழர்களே, பொறுங்கள். இன்னும் கொஞ்சம் சக்தி திரட்டிக் கொள்வோம். எழுச்சியைத் தலைமை ஏற்று நடத்துகிறார் தோழர் லெனின்.''

''லெனின்!'' என்ற பெயர் படைவீரர், தொழிலாளர் அணிகளில் பரவிற்று.

பனிக்கால அரண்மனையின் முற்றுகை எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதுபற்றிய செய்திகள் ஸ்மோல்னீயில் லெனினுக்கு இடைவிடாமல் கிடைத்த வண்ணமாயிருந்தன. லெனின் பென்சிலும் கையுமாக வரைபடத்தைக் கூர்ந்து பார்த்துக் குறித்துக்கொண்டிருந்தார்: இந்த வீதிகளில் இந்தப் படைப் பிரிவுகள் நிறுவப்பட்டிருக்கின்றன.... இன்ன பட்டாளம் இங்கே இருக்கிறது.... இங்கே அதிக ஆட்களை அனுப்ப வேண்டும். குரோன்ஷ்தாத்திலிருந்து கடற்படை வீரர்கள் வந்திருக்கிறார்கள். போர்க்கப்பல் ''அரோரா'' தயாராய் இருக்கிறது.

''தோழர்களே, வேளை வந்துவிட்டது. தாக்குதலைத் தொடங்குங்கள்!'' என்றார் லெனின்.

குளிர்ந்த காற்று வீசிய இரவு நகரில் சூழ்ந்தது. வாயில்கள் பூட்டப்பட்ட வீடுகள் உறைந்து போனவை போலக் காணப்பட்டன. வீடுகளின் இருண்ட ஜன்னல்கள் விசித்திரத் தோற்றம் அளித்தன. வீதிகளில் நெகிடி நெருப்புக்கள் எரிந்தன. சுள்ளென்ற நெடி அடிக்கும் புகை காற்றில் மிதந்து வந்தது.

படைவீரர்கள் அரண்மனைச் சதுக்கத்தை மேலும் மேலும் நெருங்கினர்கள்.

அரண்மனையில் இருந்தவர்களும் உறங்கவில்லை. அவர்களும் சண்டைக்கு முன்னேற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள். இராணுவக் கல்லூரி மாணவர்களும் அதிகாரிகளும் விறகுக் கட்டைகளால் தடை அரண்கள் அமைத்தார்கள். அரண்மனையின் வாயில்கள் எல்லாவற்றையும் அரண் செய்தார்கள். தடை அரண்களுக்கு இடையே மெஷீன்கன்களை நிறுவினர்கள்.

பனிக்கால அரண்மனையைச் சுற்றிலும் மிகக் கொடிய நிசப்தம் நிலவியது.

ஸ்மோல்னீ மாளிகையிலிருந்து அஞ்சல் வீரன் மோட்டார் சைக்கிளில் வந்தான். இராணுவ-புரட்சிக் கமிட்டிக்கு லெனின் மீண்டும் செய்தி அனுப்பியிருந்தார்.

''உடனே தாக்குதலைத் தொடங்குங்கள். பனிக்கால அரண்மனையை வசப்படுத்தி முடியுங்கள். இதுவே தருணம்.''

இருளில், இரவின் நிசப்தத்தில் நெவா ஆற்றின்மீது, மண்ணும் விண்ணும் அதிர்ந்து நடுங்க ''டமார்'' ''டமார்'' என்ற வெடி முழக்கம் ஆர்த்தது. அதன் எதிரொலி நெடு நேரம் கேட்டுக் கொண்டிருந்தது.

போர்க்கப்பல் ''அரோரா'' செய்த அடையாளப் பீரங்கி வெடி முழக்கம் அது.

இராணுவத்தினரும் செங்காவற்படை வீரர்களும் அலை எழும்புவதுபோல ஆர்த்து எழுந்தார்கள். பனிக்கால அரண்மனையை நோக்கிப் பாய்ந்தார்கள். வீரர்களின் அணிகள் மலை வெள்ளம்போலப் புரண்டு வந்தன. அக்கம் பக்கத்து வீதிகளிலிருந்து பீரங்கிகள் குண்டுகள் பொழியலாயின. மெஷீன்கன்கள் சடசடத்தன. அரண்மனையைத் தடுத்து நின்ற விறகுத் தடை அரண்கள்மீது நெருப்பு

மாரி பெய்தவாறு அரண்மனைச் சதுக்கத்தில் பாய்ந்து முன் சென்றது கவச மோட்டார். இராணுவக் கல்லூரி மாண வர்கள் ஆயுதங்களை எறிந்துவிட்டு அரண்மனைக்குள் ஓடி னர்கள்.

செங்காவற்படை வீரர்களும் இராணுவத்தினரும் ''ஹூர்ரா! தொழிலாளர் புரட்சி நீடூழி வாழ்க!'' என்று வெற்றி முழக்கம் இட்டவாறு இராணுவக் கல்லூரி மாண வர்களையும் அதிகாரிகளையும் விரட்டிச் சென்றார்கள்.

செம்படைப் பிரிவுகள் அரண்மனைக்குள் புகுந்தன. அரண்மனையின் ஆடம்பரத்தைக் கண்டு வீரர்களின் கண் கள் மயங்கின.

நூற்றுக் கணக்கான அறைகளும் கூடங்களும். ஸ்படிகச் சரவிளக்குக்கள், மகமலும் பட்டும், ஓவியங்களும் சிலைகளும், விலையுயர்ந்த மேஜை நாற்காலிகள், நிலைக் கண்ணாடிகள்.

தங்க முலாம்பூசிய விளிம்பு கொண்ட நிலைக்கண் ணாடி ஒன்றைத் துப்பாக்கிக் குத்தீட்டியால் ஓங்கிக் குத் தினான் ஒரு செங்காவற்படை வீரன். கண்ணாடிச் சில்லு கள் கரகர வென்ற ஒலியுடன் சிதறின.

''மூளை புரண்டு விட்டதா உனக்கு? இனி இது ஜா ரின் செல்வம் அல்ல. நம்முடையது, மக்களுடையது'' என்று மற்றவர்கள் அவனைக் கடிந்து கொண்டார்கள்.

செங்காவற்படையினரும் இராணுவத்தினரும் துப் பாக்கிகளைச் சுடுவதற்குத் தயாராகப் பிடித்தவாறு அறை அறையாக, கூடம் கூடமாக மேலே மேலே சென்றார்கள். எல்லாரிலும் துணிவு மிக்க தலைவர்கள்—அன்தோனவ்-அவ்ஸையென்கோ, யெரெமேயெவ், பத்வோய்ஸ்கீ முதலி யோர்—முன்னே நடந்தார்கள். ஜரிகை இழைத்த நீலச் சீருடைகள் அணிந்த அரண்மனைப் பணியாட்கள் அரண்டு போய்ப் பின்வாங்கினார்கள். தாற்காலிக அரசாங்க அமைச்சர்கள் ஒரு ஹாலில் கூடி இருந்தார்கள். இராணுவக் கல்லூரி மாணவர்கள் அவர்களுக்குக் காவல் புரிந்தார்கள்.

''இராணுவக் கல்லூரி மாணவர்களே, அதிகாரிகளே, ஆயுதங்களைப் போட்டுவிடுங்கள். திருவாளர் அமைச்சர் களே, நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள்.''

நள்ளிரவு கடந்துவிட்டது. ஆனாலும் ஸ்மோல்னீ மாளிகையில் விளக்குகள் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தன. மாடிப் படிகளிலும் நடை வழிகளிலும் அறைகளிலும் ஆட்கள் நெரிந்தார்கள். எல்லோரும் கிளர்ச்சி அடைந்திருந்தார்கள். செய்திகளை ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். அரண்மனைச் சதுக்கத்தின் நிலைமை என்ன? சண்டை எப்படி நடந்து கொண்டிருக்கிறது?

பூட்ஸ் குதிகள் சடசடக்க உள்ளே வந்தார் இராணுவ-புரட்சிக் கமிட்டித் தலைவர் பத்வோய்ஸ்கீ. அக்டோபர் குளிராலும் காற்றினாலும் அவர் முகம் சிவப்பேறியிருந்தது. அவர் இராணுவ முறைப்படி சலாம் செய்தார்.

''தோழர் லெனின்! அறிக்கை செய்து கொள்கிறேம் பனிக்கால அரண்மனை நம் வசம் ஆகிவிட்டது.''

லெனின் துள்ளி எழுந்தார். அருகே சென்றார். பத்வோய்ஸ்கீயை இறுகக் கட்டித் தழுவிக் கொண்டார்.

முதல் அரசாணை

இராணுவ-புரட்சிக் கமிட்டி உறுப்பினர்கள் இரண்டு பகல்களும் இரவுகளும் உறக்கமின்றி ஓய்வின்றி வேலை செய்தார்கள். ஸ்வெர்திலோவ், ஸ்தாலின், த்ஸெர்ழின்ஸ்கீ, பூப்னவ், பத்வோய்ஸ்கீ, அன்தோனவ்-அவ்ஸேயென்கோ ஆகியோரும் இன்னும் பல போல்ஷிவிக்குகளும். லெனின் இரண்டு இரவுகளாகக் கண் உறங்கவில்லை. களிப்பும் உற்சாகமும் பொங்கிய அதே சமயத்தில் அவர் முகம் மிகவும் வாடியிருந்ததை நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா கண்டார், பெருமூச்செறிந்தார்.

''விளாதீமிர் இல்யீச் ஓய்வு கொள்வது அவசியம், ஆனால் நம்மிடம் வீடு இல்லையே. சொந்த இருப்பிடம் வெகு தூரத்தில் இருக்கிறது'' என்று போன்ச்-புருயேவிச்சிடம் சொன்னார்.

போன்ச்-புருயேவிச் ஜெனீவா நாட்களிலிருந்தே லெனினுடைய தோழராகவும் துணைவராகவும் விளங்கியவர். இஸ்க்ரா பத்திரிகையில் அடிக்கடி எழுதி வந்தார். கட்சிப் பிரசுரங்களை ருஷ்யத் தொழிலாளர்களுக்கு அனுப்பி

வந்தார். 1905ம் ஆண்டில் ஆயுதங்களும் அனுப்பினர்.

''என் வீடு எதற்காக இருக்கிறது?'' என்றார் அவர்.

லெனினையும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவையும் உடனேயே ஸ்மோல்னி அருகிலிருந்த காரில் ஏறிக் கொள்ளச் செய்து வீட்டுக்கு அழைத்துப் போனார்.

பின் சீட்டில் உட்கார்ந்ததுமே உறங்கிவிட்டார் லெனின். வீடு சேர்ந்ததும் ஒன்றுமே நடக்காததுபோல விழித்துக் கொண்டார்.

''ஏதோ இருப்பதை ஆளுக்குக் கொஞ்சமாகச் சாப்பிடுவோம்'' என்றார் போன்ச்-புருயேவிச்.

வீட்டில் இருந்த மற்றவர்களை எழுப்பி விடாதிருப் பதற்காகச் சந்தடி செய்யாமல் மேஜையைச் சுற்றி அமர்ந்தார்கள். ரொட்டியும் ஒரு துண்டு பாலடைக்கட்டி யும் கொஞ்சம் பாலும் இருந்தன.

''அருமையான சாப்பாடு'' என்று பாராட்டினார் லெனின்.

உணவு அருந்துகையில் அந்த நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். தொழிலாளர் களின் சோஷலிஸப் புரட்சி நிறைவேறிவிட்டது. இனி அது மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி என்று எப் போதும் அழைக்கப் பெறும்!

வருங்கால வாழ்க்கைபற்றிய பலவகைக் கனவுகளில் ஆழ்ந்து அவர்கள் மீண்டும் உறக்கத்தை மறந்துவிட்டார் கள். கடைசியில் வீட்டுக்காரர் எதிர்ப்பு தெரிவிக்கநேர்ந்தது.

''படுத்துக் கொள்ளுங்கள், விளாதீமிர் இல்யீச், இல்லா விட்டால் சுருண்டு விழுந்துவிடுவீர்கள்.''

இவ்வாறு கூறி லெனினைத் தம் அறைக்கு அழைத்துச் சென்றார் போன்ச்-புருயேவிச். அங்கே ஜன்னலோராமாக எழுது மேஜையும் நாற்காலியும் போடப்பட்டிருந்தன. லெனினுக்குத்தான் எழுது மேஜையும் பேனாவும் இல் லாமல் இருக்க முடியாதே. நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா உறங்குவதற்கு வீட்டுக்காரியின் அறையில் நீள் சோபா ஒழித்து விடப்பட்டது.

லெனின் மின் விளக்கை அணைத்தார். ஆனால் அவருக்கு உறக்கம் பிடிக்கவில்லை. தூக்கமே வரவில்லை. மனத் தில் எண்ணங்கள் நெரிந்தன. மறுநாள் முதல் புது

அரசை நிறுவ வேண்டும். உலகிலேயே முதலாவது தொழிலாளர்-குடியானவர்களின் அரசை.

லெனின் உற்றுக் கேட்டார். வீட்டில் நிசப்தம் குடி கொண்டிருந்தது. அமைதியற்ற போன்ச்-புருயேவிச்கூட அமைதியாக உறங்கிவிட்டார் என்று தோன்றியது. லெனின் விளக்கை ஏற்றி, மேஜை அருகே அமர்ந்தார். வெளியே காரிருள் சூழ்ந்திருந்தது. நிமிட நேரம் அவர் தலையைக் குனிந்தவாறு தம் எண்ணங்களிலேயே செவியேற்பவர் போல அசையாமல் உட்கார்ந்திருந்தார். அரவம் அற்ற அந்த இருண்ட இரவில் அவர் பெரிதும் சிந்தனையில் ஆழ்ந்தவராகக் காணப்பட்டார்.

பேனாவை எடுத்து மளமளவென்று எழுதத் தொடங்கினர்.

நிலப்பிரபுக்களுக்கும் சர்ச்சுகளுக்கும் மடங்களுக்கும் எல்லா வகைப் பணக்காரர்களுக்கும் சொந்தமான நிலங்கள் குடியானவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். நிலத்தில் உழைக்காதவனுக்கு நிலம் கிடையாது. நிலத்தில் உழைப்பவர்களுக்கே நிலம் சொந்தம் ஆகும்.

இவ்வாறு லெனின் எழுதினர். மக்கள் பல நூறாண்டுகளாகக் கனவு கண்டு எதிர்பார்த்திருந்ததை லெனின் எழுத்தில் வடித்தார். சோவியத் அரசில் புது வாழ்வு, நனவாகப் போகும் கனவுடன் தொடங்கிற்று.

லெனின் அப்பாடா என்று மனநிறைவுடன் மூச்சு விட்டார். கிளர்ச்சிக் கொந்தளிப்புக்கும் வெடி முழக்கங்களுக்கும் தாக்குதல்களுக்கும் பிறகு பெத்ரோகிராதில் இரவு சந்தடியின்றிக் கழிந்தது. இருண்ட வீதியில் ஒரு ஜன்னல் மட்டுமே விளக்கொளியால் பிரகாசித்தது. ஷூஷென்ஸ்கொயே சிறைக் குடியிருப்பிலும் இப்படித்தானே. கிராமம் முழுவதும் உறங்கும். சிறைக் குடியிருப்புவாசி உல்யானவின் அறையில் மட்டும் பச்சை விளக்கு எரிந்து கொண்டிருக்கும்.

லெனின் பேனாவை வைத்தார். வானம் லேசாகத் தெளிந்தது. காலை நெருங்கியது.

''ஒரு இரண்டு மணி நேரம் தூங்கலாம்'' என்று நினைத்துப் படுத்துக் கொண்டார் லெனின். தலையணையில் தலையை வைத்ததுமே ஆழ்ந்து உறங்கிவிட்டார்.

மேஜைமேல் இருந்தது எழுதிய காகிதம்.

வெளியே பொழுது புலரலாயிற்று. வானம் வெளிர்ந்தது. மங்கிய மேகங்களின் பின்னிருந்து வெளிப்பட்டது சூரியன். லெனின் உறங்கிக் கொண்டிருந்த அறைக்குள் வெயில் பரவிற்று. காகிதத்தை ஒளியுறுத்திற்று. காகிதத்தின் வெற்றிகரமான தலைப்பு வெயிலில் பிரகாசித்தது: **"நிலம் பற்றிய அரசாணை".**

சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ்

முன்பு இந்த ஹாலில் கொண்டாட்டங்கள் நடக்கும். நடனங்கள் நிகழும். வாத்தியங்கள் இசைக்கும். மெழுகு தடவிப் பளபளப்பாக்கப்பட்ட பிளாச்சுத் தரையில் கல்லூரி மாணவிகளின் ஒயிலான காலணிகள் வழுகிச் செல்லும்.

அரியோல் பிரதேசத்தைச் சேர்ந்த, இராணுவச் சீருடை அணிந்த ஏழைக் குடியானவன், வெள்ளைத் தூண்கள் கொண்ட இந்த ஹாலில் தானும் ஒரு காலத்தில் பிரவேசிக்க முடியும் என்று கனவுகூடக் கண்டிருப்பானா? ஸ்மோல்னீ மாளிகையின் கிட்டத்தில்கூட அவனை நெருங்க விட்டிருக்க மாட்டார்களே!

இப்போதோ... சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸின் பிரதிநிதியாக வந்திருந்தான் அந்தப் படை வீரன்.

ஸ்மோல்னீ மாளிகையின் வெள்ளை ஹால் எள் விழ இடமின்றி ஆட்களால் நிறைந்திருந்தது. பிரதிநிதிகளும் பிரதிநிதிகள் அல்லாதவர்களும் அங்கே குழுமியிருந்தார்கள். கோடிட்ட உள்சட்டைகளும் கோட்டுக்களும் அணிந்து, இடைவாரில் எறிகுண்டுகள் செருகியிருந்த கடற் படையினர், தலைக்கு நாள் பனிக்கால அரண்மனையைத் தாக்கிக் கைப்பற்றிய துப்பாக்கிகளுடன் செங்காவற்படை வீரர்கள், தாடியும் மீசையுமான குடியானவர்கள்—இவர்கள் தொலை தூர இடங்களிலிருந்து கிராம சோவியத்துக்களின் பிரதிநிதிகளாக வந்தவர்கள். இன்னும் ஆலைகள், தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள்.

நாற்காலிகளும் பெஞ்சுகளும் செம்மச்செம்ம நிறைந் திருந்தன. ஆட்கள் ஜன்னல் குறடுகள்மேலும் தரையி லும் உட்கார்ந்திருந்தார்கள். நின்றார்கள். எல்லாரும் சிவப்பு நாடா கட்டிக் கொண்டிருந்தார்கள். சிவப்புப் பூந்தோட்டம் போன்ற காட்சி. சிகரெட்டுப் புகை சூழ்ந்திருந்தது. ஒரே இரைச்சல்.

''நாம் வென்றுவிட்டோம். பூர்ஷ்வாக்கள் ஒழிக! எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே!''

அரியோல் பிரதேசத்தைச் சேர்ந்த படைவீரன் இங்கும் அங்கும் வியப்புடன் பார்வை செலுத்தினன், எல் லாவற்றையும் கவனித்தான். இந்த ஹாலின் உயரமான விட்டம். சலவைக்கல் தூண்கள். முன் சுவற்றில் ஆள் உயரம் இருந்த தங்க முலாம் பூசிய படச் சட்டம். ஜாரின் உருவப்படம் அகற்றப்பட்டுவிட்டது, ஆனால் வெற்றுச் சட்டம் தொங்கியது.

அசாதாரணமான இந்தச் சூழல் முழுவதையும் படை வீரன் ஆச்சரியத்துடன் நோக்கினன். லெனின் எப்போது வருவார் என்று கிளர்ச்சிபொங்க எதிர்பார்த்துக் காத் திருந்தான்.

திடீரென ''லெனின்! லெனின்!'' என்ற ஆரவாரம் சுற்றிலும் எழுந்தது.

நன்றாகப் பார்ப்பதற்காகப் பலர் இடங்களில் எழுந்து நின்றார்கள்.

தலைமைக் குழு உறுப்பினர்கள் வந்தார்கள். மேஜை அருகே அமர்ந்தார்கள். கறுப்புத் தோல் கோட்டும் வில் மூக்குக் கண்ணாடியும் அணிந்திருந்தார் ஒருவர். அவர் இரா ணுவ வீரர் போலவும் காணப்பட்டார், இல்லை போலவும் காணப்பட்டார். சித்த உறுதி உள்ளவராகத் தோன்றினர்.

''அவர்தான் ஸ்வெர்திலோவ்'' என்று படைவீரனிடம் சொன்னார்கள் மற்றவர்கள்.

உற்சாகம் உள்ள போல்ஷிவிக் ஃபேலிக்ஸ் எத்மூந்த விச் த்ஸெர்ழீன்ஸ்கீயையும் காட்டினார்கள். உயரமும் ஒடி சலுமானவர் அவர். இராணுவ-புரட்சிக் கமிட்டித் தலை வர் நிக்கலாய் இல்யீச் பத்வோய்ஸ்கி ஒளிவு மறைவு அற்ற, நேரான பார்வை உள்ளவர்.

காங்கிரஸ் கூட்டம் தொடங்கிவிட்டது என்று அறி வித்து, தோழர் லெனினைப் பேச அழைத்தார் தலைவர்.

லெனின் எப்படி இருக்கிறார் என்று நன்றாகப் பார்ப்பதற்காக உடம்பை நிமிர்த்திக் கழுத்தை நீட்டினான் படைவீரன். லெனின் கட்டுக்குட்டானவர்தாம், அப்படி உயரமானவர் அல்ல. லேசாக முறிந்தவை போன்ற புருவங்கள் கன்னப் பொருத்துக்கள் வரை நீண்டிருந்தன. விழிகள் எதிராளியின் உள்ளத்தையே ஊடுருவி நோக்கின....

லெனின் தடதடவென்று பேச்சாளர் மேடைமேல் ஏறினார். உடனே ஹால் முழுவதும் எழுந்து நின்றது. மாலுமித் தொப்பிகளும் படைவீரர் தொப்பிகளும் காற்றில் பறந்தன.

''லெனின் நீடூழி வாழ்க!''

பேச்சாளர் மேடை மீது நின்றார் லெனின். தமக்கு முன்னே ஹாலில் களி பொங்கும் முகங்களைக் கண்டார். பகட்டற்ற, எளிய உடைகள் அணிந்த மக்களைப் பார்த்தார். அவர்கள் சாதாரண மக்கள். ஆடம்பரமான கோட்டுக்களும் வெள்ளை வெளேறென்ற சட்டைகளும் அணிந்த சீமான்களும் புது மோஸ்தர் உடைகளில் பிலுக்கும் சீமாட்டிகளும் அங்கே இல்லை. ஹாலில் இருந்தார்கள் தொழிலாளர்கள், குடியானவர்கள், படைவீரர்களின் பிரதிநிதிகள். உழைப்பாளி மக்கள். இந்த மக்களின் விதிக்கும் இன்பத்துக்கும் தாம் பொறுப்பாளி என்று லெனின் உணர்ந்தார்.

அவர் கையை உயர்த்தினார். பேச அனுமதி கேட்டார். ஹால் கொஞ்சம் கொஞ்சமாக அமைதி அடைந்தது. ஆட்கள் உட்காரவில்லை. நின்றவண்ணமே அவர்கள் லெனினுடைய பேச்சைக் கேட்டார்கள்.

லெனின் சமாதானம் பற்றிப் பேசினார். தொழிலாளர்களுக்கும் குடியானவர்களுக்கும் யுத்தம் தேவையில்லை. சோவியத் அரசுக்கு யுத்தம் தேவையில்லை. யுத்தத்திற்கு முடிவு கட்ட வேண்டும். சாதாரண மக்கள் சமாதான வாழ்வை விரும்புகிறார்கள். இவ்வாறு கூறிவிட்டுச் சமாதானம் பற்றிய அரசாணையை லெனின் படித்தார். அன்று காலை போன்ச்-புருயேவிச்சின் வீட்டிலிருந்து ஸ்மோல்னீக்கு வந்த பிறகு இந்த அரசாணையை அவர் எழுதினார்.

பிரதிநிதிகள் லெனினுடைய பேச்சை மிகுந்த கிளர்ச்சியுடன் உன்னிப்பாகக் கேட்டார்கள். ஜெர்மானியர்

களுடன் போர் நான்கு வருஷங்களாக நடந்து கொண்டிருந்தது. இந்தப் போரினால் மக்கள் கொடுந் துன்பத்துக்கு ஆளாகியிருந்தார்கள், எய்த்து இளைத்துப் போயிருந்தார்கள்.

''இத்தகையதா நம் சோவியத் அரசு, நியாயமுள்ள அரசு! மக்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்கிறது இது!'' என்று நினைத்துக்கொண்டான் அரியோல் பிரதேசப் படை வீரன்.

''ஹுர்ரா!'' என்ற வெற்றி முழக்கம் ஆர்த்தது. வெள்ளை ஹாலின் சலவைக்கல் தூண்கள் அவ்வளவு உரத்த ஜெய கோஷத்தை அதற்குமுன் கேட்டதே இல்லை. அவ்வளவு விறலும் கம்பீரமும் வாய்ந்த பாட்டும் அங்கே முன்பு முழங்கியதில்லை.

''அடிமைத் தளையும் பசியும் வதைக்கக்
கொடுந்துயர் உழலும் உலகே, எழுவாய்!''

என்று உணர்ச்சி பொங்கப் பாடினார்கள் நூற்றுக்கணக்கானவர்கள்.

''புதுமைசேர் நமது உலகினைப் படைப்போம்,
எதுவுமற்றிருந்தோர் எல்லாம் ஆவார்!''

அதன் பிறகு தலைக்குநாள் இரவில் எழுதிய நிலம் பற்றிய அரசாணையை லெனின் படித்தார். இம்முறையும் பிரதிநிதிகள், சிறப்பாகக் குடியானவர்கள் லெனினது அரசாணையை ஆதரித்தார்கள்.

1917ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25, 26 தேதிகளில் ஸ்மோல்னீ மாளிகையின் வெள்ளை ஹாலில் கூடிய சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் புகழ் பெற்ற, சிறப்பான மகாநாடு. இந்தக் காங்கிரஸில்தான் லெனின் சோவியத் ஆட்சி நிறுவப்பட்டுவிட்டது என்று அறிவித்தார்.

சமாதானத்தையும் நிலத்தையும் பற்றிய அரசாணைகளை இந்தக் காங்கிரஸில் லெனின் படித்தார். காங்கிரஸ் அவற்றை உறுதிப்படுத்தியது.

மக்கள் கமிஸார்களையும் காங்கிரஸ் உறுதிப்படுத்தியது. மக்கள் கமிஸாரவைத் தலைவராக விளாதீமிர் இல்யீச் லெனின் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்வாறு முதல் சோவியத் அரசாங்கம் அமைக்கப் பட்டது.

காங்கிரஸ் கூட்டம் இரவு முழுவதும் நீடித்தது. காலையில்தான் அது முடிவடைந்தது.

''தோழர்களே, விரைவாக உங்கள் இடங்களுக்குத் திரும்பிப் போங்கள். நமது வெற்றி பற்றி மக்களுக்குக் கூறுங்கள். தொழிலாளர்கள் புரட்சி வெற்றி அடைந்துவிட்டது. இப்போது நம் நாட்டில் சோவியத் ஆட்சி நடக்கிறது. எங்கும், ருஷ்யா முழுவதிலும் சோவியத் ஆட்சியை வலுப் படுத்துங்கள்'' என்று பிரதிநிதிகளை அவசரப்படுத்தினர் லெனின்.

இவ்வாறு அவர்கள் வாழ்ந்தார்கள்

ஸ்மோல்னீ மாளிகையின் நீண்டு அகன்ற நடை வழியில் நடந்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா. மாலை வேளை. அவர் அப்போதுதான் வேலையிலிருந்து திரும்பினர். அன்று வேலை கடுமையாய் இருந்தது. ஆசிரியர்களின் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர் அவர். பின்பு தொழிலாளர்களுடன் கலந்து பேசினர். பள்ளிகள், நூலகங்கள், அனைதைக் குழந்தைகள் இல்லங்கள், தொழிலாளர் பண்பாட்டுக் கழகங்கள் ஆகியன அமைப்பது அவசியமாய் இருந்தது. உழைப்பாளி மக்களுக்குப் பயன்படும் வகையில் கல்வி முறையைப் புதுக்கி அமைக்க வேண்டியிருந்தது.

அவர் களைத்துப்போய், திருப்தியுடன் வீடு திரும்பினர்.

அவர்களுடைய இருப்பிடம் ஸ்மோல்னீ மாளிகையிலேயே இருந்தது. உயரமும் நீளமுமான ஒரே அறை. அதன் ஒரே ஜன்னல் முற்றத்தின் பக்கம் இருந்தது. தாழ்ந்த தடுப்பினால் படுக்கையறை பிரிக்கப்பட்டிருந்தது. அங்கே இரண்டு இரும்புக் கட்டில்கள் போடப்பட்டிருந்தன. படை வீரர்கள் கம்பளிகள் அவற்றின்மேல் போர்த்திருந்தன. அடுப்பும் உறங்கும் இடத்தில் இருந்தது.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா தம் அறைக்கு விரைந்தார். அதற்குக் கழுவு அறை வழியே போக வேண்டியிருந்தது. சுவரில் வரிசையாக ஒரு இருபது குழாய்கள் இருந்தன.

முன்பு கல்லூரி மாணவிகள் இங்கே முகம் கை கழுவிக் கொள்வது வழக்கம்.''இப்போது இருபது குழாய்களும் நம் முடையவை'' என்று நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ வேடிக்கையாகச் சொல்வார். அரசாங்கக் கழுவு குழாய்கள் தவிர வேறு எந்தச் செல்வமும் அவர்களிடம் இல்லை. அறையில் இருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் மிகச் சாதாரண மானவை. அலமாரி, உணவு அலமாரி, ஒரு சிறு எழுது மேஜை. இவ்வளவுதான் அங்கு இருந்தவை.

நீள் சோபாவுக்கு எதிரே துணி உறைகள் போட்ட இரண்டு நாற்காலிகளும் சிறு வட்ட மேஜைவும் இருந்தன. இதுதான் சாப்பாட்டு மேஜை. சில வேளைகளில் ஆழ்ந்த அரசாங்கப் பிரச்சினைகள் அங்கே விவாதிக்கப்பட்டன.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ மேல்கோட்டைக் கழற்றி விட்டு அடுப்பின் அருகே நின்றார். அங்கே கதகதப் பாக இருந்தது. லெனினே, வருகிற வழியாய்க் காணேம். அலுவல் இடத்துக்குக் கிட்டே இருந்த காரணத்தினால்தான் அவர் ஸ்மோல்னீ மாளிகையிலேயே வசிக்கவும் இடம் வைத்துக் கொண்டிருந்தார். மக்கள் கமிஸாரவைத் தலை வரின் அலுவல் அறையில்தான் புதிய சோஷலிஸ வாழ்வின் நிர்மாணம் பற்றிய பிரச்சினைகள் எல்லாம் முடிவு செய்யப் பட்டன. பிரபுவம்ச, வர்த்தக வம்சப் பட்டங்கள் இனி ருஷ்யாவில் வழங்க மாட்டா, இருப்புப் பாதைகளும் கடலிலும் ஆறுகளிலும் செல்லும் கப்பல்களும் பாங்கிகளும் எல்லாம் அரசுக்கே சொந்தம் என்ற அரசாணைகள் அங் கிருந்துதான் பிறப்பிக்கப்பட்டன. ஆலைகளும் தொழிற் சாலைகளும் அரசின் உடைமைகள் ஆகிவிடும். தொழிலாளி வர்க்கம் தானே உற்பத்தியை நிர்வகிக்கும்.

எல்லாம் புதியவையாக, அசாதாரணமாக இருந்தன. எல்லாமே சோவியத் நாட்டில் மட்டுமே முதன்முதலாக நிறுவப்பட்டன.

லெனினுடைய வரவேற்பு அறைக்குக் காலை முதல் மாலை வரை தொழிலாளர்களும் குடியானவர்களும் தரைப் படை வீரர்களும் கடற்படைவீரர்களும் வந்த வண்ண மாய் இருந்தார்கள். தொழிலாளர்-குடியானவர்களின் இந்தப் புது வாழ்வை எப்படி நிறுவுவது என்று ஆலோசனை கேட்பதற்காக அவர்கள் வந்தார்கள்.

''இரவுச் சாப்பாட்டுக்கு இவருக்கு நேரம் கிடைக்காது போலிருக்கிறது'' என்று எண்ணினார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன.

காலடிச் சத்தம். அவர் தானே? அவரேதாம்! வேகமான, அனாயாசமான காலடிகள். அவருடையவையே. கழுவு அறைக் கதவு திறந்தது. லெனின் வந்தார்.

''இடை நிறுத்தம் செய்யத் தீர்மானித்தேன்'' என்று விழிகளில் மகிழ்ச்சி சுடரக் கூறினார் லெனின். ஜன்னல் வழியே வெளியே பார்த்தார். ''குளிர்காலம் வந்துவிட்டது. உலாவப் போவோமா, நதேழ்தா? என்ன சொல்லுகிறாய்?''

''நான் என்ன சொல்லுகிறேன் தெரியுமா? மணியோ இரவு ஒன்பது ஆகிவிட்டது. இனி நாளைவரை வேலையை நிறுத்திவைக்கலாமே என்கிறேன்'' எனத் தர்க்கப் பொருத்தத்துடன் மொழிந்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன.

''ஆமாம், தோழர் ழேல்த்திஷவுக்கு இது முற்றிலும் பொருந்தும்'' என்று அப்போது அறைக்குள் வந்த படை வீரர் ழேல்த்திஷவைப் பார்த்தபடி கூறினார் லெனின். ''தோழர் ழேல்த்திஷவ், இந்தக் கணமே போய் ஓய்வு கொள்ளுங்கள். தயை செய்து போங்கள்'' என்று தீர்மானமாகச் சொன்னார்.

ழேல்த்திஷவ் லெனினுக்கு வீட்டுக்காரியங்களில் ஒத்தாசை செய்ய நியமிக்கப்பட்டிருந்தார். ஓய்வு எடுத்துக் கொள்ள அவருக்கு விருப்பமே இல்லை. லெனினுடைய சௌகரியங்களைக் கவனித்துக் கொள்வது அவருக்குப் பிடித்தது. சாப்பாடு பரிமாறுவது, கடைக்குப் போய்ச் செய்தித்தாள்கள் வாங்கி வருவது, கணப்பை மூட்டுவது, எல்லாம் அவருக்கு உவப்பாய் இருந்தன.

இன்றோ, அவர் தாமதிக்க விரும்பியதற்கு விசேஷக் காரணம் இருந்தது.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவுக்கு அளிக்க எதிர் பாராப் பரிசு ஒன்று அவரிடம் இருந்தது. கோட்டுப் பையிலிருந்து முகம்பார்க்கும் சின்னஞ்சிறு வட்டக் கண்ணாடியை எடுத்தார்.

''கல்லூரி மாணவி எவளோ வைத்துப் போயிருக்கிறாள். நான் எடுத்துக்கொண்டேன். நதேழ்தா கன்ஸ்தன்

தீனவ்னு, வேலைக்கு நடுவில் கேசத்தைச் சரிப்படுத்திக் கொள்ளவும் அந்த மாதிரி மற்றக் காரியங்களுக்கும் இது மிக உபயோகமாய் இருக்கும்''—இவ்வாறு கூறி, நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னுவிடம் பரிசுப் பொருளை நீட்டிய வாறு, லெனின் இதை ஆமோதிக்கிறாரா என்று திரும்பிப் பார்த்தார் இளம் படைவீரர்.

லெனின் ஆமோதித்தார் என்பது அவருடைய கட கடவென்ற சிரிப்பில்—பிறரையும் தொற்றிக் கொள்ளும் சிரிப்பில்—வெளிப்பட்டது. அவர் சொன்னார்:

''அட, நான் யோசனை இல்லாதவன்! எனக்குத் தோன்றவே இல்லையே, நதேழ்தா, உனக்கு முகம் பார்க் கும் கண்ணாடி வாங்க வேண்டும் என்பது!''

''உனக்கு எங்கே தோன்றப்போகிறது!'' என்று சிரித்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு.

ழேல்த்திஷவின் அகமும் முகமும் மலர்ந்தன. மன நிறைவுடன் ஓய்வு கொள்ளச் சென்றார் அவர்.

''எப்பேர்ப்பட்ட மனிதர்கள், சொக்குத் தங்கம்!'' என்று தலையை ஆட்டியவாறு வாய்க்குள் சொல்லிக் கொண்டார். வழிநெடுக அவர் முகம் பூராவும் புன்னகை ஒளிர்ந்தது.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னுவும் லெனினும் சிறி தளவு சூரியகாந்தி எண்ணெய் விட்ட கோதுமைப் பொங் கலை உண்டார்கள். பின்பு லெனின் முதல் வெண்பனிப் பொழிவின் மணத்தை முகர நதேழ்தா கன்ஸ்தன்தீனவ் னுவை அழைத்தார். குளிர் காலத்தின் ஆரம்ப நாட்களை அவர் பெரிதும் விரும்பினார். தூவி அடர்ந்த வெண்பனி யின் தூய்மையும் வெண்மையும் அவரைக் கவர்ந்தன.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு மென்மயிர்த்தோல் தொப்பியை அணிந்து கொண்டு பரிசுக் கண்ணாடியில் முகத் தைப் பார்த்தார்.

''நான் முதுமை அடைந்துவிட்டேன், விளாதீமிர்'' என்று திடீரெனச் சொன்னார்.

''இல்லை, கொஞ்சங்கூட இல்லை!'' என்று துடியாகப் பதில் அளித்தார் லெனின்.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னுவின் நேரான அழகுக் கூந்தல் நரையோடத் தொடங்கியிருந்தது. மெல்லிய கோடு

கள் நெற்றியில் விழுந்திருந்தன. ஆனால் லெனினுக்கோ அவர் முன்போலவே, தம் நினைவில் பதிந்திருந்தபடியே தோற்றம் அளித்தார். ஷூஷென்ஸ்கொயே சிறைக் குடியிருப்புக்கு, பச்சை விளக்கை எடுத்துக்கொண்டு மாலை வேளையில் வந்து சேர்ந்த நதேழ்தா—வழி நெடுக விளக்கைக் கையிலேயே பத்திரமாக வைத்திருந்த நதேழ்தா—தாம் லெனினின் நினைவில் பதிந்திருந்தார்.

''வேலையில் மிகவும் களைத்துப் போகிறாயோ?'' என்று கவலையுடன் கேட்டார் லெனின்.

''ரொம்ப இல்லை'' என்றார் நதேழ்தா.

உலாவப் போவதற்கு லெனினைத் துரிதப்படுத்தினார் அவர். இது இடைவேளை மட்டுமே என அவர் அறிந்திருந்தார். சற்று உலாவியபின் லெனின் மறுபடி லிஃப்டில் ஏறி மூன்றாம் மாடிக்குப் போவார், நள்ளிரவு வரை அவருடைய வேலை முடியாது. வேலையும் சிந்தனையும். உலகிலேயே முதலாவது அரசை, குடியானவர்கள், தொழிலாளர்களின் அரசை, எப்படி நிறுவுவது என்ற சிந்தனை.

முடியாவிட்டால் கற்றுக் கொள்வோம்

ஸ்மோல்னீ மாளிகையின் புகுவாயில் அருகே காவல் காத்து நின்றான் ஒரு படைவீரன்.

''அனுமதிச் சீட்டு!''

இவ்வாறு கேட்டு, தொழிலாளர்கள் உள்ளே போக முடியாதபடித் துப்பாக்கியால் வழி மறித்தான். இரு தொழிலாளர்கள் வயதில் மூத்தவர்கள், தாடிக்காரர்கள். மூன்றாமவன் இளைஞன். அவன் பெயர் ரமான்.

''இங்கே அனுமதிச் சீட்டு எங்கே கொடுக்கிறார்கள்?'' என்று துப்பாக்கியை நிதானமாக ஒரு புறம் நகர்த்தியபடி வினவினான் ஒரு தொழிலாளன்.

''ஊம்-ஊம்... விளையாடாதே! காவல் தலைவர் அலுவலகத்தில் அனுமதிச் சீட்டு பெற வேண்டும்'' என்றான் படைவீரன்.

அந்தச் சமயத்தில் வந்து சேர்ந்தார் ஸ்மோல்னீயின் காவல் தலைவர், முன்னாள் கடற்படைவீரர் தோழர் மல்க்

கோவ். அவருடைய கோட்டு திறந்திருந்தது, அதற்கு அடியில் மாலுமிச் சட்டை தென்பட்டது.

''யாரைப் பார்க்க வேண்டும் உங்களுக்கு?''

''லெனினை. முக்கியமான காரணம் இருக்கிறது'' என்றான் ரமான்.

''உடனடியான காரியம்'' என்றான் இன்னொருவன்.

''அடே அப்பா, பெரிய ஆட்கள்தாம். புரட்சி நாட்களில் எங்கே இருந்தீர்கள்?'' என்று தொழிலாளர்கள்மீது கண்ணோட்டியவாறு கேட்டார் மல்க்கோவ்.

''பனிக்கால அரண்மனையைக் கைப்பற்றினோம். வேறு எங்கே?''

பதினைந்து நிமிடங்கள் சென்றதும் மூவரும் மக்கள் கமிஸாரவைத் தலைவரின் வரவேற்பு அறையில் இருந்தார்கள். பெரிய அறை. சாமான் செட்டுகள் எளியவை. இரண்டு மர நீள் சோபாக்கள் அறையை இரு பாதிகளாகப் பிரித்திருந்தன. ஒரு புறம் மேஜை, மறு புறம் மேஜையும் சில நாற்காலிகளும். இவ்வளவே.

தொழிலாளர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்—நம் வீடுகளில் போலவே எளிமையாய் இருக்கிறது என்ற குறிப்புடன்.

செக்ரெட்டரி அலுவல் அறைக் கதவைத் திறந்தாள்.

''உள்ளே போங்கள், தயை செய்து. தோழர் லெனின் உங்களுக்காகக் காத்திருக்கிறார்.''

லெனின் மேஜையின் பின்னிருந்து எழுந்து அவர்களை எதிர்கொண்டார். உயரம் அற்றவர், துடியானவர், உயிரோட்டமுள்ள அவர் விழிகள் பளிச்சென்று சுடர்ந்தன.

''வணக்கம், தோழர்களே. அமருங்கள் தயை செய்து!''

அவர்களை உட்கார்த்திவிட்டுத் தாமும் அமர்ந்து கொண்டார். தொழிலாளர்களுக்கு எதிர்ப்பக்கத்தில் அல்ல, அவர்கள் கிட்டத்திலேயே. கையில் இருந்த பென்சிலை ஆட்டியவாறு மளமளவென்று கேள்விகள் கேட்டார்:

''எந்தத் தொழிற்சாலையிலிருந்து? உங்கள் தொழில் என்ன? தொழிற்சாலையின் நிலவரம் என்ன? ஆலைக்குக் கச்சாப்பொருள் கிடைகிறதா? ஆலை நிர்வாகத்தின் மீது தொழிலாளர் கண்காணிப்பு இருக்கிறதா? என்ன காரியமாக

வந்தீர்கள்? நண்பர்கள் என்ற முறையில், ஒளிவு மறை வில்லாமல் சொல்லுங்கள்.''

இவ்வாறு கூறிப் புன்னகை செய்தார் லெனின். நல் லியல்பு ததும்பும் புன்னகை.

லெனினுடைய இந்தப் புன்னகையால் ரமான் துணிவு அடைந்தான். மக்கள் கமிஸாரவைத் தலைவரிடம் தாங்கள் வந்த முக்கியமான காரணத்தை மறைக்காமல் விவரித் தான் அவன். தொழிற்சாலையைப் பற்றி லெனினிடம் சொல்ல அவனுக்கும் தோழர்களுக்கும் ஆசைதான், ஆனல் இப்போது அவர்கள் தொழிற்சாலையில் வேலை செய்ய வில்லை. அவர்கள் தொழிலாளி வர்க்கத்திலிருந்து தற் போதைக்கு விலக்கப் பட்டு மக்கள் கமிஸாரகத்தில் வேலை செய்ய அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஜார் காலத்துச் சிப்பந்திகள் ஓடிவிட்டார்கள், சோவியத் ஆட்சியுடன் ஒத் துழைக்க அவர்களுக்கு விருப்பம் இல்லை. ஓடாமல் எஞ்சி இருப்பவர்களும் வேலை செய்வதற்குப் பதிலாகக் கழப்பிக் கொண்டு இழுத்தடிக்கிறார்கள். ஆகவே, அங்கே வேலை செய் யத் தொழிலாளர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்....''

''சோவியத் ஆட்சிக்கு உதவத்தானே''? என்று குறுக்கே கேட்டார் லெனின். பின்னே என்ன?''

லெனின் விழிகளை இடுக்கிக்கொண்டு ரமானை ஊடுருவி நோக்கியவாறு இருந்தார். ரமானுக்கு எக்கச்சக்க மாய்ப் போய்விட்டது. அவன் பொன் முடியைக் கோதிக் கொண்டான்.

''எங்களால் முடியவில்லை, விளாதீமிர் இல்யீச். கஷ்ட மாய் இருக்கிறது. தொழிற்சாலையில் பயனுள்ள வேலை செய்தோம். மக்கள் கமிஸாரகத்திலோ, குருடர்கள் போலத் தட்டித் தடவுகிறோம்.''

''அரசை நிர்வகிப்பது எனக்கு லேசாய் இருக்கிறது என்று எண்ணுகிறீர்களா? எனக்கு அனுபவம் இருப்பதாக நினைக்கிறீர்களா? நான் மக்கள் கமிஸாரவைத் தலைவனாக முன்பு ஒரு தரமும் இருந்ததில்லையே. நம்முடைய மற்ற மக்கள் கமிஸார்களும் முன்பு அந்தப் பதவியை வகித்தது இல்லை, அல்லவா?'' என்று திருப்பிக் கேட்டார் லெனின்.

ஒரு தொழிலாளன் தயக்கத்துடன் தலையை ஆட்டி னன்.

''எல்லாம் ஆனலும் ரொம்பப் புதிது.''

''பழையவற்றைத்தான் நாம் உடைத்து எறிந்து விட்டோமே! நமக்குப் பதில் யார் புதியதை நிர்வகிக்கப் போகிறார்கள்?''

லெனின் குதூகலம் அடைந்து, நாற்காலியைத் தொழிலாளர்களுக்கு இன்னும் கிட்டத்தில் நகர்த்திக் கொண்டு விவரிக்கத் தொடங்கினர். அனுபவஞானம் இல்லாமல் மக்கள் கமிஸாரகத்தில் வேலை செய்வது தொழிலாளர்களுக்குக் கஷ்டந்தான். ஆனல் அதற்குப் பதிலாகப் பாட்டாளிக்கு இயல்பான உய்த்துணர்வு அவர்களிடம் இருக்கிறது. மக்கள் கமிஸாரகங்களில் நம்முடைய, கட்சியினுடைய, சோவியத் போக்கைச் செயல்படுத்த வேண்டும். அதைத் தொழிலாளர்கள் தவிர வேறு யார் செயல்படுத்துவார்கள்? எங்கும் தொழிலாளர்களின் மேற்பார்வையும் தொழிலாளர்களின் கண்காணிப்பும் வேண்டும்.

''ஆனல் நாங்கள் தவறு செய்து விட்டாலோ?''

''தவறு செய்தால் திருத்திக் கொள்வோம். முடியாவிட்டால் கற்றுக் கொள்வோம். ஆகவே, தொழிலாளித் தோழர்களே, கட்சி உங்களை அனுப்பியிருக்கிறது, கடமையை நிறைவேற்றுங்கள்'' என்று எழுந்து நின்று கண்டிப்பாகக் கூறினர் லெனின். பின்பு உற்சாகமூட்டும் இனிய புன்னகையுடன் மறுபடி சொன்னர்: ''முடியாவிட்டால் கற்றுக் கொள்வோம்.''

லெனினுடன் நடந்த இந்த உரையாடலுக்குப் பின் தொழிலாளர்களின் தயக்கம் எல்லாம் போயே போய்விட்டது. இனி அவர்கள் காலை முதல் நள்ளிரவு வரை மக்கள் கமிஸாரகத்தைவிட்டு வெளியே வர மாட்டார்கள். அதன் நெளிவு சுழிவுகள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே விடுவார்கள்.

''தோழர் லெனின், கடமையை நிறைவேற்றுவோம் என்று உறுதி கூறுகிறோம்'' என்றார்கள் தொழிலாளர்கள்.

மக்கள் கமிஸாரவைத் தலைவரின் அலுவலறையிலிருந்து வெளிவந்ததும் அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்: லெனின் சொன்னது சரிதான். தொழிலாளர்-குடியானவர்களின் அரசாங்கம் நம்முடையது. நாம் தான் அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

யுத்தம் நாட்டைப் பாழ்படுத்திவிட்டது. பெத்ரோகிராதில் கொடிய உணவுப் பஞ்சம் நாளுக்கு நாள் தீவிரம் ஆயிற்று. உணவுச் சீட்டுக்களின்படி, தலைக்குக் கால் ராத்தல் ரொட்டி ஒவ்வொரு நாளும் வழங்கப்பட்டது. இது காலைச் சிற்றுண்டிக்குக்கூடப் போதாதே. மதியச் சாப்பாட்டுக்கு மீன் குழம்பு. தொழிலாளர் குடும்பங்களிலும் அப்படி, மக்கள் கமிஸாரவையிலும் அப்படியே. லெனினும் இவ்வாறே வாழ்ந்தார். அவருக்கும் இந்த அற்ப ரேஷன்தான் கிடைத்தது.

கமிஸாரவையை லெனின் நாள்தோறும் கூட்டினார். விவகாரங்கள் ஏராளமாக இருந்தன. எல்லாம் உடனடியானவை. பஞ்சத்தை ஒழிப்பது எப்படி என்பது முதலாவது அவசரப் பிரச்சினை. பெத்ரோகிராத் மட்டுமே அல்ல, எல்லா நகரங்களும் பட்டினியால் தவித்தன. ஆனால் ருஷ்யாவில் தானியம் இருந்தது. சைபீரியாவிலும் வோல்காப் பிரதேசத்திலும் தானியத்துக்குக் குறைவே இல்லை. கிராமங்களிலிருந்து தானியத்தை வாங்கிப் பட்டினியால் வாடிய நகரங்களுக்கு வினியோகிப்பதுதான் தேவையாய் இருந்தது. மிகவும் எளிய காரியமாகப் படுகிறது அல்லவா? உண்மையிலோ, இது எளிதே அல்ல. ரயில் போக்குவரத்து சீர்குலைந்திருந்தது. எனவே போக்குவரத்தைச் சீர்படுத்துவது முதல் காரியமாயிருந்தது. நகரங்களில் எரிபொருள்களும் இல்லை! விறகும் இல்லை, நிலக்கரி இல்லை. எனவே போக்குவரத்தைச் சீர்படுத்தலாமே! அதுதான் முடியவில்லை! எங்கும் மறைமுக நாசவேலைக்காரர்களும் கள்ள வியாபாரிகளும் நிறைந்திருந்தார்கள். கள்ள வியாபாரிகள் மக்களின் இடர்களைப் பயன்படுத்தி லாபம் திரட்ட விரும்பினர்கள். நாசவேலைக்காரர்களோ, புரட்சிக்குக் குழிபறிக்க முயன்றார்கள். அவர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள் பூர்ஷ்வாக்கள். பூர்ஷ்வாக்கள் சோவியத் ஆட்சியை வெறுத்தார்கள். பூர்ஷ்வாக்களும் ஜார் ஆட்சிக்கால அதிகாரிகளும் கள்ள வியாபாரிகளும் கெடுத்தார்கள், தீங்கு விளைத்தார்கள், இடைஞ்சல் செய்தார்கள். ஜெர்மானியர்கள் இதோ வந்துவிடுவார்கள், சோவியத்துக்களை

ஒழித்துவிடுவார்கள், அப்புறம் சுகமாக வாழலாம் என்று பூர்ஷ்வாக்கள் நம்பினார்கள். ஜெர்மன் வெற்றியை ஆவலுடன் விரும்பினார்கள்.

லெனின் கவலைப்படுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன.

ஜெர்மானியர்களிடம் வலிமையுள்ள சைனியம் இன்னமும் இருந்தது. ஜாரின் பழைய சைனியமோ, சிதறி விட்டது. அதிகாரிகள் போர்முனையில் தம் படைப்பிரிவுகளை விட்டு விட்டுப் போய்விட்டார்கள். படைவீரர்கள் வீடுகளுக்குப் போகத் துடித்தார்கள். நாட்டுக்கு எதிர்ப்பட்டது பயங்கரமான அபாயம்.

''என்ன செய்வது?'' என்று யோசனை செய்தார் லெனின். கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும் மக்கள் கமிஸார்களும் பகலும் இரவும் கூடி ஆலோசனை செய்தார்கள்.

''தோழர்களே! நாம் சமாதானம் பற்றிய அரசாணையில் கையெழுத்து இட்டிருக்கிறோம். ஜெர்மானியர்களுடன் யுத்தத்தை நாம் நிறுத்த வேண்டும்'' என்றார் லெனின்.

மக்கள் கமிஸாரவை சமாதானப் பிரேரணையை ஜெர்மன் படைத் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பியது. ஜெர்மன் அதிகாரிகள் இணங்கினார்கள். அவர்கள் விதித்த நிபந்தனை என்னவென்றால், ஜெர்மானியர்கள் ருஷ்யாவில் கைப்பற்றியுள்ள நிலப்பரப்பு முழுவதும் அவர்களுக்குச் சொந்தம் ஆகிவிட வேண்டும் என்பது.

''நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வோம். வேறு வழி இல்லை'' என்றார் லெனின்.

வேறு வழியே இல்லை. மக்கள் போரினால் களைத்துச் சோர்ந்து போயிருந்தார்கள். சீரழிவால் அவர்கள் துன்புற்றுத் தவித்தார்கள். சமாதானமாக வாழவும் உழைக்கவும் சக்தியைத் திரட்டவும் அவர்கள் விரும்பினார்கள்.

ஜெர்மனியோடு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளும் பிரச்சினை கட்சி மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் பல முறை விவாதிக்கப்பட்டது. லெனின் பின்வருமாறு சான்றுகள் காட்டி நிரூபித்தார்: யுத்தத்தை நிறுத்தியே ஆக வேண்டும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ,

அவ்வளவு சீக்கிரம். நிபந்தனைகள் எவ்வளவு கடுமை ஆயினும் பரவாயில்லை. சோவியத் குடியரசைக் காப்பதன் பொருட்டு எல்லாவிதத் தியாகங்களையும் மேற்கொள்ள வேண்டும். சோவியத் ஆட்சியை வலுப்படுத்த வேண்டும், தொழிலாளர்கள்-குடியானவர்களின் புதிய சேனையை நிறுவ வேண்டும். பொருளாதாரத்தைச் சீர்படுத்த வேண்டும்.

எல்லோரும் லெனினை ஆதரித்திருந்தால் நன்றாய் இருக்குமே! அதுதான் இல்லை. கடுமையான கருத்து வேறுபாடுகள் தோன்றின. திடமற்ற, நிலையுறுதி இல்லாத மனிதர்கள் லெனினுடன் வாதிட்டார்கள், சமாதானம் செய்து கொள்வதை எதிர்த்தார்கள். ''இது கொள்ளைக்காரச் சமாதானம். கொள்ளைக்காரச் சமாதானத்தில் கையெழுத்திட நாங்கள் விரும்பவில்லை'' என்றார்கள் அவர்கள். எவ்வளவு பயங்கர விபத்து சோவியத் ருஷ்யாவை நெருங்கிக் கொண்டிருந்தது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திடாவிட்டால் இந்த விபத்து கட்டாயம் நேர்ந்திருக்கும்.

லெனின் புரிந்துகொண்டிருந்தார். அவருக்கு மிகவும் கஷ்டமாய் இருந்தது.

''தோழர்களே! நம் நாட்டில் சீரழிவும் பஞ்சமும் நிலவுகின்றன. நம்மிடம் சக்தி இல்லை. சோவியத் குடியரசைக் காப்பாற்றுவதற்கு இடை ஓய்வு பெறுவது அவசியம்'' என்றார் அவர்.

இவ்வாறு லெனின் தமது தோழர்களுடன் தர்க்கித்து அவர்களை இணங்க வைத்தார்.

சோவியத் அரசாங்கம் ஜெர்மன் ஜெனரல்களிடம் மறுபடி தன் பிரதிநிதிகளை அனுப்பியது. பிரதிநிதிக் குழுத் தலைவராக இருந்தார் திரோத்ஸ்கி.

ஆனால் திரோத்ஸ்கி லெனினது கட்டளைகளை மீறினார். கட்சி மத்தியக் கமிட்டியும் சோவியத் அரசாங்கமும் ஜெர்மன் இராணுவத் தலைவர்களுடன் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருந்தன. என்ன விலை வேண்டுமானாலும் செலுத்திச் சமாதானம் பெற வேண்டும் என்பது தீர்மானம்.

ஆனால் திரோத்ஸ்கியோ? அவர் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்து இடவில்லை. அதே சமயம்

சோவியத் தரப்பில் போர் நிறுத்தப்பட்டுவிட்டது என்று அறிவித்து விட்டார். படைவீரர்களோ போர்முனையை விட்டுவிட்டு வீடுகளுக்கு விரைந்தார்கள். போர்முனையே இல்லாது போயிற்று.

ஜெர்மன் ஜெனரல்கள் ருஷ்யச் சாலைகள் வழியே தங்கள் படைகளைத் தடையின்றி நடத்திச் சென்றார்கள். ருஷ்யாவின் உள்ளே மேலும் மேலும். தலைநகருக்கு வரவர அருகில். மிகக் கிட்டத்தில். ஜெர்மன் ஜெனரல்கள் தலைநகரைக் கைப்பற்றிவிடுவார்களோ? புரட்சியின் முடிவு வந்துவிட்டதோ?

பூர்ஷ்வாக்களும் கள்ள வியாபாரிகளும் கொள்ளை லாபவர்த்தகர்களும் ஒளிந்து கொண்டு காத்திருந்தார்கள். யார் யாரைப் பழிவாங்க வேண்டும் என்று 'கறுப்புப் பட்டியல்' ஏற்கனவே தயாரித்துவிட்டார்கள் அவர்கள். இந்தப் பட்டியல்களில் போல்ஷிவிக்குகள், முன்னணித் தொழிலாளர்களின் பெயர்கள் இருந்தன.

திரோத்ஸ்கியின் செயல், ஜெர்மன் ஏகாதிபத்திய வாதிகளுக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் சாதகமாக முடிந்தது.

ருஷ்யாவில் கம்யூனிஸ்டுகளின் போராட்டக் கட்சி நிறுவுவதற்குத் திரோத்ஸ்கி முன்பும் பல முறை இடைஞ்சல் செய்தார். லெனினுக்கும் லெனின்வாதிகளுக்கும் எதிராகப் பல்வகைக் குழுக்களைப் பலமுறை திரட்டினார்.

கட்சி மத்தியக் கமிட்டி, மக்கள் கமிஸாரவைக் கூட்டங்கள் மீண்டும் இடைநிறுத்தம் இன்றி நடைபெறலாயின. ஸ்மோல்னீ மாளிகையில் விறகு இல்லை. எனவே கணப்புக்கள் மூட்டப்படவில்லை. குளிராயிருந்தது. மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும் மக்கள் கமிஸார்களும் மேல்கோட்டுக்களும் மென்மயிர்த் தோல் கோட்டுக்களும் அணிந்து, காலர்களைத் தூக்கிவிட்டுக் கொண்டு நீண்ட மேஜையின் இரு புறமும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய முகங்கள் கடுகடுவென்று இருந்தன. வெளியே பிப்ரவரி மாதப் பனிப்புயல் வீசிக் கொண்டிருந்தது.

''கசப்பான, மனத்தைப் புண்படுத்துகிற, துயர்தரும் படிப்பினை!'' என்றார் லெனின்.

''சோஷலிஸத் தாய்நாடு ஆபத்தில் இருக்கிறது!'' என்று கூறியது மக்கள் கமிஸாரவையின் அறிக்கை.

''தொழிலாளர்களே, குடியானவர்களே, தோழர்களே! தாய்நாட்டைப் பாதுகாக்க எழுங்கள்!'' என்று அறைகூவி அழைத்தது இந்த அறிக்கை.

நகரங்களிலும் கிராமங்களிலும் தொழிலாளர் குடியிருப்புக்களிலும் ஆயிரமாயிரம் தொண்டர்கள் மக்கள் கமிஸாரவையினதும் லெனினதும் அறைகூவலை ஏற்று, படையில் சேர முன்வந்தார்கள். புதிய சேனை நிறுவப்பட்டது.

செஞ்சேனை, சோவியத் படை. அது ஜெர்மன் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போரிட்டது. அவர்களை முன்னேறவிடாது தடுத்தது.

இது நடந்தது 1918ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில். அப்போது முதல் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதம் 23ந் தேதியன்று சோவியத் சேனையின் ஸ்தாபன நாளை சோவியத் மக்கள் கொண்டாடுகிறார்கள். இந்தச் சேனை எத்தனையோ தரம் சோவியத் நாட்டைப் பகைவர்களிடமிருந்து காத்திருக்கிறது. எப்போதும் காக்கும்.

செஞ்சேனை தங்களுக்கு எதிராகப் போரிடத் தொடங்கியதும் ஜெர்மன் ஜெனரல்கள் சமாதானத்துக்கு இசையத் தீர்மானித்தார்கள். ஆனால் இம்முறை சமாதான உடன்படிக்கை முன்னிலும் அதிகக் கொள்ளைக்காரத் தன்மை கொண்டதாக இருந்தது. ஜெர்மன் ஜெனரல்கள் சோவியத் நாட்டின் பிரதேசங்களை முன்னிலும் அதிக அளவில் கைப்பற்றிக் கொண்டார்கள். சோவியத் நாடு ஏராளமான பணமும் பொருள்களும் நஷ்ட ஈடாகத் தர வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள்.

சோவியத் அரசாங்கம் அதற்கு இணங்க வேண்டியிருந்தது.

போல்ஷிவிக் கட்சியின் ஏழாவது காங்கிரஸ் போரையும் சமாதானத்தையும் பற்றி மக்கள் கமிஸாரவைத் தலைவரின் அறிக்கையைக் கேட்டது. லெனினுடைய கொள்கை சரியானதே என்று அது ஏற்றுக் கொண்டது.

சில மாதங்கள் பொறுத்து ஜெர்மனியில் புரட்சி நடந்தது. கொள்ளைக்கார உடன்படிக்கை தானே ரத்தாகிவிட்டது.

''நம் லெனினுக்குத் தான் எவ்வளவு தீர்க்க திருஷ்டி!'' என்று பாராட்டினார்கள் தொழிலாளர்கள்.

மார்ச் மாத இரவு. பெத்ரோகிராத் நகர்ப் புறத்தில், மாஸ்கோ செல்லும் பாதையின் பிளாட்பாரம் ஒன்றில் ரயில் வண்டித் தொடர் விளக்குகள் ஏற்றப்படாமல் நின்று கொண்டிருந்தது. காவற்படையினர் பிளாட் பாரத்தைக் காவல் புரிந்தார்கள். லாத்வியத் துப்பாக்கிப் படையினரின் ஆயுதங்கள் ரயிலின் ஓரமாக வரிசையாகத் தென்பட்டன. எஞ்சினின் எரிபொருள் பெட்டிக்கு வெளியே இரவின் இருளில் கரிய வாயைக் காட்டிக் கொண்டிருந்தது மெஷீன்கன்.

தோல் கோட்டும் வில் கண்ணுடியும் அணிந்த உயர மற்ற ஒரு மனிதர், நீண்ட இராணுவ மேல்கோட்டு போட்டிருந்த இன்னொருவரிடம் பேசிக் கொண்டிருந்தார். முன்னவர் ஸ்வெர்திலோவ், பின்னவர் த்ஸெர்ழீன்ஸ்கீ.

''புரட்சி விரோதிகளுக்கு இன்றைய ரயில் பயணம் பற்றித் தெரியாது என்று நீங்கள் உறுதியாக நம்புகிறீர் களா?'' என்று கேட்டார் ஸ்வெர்திலோவ்.

''ஒருவேளை தெரிந்திருக்கலாம். ஆனல் வண்டி எங் கிருந்து புறப்படும் என்பது தெரியாது.''

''தலைமை நிலையத்திலிருந்து புறப்படாமல் இந்தப் பிளாட்பாரத்திலிருந்து புறப்படும் திட்டம் மிகச் சாமர்த் தியமானது'' என்றூர் ஸ்வெர்திலோவ்.

''புரட்சி விரோதிகள் கலகக் கிளர்ச்சி நடத்தச் சதி செய்தார்கள். நாள்தோறும் அழிவு வேலைகள் கண்டு பிடிக்கப்படுகின்றன'' என்று பதில் அளித்தார் த்ஸெர் ழீன்ஸ்கீ.

ஸ்வெர்திலோவ் போலவே த்ஸெர்ழீன்ஸ்கீ ஜார் ஆட்சிக் காலத்தில் பல முறை சிறைகளிலும் சைபீரியாவி லும், கடுங்காவல் கைதியாகவும் தண்டனைகள் அனுபவித் திருந்தார்.

1917ம் ஆண்டில் லெனினுடனும் கட்சி மத்தியக் கமிட்டியின் மற்ற உறுப்பினர்களுடனும் சேர்ந்து அக்டோ பர் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்தினர். புரட்சிக்குப் பிறகு புரட்சி விரோதிகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்காக நிறுவப்பட்ட அகில ருஷ்ய அசாதாரணக்

கமிஷனின் தலைவராக அவரை நியமிக்க லெனின் பிரேரணை செய்தார்.

த்ஸெர்ழீன்ஸ்கீயின் மென்மையான இதயம் எல்லாருக்கும் தெரிந்திருந்தது. ஆனால் புரட்சியின் எதிரிகள்பால் அவர் தயாதாட்சிணியமே காட்டுவதில்லை. குழந்தைகள் மேல் அவருக்கு ஒரே பரிவும் பாசமும். சோவியத் ஆட்சி மக்களுக்கு ஒளிதிகழும் வாழ்வைச் சமைக்கும் என அவர் உளமார நம்பினார். ஓய்வு ஒழிவு இல்லாமல், இரவும் பகலும் உழைத்தார் த்ஸெர்ழீன்ஸ்கீ. சில சந்தர்ப்பங்களில் பற்பல நாட்கள் தொடர்ந்து வேலை செய்த வண்ணமாய் இருந்தார்.

புரட்சிக்காக. கட்சிக்காக. மக்களுக்காக.

இதற்குள் பிளாட்பாரத்திற்கு வந்தார்கள் சிலர். லெனின் விரைவாக அடிவைத்து முன்னே நடந்தார். கட்டம் போட்ட சால்வையைக் கையில் மடித்துத் தொங்கவிட்டவாறு அவர் பின்னே நடந்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன.

எல்லோரும் ரயில் ஏறினார்கள். எஞ்சின் சீழ்க்கை அடித்தது. லாத்வியப் படைவீரர்கள் பெட்டிகளின் ஏறுபடிகளில் தாவித் தொற்றிக் கொண்டார்கள்.

எஞ்சின் புறப்பட்டது. அணைந்த விளக்குகளுடன் பிளாட்பாரத்திலிருந்து நகர்ந்தது ரயில்.

ஜன்னலோரமாக இருந்த மடக்கு மேஜை அருகே உட்கார்ந்து கொண்டு தோல்பையிலிருந்து காகிதங்களை வெளியில் எடுத்தார் லெனின்.

''உடம்பைக் கொஞ்சமாவது பேணுங்கள், விளாதீமிர் இல்யீச். பயணத்தின் போதாவது இளைப்பாறுங்கள்'' என்றார் ஸ்வெர்திலோவ்.

''நாம் உடம்பைப் பேணியிருந்தால் ருஷ்ய நாட்டில் புரட்சியைக் கண்டிருக்கவே மாட்டோம்'' என்று கேலிச் சிரிப்புடன் சொன்னார் லெனின்.

அக்கணமே உட்கார்ந்து, சற்று முன்தான் எழுதி முடித்திருந்த கட்டுரையை மறுபடி படித்துத் திருத்தங்கள் செய்வதில் முனைந்தார். நம் புரட்சியால் நாம் ருஷ்யாவை விறல் மிக்க, செல்வம் கொழிக்கும் நாடு ஆக்குவோம் என்று எழுதினார் லெனின்.

ருஷ்யாவைப் பகைவர்கள் சூழ்ந்திருந்தார்கள். புரட்சி விரோதிகள் சதிகள் செய்து வந்தார்கள். அந்த நிலைமையிலுங்கூட, சோவியத் மக்கள் சோஷலிஸத் தாய்நாட்டை மாண்பு மிக்கதாகப் புரிவார்கள், புரட்சிச் சக்திகள் வளர்ந்து ஓங்கும், கட்டாயமாக வெற்றி பெறும் என்று உறுதி கொண்டிருந்தார் லெனின்.

ரயில்வண்டியில் எல்லாப் பயணிகளும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். எஞ்சின் டிரைவர் வசந்தகால இரவின் இருளில் கூர்ந்த பார்வை செலுத்தியவாறு எச்சரிக்கையுடன் எஞ்சினை ஓட்டிக் கொண்டிருந்தார். ரயில் பெட்டிகளின் புகு மேடைகளில் செம்படை லாத்வியத் துப்பாக்கி வீரர்கள் பாரா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மெழுகு வத்தி விளக்கின் சீரற்ற வெளிச்சத்தில் மறுநாளைய செய்தித்தாளுக்காகக் கட்டுரை எழுதி முடித்துக் கொண்டிருந்தார் விளாதீமிர் இல்யீச் லெனின்.

எதிர்ப் புறம் கீழ்த் தட்டில் உள்ளங்கையில் கன்னத்தை வைத்தவாறு அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ. லெனின் சால்வையை அவர் மீது கவனத்துடன் போர்த்தார். லெனினின் தாயாரும் தங்கை மரீயாவும் ஸ்டாக்ஹோம் வந்திருந்தார்களே, அப்போது தாயார் பரிசளித்தது இந்தச் சால்வை. தாயாரின் நினைவுக்குறி, கட்டம்போட்ட சால்வை....

சோவியத் அரசாங்க உறுப்பினரை ஏற்றிச் சென்ற தனி ரயில் வண்டி 1918ம் ஆண்டு மார்ச் மாதம் 11ந் தேதி இடையூறுகள் இன்றி மாஸ்கோ சேர்ந்தது. புரட்சி விரோதிகளுக்கு அழிவு வேலை செய்ய வாய்க்கவில்லை. லெனினும் சோவியத்துக்களின் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியினரும் மக்கள் கமிஸாரவை உறுப்பினர்களும் பெத்ரோகிராதிலிருந்து மாஸ்கோ வந்துவிட்டார்கள். அப்போது முதல் மாஸ்கோவே சோவியத் நாட்டின் தலை நகர் ஆயிற்று.

ஆரம்பத்தில் லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞவும் லெனினின் சகோதரி மரீயா இல்யீனிச்ஞவும் ''நேஷனல்'' ஹோட்டலில் தங்கினார்கள். இது கிரெம்ளினுக்கு எதிர்ப் புறம் இருந்தது. விரைவிலேயே மக்கள் கமிஸாரவை

உறுப்பினர் எல்லோரும் கிரெம்ளினிலேயே வசிக்கவும் வேலை செய்யவும் வசதிகள் செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மாஸ்கோ வந்த மறு நாளே லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் நகரைச் சுற்றிப் பார்க்கவும் கிரெம்ளினைப் பார்வையிடவும் புறப்பட்டார்கள். லெனினின் நெடுங்கால நண்பர் போன்ச்-புருயேவிச்சும் அவர்களுடன் சென்றார். அவர் மக்கள் கமிஸாரவைக் காரிய நிர்வாகியாகப் பணியாற்றி வந்தார். கிரெம்ளினில் மக்கள் கமிஸாரவை உறுப்பினர்களுக்கு இட வசதி செய்யும் பொறுப்பை அவரே ஏற்றிருந்தார்.

அக்டோபர் புரட்சி நடந்தபோது இராணுவக் கல்லூரி மாணவர்கள் கிரெம்ளினில் புகுந்து அரண் செய்து கொண்டு பீரங்கிகளால் குண்டு வீசினார்கள். கடும் போர்கள் நடந்தன. முடிவில் புரட்சிப் படைப் பிரிவுகள் வெண் படையினரையும் ஜாரின் ஏவலர்களையும் கிரெம்ளினின் தொன்மை வாய்ந்த மதில்களுக்கு வெளியே அடித்து விரட்டிவிட்டார்கள்.

அந்தச் சண்டைகளுக்குப் பிறகு 1918ம் ஆண்டு வசந்த காலத்தில், கிரெம்ளின் வெறுமையாய்க் கிடந்தது. அதன் உள்ளே இருந்த பல கட்டிடங்கள் இடிந்து தகர்ந்து, நெருப்பால் கறுப்பேறி இருந்தன. உடைந்த செங்கற்களும் கண்ணாடிச் சில்லுகளும் எங்கும் குவிந்து கிடந்தன. எங்கு பார்த்தாலும் கூளமும் இடிபாடும்....

லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் சதுக்கத்தைக் கடந்து சென்றார்கள். ''மணி அரசன்'' என்று அழைக்கப்பட்ட கண்டாமணி மலைபோல நின்றது. மிகமிகப் பழங்காலத்தில் தொழிலாளர்களின் தேர்ந்த கரங்கள் இந்த அழகிய வெண்கல மணியை வார்ப்படம் செய்தன. ''பீரங்கி அரசன்'' எனப்படும் பெரிய பீரங்கியும் திறமை சான்ற கம்மியர்களின் கைவினைக்குச் சாட்சியம் கூறியது. அப்புறம் கிரெம்ளினின் தொன்மைக்காலக் கொத்தள மதில்கள்! வனப்பு மிக்க கிரெம்ளின் கோபுரங்கள்! ஒவ்வொன்றும் ஏதோ கவிஞன் கற்பனை போன்று காட்சி அளித்தது. நாற்புறமும் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் மிளிர்ந்தன.

லெனின் சிந்தனையில் ஆழ்ந்தவராகத் தொலைவில் பார்வை செலுத்தினர். கிரெம்ளின் குன்றிலிருந்து மாஸ்கோ நகரம் கட்டற்றதாக, விசாலமாகத் தோற்றம் அளித்தது.

லெனின் புன்னகை பூத்தார்.

''வணக்கம், மாஸ்கோ நகரே'' என்றார்.

புரட்சியின் அடிவைப்புக்கள்

போல்ஷிவிக் கட்சியின் ஏழாவது காங்கிரஸ் ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்வது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அப்புறம், போல்ஷிவிக் கட்சியைக் கம்யூனிஸ்ட் கட்சி என அழைக்கும் யோசனையை லெனின் அதே காங்கிரஸில் பிரேரித்தார்.

நமது குறிக்கோள் கம்யூனிஸத்தை நிறுவுவது. எனவே கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சி என்று பெயர் வைப்போம் என்றார் லெனின்.

புதிய சமுதாயத்தை எப்படி நிறுவுவது என்பது பற்றி, தொழிலாளர்களுடன் சந்திப்புக்களின் போதும், தமது கிரெம்ளின் அலுவல் அறையிலும் லெனின் விவாதித்தார், ஆழ்ந்து சிந்தனை செய்தார். முதல் அடிவைப்புக்களே யாவற்றிலும் கடினமானவை. மிக மிக முக்கியமானவை இவை. லெனின் இவற்றைப் பற்றி இடைவிடாது சிந்தித்தார். அரசாங்க உறுப்பினர்களுடன் ஆலோசனை செய்தார். விரிவாக விவாதித்தார்.

யாக்கவ் மிஹாய்லவிச் ஸ்வெர்திலோவை லெனின் அடிக்கடி சந்தித்தார். ஸ்வெர்திலோவ் சோவியத்துக்களின் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டித் தலைவர். அரசாங்கக் காரியங்களையும் பிரச்சினைகளையும் இருவரும் சேர்ந்தே முடிவு செய்தார்கள்.

சோவியத் ஆட்சிக்கு யுத்தத்தில் இடை ஓய்வு கிடைத்திருந்த அவகாசத்தில் மக்களுக்காகப் புது வாழ்வை உறுதியான அடிப்படையில் சீரமைக்க விரும்பினர் லெனின்.

முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்தின் உதவியை அவர் நாடினர். அப்போது அவர் எழுதிய ''சோவியத் ஆட்சியின் அடுத்த கடமைகள்'' என்னும் கட்டுரை மிகப்

பிரபலமானது. ''பாட்டாளி வர்க்க இரும்புப் பட்டாளத்தின் ஒரு சீரான அணி நடை நமக்குத் தேவை'' என்று இந்தக் கட்டுரையில் எழுதினார் லெனின். கட்சியின் மத்தியக் கமிட்டி லெனினுடைய கருத்துக்களையும் திட்டங்களையும் ஆதரித்தது. அவரது கட்டுரை **பிராவ்தா, இஸ்வேஸ்தியா** செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது. மிகப் பெரிய குறிக்கோள்கள் மக்களுக்கு முன் காட்சி தந்தன. கம்யூனிஸ்டுகளும் தொழிலாளர்களும் குடியானவர்களும் லெனினைப் பின்பற்றினார்கள், அவரை நம்பினார்கள்.

கிரெம்ளினில் லெனினது அலுவல் அறையில் பின்னல் சாய்வு நாற்காலி எழுதுமேஜை அருகே போடப்பட்டிருந்தது. லெனினுக்கு இந்த நாற்காலி மிகவும் பிடித்திருந்தது. அவருடைய பிள்ளைப் பருவத்தில் உல்யானவ் குடும்பத்தாரின் ஸிம்பீர்ஸ்க் வீட்டில் இதே போன்ற பின்னல் நாற்காலிகள் இருந்தன. அதனாலேயே அவருக்கு இந்த நாற்காலி பிடித்திருந்தது போலும். வசதி வாய்ந்த சாப்பாட்டு அறையில், தொங்கு விளக்கின் அடியில் கழித்த பனிக்கால மாலைகளை லெனின் நினைவு கூர்ந்தார். அப்போது படித்த அருமையான புத்தகங்களும் அவர் நினைவுக்கு வந்தன. இன்பமான பிள்ளைப் பருவம்!

சோவியத் நாட்டின் எல்லாத் தொழிலாளர்கள், குடியானவர்களின் குழந்தைகளுக்கும் இன்பமும் நலமும் நிறைந்த பிள்ளைப் பருவம் வாய்க்கும்படி வகை செய்ய லெனின் விரும்பினார்.

ஜார் ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்கள், குடியானவர்களின் குழந்தைகள் கல்வி பெறுவது கடினமாக இருந்தது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிப்பதற்கே அபூர்வமாகத்தான் யாருக்காவது வாய்த்தது. கல்லூரிப் படிப்பு பெறும் வசதியோ இன்னும் அரிதாக இருந்தது. இப்போது எல்லாப் பள்ளிகளும் எல்லாக் கல்லூரிகளும் உழைப்பாளிகளின் குழந்தைகளுக்குத் திறந்துவிடப்பட்டன. சற்றுக் கொள்ளுங்கள்! புத்தகங்கள் படியுங்கள்— எல்லா நூலகங்களும் உங்களுக்காகவே இருக்கின்றன!

யுத்தம் ருஷ்யாவைச் சீரழித்துவிட்டது. பஞ்சமும் குளிரும் வதைத்தெடுத்தன. ஆனாலும், சிறந்த ரேஷன்,

சிறந்த உணவுப் பண்டங்கள் உங்களுக்கே, குழந்தைகளே! எந்தக் காலத்திலும், எந்த பூர்ஷ்வா அரசிலும் உழைப்பாளி மக்களின் குழந்தைகள்பால் இத்தகைய பரிவும் அக்கறையும் காட்டப்பட்டதே இல்லை. உழைப்பவர்களின் நலன்கள் வேறு எங்குமே இவ்வளவு அக்கறையுடன் பேணப்பட்டதில்லை.

ஜார் ஆட்சியின்போதும் பூர்ஷ்வாக்கள் அதிகாரம் செலுத்திய காலத்திலும் தொழிலாளர்கள் நாள்தோறும் பன்னிரண்டு மணி—ஏன், பதினைந்து மணிகூட—வேலை செய்து வந்தார்கள். வந்தது சோவியத் ஆட்சி. எல்லோருக்கும் எட்டு மணி நேரமே வேலை நாள் என்ற அரசாணையில் லெனின் கையொப்பம் செய்தார்.

முன்பு சிறந்த நிலம் குலாக்குகளிடமும் நிலப்பிரபுக்களிடமுமே இருந்தது. இப்போதோ, ஆலைகளும் தொழிற்சாலைகளும் இருப்புப் பாதைகளும் சுரங்கங்களும் கனிகளும் பெட்ரோலியக் கிணறுகளும் பாங்கிகளும் எல்லாமே அரசின் உடைமை ஆகிவிட்டன. நிலப்பிரபுக்களும் பூர்ஷ்வாக்களும் ஒழிந்தார்கள்! இஷ்டமானால் உழைத்துச் சம்பாதியுங்கள். உழைக்காதவனுக்கு உணவு கிடையாது.

சோவியத் நாட்டில் நிகழ்ந்த முன்னறியாப் புதுமாறுதல் இது. புரட்சி துணிவுடன் மேலும் மேலும் முன்னேறியது. இந்தப் புதுமைகள் எல்லாவற்றுக்கும் தலைவராகத் திகழ்ந்தார் லெனின், இவற்றுக்குத் தலைமை வகித்தது கம்யூனிஸ்ட் கட்சி.

கிராமங்களிலும் சிற்றூர்களிலும்

புரட்சிக்குப் பல ஆண்டுகள் முன்பு லெனின் மற்ற தோழர்களுடன் ஜெனீவாவில் வசித்து வந்தபோது, லீதியா அலெக்ஸாந்திரவ்னா ஃபோத்தியெவா என்ற புரட்சிக்கார யுவதி ருஷ்யாவிலிருந்து வந்து சேர்ந்தாள். உடனேயே அவள் லெனினுக்கு உற்சாகத்துடன் துணை செய்யத் தொடங்கி விட்டாள். தன் நேரம் முழுவதையும் உளம் அனைத்தையும் புரட்சி வேலையிலேயே ஈடுபடுத்தி

ளுள் அவள். புரட்சிச் செயல்தவிர அவள் உளமார்ந்த ஈடுபாடு கொண்டிருந்த இன்னொரு விஷயம் இசை. அவள் இசை நிபுணி. சில நாட்களில் ஒழிந்த மாலை நேரத்தில் போல்ஷிவிக்குகள் லெப்பிஷீன்ஸ்கீ தம்பதியரின் உணவு விடுதியில் குழுமுவார்கள். அது ஒரு வகையில் அவர்களுடைய பொழுதுபோக்குக் கழகமாக விளங்கியது. லீதியா அலெக்ஸாந்திரவ்னா பியானோ வாசிப்பாள். லெனின் இருந்தால் அவள் ஜெர்மானிய இசை மேதை பீட்ஹோவனின் ஒரு கிருதியை இசைப்பாள். இந்தக் கிருதி லெனினுக்கு மிகவும் பிடித்தது.

புரட்சிக்குப் பின்பு லீதியா அலெக்ஸாந்திரவ்னா மக்கள் கமிஸாரவைச் செயலாளராகப் பொறுப்பு ஏற்றார். வேலையே அவர் வாழ்க்கையாகிவிட்டது. மக்கள் கமிஸாரவையின் அருகில் இருக்கும் நோக்கத்துடன் அவர் கிரெம்ளினிலேயே வசித்தார். லெனினுடைய அன்றாட அலுவல்கள் என்னென்ன, வேலைக்காக அவருக்கு என்னென்ன தேவை என்பவற்றை எல்லாம் லீதியா அலெக்ஸாந்திரவ்னா அறிவார்.

மக்கள் கமிஸாரவைத் தலைவரைக் கண்டு பேச ஆட்கள் வந்த வண்ணமாய் இருந்தார்கள்.

''விளாதீமிர் இல்யீச், தொலை தூரக் கிராமத்திலிருந்து பிரதிநிதிகள் வந்திருக்கிறார்கள்'' என்று ஒரு நாள் லீதியா அலெக்ஸாந்திரவ்னா சொன்னார்.

''கூப்பிடுங்கள், கூப்பிடுங்கள்!'' என்று பதில் அளித்தார் லெனின்.

தாடிகள் அடர்ந்த கிராமவாசிகள் பச்சைத் துணி விரித்த நீண்ட மேஜையின் அருகே உட்கார்ந்தார்கள். வெயிலிலும் காற்றிலும் அடிபட்டு அனேகமாகக் கறுத்திருந்தார்கள் அவர்கள். தொடக்கத்தில் அவர்கள் அஞ்சித் தயங்கினர்கள். ஆனால் லெனின் எளிமையாகப் பழகவே குடியானவர்கள் துணிவு அடைந்தார்கள்.

லெனினுடைய எளிமை காரணமாகக் குடியானவர்களின் புத்தி சாதுரியம் திரும்பி வந்துவிட்டது போல் இருந்தது. லெனினுக்கு வேண்டியிருந்ததும் அதுதான். ஒவ்வொருவரும் தம் கருத்தை உள்ளபடி வெளியிடுவது அவசியம் என லெனின் கருதினர்.

''தோழர் விளாதீமிர் இல்யீச், நீர் எங்களுக்கு மேலே பெரியவர். உமக்கு இருக்கும் ஞானமோ அளவு இல்லாதது'' என்றூர்கள் கிராமத்தினர்.

''அப்படிப் பிரமாத ஞானம் எதுவும் எனக்குக் கிடையாது. நாட்டுப்புறத்தைப் பற்றியோ எனக்கு அறிவு பற்றவே பற்றுது'' என்றூர் லெனின்.

''நாட்டுப்புறத்து நிலவரம் எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி உமக்குச் சொல்லுகிறோம் நாங்கள்.''

''எங்கே, எங்கே, சொல்லுங்கள் கேட்போம்!''

''சோவியத் ஆட்சி நிலப்பிரப்புக்களை நிலத்திலிருந்து ஓட்டிவிட்டதனால் குடியானவர்கள் சமுதாயத்துக்கு அது ரொம்பவும் பிடித்துப் போயிற்று. இது முதல் சேதி'' என்று ஆரம்பித்தான் எல்லாரிலும் முதிய நாட்டுப்புறத்தான். அவனுடைய அடர் தாடி பாதி மார்பை மறைத்துக் கொண்டிருந்தது.

''அப்புறம்? மேலே சொல்லுங்கள்.''

''அப்புறம் குலாக்குகளைப் பற்றிப் பேச வேண்டும். குலாக்குகள் புது வாழ்வை நசுக்கிக் கொன்று விடுவார்கள். முன்னேறவே இடந்தர மாட்டார்கள். ஏழைக் குடியானவர்களையே நம்பும், விளாதீமிர் இல்யீச். குலாக்குகள் சோவியத் ஆட்சியின் நண்பர்கள் அல்ல. குலாக்குகள் எதிரிகள்....''

லெனினுக்கு இந்த விஷயம் தெரியும். ஆனாலும் கேட்டுக் கொண்டிருந்தார். ஏழைக் குடியானவப் பிரதிநிதிகளின் பேச்சைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார். தாம் அறிந்ததைச் சரி பார்த்தார். முடிவுகள் செய்தார். அப்புறம் புதிய அரசாணை, புதிய சோவியத் சட்டம் பிறப்பிக்கப்படும்.

கிராமங்களில் ஏழைக் குடியானவர்கள் கமிட்டிகள் நிறுவும் அரசாணையில் 1918 கோடையில் லெனின் கையெழுத்திட்டார். இந்த அரசாணை இவ்வாறே பிறந்தது. குடியானவர்களின் இந்தக் கமிட்டிகள் குலாக்குகளுக்கு எதிரான போராட்டத்தில் சோவியத் ஆட்சியின் தூண்களாக விளங்கின.

குலாக்குகள் என்பவர்கள் யார்? இப்போது சோவியத் நாட்டில் குலாக்குகள் கிடையாது. பல ஆண்டுகளாகவே குலாக்குகள் இல்லை.

குலாக்குகள் குடியானவர்கள் தாம். ஆனால் வசதி உள்ளவர்கள். அவர்களில் சிலரோ பெரும் பணக்காரர்கள். பழங் காலத்தில் நேர்மையான வழியில் பணம் திரட்டுவது குடியானவர்களுக்கு முடியாதிருந்தது. குலாக்குகள் செல்வம் சேர்த்தது நேர்மை அற்ற வழிகளில், கள்ள வியாபாரத்தின் மூலம். மற்றவர்களுடைய உழைப்பினால் அவர்கள் பணக்காரர் ஆனார்கள். பணம் சேரச் சேர மேற் கொண்டு நிலங்களை வாங்குவார்கள். நாட்டுப்புற ஏழை மக்களைப் பண்ணை ஆட்களாக அமர்த்திக் கொண்டு நிலத்தை உழுது பயிரிடச் செய்வார்கள். ஏழையிடம் வசந்தகாலம் வரை சாப்பிடப் போதுமான தானியம் இருக்காது. ஏழை குலாக்கிடம் அரை மணங்கு தானியம் கடனாகக் கேட்பான். இந்தக் கடனுக்காகக் குலாக்கின் நிலத்தை அவன் உழவேண்டும். கூதிர்காலத்துக்குள் வாங்கிய தானியத்தை அரை மணங்குக்குப் பதில் ஒரு மணங்காகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். வேறு வழி இல்லை. அடிமைப்படுத்தும் இந்த நிபந்தனைகளை ஏழை ஏற்றுக் கொள்வான். பட்டினி கிடப்பான். ஈசாகக் காற்று அடித்தாலும் சாவிப் போலத் தள்ளாடுவான். குலாக்குகளின் கோதுமையும் ரை தானியமும் நிறைந்த களஞ்சியங்கள் கோட்டைகள்போலப் பூட்டிக் கிடக்கும். அகவிலை இன்னும் ஏறும், இன்னும் ஏறும் எதிர்பார்த்துத் தானியத்தைப் பதுக்கி வைத்திருப்பார்கள் குலாக்குகள். லாபம் சம்பாதிப்பதற்காக அண்டை வீட்டுக்காரனின் கழுத்தை அறுப்பதற்குக்கூடக் குலாக் தயங்க மாட்டான்.

நகரங்களிலோ, உணவுப் பஞ்சம் மேலும் மேலும் பயங்கரம் ஆகிக்கொண்டு போயிற்று. பஞ்சத்தைத் தீர்க்கவே வழி இல்லை போலத் தோன்றியது. என்ன செய்வது? தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் குழந்தைகளுக்கும் செஞ்சேனை வீரர்களுக்கும் உணவு அளிப்பது எப்படி? தானியம் சேகரிப்பது எவ்வாறு?

கிராமங்களில் தானியம் இருக்கத்தான் செய்தது. அதை விலைக்குக் கொடுக்கக் குலாக்குகள் விரும்பவில்லை, அவ்வளவுதான். அவர்கள் தானியத்தைத் தரைக்கடியில் புதைத்துப் பதுக்கி வைத்திருந்தார்கள்.

அநியாயம் இது! குலாக்குகளின் தானியக் களஞ்சியங்கள் செம்மச் செம்ம நிறைந்திருக்கையில் நகரங்களில் மக்கள் பட்டினியால் மடியும்படி விடுவது தகாது. குலாக்குகளின் தானியத்தை விளைவித்தவர்கள் பண்ணை உழவர்கள். தானியம் குலாக்குகளுக்கு அல்ல, மக்களுக்கே சொந்தம்.

லெனின் இவ்வாறு தர்க்கித்துத் தொழிலாளர்களை அழைத்தார்.

''தொழிலாளித் தோழர்களே, ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் உணவுப் பொருள் சேகரிப்புப் பட்டாளங்களை நிறுவுங்கள். பல்வேறு கிராமங்களுக்குப் போங்கள். அங்கே ஏழைக் குடியானவர் கமிட்டிகள் இருக்கின்றன. அவை நமக்கு ஆதரவானவை. நடுத்தர விவசாயிகளும் நம் பக்கமே சாய்வார்கள். கிராமங்களில் சோவியத் ஆட்சியை வலுப்படுத்துவது எப்படி என்று நீங்கள் அவர்களுக்குக் கற்றுத் தாருங்கள். குலாக்குகள் பசித்தவர்களிடமிருந்து தானியத்தை எங்கே பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று அவர்கள் உங்களுக்குக் காட்டுவார்கள்'' என்று கூறினார்.

கிராமங்களில் உள்ள அதிகப்படி தானியம் எல்லாம் ஏழைக் குடியானவர் கமிட்டிகளிடமும் தொழிலாளர் பட்டாளங்களிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற அரசாணையை லெனின் தயாரித்தார்.

மக்கள் கமிஸாரவை இந்த அரசாணையை உறுதிப்படுத்தியது. இவ்வாறு புரட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் லெனினும் சோவியத் ஆட்சியும் உடனடியாகச் செயல்பட்டதன் விளைவாகத் தொழிலாளி மக்கள் பட்டினியிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள்.

படையெடுப்பு

வட துருவப் பிரதேசத்தை அடுத்துள்ள பாரென்ட்ஸ் கடலின் கரையில் மூன்று ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது மூர்மன்ஸ்க் நகரம். வட கடல் வழியில் உள்ள இந்தத் துறை முகம் சிறியது ஆனாலும் முக்கியமானது.

1918ம் ஆண்டு வசந்த காலத்தில் ஒரு நாள் அதிகாலையில் கடல்மீது மூடுபனிப் படலங்கள் கவிந் திருந்த சமயத்தில், மூடுபனிக்கு மேல் எழுந்தது போர்க் கப்பலின் கரிய நிழலுருவம். கப்பல் பீரங்கி வாய்கள் கரையை இலக்குப் பார்த்தன. பிரிட்டிஷ் போர்க் கப்பல் மூர்மன்ஸ்க் துறைமுகத்தில் நுழைந்தது.

விரைவில் அவ்வாறே திடீரென்று வந்தது இன்னொன்று. அது பிரெஞ்சுப் போர்க் கப்பல். அதன் பின்னே வந்தது அமெரிக்கப் போர்க் கப்பல்.

சோவியத் கடற்கரையில் இறங்கின வேற்று நாடு களின் துருப்புக்கள்.

அவற்றை அனுப்பியிருந்தன நேச நாடுகள். பிரிட் டன், பிரான்ஸ், அமெரிக்கா, இந்த மூன்று நாடுகளும் யுத் தத்தில் கூட்டு, சேர்ந்திருந்தன, இவையே நேச நாடுகள் என்று அழைக்கப்பட்டன. இது முதலாளிகளின், பூர்ஷ்வா அரசாங்கங்களின் கூட்டு.

நேச நாடுகள் ருஷ்யாவில் சோவியத் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டம் இட்டன. மற்ற நாடுகளின் தொழிலா ளர்களும் ருஷ்யாவின் உதாரணத்தைப் பின்பற்றித் தங் கள் நாடுகளில் புரட்சி செய்துவிடக் கூடாதே என்று நேச நாடுகள் அஞ்சின.

1918ன் பயங்கர வசந்தம்! பயங்கரக் கோடைகாலம்!

கோடைகாலம் உச்சத்தில் இருந்தபோது நேச நாடு களின் கப்பற் படை வெண் கடலில் புகுந்தது.

கடுங்குளிர் நிறைந்த வடக்கு திவினா ஆறு விரை வாகப் பாய்ந்து வெண் கடலில் கலக்கிறது.

ஆற்றின் கழிமுகத்திலிருந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தில், தெப்பங்களும் கப்பல்களும் படகு களும் நெரிந்த பேராற்றின் கரையோரமாக நீண்டு சென் றிருந்தது குறுகலான நகரம். பலகை பாவிய நடை பாதை களும் கப்பல் துறைகளும் மர அறுவைத் தொழிற்சாலை களும் மரக் கிட்டங்கிகளும் அதில் ஏராளமாக இருந்தன. பாசி படர்ந்து எல்லையின்றிப் பரந்த துந்திர வெளி மறு புறமிருந்து நகர்வரை நெருங்கியிருந்தது. இது தான் ருஷ் யாவின் இராணுவ, வர்த்தகத் துறைமுகமான அர்ஹாங் கெல்ஸ்க் நகரம்.

நேச நாடுகள் அர்ஹாங்கெல்ஸ்க் நகரைக் கைப் பற்றிக் கொண்டன. பூர்ஷ்வாக்கள் நேச நாடுகளின் துருப்புக்களை மகிழ்ச்சிக் கொண்டாட்டத்துடன் வரவேற் றார்கள். அவர்களுக்கு இருந்த ஒரேயொரு விருப்பம், சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதே. அர்ஹாங்கெல்ஸ்கில் புரட்சி எதிர்ப்புக் கலகம் மூண் டது. நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் செம்படை வீரர்களும் சோவியத் கடற்படை வீரர்களும் சமமற்ற போரில் உயிர் துறந்தார்கள்.

பதுங்கியிருந்த வர்த்தகர்களும் பூர்ஷ்வாக்களும் புத்துயிர் பெற்று எழுந்தார்கள். ஜாரின் இராணுவ அதிகாரிகள் மறுபடியும் தங்கப் பதவிச் சின்னங்களைக் கோட்டுக்களில் பொருத்திக் கொண்டார்கள். கண்டா மணிகள் ஒலித்தன. சர்ச்சுகளில் பாதிரிகள் தூபங் காட்டிப் பிரார்த்தனைகள் செய்தார்கள்.

புரட்சி எதிர்ப்பாளர்கள் வடக்கே தாக்குதல் தொடங்கினர்கள்.

ருஷ்யத் தூரக் கிழக்கிலும் சைபீரியாவிலும் உரால் பிரதேசத்திலும் புரட்சி எதிர்ப்பாளர்கள் ரண தாண்ட வம் புரிந்தார்கள். வோல்காப் பிரதேசத்தை அவர்கள் நெருங்கினர்கள். பகைக் கப்பல்கள் விளாதிவஸ்தோக் துறைமுகத்தில் துருப்புக்களை இறக்கின.

சைபீரியக் கிராமங்களில் குலாக்குகள் கலகம் செய் தார்கள். ஏழைக் குடியானவர் கமிட்டிகளை அவர்கள் கலைத் தார்கள். கம்யூனிஸ்டுகளை இரக்கமின்றிக் கொலை செய் தார்கள்.

தோன், குபான் ஆறுகளின் பிரதேச நகரங்களிலும் சிற்றூர்களிலும் இரத்த வெள்ளம் பெருகிற்று. புரட்சி எதிர்ப்பு வெண்படை ஜெனரல்கள் இவ்விரு பிரதேசங் களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். உக்ரேனில் ஜெர் மானியர் ஆட்சி நடத்தினர்கள்.

பகைவர்களின் இரும்பு வளையம் சோவியத் ருஷ் யாவை மேலும் மேலும் இறுக்கமாக நெருக்கியது.

அதிகாலை. சூரியன் இன்னும் உதிக்கவில்லை. புலர் போதின் பொன் ஒளிர்வு தான் லேசாகத் தென்படத் தொடங்கியிருந்தது.

லெனின் கிரெம்ளினில் இருந்த தமது இருப்பிடத்திலிருந்து வெளியே வந்தார். இருப்பிடத்திற்கும் மக்கள் கமிஸாரவைத் தலைவரின் அலுவலகத்துக்கும் இடையே சில தாவடி தூரமே இருந்தது. ஸ்மோல்னீயில் இருந்ததைவிடக் கிட்டம்.

நடை வழியின் கோடியில், அலுவலறை வாயிலில் நின்றான் பாராக்காரன்.

''வணக்கம்!'' என்று முகமன் கூறினார் லெனின்.

இது விதி முறைகளுக்குப் பொருந்தியதோ இல்லையோ, ஆனால் லெனின் பாராக்காரர்களுக்கு எப்போதுமே முகமன் கூறுவது வழக்கம். பாராக்காரன் லெனினைக் கண்டதும் நேராக நிமிர்ந்து நின்று, ''எப்போதுதான் இவர் உறங்குகிறார்?'' என்று வியப்புடன் எண்ணமிட்டான்.

சற்று நேரத்துக்கு முன்புதான், அனேகமாக விடியும் தறுவாயில் லெனின் அலுவல் அறையிலிருந்து இருப்பிடம் போனார். இன்னும் சூரியன்கூட எழவில்லை, அதற்குள் அவர் மறுபடி வேலைக்கு வந்துவிட்டாரே!

அலுவல் அறையில் இரண்டு ஜன்னல்களுக்கு நடுவே சுவற்றில் மாட்டப்பட்டிருந்தது ருஷ்யாவின் பெரிய வரைபடம். லெனின் கைகளே முதுகுப் புறம் வைத்தவாறு வரைபடத்தின் அருகில் வெகு நேரம் நின்று போர்முனையைக் காட்டும் கோட்டை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது சண்டைகள் நடந்து கொண்டிருந்த எல்லா நகரங்களையும் இடங்களையும் அவர் அறிந்திருந்தார். கமாண்டர்களையும் கமிஸார்களையும் அவருக்குத் தெரியும். ஒவ்வொருவரது சுபாவத்தையும் தோர்ச்சியையும் திறமையையும் தெரிந்து கொள்ள முயன்றார் அவர்.

சோவியத் நாட்டுக்குள் பகைவர்கள் புகுந்ததும் திறமைமிக்க எத்தனையோ படைத்தலைவர்கள் மக்களிடையே தோன்றினார்கள்.

வஸீலீ இவானவிச் சப்பாயெவ்! மெய்யான மக்கள் வீரர். சப்பாயெவின் வீரத்தையும் போர்ச் சாதுரியத்தையும் பற்றி ஏற்கனவே கதைகள் வழங்கத் தொடங்கியிருந்தன. கிளீம் வரஷீலவின் பெயரும் மக்களிடையே புகழ் பெற்றிருந்தது.

ஃபுரூன்ஸேயையும் பெரு மதிப்புடனும் பெருத்த நம்பிக்கையுடனும் நினைவு கூர்ந்தார் லெனின். 1905ம் ஆண்டு டிசம்பர் மாதம், போல்ஷிவிக் மிஹயீல் வஸீலியெவிச் ஃபுரூன்ஸே மாஸ்கோவில் எழுச்சி நடத்திய பிரேஸ்னியா பகுதித் தொழிலாளர்களின் உதவிக்கு இவானவோ-வஸ்னிஸேன்ஸ்க் தொழிலாளர்களின் படைப்பிரிவுடன் சென்றார். இப்போது மிகக் கடினமான போர்முனையில் சேனைக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்தார் அவர்.

லெனின் போர்முனைகள் அனைத்தையும் மனத்தால் பார்வையிட்டார். வரஷீலவ், புதியோன்னீ, லாஸோ, கத்தோவ்ஸ்கீ, ஷோர்ஸ், துஹச்சேவ்ஸ்கீ, பிஸுஹெர்....

வடக்குப் போர்முனை. தெற்கு. கிழக்கு.

கிழக்கே சைபீரியா, உரால், வோல்கா. கிழக்குப் பகுதி தானியக் களஞ்சியம்.

நேச நாடுகளின் உதவியுடன் வெண்படையினரும் குலாக்குகளும் தானியம் செழித்த கிழக்குப் பிரதேசங்களைக் கைப்பற்றிவிட்டார்கள். தொழிலாளர்-குடியானவர் அரசைப் பட்டினியால் கொன்றுவிடுவதற்கு முயன்றன நேச நாடுகள்.

''செஞ்சேனையின் பிரதானத் தாக்குதல் கிழக்குப் போர்முனையிலேயே நடக்க வேண்டும். வோல்காப் பிரதேசத்திலும் சைபீரியாவிலுமிருந்து வெண்படையினரை விரட்டி விட்டு, குலாக்குகளின் கொட்டத்தை ஒடுக்க வேண்டும்'' என்று எண்ணமிட்டார் லெனின்.

லெனின் மேஜை அருகே உட்கார்ந்து போர்முனைகளிலிருந்து தலைக்கு நாள் வந்த தகவல் அறிக்கைகளை மறுபடி கவனமாகப் படித்தார். முந்திய நாள் த்ஸைர்ஸீன்ஸ்கீ, ஸ்வெர்திலோவ், சிச்சேரின் ஆகியோருடனும் மற்ற தோழர்களுடனும் அவர் போர்முனைகளின் நிலைமைபற்றி இரவு வெகு நேரம் வரை ஆலோசனை நடத்தினர். முடிவுகள் ஏற்கப்பட்டன. இப்போது படைத் தலைவர்களுக்குப் பதில்கள் எழுத வேண்டும், போர்முனைகளுக்கு உத்தரவுகளும் ஆணைகளும் அனுப்ப வேண்டும். லெனின் வேலையில் மூழ்ந்தார். காலைப் பொன்னொளி வானில் சுடர்ந்து பரவியது. கோடைகாலக் கதிரவன் வீட்டு முகடுகளின் பின்னிருந்து எழுந்தான். லீதியா அலெக்ஸாந்திரவ்ன ஃபோத்

தியெவா கதவைத் தட்டி, ஆட்கள் லெனினைப் பார்க்க வந்திருப்பதாக அறிவித்தார். விளாதீமிர் இல்யீச் கடிகாரத்தைப் பார்த்தார். காண விரும்பியவர்கள் சரியாகக் குறித்த நேரத்தில் வந்திருந்தார்கள்.

''இராணுவத்தினர் என்பது இதிலிருந்தே தெரிகிறது'' என்று நினைத்துக் கொண்டார் லெனின்.

காகிதங்களையும் கடிதங்களையும் அடுக்கில் வைத்தார். ஃபோத்தியெவாவிடம் கொடுத்தார்.

''தயை செய்து உடனே அனுப்புங்கள்!''

பின்பு முகத்தைத் தடவிக் கொண்டார்—கலவரத்தையும் சுருக்கங்களையும் முகத்திலிருந்து போக்கிக் கொள்பவர் போல. தாம் கலவரமும் கவலையும் கொண்டிருப்பது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக.

இராணுவத்தினர் அறைக்குள் வந்தார்கள். லெனினுக்கு நன்றாய்த் தெரிந்த செம்படைக் கமாண்டர்கள் இவர்கள். அவர்களில் ஒருவர் முன்பு ஜாரின் சேனையில் ஜெனரலாக இருந்தவர்.

''நல்லது, நமது தாக்குத் திட்டத்தை விவரியுங்கள்'' என்று அவரிடம் சொன்னார் லெனின்.

ஜாரின் ஜெனரலிடம் லெனின் ஆலோசனை கேட்டது விந்தையான சேதி அல்லவா?''செஞ்சேனையில் பணியாற்றுவது கௌரவம். இந்தக் கௌரவம் ஏழைக் குடியானவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எல்லா உழைப்பாளிகளுக்கும் அவர்களுடைய புதல்வர்களுக்கும் வழங்கப்படுகிறது. குலாக்குகள், பிரபு வம்சத்தினரின் புதல்வர்களைச் செஞ்சேனையில் சேர அனுமதிக்கக் கூடாது. செஞ்சேனையில் கமாண்டர்களாகக் கம்யூனிஸ்டுகளே அனுப்பப்பட வேண்டும்.''—இவ்வாறு பொருள்படும் அரசாணையில் லெனின் கையெழுத்து இட்டிருந்தாரே.

இப்போது என்னடா என்றால் ஜாரின் ஜெனரல் லெனினுடைய அலுவல் அறையில்! இது நடக்கக் கூடியதா னா? விஷயம் என்ன என்றால், இந்த ஜெனரல் லெனினுடைய குறிக்கோளில் நம்பிக்கை வைத்திருந்தார். போர்க்கலையை அறிந்தவர்களும் நேர்மையாளர்களுமான இராணுவ நிபுணர்களைச் செஞ்சேனைக்கு உதவுவாறு லெனின் அழைத்திருந்தார்.

நீண்ட சுட்டுக்கோலால் வரைபடத்தில் குறித்துக் காட்டியவாறு லெனினுக்குத் தாக்குதல் திட்டத்தை விளக்கினர் ஜெனரல்.

''ஆம், ஆம்'' என்று இசைவு தெரிவித்தார் லெனின்.

தலைக்கு நாளும் அதற்கு முந்திய நாளும், தனியாகவும் தோழர்களுடனும், இன்று அதிகாலையிலும் சிந்தனை செய்து லெனின் இதே திட்டத்தை வகுத்திருந்தார். தாம் எண்ணியது சரிதானா என்று இப்போது பார்த்தார், அவ்வளவு தான்.

''நடவடிக்கை அருமையாக வாய்க்க வேண்டும்'' என்று சுட்டுக்கோலை வைத்துவிட்டுத் திருப்தியுடன் கூறி முடித்தார் ஜெனரல்.

''அருமையானதா இல்லையா என்பது முக்கியம் அல்ல. வெற்றி பெறுவதே முக்கியம்! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், தோழர்களே?'' என்று செஞ்சேனைக் கமாண்டர்களிடம் கேட்டார் லெனின்.

திட்டத்தின் விவரங்களை அவர்கள் நீண்ட நேரம் கவனமாகப் பரிசிலித்தார்கள். முடிவு எல்லோருக்கும் ஏற்பு உடையதாக, உறுதியாக இருந்தது.

''நிலைமை சங்கடமானது. ஆனாலும் செஞ்சேனை வெற்றி பெற்றே தீரும்'' என்றார் லெனின்.

கயமை நிறைந்த மூன்று குண்டுகள்

லெனின், நதேழ்தா கன்ஸ்தன்தினவ்னா, மரீயா இல்யீனிச்ன மூவரும் சமையல் அறையில் காலைச் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தார்கள். கிரெம்ளினில் அவர்களுடைய சிறு இருப்பிடத்தில் சாப்பாட்டு அறையும் இருந்தது. ஆனால் யாரேனும் தேநீர் பருகவும் காரியங்களைப் பற்றி உரையாடவும் வந்தபோதுதான் அவர்கள் அங்கே குழுமுவது வழக்கம். வெளியார் எவரும் இல்லாதபோது சமையல் அறையிலேயே சிற்றுண்டியை முடித்துக் கொண்டு விடுவார்கள்.

அன்று வெள்ளிக் கிழமை. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும் மக்கள்

கமிஸார்களும் தொழிலாளர்களின் கூட்டங்களில் பேச வேண்டும் என்று மாஸ்கோவில் வழக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. மாஸ்கோ கமிட்டி லெனினுக்கு முன்னதாகவே சீட்டு அனுப்பியிருந்தது.

திடீரெனப் பெத்ரோகிராதிலிருந்து தந்தி. மக்கள் கமிஸாரகத்தின் நடையில் அரசாங்கத் தந்தி நிலையம் இரவும் பகலும் இடைவிடாது வேலை செய்தது. எனவே லெனினுக்கு அந்தக் கணமே தந்தி கிடைத்துவிட்டது.

புரட்சி விரோதிகளை எதிர்த்துப் போராடுவதற்கான பெத்ரோகிராத் அசாதாரணக் கமிஷனின் தலைவர், தோழர் உரீத்ஸ்கீ கொல்லப்பட்டார் என்று தந்தி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் மாஸ்கோ கமிட்டியிலிருந்து டெலிபோன் வந்தது.

''தோழர் லெனின், நீங்கள் இன்று கூட்டத்தில் பேச வேண்டாம் என்பது மாஸ்கோ கமிட்டியின் யோசனை. அபாயம்! புரட்சி விரோதிகளின் துடுக்கு அதிகமாகிவிட்டது.''

''நன்றாய்த்தான் இருக்கிறது உங்கள் யோசனை. ஓநாய்க்குப் பயந்தால் காட்டுக்கே போகக் கூடாது'' என்று பதில் சொல்லிவிட்டுத் தம் அலுவல் அறைக்கு விரைந்தார் லெனின்.

உரீத்ஸ்கீ கொல்லப்பட்டுவிட்டார். இன்னொரு பிரபல போல்ஷிவிக் வலதார்ஸ்கீ முன்பே கொல்லப்பட்டுவிட்டார். மத்தியக் கமிட்டி, அரசாங்கம் இரண்டின் உறுப்பினர்களையும் ஒழித்துக்கட்ட முயன்று கொண்டிருந்தார்கள் புரட்சியின் பகைவர்கள்.

ஆனாலும் லெனினால் தொழிலாளர்கள் கூட்டத்துக்குப் போகாமல் இருக்க முடியுமா? தொழிலாளர்கள் காத்துக் கொண்டிருப்பார்களே!

கார் வந்தது. டிரைவர் ஸ்தெபான் காலிமீரவிச் கில் தான் லெனினுடைய காரை எப்போதும் ஓட்டிப் போவார். இன்றும் அவரே ஓட்டிச் சென்றார். இன்று லெனின் இரண்டு வெவ்வேறு வட்டாரங்களில் பேசுவதாக இருந்தது. பின்பு மாலையில் மக்கள் கமிஸாரவைக் கூட்டம்.

''தொழிலாளர்கள் கூட்டத்தில் பேசிய பிறகு மக்கள் கமிஸாரவைக் கூட்டத்துப் போக நேரம் இருக்கும்'' என்றார் லெனின்.

கில் வெறுமே தலை ஆட்டினார்:

''உங்களுக்கு இவ்வளவு தென்பு எங்கிருந்துதான் கிடைக்கிறதோ?''

ஸெர்ப்புஹவ்ஸ்காயா வீதியில் இருந்த தொழிற் சாலைக்குக் காரை ஓட்டினார் கில். இந்தத் தொழிற்சாலை முன்பு மிஹெல்ஸோன் என்பவனுக்குச் சொந்தமாய் இருந்தது. லெனின் முன்பும் இங்கே வந்திருந்தார்.

சமீபத்தில் கட்டப்பட்ட பெரிய மரக் கட்டிடத்தில் இருந்த எறிகுண்டுத் தொழிற்கூடத்தில் குழுமியிருந்தார் கள் தொழிலாளர்கள். சிலர் உட்கார்ந்திருந்தார்கள், சிலர் இயந்திரங்களின் பக்கத்திலும் நடை வழிகளிலும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களில் ஆழ்ந்த தோற்றம் தென்பட்டது. கண்களிலும் ஆழ்ந்த கவனம் காணப்பட்டது.

லெனின் உள்நாட்டுப் போர் பற்றிப் பேசினார். வெண்படைக் கும்பல்களுடன் நடக்கும் போராட்டத்தை விவரித்தார்.

இந்தத் தொழிற்கூடத்தில் வெண்படையினருக்கு எதிராக எறி குண்டுகள் தயாரிக்கப்பட்டன. தேவை ஏற் பட்டால் இங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் போர் முனைக்கும் உவப்புடன் செல்வார்கள்:

தொழிலாளர்கள் தங்கள் தொழிற்சாலைகளை, தங் கள் அதிகாரத்தை பூர்ஷ்வாக்களுக்கு ஒருகாலும் விட்டுக் கொடுக்கவே மாட்டார்கள் என்பதை லெனின் கண்டார்.

இங்கிருந்துதான் எங்களுக்குத் தென்பு கிடைக்கிறது, தோழர் கில். தொழிலாளி வர்க்கம் மின்கலத்தில் மின் சாரம் ஏற்றுவது போல ஆற்றலை ஏற்றுகிறது.

கூட்டம் முடிந்தது. தொழிலாளர்கள் சூழத் தொழிற் கூடத்திலிருந்து வெளியே வந்தார் லெனின். கில் நொடி யில் காரை முடுக்கி, உடனே செலுத்த வாக்காகக் கியர் போட்டார். டிரைவர் கில் முன்னெச்சரிக்கை உள்ளவர். கூட்டமோ ஒரேயடியாக நெரிகிறது. நேரமோ அமை தியற்றது. உரீத்ஸ்கி கொல்லப்பட்டதை கில் அறிந்திருந் தார். லெனின் சட்டுப் புட்டென்று காரில் ஏறி உட்கார்ந்

தால் தேவலையே.... லெனினையோ, ஆட்கள் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். நாலா பக்கங்களிலுமிருந்து கேள்விகள் மழையாய்ப் பொழிந்தன. லெனின் இளமை உற்சாகம் ததும்பத் தொழிலாளர்களிடம் பேசிச் கொண்டே இருந்தார். திடீரென்று குபீர் நெருப்பு, வெடியோசை. என்ன இது? துப்பாக்கி வெடியா? லெனின் உடனே புரிந்து கொள்ளவில்லை. இடது கையில் எதுவோ மோதியது. அவர் தள்ளாடினார். இன்னொரு வெடி. சுரீரென்ற வலி கழுத்தைத் துளைத்தது. லெனின் விலாப்புறம் சாய்ந்தார். மூன்றாவது குண்டு மேல்கோட்டின் ஊடாக முதுகில் பாய்ந்தது.

லெனின் விழுந்துவிட்டார்.

''லெனினைக் கொன்றுவிட்டார்கள்!'' என்று ஏக்கத்துடன் கத்தினார்கள் கூட்டத்தினர்.

ஒட்டிச் சும்பிய முகமும் கெட்ட பார்வையும் கொண்ட ஒரு மாது நிவால்வரைத் தரையில் எறிந்துவிட்டு முகப்பு வெளியிலிருந்து ஓட்டம் எடுத்தாள். அந்தப் புரட்சி எதிர்ப்புக் கொலைகாரியைப் பிடிக்க ஓடினார்கள் ஆட்கள்.

''விளாதீமிர் இல்யீச்! தோழர் லெனின்!'' என்று விளித்தார் கில்.

''வீட்டுக்கு'' என்று வெளிறிய உதடுகளை அசைத்து முணுமுணுத்தார் லெனின்.

தொழிலாளர்கள் அவரைத் தூக்கிக் காரில் அமர்த்தினார்கள். கூட்டத்தில் கல்லறையில் போல நிசப்தம் குடி கொண்டது. லெனின் திணறித் திணறி மூச்சுவிட்டது எல்லோருக்கும் கேட்டதுபோல் இருந்தது.

கில் காரை முழு வேகத்துடன் கிரெம்ளினுக்குச் செலுத்தினார்.

''விளாதீமிர் இல்யீச், நாங்கள் உங்களைத் தூக்கிப் போகிறோம்'' என்று இருப்பிடம் வந்ததும் சொன்னார் கில்.

லெனின் இதை விரும்பவில்லை. கொடுமையாக வலி எடுத்தது. சட்டை இரத்தத்தில் நனைந்துவிட்டது. ஆயினும் அவர் கூட வந்தவர்களை ஆதரவாகப் பற்றிக் கொண்டு தாமே நடந்தார். மிக மிக மெதுவாக. ஒன்றும் பேசாமல். மூன்றாவது மாடிக்கு. எவ்வளவு நீண்ட, கடினமான மாடிப்படி வரிசை! செங்குத்தான படிகள்....

லெனினின் சகோதரி மரீயா அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தார்.

''விளாதீமிர்! விளாதீமிர்!''

''லேசாகக் காயம் பட்டுவிட்டது.... சரியாகிவிடும். பதைக்காதே, மரீயா. நதேழ்தாவைக் கலவரப்படுத்தி விடாதே'' என்று சிரமத்துடன் சொன்னார் லெனின்.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா வீட்டில் இல்லை. வேலைக்குப் போயிருந்தார்.

இந்நேரத்தில் மக்கள் கமிஸாரவையில் எல்லோரும் கூடினார்கள். லெனின் ஒன்பது மணிக்குக் கூட்டம் நடக்கும் என்று அறிவித்திருந்தாரே. அவர் நேரத் திட்பம் வேண்டும் என்று வற்புறுத்துவது எல்லோருக்கும் தெரியும். இன்று முதல் தடவையாக, ஒரே தடவை மட்டும், லெனின் நேரம் தாழ்த்துவிட்டார்....

கட்டம் போட்ட சால்வை விரித்த கட்டிலுக்கு லெனின் பதபாகமாக நடத்திச் செல்லப்பட்டார். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா இந்த சால்வையைக் கண்போல் பேணி வந்தார்.... லெனினைத் தோழர்கள் படுக்க வைத்தார்கள். அவர் வலுவிழந்தார். முகம் மஞ்சள் பாரித்தது.

வீட்டுக் கதவுகள் விரியத் திறந்திருந்தன. கலக்கமும் திகிலும் கொண்டவர்களாய் வந்து நெரிந்தார்கள் தோழர்கள். ''லெனின் படுகாயம் அடைந்துவிட்டாரோ? அபாயம் நிரம்பவோ?''

அவர் படுகாயம் அடைந்திருந்தார். நிலைமை மிக அபாயமானது....

நிமிடங்கள் கழிப்பூட்டும்படி மெல்ல நகர்ந்தன. சற்று நேரத்தில் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா வேலையிலிருந்து திரும்பி வந்தார். கதவுகள் ஏன் திறந்து கிடக்கின்றன? வீட்டில் இத்தனை பெயர் எதற்காக நிறைந்திருக்கிறார்கள்?

யாரோ அவருடைய தோளை மெல்ல வருடினார்கள். அவர் புரிந்து கொண்டார்.

''உயிரோடு இருக்கிறாரா?'' என்று சுருக்கமாகக் கேட்டார்.

லெனினின் அறையிலிருந்து முனகல் சப்தம் வந்தது. நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா உடலை நிமிர்த்து, கண்ணீரைத்

துடைத்துப் போக்கிக்கொண்டு லெனினது அறைக்குள் போனார். லெனின் அவரைப் பார்த்து, சிரமத்துடன் புன்னகை செய்தார்.

''ஒன்றுமில்லை, நதேழ்தா, புரட்சிக்காரனுக்கு இது எப்போதும் நேரக் கூடியதுதான். அற்பக் காயம். குணம் அடைந்துவிடுவேன்....''

இவ்வாறு சொல்லிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார். அவருடைய நாடி தளர்ந்துபோயிற்று. அவரது நிலைமை வர வர மோசமாயிற்று.

லெனின் இறந்துபோவாரா என்ன?

கடினமான அந்த ஆண்டுகளில்

மக்கள் கமிஸாரக நடையில் தந்தி இயந்திரங்கள் ''கட்டுக்-கட கட்டுக்-கட்டு'' என்று இடைவிடாமல் ஒலித்த வண்ணமாய் இருந்தன. அனுப்பு-ஏற்பு, அனுப்பு-ஏற்பு.... இராணுவ மேல்கோட்டு அணிந்த ஒரு தந்திக் குமாஸ்தா இயந்திரத்தில் நீண்டு வந்த காகித நாடாவைக் கிழித்து எடுத்தான். படித்தான். அவசர அவசரமாகக் குறியீடுகளை நடப்பு மொழியில் பெயர்த்து எழுதினான். ஓட்டமாக நடையின் மறு கோடிக்கு, லெனினின் இருப்பிடத்துக்கு விரைந்தான்.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா கதவைத் திறந்தார்.

''சட்டென்று லெனினிடம் கொண்டு கொடுங்கள்'' என்றார் அவர்.

தந்திக் குமாஸ்தா கிளர்ச்சி பொங்க லெனினின் சிறு அறைக்குள் புகுந்தான்.

கட்டம் போட்ட சால்வை போர்த்த குறுகிய கட்டில் அங்கே இருந்தது. அதன் பக்கத்தில் ஜன்னல் அருகே இருந்தது எழுது மேஜை. லெனின் அதன் பக்கத்தில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். அவருடைய இடது கை ஏந்து கட்டில் தொங்கியது. அவர் இளைத்து வாடி இருந்தார். மற்றப்படி முன்போலவே காணப்பட்டார். அதே கூரிய பார்வை, அதே துடியான அங்க அசைவுகள்.

செஞ்சேனை வீரர்கள் தந்தி அடித்திருந்தார்கள்.

''அன்பார்ந்த விளாதீமிர் இல்யீச்! உங்கள் சொந்த நகரம் ஸிம்பீர்ஸ்க் கைப்பற்றப்பட்டது உங்களுடைய ஒரு காயத்துக்குப் பதில். மறு காயத்துக்குப் பதிலாக ஸமாராவை மீட்டோம்!''

''சபாஷ்!'' என்று பாராட்டினார் லெனின். ''நன்றி, மிகவும் நன்றி!'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினர். தந்தியை மறுபடி உரக்கப் படித்தார்: ''' உங்களுடைய சொந்த நகரம் கைப்பற்றப்பட்டது....' நம்மவர்கள் ஸிம்பீர்ஸ்க் நகரைப் பிடித்துவிட்டார்கள். கேட்டீரா, தந்தி அலுவலரே? அருமையான வெற்றி, கேட்டாயா நதேழ்தா?''

லெனின் அப்போதே பதில் தந்தி எழுதினார். செஞ்சேனை வீரர்களை வெற்றிக்காக வாழ்த்தினர், அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். ஸிம்பீர்ஸ்க் கைப்பற்றப்பட்டது தமது காயத்துக்கு மிகவும் பயன்தரும் மருந்துக் கட்டு என்று எழுதினர்.

''இந்தச் செய்தியைக் காட்டிலும் சிறந்த மருந்து எனக்கு எதுவும் இல்லை! இனி மளமளவென்று குணம் அடைந்துவிடுவேன்.''

மெய்யாகவே லெனினது உடல்நிலை சீர்பட்டுவிட்டது என்ற மருத்துவ அறிக்கை சில நாட்களுக்குள் பிராவ்தா பத்திரிகையில் வெளியாயிற்று.

மருத்துவர்கள் லெனினை வேலைக்குத் திரும்ப அனுமதித்துவிட்டார்கள்.

இடர்கள் நிறைந்த, கடினமான காலம் தொடங்கியது. செஞ்சேனையின் எதிர்ப்பைச் சமாளிப்பது விளையாட்டு அல்ல என்று நேச நாடுகள் புரிந்து கொண்டன. எனவே அவை இன்னும் அதிகப் படைகளை சோவியத் ருஷ்யாவுக்கு அனுப்பின. சோவியத் நாட்டில் வலியப் புகுந்தன பதினைந்து நாடுகளின் படைகள். தேசம் முற்றுகைக்கு உள்ளான கோட்டை ஆகிவிட்டது.

''முற்றுகைக்கு உள்ளான கோட்டையில் வாழ்க்கை இராணுவ முறையில் நடக்க வேண்டும்'' என்றார் லெனின்.

சர்வஜன உழைப்புக் கடப்பாடு செயல்படுத்தப்பட வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார். ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் வயல்களிலும் இருப்புப் பாதைகளிலும் எல்லா சோவியத்

மக்களும் வேலை செய்ய வேண்டும் என்பது இந்த யோசனை. செஞ்சேனைக்கு உதவுங்கள், சோவியத் மக்களே!

செஞ்சேனைக்கு ஆயுதங்கள் வேண்டும். தொழிலாளித் தோழர்களே, ஆயுதங்கள் உற்பத்தி செய்யுங்கள். இன்னும் நிறைய உற்பத்தி செய்யுங்கள்!

செஞ்சேனைக்குக் காலணிகளும் உடைகளும் வேண்டும். தொழிலாளித் தோழர்களே, இன்னும் நிறைய ஜோடுகளும் சட்டைகளும் மேல்கோட்டுக்களும் தையுங்கள்.

தொழிற்சாலைகளால் தேவைக்குப் போதும்படி உடைகள் தைத்துக்கொடுக்க முடியவில்லை. ஜோடுகள் தைப்பதற்குத் தோல் போதவில்லை. சட்டைகள், கோட்டுக்களுக்குப் போதிய அளவு துணி இல்லை. என்ன செய்வது? மக்களுக்கும் செஞ்சேனைக்கும் போதிய உடைகள் எப்படித் தயாரிப்பது?

மக்களிடமிருந்து கம்பளி உடைகள் திரட்டப்படும் என்று அரசாங்கமும் கட்சியும் அறிவித்தன. ஜனங்கள் தங்களிடம் இருந்த பலவகைக் கம்பளி உடைகளையும் சால்வைகளையும் காலுறைகளையும் உடை திரட்டு நிலையங்களில் கொண்டுபோய்க் கொடுத்தார்கள்.

பூர்ஷ்வாக்களோ, தங்கள் உடைமைகளை வழங்க விரும்பவில்லை.

''பணக்காரர்களிடம் அதிகப்படியாக இருக்கும் கம்பளி உடைகளைப் பறித்துக் கொள்ளவேண்டும். ஆளுக்கு ஒரு மேல்கோட்டு அவர்களுக்குப் போதும். உழைப்பாளிகள் கடைசித் துணிவரை தாராளமாக வழங்குகிறார்கள். பணக்காரர்களும் தங்களிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளட்டும்'' என்று த்ஸெர்ழீன்ஸ்கீயிடம் கூறினார் லெனின்.

த்ஸெர்ழீன்ஸ்கீ புரட்சி விரோதிகளை எதிர்த்துப் போராடுவதற்கான அகில ருஷ்ய அசாதாரணக் கமிஷனின் தலைவராக இருந்தார். அவர் கமிஷன் ஊழியர்களைப் பணக்காரர்கள் வீடுகளுக்கு அனுப்பினர். ஊழியர்கள் உடைகளையும் காலணிகளையும் சேகரித்தார்கள். பின்பு அவை இல்லாத ஏழைகளுக்கு உத்தரவுப்படி இலவசமாக அவற்றைப் பகிர்ந்த அளித்தார்கள். போர்முனைகளுக்கும் செம்படை வீரர்களுக்காக அனுப்பி வைத்தார்கள்.

எல்லாவற்றிலும் கொடிய விபத்தாக விளங்கியது பஞ்சம். வெகு காலமாகவே நகரங்களில் உணவுப் பொருள்கள் ரேஷன் சீட்டுக்களின்படியே வினியோகிக்கப்பட்டு வந்தன. அரை வயிற்றுக்குக் காணும்படி, கொஞ்சமாக.

சோவியத் அரசாங்கம் மிகக் கண்டிப்பான புதிய சட்டம் பிறப்பித்தது. உபரி வசூலிப்புச் சட்டம் என அது அழைக்கப் பட்டது. இதன்படி, குடியானவர்கள் தங்கள் சொந்தத் தேவைகளுக்கு மேல் உபரியாக உள்ள தானியத்தையும் உணவுப் பண்டங்களையும் அரசாங்கத்துக்குக் கொடுத்துவிட வேண்டும். மாவு, குறுநொய், இறைச்சி, வெண்ணெய், உருளைக்கிழங்கு, எல்லாவற்றையும் குடியானவர்கள் கொடுத்தார்கள்—செஞ்சேனைக்காக, தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்குமாக. குடியானவர்களுக்குக் கஷ்டந்தான், ஆனால் வேறு வழி இல்லை.

சோவியத் நாட்டில் உபரி வசூலிப்பும் சர்வஜன உழைப்புக் கடப்பாடும் நிலவின. மக்கள் அனைவரும் போர் முனைக்காக உழைத்தார்கள். உணவுப் பண்டங்களும் உடைகளும் மிகக் குறைவாய் இருந்தபடியால் ரேஷன் சீட்டுக்களின்படி உணவுப் பண்டங்களும் உத்தரவுச் சீட்டுப்படி உடைகளும் வினியோகிக்கப்பட்டன. அரைச் சீரழிவு நிலையிலிருந்த போக்குவரத்துச் சாதனங்கள் நாட்டின் தற்காப்புக்காக ஆயுதங்களையும் துருப்புக்களையும் ஏற்றிச் செல்வதில் ஈடுபட்டிருந்தன. அனுமதிச் சீட்டு இருந்தால் தான் ரயிலில் பயணம் செய்ய முடியும். இந்த அமைப்பைப் போர்க்காலக் கம்யூனிஸம் என்று அழைத்தார் லெனின். கடினமான ஆண்டுகள்!

நல்ல வேளை, அந்தக் கடினமான ஆண்டுகளில் லெனின் சோவியத் ருஷ்யாவின் தலைவராக இருந்தார்.

ஸக்கோல்னிக்கியில் நிகழ்ந்தது

குண்டடி பட்ட பின்பு லெனின் சில நாட்கள் சாவுக்கு மிக அருகில் இருந்தார். அந்தச் சமயத்தில் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா தமது அச்சத்தையும் துயரத்தையும் வெளிக்காட்டாமல் நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு

வீய வந்தார். அவருடைய நெஞ்சுறுதி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

லெனினுக்கு உடம்பு தேறியதுமோ அவர் நோயாய்ப் படுத்துவிட்டார். கடுமையான நோய். தூய காற்றுதான் உதவமுடியும் என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள்:

கடினமான அந்தக் காலத்தில் உடல்நல விடுதிகள் கிடையா. பலவீனமான குழந்தைகளுக்காக மாஸ்கோ நகர்ப் புறத்தில் ஸக்கோல்னிக்கீ வட்டாரத்தில் சோலீப் பள்ளி திறக்கப்பட்டிருந்தது. பள்ளிக்கூடம் பூங்காவின் நடுவே இருந்தது. சுற்றிலும் தூய காற்று சமுத்திரமாய் அலை மோதியது.

அங்கே சிறிது காலம் தங்கியிருக்கும்படி நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவிடம் எல்லோரும் சொல்லவே, அவர் இணங்கினர்.

லெனினுக்கு வேலை தலைக்குமேல் நெரிந்தது. அரசாங்க அலுவல்களை முடிப்பதில் நாள்தோறும் இரவு வெகு நேரம் வரை அவர் ஆழ்ந்திருந்தார். அரசில் எல்லாமே புதிதாக அமைக்கப்பட்டன. லெனினே அரசின் தலைவர் ஆயிற்றே.

இருந்தாலும் மாலையில் எப்படியோ ஒழிவு நேரம் கண்டு பிடித்து, ''நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவைப் பார்த்துவரப் போவோமே, ஊம்?'' என்று டிரைவர் கில்லிடம் சொல்லுவார்.

பனிக்காலம் வந்தது, வெண்பனி அடர்த்தியாகப் பெய்தது. மாஸ்கோ நகர் முழுவதும் வெண்பனி போர்த்துக் காட்சி தந்தது. நகரிலிருந்து வெண்பனியை அப்புறப்படுத்த முடியவில்லை. அதுதான் ஓயாமல் பெய்து கொண்டிருந்ததே, எனவே அனேகமாக இரண்டு மாடி உயரத்துக்கு வெண்பனி வீதிகளில் குவிந்து கிடந்தது.

1919ம் ஆண்டு ஜனவரி மாதம், இம்மாதிரி ஒரு நாளில் ஸக்கோல்னிக்கீ சோலீப் பள்ளியில் புத்தாண்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. லெனின் விழாவில் கலந்து கொள்வதாக வாக்களித்திருந்தார். மாலையில் அவரும் சகோதரி மரீயா இல்யீனிச்ஞவும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுக்காக ஒரு பாத்திரத்தில் பால் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

வழக்கம் போல டிரைவர் கில் கார் ஓட்டினார். மெய்க் காப்பாளராக செபானேவ் என்பவரும் உடன் சென்றார்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. வீதிகளில் ஆட்கள் நட மாட்டம் நிறைய இருந்தது. வெண்பனி குவிந்து கிடந்த தெருக்கள் குடைவழி போலக் குறுகலாக இருந்தன. சில இடங்களில் வீதிகள் கார் கடந்து செல்ல முடியாதபடி அவ் வளவு குறுகியிருந்தன. ஆயினும் டிரைவர் கில் ஆட்களுக்கும் வெண்பனிக் குவியல்களுக்கும் இடையே சாமர்த்திய மாகக் காரை நிறுத்தாமல் ஓட்டிச் சென்றார்.

ஸக்கோல்னிக்கீயில் புகும் இடத்தில், ரயில்வே பாலத் தின் அருகே ஆட்கள் தென்படவில்லை. திடீரென்று மூன்று பெயர் வழி மறித்தார்கள்.

''நிறுத்து! இல்லாவிட்டால் சுடுவோம்!''

கில் அவர்களைக் கடந்து செல்ல விரும்பினார். ஆனால் அவர்கள் மிலீஷியாக்காரர்கள் என்று நினைத்துக் காரை நிறுத்தச் சொன்னார் லெனின். அதுவோ போர்க் காலம். காரில் நகருக்கு வெளியே யார் போகிறார்கள் என்று கண் காணிக்க மிலீஷியாக்காரர்கள் கடமைப்பட்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் மிலீஷியாவுக்குச் சீருடை வழங்கப்பட வில்லை. எனவே இந்த மூவரும் சாதாரண உடை அணிந் திருந்தது லெனினுக்கு விந்தையாகப் படவில்லை.

கார் நின்றது. தாட்டியான மூன்று ஆட்களும் காரைச் சூழ்ந்து கொண்டார்கள். கதவுகளைத் திறந்தார்கள். ரிவால் வர்களைக் குறி வைத்துப் பிடித்தவாறு, ''இறங்குங்கள்!'' என்று அதட்டினார்கள்.

''நான் லெனின்!'' என்றார் விளாதீமிர் இல்யீச்.

அவர்கள் மிலீஷியாக்காரர்கள் என்றே அவர் இன்ன மும் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் இது என்ன? கண் மூடிக் கண் திறப்பதற்குள் இரண்டு பெயர் லெனினின் கன்னப் பொருத்துக்கள்மேல் ரிவால்வர் குழாய் நுனிகள் உராயும்படி பிடித்துக்கொண்டார்கள். அவற்றின் குளிர்ந்த எஃகை அவர் உணர்ந்தார். உயர்ந்த தொப்பி அணிந்திருந்த மூன்றாமவன் வெளிறிய, துடுக்கான முகத் தோற்றத்துடன் லெனினுடைய கோட்டுப் பைகளை விரை வாகத் துழாவினான். கிரெம்ளினுக்குள் செல்வதற்கான



மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் இரண்டாவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது செஞ்சதுக்கத்தில் வி. இ. லெனின். மாஸ்கோ, 1919 நவம்பர் 7


ТЫ
ЗАПИСАЛСЯ
ДОБРОВОЛЬЦЕМ?

ஃபேலிக்ஸ்
எத்மூந்தவிச்
த்லெர்ழீன்ஸ்கீ.
1919

மிஹயீல்
வஸீலியெவிச்
ஃபுரூன்ஸே.
1919

''நீ சுய விருப்பத் தொண்டுகைப் படையில்
சேர்ந்தாயா?'' *ஓவியர் தி. மூர்*





1920 மே முதல் தேதி கிரெம்ளினில் நடந்த அகில ருஷ்ய ஸுபோத்னிக்கில் வி. இ. லெனின். ஓவியர் மி. ஸக்கலோவ்

வி. இ. லெனின். மாஸ்கோ, 1920 மே 1




கிரெம்ளினில் வி. இ. லெனினது அலுவல் அறை






வி. இ. லெனின் தமது கிரெம்ளின் அலுவல் அறையில்.
மாஸ்கோ, 1922 அக்டோபர் 4




''கோஎல்ரோ'' திட்டம் பற்றி வி. இ. லெனின் அறிக்கை படிக்கிறார். ஓவியர் எல். ஷ்மாத்கோ



கிரெம்ளினில், கம்யூனிஸ அகிலத்தினுடைய
இரண்டாவது காங்கிரஸின் ஒரு கமிஷன் கூட்டத்தில்
வி. இ. லெனின். மாஸ்கோ, 1920 ஜூலை—ஆகஸ்டு



வி. இ. லெனின் கிரெம்ளினில்
உள்ள தம் அலுவல் அறையில்
ஆங்கில எழுத்தாளர்
ஹெர்பர்ட் வெல்ஸுடன் உரையாடு
கிறார். மாஸ்கோ, 1920 அக்டோபர்





கிரெம்ளினில் நடந்த மக்கள் கமிஸாரவைக் கூட்டத்தில் வி. இ. லெனின். மாஸ்கோ, 1922 அக்டோபர் 3




வி. இ. லெனின் தம் கிரெம்ளின் இல்லத்தில் குடும்பத்தினருடன். கீழ்வரிசையில்: வி. இ. லெனின், ந. க. குரூப்ஸ்கயா, அ. இ. யெலிஸாரவா. மேல் வரிசையில்: ம. இ. உல்யானவா, தி. இ. உல்யானவ், க. யா. லஸ்கச்சோவ். மாஸ்கோ, 1920 சரத்காலம்



வி.இ. லெனின் உலாவுகையில். கோர்க்கி, 1922 ஆகஸ்டு தொடக்கத்தில்



வி. இ. லெனினும் ந. க. குரூப்ஸ்கயாவும் மருமகன் வீக்தர் உல்யானவுடனும் தொழிலாளர் மகள் வேரா வுடனும். கோர்க்கி, 1922 ஆகஸ்டு தொடக்கத்தில்



வி. இ. லெனின். ஓவியர் நி. அந்திரேயெவ்

அனுமதிச் சீட்டையும் லெனினுடைய சிறு கைத்துப்பாக்கியையும் எடுத்தான்.

பிறகு கொள்ளைக்காரர்கள் காரில் தாவி ஏறிக் கொண்டு அதை ஓட்டிச் சென்றுவிட்டார்கள். கார் பார்வையிலிருந்து மறைந்தது. இவை எல்லாம் மிக மிக விரைவாக நிகழ்ந்தேறிவிட்டபடியால் யாருமே சுய நிதானத்துக்கு வர முடியவில்லை.

கோப மிகுதியால் லெனின் சில வினாடிகள் பேசாதிருந்தார்.

''வெட்கக்கேடு! நாம் இத்தனை பெயர் இருந்தும் காரைப் பிடுங்கிச் செல்ல விட்டுவிட்டோமே!'' என்று கடிந்து கொண்டார்.

''விளாதீமிர் இல்யீச்! அவர்கள் உங்களைக் கொன்று விடுவார்களோ என்ற பயத்தினால்தான் நான் அவர்களைச் சுடவில்லை'' என்று ஆவேசத்துடன் கூறினார் கில்.

''ஆமாம். சண்டை போடுவது அர்த்தம் அற்ற செய்கையாய் இருந்திருக்கும். சக்திகள் மிகவும் சமமற்றவை'' என்று ஒப்புக் கொண்டார் லெனின்.

தோழர் செபானேவ் மீது பார்வை பட்டதும் லெனின் கடகடவென்று சிரித்தார். அதுவும் எப்படி! மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளும் சிரிப்பு. அந்த மாதிரிச் சிரிக்க லெனின் ஒருவரால்தான் முடியும். மரீயா இல்யீனிச்னாவும் கில்லும் தம்மை அறியாமலே சிரிக்கத் தொடங்கினார்கள். செபானேவ் மட்டுமே சிரிக்காமல் நின்றார்.... பால் பாத்திரம் அவர் கையில் இருந்தது.

''கொள்ளைக்காரர்களிடம் நாம் பறிகொடுக்காதது இந்தப் பாத்திரம் ஒன்றுதான்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் லெனின்.

மெய்க்காப்பாளர் செபானேவ் பேயறைந்தது போன்ற முகத் தோற்றத்துடன் ஒரு கையால் கோட்டுப் பையிலிருந்த ரிவால்வரைத் தொட்டுப் பார்த்தார், மற்ற கையில் பால் பாத்திரத்தைப் பிடித்திருந்தார். அவரைக் கேலி செய்து நகையாடியவாறு எல்லோரும் ரயில்வே பாலத்துக்கு அருகாமையில் இருந்த வட்டார சோவியத் அலுவலகம் சென்றார்கள். அங்கே லெனினுக்காக ஒரு கார் ஏற்பாடு செய்யப்பட்டது. தங்கை

மரீயாவுடன் அவர் சோலைப் பள்ளிக்கு அனுப்பிவைக்கப் பட்டார். கொள்ளைக்காரர்களின் தாக்குதல் பற்றி த்ஸெர் ழீன்ஸ்கீக்குத் தகவல் கொடுக்கப் பட்டது. உத்தரவு கிடைத்ததும் புரடசி விரோதிகளை ஒடுக்குவதற்கான விசேஷக் கமிஷனின் ஊழியர்கள் மாஸ்கோ நகர் முழுவதி லும் சல்லடை போட்டுச் சலித்துக் கொள்ளைக்காரர்களைத் தேடினர்கள். விரைவில் பிடித்தும் விட்டார்கள்.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா ஜன்னலுக்கு ஜன்னல் நிழல்போல அலைந்தார். வெண்பனி அடர்ந்த குளிர்காலத் தோட்டத்தில் பார்வை செலுத்தினர். லெனின் ஏன் நேரம் ஆக்குகிறார்?

அவரது பதற்றம் பள்ளிக் குழந்தைகளையும் பற்றிக் கொண்டது. பள்ளிக் கூடம் முழுவதையும் அது ஆட்கொண் டது. கடிகார முட்களோ மிக மிக மெதுவாக ஊர்ந்தன.

முடிவில் யாருடையவோ மகிழ்ச்சி பொங்கும் குரல் கட்டிடம் முழுவதிலும் ஆர்த்தது:

''வந்துவிட்டார்கள்!''

லெனின் முகப்பிலிருந்து உள்ளே ஓடிவந்தார். அவருடைய மேல்கோட்டு பொத்தான்கள் கழற்றப்பட்டு விரியத் திறந்திருந்தது. புருவங்களும் தாடியும் வெண் பனித்துகள் படிந்திருந்தன. கன்னங்கள் சிவுசிவுத்தன.

''வெண்பனித் தாத்தா!'' என்று ஆரவாரித்தார்கள் சிறுவர்கள். அவர்மேல் ஒட்டிக் கொண்டார்கள், பற்றித் தொங்கினர்கள்.

சிறுவர் சிறுமியரின் கூட்டத்தைச் சிரமத்துடன் விலக்கிக் கொண்டு ஒரு வகையாக நதேழ்தா கன்ஸ்தன்தீன வ்னாவிடம் போய்ச் சேர்ந்தார் லெனின். கொள்ளைக்காரர் கள் பற்றிச் சொல்ல முதலில் அவர் விரும்பவில்லை. ஆனால் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா அவரை ஒரே பதைபதைப் புடன் கூர்ந்து நோக்கினர். ஏதோ தகாதது நடந்துவிட் டது என்று இதயத்தால் உணர்ந்து கொண்டார்.

''அற்ப விஷயம், நதேழ்தா. மிக மிக அற்ப விஷயம்'' என்றார் லெனின்.

கொள்ளைக்காரர்கள் எதிர்ப்பட்டதைக் கேட்டு நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவின் முகம் வெளிறிற்று. அவர் ஒன்றும் சொல்லவில்லை.

''அந்த மட்டிலும் நீ உயிர் தப்பினையே, நல்ல வேளை'' என்று மட்டுமே தணிந்த குரலில் மொழிந்தார்.

அப்புறம் விழாக் கொண்டாட்டம் தொடங்கியது. பள்ளிக்கூட ஹாலில் விட்டத்தைத் தொட்டுக் கொண்டு உயர்ந்து நின்றது அழகிய புத்தாண்டு ஃபிர் மரம். கொடிகளும் தங்க ரேக்குகள் பளிச்சிடும் நட்சத்திரமும் விளையாட்டுச் சாமான்களும் பொம்மைகளும் அதற்கு அணி செய்தன. பனிக்காலக் காட்டு மணமும் குங்கிலிய வாசனையும் அற்புதமாக வீசின. குழந்தைகள் கைகளைக் கோத்துக் கொண்டு புத்தாண்டு மரத்தைச் சுற்றி வட்ட நடனம் ஆடினார்கள். சிறுவர்களும் சிறுமியரும் பாடினார்கள், லெனினும் பாடினார். எலியும் பூனையும் விளையாட்டு ஆடினார்கள். பின்பு 'கண்ணு மூச்சி' விளையாடினார்கள். அப்புறம் ஒளிந்து விளையாடினார்கள். தெவிட்டத் தெவிட்டக் கும்மாளம் அடித்தார்கள். கொண்டாட்டம் என்றால் அதுதான் கொண்டாட்டம்!

இரண்டு மணி நேரத்துக்கு முன்புதான் லெனின் கொள்ளைக்காரர்களின் ரிவால்வர்களின் நடுவில், சாவுக்கு வெகு அருகே இருந்தார் என்பதை அறிந்திருந்த நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவோ, அவரைப் பாராட்டும் பெருமையும் ததும்ப நோக்கினார். ''நீ அச்சம் இல்லாத மனிதன். அதனால்தான் இவ்வளவு குதூகலமாய் இருக்கிறாய்'' என்று கர்வம் பொங்க நினைத்துக் கொண்டார்.

துன்பகரமான இழப்புக்கள்

மறுபடி ரயில் வண்டி பெத்ரோகிராதிலிருந்து மாஸ்கோ சென்றது. மறுபடி ரயிலில் இருந்தார் லெனின். சகோதரி ஆன்னாவும் உடன் இருந்தார். அது 1919ம் ஆண்டு மார்ச் மாதம். இரவு. மண்ணெண்ணெய் விளக்கு மங்கலாக எரிந்தது. பெட்டி ஆடி அசைந்தது. சக்கரங்கள் சோகத்துடன் கடகடத்தன.

ஆன்னா இல்யீனிச்னா தோள்களைக் கூனியவாறு ஒரு மூலையில் முடங்கியிருந்தார். ஆன்னா இல்யீனிச்னாவின் கணவர் மார்க் திமஃபேயெவிச்சை அடக்கம் செய்து

விட்டு அவர்கள் திரும்பிவந்து கொண்டிருந்தார்கள்.

சோவியத் நாட்டில் புதிய விபத்து தலைதூக்கியிருந்தது. சாவு விளைக்கும் நோய் ஒன்று நகரங்களிலும் கிராமங்களிலும், ரயில் மார்க்கங்களிலும் நிலையங்களிலும் எங்கும் நடமாடியது. அதுதான் டைஃபாய்டு காய்ச்சல். பேன்கள் இந்த நோயை எங்கும் பரப்பின. இந்த நோயால் மக்கள் மடிந்தார்கள். மருத்துவ மனைகள் குறைவாகவே இருந்தன, மருத்துவர்கள் குறைவு, மருந்துகளும் போதவில்லை.

மார்க் திமஃபேயெவிச் யெலிஸாரவ் அலுவல் நிமித்தமாகப் பெத்ரோகிராத் வந்தவர், டைஃபாய்டு நோய்த் தொற்றுக்கு ஆளாகிச் சில நாட்களில் இறந்து போனார். வோல்க்கவ் இடுகாட்டில் வெண் பிர்ச் மரங்களின் நிழலில் இருந்த இரண்டு உறவினர் கல்லறைகளுடன் மூன்றுவதும் சேர்ந்து கொண்டது.

...இன்பமும் துன்பமும் நிறைந்த எத்தனையோ ஆண்டுகள் மார்க்குடன் தொடர்பு கொண்டிருந்தன. இளமையில் மார்க் லெனினின் தமையனார் அலெக்ஸாந்தரின் தோழராக இருந்தார். அலெக்ஸாந்தருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது. மார்க் லெனினது குடும்பத்தினரில் ஒருவர் ஆகிவிட்டார். அறிவாற்றலும் நல் இதயமும் கொண்ட அவர் குடும்பத்தில் எல்லோருக்கும் வேண்டியவராக, இனியவராகத் திகழ்ந்தார்.

ரயில் இரவின் இருளைக் கிழித்துக் கொண்டு விரைந்தது. இலைகள் அற்ற மார்ச் மாதக் காடு இருப்புப் பாதையை ஒட்டிக் கரிய வேலி போல நீண்டு சென்றது. வைக்கோல் கூரைகள் வேய்ந்த கிராமங்கள் ரயிலை எதிர் கொண்டு விரைந்தன. தொழிற்சாலைப் புகைக் குழாய்கள் செவிட்டூமைகளாய் நின்றன. அவை புகை உமிழவில்லை. ஆலைகளும் தொழிற் சாலைகளும் வரவரக் குறைவாகவே வேலை செய்தன. கச்சாப் பொருள்கள் போதவில்லை. எரிபொருள்கள் இல்லை. தொழிற்சாலைகள் நின்றுவிட்டன. சீரழிவு.

மாஸ்கோவில் புதிய துயரம் காத்திருந்தது. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டித் தலைவர் யாக்கவ் மிஹாய்லவிச் ஸ்வெர்திலோவ் இன்ஃபுளுயென்ஸாவுக்கு ஆளாகிப்

படுத்த படுக்கை ஆகிவிட்டார். ருஷ்யா அதற்கு முன் கண்டிராத இந்த நோய் எங்கோ ஸ்பெயினிலிருந்து வந்து சூறைக் காற்று போலப் பரவியது. இரக்கமின்றி எரித்தது, ஆயிரக்கணக்கில் ஜனங்களே மடித்தது டைஃபாய்டு. அதோடு பஞ்சம், உள்நாட்டுப் போர். விபத்துக்கு மேல் விபத்து. சோவியத் ஆட்சி விரைவில் முடிந்துவிடும் என்று வன்மக் களிப்புடன் எழுதின வெளிநாட்டுப் பத்திரிகைகள்.

லெனின் தலையைப் பிடித்துக் கொண்டார். கடின மாகத்தான் இருந்தது.

ஸ்வெர்திலோவ் பிழைத்து எழுந்தால் நல்லது! அவர் கள் இருவரும் எவ்வளவு இணக்கமாக வேலை செய்தார் கள்!

''தோழர் ஸ்வெர்திலோவ், இப்படிச் செய்வது அவசியம்'' என்று எதையேனும் பற்றிச் சொல்லத் தொடங்குவார் லெனின்.

''ஏற்கனவே'' என்று நிம்மதியுடன் விடையளிப்பார் ஸ்வெர்திலோவ்.

''ஏற்கனவே என்ரூல்?''

''செய்தாயிற்று, விளாதீமிர் இல்யீச்.''

''எப்போது உங்களுக்கு நேரம் கிடைத்தது? இதைப் பற்றி நாம் அனேகமாகப் பேசிக் கொள்ளவே இல்லையே.''

''அனேகமாக'' என்று சிரிப்பார் ஸ்வெர்திலோவ்.

ஜாடை மாடையிலிருந்தே லெனினின் உள்ளக் கருத்தை அறிந்து கொள்வார் ஸ்வெர்திலோவ். அவரது செயல் திறமையும் புரட்சி உணர்வும் ராஜதந்திர நுண்ணறிவும் லெனினுக்குப் பிடித்திருந்தன.

இன்ஃபுளுயென்ஸா தொற்று நோய். எனவே ஸ்வெர் திலோவைக் காண லெனினை மருத்துவர்கள் அனுமதிக்க வில்லை.

லெனின் அவர்கள் பேச்சைக் கேட்கவில்லை. தோழ ரைக் காண வந்தார். பதைத்துப் போனார்.

இவர் ஸ்வெர்திலோவாக இருக்க முடியுமா? வெள்ளைத் தலையணைகள்மேல் துவண்டு படுத்து, அசை யாது கிடக்கும் இந்த மனிதர், ஸ்வெர்திலோவ் தாமா? அவருடைய மூக்கு இன்னும் கூர்மை ஆகிவிட்டதுபோல் இருந்தது. தாடி வளர்ந்து அடர்ந்திருந்தது. முகம் கிழடு

தட்டி, அடையாளம் தெரியாமல் மாறியிருந்தது. கண்கள் குழி விழுந்திருந்தன.

லெனின் கட்டில் அருகே உட்கார்ந்தார். ''நம்பகமான, திறமையுள்ள தோழரே, போய்விடாதேயும்!'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

ஸ்வெர்திலோவுக்கு அப்போது முப்பத்து மூன்றே வயது தான்! இளமையும் உடல்நலமும் மிளிரும் அவரது தோற்றம் லெனினது நினைவில் பதிந்திருந்தது. ஸ்வெர்திலோவிடம் எப்போதும் ஊக்கமும் குதூகலமும் துணிவும் பொங்கும். மிகப் பயங்கர ஆபத்துக்குக் கூட ஸ்வெர்திலோவ் அஞ்சுவார் என்று எண்ணிப் பார்க்கக்கூட லெனினால் முடியவில்லை. மக்களுடன் எவ்வளவு நன்முகப் பேச, புரட்சித் தொண்டில் ஈடுபடும்படி எவ்வளவு உணர்ச்சிப் பெருக்குடன் அழைக்க அவர் வல்லவராய் இருந்தார்!

இமைகள் நடுங்கின, ஸ்வெர்திலோவ் விழிகளைத் திறந்தார். தொலைவிலிருந்து, அரைப் பிரக்ஞையுடன் லெனினை நோக்கினார். முறையீடும் வேதனையும் நிறைந்தது போன்ற புன்னகை அவர் உதடுகளில் அரும்பிற்று. லெனின் அவருடைய குச்சி போன்று மெலிந்த கையைப் பற்றினார். கண்ணீர் அவர் தொண்டையை அடைத்தது.

தலையைத் தொங்கவிட்டவாறு வெளியே சென்றார் லெனின்.

சில நிமிடங்களுக்கெல்லாம் ஸ்வெர்திலோவின் உயிர் பிரிந்துவிட்டது. லெனினைக் காண்பதற்காகவே போல, இறப்பதற்கு முந்திய மூர்ச்சை தெளிந்து கணப்போது சுய நினைவை அடைந்தார் அவர். ''விடை கொடுங்கள்'' என்று விழிகளால் கூறிவிட்டு மீளாப் பயணம் சென்றுவிட்டார்.

சோவியத் சமூகத்தின் வாழ்க்கையும் கட்டுமானமும் தொடங்கிய மிகக் கடினமான முதல் மாதங்களில் தமது சோர்வற்ற துணைவராக விளங்கிய ஸ்வெர்திலோவை லெனின் என்றென்றும் நினைவில் வைத்துப் போற்றி வந்தார்.

...வாழ்க்கை தொடர்ந்தது. சோவியத் சமூகத்தை அரண் செய்வது, வலுப்படுத்துவது அவசியமாய் இருந்தது.

ஸ்வெர்திலோவின் இடத்தில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டித் தலைவராக மிஹயீல் இவானவிச் கலீனினை நியமிக்கலாம் என்று லெனின் பிரேரித்தார்.

கலீனின் த்வேர் மாவட்டத்தில் குடியானவரின் மகனாகப் பிறந்து பெத்ரோகிராத் தொழிற்சாலைகளில் தொழிலாளராக வேலை செய்தவர். நல்ல கம்யூனிஸ்ட், சுபாவத்தில் நல்லவர், அறிவுக் கூர்மை உள்ளவர். மக்கள் அவரை நேசித்தார்கள். இவை எல்லாவற்றையும் அறிந்தே லெனின் அவர் பெயரைப் பிரேரித்தார்.

"நான், உழைப்பாளி மக்களின் மைந்தன்...."

சிறந்த ஆயுத தளவாட வசதிகள் கொண்ட பத்து லட்சத்துக்கு மேற்பட்ட வெண்படையினரும் வெளி நாட்டுத் தலையீட்டாளர்களும் ருஷ்யாவின் இதயமான மாஸ்கோவை நெருங்கிவிட்டார்கள். பகைவர்களின் ஆறு போர்முனைகள் சோவியத் நாட்டை இரும்பு வளையமாக நெருக்கின. முன் ஒருபோதும் நிலைமை இவ்வளவு கொடிய தாக, இவ்வளவு பயங்கரமாக இருந்ததில்லை.

மே மாதம் ஒரு நாள் மாஸ்கோ நகரில் அசாதாரண மான பரபரப்பு காணப்பட்டது. ஆலைகள், தொழிற்சாலை களின் வாயில்கள் அருகே மாதர்கள் அதிகாலையிலிருந்தே கலவரத்துடன் குழுமினர்கள். அவர்கள் எதையோ எதிர்பார்த்தார்கள். குழந்தைகள் தாய்மாரின் ஆடையைப் பிடித்துக் கொண்டு ஒண்டின. மாஸ்கோ தொழிலாளர் வட்டாரங்களைச் சேர்ந்த குழந்தைகள் அவை. காகிதம் போல் வெளுத்த ஒட்டி உலர்ந்த முகங்களும் விழிகளில் பட்டினியின் பளபளப்பும் கொண்டவை.

தொழிற்சாலைக் கதவுகள் விரியத் திறந்தன. கம்பளி மேல்கோட்டுகளும் பஞ்சுவைத்துத் தைத்த குட்டைக் கோட்டுகளும் இன்னும் அவரவருக்குக் கிடைத்த பல வித உடைகளும் அணிந்த தொழிலாளர்கள், சாமான் பைகளையும் துப்பாக்கிகளையும் தோள்களில் தொங்கவிட்ட வாறு தொழிற்சாலை வாயில்களுக்கு வெளியே வந்தார்கள்.

''அணி வகுக்க!'' என்று உத்தரவு பிறந்தது.

செஞ்சேனை வீரர்கள் அணி வகுத்துக் கொண்டார்கள். அண்மையில்தான் அவர்கள் அவசர அவசரமாகப் படைப் பயிற்சி பெற்றிருந்தார்கள். அவர்களுடைய அணி வரிசைகள் அவ்வளவு ஒழுங்காக இல்லைதான். ஆனால் துப்பாக்கி சுட அவர்கள் கற்றுத் தேர்ந்திருந்தார்கள்.

''செஞ்சதுக்கத்தை நோக்கிச் சீராக நடக்க!''

மாஸ்கோவின் எல்லா வட்டாரங்களிலும் தொழிற் சாலைகளிலுமிருந்து கிரெம்ளின் மதிற்சுவர்களை நோக்கி நடந்தன படைப் பிரிவுகள்.

வெள்ளையும் சிவப்புமான தலைக்குட்டைகள் அணிந்து பண்ட முடிச்சுக்களை எடுத்துக் கொண்டு மருங்கில் நடந்தார்கள் மாதர்கள். அவர்கள் இடறி விழுந்தவாறு ஓடி, வீரர்களின் முகங்களைப் பார்த்துவிட்டு, முடிச்சுக்களை அவர்கள் கைகளில் திணித்தார்கள்.

துயரத்தால் முகம் கறுக்க, முதிய தாய் உரக்க ஓல மிட்டாள்:

''வா-ஸ்-யா-ஆ, மகனே! ஆண்டவா, என் அருமை மகனை பூர்ஷ்வாக்களின் குண்டுகளிலிருந்து காப் பாற்று....''

வெறுங் காலர்களான சிறுவர்கள் செம்படைப் பிரிவு களுக்கு இடையே புகுந்து ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு பெருமை பீற்றிக் கொண்டார்கள்:

''எங்கள் அப்பாவிடம் இத்தனும் பெரிய துப்பாக்கி இருக்கிறதே!''

''துப்பாக்கியாம், பிரமாதம்! எங்கள் அப்பாவிடம் மெஷீன் கன் இருக்கிறதாக்கும். மெஷீன் கன்னால் பூர்ஷ்வாக் களை எப்படிச் சுட்டுத் தள்ளுவார் தெரியுமா?''

''எங்கள் அப்பா என்ன செய்தார் தெரியுமா? எறி குண்டுகளை இடைவார் முழுவதிலும் செருகிக் கொண் டார். பார்த்துக் கொண்டே இரு, நம் தொழிற்சாலைக் காரர்கள் இந்த வெண்படைப் புழுக்களை என்ன செய் கிறார்கள் என்று....''

''நான், உழைப்பாளி மக்களின் மைந்தன், சோவியத் குடியரசின் பிரஜை, தொழிலாளர், குடியானவர் சேனை யின் படைவீரன் என்ற பட்டத்தை ஏற்கிறேன்....''

எவ்வளவு பெருமிதம் ததும்பும் பெரிய சொற்கள்! இந்தச் சொற்களைக் கேட்டு இதயம் இன்னும் தீவிரமாக அடித்துக் கொள்கிறது. ஓர் ஆண்டுக்கு முன், சோவியத் அரசுக்கு விசுவாசத்துடன் தொண்டு ஆற்றுவதாகச் சபதம் ஏற்றுக்கொண்டபோது மக்கள் கமிஸாரவைத் தலைவர் லெனினுடைய இதயத்திலும் இவ்வாறே உவகையும் பெருமையும் பொங்கின. இது நடந்தது மிஹெல்ஸோன் தொழிற்சாலையில். செங்காவற்படைப் பிரிவுகளைச் சேர்ந்த வீரர்களான இளம் தொழிலாளர்களோடு லெனினும் சபதத்தை ஏற்றார்: ''தொழிலாளர், குடியானவர்களின் அரசு முதல் அழைப்பு விடுத்ததுமே சோவியத் குடியரசின் தற்காப்புக்காகச் செயல் புரிவதாக ஆணையிடுகிறேன்.

சிந்தனையில் ஆழ்ந்தவராக, தோழர்களுடன் செஞ்சதுக்கம் சென்றார் லெனின்.

செஞ்சதுக்கத்தில் வரிசை வரிசையாக நிறைந்திருந்தார்கள் ஆட்கள். கண்டிப்பான, கட்டுப்பாடுள்ள இரைச்சல் ஒலித்துக் கொண்டிருந்தது. உயரத் தூக்கிய துப்பாக்கிக் குத்தீட்டிகள் காட்டில் மர வரிசைகள் போல நின்றதை லெனின் கண்டார். எஃகு கொடுமையும் கூர்மையும் கொண்டு வெயிலில் ஒளிர்ந்தது. மாதர்கள் புதல்வர்களையும் கணவர்களையும் விட்டு நகரவே இல்லை. பல செம்படை வீரர்கள் மனைவியரைத் தழுவி விடை பெற்றதையும் குழந்தைகளை முத்தமிட்டதையும் லெனின் கண்டார்.

செஞ்சேனைப் படைப்பிரிவுகளும் சர்வஜன இராணுவப் பயிற்சிப் படைப்பிரிவுகளும் செஞ்சதுக்கத்தில் கூடியிருந்தன.

சர்வஜன இராணுவப் பயிற்சி என்பது என்ன? எல்லாத் தொழிலாளர்களும் உழைப்பாளிகளும் இராணுவப் பயிற்சி பெற வேண்டும் என்னும் அரசாணையில் லெனின் முந்திய ஆண்டு கையெழுத்து இட்டிருந்தார். தாய்நாடு ஆபத்தில் இருந்தது. எல்லாத் தொழிலாளர்களும் துப்பாக்கி சுடப் பயிலுங்கள், சோவியத் தாய்நாட்டைக் காக்க ஆயத்தம் ஆகுங்கள்!

பேச்சு மேடை இல்லை. சேறு தெளித்த பழைய லாரி ஒன்று நின்றது. அதன் ஒரு பக்கம் சிவப்புத் துணி விரித்

திருந்தது. லாரியின் அருகே கம்பம் நாட்டி அதன் மேல் பலகை மாட்டப்பட்டிருந்தது. ''நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் கொடிய கொள்ளைக் கூட்டத்தைத் தகர்ப்போம்'' என்ற கோஷம் பலகையில் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது.

லெனின் செஞ்சேனைக் கமாண்டர்களுடன் படை வீரர்களைப் பார்வையிட்டுவிட்டு ஏணிப் படிகள் வழியே லாரி மேல் ஏறி நின்று கொண்டார்.

ஆட்களின் கடல் அவர் கண்களுக்கு முன்னே பரந்திருந்தது. துப்பாக்கிகள் தாங்கிய ஆயிரமாயிரம் தொழிலாளர்கள்.

ஒவ்வொருவன் உள்ளத்திலும் துயரமும் மகிழ்வும் வருங்கால நம்பிக்கையும் காதலும் அலை மோதின. ஒவ்வொருவனும் தொழிலாளர், குடியானவர் அரசாங்கத்தின் முதல் அழைப்பு கிடைத்ததுமே எல்லாவற்றையும் விட்டு விட்டு வெண்படையினரை எதிர்த்துப் போர் புரியப் புறப்பட்டிருந்தான்.

லெனின் பேசத் தொடங்கினர்.

சதுக்கத்தில் நிசப்தம் குடிகொண்டது.

லெனின் பேசியதன் சாரம் இதுதான்: முன்பெல்லாம் படைவீரர்கள் ஜார் மன்னனையும் பூர்ஷ்வாக்களையும் காப்பதற்குக் கற்பிக்கப்பட்டார்கள். இப்போதோ செஞ்சேனை வீரர்கள் தங்களையும் தங்கள் வீடுகளையும் குழந்தைகளையும் காத்துப் போரிடுகிறார்கள். அவர்கள் தங்கள் அரசை நிலப்பிரபுக்களிடமிருந்தும் பூர்ஷ்வாக்களிடமிருந்தும் காத்துப் போரிடுகிறார்கள். லெனின் உளமார, எளிமையாகப் பேசினர். கிரெம்ளின் மதில்களின் அருகே நின்ற பல்லாயிரம் செஞ்சேனை வீரர்கள் என்ன நினைத்தார்களோ, அவர்களுடைய மனைவியர் என்ன நினைத்தார்களோ, அதைப் பற்றியே அவர் பேசினர். மனைவியர் அழவில்லை. அவர்களுடைய தொண்டைகளில் மட்டுமே கண்ணீர் அடைத்துக் கொண்டது. முகங்கள் வெளிறின.

கூட்டம் முடிந்ததும் செம்படைப் பிரிவுகள் நேராக ரயில் நிலையம் சென்றன. ரயில் வண்டிகள் படைவீரர்களைப் போர்முனைக்கு ஏற்றிச் சென்றன.

மக்கள் கமிஸாரகத்தில் ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. ஒவ்வொருவருக்கும் வேலை ஏராளமாக இருந்தது. ஆயினும் எல்லோரும் தம் தம் வேலையை விரும்பினர்கள், மகிழ்ச்சியுடன் உழைத்தார் கள். இந்த ஊழியர்களின் சிறு குழுவை லெனின் பெரிதும் மதித்தார்.

''பெரிய கரப்பானைவிடச் சிறிய மீனே மேல்'' என்று வேடிக்கையாகச் சொல்வார் லெனின்.

அவருடைய இந்தப் பழமொழி ஊழியர்களுக்குப் பிடித்திருந்தது.

''நாங்கள் சின்ன மீன்'' என்று சிரிப்பார்கள் அவர் கள்.

''அளவில் சிறியது, ஆனால் பயனில் பெரியது'' என்று பாராட்டுவார் லெனின்.

மக்கள் கமிஸாரவைக் கூட்டத்துக்குத் தொடக்க நேரத்துக்கு ஐந்து நிமிடம் முன்னதாகவே வந்துவிடுவார் லெனின். எப்போதும் சற்று முன்பே வந்துவிடுவது அவர் வழக்கம். தலைவர் இருக்கையில் அமர்ந்து கொள்வார். பல்வேறு தகவல்களும் தந்திகளும் அடங்கிய காகிதக் கட்டு அவருக்காகக் காத்திருக்கும். மற்ற மக்கள் கமிஸார் கள் வந்து, பச்சைத் துணி விரித்த மேஜையைச் சுற்றிலும் உட்கார்வதற்குள் லெனின் சில காகிதங்களைப் படித்து விடுவார். சில காகிதங்களை அப்புறம் பார்ப்பதற்காக வைப்பார். மற்றவற்றில் கையெழுத்திடுவார். சில காகி தங்களைச் செயலாளரிடம் திருப்பி அனுப்புவார். பின்பு மக்கள் கமிஸாரவைக் கூட்டத்தைத் தொடங்கி வைப் பார்.

நேரம் தாழ்த்து வருபவர்களே கிடையாது. எல்லோ ரும் கூட்டம் தொடங்குவதற்கு முன்பே வந்துவிடுவார் கள். தாமதித்ததாக நிகழ்ச்சி விவரத்தில் குறிக்கப்படுவதை யாரும் விரும்பவில்லை. கண்டனத்துக்கு உள்ளாகவோ ஒருவருக்குமே இஷ்டம் இல்லை. நேரம் தாழ்ப்பவர்களை லெனின் லேசில் விட மாட்டார்.

''தொடங்குவோம்'' என்பார் லெனின்.

உணவுப்பொருள் நிலைமைபற்றி ஒரு தோழர் தகவல் கொடுப்பார். அவர் உணவுப்பொருள் கமிஷனின் உறுப்பினர். உணவுப்பொருள் கமிஷனிடம் உணவுப் பண்டச் சேமிப்புகள் பற்றிக் கடைசிப் பவுண்டு, அரைப் பவுண்டு வரை கணக்கு இருக்கும். அந்த மாதம் உழைப்பாளிகளுக்கு எவ்வளவு ரொட்டியும் உப்பும் வெண்ணெயும் கொடுக்க முடியும் என்று அந்தத் தோழர் தகவல் தருவார்.

மிகக் குறைந்த அளவுதான். குழந்தைகளுக்குக் கொஞ்சம் அதிகம். இருந்தாலும் அதுவும் அற்பமே.

''தனிக் கட்டைகளான கிழவர்களை மறந்துவிடாதீர்கள்'' என்பார் லெனின்.

மக்கள் கமிஸாரவைத் தலைவரின் இந்த யோசனைக்குக் கமிஷன் உறுப்பினர் ஒரு பதிலும் அளிக்க மாட்டார். உணவுப்பொருள் சேமிப்புக்கள் மிக மிகக் குறைவாகவே இருக்கின்றன என்று அர்த்தம் அந்த மௌனத்துக்கு.

''தனிக் கட்டையான கிழவர்களை மறந்துவிடக் கூடாது. சோவியத் ஆட்சி அவர்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளாவிட்டால் வேறு யார் எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்? ஆம், ஆம்! நாம் ஏழைகள்தாம், ஆனாலும் எப்படியாது வழி கண்டுபிடியுங்கள்'' என்று மறுபடி வற்புறுத்துவார் லெனின்.

உணவுப்பொருள் கமிஸாரின் பக்கம் கேள்விக் குறியுடன் நோக்கினார் லெனின்: த்ஸ்ரூப்பா என்ன சொல்கிறார்? த்ஸ்ரூப்பாவை லெனின் வெகு காலமாக அறிந்திருந்தார்—தாம் சைபீரியச் சிறைவாசத்திலிருந்து திரும்பிய நாள் முதலாகவே. அப்போது த்ஸ்ரூப்பாவை லெனினுக்கு நிரம்பப் பிடித்துப் போய்விட்டது. குதூகலமானவர். நீலவிழியர். அலை படிந்த அடர்ந்த பொன் முடியர்.

ஆனால் முக்கியமானது வெளித்தோற்றம் அல்ல. த்ஸ்ரூப்பா சிறந்த புரட்சிக்காரர். அதுதான் முக்கியம். தன்னலம் அற்ற ஊழியர், அற்புதமான மக்கள் கமிஸார் அவர். அத்தகைய மக்கள் கமிஸாருடன் சேர்ந்து வேலை செய்வது லெனினுக்கு உவப்பாய் இருந்தது.

த்ஸ்ரூப்பாவுக்கு என்ன நேர்ந்தது? லெனின் புருவங்களை நிமிர்த்து அவரை உற்றுப் பார்த்தார். எப்படி இளைத்துப் போய்விட்டார்! முகம் இரத்தம் செத்துக் கிடந்தது.

''பட்டினியால் நேர்ந்தது இது! அரைப் பட்டினி கிடக்கிறார் த்ஸுரூப்பா!'' என்று லெனின் புரிந்து கொண்டார்.

குறிப்பு நோட்டிலிருந்து ஒரு காகிதம் கிழித்து, பேச்சாளரின் சொற்களைத் தொடர்ந்து கேட்டவாறே த்ஸுரூப்பாவுக்குக் கண்டிப்பான குறிப்பு எழுதினார்—அரசாங்கச் சொத்தை அக்கறையுடன் பேண வேண்டும், இப்படி அசட்டையாக விடக்கூடாது, அது புத்திசாலித்தனம் அல்ல என்று.

த்ஸுரூப்பா படித்துவிட்டுப் புன்னகை புரிந்தார். லெனின் அரசாங்கச் சொத்து என்று குறிப்பிட்டது அரசுக்காக மிக அதிகமாக உழைக்கும் மனிதர்களின் உடல் நலத்தை. பட்டினி கிடப்பவர் தாம் ஒருவர் மட்டுமே அல்ல, எல்லோருமே அரை வயிற்றுக்குத்தான் சாப்பிடுகிறார்கள், நல்ல காலம் வரும் வரை எப்படியாவது தாக்குப் பிடிப்போம், அப்புறம் வயிறு முட்டச் சாப்பிடலாம் என்று லெனினுக்குப் பதில் எழுத விரும்பினார் த்ஸுரூப்பா.

ஆனால் உணவுப்பொருள் கமிஷனைச் சேர்ந்த தோழர் அதற்குள் உரையை முடித்துவிட்டார். எனவே லெனினுக்குப் பதில் குறிப்பு எழுதும் எண்ணத்தை விட்டுவிட்டு, தாம் பேச விரும்புவதாகக் கையை உயர்த்தினார் த்ஸுரூப்பா. மிக முக்கியமான பிரச்சினை விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. த்ஸுரூப்பா தம் யோசனைகளையும் கருத்துக்களையும் வெளியிடுவது அவசியம். அவர் எழுந்தார். திடீரென்று நிலைகுலைந்து தரையில் சரிந்து மூர்ச்சையானார். லெனின் துள்ளி எழுந்து அவர் அருகே சென்றார்.

''தோழர் த்ஸுரூப்பா, அன்பரே, உங்களுக்கு என்ன நேர்ந்தது?''

த்ஸுரூப்பா பிணம்போல் வெளுத்து, கைகளை விரித்தவாறு மல்லாக்கக் கிடந்தார். மற்றவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒருவர் மருத்துவருக்கு போன் செய்தார். இன்னொருவர் த்ஸுரூப்பாவின் முகத்தில் தண்ணீர் தெளித்தார். அவர் அசைந்தார். ஆழ்ந்து மூச்சு இழுத்தார். அவருக்கு மூர்ச்சை தெளிந்தது. அவரை நாற்காலியில் உட்கார வைத்தார்கள். அவர் கைக்குட்டையால்

முகத்தைத் துடைத்துக் கொண்டு குற்றம் செய்துவிட்ட வர்போலக் கூச்சத்துடன் பார்த்தார்.

''தொந்தரவு கொடுத்துவிட்டேன், கூட்டத்தை இடை முறித்துவிட்டேன்!''

லெனின் கடிந்துகொள்ளும் பாவனையில் தலையை அசைத்தார். ''உணவுப்பொருள் கமிஸார் பட்டினியால் மூர்ச்சையாகிறார். மிகக் கடினமான நிலைமைகளில் வாழ் கிறோம். ஆனாலும் அரசாங்கச் சொத்தை அக்கறையுடன் பேண வேண்டும்'' என்று த்ஸுரூப்பாவிடம் சொன்னார். பின்பு மற்றவர்களைப் பார்த்து, ''தோழர்களே, இந்த அரசாங்கச் சொத்து மிகவும் பழுதாகிவிட்டது. இதை முழுவதும் செப்பனிட உடனே அனுப்புமாறு யோசனை கூறுகிறேன்'' என்றார்.

"வந்தது களி நிறைந்த மே தினம்...''

லெனின் அதிகாலையில் எழுந்து, மனைவியையும் சகோ தரியையும் எழுப்பிவிடக் கூடாது என்பதற்காக ஓசை யின்றி நடந்து சமையல் கட்டுக்குப் போனார். அன்று அவர் பழைய உடையும் தேய்ந்த பூட்சுகளும் அணிந்திருந் தார். டை கட்டிக் கொள்ளவில்லை.

சமையலறையில் தேநீர்க் கெட்டில் தளதளவென்று கொதித்துக் கொண்டிருந்தது. அடுக்கில் உருளைக் கிழங்கு ஆவி விட்டவாறு வெந்து கொண்டிருந்தது. லெனின் வீட்டுக் காரியங்களைப் பார்த்துக் கொண்டவள் ஸான்யா என்பவள். 1906ல் ஜாரின் போலீஸாரால் சுட்டுக் கொல்லப் பட்ட தொழிலாளர் பாபுஷ்கினுடைய தங்கை இவள்.

''விளாதீமிர் இல்யீச், நீங்கள் என்ன, மெய்யாகவே கிளம்பிவிட்டீர்களா?'' என்று வியப்புடன் கேட்டாள் ஸான்யா.

லெனினே, கண்களில் தந்திரம் சுடர, அடுப்பின் மேல் இருந்த கெட்டிலையும் அடுக்கையும் காட்டி, ''ஆமாம், இது என்ன? என்ன இது? இன்று எனக்காக வழக்கத்துக்கு முன்பே காலையாகாரம் தயாரித்தது யார்? நன்றி, ஸான்யா. உட்காருங்கள். சேர்ந்து சாப்பிடுவோம்'' என்றார்.

ஆர்வத்துடன் சிற்றுண்டி அருந்துவதில் முனைந்தார் லெனின். ஸான்யா தம்ளரில் கெட்டியான தேநீரை அவருக்காக ஊற்றியவாறு அதே ஆச்சரியத்துடன் சொன்னாள்:

''இந்த வேலை உங்களுக்கு ஏற்றது அல்ல, விளாதீமிர் இல்யீச். உங்கள் பொறுப்பு மூளை வேலை செய்வது தான்.''

''ஒரு நாள் கைகளாலும் வேலை செய்வது சோவியத் அரசுக்குத் தேவையாய் இருந்தாலோ?'' என்று மகிழ்வுடன் முறுவலித்தார் லெனின்.

மளமளவென்று சிற்றுண்டியை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வெளியே போனார். காலை குளுகுளுவென்று தூய்மையாக இருந்தது. இளங் காற்று பச்சைப் பசேல் என்றிருந்த இலைகளைச் சிலுப்பியது. நீல வானில் வெண் முகில்கள் மிதந்தன.

கிரெம்ளினில் வழக்கத்துக்கு மாறுக ஆட்கள் நிறைந்து கலகலவென்று இருந்தது. விசாலமான கிரெம்ளின் மைதானத்தில் பயிற்சி மாணவர்கள் அணிவகுத்து நின்றார்கள். இவர்கள் கிரெம்ளினிலேயே தங்கி இராணுவப் பயிற்சி பெறுபவர்கள். மக்கள் கமிஸாரகத்திலும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியிலும் வேலை செய்யும் ஊழியர்களும் அங்கே இருந்தார்கள்.

அன்று மே மாதம் முதல் தேதி.

மே தினக் கொண்டாட்ட ஊர்வலத்துக்குப் பதில் இலவச விருப்பத் தொண்டு புரியும்படி கட்சி மக்களைக் கேட்டுக் கொண்டிருந்தது.

மாஸ்கோ-கஸான் ரயில்வேத் தொழிலாளர்கள் ஓர் ஆண்டுக்கு முன்பு ஒரு சனிக்கிழமை அன்று நாள் வேலை முடிந்த பிறகு வீட்டுக்குப் போகவில்லை. தங்கள் தொழிற் கூடங்களிலேயே தங்கி, நான்கு எஞ்சின்களையும் பதினறு ரயில் பெட்டிகளையும் இலவசமாகச் செப்பனிட்டார்கள். இது தான் முதலாவது ஸுபோத்னிக், அதாவது, சனிக் கிழமையில் நடந்த விருப்பத் தொண்டு. ''மாபெரும் முன் முயற்சி'' என்ற தலைப்பில் இதுபற்றிக் கட்டுரை எழுதினார் லெனின். சம்பளம் பெறுமல், உழைப்பாளிகள் தாமே

விரும்பிச் செய்த இந்த வேலையைக் கம்யூனிஸ முறைத் தொண்டு என்று அவர் அழைத்தார்.

1920ம் ஆண்டு மே தினம் அகில ருஷ்ய விருப்பத் தொண்டு நாள் என அறிவிக்கப்பட்டிருந்தது. விரிந்து பரந்த ருஷ்ய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஜனங்கள் வீதிகளிலோ தொழிற்கூடங்களிலோ பொது உபயோகத் துக்கான ஏதேனும் அவசிய வேலையை ஒருமித்துச் செய் தார்கள்.

கிரெம்ளின் இராணுவப் பயிற்சி மாணவர்கள் தங்கள் பாசறைகளின் அருகிலேயே பீரங்கி அரசனின் பக்கத்தில் அணிவகுத்து நின்றார்கள். இந்த வெண்கல பீரங்கி, இரும்பு மேடைமேல் வைக்கப்பட்டிருக்கிறது. அண்டை யில் அடுக்கப் பட்டுள்ளன இரும்புக் குண்டுகள். இந்த பீரங் கியால் குண்டுகள் சுடப்பட்டதே இல்லை. எல்லோரும் கண்டு வியப்பதற்காகவும் பகைவர்கள் அஞ்சுவதற்காக வும் பண்டைக்கால ஆயுதக் கம்மியர்கள் இதை வார்த்து எடுத்திருந்தார்கள். அது கிரெம்ளினில் என்றென்றும் இருக்குமாறு வைக்கப்பட்டது.

பயிற்சி மாணவர்கள் அணி வகுத்து நின்றதும் பயிற் சித் தலைவர் என்ன செய்ய வேண்டும் என்று விளக்கினர்: கிரெம்ளின் மைதானத்தில் கிடந்த கட்டைகள், பலகை கள், பிற கூளங்கள் ஆகியவற்றை அகற்றிச் சுத்தப்படுத்த வேண்டும். கிரெம்ளினைத் துப்புரவாகச் சீர்படுத்த வேண் டும்.

அந்த நேரத்தில் வந்து சேர்ந்தார் லெனின். பழைய கோட்டும் விளிம்புவைத்த தொப்பியும் அணிந்து கம்பீர மும் ஏதோ உற்சாகக் கிளர்ச்சியும் பொங்க, கண்களில் மகிழ்ச்சி ஒளி வீச, வழக்கம்போல விரைவாக நடந்து அருகே வந்தார் அவர்.

''தங்கள் கீழ் வேலை செய்ய வந்திருக்கிறேன். விருப்பத் தொண்டில் பங்கு கொள்வோருடன் என்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்'' என்று இராணுவ முறைப்படி விரைப்பாக நின்று அறிக்கை செய்து கொண் டார்.

''வலது வரிசையில் சேர்ந்து கொள்ளுங்கள்'' என் றார் கமாண்டர்.

கிரெம்ளின் கோபுர மணிக்கூண்டு வெள்ளிக் கண கணப்புடன் ஒலித்து நேரத்தை அறிவித்தது. பாண்டு வாத்தியங்கள் முழங்கின.

ஆட்கள் சந்தோஷமாக வேலையில் ஈடுபட்டார்கள். வாத்திய இசை களிப்பூட்டியது, வெயில் இதமாக அடித்தது. லெனின் தங்களுடன் வேலை செய்தது பயிற்சி மாணவர்களுக்கு மிகவும் உவகை அளித்தது.

கட்டைகள் கனமானவை. ஒவ்வொரு கட்டையையும் ஆறு ஆறு ஆட்கள் சேர்ந்து தூக்கினர்கள். லெனின் கட்டையின் பருமனை அடிப்புறத்தைத் தூக்க இடைவிடாது முயல்வதை மாணவர்கள் கவனித்தார்கள்.

''தோழர் லெனின், உங்களை இப்படிச் சுமக்க விட எங்களால் முடியாது!'' என்றார்கள்.

''நீங்கள் சுமக்கிறீர்களே. நான் மட்டும் ஏன் கூடாதாம்?'' என்று எதிர்த்தார் லெனின்.

''நீங்கள் போய்விடுங்கள், தோழர் லெனின். நீங்கள் இல்லாமலே நாங்கள் சமாளித்துக் கொள்வோம்'' என்று அவர் பின்னே விரைவாக ஓடியவாறு சொன்னான் ஒரு மாணவன்.

''வேண்டாம், வேண்டாம், என்னை அனுப்பி வைக்கப் பார்க்காதீர்கள். நான் போக மாட்டேன்.''

''உங்களுக்குத்தான் ஐம்பது வயது ஆகப்போகிறதே, விளாதீமிர் இல்யீச்!''

இப்படி வெடுக்கென்று சொல்லிவிட்டுப் பயிற்சி மாணவன் கலக்கம் அடைந்தான். லெனினோடு ரொம்பத் தானே சகஜமாகப் பேசிவிட்டோம் என்று எண்ணினான்— அவர் மக்கள் கமிஸாரவைத் தலைவர் அல்ல, சொந்தச் சகோதரத் தொழிலாளி போல.

லெனின் திரும்பி விரலை ஆட்டி விளையாட்டாக அச்சுறுத்தியவாறு சிரித்துக் கொண்டே சொன்னார்:

''நான் உம்மைவிட வயதில் பெரியவன் என்றால் என்னுடன் வாதாடாதிரும்.''

ஷூஷென்ஸ்கொயே சிறைக் குடியிருப்பில் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுடன் தாம் கொண்டாடிய இன்னொரு மே தினத்தை லெனின் நினைவு கூர்ந்தார். போலீஸ்காரர்

களுக்குத் தெரியாமல் ஒரு செங்கொடி தயாரித்து, மே தினத்தன்று புல்வெளியில் கூடினர்கள் அவர்கள். பின்வரும் பாட்டைப் பாடினர்கள்:

''வந்தது களி நிறைந்த மே தினம்,
அந்தப் புறம் போ, சிந்தை நிழலே!
சிந்து முழங்கட்டும் துணிவு பொங்க!
இந்த நாள் வேலை நிறுத்தம் செய்வோம்!''

சைபீரியச் சிறைக் குடியிருப்பில் அவர்கள் வருங்காலம் பற்றிக் கனவு கண்டார்கள்....

அந்த வருங்காலம் இதோ, எதிரே இருந்தது. மக்கள் விடுதலை அடைந்துவிட்டார்கள், தங்களுக்காக உழைக்கிறார்கள். போர்முனைகளில் செஞ்சேனை தாக்குப் போர் தொடங்கி விட்டது. விரைவில் வெளிநாட்டுத் தலையீட்டாளர்களையும் புரட்சிவிரோதிகளையும் நொறுக்கித் தகர்த்து விடுவோம், இனி என்றும் திரும்ப முடியாதபடி விரட்டி அடித்துவிடுவோம்.

வியர்வையால் நனைந்த சட்டையும் தாமுமாக விருப்பத் தொண்டிலிருந்து வீடு திரும்பினர் லெனின். ஒரு பூட்சின் அடித்தோல் அறுந்துவிட்டது.

''உனக்கு பூட்சுகள் வாங்கிக் கட்டாது'' என்றார் நதேழ்தா கன்ஸ்தன்தினவ்னா.

லெனினுக்குப் புதிய உள்ளுடைகள் எடுத்துவரப் போனார் அவர். லெனினோ, களைப்பும் உளநிறைவும் கொண்டவராய், சமையலறைக் குழாயில் கைகளையும் முகத்தையும் தேய்த்து அலம்பிக் கொண்டார். அவர் தொண்டையைக் கமறித் தலையை ஆட்டிய வேகத்தில் நீர்த் துளிகள் நாற்புறமும் சிதறின.

பின்பு நதேழ்தா கன்ஸ்தன்தினவ்னா லெனினுடைய கோட்டில் சிவப்பு நாடா குத்திவிட்டார். லெனின் கார்ல் மார்க்ஸின் நினைவுச் சின்னத்துக்குக் கடைகால் நாட்டும் விழாவில் கலந்து கொள்ளத் தியத்ரால்னயா சதுக்கம் சென்றார். அங்கே புரட்சி உணர்வு பொங்கச் சொற் பொழிவு ஆற்றினர். அன்றே ''விடுதலை பெற்ற உழைப்புக்கு'' நினைவுச் சின்னம் அமைக்கக் கடைகால் நாட்டப் பட்டது. அங்கும் லெனின் பேசினர்.

மாலையில் மூன்று வெவ்வேறு வட்டாரங்களில் பொதுக் கூட்டங்களில் உரைகள் நிகழ்த்தினர். அப்புறம் தொழிலாளர் மாளிகைக்குப் போனர். 1920ம் ஆண்டு மே மாதம் முதல் தேதியான அன்று மாஸ்கோவில் தொழிலாளர் மாளிகை திறந்துவைக்கப்பட்டது.

அன்று அகில ருஷ்ய விருப்பத் தொண்டில் எல்லோரும் இணக்கமாக வேலை செய்தது லெனினுக்கு மகிழ்ச்சி அளித்தது. புதிய நினைவுச் சின்னம் அவருக்கு உவகை ஊட்டியது. புதிய பண்பாடு அவருக்கு ஆனந்தம் தந்தது.

களைப்பினால் லெனினுடைய கைகளும் கால்களும் உளைந்தன. அதே சமயம் உள்ளத்தில் இன்பம் ஊற்றெடுத்தது.

இளங் கம்யூனிஸ்டுகள் சங்கம்

இளங் கம்யூனிஸ்டுகள் துணிவு மிக்க முன்னணி இளைஞர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மக்கள் நலனுக்காக, ஆபத்து நிறைந்த வேலைக்கு அஞ்சா நெஞ்சர்களான மனிதர்களை அனுப்புவது கட்சிக்கு அவசியம் என்னும் போது முன்னே வருபவர்கள் யார்? எப்போதுமே இளங் கம்யூனிஸ்டுகள்தாம்.

புதிதாகச் சாலைகள் போட வேண்டும். இந்த அழைப்பை முதன் முதல் ஏற்பவர்கள் யார்? இளங் கம்யூனிஸ்டுகள். போர்முனை செல்லவும் இளங் கம்யூனிஸ்டுகள் தயங்குவது இல்லை.

உள்நாட்டுப் போரில் இளங் கம்யூனிஸ்டுகள் ஆயிரமாயிரம் அருஞ் செயல்கள் புரிந்தார்கள். சைபீரியாவிலும் உக்ரேய்னிலும் கிரைமியாவிலும் வோல்காப் பிரதேசத்திலும் கூர்ஸ்க் நகரின் அருகிலும் பெத்ரோகிராதின் நகர்ப் புறங்களிலும் புல்லும் பூச்செடிகளும் மண்டிய பல்லாயிரம் இளங் கம்யூனிஸ்ட் கல்லறைகள் உள்ளன. ஆயிரக் கணக்கான இளங் கம்யூனிஸ்ட் வீரர்களின் கல்லறைகள்....

லெனின் பென்சிலை வைத்தார். மேஜை மேலிருந்த காகிதம் நுண்ணிய வீச்சுள்ள வரிகளால் நிறைந்துவிட்டது. லெனின் தமது பேச்சின் திட்டத்தை அதில் குறித்திருந்தார்.

அன்று இளங் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மூன்றுவது காங்கிரஸில் அவர் பேசுவதாக இருந்தார். ருஷ்ய இளங் கம்யூனிஸ்டுகள் சங்கத்துக்கு இரண்டே வயதுதான் ஆகியிருந்தது. இளங் கம்யூனிஸ்டுகளைப் பற்றி எண்ண லெனினுக்கு இன்பம் உண்டாயிற்று. உற்சாகிகள், விடாப்பிடி உள்ளவர்கள்! தொழிலாளர்கள், ஏழைக் குடியானவர்களின் மக்கள். ''நாங்கள் புரட்சி செய்தோம். ஆனால் கம்யூனிஸச் சமூகத்தைத் தேவையான விதத்தில் அமைத்து முடிக்க எங்களுக்கு வாய்ப்பது சந்தேகமே. இளந் தலைமுறையினர்தாம் அதைக் கட்டி முடிப்பார்கள். முதன்மையாக நீங்கள், இளங் கம்யூனிஸ்டுகளே!''—இவ்வாறு எண்ணமிட்டார் லெனின்.

இதற்குள் இளங் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் காங்கிரஸ் நடக்கும் இடத்தில் கூடினார்கள். விருப்பத் தொண்டை முடித்து விட்டு நேரே அங்கே போனார்கள் அவர்கள். காலை முழுவதும் ரயில் நிலையங்களில் சரக்கு வண்டிகளிலிருந்து சாமான்களை இறக்கினார்கள், விறகைக் கிட்டங்கிகளில் அடுக்கி வைத்தார்கள், வீதிகளைத் துப்புரவு செய்தார்கள். மாஸ்கோ நகரை அழகு படுத்தினார்கள்.

1920ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ந் தேதி குளிராக இருந்தது. வானம் மப்புப் போட்டிருந்தது. திடீரென்று காற்று வீசிற்று, மஞ்சள் பழுப்புக்கள் கிளைகளிலிருந்து படலம் படலமாக உதிர்ந்து காற்றில் சுழன்று சலசலக்கும் மழைபோலத் தரையில் விழுந்தன.

காலையின் குளுமையும் சலசலக்கும் இலைகளும், கைகள் காய்த்துப் போகும்படி செய்த ஒருமித்த வேலையும் இளங் கம்யூனிஸ்டுகளுக்கு மகிழ்வு ஊட்டியது. எல்லாவற்றையும் விட, இப்போது காங்கிரஸில் லெனின் பேசுவார் என்பது அவர்களுக்கு உவகை அளித்தது.

மாலயா திமீத்ரவ்கா வீதியில் 6ம் நம்பர் வீட்டில் காங்கிரஸ் நடப்பதாக இருந்தது. இளங் கம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் ஓட்டமும் நடையுமாக அங்கே போய்ச் சேர்ந்தார்கள். இப்போது இந்தக் கட்டிடத்தில் லெனின் இளங் கம்யூனிஸ்டுகள் சங்க நாடக மன்றம் உள்ளது. அப்போது நாடக மன்றம் இருக்கவில்லை. அரங்கே இருக்கவில்லை. அரங்குக்குப் பதில் திரை அற்ற, வண்ணம் பூசாத மேடை

மட்டுமே இருந்தது. மேடைமேல் நீண்ட மேஜையும் பேச்சாளர் பீடமும் அமைத்திருந்தன. சிவப்புத் துணிகளில் போஸ்டர்களும் கோஷங்களும் எழுதப்பட்டிருந்தன.

ஒரு போஸ்டரில் செம்படைவீரன் ஒருவன் விரலால் சுட்டியவாறு, ''நீ விருப்பத் தொண்டனாகப் படையில் சேர்ந்து விட்டாயா?'' என்று கேட்பது போலப் படம் தீட்டப் பட்டிருந்தது.

பல இளங் கம்யூனிஸ்டுகள் போர்முனையிலிருந்து நேரே வந்திருந்தார்கள். பல்வேறு நகரங்களிலும் கிராமங்களிலுமிருந்து வந்திருந்த இந்த இளங் கம்யூனிஸ்டுகள் பள்ளி மாணவர்கள் அல்ல. சிலருக்கு எழுதப் படிக்கத் தெரியும், சிலருக்குத் தெரியாது, சிலரோ புத்தகத்தைத் தொட்டுக்கூடப் பார்த்தது கிடையாது. ஆனால் போர் முனைகளில் புரட்சி விரோதிகளின் கும்பல்களை இவர்கள் தயா தாட்சிணியம் இன்றித் தாக்கி நொறுக்கினர்கள். குலாக்குகள் பதுக்கி வைத்திருந்த தானியத்தை அஞ்சாமல் ஜப்தி செய்தார்கள். சோவியத் ஆட்சிக்காக எந்த ஆபத்தையும் மேற்கொள்ளத் தயாராய் இருந்தார்கள்.

இளங் கம்யூனிஸ்டுகளின் இதயங்கள் கிளர்ச்சிப் பெருக்கால் அடித்துக் கொண்டன. இதோ லெனின் வருவார். அவர் பேச்சைக் கேட்கலாம்!

இராணுவ மேல்கோட்டுக்களும் தோல் கோட்டுக்களும் அணிந்து, தோளோடு தோள் இடிக்கும்படி நெருக்கமாக பெஞ்சுகளில் அமர்ந்து லெனின் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள் அவர்கள். ஸ்வெர்திலோவ் அணிந்தது போன்ற கறுப்புத் தோல் கோட்டு அணிவது அந்தக் காலத்தில் இளங் கம்யூனிஸ்டுகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. இராணுவ மேல்கோட்டும்—வியர்வையும் வெடிமருந்தும் கலந்த நெடி வீசும் மேல்கோட்டும்—செந்நட்சத்திரம் பொறித்த தொப்பியும்கூட நல்ல உடைதான்.

லெனின் என்ன சொல்லப் போகிறார் என்று ஊகித்தார்கள் பிரதிநிதிகள். போரைப்பற்றிப் பேசுவார் என்று எதிர்பார்த்தார்கள். போருக்கு, வீரச் செயல்களுக்கு, அருஞ்செயல்கள் ஆற்றுவதற்கு அழைப்பார் என்று நினைத்தார்கள். செஞ்சேனை புரட்சிவிரோதி வெண்படையினரை

விரட்டியடித்தது, ஆயினும் உள்நாட்டுப் போர் இன்னும் முடியவில்லை.

''சோவியத் ஆட்சியைக் காத்திடவே''

என்ற பாட்டு ஹாலின் ஒருமூலையிலிருந்து தொடங்கியது. பின்பு ஹால் முழுவதும் பாட்டை முழங்கியது:

''துணிவுடன் சென்றே போரிடுவோம்.
ஆவியும் உடலும் நல்கிடுவோம்
ஆட்சி இதை நிலைநாட்டிடவே!''

பின்பு ஹாலில் அமைதி நிலவியது. வழக்கமாகக் கூட்டங்களில் நடப்பது போலவே தலைமைக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைமைக் குழுவுக்கான மேஜைமேல் சிவப்புத் துணி விரிக்கப்பட்டிருந்தது. தோழர்கள் இடங்களில் அமர்ந்தார்கள். மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவருடைய படங்களும் சுவற்றில் தொங்கின. இரு பெரியோரும் இளங் கம்யூனிஸ்டுகளை நோக்கினர்கள்.

''லெனின்!'' என்ற முழக்கம் திடீரென்று எழுந்தது. இளங் கம்யூனிஸ்டுகள் துள்ளி எழுந்திருந்தார்கள், கைகளைத் தட்டினர்கள். லெனின்மேல் இளங் கம்யூனிஸ்டுகளுக்கு அளவில்லாத அன்பு, தன்னலமற்ற ஈடுபாடு.

கறுப்பு வெல்வெட் காலர் வைத்த மேல்கோட்டைக் கழற்றி நாற்காலிமேல் ஒழுங்காக மடித்துப் போட்டார் லெனின். தலைமைக் குழுத் தோழர்களுடன் கை குலுக்கி முகமன் கூறினர். அவருடைய ஒவ்வொரு சைகையும் புன்னகையும், அவர் செய்தவையும் அவற்றைச் செய்த தோரணையும், அவருடைய நடத்தை முழுவதுமே இளங் கம்யூனிஸ்டுகளுக்குப் பிடித்திருந்தது. அவர்களுக்கு அவர் நல்லவராக, அருமையானவராக, இனியவராகத் தோன்றினர். பொங்கிய உள்ளக் கிளர்ச்சியாலும் அடக்க முடியாத மகிழ்ச்சியாலும் உற்சாகிகளான இந்த இளங் கம்யூனிஸ்டுகள் பலருடைய விழிகளில் கண்ணீர் துளித்தது.

லெனின் மேடை விளிம்புக்கு வந்து, உள்கோட்டுப் பையிலிருந்து பைக் கடிகாரத்தை எடுத்துப் பார்த்தார். கை தட்டலை நிறுத்துங்கள், வேலை தொடங்குவோம் என்று சொல்வதுபோல் இருந்தது அந்தச் செய்கை.

இதனால் இளங் கம்யூனிஸ்டுகளின் மதிப்பில் அவர் இன்னும் உயர்ந்துவிட்டார்.

''நண்பர்களே, ஒரு நிமிடங்கூடத் தாமதிக்காமல், ஒருவர் பாக்கியின்றி எல்லோரும் போர்முனைக்குப் போங்கள்!'' என்று அவர் சொல்லியிருந்தால் அவர்கள் எல்லோருமே மறு பேச்சின்றிப் போர்முனைக்குப் போயிருப்பார்கள்.

லெனின் சொன்னதோ வேறு. அதைக் கேட்டு இளங் கம்யூனிஸ்டுகள் முதலில் திகைத்தார்கள். வியப்பும் குழப்பமும் அடைந்தார்கள். ஆரம்பத்தில் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

லெனின் நிலைத்து நிற்காமல் மேடை ஓரமாக நடந்த வாறே பேசினார். இடமுடையாக இருந்தது. தலைமைக் குழுவினரில் பெரியவர்கள் நாற்காலிகளில் உட்கார்ந் திருந்தார்கள். நாற்காலிகள் போதவில்லை. தலைமைக் குழுவைச் சேர்ந்த இளங் கம்யூனிஸ்டுகள் வெகு நேரம் யோசனை செய்யாமல் மேடைத் தரையிலேயே உட்கார்ந்து விட்டார்கள். லெனின் அவர்களுக்கு நடுவே ஜாக்கிரதை யாக அடிவைத்து நடந்தார். நடந்தபடியே பேசினார்.

அவர் என்ன சொன்னார் தெரியுமா? தற்போது இளங் கம்யூனிஸ்டுகளின் கடமை கற்றுக்கொள்வதே என்றார்.

இளங் கம்யூனிஸ்டுகள் வியந்தார்கள். ஆர்வத்துடன் உற்றுக் கேட்கும் இளைஞர்களின் முகங்களில் ஆச்சரியமும் குழப்பமும் தென்பட்டதை லெனின் கவனித்தார். தமது கருத்தை முடிந்த வரை புரியும் விதத்தில் விளக்க அவர் முயன்றார். விரைவில் நாம் உள்நாட்டுப் போரை முடித்து விடுவோம். எதிரிகளை விரட்டிவிடுவோம். அப்புறம்? கட்டு மானம் தொடங்க வேண்டும். தொழிற்சாலைகளும் ஆலை களும் டிராக்டர்களும் விமானங்களும் இயந்திரங்களும் நிறுவ வேண்டும். நாட்டை மின்சாரமயம் ஆக்க வேண் டும். மின்சாரம் என்பது என்ன, அறிவீர்களா, இளங் கம்யூனிஸ்ட் தோழர்களே?

அறிய வேண்டும். நிறைய அறிய வேண்டும்!

இயல் அறிவு இல்லாமல் கம்யூனிசச் சமுதாயத்தைக் கட்டி அமைப்பது நடவாது என்று இளங் கம்யூனிஸ்டு களுக்கு விவரமாகவும் தெளிவாகவும் எடுத்து உரைத் தார் லெனின்.

உழைக்கவேண்டும். அறியவேண்டும். ''தொழிலாளர் களுடனும் குடியானவர்களுடனும் சேர்ந்து உழைப்ப தன் மூலமே ஒருவன் உண்மைக் கம்யூனிஸ்ட் ஆக முடி யும்.'' கம்யூனிஸத்தைக் கற்றுக் கொள்வது என்றால், பழைய சமூக அமைப்புக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்துடன் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலையும் இணைத்துக் கொள்வதும் புதிய, கம்யூனிஸச் சமுதாயத்தைக் கட்டி அமைப்பதுமே என்றார் லெனின்.

கனவுகளும் செயல்களும்

லெனினுடைய அலுவல் அறையில் உட்கார்ந்திருந் தார் பிரபல ஆங்கில எழுத்தாளர் ஹெர்பர்ட் வெல்ஸ். ''உலகங்களின் போர்'', ''கால இயந்திரம்'', ''புலப் படா மனிதன்'' போன்ற வெல்ஸின் நவீனங்களைப் படிக் காத பள்ளி மாணவன் எவனும் அனேகமாக இருக்க மாட் டான். வியப்பூட்டும் கற்பனை செறிந்த வெல்ஸின் நவீனங் கள் உலகம் முழுவதிலும் பெயர் பெற்றிருந்தன.

வெல்ஸ் முதலாளித்துவச் சமூக வாழ்க்கையின் குறை களைக் கண்டித்து விமர்சித்தார், விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். அவ ருடன் அறிமுகம் செய்து கொள்ள லெனினுக்கு ஆர்வம் உண்டாயிற்று. நேர் வகிடு எடுத்த முடியும் நறுக்கு மீசை யும், கணிசமாகப் பருத்த சரீரமும் அகன்ற தோள்களும் கொண்ட அந்த ஆங்கிலேயக் கனவானை நகை மிளிரும் விழிகளுடன் பார்த்தார் லெனின். அவர் நல்லுடை அணிந் திருந்தார். பளிச்சிடும் வெள்ளைச் சட்டையின் முடமுடப் பான கழுத்துப்பட்டை நன்கு மழித்த உருண்டை மோவா யைத் தாங்கிக் கொண்டிருந்தது. வறுமை என்ன என்றே புகழ்பெற்ற இந்த எழுத்தாளர் அறியார் என்பது பார்க்கும்போதே தெரிந்தது.

சோவியத் மக்களோ, பட்டினியாலும் குளிராலும் நலிந்திருந்தார்கள். சட்டைகள் எங்குமே வாங்க முடிய வில்லை. கடைகள் வெறுமையாய் இருந்தன.

ருஷ்யாவில் தம் அனுபவங்களை வெல்ஸ் லெனினுக்கு விவரித்தார். அவர் பிரிட்டனிலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்வந்தார். பெத்ரோகிராதையும் மாஸ்கோவையும் அலுப்பு சலிப்பு இல்லாமல் சுற்றிப் பார்த்தார். தொழிற்சாலைகளுக்குப் போனார். பாதிக்கு மேல் தொழிற் சாலைகள் வேலை செய்யாமல் நின்றன. இயந்திரங்கள் இயங்கவில்லை. வெல்ஸ் பள்ளிகளுக்குச் சென்றார். பள்ளி மாணவர்களுக்கு ஆளுக்கு ஒரு துண்டு ரொட்டி காலைச் சிற்றுண்டியாகக் கொடுக்கப்பட்டது. பாடபுத்தகங்கள் போதவில்லை. மூன்று நான்கு மாணவர்கள் சேர்ந்து ஒரே புத்தகத்தை வைத்துக் கொண்டு படித்தார்கள்.

வெல்ஸ் பார்வையிட்டார், கேள்விகள் கேட்டார், ஜனங்கள் பேசுவதைச் செவி மடுத்தார். அவருக்கு ஒரே மலைப்பாய் இருந்தது. சோவியத் நாடு தாங்க முடியாத துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தது. சீரழிவு, பஞ்சம். எரி பொருள்கள் இல்லை. விளக்கு வசதிகள் இல்லை. ருஷ்யா இருளில் மூழ்கியிருந்தது.

இவ்வாறு லெனினிடம் சொன்னார் வெல்ஸ்.

லெனின் முகத்திலிருந்த புன்னகை கொஞ்சங் கொஞ்சமாக மறைந்தது. இல்லை, பிரபல ஆங்கில எழுத்தாளர்மேல் அவர் கோபம் கொள்ளவில்லை. வெளிப்படையான பேச்சு லெனினுக்குப் பிடிக்கும். நினைப்பதை அப்படியே சொல்லி விட வேண்டும் என்பார் அவர். வெல்ஸ் உள்ளதையே சொன்னார்: ருஷ்யாவில் சீரழிவு தாண்டவம் ஆடத்தான் செய்தது. ருஷ்யாவில் இந்தச் சீரழிவை விளைத்தவர்கள் போல்ஷிவிக்குகள் அல்ல, ஜார் அரசாங்கமும் உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளுமே என்றார் வெல்ஸ். அதுவும் நியாயமான பேச்சு. அவர்களே ருஷ்யாவை யுத்தத்தில் இழுத்துவிட்டார்கள். ஆனால் போல்ஷிவிக்குகள் ருஷ்யாவை வறுமையிலும் போரிலுமிருந்து மீட்டு அதற்குப் புத்துயிர் அளிப்பார்கள் என்பதை வெல்ஸ் நம்பவில்லை.

லெனின் மேஜையின் மறுபுறமிருந்து வெல்ஸின் பக்கம் குனிந்து, தந்திரப் புன்னகை விழிகளில் சுடரக் கேட்டார்:

''ருஷ்யாவுக்குப் புத்துயிர் அளிக்க போல்ஷிவிக்குகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்

கள் எண்ணிப் பார்த்தீர்களா? அறிய விரும்புகிறீர் களா?''

வெல்ஸ் கற்பனையாளர், புலவர். எனவேதான் தமது திட்டத்தை அவருக்குத் தெரிவிக்க லெனின் முடிவு செய் தார். அது மாபெரும் திட்டம், பிரமாண்டமானது!

இளமைப் பருவம் முதலே லெனினின் உற்ற தோழ ராக விளங்கினர் கிளேப் க்ரிழிழனேவ்ஸ்கீ. அவர் கம்யூ னிஸ்ட், பெரிய பொறி-இயல் அறிஞர். அதோடு கவியும் கூட. ஜார் ஆட்சிக் காலத்திலேயே அவர் போலிஷ் புரட்சிப் பாட்டுக்களை ருஷ்ய மொழியில் பெயர்த்தார். முன்பும் அவை பாடப்பட்டன. இப்போதோ, நாடு முழு வதுமே அவற்றைப் பாடியது.

''துணிவும் பெருமையும் பொங்கிடவே
தூக்கிப் பிடிப்போம் போராட்ட
மணிக்கொடி தன்னைத் தொழிலாளர்
மாண்புயர் குறிக்கோளுக்காக.''

லெனின் தமது திட்டத்தைப்பற்றிப் பொறி-இயலா ளர் க்ரிழிழனேவ்ஸ்கீயுடன் எத்தனையோ மாலைகளில் விவா தித்திருந்தார். இந்தத் திட்டத்தை உருவாக்கவும் பரிசீ லிக்கவும் நாட்டிலேயே மிகப் பெரிய அனுபவசாலிகளான இரு நூறு விஞ்ஞானிகளை லெனின் அழைத்திருந்தார்.

இந்தத் திட்டத்தையே இப்போது வெல்ஸுக்கு விவரித்தார் அவர். வெல்ஸுக்கு ருஷ்ய மொழி தெரியாது. ஆனால் லெனின் ஆங்கிலேயன் போலவே ஆங்கில மொழி பேசுவார். அவருடைய ஆங்கில மொழி தங்கு தடையின்றி, வளமாகப் பெருகியதைக் கண்டு வெல்ஸே வியந்தார். அவர் வெளியிட்ட கருத்துக்களோ, மின்னல் போன்று ஒளி வீசின. மிகத் துணிகரமான கற்பனையைக் காட்டி லும் துணிவு மிக்கவை அவை. லெனினுடைய திட்டம் வெல்ஸை மலைக்க வைத்தது. ருஷ்யாவை மின்சாரமயமாக் கும் திட்டம்! எல்லையற்ற சமவெளியும் காடுகளும். அற்பக் குச்சிப் பந்தத்தின் வெளிச்சத்தில் வாழ்ந்த கிராமங் கள். வெறிச்சோடிய நகரங்கள். தொழிற்சாலைகள் ஸ்தம் பித்திருந்தன. வர்த்தகம் முடங்கிக் கிடந்தது. இருப்புப் பாதைகள் உடைந்து தகர்ந்திருந்தன....

''இத்தகைய கோரமான நிலைமைகளில் உங்கள் விசாலமான நாடு முழுவதிலும் மின்சார வசதி ஏற்படுத்தலாம் என்று கனவு காண்கிறீர்களா?''

''ஆம். நாங்கள் மின் நிலையங்கள் அமைப்போம். தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்குவோம். மின்சார ரயில்கள் விடுவோம்.''

''அற்புத மனிதர்!'' கற்பனைக் கனவு காணும் கிரெம்ளின் வாசி'' என்று லெனின் கூறியவற்றைக் கேட்கையில் எண்ணமிட்டார் வெல்ஸ். லெனினுடைய திட்டம் அவருக்கு நடைமுறைச் சாத்தியம் அற்ற வெறுங்கனவாகப் பட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பின் பல்ஷோய் தியேட்டரில் சோவியத்துக்களின் எட்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் கூடியது. இது நடந்தது 1920 டிசெம்பர் மாதம்.

ருஷ்யச் சட்டைகளும் இராணுவச் சட்டைகளும் நைந்த கோட்டுக்களும் நீள் நமுதா ஜோடுகளும் அணிந்த மனிதர்கள் வெல்வெட் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள். உறுதியும் கலங்காமையும் அவர்கள் முகங்களில் ஒளி வீசின. சோவியத் ஆட்சி அவர்கள் வடிவில் அமர்ந்திருந்தது. புதிய சட்டங்களையும் வருங்கால வாழ்வையும் பொருளாதாரத்தையும் பற்றிய திட்டத்தையும் உறுதிப்படுத்தும் பொருட்டு அவர்கள் கூடியிருந்தார்கள்.

சோவியத் நாட்டை மின்சாரமயமாக்கும் திட்டத்தின் பெரிய வரைபடம் மேடைமேல் வைக்கப்பட்டிருந்தது. இந்த வரைபடம் தயாரிப்பதில் லெனின் பெருத்த அக்கறை எடுத்துக் கொண்டார். கிரிழிழனேவ்ஸ்கீக்குப் பல முறை போன் செய்தார், படத்தை உரிய நேரத்தில் தயாரிக்கும்படி வரைவாளரையும் மின் இணைப்பாளர்களையும் அவசரப்படுத்தினர். மின்சாரமயமாக்கும் நமது திட்டம் இது, ருஷ்யாவை நாம் இவ்வாறு சீரமைக்கப் போகிறோம் என்று பிரதிநிதிகள் கண்கூடாகக் காண வேண்டும் என்பது லெனினது விருப்பம். ''இன்னும் பத்து ஆண்டுகளுக்குப்பின் திரும்பி வாருங்கள், வெல்ஸ், பாருங்கள் அப்போது....''

உயரம் அற்ற மேனியும் கரிய விழிகளும் கொண்ட பொறி இயல் அறிஞர் கிரிழிழஞேவ்ஸ்கீ மேடைமேல் நின்றார். வழக்கமாக உற்சாகமும் ஊக்கமுமாக இருக்கும் அவர் இப்போது அமைதியாக இருந்தார். பதற்றம் கொண்டிருந்தார் அவர்.

''சோவியத் ஆட்சி அதிகாரமும் நாடு முழுவதும் மின்சாரமயம் ஆக்கப்படுவதும் சேர்ந்த கூட்டுத் தொகையே கம்யூனிஸம்'' என்று முந்திய நாள் இந்த மேடையில் லெனின் சொல்லியிருந்தார். இது எல்லாம் எப்படிச் செயலாக்கப்படும் என்று விளக்கும் பொறுப்பு இன்று பொறி இயல் அறிஞர் கிரிழிழஞேவ்ஸ்கீமீது சார்ந்திருந்தது. அவர் பதற்றப்பட்டார். அவர் கையில் இருந்த சுட்டுக்கோல் சற்றே நடுங்கியது. அவர் சுட்டுக்கோலை உயர்த்தி வரைபடத்தைத் தொட்டார். ஹாலில் விளக்குகள் அணைந்தன. வரைபடத்தில் சுட்டுக் கோல் பட்ட இடத்தில் விளக்கு எரிந்தது. ஒரு விளக்கு, இரண்டாவது, மூன்றுவது. மின் ஆற்றல் நிலையங்கள் எங்கே நிருமிக்கப் படும், எப்படி நிறுவப்படும், சோவியத் இயந்திரத் தொழில் துறை எவ்வாறு புத்துயிர் பெற்று எழும், சோவியத் நாட்டின் வயல்கள் எப்படிப் புது வளம் கொழிக்கும் என்று விவரித்தார் கிரிழிழஞேவ்ஸ்கீ. மின் ஆற்றல் நிலையங்களைக் காட்டும் விளக்குகள் எல்லாம் எரிந்தன. வரைபடம் அற்புதமாக, மாயக் காட்சிபோல வனப்பு வாய்ந்து இலகிற்று. இப்போது கிரிழிழஞேவ்ஸ்கீ முன்னிலும் அதிக உறுதியும் வன்மையும் தொனித்த குரலில் பேசினார்.

தோழரின் அகத் தூண்டல் ஒளிரும் முகத்தையும் கூடியிருந்தோரின் ஆழ்ந்த, எல்லையற்ற கவனத்தையும் வருங்கால வைகறை போலச் சுடர்ந்த வரைபட விளக்குகளையும் லெனின் கண்டார். தாம் உயிரைக் கொடுத்து உருவாக்கியுள்ள இந்தத் திட்டம் எல்லாப் பிரதிநிதிகளுடையவும் விழைவுக்கு உரியதாகவும் செயலாகவும் விளங்கும் என்று அறிந்து கொண்டார். மக்களும் அதைத் தங்கள் விழைவுக்கு உரிய செயலாக ஏற்பார்கள். அவர் தனியார் அல்ல. சோவியத் மக்களும் தோழர்களும் அவருடன் இருக்கிறார்கள்.

கொடூரமான ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தொன்றும் ஆண்டு

''போர் முனைகளில் அமைதி நிலவுகிறது'' என்ற புரட்சி-இராணுவக் குழுவின் இறுதிச் செய்தி அறிக்கை, கடைசியில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதாம் ஆண்டு டிசெம்பர் மாதம் **பிராவ்தா** பத்திரிகையில் வெளியாயிற்று. செஞ்சேனை வெளிநாட்டுத் தலையீட்டாளர்களை அடித்து விரட்டி விட்டது. வெண்படைக் கும்பல்களை நொறுக்கி முறியடித்து விட்டது. சோவியத் ஆட்சி தூர கிழக்குப் பிரதேசங்களை மட்டுமே இன்னும் எட்டவில்லை. சிறிது காலத்தில் அங்கும் அது எட்டிவிடும், கட்டாயமாக.

அநேகமாக நாடு முழுவதிலும் போர் முடிந்துவிட்டது. இப்போது போர்க்காலக் கம்யூனிஸம் வாழ்க்கைக்குப் பொருந்தவில்லை. சமாதான காலத்துக்கு ஏற்ற புதிய கொள்கையை லெனின் சிந்தித்து உருவாக்கினர்.

இதற்குள் சோவியத் நாட்டில் புகுந்தது பயங்கரமான பெரு விபத்து.

குளிர் காலத்தில் வெண்பனியே பெய்யவில்லை. வறண்ட கூதல் காற்று வெண்பனி மூடாத நிலத்தைக் குளிரால் உறையச் செய்தது. அடுத்த வசந்தத்தில் கிளம்பிய முளைகள் நொய்ந்திருந்தன. நலிந்த முளைக் கருக்கள் மழையை ஆர்வத்துடன் எதிர்பார்த்தன. ஆனால் வீண். வசந்தம் முழுவதும், பின்பு கோடை பூராவும் வெயில் பொசுக்கியது. வானில் மேகங்களே தென்படவில்லை. வெப்பக்காற்று வாடிய முளைச் செடிகளின் எஞ்சிய சாற்றையும் வறட்டிவிட்டது. வெக்கையால் தரை பாறையாய் இறுகிப் போயிற்று. வோல்காப் பிரதேசத்தில் வயல்கள் பாழடைந்தன. வறட்சி கிரைமியாவையும் தெற்கு உரால் பகுதியையும் தாக்கியது.

பட்டினிச் சாவு லட்சோப லட்சம் மக்களுக்கு எதிர் நின்றது.

லெனின் மக்கள் கமிஸாரகத்துக்கு வந்தார். கூட்டம் குறித்த நேரத்தில் தொடங்கியது. அன்றைய நிகழ்ச்சி நிரலில் இருந்தது பட்டினி கிடப்போருக்கு உதவுவது பற்றிய பிரச்சினை. லெனின் செயல்களுக்கு வழி காட்டினர்,

எல்லாவற்றையும் இயக்கி நடத்தினர், உடனடியாக, தீர் மானமாகச் செயல்படும்படி கோரினர். போர்க் காலத்தில் போல.

சோவியத் அரசாங்கம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. எல்லாப் பிரதேசங்களுக்கும் நகரங்களுக்கும் தந்திகள் பறந்தன: ''தோழர்களே, உள்ளவற்றை முடிந்த வரை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்!''

அசாதாரணக் கமிஷன் தலைவர் த்ஸெர்ழீன்ஸ்கீ வோல்காப் பிரதேசத்தினருக்காகத் தானியம் சேகரிக்க சைபீரியா சென்றார்.

உக்ரேய்னுவில் விளைச்சல் நன்றாய் இருந்தது. லெனின் உக்ரேய்னு வாசிகளுக்குக் கடிதம் எழுதினர்.

''உதவி விரைவாகத் தேவை. உதவி ஏராளமாகத் தேவை'' என்று எழுதினர் அவர்.

வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு உதவி கோரிச் செய்தி விடுத்தார்.

சோவியத் அரசாங்கம் பஞ்சத்தில் அடிபட்டவர் களுக்கு உதவும் கமிஷன் ஒன்றை நியமித்தது. உதவிக் கமிஷன் தலைவர் கலீனின். லெனின் அவரை நம்பினர். கலீனினின் குடியானவருக்கு உரிய நுண்ணறிவையும் பாட்டாளிக்கு உரிய உள்ளுணர்வையும் அவர் நம்பினர்.

''அக்டோபர் புரட்சி'' என்ற பெயருள்ள விசேஷ ரயிலில் கலீனின் வோல்காப் பிரதேசம் சென்றார்.

''குழந்தைகளைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். சிறப்பாகக் குழந்தைகளைப் பற்றி. தயவு செய்து!'' என்றார் லெனின்.

லெனினுடைய குரலில் ஆழ்ந்த துயரம் பொங்கிய தைக் கலீனின் உணர்ந்தார். தமது குழப்பத்தை மறைப் பதற்காகத் தொண்டையைக் கமறிக் கொண்டார். தாடி யைத் தடவினர்.

''சக்தியை எல்லாம் ஈடுபடுத்துவோம். சாத்திய மானது எல்லாவற்றையும் செய்வோம்'' என்றார்.

''சாத்தியமானதற்கும் மேலாகவே!'' என்று கூறினர் லெனின்.

இரவு ஆகிவிட்டது. மக்கள் கமிஸாரவைத் தலைவரின் அலுவல் அறையில் மங்கலான விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தீர்வு காணப்பட்ட விவகாரங்கள் அடங்கிய, கையெழுத்தான காகிதங்களின் கட்டை ஒரு புறம் வைத்தார் லெனின்.

தலை வலித்தது. பொறுக்க முடியாதபடி வலித்தது. லெனின் வலியை முயன்று சகித்துக் கொண்டார். நோய்ப்படக் கூடாது, ஒருபோதும் கூடாது. ஆனால் இப்போது ஒருவரும் பார்க்கவில்லை. எனவே அவர் நெற்றியை உள்ளங்கையால் தாங்கிக் கொண்டார். பஞ்சம் பற்றிய சிந்தனை அவர் மூளையைக் குடைந்தது.

''சாத்தியமானதற்கும் மேலாகவே!'' என்று எண்ணமிட்டார் லெனின்.

சோவியத் அரசாங்கம் சாத்தியமானதற்கும் மேலாகவே செய்திருந்தது. சோவியத் பாங்கிகளில் தங்கம் குறைவாகவே இருந்தது. ஆயினும் பொசுங்கிப் போன வயல்களுக்காக வெளிநாடுகளில் விதைகள் வாங்கும் பொருட்டு ஒரு கோடி இருபது லட்சம் தங்க ரூபிள்கள் அளிக்குமாறு உத்தரவில் கையெழுத்திட்டார் லெனின்.

தொழிலாளர்கள் மக்கள் கமிஸாரகத்துக்குக் கடிதம் எழுதினர்கள்:

''தோழர் லெனின்! நம் ருஷ்யாவில் ஆயிரமாயிரம் சர்ச்சுகள் இருக்கின்றன. ஒவ்வொரு சர்ச்சிலும் தங்கச் சிலுவைகளும் விலைமிக்க மற்றச் சாமான்களும் உள்ளன. அவற்றை எடுத்துப் பட்டினி கிடப்பவர்களுக்கு உணவு வழங்கச் செலவிட்டால் என்ன?''

பலே ஆட்கள் தொழிலாளர்கள்! அவர்கள் சொன்ன யோசனையைக் கடைப்பிடித்தார் லெனின்.

டெலிபோன் மணி அடித்தது. வோல்காப் பிரதேசத்திலிருந்து கலீனின் பேசினர். லெனின் கலவரத்துடன் குழாயைக் காதருகே வைத்துக் கொண்டார்.

''நிலைமை எப்படி, தோழர் கலீனின்.''

''மோசம், விளாதிமிர் இல்யீச்.''

உயிரற்ற வயல்கள். கிராமங்களும் சிற்றூர்களும் மங்கிய மூட்டத்தில் மறைந்திருந்தன. பசு மாடுகளின்

மாவென்ற அலறல் கேட்கவில்லை. ஒன்று அவை அறுத்துத் தின்னப்பட்டு விட்டன அல்லது தீனி இல்லாமையால் மடிந்துபோயின. இந்தப் பாழும் கோடையில் காளான்கள், காட்டுப் பழங்கள் கூட விளையவில்லை. ஜனங்கள் புல்லையும் இலைகளையும் வேக வைத்து உண்டார்கள். பலவீனம் காரணமாக நிலை குலைந்து விழுந்தார்கள். பிளேக் நோயில் போலக் குடும்பங்கள் ஒருவர் பாக்கியின்றி மடிந்தன.

டெலிபோன் பேச்சு முடிந்தபிறகு வெகு நேரம் வரை லெனின் நாற்காலியில் சாய்ந்து அசையாமல் உட்கார்ந்திருந்தார். இது லெனினின் வழக்கத்துக்கு மாறான செய்கை.

பஞ்சப் பிரதேசங்களிலிருந்து குழந்தைகளை வெளியே கொண்டு செல்ல உதவிக் கமிஷன் ஏற்பாடு செய்தது மிகவும் சரி. குழந்தைகள் நிறைந்த ரயில் பெட்டிகள் ஒரே நிசப்தமாயிருந்தன. சந்தடியே இல்லாமல் இருந்தன. இது பயங்கரமாய் இருந்தது.

பஞ்சப் பிரதேசங்களிலிருந்து ரயில்கள் பல்வேறு நகரங்களுக்குச் சென்றன. மாஸ்கோ சுவாஷ் பிரதேசத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அடைக்கலம் தந்தது. முன்னாள் பிரபுக்கள், முதலாளிகளின் மாளிகைகளில் அனைதச் சுவாஷ் இனக் குழந்தைகளுக்காக அகதி இல்லங்கள் திறக்கப்பட்டன.

நள்ளிரவு ஆகிவிட்டது. லெனின் ஓசைப்படுத்தாமல் வீட்டுக்குள் புகுந்தார். எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சகோதரி மரீயா உறங்கவில்லை. காத்திருந்தார். லெனினைச் சமையல் அறைக்கு அழைத்துச் சென்றார்.

''நீ உடம்பைக் கவனித்துக் கொள்வதே கிடையாது, விளாதீமிர். சூடாகத் தேநீராவது சாப்பிடு. நதேழ்தா வேலையிலிருந்து செத்துச் சாவடைந்து திரும்பியவள், அப்படியே படுத்துக் கொண்டாள்.''

மேஜைமேல் மூட்டைப் பார்சல் இருந்ததை லெனின் கண்டார். தாம்போவ் பிரதேசக் குடியானவர்கள் வாட்டிய இறைச்சியும் கொழுப்பும் அனுப்பி இருந்தார்கள். ''எங்கள் கிராமத்துப் பண்டத்தை ருசி பாருங்கள், விளா

தீமிர் இல்யீச். உடம்பை வலுப்படுத்திக் கொள்ளுங்கள்.''

''விளாதீமிர், மக்கள் அனுப்பும் பரிசுப் பண்டங்களை நீ ஏற்றுக் கொள்வதே இல்லை. எனக்கும் நதேழ்தாவுக்கும் உன் செயல் முற்றிலும் சம்மதமே. ஆனாலும் விளாதீமிர்.... உன் முகத்தில் ஒரே களைப்பும் சோர்வும் காணப்படுகின்றனவே'' என்று சொல்லத் தொடங்கினார் மரீயா.

லெனின் சகோதரியை நோக்கிப் புன்னகை செய்தார். அருமை மரீயா! லெனின் தங்கையை நேசித்தார். 1887ல் அண்ணன் அலெக்ஸாந்தருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட போது மரீயா அறியாச் சிறுமி. நகரம் முழுவதும் உல்யானவ் குடும்பத்தாரிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டது. அப்பாவின் தோழர் யாக்கவ்லெவ் அவர்களைக் கைவிடவில்லை. அவர் சுவாஷ் இனத்தவர். சுவாஷ் அஹோத்னிக்கவும் அவர்களை ஆபத்தில் விட்டுப் போய் விடவில்லை. அவர்களுக்கு நன்றி.

''நாம் இதை என்ன செய்யலாம் தெரியுமா?'' என்று மூட்டையைத் தட்டியவாறு கேட்டார் லெனின். ''சுவாஷ் இனக் குழந்தைகள் மாஸ்கோவுக்கு வந்திருக்கிறார்கள். சுவாஷ் குழந்தைகள் இல்லத்துக்கு இதை அனுப்பி வைப்போம். உனக்குச் சம்மதந்தானே, மரீயா?''

மரீயா இல்யீனிச்ன சகோதரரை வைத்த கண் வாங்காமல் பார்த்தார். வெளிறிச் சோர்ந்து காணப்பட்டார் லெனின். சகோதரியின் நெஞ்சு ஏங்கிச் சாம்பியது.

''மிகவும் பலவீனமான குழந்தைகளுக்குக் கொடுக்கும் படி கேட்டுக் கொள்வோம்'' என்றார் லெனின்.

மரீயா இல்யீனிச்ன தலையை ஆட்டி இசைவு தெரிவித்தார்.

லெனினின் தலை முன்போலவே வலித்தது. ஆயினும் அவர் குதூகலம் அடைந்தார். தாம்போவ் பார்சல் கடலில் துளி போல. ஆனாலும், மறுநாள் மிக மிகப் பலவீனமான ஒரு குழந்தைக்கு, சுவைமிக்க ரோஜா நிறத் தாம்போவ் வாட்டல் இறைச்சித் துண்டு மதியச் சாப்பாட்டின் போது கொடுக்கப்படும் என்று நினைக்கையில் மகிழ்ச்சி உண்டாயிற்று.

புதுப் பொருளாதாரக் கொள்கை என்பது என்ன

லெனினுடைய அலுவல் அறைக்குத் தொழிலாளர்கள் வந்து தங்கள் வாழ்க்கையையும் வேலையையும் பற்றிச் சொல்லுவார்கள். செஞ்சேனைக் கமாண்டர்கள் போர் நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க வருவார்கள். விஞ்ஞானிகள் வருவார்கள். எல்லோரிடமும் லெனின் யோசனை கேட்பார், அவர்கள் சொல்வதைக் கவனமாகச் செவி ஏற்பார்.

இவ்வாறு மக்களால் கூறப்பட்ட யோசனைகள் பிறகு மக்கள் கமிஸாரவையால் பரிசீலிக்கப்படும். சோவியத் நாட்டுக்குத் தேவையான சட்டங்களை அரசாங்கம் இயற்றும்.

குடியானவர்கள் வருவார்கள். நிலப்பிரபுக்கள், குலாக்குகளின் நிலங்கள் பற்றிய முக்கியப் பிரச்சனை ஆரம்ப மாதங்களில் குடியானவர்களுக்கு எதிர்ப்பட்டது. அவற்றை ஏழை, நடுத்தரக் குடியானவர்களுக்கு எப்படிப் பகிர்ந்து அளிப்பது, உபயோகமாக எப்படிப் பயன்படுத்துவது?

அப்புறம் உள்நாட்டுப் போர் தொடங்கிற்று.

அப்போது சோவியத் அரசாங்கம் உபரி வசூலிப்புக் கொள்கையை விவசாயிகள் விஷயத்தில் செயல்படுத்தியது. தானியம் அறுவடை ஆனதும் விதைக்காகவும் சொந்தத் தேவைகளுக்காகவும் வேண்டியதை வைத்துக் கொண்டு மீதத்தை அரசாங்கத்துக்கு முற்ற முழுக்கக் கொடுத்து விட வேண்டும். சொந்தத் தேவைகளுக்கும் தாராளமாக அல்ல, போதும் போதாது என்னும் அளவுக்கே எடுத்துக் கொள்ளலாம். மீதி தானியத்தை விவசாயிகள் கொடுக்கா விட்டால் செஞ்சேனைக்கு உணவு அளிப்பது யார்? தொழிலாளர்களுக்கு உணவு எங்கிருந்து கிடைக்கும்?

குடியானவர்களுக்கு மிகக் கஷ்டமாய் இருந்த காலம் அது. என்ன செய்வது? எல்லோருக்குந்தான் கஷ்டமாய் இருந்தது.

இப்போது போர்முடிந்துவிட்டது. கிராமங்களிலிருந்து குடியானவர் பிரதிநிதிகள் லெனினிடம் வரத் தொடங்

கினர்கள். ஒருவர் பின் ஒருவராக வந்த வண்ணமாய் இருந்தார்கள். அடர் தாடிக்காரர்கள், நுனிப்புல் மேய்பவர்கள் அல்ல, வாழ்க்கையில் அடிபட்டுத் தேறியவர்கள். லெனின் மகிழ்ச்சி அடைந்தார். ''மேலே நடக்க வேண்டியது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று அவர்களிடம் கேட்டார்.

''உபரி வசூலிப்பை ரத்து செய்ய வேண்டும். அதற்குப் பதில் தீர்வை விதிக்க வேண்டும்'' என்றார்கள் குடியானவர்கள்.

இதற்கு என்ன அர்த்தம்? அறுவடை செய்த தானியம் முழுவதையும் அரசாங்கத்துக்குக் கொடுக்கத் தேவையில்லை. நிலத்தின் பரப்புக்குத் தக்கபடி குறித்த அளவு தானியம் கொடுத்தால் போதும். இதனால் அதிகம் விளைவிப்பவனுக்கு அதிகத் தானியம் மீதமாகும். எனவே குடியானவர்களுக்கு விளைச்சலை அதிகப்படுத்த ஊக்கம் பிறக்கும். அதிக நிலத்தில் விதைக்கவும் இன்னும் ஆழ உழவும் அவர்கள் விரும்புவார்கள். ஏனென்றால் குறித்த தீர்வையை அரசாங்கத்துக்குச் செலுத்திய பிறகும் களஞ்சியத்தில் தன் சொந்த உபயோகத்துக்கு வேண்டியது போக மேற் கொண்டும் கொஞ்சம் தானியம் மிஞ்சும். இந்த மிச்சத்தை விற்கலாம். வீட்டுக்கும் வயலுக்கும் தேவையான சாமான்களை நகரத்தில் வாங்கலாம். சோப்பு, மண்ணெண்ணெய், துணி மணிகள், அரிவாள், கலப்பை, அறுவடை இயந்திரம் முதலியவற்றை. கலப்பையும் அறுவடை இயந்திரமும் வயலில் விளையுமா? எனவே, நகரங்களில் ஆலைகளும் தொழிற்சாலைகளும் முழு வேகத்துடன் வேலை செய்ய வேண்டும். தயாரிப்புச் சாமான்கள் போதிய அளவு உற்பத்தி செய்வதற்காக.

உழைப்பாளி மக்கள் தங்கள் கரங்களால் வறுமையற்ற வாழ்வை அமைக்க முடியாதா என்ன? நாம் முதலாளிகளை விரட்டிவிட்டோம், வெண்படைகளைச் சிதற அடித்துவிட்டோம். இப்போது நம் நலவாழ்வை நாமே உருவாக்குவோம்.

குடியானவர்களுடன் நடந்த இந்த உரையாடல்களிலிருந்தும் தோழர்களுடன் செய்த ஆலோசனைகளிலிருந்தும் சொந்தச் சிந்தனைகளிலிருந்தும் பிறந்தது லெனி

னுடைய திட்டம். புதுப் பொருளாதாரக் கொள்கை என்று லெனின் இந்தத் திட்டத்தை அழைத்தார்.

இதன்படி தனியார் வர்த்தகம் தொடங்க சோவியத் ஆட்சி அனுமதி அளித்தது. ஆனால் மிகக் குறைந்த அளவே. சோவியத் நாட்டுக்கு அபாயம் ஏற்படாத வகையில். தொழிலாளர், குடியானவர் ஆட்சிதானே நடந்து கொண்டிருந்தது. தொழிலாளர், குடியானவர் ஆட்சி முக்கிய நோக்கத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தது. இயந்திரத் தொழில், ரயில் மார்க்கங்கள், கடல், ஆற்றுப் போக்குவரத்து ஆகியவற்றை வலுவும் விரிவும் படுத்தியது அது. இவை எல்லாம் மக்கள் அனைவருக்கும் உரிய அரசு உடைமைகள்.

லெனின் செய்தவை எல்லாம், முயன்று பெற்றவையாவும், மக்களுடைய நன்மைக்கும் லாபத்துக்கும் இன்பத்துக்குமாகவே. இப்போது, போர் முடிந்தபிறகு விவசாயத்தையும் வர்த்தகத்தையும் இயந்திரத் தொழிலையும் மின் நிலையங்களையும் இயந்திர நிர்மாணத்தையும் அபிவிருத்தி செய்யவும் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே நட்பை வளர்க்கவும் அவர் முயன்று பாடுபட்டார்.

இந்த நிர்மாண வேலைக்குப் புதுப் பொருளாதாரக் கொள்கை அவசியமாய் இருந்தது. கட்சியின் பத்தாவது காங்கிரஸ் லெனினுடைய புதுப் பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தை உறுதிப்படுத்தியது.

வாழ்க்கையைப் புது முறையில் சீரமைக்க லெனின் அரும்பாடுபட வேண்டியிருந்தது. தடைகள் குறுக்கிட்டன. சொற்போர்களும் தாக்குதல்களும் நேர்ந்தன. சொற்போருக்கு இடமே இல்லை போலத் தோன்றியது. ஆயினும் திரோத்ஸ்கீ சொற்போர் நடத்தினர். எப்போதும்போலவே தம் கருத்தை வலியுறுத்தினர். அதுவோ தவறானது, தீங்கு விளைப்பது. ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கைக்கு அவர் எதிராயிருந்தார். சோவியத் மக்களுக்கு அவரால் பல கேடுகள் விளைந்தன.

இப்போதும் அவர் லெனினை எதிர்த்தார். பல்வேறு பிரச்சினைகளில் அவர் லெனினையும் கட்சியையும் எதிர்த்துப் போராடினர். லெனினுடைய திட்டங்களை அவர் ஏற்கவில்லை. நிலையுறுதியற்ற கட்சி உறுப்பினர்களைத் தம்

தரப்புக்கு இழுத்துக் கொண்டார் அவர். லெனினுக்கு எதிராக உட்குழு திரட்டிச் சேர்த்தார். லெனினுக்கு வேறு எதிரிகளும் இருந்தார்கள்.

ஒன்று சேர்ந்து, கூட்டாக, இணக்கத்துடன் சமாதான வாழ்வைச் சீர்படுத்த வேண்டும் என்று லெனின் விரும்பினார். கட்சி எப்போதும் ஒத்த கருத்துடன் செயல்பட வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

ஆனால் சிலர் புது வாழ்வை நிறுவுவதற்கு இடையூறு விளைவித்தார்கள். லெனின் அவர்களை எதிர்த்து தயவு தாட்சிணியம் இன்றிப் போராடினார்.

பெரும்பாலான கம்யூனிஸ்டுகள் லெனினுக்கு ஆதரவாக இருந்தார்கள். அவர்களே வெற்றி பெற்றார்கள், கட்சியையும் சோவியத் மக்களையும் கம்யூனிஸத்துக்கு இட்டுச் சென்றார்கள்.

பனிக்கட்டி பாடும் காலம்

''போவோம்'' என்றார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன.

''கட்டாயம், விளாதீமிர்!'' என்று அழுத்திக் கூறினார் சகோதரி மரீயா. லெனின் புறப்பட மறுத்துவிடுவாரோ என்று அவருக்கு உள்ளூறப் பயம்.

ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக நிசப்தமாய் இருந்த அலுவல் அறையில் தனிமையில் அமர்ந்து கட்டுரை எழுதலாமே என்ற ஆசை லெனினுக்கு இருக்கத்தான் செய்தது. அவசியமான கடிதங்கள் வேறு எழுத வேண்டியிருந்தது. ஆனாலும் வெளியே போகும் யோசனைக்கு லெனின் மறுப்பு சொல்லவில்லை.

அக்டோபர் மாத வெயிலொளி வீசிய காலை வெளியே வரும்படி கவர்ந்து இழுத்தது. பருவநிலை இவ்வளவு நன்றாயிருக்கும் நாளில் நகருக்கு வெளியே சென்று, மறுநாள்வரை வேலை விவகாரங்களை மறந்துவிட்டு விட்டாற்றியாக உலவுவது இன்பமாய்த்தான் இருக்கும். எப்படியும் ஞாயிறு விடுமுறை நாள்தானே. மூவரும் 'ரோல்ஸ் ராய்ஸ்' காரில் ஏறி உட்கார்ந்தார்கள். தோழர் கில் காரை கோர்க்கி ஓட்டிச் சென்றார்.

கார் மாஸ்கோ நகரத்தைக் கடந்து வெளியே வந்ததும் லெனின் தூய காற்றை நெஞ்சு நிறைய மூச்சு இழுத்தார். காலையின் இளஞ் செவ்வொளி இனிமை திகழ்ந்தது. பளிச்சிடும் நீல வானை ஒளியுறுத்தியவாறு, சூரியன் மெதுவாக மேலே எழுந்தது. ரஸ்தாவில் பனி உறைந்திருந்தது. மேடுகளிலும் நொடிகளிலும் கார் குலுங்கியது. கில் நிதானமாக, எச்சரிக்கையுடன் காரை ஓட்டிச் சென்றார்.

''தோழர் கில், நீங்கள் காரை ஓட்டுவதைப் பார்த்தால் ஒவ்வொரு கோழிக்கும் நின்று வணக்கம் தெரிவித்துவிட்டு மேலே நகர்வதுபோல இருக்கிறது'' என்றார் லெனின்.

லெனினுடைய கிண்டல்கள் தோழர் கில்லைக் குதூகலப் படுத்தின. ஆனல் வேகத்தை அவர் அதிகப்படுத்தவில்லை. கிராமத்தின் ஊடே செல்லும்போது கோழிகளுக்கு நின்று நின்று வணக்கம் தெரிவிப்பதே மேல். நொடிகள் விழுந்த பாதையில் லெனினைத் தூக்கித் தூக்கிப் போட டிரைவர் கில்லுக்கு மனம் வரவில்லை.

கோர்க்கி முன்னுள் நிலப்பிரபுக்களின் கிராமப்புற வீடு. இரண்டு பக்க வீடுகளும் வெள்ளைத் தூண்களும் கொண்ட மாளிகையை அழகிய பூங்கா சூழ்ந்திருந்தது. கிளைகள் படர்ந்த லிண்டன் மரங்களும் வானுற வளர்ந்த ஓக் மரங்களும் செறிந்த உலாப் பாதைகள் நிழல் அடர்ந்து இருந்தன. பூம் பரப்புக்கள் விசாலமாகப் பரந்திருந்தன. அங்கே வியப்பூட்டும் பகுதிகள் இருந்தன. அங்கிருந்து வெகு தூரம் வரை கண்ணுக்குத் தெரியும். பதோல்ஸ்க் கூடப் பார்வைக்குப் புலனகும்.

பசிய தொலைவில் பார்வை செலுத்தி, சோலைகளுக்கும் குதித்தோடும் பஹ்ரா என்னும் சிற்றூற்றுக்கும் அப்பால் இருந்த நகரத்தை மனக் கண்ணுல் காண்பது லெனினுக்குப் பிடித்திருந்தது. இளமையில், சைபீரியச் சிறைக் குடியிருப்பிலிருந்து திரும்பியதுமே லெனின் பதோல்ஸ்க் நகருக்கு வந்தார். இது நடந்தது 1900ம் ஆண்டில். மாஸ்கோவிலிருந்து வெளியேற்றப்பட்ட தன் மகன் திமீத்ரீயுடன் மரீயா அலெக்ஸாந்திரவ்னு அப்போது பதோல்ஸ்க் நகரில் வசித்து வந்தார். சுவிட்ஸர்லாந்து

செல்வதற்குமுன் உறவினர்களைக் காண்பதற்காக லெனின் அங்கே சென்றபோது அவருடைய சகோதரிகளும் அங்கே வசித்து வந்தார்கள். தொழிலாளர் புரட்சிச் செய்தித் தாள் **இஸ்க்ராவை** அயல் நாட்டிலிருந்து வெளியிட அப் போது லெனின் ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்....

கார் பூங்காவுக்குள் புகுந்து, அலுங்காமல் குலுங் காமல் வடபுறப் பக்க வீட்டுக்குச் சென்றது. பெரிய மாளிகை லெனினுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. வடக்குப் பக்க வீடு அவருக்கு மேலாகப் பட்டது. அதன் அறைகள் சிறியவை, விட்டம் மிக உயரம் அல்ல, ஜன்னல் களும் பெரியவை அல்ல. பிரபுக்கள் வாழ்ந்த காலத்தில் பக்க வீடுகளில் பணியாட்கள் வசித்திருப்பார்கள். அக் டோபர் புரட்சிக்குப் பிறகு பிரபுக்கள் வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார்கள். பிறகு சோவியத் அரசு கோர்க்கியில் ஓய்வு விடுதி திறந்தது. குண்டுக் காயத்துக்குப் பின் லெனி னுக்குத் தூய காற்று தேவை என்று மருத்துவர்கள் மிக மிகக் கண்டிப்பாகக் கூறிவிடவே, அவர் ஓய்வு கொள் வதற்கு இங்கே இட வசதி செய்யப்பட்டது.

சரிதான். கமிஸாரவைக் கூட்டங்களின் புழுக்கத்தி லும் மாஸ்கோ நகர இரைச்சலிலுமிருந்து வெளியேறி கோர்க்கி பூங்காவில் புகுந்ததுமே அவருடைய தலைவலி அனேகமாக நின்றுவிட்டது.

''கிராமக் காற்றை ஒரு தரம் சுவாசித்ததுமே கன் னங்கள் ரோஜா நிறமாகச் சிவந்துவிட்டன பார்'' என்று திருப்தியுடன் சொன்னார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன.

''அன்பார்ந்த பெருமாட்டியாரே, நெடுந்தூர நடைப் பயணம் புறப்படுவோம்'' என்றார் லெனின்.

ஈரமற்ற குளிர் அடித்தது. இறுகிய தரை கால்களு க்கு அடியில் கல் போல ஒலித்தது. இலையுதிர்ந்துவிட்ட பூங்காவின் ஊடாக மறு கோடி வரை பார்வைக்குத் தெரிந்தது. பவளக் குறிஞ்சி மட்டுமே மங்கிய இலைகள் கரும் பச்சை நிறம் காட்ட அலுப்புடன் நின்றது. செம்பழக் குலைகளின் சுமையால் நுடங்கிய கிளைகள் கொண்ட அசோக மரமும் எதிர்ப்பட்டது.

மஞ்சள் மார்புகள் கொண்ட சிட்டுக்குருவிகளின் கூட்டம் கீச்சொலியுடன் புதருக்குப் புதர் பறந்தது.

''அட சட்டைக்காரர்களா!'' என்று கத்தினார் லெனின்.

''இது என்ன புதுப் பெயர்?'' என்று புரியாமல் கேட்டார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

''பார், இவை மஞ்சள் சட்டைகள் போட்டுக் கொண்டிருப்பது போலத் தோன்றவில்லையா?'' என்றார் லெனின்.

வெளிநாடுகளில் வசித்தபோது ஓய்வு நேரத்தில் அவர்கள் இருவரும் மலைகள்மேல் ஏறுவது வழக்கம். அல்லது சைக்கிள்களில் மனம்போன போக்கில் சவாரி செய்வார்கள். காடு எவ்வளவு அடர்ந்ததோ, மலை எவ்வளவு செங்குத்தானதோ, பாதைகள் ஆள் நடமாற்றம் அற்றவையோ அவ்வளவுக்கு லெனினின் உற்சாகம் மட்டுமீறிப் பொங்கும்.

''அதோ அங்கே போவோம் வா, நதேழ்தா. அங்கே பாறை ஏரிக்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கிறது....''

சுவிட்ஸர்லாந்தின் ஏரிகளும் மலைகளும் மாண்பு மிக்கவை, வனப்பு வாய்ந்தவை. ஆனாலும் ருஷ்யாவின் அமைதியான இயற்கை நெஞ்சுக்கு இனியது, சொந்தமானது.

''பாருங்கள், சிறு குளம்!'' என்றார் லெனின்.

''ஆகா, எவ்வளவு அழகான இடத்துக்கு வந்துவிட்டோம்!'' என்று மகிழ்ந்தார் மரீயா இல்யீனிச்ன.

குளம் உறைந்திருந்தது. ஒளிர் நீலப் பனிப் பாளம் சிறு குளத்தின் மேற்பரப்பை மூடியிருந்தது. கண்ணுடிப் பாளம் போல. இலைகளற்ற மரங்கள் அந்தக் கண்ணுடியில் தலைகீழாகப் பிரதிபலித்தன. தட்டையான கரைகள்மேல் அடர்ந்து மண்டியிருந்த புதரும் அதில் தெரிந்தது. பனிக் கண்ணுடி மூடியின் அடியில் கருண்ட நீர்ப் பூண்டுகள் புலப்பட்டன.

திடீரென்று கணகணவென்ற இன்னொலி குளத்தில் கேட்டது. ஏதோ விந்தை வாத்தியத்தின் தந்தி மீட்டப்பட்டது போலவும் அது இனிமையாக நீண்டு ஒலித்தது போலவும் இருந்தது.

யாரோ எறிந்த சிறு கல் கரையிலிருந்து குளத்தின் நடு வரை பனிக் கட்டி மீது வழுகிச் சென்றது. பனிக்கட்டி ஒத்து இசைத்தது.

''ஆகா, அற்புதம்!'' என்று மெல்லென மொழிந்தார் லெனின்.

புதருக்கு மறு புறம் ஒரு சிறுவனும் சிறுமியும் இருந்ததை அப்போதுதான் அவர்கள் கண்டார்கள். சிறுவர்களுக்குப் பத்து வயது இருக்கலாம். அந்தப் பையன்தான் பனிப்பாளத்தின்மேல் கல் வீசியவன்.

''என்னமாய்ப் பாடுகிறது! குளம் பூராவும் நாதம்!'' என்றுள் சிறுமி.

''குளத்தைப் பனிப்பாளம் மூடிய முதல் நாளே கல் வீச வேண்டும். இல்லாவிட்டால் அது ரொம்பக் கெட்டி ஆகிவிடும், அல்லது அதை வெண்பனி மூடிவிடும். அப்புறம் அது பாடாது'' என்று விவரித்தான் சிறுவன்.

''இன்னொரு கல் வீசு'' என்றுள் சிறுமி.

மறுபடியும் சிறு கல் குளத்தின்மேல் தத்திச் சென்றது. ஒரு கரையிலிருந்து மறு கரை வரையில் இனிய ஒலி பரவியது.

''ஆகா-கா!'' என்று களிப்புடன் கூவினுள் சிறுமி.

இதற்குள் அவர்கள் பெரியவர்களைப் பார்த்துவிட்டார்கள். பையன் தொப்பியைக் கழற்றினன்.

''வணக்கம்.''

''வணக்கம். நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?'' என்று அருகே நெருங்கிக் கேட்டார் லெனின்.

''நாங்கள் இந்தப் பக்கத்துக்காரர்கள். எங்கள் ஊர் தூரமில்லை. கோர்க்கி'' என்று கோர்க்கி கிராமத்தின் பக்கம் கையை வீசினன் சிறுவன். கிராமம் குளத்திலிருந்து தென்பட்டது. ''நீங்கள் மாஸ்கோக்காரர்களோ?'' என்று வினவினன்.

''சரியாகக் கண்டுபிடித்துவிட்டாய்'' என்று சிரித்தார் லெனின். ''உங்கள் பனிக்கட்டி நன்றாய்ப் பாடுகிறது'' என்று பாராட்டினர்.

''பாடாமல் என்ன செய்யும்? சரியான நேரத்தில் கல் எறிய வேண்டும். எல்லாருக்கும் இது முடியாது'' என்று பெருமை அடித்துக் கொண்டான் சிறுவன். ''நீங்கள் என்ன, அதிகாரிகளோ?'' என்றான்.

''எங்கள் ஊரில் 'இல்யீச் விளக்குகள்'* எரிகின்றனவே'' என்றுள் சிறுமி.

''மின் விளக்குகள். மாஸ்கோவுக்குச் சமீத்ததல்ல எங்கள் ஊர். பொழுது சாய்ந்ததும் ஊரெல்லாம் ஒரே வெளிச்சம்'' என்று பீற்றிக் கொண்டான் சிறுவன்.

''உங்களுக்குச் சந்தோஷந்தானே?'' என்று பாதி விளையாட்டாகவும் பாதி ஆழ்ந்த முறையிலும் கேட்டார் லெனின்.

''இல்லாமல்? வர வர இன்னும் நன்றாய் இருக்குமாமே!''

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சிறுவன் மறுபடி தொப்பியைக் கழற்றி, ''போய் வருகிறோம், வணக்கம்'' என்றான். பின்பு இருவரும் ஓடிவிட்டார்கள். வீட்டுக்குப் போனார்களோ, அல்லது சரத்காலக் காட்டின் அற்புதங்களையும் மர்மங்களையும் மேற்கொண்டு பார்க்கச் சென்றார்களோ தெரியாது.

லெனினும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னவும் மரீயா இல்யீனிச்னவும் பூங்காவுக்குள் மேலும் வெகு தூரம் சென்றார்கள். ஏனென்றால் குளம் வீட்டிலிருந்து தூரம் இல்லை, லெனினே, நீண்ட கால்நடைப் பயணத்துக்கு அவர்களை அழைத்திருந்தார்.

கலங்கரை விளக்கு

''கடும் பட்டினியின் கைதிகாள், எழுவீர்!
கொடுந்துயர் உழலும் உலகீர், எழுவீர்!
கொதித்திடும் வெஞ்சினத்தால் நம் அறிவு,
குதித்திட விரையும் மரண வெம்போரில்.''

பாட்டு முழங்கிற்று. கிரெம்ளின் பெரு மாளிகையில் இரட்டையொளி ஹாலின் ஜன்னல்கள் அதிர்ந்தன.

''புதுமைசேர் நமது உலகை அமைப்போம்:
எதுவுமற்றிருந்தார் எல்லாம் ஆவார்.''

---

* புரட்சியை அடுத்த ஆண்டுகளில் ருஷ்யா மின்சாரமயம் ஆக்கப்பட்டபோது மின்விளக்குகளை மக்கள் 'இல்யீச் விளக்குகள்' என்று லெனின் பெயரால் அழைத்தார்கள்.—மொ-ர்.

பல நூறு மனிதர்கள் கிரெம்ளின் ஹாலில் நின்று ஐம்பது மொழிகளில் இந்தப் பாட்டைப் பாடினர்கள். பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலிய, துருக்கி, ஜப்பானிய, ஆங்கில, நார்வே, ஃபின், எஸ்தோனிய, லாட்விய, இன்னும் பிற மொழிகளிலும் ருஷ்ய மொழியிலும்.

லெனினும் பாடினர். சர்வதேசத் தொழிலாளர் கீதம் லெனினுக்கு எப்போதுமே கிளர்ச்சி ஊட்டும். இப்போதோ, கம்யூனிஸ்ட் அகிலத்தின் நான்காவது காங்கிரஸுக்காக சோவியத் நாட்டில், முன்னாள் ஜார் மன்னனின் அரண்மனை ஹாலில் குழுமியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் அந்த கீதத்தைச் சுதந்திரமாக, மனமாரப் பாடிய போதோ, லெனினுடைய உள்ளத்தில் இன்ப வாரிதி அலை மோதியது.

"இதுவே நமது இறுதிப் போர்,
யாவரும் நிற்பீர் இடங்களிலே;
பொதுவாம் சர்வ தேசியமாய்ப்
பொலிந்திடும் மனித குலம் அனைத்தும்."

லெனின் ருஷ்யாவுக்கு வெளியே வசித்த போது எத்தனையோ அயல்நாட்டுப் புரட்சிக்காரர்களை அறிந்திருந்தார். திறமைசான்ற பிரெஞ்சு சோஷலிஸ்ட் ழான் ழொரேஸை அவர் அறிந்திருந்தார். பிரான்ஸில் பிரபலப் புரட்சிச் செய்தித்தாள் யுமனித்தேயை ஸ்தாபித்தவர் ழான் ழொரேஸ் தாம்.

அப்புறம் ஜெர்மன் மார்க்ஸீயவாதிகள்! கிளாராத்ஸேத்கின், ரோஸா லுக்ஸம்பர்க், கார்ல் லீப்க்னெஹ்த்! ஃபின்லாந்தின் புரட்சிக்காரத் தொழிலாளர்கள் எத்தனை பெயர் லெனினுக்குப் பழக்கமாய் இருந்தார்கள்! ஜாரின் உளவாளிகளிடமிருந்து லெனினைப் பத்திரமாக மறைத்த ஹெல்ஸிங்ஃபோர்ஸ் போலீஸ் அதிகாரி ரோவியோ. ருஷ்யாவில் புரட்சி தொடங்கியதும் லெனினும் தோழர்களும் தாய்நாடு திரும்புவதற்கு உதவிய சுவிட்ஸர்லாந்துக்காரர் ஃபிரீத்ஸ் பிளாட்டன்! இன்னும் தொழிலாளர்களும் தொழிலாளர் அல்லாதவர்களுமான வெளிநாட்டுப் புரட்சிக்காரர்கள் எத்தனை எத்தனையோ பெயரை லெனின் சந்தித்துப் பழகியிருந்தார்.

தொழிலாளர்களின் அக்டோபர் புரட்சி ருஷ்யாவில் வெற்றி பெற்றதும் மார்க்ஸீயவாதிப் புரட்சிக்காரர்கள் தங்கள் நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளை உருவாக்கினர்கள்.

''ஒரே ஐக்கியமாக ஒன்றுவோம்'' என்றார் லெனின்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்றுயின. இந்த ஐக்கியத்துக்குக் கம்யூனிஸ்ட் அகிலம் என்று பெயர் சூட்டப்பட்டது.

லெனின் பேச்சாளர் மேடைமேல் ஏறினார். நூற்றுக்கணக்கான விழிகள் அவர்மீது பதிந்திருந்தன. பிரதிநிதிகளின் கண்களில் ஆவல் பொங்கும் எதிர்பார்ப்பு ததும்பக் கண்டார் லெனின். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளுக்கு என்ன சொல்வது?

சோவியத் சமூகத்தின் வாழ்வைப் பற்றி, புது வாழ்வைப் பற்றிச் சொல்லலாம்.

சோவியத் நாட்டில் பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது, இந்த ஐந்து ஆண்டுகளில் என்ன சாதித்திருக்கிறோம் என்பதை விளக்கத் தொடங்கினார் லெனின், போரில் வெற்றி அடைந்தோம், பஞ்சத்தை வென்றோம். சீரழிவைச் சமாளித்து நேராக்கிவிட்டோம். குடியானவர்களின் வாழ்க்கை நிலைமைகள் மேம்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகளும் ஓரளவு மேம்பட்டுள்ளன. வர்த்தகம் செய்யக் கற்கிறோம். இயந்திரங்கள் இன்னமும் சுமாராகவே நிருமிக்கிறோம், குறைந்த எண்ணிக்கையில். இன்னும் நிறைய இயந்திரங்கள் தேவை. இயந்திரங்கள் இல்லாமல் கம்யூனிஸத்தை நிறுவ முடியாது. எங்கள் குறிக்கோள் கம்யூனிஸமே. வெளிநாட்டுத் தோழர்களே, உங்கள் குறிக்கோள், புரட்சி.

இதுதான் லெனின் பேசியதன் சாரம். அவர் ஜெர்மன் மொழியில் பேசினார். அந்தக் காலத்தில் வெளிநாடுகளில் ருஷ்ய மொழி அறிந்தவர்கள் அபூர்வமாகச் சிலர்தாம். ஜெர்மன் மொழியையோ நிறையப் பெயர் புரிந்து கொண்டார்கள்.

''ஜெர்மன் பாஷை நன்றாய்ப் பேசுகிறார்'' என்று பாராட்டினார்கள் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகள்.

சொற்பொழிவு முடிந்தது.

கம்யூனிஸ்டுகளின் மாபெரும் சைனியமாகத் திரண்டிருந்த எல்லோரும் எழுந்திருந்தார்கள்.

''லெனின் வெல்க! லெனின் நீடூழி வாழ்க!''

ஹாலில் புயல் வீசியது, களிப்புப் பெரும் புயல்!

இந்த அன்புக் கடல் இயல்பாகவே லெனினின் நெஞ்சைத் தொட்டது. ஆனால் இவ்வளவு உரத்த வெற்றி முழக்கங்கள் அவருக்குக் கூச்சம் உண்டாக்கின. ஹாலிலிருந்து எப்படித் தப்பி வெளியேறலாம் என்று பார்த்தார். ஆனால் தப்புவது எங்கே? கூட்டம் சுவர் போல அவரைச் சூழ்ந்து கொண்டது. ஒவ்வொருவரும் ஏதாவது சொல்ல ஆசைப்பட்டார். எதையாவது பற்றி விவாதிக்க விரும்பினர். அல்லது முகமன் கூறவாவது விழைந்தார்.

''வணக்கம், தோழர் லெனின்!'' என்று இடித்துப் புகுந்து அருகே வந்து உரக்க பிரெஞ்சு மொழியில் கூறினர் சுருள் முடியர் ஒருவர். அவருடைய கரு வண்டுகள் போன்ற விழிகள் சுடர்ந்தன. முகமெல்லாம் ஒளி வீசிற்று. ''வணக்கம், தோழர் லெனின்! காம்ரேட், காம்ரேட்'' என்று அளவற்ற நட்பு ததும்ப மறுபடி மறுபடி சொன்னர் அவர். பின்பு சிரமத்துடன் ருஷ்ய மொழியில் ''லெனின், தலைவர்!'' என்றார்.

லெனின் புன்னகை செய்தார்.

''தோழரே, பிரான்ஸில் எந்த இடத்தைச் சேர்ந்தவர் நீங்கள்?''

''நான் இத்தாலியன். உங்களுக்கு இத்தாலிய மொழி தெரியாதே என்றுதான்....''

''கொஞ்சம் தெரியும்'' என்று இத்தாலிய மொழியில் கூறினர் லெனின்.

''ஓ! தோழர் லெனின் எல்லாம் அறிந்தவர்!'' என்று வியந்தார் சுருட்டைத்தலை இத்தாலியர்.

இத்தாலிய, ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் நாற்புறமிருந்தும் குரல்கள் ஒலித்தன:

''லெனின் நண்பர்! லெனின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்! லெனின் ஆசான்!''

நிலக்கரித் துகள் கரும் புள்ளிகளாகத் தழும்பிட்டிருந்த முகமும் பளிச்சிடும் வெள்ளைக் கழுத்துப்பட்டையுமாக விளங்கிய ஒரு வெளிநாட்டுச் சுரங்கத் தொழிலா

ளர் கைகளைக் குழல்போல வாயருகே வைத்துக் கொண்டு கிளர்ச்சி பொங்க ஆர்ப்பரித்தார்:

''சோவியத் நாடு நம் கலங்கரை விளக்கு! அது காட்டும் வழியில் செல்வோம்!''

புத்தாண்டு முன்னிரவு

லெனின் நோய்ப்பட்டார். கடும் நோய்க்கு ஆளானார். மிக அபாயகரமாக.

நோய் திடீரென்று வந்துவிட்டது என்று சிலர் நினைத்தார்கள். உண்மை அது அல்ல. இந்தத் துரோக நோய் வெகுகாலம் முன்பே கள்ளத்தனமாகப் புகுந்துவிட்டது. உறக்கமின்மை. சில நாட்களில் காலைவரை தூக்கமே வராது. முடிவற்ற இரவு நீண்டுகொண்டே போய் வதைக்கும். தலை அனேகமாக இடைவிடாமல் வலித்தது. இனிப் பொறுக்க முடியாது என்று ஆனதும் லெனின் படுத்து விட்டார்.

கிரெம்ளின் வீட்டில் தம் சிற்றறையில் படுத்திருந்தார் அவர்.

''லெனின் மட்டுமீறி அதிகமாக உழைத்தார். மனித சக்திக்கும் மீறி, அளவு கடந்து வேலை செய்தார். அவருக்கு முழு அமைதி இன்றியமையாதது'' என்றூர்கள் மருத்துவர்கள்.

லெனினாலோ, வேலை செய்யாமல் இருக்க முடியவில்லை, முடியவே இல்லை! நோய் ஆபத்தானது. அவசியமான எண்ணங்களைத் தோழர்களுக்குக் கட்டாயம் தெரிவித்து விட வேண்டும்.

அசைக்க முடியாத கையைப் பேர்வைக்கு வெளியே நீட்டியவாறு படுத்திருந்தார் லெனின். அவருடைய கொதிக்கும் தலைமேல் குளிர்ந்த ஈரக்கட்டு போடப்பட்டிருந்தது.

மாலை நேரம். மேஜைமேல் விடிவிளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. சாப்பாட்டுக்குப் பிறகு லெனின் இளைப்பாற வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியிருந்தார்கள். அவர் உறங்கவில்லை.

முந்திய நாள் சோவியத் யூனியனின் சோவியதுக்களது முதலாவது காங்கிரஸ் மாஸ்கோவில் கூடியது. முந்திய நாள், அதாவது 1922ம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 30ந் தேதியன்று, சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளின் யூனியன் நிறுவப்படுவது பற்றிய உடன்படிக்கை காங்கிரஸில் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த அற்புத நாளுக்காக லெனின் நெடுங்காலமாக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்.

சோவியத் யூனியன் உருவாவது ஏன் அவ்வளவு அவசியம் என்பதை எல்லோரும் உடனே புரிந்துகொள்ளவில்லை. இவ்வளவு ஆவேசத்துடன், இவ்வளவு விடாப்பிடியாக அதன் பொருட்டு லெனின் முயன்றது ஏன்?

சோவியத் யூனியன் முற்றிலும் புதிய அரசாக, ஜார் ஆட்சி ருஷ்யாவிலிருந்து முற்றிலும் வேறுபட்ட அரசாக விளங்க வேண்டும் என்று லெனின் விரும்பி முயன்றார். ஜார் ஆட்சியில் இருந்த நிலைமை என்ன? ருஷ்யா இருந்தது. உக்ரேய்னோ நிலவவே இல்லைபோல இருந்தது. பேலோருஷ்யாவும் இல்லை. ஆர்மீனியாவும் ஆஸர்பைஜானும் ஜியார்ஜியாவும் ருஷ்யாவின் பகுதிகளாக மட்டுமே கருதப்பட்டன. மக்களுக்கு எவ்வகைச் சுயாதீனமும் வழங்கப்படவில்லை. பள்ளிகளில் தாய்மொழியில் கல்விபெறக் குழந்தைகள் அனுமதிக்கப்படவில்லை. பல மக்களுக்குத் தங்கள் மொழிகளுக்கு உரிய எழுத்துக்கள்கூட இல்லை. சிறு நாட்டினங்கள் வளர விடப்படவில்லை. அவை தாழ்த்தப்பட்டன. இந்தச் சமமின்மையை லெனின் வெறுத்தார்.

அவர் எவ்வளவு ஆழ்ந்து சிந்தனை செய்தார்! நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா கதவருகே நின்று உற்றுக் கேட்டார்—லெனின் தூங்குகிறாரா என்று.

''நான் தூங்கவில்லை, நதேழ்தா. வேலைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறேன்.''

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா ஓசையின்றி அறைக்குள் சென்றார். விடி விளக்கை அணைத்துவிட்டு மின்விளக்கை ஏற்றினார். அறையில் வெளிச்சம் பரவியது. தலையணை மேல் கிடந்த வெளிறிய முகத்தின்மீதும் வெளிச்சம் பட்டது.

சாப்பாட்டு அறையில் இருந்த சுவர்க் கடிகாரம் ஆறு மணி அடித்தது. ஆறுவது மணி அடிப்பதும் சுருக்கெழுத் தாளி மரீயா அக்கீமவ்னா வலோதிச்சிவா அறைக்குள் வருவதும் ஒன்றுக நிகழ்ந்தன. அவளுக்கு முப்பது வயது இருக்கும். ஒடிசலான மேனி. அறிவார்ந்த கவனம் அவள் முகத்தில் தென்பட்டது. அவள் கட்டிலின் அருகே நாற்காலியில் உட்கார்ந்து பென்சிலைத் தயாராகப் பிடித்துக் கொண்டாள்.

''நல்லது, ஆரம்பிப்போம்'' என்றார் லெனின்.

இன்று நாற்பது நிமிடங்கள் அவர் சொல்லி எழுதுவிக்கலாம் என்று மருத்துவர்கள் அனுமதித்திருந்தார்கள். நாற்பது நிமிடங்கள்! ஏராளமான நேரம். தவிர, கட்டுரை மனத்தில் ஏற்கெனவே எழுதப்பட்டிருந்தது.

லெனின் காங்கிரஸில் கலந்து கொள்ள முடிந்திருந்தால் இப்போது என்ன சொல்லி எழுதுவித்தாரோ அதையே நேரில் கூறியிருப்பார். இது தோழர்களுக்கு அறிவுரை. தோழர்கள் லெனினது பேச்சைக் கேட்பார்கள், சோவியத் யூனியனை எவ்வாறு அமைப்பது, வலுப்படுத்துவது என்பது குறித்து அவருடைய அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். சிறு நாட்டினங்களை உரிமை அற்றவை ஆக்குவது ஒருகாலும் கூடாது. நாட்டினங்களுக்குக் கேடு செய்யக் கூடாது. சோவியத் குடியரசுகள் சம உரிமை உள்ளவையாக இருக்க வேண்டும். ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும். அப்போது சோவியத் யூனியன் விறல் மிக்க, நியாயம் உள்ள அரசாக விளங்கும். ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கு உள்ளான மக்கள் உலகு எங்கிலும் விழித்து எழுவார்கள்....

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா பக்கத்து அறையிலிருந்து தமக்கு இனியவரின் குரலைக் கேட்டுக் கொண்டிருந்தார். கோர்த்த கைகளில் மோவாயை ஊன்றியிருந்தார். அவருடைய ஒட்டிய முகம் கவலை நிறைந்த காதலால் ஒளிர்ந்தது.

வேலை முடிந்தது. சுருக்கெழுத்தாளி வலோதிச்சிவா போய்விட்டாள். அவளுடைய இடத்தில் நோயாளியின் கட்டில் அருகே அமர்ந்தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா. அவர் புன்னகை செய்தது காரணத்தோடுதான்.

அவருடைய முகத்தில் துயரத்தையோ அச்சத்தையோ லெனின் காணவில்லை. அவருடைய அமைதி லெனினுக்கு அமைதி ஊட்டியது.

''எனக்கு என்ன நினைவு வருகிறது தெரியுமா? ஸிம்பீர்ஸ்க் மாவட்டத்தில் பள்ளிகள் திறப்பதற்கு அப்பா என்ன பாடுபட்டார்! சுவாஷ்கள், மர்த்வீனியர்கள், தாத்தார்கள் ஆகியவர்களுக்காக அவர் பள்ளிகள் ஏற்படுத்தினர். அப்பா முயற்சி செய்வதற்கு முன்னுல் ஸிம்பீர்ஸ்க் மாவட்டத்தில் இத்தகைய பள்ளிகள் இல்லை'' என்று ஆழ்ந்த சிந்தனையுடன் கூறினர் லெனின்.

''அவர் அபூர்வ மனிதர். குறைந்த வசதிகளுடன் தொடங்கினர். நமக்கோ, புரட்சி இப்போது விரிவான வாய்ப்புக்களை அளித்திருக்கிறது'' என்றார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு.

அன்று தாம் செய்த வேலையால் லெனின் மனநிறைவு கொண்டிருப்பதை அவர் கண்டார். லெனினுடைய விழிகள் கூட முன்போலவே சுடர் வீசின. ஈரக்கட்டை அவர் தலையிலிருந்து எடுத்துவிட்டார். தலைவலி குறைந்து விட்டது போலிருக்கிறது. ஒருவேளை, விரைவில் நலம் அடைந்து எழுந்துவிடுவாரோ?

''ஒருவேளையாவது, என்ன நினைக்கிறேன் நான்?'' என்று பதைத்துப்போனர் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு. ''ஒரு வேளை அல்ல, கட்டாயமாக நலம் அடைவார்! ஆறு மாதங்களுக்கு முன் இதை விடக் கடுமையான நோய் வந்தது. ஆனலும் சமாளித்து எழுந்துவிட்டாரே. இப்போதும் குணம் அடைந்துவிடுவார்.''

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு லெனினுடைய போர்வையைப் பரிவுடன் சரிப்படுத்தினர்.

''இன்று புத்தாண்டு முன்னிரவு அல்லவா, விளாதீமிர்! அதனால்தான் நீ சந்தோஷமாய் இருக்கிறாய்'' என்று சட்டென நினைவுகூர்ந்தார். பின்பு கணவர்மீது குனிந்து முத்தமிட்டு, ''புத்தாண்டு வாழ்த்துக்கள், விளாதீமிர்!'' என்றார்.

எப்போதும் போராட்டத்தில்

கட்டுரைகளைச் சொல்லி எழுதுவிப்பது லெனினுடைய உடல்நிலையைக் கெடுத்துவிடுமோ என்று மருத்துவர்கள் அஞ்சினர்கள். மூளைக்கு ஓய்வு கொடுங்கள், விளாதிமிர் இல்யீச்! அரசாங்க விவகாரங்கள் பற்றிச் சிந்தனை செய்யாதீர்கள். நடப்பு விவகாரங்கள் குறித்துக் கட்டுரைகள் எழுதுவிப்பதை நிறுத்தி வையுங்கள்.

முடியவே முடியாது!

ஆனாலும் மருத்துவர்களை வாதில் வெல்வது அவ்வளவு எளிதல்லவே. லெனின் தந்திரம் செய்ய வேண்டியதாயிற்று.

''கட்டுரைகள் அல்ல, நாட்குறிப்பு எழுதுவிப்பேன்.''

மருத்துவர்கள் ஏமாந்தார்கள். நல்லது, எழுதுவியுங்கள் என்று இணங்கினர்கள். ஆனால் ஒன்று: லெனின் பருவநிலையைப் பற்றி நாட்குறிப்பில் எழுதுவிக்கப் போவதில்லை என்பது மருத்துவர்களுக்குத் தெரிந்துதான் இருந்தது. தாம் நிறுவிய அரசுபற்றிக் கவலை கொள்ளாதிருக்கும்படி லெனினைக் கட்டுப்படுத்த முடியுமா எங்காவது? சொல்லி எழுதுவிப்பது தடைசெய்யப்பட்டதும் லெனின் பதற்றம் அடைந்தார், சிடுசிடுத்தார். அவருக்கு உறக்கமே பிடிக்கவில்லை. அதனால் தான் மருத்துவர்கள் அனுமதித்தார்கள். ஆனால் எச்சரிக்கையுடன். நாள்தோறும் அரை மணி அல்லது நாற்பது நிமிடங்கள் மட்டும். அதற்குமேல் கூடாது.

குறித்த நேரத்தில் வருவாள் சுருக்கெழுத்தாளி வலோதிச்சிவா. ஒரு நாளைக்கு ஒரு பக்கம் எழுதுவாள். சில நாட்களில் இரண்டு, மூன்று பக்கங்கள்கூட எழுதுவாள். சோவியத் சமூகத்தின் வருங்கால அமைப்பு பற்றிய திட்டம் முழுவதும் இந்தப் பக்கங்களில் விவரிக்கப் பட்டிருந்தது. லெனின் குறைகளைக் கண்டித்தார். அரசு இயந்திரத்தை இன்னும் நன்முகச் செப்பம் செய்வது எப்படி என்று யோசனை கூறினர். கம்யூனிஸ்ட் கட்சியில் ஒற்றுமையையும் நட்பையும் நிலைநிறுத்தும் வழிகளை அறிவுறுத்தினர். கட்சியில் பிளவு ஏற்பட்டுவிடுமோ என்றே லெனின் பெரிதும் அஞ்சினர்.

நோயாய்ப் படுக்கையில் கிடந்தபோதும் லெனின் தம் கட்டுரைகளுக்கான ஒவ்வோர் கருத்தையும்பற்றி மிக மிக நீண்ட நேரம் சிந்தித்தார். ஒவ்வொரு சொல்லையும் சீர் தூக்கிப் பார்த்தார்.

லெனினுடைய கட்டுரைகள் **பிராவ்தா** பத்திரிகையில் வெளியாயின. தொழிலாளர்கள் அவற்றைப் படித்து விட்டுத் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்:

''லெனின் நம் வாழ்க்கையைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறார். விஷயத்தின் உட்கருவை விண்டு காட்டி விடுகிறார். நாம் காணுதவற்றை எல்லாம் அவர் கண்டு கொள்கிறார்!''

அவர்களுக்கு மகிழ்ச்சியும் உண்டாயிற்று.

''நம் இல்யீச்சின் உடல் நிலை சீர்பட்டு வருவது தெரிகிறது.''

ஆனால் திடீரென்று.... மார்ச் மாதம். வசந்தகால வெயில் குதூகலமாக அடித்துக் கொண்டிருந்தது. மரச் சாலைகளிலும் சதுக்கங்களிலும் குருவிகள் கோலாகலமாகக் கீச்சிட்டுக் கொண்டிருந்தன. வெண்பனி உருகியதால் ஏற் பட்ட நீரோடைகள் நுரையும் ஓசையுமாகப் பாதைகளில் பெருகின. இயற்கையில் எல்லாவற்றிலும் உயிரோட்ட மும் களிப்பும் பொங்கித் ததும்பின. ஆயினும், அன்று மார்ச் 14ந் தேதி, பத்திரிகையைப் படித்ததும் ஜனங் களின் முகங்களில் கவலையும் ஏக்கமும் தேங்கின. செய்தித் தாள்கள் மாட்டப்பட்டிருந்த பொது விளம்பரச் சட்டங் கள், காட்சிப் பல கணிகளின் அருகே மக்கள் கூட்ட மாகத் திரண்டார்கள். **''அரசாங்க அறிவிப்பு''** என்று எழுதப்பட்ட காகிதங்கள் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

அரசாங்க அறிவிப்பு என்றால் ஏதோ ஆழ்ந்த செய்தி யாகத்தான் இருக்கும். ஏதேனும் விபத்து நிகழ்ந்து விட்டதோ?

''லெனினது உடல்நிலை பற்றிய அறிக்கை.

''கடந்த சில நாட்களில் லெனினுடைய உடல்நிலை கணிசமாக மோசமாகிவிட்டது....''

''நிகழ்ந்துவிட்டது, விபத்து நிகழ்ந்து விட்டது'' என்று உரக்கக் கூறின கறுப்பு எழுத்தக்கள். ''கணிசமாக மோசமாகிவிட்டது'' படிக்கவே பயங்கரமாக இருந்தது.

ஜனங்கள் தலையைத் தொங்கவிட்டவாறு அப்பால் நகர்ந்தார்கள்.

தொழிற்கூடங்களில் அன்று ஒரே துயரக் காட்சி நிலவியது.

''நம் இல்யீச், ஐயோ!'' என்று பெருமூச்செறிந்தார் ஒரு முதிய தொழிலாளி.

பயங்கர விபத்து நேரப்போகிறது என்பதை இளைஞர்கள் நம்பவில்லை.

''இல்லை, வீணாக அறிக்கை வெளியிட மாட்டார்கள். ஐயோ, இல்யீச்!'' என்று வருந்தினர்கள் முதிய தொழிலாளர்கள்.

லெனினது உடல்நிலை மோசமாகத்தான் இருந்தது. நோய் இரக்கமின்றித் தாக்கியது. லெனின் பேசும் திறனை இழந்தார். இதைவிடக் கொடிய துன்பம் வேறு என்ன வேண்டும்? லெனின் பேச்சு அடங்கிப்போனார். ஓரளவு குதலைப் பேச்சு ஜீவன் ததும்பும் விரைந்த பேச்சு இனி கேட்காது.

லெனினுடைய வீட்டில் மருத்துவர்கள் இரவும் பகலும் இடைவிடாமல் முறை வைத்துக் கொண்டு வேலை செய்தார்கள். மருத்துவர்களின் விஞ்ஞானமும் திறமையும் கலையும் லெனினுடைய அரிய உயிருக்காகப் போராடின. நாடு முழுவதும் நம்பிக்கையுடன் கவனித்துக் கொண்டிருந்தது. காலைதோறும் மக்கள் செய்தித்தாள்கள் வாங்கவும் அறிக்கைகளைப் படிக்கவும் விரைந்தார்கள்.

மாலை நேரம். இளந் தென்றல் மக்கள் கமிஸாரகத்தின் மேல் இருந்த செங்கொடியை அசைத்தாட்டியது. அங்கே, கிரெம்ளின் அறையில் நிலைமை என்ன?

மாலை நேரம். பகல் வேலைகளும் கவலைகளும் தீர்ந்தன. ஆயிரமாயிரம் உள்ளங்கள் பதைபதைப்புடன் வினவின: கிரெம்ளின் அறையில் நிலைமை என்ன?

லெனினுடைய அறையில் நிசப்தம் நிலவியது. சாப்பாட்டுக் கூடத்துக் கடிகாரத்தின் ஊசலி ஆடுவதன் ஒரு சீரான ஒலி தெளிவாகக் கேட்கும் அளவுக்கு நிசப்தம். அங்கே இருந்தாள் முறைவேலை நர்ஸ். லெனினுடைய கட்டில் அருகே நதேழ்தா கன்ஸ்தன்தினவ்னா உட்கார்ந்திருந்தார்.

கனத்த இமைகளைத் திறந்தார் லெனின். ''நீ இங்கே இருக்கிறாயா, நதேழ்தா?''

லெனின் சொல்லவும் கேட்கவும் விரும்பிய எல்லாவற்றையும் குறிப்பால் உணர்ந்து கொண்டார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா. லெனினும் பேசுவது போலவே உரையாடினார் அவர்.

''உன் உடம்பு இன்று தேவலை'' என்று நம்பிக்கையுடன் சொன்னார்.

மெய்யாகவே தம் உடல் நிலை சீர்பட்டுவிட்டதாக லெனினுக்குத் தோன்றியது. ''ஆம்'' என்று பதில் அளித்தன அவருடைய விழிகள்.

''உனக்கு உடம்பு நேராகிவிடும். சக்தியை எல்லாம் திரட்டிப் போராட வேண்டும் என்று மருத்துவர்கள் சொல்லுகிறார்கள். சித்த உறுதி முழுவதையும் ஈடுபடுத்து, விளாதீமிர்.''

''ஈடுபடுத்துகிறேன்'' என்று பார்வையால் மறுமொழி பகர்ந்தார் லெனின்.

''வாழ்நாள் முழுவதும் நீ மக்களின் இன்பத்துக்காகப் போராடினாய். இப்போது உனக்காகப் போராடு. இதுவும் மக்களுக்காகவே, புரட்சிக்காகவேதான். ஆற்றல் முழுவதையும் ஈடுபடுத்திப் போராடு!''

மீண்டும் லெனின் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவுக்குப் புரியும் விதத்தில் ''ஆகட்டும்'' என்று பதில் அளித்தார்.

தாங்கமுடியாத இரக்கம் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவின் உள்ளத்தைத் திடீரென உருக்கியது. கண்ணீர் தொண்டைவரை பொங்கி வந்தது. கண நேரம் அவர் தன் வசம் இழந்தார். பின்பு சமாளித்துக் கொண்டார். தொண்டையில் அடைத்துக் கொண்ட உண்டையை விழுங்கினார். பின்பு அன்பு கனிய மொழிந்தார்:

''இப்போது இளைப்பாற வேண்டும். உறங்கு, உடம்பில் தெம்பு உண்டாகும். எல்லாம் நலமே முடியும். தூங்கு. நான் போக மாட்டேன். உன் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பேன்.''

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து மூன்றும் ஆண்டுச் சரத்காலம்

ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் பன்னிரண்டாவது காங்கிரஸ் ஏப்ரல் மாதம் தொடங்கியது. காங்கிரஸ் லெனினுக்கு வணக்கம் தெரிவித்துச் செய்தி அனுப்பியது.

''கட்சியின், பாட்டாளி மக்களின், எல்லா உழைப் பாளி மக்களின் சார்பில், காங்கிரஸ், தன் தலைவர், பாட் டாளி வர்க்கச் சிந்தனையின், புரட்சிச் செயலின் மேதை லெனினுக்குத் தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வணக்கத் தையும் ஆழ்ந்த அன்பையும் தெரிவித்துக் கொள்கிறது.

''பாட்டாளி வர்க்கத்திற்கும் வரலாற்றுக்கும் தான் மேற்கொண்டுள்ள பொறுப்பை முன் எப்போதையும்விட இப்போது கட்சி உணர்கிறது. தனது பதாகைக்கும் தன் தலைவருக்கும் தகுதி உள்ளதாக விளங்க அது முன் எப் போதையும்விட அதிகமாக விரும்புகிறது, அவ்வாறே அது விளங்கும்....''

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ஞ இந்த வணக்கச் செய் தியைப் படித்தார். மிக மிக ஆழ்ந்த, உணர்ச்சி நிறைந்த பார்வையால் பதில் அளித்தார் லெனின்.

லெனின் நோய்க்கு இரையாகிவிடவில்லை. மே மாத நடுவில் அவர் கோர்க்கி மாளிகைக்குக் கொண்டு செல்லப் பட்டார். மாளிகையில் மிகச் சிறிய அறையையே தமக் காக வைத்துக் கொண்டார் மக்கள் கமிஸாரவைத் தலை வர். மாளிகையின் ஒரு மூலையில், உயர ஜன்னல்கள் கொண்ட அறை அது. ஜன்னல்கள் வழியே பூங்கா கண் ணுக்குத் தெரிந்தது. தளதளக்கும் பசுமை காட்சி தந்தது. பல்வகைப் பறவைகளின் சப்த ஜாலங்களால் நிறைந் திருந்தது பூங்கா. ரூக் பறவைகள் கத்தின. ஒவ்வொரு கிளையும் களி பரப்பியது. காற்று முழுவதும் இன்னிலைகளை இசைத்தது.

இரவில் பாடின அல்லிசைப் புட்கள். விண்மீன்கள் ஜன்னல் வழியே கண் சிமிட்டின.

லெனின் தூய காற்றைச் சுவாசித்தார். அவருடைய உடல்நிலை நாளுக்கு நாள் சீர்பட்டது, கோர்க்கி கிராமச் சூழ்நிலையின் பயனாக. லெனின் உறங்கத் தொடங்கினார்.

கிராமக் காற்றில் நல்ல பசி எடுத்தது. வலிமை அதிகரித்தது.

உடம்பு மீக மெதுவாகவே குணமாயிற்று. இடக்கையால் கழியை ஊன்றியவாறு லெனின் நடக்கத் தொடங்கினர். இடது கையால் எழுதவும் பழகினர். பேச்சுத் திறனை மீண்டும் பெறப் பயிற்சிகள் செய்தார்.

பயிற்சி ஆசிரியையாய்ப் பணி ஆற்றினர் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா. பயிற்சியின் போது அறைக் கதவு சாத்தப்பட்டுவிடும். அவர்கள் இருவரும் மட்டுமே இருப்பார்கள். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா எப்படிப் பயிற்சி அளித்தார் என்பதை ஒருவரும் கேட்க முடியாது.

வீட்டில் ஓரளவு குதூகலம் தென்படலாயிற்று. லெனின் வாய்விட்டுச் சிரித்ததைக் கேட்டதும் எல்லோரும் எப்படி மகிழ்ந்தார்கள்! அவர் கலகலப்பான மனிதர். வேடிக்கையும் சிரிப்புமாக இருப்பவர். இப்போது, உடல் நிலை ஒருவாறு சீர்பட்டதும் ஒவ்வொரு கேலிப் பேச்சையும் புத்தி சாதுரியம் ததும்பும் சொல்லையும் அவர் மனமாரரசித்தார். மாஸ்கோவிலிருந்து நண்பர்களின் வருகை, புதிய புத்தகம், சரத்காலப் பூங்காவின் செம்பழுப்பு இலைகள், எல்லாமே அவருக்கு மகிழ்ச்சி அளித்தன. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து மூன்றும் ஆண்டுச் சரத்காலம் தொடங்கிவிட்டது.

அக்டோபர் மாதம் ஒரு நாள் லெனின் தடியை ஊன்றியவாறு மோட்டார் வண்டிக் கொட்டகைக்கு வந்து தாம் மாஸ்கோ போக விரும்புவதாக ஜாடையால் தெரிவித்தார். காரை எடுங்கள். போகலாம். நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவும் மரீயா இல்யீனிச்னாவும் கதிகலங்கிப் போனார்கள்.

''இப்படிச் செய்யலாமா? இதன் முடிவு என்ன ஆகுமோ?''

மருத்துவர்களும் இந்தப் பயணம் கூடாது என்றார்கள்.

ஆனால் லெனின் பிடிவாதக்காரர். தீர்மானம் செய்தால் செய்ததுதான்.

செம்பழுப்பு இலைகள் சிதறிக் கிடந்த பூங்காவைக் கடந்து கறுப்பு 'ரோல்ஸ் ராய்ஸ்' கார் மாஸ்கோ சென்

றது. நொடிகளே விட்டு விலகி நிதானமாகவே போயிற்று அது. மாஸ்கோ பார்வைக்குத் தெரியலாயிற்று. தங்க முலாம் பூசிய மாடங்கள், வெண் கற்சுவர்கள், தொழிற் சாலைப் புகை போக்கிகளிலிருந்து வரும் புகை. மாஸ்கோ கண்ணுக்குத் தென்பட்டதும் லெனின் தொப்பியைக் கழற்றித் தலைக்கு மேலே ஆட்டினார். மாஸ்கோ! விரை வில் கிரெம்ளின் போய்ச் சேர்வோம்!

மக்கள் கமிஸாரவைக் கூட்டங்கள் நடக்கும் ஹாலில் புகுந்தபோது அவருடைய இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. இங்கே எல்லாமே லெனினுக்கு மதிப்பு மிக்கவை, இனியவை. பச்சைத் துணி விரித்த நீண்ட மேஜை. மேஜையின் தலைமை இடத்தில் பின்னல் நாற் காலி. இந்த ஹாலில் கழிந்த ஒவ்வொரு மணி நேரமும் மறக்க முடியாததாக இருந்தது.

மூலையில் இருந்த கணப்பின்மீது பார்வை பட்டதும் லெனின் பக்கென்று சிரித்தார். சிகரெட் குடிப்பவர்கள் இந்தக் கணப்புக்குப் பின்னே மறைந்துகொள்வது அவர் நினைவுக்கு வந்தது. சிகரெட் புகையை இழுத்து, கணப் பின் புகை போக்கி வழியே விடுவார்கள் அவர்கள். மக்கள் கமிஸாரவைக் கூட்டங்கள் நடக்கும்போது புகை பிடிக்கக் கூடாது என்று லெனின் கண்டிப்பாகத் தடை செய்திருந் தார். எவரேனும் கமிஸாருக்குப் புகை பிடிக்க அடக்க மாட்டாத ஆசை உண்டானால் அவர் மெதுவாகக் கணப் புக்குப் பின் நழுவி, இன்பமாகச் சிகரெட் பிடிப்பார். தலை வர் பென்சிலால் மேஜைமேல் தட்டியதும் சிகரெட்டை எறிந்துவிட்டுத் திரும்பி வந்து இடத்தில் அமர்வார்.

இதை நினைத்துப் பார்க்கையில் லெனினுடைய உள்ளத்தில் கண்டிப்பும் அதே சமயம் கனிவும் நிறைந்த உணர்ச்சி பொங்கிற்று. தோழர்கள்மேல் அவர் அன்பு கொண்டிருந்தார்.

லெனின் சற்று நேரம் நினைவில் ஆழ்ந்தவராக நின் றார். பின்பு தம் அலுவல் அறைக்குப் போனார். அறையைச் சுற்றிக் கண்ணோட்டினார். பூமி வரைபடத்தையும் மார்க் ஸின் படத்தையும் மேஜை மேலிருந்த டெலிபோன்களை யும் புத்தக அலமாரிகளையும் கண்டதும் எண்ணங்கள் மீண்டும் குமிழியிட்டன.

ஆனால் லெனின் பிரிவு பெறவில்லை. இல்லை. அவர் வாழவும் இங்கே திரும்பி வரவும் விரும்பினார்.

சற்று நின்றார். பார்வையிட்டார். சிங்காரப் பனை மரத்தின் அருகே போனார். ஜன்னல் அருகே இருந்த தொட்டியில் வளர்ந்திருந்தது மட்டைகள் அடர்ந்த பெரிய சிங்காரப்பனை. வெயில் பிரதேச விரி குடைகள் போல இருந்தன அதன் மட்டைகள். இந்தப் பனை கருத்துடன் பேணி வளர்க்கப் பட்டது. அதைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி லெனின் கேட்டுக் கொண்டிருந்தார்.

பிள்ளைப் பருவத்தில், அவர்களுடைய ஸிம்பீர்ஸ்க் நகர வீட்டில் நிறையப் பூச் செடிகள் இருந்தன. இதே போல அடர்ந்து பரந்த சிங்காரப் பனை மரம் சாப் பாட்டு அறையில் இருந்தது. என்றும் பசுமையான ஓலை கள் உள்ள இதே மாதிரி மரம்.

பிறகு கிரெம்ளினிலிருந்து வெளியேறி மாஸ்கோ நகரைச் சுற்றிப் பார்த்தார்கள். விவசாய, கைத்தொழில் பொருட்காட்சிச் சாலைக்குப் போனார்கள்.

முதலாவது சோவியத் பொருட்காட்சி! லெனின் அதைக் கட்டாயம் பார்க்க விரும்பினார்.

மாஸ்கோ ஆற்றின் கரையில், நிஸ்கூச்னீ பூங்கா அருகே அமைக்கப்பட்டிருந்தது பொருட்காட்சி. முன்பு அது குப்பை கொட்டும் இடமாக இருந்தது. குப்பை கூளங் கள் அகற்றப்பட்டு, பூப்பாத்திகள் போடப்பட்டன. காட்சி மண்டபங்கள் கட்டப்பட்டன. கட்டை வீடுகள் கொண்ட நகரம் ஒன்று, ஏதோ கதையில் போல, எழுந்தது.

போரும் பஞ்சமும் குளிரும் மக்கள் நினைவைவிட்டு இன்னும் அகலவில்லை. இவை எல்லாம் தீர்ந்து சிறிது காலமே ஆகியிருந்தது.

ஆகையினால் தான் சித்திர வேலைப்பாடுகள் கொண்ட மர மண்டபங்கள் கதையில் வருபவைபோல அதிசயமாய்த் தோன்றின.

மண்டபங்களுக்கு உள்ளே இருந்தவையோ இன்னும் அதிசயமாய்த் தோன்றின. பொன்நிற கோதுமை, ரை தானியக் குவியல்கள், பருத்த முட்டைக்கோசுக் குன்று கள், விரைவில் முதிரும் ரோஜா நிற உருளைக்கிழங்கு மலை கள், தர்பூஸ் பழங்கள், முலாம் பழங்கள், வயல்களிலும் தோட்டங்களிலும் விளைந்த பல வகைகள்....

நாட்டுப்புறம் புத்துயிர் பெற்று எழுவது கண்கூடாக இருந்தது.

ஆலைகளும் தொழிற்சாலைகளும் தங்கள் உற்பத்திப் பொருள்களைக் காட்சிக்கு அனுப்பியிருந்தன. நகரங்களும் ஏழ்மையிலும் சீரழிவிலுமிருந்து தலைதூக்கி வருகின்றன என்பதற்குச் சான்று பகர்ந்தன இவை.

உடலில் சோர்வும் உள்ளத்தில் உற்சாகமும் உயிர்த்துடிப்பும் கொண்டவராக மாஸ்கோவிலிருந்து திரும்பினர் லெனின்.

1922ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ந் தேதி பல்ஷோய் தியேட்டரில் லெனின் ஆற்றிய உரை நதேழ்தாகன்ஸ்தன்தீனவ்னுவுக்குப் பளிச்சென்று துலக்கமாக நினைவு வந்தது. நோய்ப்படுவதற்கு முன் லெனின் நிகழ்த்திய கடைசி உரை அதுவே.

''...புதுப் பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கும் ருஷ்யாவிலிருந்து சோஷலிஸ்ட் ருஷ்யா தோன்றும்'' என்றார் லெனின்.

வாழ்வு பற்று

பனிச்சறுக்கு வண்டிகள் விரைந்தன. குதிரைகளின் குளம்புகளிலிருந்து தெறித்தது வெண்பனி. வண்டிகளின் சறுக்குச் சட்டங்கள் வழுக்குத் தடத்தில் கிரீச்சிட்டன. சூரியன் அப்போதுதான் அஸ்தமனம் ஆகியிருந்தது. மாலைச் செவ்வொளி தொடுவானத்திற்கு மேல் தகதகத்தது. ஆனால் இருள் விரைவாகக் கவிந்து வந்தது. வெண்பனி அடர்ந்த திடல் வரவர ஆழ்நீலம் ஆயிற்று. தொலைவில் கறேலெனைக் காட்சி தந்தது காடு. அகன்ற வானில் தன்னந்தனியாக உயரே ஒளிர்ந்தது அமைதியான விண்மீன்.

லெனின் வேட்டையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார். அவரால் துப்பாக்கி பிடிக்க இன்னும் முடியவில்லை. மற்றவர்கள் வேட்டையாடுவதை அவர் வெறுமே பார்த்துக் கொண்டிருந்தார். இதுகூட அவருக்கு ஈடற்ற மகிழ்ச்சி அளித்தது. வேட்டையும் அதனுடன் தொடர்பு கொண்ட எல்லாமே அவருக்குப் பிடித்திருந்தன. காட்டில்

காலார நடப்பது, வன வாழ்க்கையைக் கேட்டும் கண்டும் ரசிப்பது, விலங்குகளைத் தடம்பற்றி விரட்டிச் செல்வது எல்லாம். துப்பாக்கி சுடுவதிலும் அவருக்குப் பிரியந்தான்.

ஆனால் வேறு எந்த வேட்டைக்காரனும் விலங்கைச் சுட்டு வீழ்த்தியிருக்கக் கூடிய சில சந்தர்ப்பங்களில் லெனின் சுட மாட்டார். ஒரு முறை, பனிக் காலத்தில் செங் கொடிகளுடன் நரி வேட்டை நடந்தது. வேட்டைக்காரர் கள் காட்டின் கணிசமான பகுதியைச் சுற்றி வரிசையாகச் செங்கொடிகளை நாட்டினார்கள். காட்டுக்குள் இருந்தது நரி. அதற்குச் செங்கொடியைக் கண்டால் பயம். நெருப்பு என்று நினைத்து அதிலிருந்து ஓடித் தப்ப முயலும்.

ஓடித் தப்ப வழி விடப்பட்டது. வேட்டைக்காரர் கள் கூச்சலும் ஆரவாரமும் எழுப்பி நரியை வெளியேறும் வழியின் பக்கம் விரட்டினார்கள்.

லெனின் துப்பாக்கியும் கையுமாக நின்று கொண் டிருந்தார். ''வாய்த்தால் சுட்டு வீழ்த்தலாமே!'' என்று நினைத்தார். அக்கணமே அற்புதம் நிகழ்ந்தது! ஃபிர் மரங் களின் பின்னிருந்து நேரே அவரை நோக்கி வந்தது நரி. லெனினே சிலையாய் நின்றுவிட்டார். வெளேரென்றிருந்த வெண்பனியில் பளிச்சிடும் செம்பழுப்பு மேனியும் கூரிய மூஞ்சியும் அருமையான மென்மயிர் அடர்ந்த வாலுமாக அழகே வடிவாக இருந்தது நரி. அது நேரே லெனினின் துப்பாக்கியை நோக்கி மேலும் மேலும் நெருங்கி வந்தது. ஆனால் லெனின் சுடவில்லை. நரி அவ்வளவு அழகாக இருந்தது. அன்றையப் பகலும் இன்றுபோலவே வெண்பனி யும் வெயிலுமாக மின்னியது.

நரியைத் தாம் சுடாமல் விட்டுவிட்ட நிகழ்ச்சியை இப்போது நினைத்துப் பார்த்துப் புன்னகை செய்தார் லெனின்.

பனிச் சறுக்கு வண்டிகளின் அடிச் சட்டங்கள் களிப் புடன் ஒலித்தன. மாலை மெல்லச் சூழ்ந்து வந்தது. அந்திச் செம்மை கொஞ்சங் கொஞ்சமாக மறைந்தது. காட்டுக்கு உயரே மாலை ஒளிமயக்கத்துக்கு எதிரே வெளிறிய பிறை மதி புலப்படலாயிற்று.

வீட்டு ஜன்னல் வழியே நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா இந்தப் பிறைச் சந்திரனைக் கண்டார்.

''இன்று ஏதோ விழா நாள் போல் இருக்கிறது. பாரேன், நிலா இன்று ஏதோ தனி அழகுடன் தோன்று கிறது'' என்று மரீயா இல்யீனிச்னாவிடம் சொன்னார்.

''விளாதீமிருக்கு உடம்பு சிறிது நேராகி இருப்பதால் நமக்கு ஆறுதலாக இருக்கிறது. வேட்டைக்குக்கூடப் போயிருக்கிறான், பாரேன்! இது நல்ல அடையாளம்'' என்றார் லெனினின் சகோதரி.

''புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது அவன் எப்படிச் சிரித்தான், முந்திய நாட்களில் போலவே உவகை பீரிட, நினைவு இருக்கிறதா?''

அரசாங்கப் பண்ணை ஊழியர்களின் குழந்தைகளுக் காக கோர்க்கி மாளிகையில் அலங்காரப் புத்தாண்டு ஃபிர் மரம் அண்மையில் நாட்டப்பட்டது, லெனின் அந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டது, குழந்தைகளுடன் அன்பாக விளையாடிச் சிரித்தது, மரீயா இல்யீனிச்னா பியானோ வாசித்தது, லெனின் அதை ரசித்துக் கேட்டது, எல் லாவற்றையும் அவர்கள் நினைவுபடுத்திக் கொண்டார்கள்.

இன்று இன்ப நிகழ்ச்சிகளை மட்டுமே நினைவுகூர அவர் கள் விரும்பினார்கள்.

கன்னங்கள் செக்கச் சிவந்து ஒளிரப் பனிக்காலக் காட்டிலிருந்து திரும்பி வந்தார் லெனின். விழிகள் அற்புத ஒளி வீசின. குளிர் காற்றும் வேட்டையும் பனிச்சறுக்கு வண்டிச் சவாரியும் லெனினைப் புத்துணர்ச்சியும் உற்சாக மும் கொள்ளச் செய்திருந்தன. ஆயினும் அவர் ஓய்வு எடுத்துக் கொள்வது அவசியமாய் இருந்தது. மருத்துவர் கள் விதித்திருந்த முறை அது. மருத்துவர்கள் லெனினைக் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே அவர் ஒரு மணி நேரம் கட்டிலில் படுத்திருக்க வேண்டியதாயிற்று.

லெனின் இளைப்பாறுகையில் நதேழ்தா கன்ஸ்தன்தீ னவ்னாவும் மரீயா இல்யீனிச்னாவும் பேசுவதை நிறுத்தி விட்டு, சத்தம் செய்யாமல் இருக்கும்படி ஒருவருக்கு ஒருவர் ஜாடை காட்டிக் கொண்டார்கள். லெனினுடைய தூக்கம் கலைந்துவிடக் கூடாதே.

ஆனால் இருவருடைய உள்ளங்களிலும் தயக்கமும் துணிவின்மையும் கொண்ட, அமிழ்ந்த உவகை தன்னொளி

பரப்பிக் கொண்டிருந்தது. இருவரும் வருங்காலத்தில் நம்பிக்கையுடன் பார்வை செலுத்திக் கொண்டிருந்தார்கள். மருத்துவர்கள் நம்பிக்கையூட்டும் தகவல்கள் தந்து கொண்டிருந்தார்கள்.

''வசந்த காலத்துக்குள் கட்டாயமாக முற்றிலும் குணப்படுத்திவிடுவோம்'' என்று ஒரு மருத்துவர் அண்மையில் சொல்லியிருந்தார்.

இரவில் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு லெனினுக்குப் புத்தகம் படித்துக் காட்டினார். அவருக்கு உடம்பு நேராகத் தொடங்கியது முதல் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு நாள்தோறும் பிராவ்தா செய்தித்தாளை அவருக்காக உரக்கப் படிப்பது வழக்கம். இன்று அமெரிக்க எழுத்தாளர் ஜாக் லண்டனின் கதை ஒன்றைப் படித்தார்.

லெனின் சிந்தனையில் ஆழ்ந்தவராக, விழிகளைச் சற்றே சுரித்தவாறு ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். அங்கே மலை மலையாகக் குவிந்த வெண் பனியில் நின்றது பழைய பூங்கா. அது கண்ணுக்குப் புலப் படவில்லை. ஏனெனில் ஜன்னல் கண்ணாடிகள்மேல் பனி படிந்து உறைந்திருந்தது. பெரணிச் செடிகள் கிளைகளைப் பரப்பி நிற்பதுபோன்ற கோலங்கள் ஜன்னல் கண்ணாடிகள் மேல் பனி உறைந்ததால் இயற்கையாகத் தீட்டப்பட்டிருந்தன. குழந்தைப் பருவத்தில் போல இவை மாய உறைபனிப் பூச்செடிகளாகக் காட்சி தந்தன.

''வாழ்க்கைப் பற்று'' என்பது கதையின் தலைப்பு. பட்டினியால் குற்றுயிராயிருந்து ஒருவன் வெண்பனி அடர்ந்த வெற்று வெளியில் நடக்கிறான். அவனுடைய வலிமை வரவரக் குன்றுகிறது. அவனால் நடக்க முடியவில்லை. தவழ்கிறான். அருகாக நகர்ந்தது நோயுற்று மடியும் நிலையில் இருந்த ஓநாய். மனிதனுக்கும் ஓநாய்க்கும் இடையே போராட்டம். வெற்றி யாருக்கு? ஓநாய்க்கா? இல்லை. மனிதனே வெல்கிறான். நம்பமுடியாத வாழ்க்கை வேட்கை அவனுள்ளே வலிமையை நிறைக்கிறது. மனிதனுக்கு முன்னே இருந்தது குறிக்கோள்—கப்பல். வெற்று வெளியின் கோடியில் கடற்கரை அருகே தென்பட்டது அது. அங்கே இருந்தது வாழ்க்கை. எனவே மனிதன் தவழ்ந்து தவழ்ந்து முன்னே சென்றான்.

இந்தக் கதை லெனினுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவருக்கு அவ்வளவு கிளர்ச்சி ஊட்டியது என்ன என்று நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு புரிந்து கொண்டார். ஆண்மை. விடா முயற்சி. மனிதனுக்கு உள்ள, வாழ வேண்டும் என்ற சித்த உறுதி. கைசோர்ந்து தோல்வியை ஒப்புக் கொண்டு விடக் கூடாது.

லெனின் தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை. இன்று படித்த கதையால் அவர் மனத்தில் எழுந்த எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு புரிந்து கொண்டார். மீண்டும் வாழும் எண்ணம். மீண்டும் உழைக்கும் விருப்பம்.

லெனின் இன்னும் மிகச் சில நாட்களே வாழ்ந்திருப்பார் என்று அந்த ஜனவரி மாத இரவில் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு எண்ணியிருக்க முடியுமா?

மீண்டும் ஒரு முறை நோய் திடீரென்று, பயங்கரமாகத் தாக்கியது. அதுவே கடைசித் தாக்கு.

1924ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ந் தேதி, மாலை ஆறு அடித்து ஐம்பது நிமிஷங்கள் ஆனதும் கோர்க்கி கிராமத்தில் லெனின் காலமானார்.

எழுந்து நில்லுங்கள், தோழர்களே!

''உ-127'' என்ற இலக்கமிட்ட ரயில்வே எஞ்சினை உள் நாட்டுப் போரின்போது பல செஞ்சேனை வீரர்களும் கொரில்லா வீரர்களும் அறிந்திருந்தார்கள். போர்க் காலம் முழுவதும் அது துருப்புக்களையும் ஆயுதங்களையும் போர் முனைக்குக் கொண்டு சேர்த்த வண்ணமாய் இருந்தது. போர்முனையிலிருந்து காயமடைந்தவர்களைப் பின்புலத்துக்கு ஏற்றி வந்தது. சோர்வில்லாமல் உழைத்தது. வெண் படையினரின் எறி குண்டுகளும் துப்பாக்கிக் குண்டுகளும் அதை இரக்கமின்றித் தாக்கிச் சிதைத்தன. உள்நாட்டுப் போர் முடியும் தறுவாயில் இந்த எஞ்சின் முற்றிலும் தகர்ந்து பழுதடைந்துவிட்டது.

சோவியத் மக்கள் நாட்டில் பொருளாதாரத்தைச் சீரமைக்கத் தொடங்கியதும் அதை நினைவுகூர்ந்தார்கள்.

அதைச் செப்பனிடத் தீர்மானித்தார்கள். நன்முகச் செப்பனிட்டார்கள். பழுதுபார்க்கும் தொழிற்கூடத்திலிருந்து புதியதுபோல வெளிவந்தது எஞ்சின் ''உ-127''. பழுது பார்த்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேராதவர்கள். முறை வேலை நேரத்துக்குப்பின் தாங்கள் இலவசமாகச் செப்பனிட்டுப் புதிதாக்கிய எஞ்சினை அவர்கள் கம்யூனிஸ்டுகளுக்குப் பரிசு அளித்தார்கள். லெனின் அதன் கௌரவ டிரைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்குச் சம்பளப் புத்தகமும் வழங்கப்பட்டது.

லெனின் மரணம் அடைந்ததற்குப் பிந்திய துயர நாட்களில் கோர்க்கியிலிருந்து மாஸ்கோவுக்குச் சோக ரயில் வண்டியை இழுத்துச் செல்லும் பொறுப்பு இந்த எஞ்சினுக்கே தரப்பட்டது.

பக்கத்திலும் தூரத்திலும் இருந்த கிராமங்களிலிருந்து குடியானவர்கள் தங்கள் தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த இரவு பகல் இடைவிடாமல் வந்த வண்ணமாய் இருந்தார்கள்.

கடுங் கூதல். ஊசியாய்க் குத்தும் காற்று குப்குப் பென்று வீசியது. கோர்க்கி பூங்காவில் மரக் கிளைகள் காற்றில் அசைகையில் கண்ணுடி மோதுவதுபோல ஒலித்தன. மாளிகைத் தூண்கள்மேல் கறுப்பும் சிவப்புமான துணிகள் சுற்றப்பட்டிருந்தன. பாதைகளில் ஃபிர் மரக் கிளைகள் பரப்பப்பட்டன. வெண்பனிமேல் ஏக்கத்துடன் கிடந்தன மலர்கள்.

வீட்டிலிருந்து சுமார் ஆறு கிலோமீட்டர் தூரத்தில் இருந்த ரயில் நிலையத்துக்குச் சவப்பெட்டியைத் தூக்கிச் சென்றார்கள் தொழிலாளர்களும் குடியானவர்களும் கம்யூனிஸ்டுகளும் தோழர்களும் அரசாங்க உறுப்பினர்களும். எஞ்சின் ''உ-127'' துயர் நிறைந்த ரயிலை மாஸ்கோவுக்கு இழுத்துச் செல்லப் புறப்பட்டது.

எஞ்சின் டிரைவர் மத்வேய் குஸ்மீச் லூச்சின் இருபத்தொரு வருடங்களாக எஞ்சின் ஓட்டி வந்தார். இன்று அவர் ''உ-127'' எஞ்சினைச் செலுத்தினர். ரயில் எங்கும் நிற்காமல் சென்றது. லெனினுடைய சவப்பெட்டியை எடுத்துக் கொண்டு சரியாக ஒரு மணிக்கு ரயில் மாஸ்கோ போய்ச் சேர வேண்டும்.

இருப்புப் பாதை நெடுகிலும் இரு புறமும் நின்ரூர் கள் குடியானவர்கள்.

எஞ்சின் நீண்ட ஊதலொலியால் எச்சரித்தவாறு நெருங்கியது. மக்கள் அசையவில்லை. தண்டவாளங்கள் மேல் அசைவின்றி நின்ரூர்கள். தோளோடு தோள் சேர்த்து. மௌனமாக. எஞ்சின் நிலையத்தைச் சேராமல் நின்று பெருமூச்சு விட்டது. டிரைவர் எஞ்சினிலிருந்து வெளியே வந்து படியில் நின்றுகொண்டார்.

''தோழர்களே!'' தோழர் லெனின் இந்த எஞ்சி னுக்குக் கௌரவ டிரைவராக, என் இணையாளாக இருந் தார். ஒரு போதும் நேரம் தவறுவதில்லை என்று நான் லெனினுக்கு வாக்கு கொடுத்தேன். இன்று சரியாக ஒரு மணிக்கு மாஸ்கோவில் இருக்க வேண்டும் என்று உத்தர வாகி இருக்கிறது. சொல்லைக் காப்பாற்ற எனக்கு உதவுங் கள். லெனினுக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்....''

இவ்வாறு கூறி அழத் தொடங்கினர். மக்களும் அழு தார்கள். தண்டவாளங்களை விட்டு இறங்கி, ரயில் போக வழி விட்டார்கள்.

மாஸ்கோ. அருமை லெனினின் சடலம் அடங்கிய பேழையைத் தோழர்கள் மறுபடி தூக்கிக் கொண்டார் கள். வீதிவீதியாக, ஆயிரமாயிரம் மக்களுக்கு ஊடாக, அதைத் தொழிற்சங்க மாளிகைக்கு எடுத்துச் சென்ரூர் கள்.

திடீரென வீட்டு முகடுகளுக்கு மேலே அமுங்கிய இரைச்சல் கேட்டது. வானம் முழுவதையும் நிறைத்தது அது. விமானங்கள் தாழப் பறந்தன. வெண் புறுக்கள் போலக் காற்றில் பற்ந்தன துண்டுப் பிரசுரங்கள். மக்கள் அவற்றைப் பிடித்துப் படித்தார்கள். லெனினைப் பற்றி.

லெனினுடைய வாழ்க்கைச் சுருக்கம் எழுதிய விளம் பரப் பலகைகள் வேறு சதுக்கங்களில் நாட்டப்பட் டிருந்தன. லெனின் மிகமிக அடக்கம் உள்ளவர். தம்மைப் பற்றி எழுத அவர் அனுமதிக்கவே இல்லை.

அவர் காலமாகிவிட்டபின், மக்கள் விளம்பரப் பல கைகள் அருகே கூட்டமாக மொய்த்து, லெனினது அரும் பெரும் வாழ்க்கைக் கதையைப் படித்தார்கள்.

மிக மிகக் கடுங் குளிர். மாஸ்கோ வீதிகளில் நெகிடி

கள் எரிந்து கொண்டிருந்தன. மக்கள் முடிவற்ற வரிசை களாக தொழிற்சங்க மாளிகைக்குப் போன வண்ணமாக இருந்தார்கள். பகலும் இரவும். நெகிடிகளின் அருகே சூடு ஏற்றிக் கொண்டு மேலே நடந்தார்கள். தங்கள் முறைக் காகக் காத்திருக்கையில் கால்கள் மரத்துப் போகாதிருப் பதற்காகத் தொப்புத் தொப்பென்று அடித்துக் கொண் டார்கள்.

அவர்களில் மாஸ்கோவாசிகளும் இருந்தார்கள், சோவியத் நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து வந்த வர்களும் இருந்தார்கள். ருஷ்யர்களும் உக்ரேனியர்களும் ஆர்மீனியர்களும் கஸாஃகியர்களும் பேலோருஷ்யர்களும் ஜார்ஜியர்களும்.... அயல் நாட்டுக் கம்யூனிஸ்டுகளும் தொழிலாளர்களும்.

தொழிற்சங்க மாளிகையில் மலர்க் கடலில் மிதந்தது சவப்பெட்டி. தணிவாக இசைத்தது பாண்டு வாத்தியக் குழு. அமைதியாக நடந்தார்கள் மக்கள்.

ஜனவரி மாதம் 27ந் தேதி, மாஸ்கோ நேரப்படி மாலை நான்கு மணிக்கு லெனினின் சடலம் அடக்கம் செய்யப் பட்டது.

செஞ்சதுக்கத்தில் சமாதி நிறுவப்பட்டது. கொடுங் குளிரில் மூன்றே நாட்களில் அது கட்டி முடிக்கப்பட்டது. பனிப்பாறையாய் உறைந்த தரையைக் கொத்தியும் வெடி வைத்துத் தகர்த்தும் நெகிடிகளால் உருக்கியும் வானம் தோண்டினார்கள் உழைப்பாளிகள். ஆடம்பரமற்ற கட்டிடம் எழுந்தது. அப்போது அது மரக் கட்டைகளால் கட்டப்பட்டது. பிற்பாடு அதன் இடத்தில் கருங் கற்களாலும் சலவைக் கற்களாலும் கம்பீரமான சமாதி நிர்மாணிக்கப்பட்டது.

ஜனவரி 27ந் தேதி காலையில், தொழிற்சாலைகளிலும் ஆலைகளிலுமிருந்தும் சோவியத் குடியரசுகளின் பல்வேறு நகரங்களிலிருந்தும் வெளிநாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி களிலிருந்தும் பிரதிநிதிகள் கால்நடையாகவும் வாகனங் களிலும் செஞ்சதுக்கத்தில் வந்து கூடினார்கள். கடுங் குளிர் வீசிய வெளியிலே, உயர்ந்த மேடைமீது செங்கொடி போர்த்தப்பட்டு காலைமுதலே வைக்கப்பட்டிருந்தது லெனினின் சவப்பெட்டி.

இராணுவ மரியாதை அணிவகுப்பு விரைப்பாக அசைவற்று நின்றது. செஞ்சதுக்கம் முழுவதுமே அசையாதிருந்தது. உலகின் முதலாவது சோஷலிஸப் புரட்சியின் தளகர்த்தருடைய சவப்பெட்டியின் அருகாக மெதுநடையாகச் சென்றது குதிரைக் காவற்படைப் பிரிவு. பீரங்கி வண்டிகள், லெனினுக்கு இறுதி இராணுவ மரியாதை செலுத்தியவாறு சென்றன.

தொழிலாளர் வரிசைகள் புறப்பட்டு மேடையை நெருங்கியதும் சோகக் கொடிகளோத் தரையில் படும்படி தாழ்த்தின.

நகரங்களிலும் கிராமங்களிலும் வானொலிப் பெட்டிகள் இருந்த எல்லா இடங்களிலும் சரியாக மாலை நான்கு மணிக்குப் பின்வரும் சொற்கள் உரக்க ஒலித்தன:

''எழுந்து நில்லுங்கள், தோழர்களே! லெனின் அடக்கம் செய்யப்படுகிறார்.''

இயந்திரங்கள் நின்றன. கார்கள் நிறுத்தப்பட்டன. ஜனங்கள் தலை வணங்கி நின்றார்கள். வெளிநாடுகளில் தொழிலாளர்கள் வேலையை இடை நிறுத்தினர்கள். ஐந்து நிமிட மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது. ஆலைகள், தொழிற்சாலைகளின் சங்குகள் இடைவிடாது ஒலித்தன. கடல்களில் சோவியத் கப்பல்கள் நின்றுவிட்டன. ஆற்ற முடியாத நீண்ட துயர்க் குரல் வயல்களுக்கும் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் மேலே, சோவியத் நாடு எங்கும் பரவியது.

நடுக்கும் குளிர் காற்று செஞ்சதுக்கத்தில் வீசிற்று. சோகக் கொடியையும் செம்பதாகைகளையும் அது படபடக்கச் செய்தது. முகங்களில் வழிந்த கண்ணீரை உறைவித்தது.

இறுதி மரியாதைப் பீரங்கிக் குண்டுகள் வெடித்து முழங்கின.

லெனினுடைய மேனி அடங்கிய பேழை சமாதிக்குள் வைக்கப்பட்டுவிட்டது.

பொழுது சாய்ந்தது. இருள் சூழ்ந்தது. நள்ளிரவு ஆயிற்று. அப்போதும் மக்களின் வரிசைகள் லெனின் சமாதியின் அருகாக, செஞ்சதுக்கத்தில் சென்ற வண்ணமாய் இருந்தன....

செர்ரி மரங்கள் பூத்தன

வசந்தம் வந்தது. கோர்க்கி பூங்காவுக்குப் பறந்து வந்தன ரூக் பறவைகள். அவை தாய்நாடு திரும்பி, மகிழ்ச்சி ஆரவாரத்தால் சுற்றுப்புறம் முழுவதையும் நிறைத்த வாறு கூடுகள் கட்டி வாழ்க்கை தொடங்குவதில் மும் முரமாக ஈடுபட்டன. வானம்பாடிகளும் திரும்பிவிட்டன. எல்லையற்ற நீலவானில் எங்கோ உயரத்தில் இடை விடாமல் ஒலித்தது வானம்பாடிகளின் இன்னிசை. ஒளி புகும் இறக்கைகள் கொண்ட தட்டாரப் பூச்சிகள் சிறு குளத்துக்கு மேலே வெயிலொளியில் நர்த்தனம் ஆடின.

நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு குளத்தின் அருகே சற்று நின்றார். கோர்க்கி பூங்காவில் லெனினுக்குப் பிடித்த எல்லா இடங்களையும் பாதைகளையும் அவர் அறிந்திருந்தார்.

ஆனால் ஓர் இடத்தைப் பார்க்க லெனினுக்கு வாய்க்கவில்லை. அந்த இடத்துக்கு வருவது நதேழ்தா கன்ஸ் தன்தீனவ்னுவுக்கு உவப்பாக இருந்தது. இம்முறையும் அவர் இங்கே வந்தார். பெஞ்சியில் அமர்ந்தார். சுருக்கங்கள் விழுந்து, இரத்த நாளங்கள் புடைத்திருந்த கைகளை முழங் கால்கள்மேல் வைத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

இங்கே செர்ரி மரங்கள் பூத்திருந்தன. அவை மெல் லிய இளங் கன்றுகள். அரக்கு பூசியவைபோன்று கருஞ் சிவப்பான கிளைகள் கொண்டவை.

செர்ரிக் கன்றுகள் இப்போதுதான் முதல் தடவை பூத்திருந்தன. அவற்றின் வண்ணத்தைக் காண லெனின் வாழ்ந்திருக்கவில்லை.

கடைசிச் சரத்காலத்தில் ஒரு நாள் குளூஹவ் தொழிற் சாலைத் தொழிலாளர்கள் லெனினைக் காண கோர்க்கி கிராமத்துக்கு வந்திருந்தார்கள். தொழிற்சாலையிலிருந்து லெனினுக்குக் கடிதமும் பரிசும் கொண்டுவந்திருந்தார் கள். தொழிற்சாலைத் தோட்டத்துச் செர்ரி மரக் கன்று களே அந்தப் பரிசு. அவையே இப்போது பூத்திருந்தன.

தொழிலாளர்களைச் சந்தித்ததில் லெனின் எவ்வளவு பூரித்துப் போனார்! அவர் கண்கள் களி சுடர்ந்தன....

விடை பெறுகையில் ஒரு முதிய தொழிலாளி கூறி னான்:

''நான் கருமான், விளாதீமிர் இல்யீச். நீங்கள் திட்ட மிடுபவை எல்லாவற்றையும் நாங்கள் வடிவாக்கு கிறோம்.''

பின்பு லெனினை இறுகக் கட்டித் தழுவிக் கொண் டான். சற்று நேரம் இருவரும் தழுவியவாறு நின்றார்கள். இந்த முதிய தொழிலாளியின் வாயிலாக லெனின் தொழி லாளர் வர்க்கம் அனைத்திற்கும் உளமார்ந்த வணக்கம் தெரிவித்தார் போலும். தொழிலாளி லெனினுக்கு வாக் களித்தான்.

''வாக்களிக்கிறோம், இல்யீச், எங்கள் அருமை இல்யீச்!'' என்று தொழிலாளர் சபதத்தை முணுமுணுத் தார் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா.

செர்ரி மரங்களுக்கு மேலே தேனீக்கள் முரன்றன.

அதன்பின் எத்தனையோ வசந்தங்கள் வந்து போய் விட்டன, எத்தனையோ ஆண்டுகள் கழிந்துவிட்டன.

கோர்க்கி பூங்காவில் செர்ரி மரங்கள் அடர்ந்து வளர்ந்துவிட்டன.

லெனின் நிறுவிய அரசு வளர்ந்து உரம் பெற்று முதிர்ந்துவிட்டது. லெனின் அமைத்த கட்சி வளர்ந்து பெருகிவிட்டது.

கடினமான சமயங்கள் நேர்ந்தன, கொடிய துயர் நிறைந்த ஆண்டுகள் வந்தன. சோவியத் நாடு எல்லாச் சோதனைகளையும் பொறுத்துத் தேறிவிட்டது. முன்னைவிட அதிக உரமும் வலிமையும் வனப்பும் பெற்றுத் திகழ்கிறது சோவியத் யூனியன். சோவியத் நாட்டின் மூலை முடுக்குகளி லெல்லாம் எரிகின்றன. ''இல்யீச் விளக்குகள்''. மின் நிலை யங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள், விண்வெளி விமான நிலையங்கள், கூட்டுப்பண்ணைகள், அரசாங்கப் பண்ணைகள், புதிய நகரங்கள், பள்ளிகள், பண்பாட்டுக் கழகங்கள், நாடக மன்றங்கள்....

இவற்றை எல்லாம் லெனின் காண முடிந்தால்!

கண்டால் லெனின் இப்படித்தான் சொல்லியிருப்பார்:

''நின்று விடாதீர்கள். எல்லாம் சாதிக்கப்பட்டுவிட வில்லை. நமது குறிக்கோள் கம்யூனிஸம்.''

கம்யூனிஸம் என்பது நியாயமும் உண்மையும் ஆகும். எல்லோருடைய நல்வளத்துக்காகவும் எல்லோரும் சேர்ந்து உழைப்பதாகும் இது. புதுமையைத் தேடி மேலும் மேலும் முன்னே செல்வதாகும் இது. இன்பத்தையும் அழகும் சால்பும் திகழும் வாழ்க்கையையும் பற்றிய நமது கனவாகும் இது.

இதை அடையும் வழியை நமக்குக் காட்டியுள்ளார் லெனின்.

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் ராதுகா பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098.

ஷோ-ரூம்
136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—
641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்
3—22—75—D, மதுரை சாலை,
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

''சோவியத் இலக்கியத்தில் இத்தகைய நூல் இதுவரை எழுதப்படவில்லை. விளாதிமிர் இல்யீச் லெனினின் வாழ்க்கைக் கதை முழுவதையும் எழுத வேண்டும், அதுவும் உளத்தில் பதியும், ஒளிமிக்க சித்திரம் படிப்பவரின் மனக்கண் முன் தோன்றும் விதத்திலும் எழுத வேண்டும் என்று மரீயா பிரிலெழாயெவா சங்கற்பம் செய்து கொண்டு அதை அப்படியே நிறைவேற்றியிருக்கிறார்''—பிரபல சோவியத் ஆசிரியை மரீயா பிரிலெழாயெவா இயற்றியுள்ள ''லெனினின் வாழ்க்கைக் கதை'' என்னும் புதிய நூலை இவ்வாறு பாராட்டுகின்றன சோவியத் பத்திரிகைகள்.

தெளிவாக, சிந்தனையைத் தூண்டும் வகையில், உளப்பூர்வமாக எழுதப்பட்டுள்ள இந்த நவீனம், தலைவர் என்ற முறையிலும் மனிதர் என்ற முறையிலும் லெனினை முழுமையாக, சீருறச் சித்திரிக்கிறது.

இந்த நூல் பரிசு பெற்றுள்ளது.

லெனினைப் பற்றித் தாம் எழுத முன்வந்தது எவ்வாறு என்பதையும், மாபெரும் தலைவர் லெனின் பற்றிய தமது நூல் களைக் குறித்தும் இந்த நவீனத்தின் முகவுரையில் ஆசிரியை விவரித்திருக்கிறார்.